தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—188

பொருளாதாரம்-ஓர் அறிமுகம்

(An Introduction to Economics)

ஆசிரியர்

வீரா ஆன்ஸ்டி

தமிழாக்கம்

பு. வி. சீநிவாசன், எம்.ஏ., பி.டி.,

முதல்வர்,

அரசினர் கலைக் கல்லூரி,

திருவண்ணாமலை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழக அரசு

First Edition—December 1968

B.T.P. No. 183

© Bureau of Tamil Publications

An Introduction to Economics

Vera Anstey

Translation

P. V. Srinivasan

Price Rs. 6-25

This translation of 'An Introduction to Economics' by Vera Anstey is published by arrangement with Messrs George Allen and Unwin Limited, 40, Museum Street, London, W.C.1.

Printed by
Kumaran Press,
298, Mint Street,
Madras-1.

அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வி-தொழில் அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவரீகளின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்களின் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம் மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடை பெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுதான் 'பொருளாதாரம்—ஓர் அறிமுகம்' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 183ஆவது வெளி யீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 218 நூல்கள் வெளி வந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக்கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முன்னுரை

திருமதி ஆன் மார்ட்டின் (Anne Martin) அவர்கள் எழுதிய இந் நூலின் ஒன்றரை அதிகாரங்களுக்காகவும், அவர் அமைத்துள்ள படங்களுக்காகவும், எல்லா அதிகாரங்களையும் படித்துச் சிறந்த கருத்துகளை வழங்கியமைக்காகவும் முதன்முதலில் அவர்களுக்கு நன்றி. அவர்கள் அளித்த உற்சாகம் இல்லாவிடில் இந் நூல் எழுதப்பெற்றிருக்காது.

பொருளியல் பற்றிய பெரும்பாலான நூல்கள் பொருள் சார்ந்த முன்னேற்றத்தைப் பெற்ற நாடுகளை மனத்தில்கொண்டே எழுதப் பெற்றவை. அந் நூல்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளின் பிரச்சினைகளையும், கொள்கைகளையுமே வலியுறுத்துகின்றன. அவை, இந் நாடுகளிலிருந்தே தம் உதாரணங்களை எடுத்துக்கொள்கின்றன. பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடையாத நாடுகளுள் சில குறிப்பிட்ட நாடுகளின் நலன்களையும், அவைகளுடைய விசேஷ பிரச்சினைகளையும் மனத்தில்கொண்டு பின்வரும் அதிகாரங்களை எழுத முயற்சி செய்துள்ளோம்.

மேலை நாடுகளில் வளர்ந்துள்ள பொருளியல் கோட்பாட்டினை நூலாசிரியர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், ஆங்காங்கே நடைமுறை நிலைமைகளை ஆராயும்போது பல்வேறு நாடுகளிலுள்ள சமுதாயப் பொருளாதார நிலைமைகளை நன்கு அறிதல் வேண்டும். பொருளாதார வளர்ச்சியடையாத நாடுகளில் இல்லாத சில சமுதாயப் பொருளாதார நிலைமைகள் அந் நாடுகளில் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டே, பெரும்பாலான ஆரம்பப் படிவ நூல்கள் எழுதப்பெற்றிருக்கின்றன. இதன் விளைவாக வளர்ச்சியடையாத நாடுகளில் உள்ள மாணவர்கள் சில பொருளியல் விளக்கங்களை — குறிப்பாக விதிகளை நடைமுறை நிலைமைகளுக்குப் பொருத்திக் காண்பிப்பதையும், பொருளியல் கொள்கைகளையும் உண்மைக்கு முரணாக இருப்பதாகக் கருதுகின்றனர். அவர்கள் நாட்டுப் பொருளாதார அமைப்புகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை அறிய இவை உதவவில்லை என்றும் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க இவை உதவவில்லை என்றும் அவர்கள் கருதுகின்றனர். வளர்ச்சியடைந்த பொருளாதார நாடுகளில் உள்ள மாணவர்களுக்காக எழுதப்பெற்ற நூல்களை வளர்ச்சியடையாத நாடுகளில் உள்ள மாணவர்கள் படிக்கும்போது எழும் தவறான கருத்துகளையும், ஐயப்பாடுகளையும் நீக்கும் நோக்கத்துடன் இந்

நூல் எழுதப் பெற்றிருக்கின்றது. இந் நோக்குடன் கோட்பாட்டையும், நடைமுறை நிலைமையுடன் அது கொண்டுள்ள பொருத்தத்தையும், எந்த அளவிற்கு விதியை நடைமுறை நிலைக்கு ஏற்றவாறு மாற்றல் வேண்டும் என்பதையும் அவ்வாறு எவ்வளவு தூரம் அதைச் சமுதாயப் பொருளாதாரப் பின்னணிகளுக்கு ஏற்றவாறு திருத்தலாம் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம்.

பின்தங்கிய நாடுகளெல்லாம் முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்து ஒரேவித வேறுபாட்டைக்கொண்டு, ஒரே மாதிரியான பின்னணியைக் கொண்டிருந்தால், பின்தங்கிய நாடுகளில் உள்ள மாணவர்கள் அனைவருக்கும் ஒரே 'பொருளியல் அறிமுகத்தை' எளிதில் எழுதிவிடலாம். ஆனால், வளர்ச்சியடையாத நாடுகள் பலதரப்பட்டவையாக இருக்கின்றன. பலதரப்பட்ட முன்னேற்ற மடைந்த நாடுகள் தம்மிடையே ஏராளமான வேறுபாடுகளைக் கொண்டு இருப்பதுபோலவே, பலவகைப் பின்தங்கிய நாடுகளும், பூகோள, மக்கள் தொகை, சமுதாய, பொருளாதாரத் துறைகளிலும் தம் நாட்டு நிலையங்களிலும் வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன.[1]

உதாரணமாக, வளர்ச்சியடையும் ஆப்பிரிக்க நாடுகளும், வளர்ச்சியடையாத ஆப்பிரிக்க நாடுகளும் கொண்டிருக்கும் பொருளாதார அமைப்புகளும், பிரச்சினைகளும், இந்திய, பாகிஸ்தானியப் பிரச்சினைகளிலிருந்து அடிப்படை வேற்றுமைகளைக் கொண்டிருக்கின்றன. அந் நாடுகளில் மக்கள் தொகை மிகுதியடைந்துகொண்டிருந்தபோதிலும் இப்பொழுது குறைவாகவே இருக்கின்றது. மேற்கத்திய வெப்ப மண்டல ஆப்பிரிக்க நாடுகளில் மார்க்கட்டில் விற்பனை செய்வதற்காகத் திட்டவட்டமான உற்பத்திமுறை உருவாகி வருகின்றது. இது பெரும் பாலும் தனிப்பட்ட பெண்டிர் கண்காணிப்பில் இருக்கின்றது. கீழக்கத்திய வெப்ப மண்டல ஆப்பிரிக்க நாடுகள், ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடியேறியவர்கள் ஆதிக்கத்தில் இருந்து வருகின்றன. இந் நாடுகளில் இக் குடியேற்றத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. மேலும் லத்தீன், அமெரிக்க நாடுகளின் பிரச்சினைகள், ஆப்பிரிக்க, இந்தியப் பாகிஸ்தானியப் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டிருக்கின்றன. மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு நாட்டின் சூழ்நிலையையும் விளக்கி அவைகளுடைய பிரச்சினைகளை

[1] சில குறிப்பிட்ட முன்னேற்றமடைந்த நாடுகளிடையே அதிகமான வேறுபாடுகள் இருக்கின்றன என்பது உண்மையே. உதாரணமாக இங்கிலாந்து, ஜப்பான், டென்மார்க் நாடுகளிலிருந்து அமெரிக்கா வேறுபட்டிருக்கின்றது. பொருளியல் கோட்பாடுகளை விளக்கும்போது முன்னேற்றமடைந்த நாடுகளிடையே காணப்படும் வேற்றுமை, அவைகள் பின்தங்கிய நாடுகளிலிருந்து வேறுபட்டிருப்பதைவிடக் குறைவான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. இதற்கு உள்ள பல்வேறு சூழ்ணங்களை இங்கு விளக்க இயலாது.

ஆராயத் தொடங்கினால் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தனி ஆய்வு முறையைப் பின்பற்ற வேண்டும்.

எனவே, பொருளியலின் அடிப்படைத் தத்துவங்களையும், அவைகள் எவ்வாறு நடைமுறை நிலைமைக்குப் பொருத்துவது என்பதையும், பற்பல வகையான வளர்ச்சியடையாத நாடுகளின் மாணவர்களுக்கு இச்சிறு நூலில் விளக்குவது சாத்தியமானதல்ல. ஆகையால் நூலாசிரியர்கள் தம் கருத்துகள் இந்தியப் பாகிஸ்தானிய மாணவர்களுக்கே அளித்திருக்கின்றனர். இந்தியாவும், பாகிஸ்தானும் (பல விஷயங்களில் இலங்கை) வளரும் பொருளாதார நாடுகளுக்கு முக்கியமான எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. இவை வளர்ச்சியடையாத பொருளாதார அமைப்புகளைக் கொண்ட நாடுகளிலிருந்து வேறுபட்டிருக்கின்றன. இவை எல்லோருக்கும் தெரிந்த, தெளிவாக உள்ள வேறுபாடுகளைக் கொண்டிருந்தபோதிலும், பல ஒற்றுமைகளையும் கொண்டிருக்கின்றன. ஆகையால் இவைகளை நாம் தேர்ந்தெடுத்தது சரியானதே.

ஆக்ஸ்ஃபோர்டு விவசாய ஆய்வுத்துறையைச் சேர்ந்த எஃப். சி. ஏ. ஜோன்ஸ், கே. ஆர். கிளார்க் இந்நூலிலுள்ள வரைபடங்களைத் தயார் செய்தனர். அவர்களுக்கும், பொறுமையுடன் பிரதிகளைத் தட்டெழுத்தில் தயார் செய்த தட்டெழுத்தருக்கும் எங்கள் நன்றி.

பொருளடக்கம்

பிரிவு I

தொடக்கச் சிந்தனைகள்

1. தோற்றுவாய் 1

A. பொருளியலும் வளர்ச்சியடையும் நாடுகளில் உள்ள மாணவர்களும்—B. இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினைகளும் சிறப்பியல்புகளும்.

2. பொருளியலாரின் ஆய்வு முறை 28

A. பொருளியலின் விளக்கம், எல்லை, முறைகள்—B. விலை அல்லது மார்க்கட்டுக் கருவி.

பிரிவு II

தனிப்பட்ட நுகர்வோன், உற்பத்தியாளன் நடத்தைபற்றிய ஆராய்ச்சி (தனிப் பொருளியல்)

3. தேவை, அளிப்பு, பரிவர்த்தனை 52

1. முன்னுரை—2. குறுகிய காலத்தில் தேவையும் அளிப்பும்—3. குறுகிய காலத்தில் மார்க்கட்டு விலை—4. நீண்ட காலத்தில் தேவையும், அளிப்பும், விலையும்.

4. தேவை-அளிப்பு ஆராய்ச்சி முறையை நடைமுறை நிலைமைக்குப் பொருந்தும்படி திருத்தி அமைத்தலும், அதைப் பயன்படுத்துதலும் 79

A. நீண்ட காலத்திற்குத் தகுந்தாற்போல் தேவை-அளிப்பு ஆராய்ச்சியை மாற்றியமைத்

தல்—B. நிறைவுப் போட்டி இருக்கின்றது என்ற கற்பனையைப் புறக்கணிப்பதால் அவசியமாகும் திருத்தங்கள்—C. சர்வாதீனமும் நிறைகுணப் போட்டியும்; (i) சர்வாதீனமும் விலை நிர்ணயப் போட்டியும்; (ii) நிறைகுணப் போட்டி—D. அரசினர் தலையீட்டின் விளைவாக அவசியமாகும் திருத்தங்கள் — பிற்சேர்க்கை: சர்வாதீனத்தில் இலாபத்தை உச்சநிலைக்கு உயர்த்துவது.

பிற்சேர்க்கை: சர்வாதீனன் உச்ச இலாபத்தை ஈட்டல் 108

5. உற்பத்தியும் உற்பத்திக் காரணிகளும் 111

A. உற்பத்தியும், உற்பத்திக் காரணிகளைச் சேர்த்துப் பயன்படுத்துவதும் — B. உற்பத்திக் காரணிகளின் வேலையும் அவைகளுடைய விலையும். (i) நிலம் (அதாவது இயற்கைச் சாதனங்கள்); (ii) மனித உழைப்பு; (iii) மூலதனம்; (iv) தொழிலை நிறுவுதல் (தொழில் துணிவு)—C. தேசிய வருமானத்தை உற்பத்திக் காரணிகளிடையே, அதை அளிப்போரிடையே பகிர்ந்து கொடுத்தல்.

6. தொழிலை நிறுவுதலும் அதன் பிரச்சினைகளும் ... 134

A. இலாபத்தின் இயல்பும் பணிகளும்—B. தொழில் நிறுவனங்களின் பொருளாதாரப் பிரச்சினைகள். (i) முன்னுரை; (ii) தனியார் துறையில் தொழிலுக்கு நிதி திரட்டல்; (iii) உற்பத்தியின் அளவும் ஒரிடத்தில் உற்பத்திச் செறிவும்.

பிரிவு III

பொருளாதாரம் முழுவதையும் ஆராய்ச்சி செய்தல் (பொதுப் பொருளியல்)

7. பொருளியலில் அளவை 166

A. அளவையின் முக்கியத்துவம்—B. தேசிய வருமானத்தைக் கணக்கிடுதல்.

8. வேலையின்மையும் அமித மக்கள் தொகையும் ... 185

A. பின்தங்கிய நாடுகளில் வேலையின்மை—B. அமித மக்கள் தொகையின் பிரச்சினைகள்—C. முடிவுகள்.

9. பணமும் நிதியும் 199

A. பணமும் பாங்கு முறையும்: 'பணம் அதன் பணியேயாகும்'—B. பொது நிதி இயலின் இடம்—C. தனியார் துறைக்கு நிதியும் கடனுதவியும்.

10. பன்னாட்டு வர்த்தகம் 229

11. பொருளாதார வாழ்வில் அரசின் இடம் ... 238

A. முகவுரை—B. திட்டத்திற்கு அல்லது திட்டமின்மைக்கு—C. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஏன் திட்டம் வேண்டும்?—D. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் திட்டத்தின் நோக்கங்கள்.

12. திட்டப் பிரச்சினைகள் 254

A. திட்டம் வகுப்பதில் வல்லமை—B. முறைகளின் தேர்வு — C. சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் திட்டம் வகுத்தல்—D. திட்டத்தின் விவசாயத்தின் இடம்—E. முடிவுகள்.

பொருட்குறிப்பு அகராதி 286

பிரிவு I

தொடக்கச் சிந்தனைகள்

1. தோற்றுவாய்

A. பொருளியலும் வளர்ச்சியடையும் நாடுகளில் உள்ள மாணவர்களும்

B. இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினைகளும் சிறப்பியல்புகளும்

A. பொருளியலும் வளர்ச்சியடையும் நாடுகளில் உள்ள மாணவர்களும்

சாதாரணமாகக் 'குறைவான வளர்ச்சி' அடைந்த நாடுகளை (இந்த நாடுகள் முன்னேற்றத்திற்கு வேண்டிய சாதனங்களைக் கொண்டிருக்கின்றன என்று பொருள்படும்) வளர்ச்சி அடையாத நாடுகள் என்று எளிமையாகக் கூறலாம். இந்த நாடுகள் மிகுதியான வேறுபாடுகளைக் கொண்டவையாகவும் பலதரப்பட்டவையாகவும் இருக்கின்றன. இந்தியா, பாகிஸ்தான் போன்ற ஒரு குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த வளர்ச்சியடையாத நாடுகளில் உள்ள மாணவர்களுக்காகவே இந்த நூல் எழுதப் பெற்றிருக்கின்றது. ஏனெனில், இந்தியாவும் பாகிஸ்தானும் சில விஷயங்களில் எவ்வளவு வேறுபட்டிருந்தாலும் சில பொதுவான சமூகப் பொருளாதார இயல்புகளைக் கொண்டிருக்கின்றன. இவ் வியல்புகள் அவைகளுடைய வளர்ச்சியைப் பாதிக்கின்றன. இவ் விரு நாடுகள் அளிக்கும் உதாரணங்களை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தி விளக்கம் கொடுக்கலாம். இச் சிறப்பியல்புகள் பின்வரும் பத்திகளால் விளக்கப்பெற்றிருக்கின்றன. சிங்களமும் வேறு சில தென் கிழக்கு நாடுகளும் இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய நிலையில் இருக்கின்றன.

இத்தகைய நாடுகளில் முதன்முதலாகப் பொருளியலைப் பயிலும் மாணவர்கள் சில குறிப்பான இடையூறுகளைச் சமாளிக்க

வேண்டும். இதன் விளைவாக அவர்கள் மனத்தில் தெளிவின்மையும் குழப்பமும் ஏற்படுகின்றன. ஆகையால் இந்த நூல் மேற்கூறிய ஒரு போக்கைக் கொண்டிருக்கிறது. சில நாடுகள் வறுமையும் (உற்பத்தித் துறையில்) திறமையின்மையும் தாண்டிவிடும் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்கின்றன. செல்வம் படைத்த, சிறந்த வளர்ச்சிபெற்ற நாடுகளுக்குப் பொருத்தமான ஆராய்ச்சிமுறையை மேற்கூறிய நாடுகளில் உள்ள மாணவர்கள் அறிந்துகொள்வது அவர்களுடைய முதல் இடர்ப்பாடு. போட்டியையும் விலைக் கருவியையும் (price mechanism) அடிப்படையாகக் கொண்ட பொருளாதார ஆராய்ச்சி இவ் விடர்ப்பாட்டை மேலும் அதிகரிக்கின்றது. போட்டியும் விலைக் கருவியும் (price mechanism) அளிப்பு (supply), தேவை (demand) என்ற இரு சக்திகளைப் பாதிப்பதால் பல்வேறு உற்பத்தித் துறைகளுக்கு ஒதுக்கப்பெறும் உற்பத்திச் சாதனங்களின் அளவு நிர்ணயம் ஆகின்றது. இதை மேலும் உற்பத்திக் காரணிகளின் சுவாந்தார்கள், உற்பத்தியாளர்கள் முதலியவர்களிடையே ஏற்படும் வருமானப் பங்கீடு, நாட்டின் சேமிப்பு (saving), முதலீடு (investment) முதலியவைகளின் அளவு, ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படவேண்டிய பொருள்கள், அவைகளுடைய அளவு முதலியவைகளையும் மேற்கூறிய சக்திகளே பாதிக்கின்றன. இவைகள் அனைத்தையும் விளக்கும் பொருளாதார ஆராய்ச்சியை மேலே குறிப்பிட்ட நாடுகளில் உள்ள மாணவர்கள் புரிந்துகொள்வது கடினம். 'இவ் வாராய்ச்சியை ஆதாரமாகக்கொண்ட எடுகோள்கள் நம் நாட்டுக்குப் பொருந்தவில்லை. ஆகையால் இவை நம் நாட்டுப் பொருளாதாரத்தையும் அதன் பிரச்சினைகளையும் அறிந்துகொள்வதற்கு எவ்வாறு உதவி புரியும்?' என்று அவர்கள் கேட்கலாம். தடையற்ற போட்டியின் சக்தியே (free competitive force) தனிப்பட்ட பண்டங்களின் விலையையும், பொது விலைவாசிகளையும் (price levels) நிர்ணயம் செய்கின்றன என்பதும், அரசின் தலையீடு அவைகளைப் பாதியா என்பதும் ஒரு சாதாரணமான பொருளாதார எடுகோள். இதைப்போன்ற எளிய எடுகோள்களை (assumptions) அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி, வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களுக்குக்கூட, இக் காலத்தில் பொருந்தாது. இரண்டாவது உலகப்போர் தொடங்கியதிலிருந்தும், போருக்குப் பின்பும் இந்தியா, பாகிஸ்தான், சிங்களம் முதலிய நாடுகளும் தென்கிழக்கு ஆசிய நாடுகளும் பொருளாதாரத் திட்டங்களை வகுத்துச் செயலாற்றுகின்றன. ஆகையால் இந்த நாடுகளில் அரசியலார் தலையீட்டால் போட்டி (competition) விலையை நிர்ணயம் செய்யும் சக்தியைப் பெருமளவு இழந்து விட்டது. போட்டியின் மற்ற விளைவுகளும் பாதிக்கப்படுகின்றன. (இந் நாடுகளில் அரசினர் தலையீட்டுக் கொள்கை அடிக்கடி மாறுகின்றது.) இங்கிலாந்தைப்போலவே இந்தியத் துணைக்கண்டத்திலும்

அரசினர் செய்யும் கொள்முதல் (procurement), பங்கீடு (rationing), விலை நிர்ணயம் முதலியவை போருக்குப்பின் வளர்ச்சியடைந்தன. திட்டங்களைச் செயலாற்றுவதால் அரசாங்கத்தின் கொள்கை பொருளாதாரத்தை மிகுதியாகப் பாதிக்கின்றது. உதாரணமாகப் பற்பல துறைகளுக்கு ஒதுக்கவேண்டிய உற்பத்திச் சாதனங்களின் அளவு, இறக்குமதியாக வேண்டிய பொருள்கள், அவைகளின் அளவு முதலியவற்றை அரசின் கொள்கையே பாதிக்கின்றது. பொருளியலாரின் எளிமையான ஆராய்ச்சியை ஆதாரமாகக் கொண்டு, சிந்தனை செய்து படிப்படியாக உண்மையை அறியலாம். உண்மைக்குப் பொருத்தமற்ற எடுகோள்களைப் படிப்படியாக நீக்கி நடைமுறையில் நாட்டில் நிலவும் நிலைமையைப் புரிந்துகொள்ளலாம். இவ் வராய்ச்சி முறையைச் சாதாரணமாக எல்லாரும் புரிந்துகொள்வதில்லை. நடைமுறை நிலைமையை விளக்கக்கூடிய ஆராய்ச்சியை யாவரும் முதன்முதலில் வேண்டுவது இயற்கை. ஆனால், முதல் படிவத்தில் மட்டுந்தான் இத்தகைய விளக்கத்தை வேண்டுவர். மக்களுடைய இவ் விருப்பம் நியாயமானதாகவும் தோன்றுகிறது. 150 ஆண்டுகள் முன்னேற்றமடைந்த நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகொண்ட சில நாடுகளில் பெரிய பொருளாதாரப் பகுதிகளில் பெரும்பான்மையோர் பழைய உற்பத்தி முறைகளைப் பின்பற்றுகின்றனர். மேலும் இப் பகுதிகளில் மக்கள் வறுமையான நிலையில் இருக்கின்றனர். உலக முன்னேற்றத்திலும் சுபிட்சத்திலும் இந்த நாடுகள் எவ்வாறு தமக்குரிய பங்குகொள்ள முடியும்? இத்தகைய பிரச்சினைகளுக்கு விளக்கம் கொடுக்க ஒரு புதிய ஆராய்ச்சிமுறை வேண்டாவா?

மேலும் வேறு சில சிறப்பான இடர்ப்பாடுகளும் இருக்கின்றன. பொருளியலில் ஆளப்பெறும் சொற்களும் சில இடையூறுகளை எழுப்புகின்றன. முன்னேற்றமடையாத நாடுகளில் மாணவர்கள் பொருளியலைப் பிற மொழியில் படிக்கின்றார்கள் என்பதைமட்டும் நாம் இங்குக் குறிப்பிடவில்லை. நீண்ட காலத்தில் பிராந்திய மொழியில் எழுதப்பெற்ற நூல்களையும், மொழிபெயர்க்கப்பெற்ற நூல்களையும் பயன்படுத்துவதன்மூலம் இவ் விடர்ப்பாட்டைச் சமாளிக்கலாம். (இதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யலாம்.) பொருளியலில் ஆளப்பெறும் சொற்கள் அளிக்கும் இயற்கையான இடையூறுகளும், அன்னிய மொழியில் பயில்வதால் ஏற்படும் இடையூறுகளும் சேர்ந்து மாணவர்களுக்கு ஒரு சிறப்பான தொல்லையைக் கொடுக்கின்றன. பிராந்திய மொழியில் எழுதப் பெற்ற நூல்களும், மொழிபெயர்க்கப்பெற்ற நூல்களும் இத் தொல்லைகளைக் குறைக்கின்றன. மொழிபெயர்ப்பு சில பிரச்சினைகளை எழுப்புகின்றது. இப் பிரச்சினைகளைப்பற்றி நாம் இங்கு எதையும் குறிப்பிடாமல் மேலே செல்லலாம். அன்றாடம் நடைமுறையில்

மக்கள் பயன்படுத்தும் பல சொற்களைப் பொருளியலார் சில குறிப்பிட்ட கருத்துகளை விளக்கப் பொருளியல் கலைச்சொற்களாகப் பயன்படுத்துகின்றனர். இச் சொற்கள் சாதாரண நடையில் சில பொதுவான திட்டவட்டமற்ற பொருள்களைக் கொண்டிருக்கின்றன. 'மார்க்கட்டு', (market) (இரண்டாவது அதிகாரத்தைப் பார்க்கவும்.) 'தேவை' (demand), 'அளிப்பு' (supply) (மூன்று, நான்காவது அதிகாரங்களைப் பார்க்கவும்) முதலியவை இத் தகைய சொற்கள். இவை பொருளியலில் அடிப்படையான கருத்துகளைக் கொண்டிருந்தபோதிலும், மேலே குறிப்பிட்ட தொல்லைகளை எழுப்புகின்றன. மேலும் பொருளாதார வளர்ச்சி பெறுத நாடுகளில் புழக்கத்தில் இருக்கும் சில சொற்கள் சிறப்பான பொருளைக் கொண்டிருக்கலாம். இவை வளர்ச்சி அடைந்த நாடுகளில் சாதாரணமான பொருளைக் கொண்டிருக்கலாம். பொருளியலார் இதை அறிந்தபின் தம் நூலில் பொருத்தமான மாற்றத்தைப் புகுத்தவேண்டும்.

இவைகளைத் தவிர வேறு சில இன்னல்களும் உள. பல கலைச் சொற்களுக்குப் பொருளியலார் பற்பல பொருள்களைக் கொடுக்கின்றனர். பல பொருளியலார் பல சொற்களுக்குக் குறிப்பிட்ட விளக்கம் கொடுத்து அவைகளைக் கையாண்டிருக்கின்றனர். கருத்துகளைத் தவருகப் புரிந்துகொள்வதைத் தடை செய்யவும், கருத்துகளைச் சுருக்கமாக வெளியிடுவதற்காகவும், தம் புகழையும் பெயரையும் நிலைநாட்டுவதற்காகவும் பலர் அண்மைக் காலத்தில், பழைய சொற்களுக்குப் பதிலாகப் புதிய சொற்களைக் கையாண்டிருக்கின்றனர். இவைகளுள் சில பொருத்தமானவையாகவும் பயனுள்ளவையாகவும் இருக்கின்றன. ஆனால், சில சொற்களும் சொற்றொடர்களும் (பொருளியலார் நடை என்று அழைக்கப்படுவன) குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. இவை எளிய முறையில் கருத்துகளை வெளிப்படுத்தாமல் எல்லாரும் எளிதில் புரிந்துகொள்ளும் சில சாதாரண கருத்துகளையும், தத்துவங்களையும்கூடச் சிக்கலான முறையில் விளக்கி ஒரு தெளிவற்ற பொருளாதார நடையையே ஏற்படுத்திவிட்டன.

கணித மாதிரிகளைப் (mathematical models) பயன்படுத்தும் பொழுது ஏறக்குறைய இதுபோன்ற மற்றொரு பிரச்சினையும் எழுகிறது. 'கணித மாதிரிகளைப் புரிந்துகொள்வதற்கு வேண்டிய கணிதத் துறைப் பயிற்சியை ஒரு மாணவன் பெற்றிருந்தபோதிலும் பொருளியலில் சிறந்த புலமை கொள்ளாவிடில் இவ் வியலின் வளர்ச்சி அடைந்த பகுதிகளைத் தவருகப் புரிந்துகொள்ளக்கூடும். மிக நுட்பமாக விளக்கப்பெற்ற ஏடுகோள்களை ஆதாரமாகக் கொண்டே இத்தகை மாதிரிகளை அமைக்கவேண்டும். இப்படிச்

செய்தால்தான் மாதிரிகளை அமைப்பதற்கு வேண்டிய எளிமையைப் பெறலாம். இதிலிருந்து இவை (மேலே குறிப்பிட்ட மாதிரிகள்) நல்ல வளர்ச்சியடைந்த பொருளாதார அமைப்புகளைக்கொண்ட நாடுகளுக்குக்கூடப் பொருந்தா என்பது புலனுகிறது. நடைமுறையில் நாட்டின் பொருளாதாரம் இயங்குவதை விளக்குவதற்கும் கணித மாதிரிகளைப் பயன்படுத்தலாம். இவை அளவை விவரங்களை (quantitative data) அடிப்படையாகக் கொண்டிருக்கும். வளர்ச்சி அடையாத நாடுகளில் கிடைக்கும் துல்லியமற்ற, அரைகுறையான விவரங்களைக் கொண்டு கணித மாதிரிகளை அமைப்பது பற்றிய இரு உண்மைகளை நாம் அறிந்தோம். இம் மாதிரிகளை அமைப்பதற்குமுன் சொற்களைக்கொண்டே விளக்கங்கள் கொடுத்த பொருளியலாருடைய நூல்களையும் (அவர்களுடைய எளிமையான கணித எடுத்துக்காட்டுகளையும்) நன்கு அறிய வேண்டும். இரண்டாவதாகக் கோட்பாடுகளை (theories) அமைப்பதில் ஆர்வம் கொண்ட மாணவர்கள், தம் கணித முறைகளை நன்கு வளர்த்துக் கொள்ளவேண்டும். இக் கோட்பாடுகள் நடைமுறை நிலைமைக்குப் பொருத்தமாக இருந்தாலும் இல்லாவிடிலும், சிறந்த வளர்ச்சி பெற்ற பின்பே பயன்படுத்தப்படவேண்டும். நடைமுறை நிலைக்குப் பொருத்தமான கொள்கையைப் பின்பற்றுவதற்கோ அல்லது பொருளாதார இயக்கத்தைப் புரிந்துகொள்வதற்கோ கணித மாதிரிகள் குறுக்கு வழியாகப் பயன்படா. ஆயினும், மாயாஜால சூத்திரத்தை நாடும் மாணவர்களுக்கு இவை கவர்ச்சிகரமாக இருக்கின்றன.

மூன்றுவதாக முன்காலத்தில் மேலை நாட்டுப் பொருளியலார் அவ்வப்போது மக்கள் பொருளாதார வாழ்க்கையில் எழும் பிரச்சினைகளிலேயே தம் முழுக் கவனத்தைச் செலுத்தினர். எல்லாரும் ஏற்றுக்கொண்டிருக்கும் (நாமும் மேலே குறிப்பிட்டிருக்கும்) இத்தப் பொருளாதாரக் கொள்கைபற்றிய ஆராய்ச்சியை (கோட்பாடுகளைப் பயன்படுத்தி நடைமுறை நிலைமையை ஒழுங்குபடுத்துவது) இது பாதித்துவிட்டது. மேலும், இதன் விளைவாகப் பொருளியல் ஆராய்ச்சியில் குறிப்பிட்ட சில பிரச்சினைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து இவைகளைச் சார்ந்த கோட்பாடுகளிலேயே மிகுதியான கவனம் செலுத்தினர். இப் பிரச்சினைகள் வளர்ச்சியடையாத நாடுகளில் முக்கியத்துவம் பெறவில்லை. இவைகளைத் தவிர வேறு பகுதிகளில் மேலை நாட்டுப் பொருளியலார் மிகுதியான கவனம் செலுத்தாமையால் அவர்கள் எழுதியவை கீழ் நாடுகளுக்குப் பொருந்தவில்லை. அவை பின்தங்கிய நாட்டு மாணவர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யவில்லை. அவர்கள் தம் நாடுகளின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கே முடிவை நாடினர். கீன்சு

(Keynes) எழுதிய 'வேலைபற்றிய பொதுக் கோட்பாடு' (General Theory of Employment) என்ற நூலை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். வெவ்வேறு சூழ்நிலைகளில் வேலையின்மைக்கும் (unemployment) முழு வேலையின்மைக்கும் (under employment) ஏற்படும் காரணங்களை ஆராய்ச்சி செய்து தன் நாட்டில் இந்த நூல் எடுத்து விளக்கும் என்று மாணவர்கள் எதிர்பார்க்கலாம். ஆனால், ஒருவகை வேலையின்மையைமட்டுமே (மேல் நாடுகளில் ஏற்படும் வர்த்தக சுழற்சியின் காரணமாக விளையும் வேலையின்மை) கீன்சு (Keynes) ஆராய்கின்றார் என்பதை மேற்கூறிய மாணவன் அறிவான். ஆனால், தற்காலத்தில் எழுதப் பெற்ற பொருளியல் நூல்கள் மாணவனுக்கு ஓரளவு உதவியளிக்கின்றன. நூலாசிரியர்கள் வளர்ச்சியடையாத நாடுகளில் கவனம் செலுத்திப் பொருளாதார வளர்ச்சிபற்றிய நூல்கள் பலவற்றை எழுதியுள்ளனர். ஆனால், இத் நூல்களைப் பயிலும் மாணவர்கள் சாதாரண எளிய பொருளியல் கோட்பாடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

புதிய நாடுகளில் பாடங்களைக் கற்பிக்கும்முறை நான்காவது இடர்ப்பாட்டுக்குக் காரணமாக இருக்கின்றது. மேல் நாடுகளைப் போலல்லாமல் இந்த நாடுகளில் மாணவர்கள் ஆசிரியர்களைக் குருவாகக் கருதுகின்றனர். மாணவர்கள் எவ்வித விளக்கங்களையும் எழுப்பாமல் மனப்பாடம் செய்ய முயல்கின்றனர். இம் முறை இருசாராருக்கும் (ஆசிரியருக்கும் மாணவனுக்கும்) எளியதாக இருப்பினும் பொருளியலை ஆழமாகப் பயில்வதற்கு உகந்ததாக இல்லை. பொருளியலின் வளர்ச்சியடைந்த பகுதிகளில் பல கோட்பாடு களைப்பற்றிய கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. பலர் வெவ் வேறு கருத்துகளைக் கொண்டிருக்கின்றனர். இந் நிலையில் மாணவர்கள் பிறர் சொல்வதை ஏற்றுக்கொள்வதால் சிறந்த பொருளாதார வல்லுநராக முடியாது. 'உலகிலுள்ள எல்லாப் பொருளியலாரும் கருத்து வேற்றுமையின்றி ஒரே முடிவுக்கு வருவதற்கு எவரும் இதுவரை வழி வகுக்கவில்லை' என்று சிலர் கூறியிருக்கின்றனர். பன்னாட்டுப் பொருளாதாரச் சங்கம் (International Economic Association) 1955-ல் 30 பொருளியலாரை ஒரு தீவுக்கு அனுப்பி அவர்களை மூலதனம் (capital) பற்றிய ஆராய்ச்சியை நடத்துமாறு வேண்டிக்கொண்டது. ஆனால், அவர்கள் ஒரே முடிவுக்கு வரவில்லை'[1] மாணவர் ஆய்வு மனப்பான்மையைக் கொண்டிருக்கவேண்டும். பாடத்தைக் கசடறக் கற்க வேண்டும். கற்ற பாடத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாமையால் சிலர்

[1] 'தி எகானமிஸ்ட்', ஆகஸ்ட் 12, 1961, பக்கம் 632; Review of the Theory of Capital, Ed. எஃப். ஏ. லட்ஸ் மற்றும் டி. சி. ஹேக்.

அடிப்படைப் பகுதிகளிலேயே பிழை செய்வது வியக்கத்தக்கதாக இருக்கின்றது. நடைமுறையில் மக்களுடைய பொருளாதார வாழ்க்கையை சமூக, சமய, உளவியல் சக்திகள் பாதிப்பதால், அன்றுடம் எழும் பிரச்சினைகளை ஆராயும்பொழுது பிழைகள் ஏற்படுகின்றன. மேல்நாட்டுப் பொருளியலாரின் ஆராய்ச்சியை ஆதாரமாகக் கொண்ட எடுகோள்கள் கீழ்நாடுகளின் நிலைமைக்கு ஒவ்வாதனவாக இருப்பதால், கீழ்நாட்டு மாணவர் மேல்நாட்டுச் சூத்திரங்களைப் பயன்படுத்த முடியவில்லை. இவை கீழ்நாடுகளுக்குத் தகுந்தமுறையில் மாற்றி அமைக்கப்படாமையால் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய ஆராய்ச்சியோ அல்லது சூத்திரங்களோ கிடைக்கவில்லை.

நடைமுறையில் பயன்படுத்தக்கூடிய, எல்லாரும் ஏற்றுக் கொண்டிருக்கும் பொருளியல் தத்துவங்களின் உட்கருத்துகள் மிகக் குறைவாக இருக்கின்றன. ஆனால், பொருளியலாரின் ஆராய்ச்சிமுறையே முக்கியமானவை. இவைகளையே மாணவன் அறிய வேண்டும். (மற்றவர் கூறியதை மறுக்காமல் ஏற்றுக் கொள்ளாத தன்மையையும் ஆய்வு நோக்கையும் அவன் கொண்டிருத்தல் வேண்டும்.) மற்ற இயல்புகளோடு ஒப்பிடும்பொழுது பொருளியலே, இன்றும் உருவாகிக் கொண்டிருக்கும் ஒருகட்டுப்பாடு அல்லது ஒழுங்குமுறை என்று கருதலாம். மேற்கூறிய உட்கருத்துகளைத் தவிர, வெவ்வேறு கருத்துகளைக் கொண்டிருக்கும் பொருளியல் துறையினர் பலர் இருக்கின்றனர். (இவர்களிடையே கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. இக் கருத்து வேற்றுமைகளிலும், ஆராய்ச்சியிலும் பாடத்தைச் சரிவரப் பயில விரும்பும் மாணவன் பங்குகொள்ள வேண்டும்.) எனவே, அவன் முதல் படிவத்திலிருந்தே வினாக்களை எழுப்புதல், வாதாடுதல், வாதத்தின் நிறைகுறைகளை உணர்தல் முதலிய தன்மைகளை வளர்க்க வேண்டும்.

மாணவர் நிபுணராஞலன்றிப் பொருளியல் பயிலுவதில் பயன் ஏற்படாது என்று நாம் முடிவு செய்யக்கூடாது. இதற்குமாருக எல்லாரும் ஏற்றுக்கொண்டிருக்கும் ஆய்வு முறையும், சில தத்துவங்களும் இருக்கின்றன. இவை பல்வேறு பொருளாதார முறைகள் (economics systems) பல சூழ்நிலைகளில் எவ்வாறு இயங்குகின்றன என்பதை விளக்குகின்றன. மேலும், இவை சில குறிப்பிட்ட கொள்கைகள் அளிக்கும் பயன், திறமை, எந்த அளவு அவைகளைப் பயன்படுத்தலாம் என்பவறைவற்றையும் எடுத்துக் காட்டும். இங்குக் குறிப்பிட்ட விளைவுகள் நிகழ்வதற்குச் சில நிபந்தனைகள் இருக்கின்றன. 'பொருளாதார மனிதன்' (economic man) என்றழைக்கபடுவோர் சமுதாயத்தில் இல்லை என்பதை நாம் உணர

வேண்டும். மக்களுடைய உணர்ச்சிகளும் செயல்களும் பல்வேறு மூலங்களிலிருந்து உதயமாகின்றன. பொருளாதார சக்திகளிலிருந்துமட்டும் எழுகின்றன என்று கருதக்கூடாது. இவைகள் எல்லாவற்றையும் மனத்தில் கொண்டு இவைகளுக்குத் தகுந்த முறையில் நமது ஆராய்ச்சி முறையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

எனவே, பாடத்தைப் பயிலும் மாணவன் ஆராய்ச்சியின் அடிப்படையாது, அது ஆதாரமாகக் கொண்டிருக்கும் எடுகோள்கள் யாவை என்பனவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற மன உறுதியுடன் தன் முயற்சியைத் தொடங்கவேண்டும். (இந் நூலில் விளக்கப் பெற்றிருக்கும்.) ஆரம்ப நிலை ஆராய்ச்சி ஆரம்பப் படிவமாக அமைந்திருக்கின்றது என்றும், பிரச்சினைகளின் மற்றக் கூறுகளை மேலே படிக்கும்பொழுது கவனிக்கவேண்டும் என்றும், இவ்வாறு செய்த பிறகே மிக எளிதாகத் தோன்றிய பிரச்சினைகளைப் பாதிக்கும் பல்வேறு சக்திகளை நன்கு ஆராயலாம் என்றும் மாணவன் உணரவேண்டும். வளர்ச்சியடையாத நாட்டு மாணவர்களுக்கு மேலே குறிப்பிட்ட தொல்லைகள் இருக்கின்றன. ஆயினும், வளர்ச்சியைக் காப்பாற்றிக்கொள்ளும் துறையில் வெற்றிகரமான ஆரம்ப முயற்சி செய்துவரும் மேலை நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது, கீழ் நாடுகளுக்குச் சாதகமான சில நன்மைகள் இருக்கின்றன. கீழ் நாடுகள் தற்காலத்திய போக்குவரத்து, தொடர்பு வசதிகள் மூலம் முன்னேற்றமடைந்த நாடுகளின் நவீன விஞ்ஞான முறைகளைப் பின்பற்றலாம். அதாவது முன்னேற்றப் பாதையில் செல்லும்பொழுது ஆரம்பகாலத்தில் செய்த பிழைகளைக் (குறிப்பாகச் சமூகத் துறையில்) கீழ் நாடுகள் தவிர்க்கலாம்.

பொருளியலின் முக்கியமான இயல்பையும் அடிப்படை ஆராய்ச்சி முறைகளையும், அடிப்படைத் தத்துவங்களையும் எடுத்துரைப்பதே இந் நூலின் குறிக்கோள். குறிப்பிட்ட சில நாடுகளின் பொருளாதார அமைப்பையும் சில பொருளாதார நிலையங்கள் இயங்கும் முறையையும் இந் நூல் விளக்கும். குறிப்பிட்ட பிரச்சினைகளை ஆராயும்பொழுது இந்தியா, பாகிஸ்தான் போன்ற வளர்ச்சி அடையாத நாடுகளின் நிலைமைக்குப் பொருத்தமான உண்மைகளையே ஆராய்வோம். இந் நாடுகளின் பல்வேறு பிரச்சினைகளை இந் நூலில் விளக்குவதற்கு இடமில்லை. சில குறிப்பிட்ட உதாரணங்களைமட்டுமே எடுத்து விளக்கி, எவ்வாறு எளிய அடிப்படைக் கோட்பாடுகளைக்கொண்டே அவைகளைப் புரிந்துகொள்ளலாம், அப் பிரச்சினைகளுக்கு முடிவு காணலாம் என்பவைகளை விளக்கவாம்.

மிகுதியான மக்கள் தொகையுடன் விவசாயத்தையே முக்கியமாக நம்பி வாழும் நாடுகளின் இயல்புகளே இந்தியாவும் பாகிஸ்தானும் கொண்டிருக்கின்றன. முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்து இந் நாடுகள் வேறுபட்டிருப்பதற்கு இவ் வியல்புகளே காரணமாகும். இத்தகைய நாடுகளின் பொருளாதார அமைப்பின் குணாதிசயங்களே இவ் வதிகாரத்தின் பின்வரும் பக்கங்களில் ஆராய்ப்படும். இரண்டாவது அதிகாரம் பொருளியலார் எவ்வாறு தம் பாடத்தைப் பயிலவேண்டும் என்பதைக் காட்டும். இரண்டாவது பிரிவு தனிப்பட்ட நுகர்வோனும் (consumer) உற்பத்தியாளனும் (producer) நடந்துகொள்ளும் முறையை விளக்கும். [தனிப்பொருளியல் ஆராய்ச்சி (Micro-Economics)]. மூன்றும் பகுதி பொருளாதாரத்தின் பொது ஆராய்ச்சியை (Macro-Economics) விளக்கும்.

B. இந்திய பாகிஸ்தானியப் பொருளாதார அமைப்புகளின் சிறப்பியல்புகளும் சிறப்பான பிரச்சினைகளும்

இந்தியா, பாகிஸ்தான் போன்ற வளர்ச்சியடையாத நாடுகளின் பொருளாதார, சமூக அமைப்புகளின் தன்மைகளே விளக்கினால், இத்தகைய நாடுகளின் விசேஷ பிரச்சினைகளே நாம் புரிந்துகொள்ளலாம். மேலும், இந் நாடுகளின் நிலைமைக்கு ஏற்றவாறு பொருளியல் கோட்பாடுகளைக் கவனத்துடன் பயன் படுத்தலாம். மேற்கூறிய இயல்புகளில் சில தன்மையிலும், சில (பொருந்தும்) அளவிலும் முன்னேற்றமடைந்த மேலை நாடுகளின் இயல்புகளிலிருந்து வேறுபட்டிருக்கின்றன. இவ் வியல்புகளின் பொருளாதார முக்கியத்துவத்தை இங்குக் காண்போம். கோட்பாடு பற்றிய ஆராய்ச்சியை இவ் வியல்புகளுக்குத் தகுந்தவாறு எப்படி அமைத்துக்கொள்ளவேண்டும் என்பதையும், சில குறிப்பிட்ட கொள்கைகளைப் பரிசீலனை செய்வதையும், சில பிரச்சினைகளின் ஆராய்ச்சியையும் பின்வரும் அதிகாரங்களில் பார்க்கலாம். இங்கு நம் ஆராய்ச்சிக்குட்பட்ட நாடுகள் ஏராளமான மக்கள் தொகையைக் கொண்டிருக்கின்றன. அவைகளுடைய சுபிட்சம் (அதாவது இப்பொழுது கிராமங்களில் வாழும் மக்களின் மிகத் தாழ்ந்த வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படாமல் இருப்பதற்குக்கூட) நாட்டின் இயற்கைவளம் மனித சக்திக்கு அப்பாற்பட்டிருக்கின்றது. மிகுதியான மாறுபாட்டையும் பருவ மழையையும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதும் இதன் விளைவாகச்

சேதம் ஏற்படுவதும் மற்ற இயற்கை விபத்துகள் ஏற்படுவதும் இயற்கை.

பருவ மழையின் போக்கும் வேகமும் மனித சக்திக்கப்பாற் பட்டதாக இருந்தபோதிலும், அதைக் கட்டுப்படுத்துவதற்கு ஏராளமான ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருக்கின்றன. இப்பொழுதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர மேலும் செய்யவேண்டியவை இருக்கின்றன. விபத்துகளின் கொடுமையைத் தணிக்க நீர்ப்பாசன அணைக்கட்டுகளையும், வடிகால்களையும் போக்குவரத்து வசதிகளையும் அரசினர் அமைத் திருக்கின்றனர் என்பதை நாம் உணரவேண்டும். மற்றப் பின் தங்கிய நாடுகளை விபத்துகள் இந்த அளவு தாக்குவதில்லை. முன்னேற்றமடைந்த நாடுகளில் இத்தகைய விபத்துகள் ஏற்படு வதே இல்லை என்று நாம் கூறவில்லை. விபத்துகள் ஏற்படும் பொழுதும் அவைகளைச் சமாளிக்கும் ஆற்றலையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவியளிக்கும் சக்தியையும் முன்னேற்ற மடைந்த நாடுகள் பெற்றிருக்கின்றன. மேலும், இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் விபத்துகள் அடிக்கடி நிகழ்கின்றன. பாதிக்கப் படும் மக்களின் எண்ணிக்கையைக் கொண்டு கணக்கிடும் பொழுது அவை விளைவிக்கும் தீமை மிகுதியாகவிருக்கின்றது. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் (வளர்ச்சிபெறுத நாடு என்று கருதப்படும் மேற்கிந்தியத் தீவுகள்) முதலிய நாடுகளில் மக்கள் நூறு அல்லது ஆயிரக் கணக்கில் இயற்கை விபத்துகளுக்கு இலக்காகின்றனர். ஆனால், இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மக்கள் மிலியன் கணக்கில் இவ் விபத்துகளுக்கு இரையா கின்றனர். சீனாவும் இத்தகைய விபத்துகளில் சிக்கிக் கொள்கின்றது. ஆனால், மற்ற முன்னேற்றமடைந்த நாடுகளோ, வளர்ச்சி பெறுத நாடுகளோ இப்படிப் பாதிக்கப்படுவதில்லை.

இந்தியப் பிரச்சினையின் தன்மையை விளக்குவதற்கு ஓர் ஒப்பீட்டை இங்குக் குறிப்பிடலாம். 1920-லிருந்து டாக்டர் மான் (Dr. H. H. Mann) நடத்திய ஆராய்ச்சி கீழ்க்கண்ட உண்மையை எடுத்துக்காட்டியது. இங்கிலாந்தில் விளைச்சல் பாதிக்கப்பட்டால், சாதாரண ஆண்டு விளைச்சலில் 80 சதவீதத் திற்குக் குறைவான பயிர் பிழைக்கும். ஆனால், பம்பாய்-தக்காணப் பகுதியில் 10 சதவீதத்திற்குக் குறைவான பயிரே பிழைக்கும்; இந்தியாவின் மற்றப் பகுதிகளிலும் இதே நிலைமை நிலவுகின்றது. நான்கு அல்லது ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தியாவின் பெரும் பகுதிகளில் பருவமழை தவறுகின்றது. விபத்துகள் ஏற்படும்பொழுது அரசினர் மக்களுக்கு உதவியளிக்கின்றனர். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உணவையும், நீரையும் அனுப்பு

கின்றனர். அடுத்த பருவத்திற்கு வேண்டிய விதை, கால்நடை முதலியவைகளைக் கொடுக்கின்றனர். ஆயினும் மிலியன் கணக்கில் மக்கள் பல்வேறு தொல்லைகளுக்கு இலக்காகின்றனர். நிலங்களை இழக்கின்றனர்; அவர்களுடைய கடன் மிகுதியடைகின்றது. அவர்களில் பலர் (50 சதவீதத்தினர் என்று கணக்கிடப்பட்டிருக் கின்றது) நிரந்தரமாகக் கடன்பட்டிருப்பதில் வியப்பொன்றுமில்லை. பெரும் பகுதியினர் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய சக்தியைக் கொள்ளவில்லை. இந்தியப் பாகிஸ்தானிய ஐந்தாண்டுத் திட்டங்களில் சிறப்பான இடம் பெற்றிருக்கும் கூட்டுறவு இயக்கம் வெற்றிகரமாக இயங்குவதற்கு இது ஓர் இடையூறாக இருக்கின்றது. எனவே, பருவமழையையே நம்பி இருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது கடினமாக இருக்கின்றது. நாட்டின் பல்வேறு பகுதிகளிடையே செல்வத்திலும் செழிப்பிலும் காணும் வேறுபாடுகளுக்கும் மேற்கூறியவை காரணமாகும்.

பாகிஸ்தானில் கிழக்கு, மேற்குப் பகுதிகளுக்கிடையே பொருளாதார, சமூக அமைப்பிலும் மக்கள் நெருக்கத்திலும் குறிப்பான வேறுபாடுகள் இருக்கின்றன. இவ்விரு பகுதிகளுக் கிடையில் நூறு மைல் நீளமுள்ள இந்தியப் பகுதி இருக்கின்றது. மேற்கூறிய வேறுபாடுகள் சில பிராந்தியப் பிரச்சினைகளை எழுப்பு கின்றன. கிழக்குப் பாகிஸ்தான் பல விஷயங்களில் மேற்கு வங்காளத்தை ஒத்திருக்கின்றது; மேற்குப் பாகிஸ்தானைப்போல் இல்லை. (மேற்கு வங்கத்தில் கல்கத்தா நகரம் இருக்கின்றது என்ற ஒரே உண்மைதான் அதைக் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கின்றது.) மேற்குப் பாகிஸ்தானில் கிழக்குப் பகுதியைவிட, வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகள் மிகுதியாக இருப்பதால், விடுதலை அடைந்த ஆண்டிலிருந்து இவ்விரு பகுதிகளிடையே ஒரு பிளவு வளர்ந்துகொண்டு வருகின்றது. இப்பிரச்சினையைத் தீர்க்க அண்மைக் காலத்தில் தான் முயற்சி செய்துவருகின்றனர். பருவத்திற்குப் பருவம் விலைச்சலில் ஏற்படும் அரிய வேற்றுமைகள் வேறுபாட்டுப் பிரச்சினையைக் (contrasted problem) கிளப்பிவிடுகின்றன. சாதாரணமாகப் பெரும்பாலான பகுதிகளில் சிறந்த அறுவடை இருக்கும்பொழுது, விலைகள் தாழ்ந்து தீய விளைவுகளை ஏற்படுத்து கின்றன. நல்ல பருவத்தில் விவசாயிகளின் வருமானம் (நில விலைச்சல் மூலம் கிடைப்பது) சாதாரண அல்லது பாதகமான பருவத்தில் கிடைக்கும் வருமானத்தைவிடக் குறைவாக இருக்கும். இதன் காரணமாக விவசாய உற்பத்தி பெருகுவதற்கு மிகக் குறைவான தூண்டுதலே கொடுக்கப்படுகின்றது. விவசாய உற்பத்திப் பெருக்கம் பெரிதும் விரும்பப்படுகின்றது.

இரண்டாவதாக மக்கள் நெருக்கம் மிகுதியாக இருக்கும் பகுதிகளில் மேலும் மக்கள் தொகை அதிகரிப்பதால் பிரச்சினைகள் ஏழுகின்றன. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சில விவசாயப் பகுதிகளில் உள்ள மக்கள் தொகை முன்னேற்றமடைந்த நாடுகளில் உள்ள தொழில் பகுதியை ஒத்திருக்கின்றது. இந்த நாடுகளில் கடந்த ஆண்டுகளில் மக்கள் தொகை வளர்ச்சிவீதம் (rate of population growth) மிகுதியாக இல்லை. ஆனால், இவ்விதம் தேசிய வருமான வளர்ச்சி வீதத்திற்குச் (rate of growth of national income) சமமாகவோ அல்லது அதைவிட மிகுதியாகவோ இருப்பதால் அண்மைக் காலம் வரை தலா வருமானத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

மேற்கூறிய மக்கள் தொகை நெருக்கம் பல பொருளாதாரப் பிரச்சினைகளுக்குக் காரணமாக இருக்கின்றது. இதுபற்றிய எல்லாவற்றையும் விளக்குவதற்கு ஒரு தனி நூலையே எழுத வேண்டும். இதன் சில கூறுகளை எட்டாவது அதிகாரத்தில் பார்ப்போம். இங்கு இரு விஷயங்களைக் குறிப்பிடுவோம்.

முதல் விஷயம் மக்கள் வயது பற்றியது. சில ஆண்டுகளாக இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் (அண்மைக் காலத்தில் சிங்களத்திலும்) மக்கள் தொகை மிகுதியடைகின்றது. இறப்புவீதம் குறைவதாலும், குழந்தைகள் இறப்பது குறைவதாலும் இளைஞர் தொகையும் (ஓரளவு வயதானவர் தொகையும்) மிகுதியாக இருக்கின்றது. வேலை செய்யும் வயதில் உள்ளவர்களுடைய தொகை குறைவாக இருக்கின்றது. மற்றவர்களைச் சார்ந்து வாழ்வோரின் எண்ணிக்கையும் விகிதமும் மிகுதியடையும். ஏனெனில், பழைய காலத்தில் வேலைசெய்து பிழைப்போர் பகுதியில் இறப்புவீதம் மிகக் குறைவாக இருந்தது. தேசிய வருமானத்தையும் உற்பத்தியையும் பெருக்காமல் உணவு, உடை, கல்வி வசதி, நோய்வாய்ப்பட்டிருக்கும்பொழுது மருத்துவ வசதி முதலியவைகளுக்கு வேலை செய்வோரைச் சார்ந்து வாழ்வோரின் எண்ணிக்கையும் விகிதமும் அதிகரிக்கும்; வேலை செய்யும் ஒவ்வொருவனும் காப்பாற்ற வேண்டிய வர்களின் சராசரி எண்ணிக்கை மிகுதியடையும். தற்சமயம் இருக்கும் மக்களுடைய வாழ்க்கைத் தரம் தாழ்வடையாமல் பார்த்துக் கொள்வதற்குக்கூட வேலை செய்வோர் உற்பத்தியைக் கணிசமான அளவு பெருக்கவேண்டும். அரசு இதேபோல் பொதுநலத் துறையில் உற்பத்தியையும் அதன் சேவையையும் பெருக்கவேண்டும். பலவகைப் பொதுநலப் பணியை அரசினர் மேற்கொள்ளும்பொழுது உற்பத்தியையும், சேவையையும் அதிகரிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அரசினர் செலவு மிகுதியடைவதால் வருவாயும் அதிகரிக்கவேண்டும். வரிமூலம், நாட்டுடைமையாக்கப்பெற்ற

மாநில மத்திய அரசுகள் கண்காணிப்பில் இருக்கும் தொழில்கள் மூலம் அரசியலார் மிகுதியான தொகையைப் பெறவேண்டும்.

இரண்டாவது பிரச்சினை வேலையின்மை (unempolyment), முழு வேலையின்மை (under employment) பற்றியது. இப்பொழுது முன்னேற்றமடைந்த நாடுகளின் வரலாற்றை நோக்கும்பொழுது, மக்கள்தொகைப் பெருக்கம், மிகுதியடையும் மக்கள் தொகை முதலியவை, வேலையின்மை அல்லது முழு வேலையின்மையுடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளவில்லை என்பது புலனாகிறது. மக்கள் தொகை உத்தம மக்கள் தொகையைவிட (optimum population) (உற்பத்தி முறை, அமைப்பு, அறிவு முதலியவைகளுக்கு ஏற்ற மிகச் சிறந்த மக்கள் தொகை) அதிகமானால் மக்களுடைய வாழ்க்கைத் தரம் குறையும். இத் தொகை குறைந்தால் வாழ்க்கைத் தரம் உயரும். இந்த நிலைமை முன்னேற்றமடைந்த நாடுகளில் சராசரி வருமானம் குறைவதற்கும் வேலைதேடுவதில் போட்டிக்கும் காரணமாக அமைந்துள்ளது. மக்களில் பெரும் பகுதியினர் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கிக்கொள்வதற்குக் காரணமாக இல்லை. தொழில் வளர்ச்சி தற்காலிக இடர்ப்பாட்டுக்குக் காரணமாக இருந்ததே தவிர, தொடர்ந்த வேலையின்மையை ஏற்படுத்தவில்லை. புதிய மாறுதலினால் சிலருக்கு வேலையின்மையும் தொல்லைகளும் ஏற்படவில்லை என்று நாம் இங்குக் குறிப்பிடவில்லை. தொழில் வளர்ச்சியும் இயந்திரங்களைப் பயன்படுத்தலும் எவ்வளவு தொழிலாளர் வேலையைக் குறைத்தபோதிலும், காலப்போக்கில் இரண்டு விளைவுகளை ஏற்படுத்தின. நுகர்வோர் பொருளில் (consumer goods) தேவையும், சராசரி வருமானமும் அதிகரித்தன. இதற்கு இரு காரணங்கள் இருந்தன. இயந்திரங்கள் அவைகளுடைய உறுப்புகள், கட்டடங்கள், போக்குவரத்து வசதிகள் முதலியவை தொழிற்சாலைகளில் மிகுதியாகத் தேவைப்பட்டமையால் இவைகளை உற்பத்தி செய்ய அதிகமான தொழிலாளர்கள் வேண்டியதாயிற்று; இரண்டாவதாக, சராசரி உற்பத்தி பெருகியது. இதன் விளைவாக ஒவ்வொரு தொழிலாளியும் அதிகமான இயந்திரங்களைக் கொண்டு வேலைசெய்தான். கூலி வாங்கும் தொழிலாளி சம்பளம் வாங்கும் அலுவலர்கள், இலாபம் ஈட்டும் தொழிலதிபர்கள் முதலியோரின் வருமானம் பெருகியது. இப் பொதுவிதிவிலக்குகள் இருந்தன என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். சில இடங்களில் உற்பத்தியமைப்பில் குற்றங்கள் இருந்தமையாலும், சர்வாதீனங்கள் (monopolies) இருந்ததாலும் முதலாளிகள் ஏமாற்றிப் பல தொல்லைகளுக்குட்படுத்தினர். ஆனால், நீண்ட காலத்தில் எல்லா வகுப்பினரும் முன்னேற்றமடைந்த உற்பத்தி முறை மூலம் பெருகிய உற்பத்தியால் பயனடைந்தனர். எல்லாரும்

சமமான பயனைப் பெற்றுர்கள் என்று நாம் குறிப்பிடவில்லை. நேரிடைத் தொழில் வளர்ச்சியில் பங்குகொண்டாலும் கொள்ளாவிடிலும் மக்கள் அனைவரும் அதனால் ஏற்பட்ட நன்மையைப் பகிர்ந்துகொண்டனர். இதற்குக் காரணம் வருமானம் பெருகியோரின் தேவை மிகுதி அடைந்ததே ஆகும். பல்வேறு நுகர்வோர் பொருள்கள் (consumer goods) பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் ஆற்றப்படும் பல்வேறு பணிகள் (உதாரணம், போக்குவரத்து வசதிகள், கல்வி வசதிகள், நாவிதர்களும் தோட்டக்காரர்களும், தையற்காரர்களும் ஆற்றும் தொண்டு போன்றவை) முதலியவைகளை அவர்கள் மிகுதியாக வேண்டினர். கடை, தொழிற் சாலைகள் முதலியவைகளை அமைப்பதற்குப் பலர் மூலதனப் பொருள்களையும் வேண்டினர்.

தேவையான பொருள்களை உற்பத்தி செய்வோர் தமக்கு வேண்டிய (தொழிலாளர்கள் பயன்படுத்தும்) மூலதனப் பொருள்களை அதிகமாக வாங்கியதால், மற்ற உற்பத்தியாளர்களுடைய வருமானம் பெருகியது. மேலும் மேலும் இது நீடித்தது. தேவையும் அளிப்பும் இப்படி நாட்டின் பொருளாதார அமைப்பில் அலைவரிசைபோல் பெருகுவதை, பெருக்கி (multiplier) என்று பொருளியலார் கூறுகின்றனர்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மக்கள் தொகையின் வளர்ச்சி வேலையின்மையுடனும், முழு வேலையின்மையுடனும் தொடர்பு கொண்டிருக்கிறது. இது இவ் விரு நாடுகளுடைய பெருங் குறை. கீழ்க்கண்ட உற்பத்திக் காரணிகள் (factors of production) போதிய அளவு கிடைக்கவில்லை. பயிர் செய்வதற்கு நிலம், பல் வேறு கச்சாப்பொருள், விவசாய உபகரணங்கள், கால்நடை, சிறந்த விதை, ஏரு முதலியன வாங்குவதற்குக் கடன் வசதி, தொழில்லில் உள்ள ஆபத்துகளைத் துணிந்து மேற்கொண்டு தொழில் நடத்துவோர், மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் உணவு உற்பத்தியில் (குறிப்பான சில தானிய உற்பத்தியில்) ஈடுபட்டிருப்பதால், தொழிற் பகுதியில் பெருகும் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவு உணவு உற்பத்தி பெருகுவதில்லை. இதனால் விலைகள் உயருமே தவிர உற்பத்தி பெருகுவதில்லை.

குறுகிய காலத்தில் விதைப்பதும் அறுவடை செய்வதும் சில பருவங்களில் செய்யப்படுவதால் உற்பத்தியை விரைவில் பெருக்க முடியாது. நீண்டகாலத்தில் உயரும் விலை உற்பத்திப் பெருக்கத்திற்குக் காரணமாக இருப்பதில்லை. பல நிலங்களில் விவசாயிகள் செறிந்த வேளாண்மை (intensive cultivation) செய்கின்றனர். அவர்களுடைய விவசாய அறிவு, உற்பத்திமுறை, நீர்ப்பாசன

வசதி, ஏரு வசதி முதலியவைகளைச் சிறந்தமுறையில் பயன்படுத்து கின்றனர். பல விவசாயிகள் தம் தேவைக்கு வேண்டிய பொருளை மட்டும் உற்பத்தி செய்கின்றனர். மிகக் குறைவான பகுதியையே விலைக்கு விற்கின்றனர். சிலர் மிகச் சிறிய நிலங்களைக் கொண் டிருக்கின்றனர். ஓர் ஏக்கர் அல்லது அதைவிடச் சிறிய துண்டு களைப் பயிர் செய்கின்றனர். இவ் விரு சாராரும் விலை உயர்வதை ஒட்டி உற்பத்தியைப் பெருக்க எவ்விதத் தூண்டுதலையும் பெறுவ தில்லை. இவர்கள் பயிர்த்தொழிலைமட்டும் நம்பாமல் மற்ற வேலை களைச் செய்து பிழைக்கவேண்டும். சராசரி அளவு நிலம் வைத் திருக்கும் மற்றவர்கள் விலை உயரும்பொழுது முன்பு விற்பனை செய்த பகுதியைவிடக் குறைவான பகுதியையே விலையாக்கு கின்றனர். ஏனெனில், அவர்கள் பெறும் (பண) வருமானம் குறைவ தில்லை. மேலும், தம் உற்பத்திப் பொருளை அவர்கள் மிகுதியாகப் பயன்படுத்தலாம். அல்லது அவர்கள் அதே பகுதியை விற்பனை செய்து சற்று மிகுதியான தொகையைப் பெறலாம். உயர்ந்த விலை அவர்கள் செய்யும் உற்பத்தி பெருகுவதற்குக் காரணமாக இருந்தபோதிலும்கூட, இந்தநிலை ஏற்படலாம். எனவே, அவர்கள் விற்பனைசெய்யும் உபரிப்பொருள்களின் அளவு மிகுதியாவதில்லை. மேலும் உற்பத்தியாளர்கள் தம் உபரிப் பொருளைக் கடன் கொடுத் தவர்களுக்கு விற்பனை செய்ய ஏற்றுக்கொண்டிருக்கும்பொழுது விலைஉயர்வினால் ஏற்பட்ட நன்மையைக் கடன் கொடுத்தவர்களும் நடுவர்களும் அடைகின்றனர்; விவசாயி அடைவதில்லை. இது சாதாரணமாக எங்கும் நிகழ்கின்றது. விலையுயர்வு விற்பனையாகும் உபரிப் பொருளின் உற்பத்தி மிகுதியடைவதற்கு ஒரு தூண்டுதலைக் கொடுத்தால்தான் பெருக்கி (multiplier) நாடெங்கும் செழிப்பை ஏற்படுத்துகின்றது.

தாம் செய்த உற்பத்தியில் பெரும் பகுதியைத் தாமே பயன் படுத்துவோரையும், குறிப்பிட்ட விலையில் பொருளை விற்பனை செய்ய ஏற்றுக் கொண்டவரையும்போல், வசதியுள்ள விவசாயிகள் நடந்துகொள்ள மாட்டார்கள் என்று நாம் கருதலாம். சில சமயங் களில் அவர்கள் நாம் கருதியபடி நடக்கலாம். ஆனால், வசதியுள்ள நிலக்கிழார் தம் நிலத்தில் ஒரு பகுதியைக் குத்தகைக்கு விட்டே பொருளீட்டினர். 1950-லிருந்து இயற்றப்பட்ட நிலச் சீர்திருத் தம் அமலில் வரும்வரையாவது இந்த நிலை இருந்தது. பல ஆண்டு களாக வாரம் (rent) உயர்வதற்குத் தடைகள் இருந்தமையால் உயரும் விலையின் நன்மையை நிலக்கிழார் உழவர்களிடமிருந்து பெற இயலவில்லை. அறுவடையான தானியத்தை நிலச்சுவான் தார்களுடன் பகிர்ந்துகொள்ளும் (சாதாரணமாக இரு சாராரும் 50 சதவீதம் எடுத்துக்கொள்வது வழக்கம்) உழவர்கள் முன்பை விட மிகுதியாக உற்பத்தி செய்ய வேண்டுமானால், அவர்கள்

உழைப்பு அளிக்கும் ஊதியம் கணிசமாகப் பெருகவேண்டும். பொருளியலார் கூறுவதுபோல், அளிப்பு (supply) நெகிழ்ச்சியற்ற தாய் (inelastic) இருக்கின்றது. வருமானமும் விலையும் மாறுபடும் பொழுது அளிப்பு மாறுவதில்லை. உயர்ந்த விலையும் மிகுதியான வருமானமும் உற்பத்திப் பெருக்கத்திற்குக் காரணமாக இல்லை. கடன் வசதி கிடைக்காமையும், உதவி கிடைக்காமையும் சாகுபடியை மிகுதியாக்குவதற்கு இடையூறாக இருக்கின்றன. குடிசைத் தொழிலாளரும் சிறிய தொழிலில் ஈடுபட்டிருப்போரும் இதே நிலையில் இருக்கின்றனர்.

இதுமட்டுமல்லாமல் மக்களுடைய தேவையிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. நகரங்களிலும் தொழிற்சாலைப் பகுதியிலும் மக்கள் மிகுதியான பொருள்களைமட்டுமல்லாமல் (உணவு தானியங்கள், சிறு தொழில் பொருள்கள் முதலியவைகளை) உயர்ந்த தரப் பொருள்களையும் பலதரப்பட்டவைகளையும் இறக்குமதியானவைகளையும் வாங்குகின்றனர். எனவே, மொத்தத் தேவையுள் ஒரு பகுதி, அயல்நாட்டுச் சரக்குகளை உற்பத்தி செய்வோருக்கே நன்மை பயக்கின்றது.

தொழில் வளர்ச்சியை ஒட்டி இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கு மிகுதியான தொழிலாளர்கள் வேண்டும். இதைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது, மக்கள் தொகை அதிகமாக உள்ள நாடுகளில் (முன்னேற்றமடைந்த நாடுகளைப்போல்) தேவை பெருகுவதில்லை. இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் தேவை குறையும். இந்தியா, பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டதிலிருந்து கணிசமான அளவு தொழில் வளர்ச்சி ஏற்பட்டபோதிலும், புதிய நிறுவனங்களில் வேலை செய்வோரின் எண்ணிக்கை குறைவாகவே உயர்ந்திருக்கின்றது. நாட்டில் வேலை செய்யும் வயதில் உள்ளவர்களின் எண்ணிக்கையைவிட, வேலையில் அமர்ந்திருப்போரின் தொகை குறைவாகவே உயர்ந்திருக்கின்றது. மற்றப் (உற்பத்திப்) பகுதிகளைவிட விவசாயப் பகுதி மிகப் பெரியதாக இருப்பது இதற்கு ஒரு காரணம். ஆகையால் கிராமாந்தரப் பகுதிகளில் உள்ளவர்களுக்குப் புதிய தொழிலகங்கள் அதிக வேலை வாய்ப்புகள் அளிப்பதில்லை. மேலும், இயந்திரங்கள், கட்டடங்கள் மற்றக் கருவிகள், அவைகளின் உறுப்புகள் முதலியவைகளை உற்பத்தி செய்வதற்கு மிகுதியான தொழிலாளிகள் தேவைப்படவில்லை. இதன் விளைவாக வேலையின்மையும் குறையவில்லை. இப்பொழுது இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் இயந்திர உற்பத்தித் தொழில்கள் நிறுவப்பெற்றபோதிலும் அண்மைக் காலம்வரை இப் பொருள்கள் உள்நாட்டில் உற்பத்தியாகவில்லை. ஆகையால் ஆரம்ப காலத்தில் தொழில் வளர்ச்சியும் மூலதனப் பொருளுற்பத்தியும் உள்நாட்டுத்

நாட்டுத் தொழிலாளர்களின் உழைப்புக்குத் தேவையை ஏற் படுத்துவதில்லை. அயல்நாட்டுத் தொழிலாளர்களின் உழைப் புக்கே மிகுதியான தேவையை ஏற்படுத்துகின்றது. அயல் நாட்டுச் செலாவணி (foreign exchange) கிடைப்பது அரிதாக இருப்பதால் இறக்குமதி. அயல் நாட்டுக் கொடுப்பல் நிலை (balance of payments) யைப் பாதிக்கின்றது. மூலதனப் பொருளுற்பத்தி செய்யும் தொழிலை நிறுவுவதால் இறக்குமதி பெருகும். மூலதனப் பற்றுக்குறை இருப்பதால், இத் தொழிலின் முன்னேற்றத்தில் தடை ஏற்படுகின்றது. இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே அயல் நாட்டு மூலதனத்தை மானியமாகவோ அல்லது கடனுகவோ பெற வேண்டிய நிலை ஏற்படுகிறது.

தற்காலத்தில் முன்னேறும் தொழிற் பகுதியில்கூட, வேலை யின்மையும், முழுவேலையின்மையும் இருக்கின்றன. இப் பகுதியில் தொழில் வளர்ச்சியின் காரணமாக மனித உழைப்புக்கு ஏற்படும் தேவை குறைவாகவே இருக்கின்றது. ஆனுல், மக்கள் தொகை பெருகுவதால் இப் பகுதியில் மனித உழைப்பின் அளிப்பு (supply) மிகுதியடைகின்றது; மேலும், கிராமாந்தரப் பகுதியிலிருந்து பலர் வேலை வாய்ப்புகளை நாடி இப் பகுதிக்குச் செல்கின்றனர். விவ சாயத் துறையில் இயந்திரங்களைப் புகுத்துவதற்குத் திட்டம் போடு வதாலும் இயந்திரங்களைப் பயன்படுத்த முயற்சி செய்வதாலும் மேலே குறிப்பிட்ட விளைவுகள் ஏற்படும் என்று கூறலாம். இத் திட்டம் சில இடங்களில் விளைச்சலைப் பெருக்கலாம். ஆனுல், வேலையின்மையையும் முழு வேலையின்மையையும் நீக்க முடியாது. திட்டங்கள் அமலாகத் தொடங்கியதிலிருந்து, வேலையின்மையும் முழு வேலையின்மையும் மிகுதியடைந்திருக்கின்றன. இந்திய மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ்க் கண்ட அறிக்கை (பக்கம் 156, 157) பயங்கரமாக இருக்கின்றது. 1951 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணிப்புப்படி (census) (1961 ஆம் ஆண்டில் தயாரான மக்கள் வேலைபற்றிய கணிப்பு விவரம் கிடைக்கவில்லை) விவசாயத்துறை நீங்கலாக மற்றத் துறைகளில் அமர்ந்திருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 40 மிலியனுக்குச் சற்றுக் குறைவாக இருந்தது. 1961-லிருந்து 76-க்குள் 15 ஆண்டுகளில் இவ் வெண்ணிக்கையில் மேலும் 70 மிலியன் கூடும். இவர்களில் 47 மிலியன் பேர்களை விவசாயப் பகுதி நீங்கலாக மற்றப் பகுதிகளில் அமர்த்தவேண்டும். இந்த விவரங்களில் 1961 ஆம் ஆண்டின் கணக்குப்படி வேலையில்லாத் திண்டாட்டத் திற்குட்பட்டவர்களையும் முழு வேலையில்லாதவர்களும் சேர்க்கப்பட வில்லை. விவசாயம் நீங்கலாக மற்ற உற்பத்தித்துறைகள் மேலே குறிப்பிட்டவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் அளவு 15 ஆண்டு

களுக்குள் வளர்ச்சியடைவதையோ அல்லது தொழில் வளர்ச்சி ஏற்படுவதையோ வரலாறு கண்டதில்லை. பாகிஸ்தானிலும் இதே நிலை இருக்கின்றது. ஆனால், இதுபற்றிய அதிகாரபூர்வமான செய்தி கிடைக்கவில்லை.

முழுவேலையின்மைபற்றி அதிகமான கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. கிராமங்களிலும் ஓரளவு தொழில் கேந்திரங்களிலும் தொழிலாளர்கள் தம் முழு ஆற்றலையும் பயன்படுத்துவதில்லை. அவர்கள் ஓராண்டில் வேலைசெய்யும் வாரங்கள் அல்லது ஒரு வாரத்தில் செய்யும் வேலை நாட்கள் அல்லது ஒரு நாளில் வேலை செய்யும் மணி நேரம் முதலியவற்றைக் கணக்கிடும்பொழுது மேலே குறிப்பிட்ட உண்மையை அறியலாம். விவசாயத்துறையில் முழு வேலையின்மைபற்றிக் கருத்து வேற்றுமை இருக்கின்றது. அரை குறை வேலையுடையவர்களை விவசாயத்திலிருந்து மற்றத் துறைகளுக்கு மாற்றினால் இப் பிரச்சினை தீரும்; விவசாய உற்பத்தியும் குறையாது என்பது சிலரின் கருத்து. ஆனால், இவர்களுடைய உழைப்புக்கு விவசாயத்துறையில் தேவை இருக்கின்றது. ஆனால், இத் தேவை சில பருவங்களிலேயே குறிப்பாக அறுவடைக் காலங்களில்மட்டுமே ஏற்படுகின்றது என்பது வேறு சிலரின் கருத்து. பின்னர்க் குறிப்பிட்டது உண்மையானால், விவசாயத் துறையிலிருந்து தொழிலாளர்களின் மாற்றம் உற்பத்திக் குறைவுக்குக் காரணமாக இருக்கும். இதைத் தவிர்க்க வேண்டுமானால் உற்பத்தி முறையிலோ அல்லது அமைப்பிலோ திருத்தம் வேண்டும். உற்பத்தியில் அமர்ந்திருக்கும் தொழிலாளர்களைக் குறைப்பதற்கு இதுவரை எவ்விதத் தூண்டுதலும் ஏற்பட்டதில்லை. ஆகையால் இதற்குத் தகுந்த நவீன உற்பத்தி முறையை எவருமே கையாண்டதில்லை. இந் நிலையைச் சீர்படுத்துவதற்கு வேண்டிய சில முறைகளை எட்டாவது அதிகாரத்தில் காணலாம். இதற்குள் முழு வேலையின்மை உற்பத்தியையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் குறைக்கின்றது.

கீழ்க்கண்ட இரு மிகுதியான வேறுபாடுகளைக் கொண்ட பகுதிகள் இந்தியப், பாகிஸ்தானியப் பொருளாதார முறைகளைப் பாதிக்கின்றன. இது இந் நாடுகளின் மூன்றாவது சிறப்பியல்பாகும்.

(i) **தற்காலத்திய அல்லது நவீனப் பகுதி :** இப் பகுதியில் உற்பத்தி முறை, அமைப்பு, செல்வப் பங்கீடு, சராசரி வருமானம், (நாட்டில் உயர்ந்த வகுப்பில் இருப்போர், இப் பகுதியில் இருக்கின்றனர்,) வாழ்க்கைத்தரம் முதலியவை முன்னேற்றமடைந்த நாடுகளைப்போல் இருக்கின்றன. வேறு பல நாடுகளைவிட (குறிப்பாகச் சமூக நலனைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள நாடுகளை

விட) இந்தியாவிலும் பாகிஸ்தானிலும், செல்வ வருமானப் பங்கீட்டில் அதிகமான ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன என்று கருதுவதற்குக் காரணம் இருக்கின்றது. போகவாழ்வு (luxurious living) குறிப்பாகப் பணியாட்களை அமர்த்திக்கொள்ளும் வாய்ப்பு ஒரு சிலருக்கே இருக்கின்றது. ஆனால், இப் பகுதி மிகக் குறைவாகவே இருக்கின்றது. உதாரணமாக 1961ஆம் ஆண்டு தயாரான மக்கள் தொகைக் கணக்குப்படி நாட்டிலுள்ள 438 மிலியன் பேர்களில் ஒரு மிலியன் பேர்களே வருமானவரி செலுத்துகின்றனர். இவர்கள் அனைவரும் செல்வர்கள் அல்லர்.

(ii) **புராதனப் பகுதி :** இப் பகுதி நகரங்களுக்கும் தொழிற் பகுதிகளுக்கும். மக்கள் நவீன வாழ்க்கை நடத்தும் பகுதிகளுக்கும் அப்பால் இருக்கின்றது. இங்கு வாழும் விவசாயிகள் தமக்கு வேண்டிய பொருள் எல்லாவற்றையும் உற்பத்தி செய்துகொண்டு, தன்னிறைவு (self sufficiency) பெற்றவர்களாக இருக்கின்றனர். பழங்குடி மக்கள் இன்றும் உணவுத்தானியங்களை உற்பத்தி செய்வதில்லை. உணவுத் தானியங்களும், குடிசைத் தொழில் பண்டங்களும் உற்பத்தியாகும் கிராமங்களுக்கப்பால் இருக்கும் குன்றுகளிலும், காடுகளிலும் அவர்கள் வாழ்கின்றனர். தங்கள் பொறிகளில் சிக்கும் அல்லது கொல்லும் விலங்குகளின் இறைச்சியையும் பழங்களையும் மற்ற இயற்கைப் பண்டங்களையும் அவர்கள் உண்கின்றனர். அவர்களே அமைத்த குடிசைகளுக்கு அருகில் ஒரு சில காய்கறிகளைச் சாகுபடி செய்கின்றனர். தானியங்களைப் பயிர்செய்யும் பழைய மரபையொட்டி வாழும் விவசாயிகள் கூட (பருத்தித் துணியை நூற்று நெய்யும் விவசாயிகளும்) ஏறக் குறையத் தன்னிறைவு பெற்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தம் பொருள்களைக் கொடுத்து வேறு பொருள்களைப் பெரும்பாலும் வாங்குவதில்லை. பொருள் விற்பனை செய்து பணம் வாங்குவதே இல்லை. அவர்கள் மற்றவர்களுக்காக வேலை செய்யும்பொழுதும் கூடக் கூலியாகப் பண்டங்களைப் பெறுகின்றனர். வாங்கிய கடனையும் அதன் வட்டியையும் செலுத்துவதற்குப் பொருள்களையே பயன்படுத்துகின்றனர்.

தனித்து இல்லாமல், செழிப்புடன் உள்ள கிராமங்களில் சிலர் வசதியுடன் வாழ்கின்றனர். ஆனால், இக் கிராமங்களில்கூட மற்றவர்கள் தம் பண்டங்களையே நம்பி வாழ்கின்றனர். இவர்கள் உற்பத்தி செய்த பண்டங்களில் ஒரு சிறிய பகுதியையே விற்பனை செய்கின்றனர். உபரிப்பண்டங்களை விற்றுக் கீழ்க்கண்ட செலவுகளுக்கு வேண்டிய தொகையைமட்டும் அவர்கள் பெறுகின்றனர். செலுத்த வேண்டிய வாரம், வட்டி, உப்பு விதை, எரு, தாம் உற்பத்தி செய்யாத பொருள்கள் முதலிய பண்டங்களை வாங்கு

வதற்குப் பணம். (சாதாரணமாக உரம் வாங்குவதற்குப் போதிய பணவசதி அவர்களிடம் இருப்பதில்லை.) அவ்வப்போது அவர்கள் கால்நடைகளையும் விவசாயக் கருவிகளையும் வாங்குகின்றனர்.

இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் பழங்குடி மக்களும் விவசாயி களும் செய்யும் வேலையில் வேலைப் பகிர்வும் (division of labour) தனிப் பயிற்சியும் (specialization) இல்லை. ஆனால், கிராமங்களில் பல நூற்றாண்டுகளாக இருபாலாரிடையே வேலைப் பகிர்வு இருந்துகொண்டே வந்திருக்கின்றது. முன்னேற்றமடைந்த நாடு களிலும் முன்னேற்றமடையாத நாடுகளின் பொருளாதாரத்தின் பழைய பகுதிகளிலும் தனிப் (தொழிற்) பயிற்சி பயக்கும் நன்மை களை மூன்றாவது அதிகாரத்தில் காணலாம். மேலும், பல விவசாயி களும் கிராம மக்களும் தாம் நடத்தும் பரிவர்த்தனைக்குப் (exchange) பணத்தைப் பெரும்பாலும் நாடுவதில்லை. பணத்திற்குப் பொருள் விற்பனை செய்யும்பொழுதும்கூட, அவர்கள் கடன்காரர்களிடம் வாங்கிய முன் பணத்திற்காகவே தம் பொருளைக் கொடுக்கின்றனர். விலை முன்பே நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும். அறுவடையான பொருளைக் கடன்காரர்களுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருப் பார்கள். போட்டி மார்க்கெட்டில் நிர்ணயம் செய்யும் விலையில் தம் பொருளை விற்பனை செய்வதில்லை. உடனடியாகத் தேவை யான பணத்தைப் பெறுவதற்காக அவர்கள் கடன் கொடுப்போர் நிர்ணயம் செய்யும் விலையை ஏற்றுக்கொள்கின்றனர். அவர்களால் மார்க்கெட்டில் பேரம்செய்து தம் பொருளை விலையாக்க முடிவ தில்லை. மேலும், விலை எவ்வாறு நிர்ணயமாகிப் பண்டங்கள் கைமாறுகின்றன என்பதையும் அவர்கள் அறிய முடியாது. இந்த நிலையில் பல மார்க்கெட்டுக் கேந்திரங்கள் இருக்கலாம். ஆனால், விலை நிர்ணயம்செய்யும் மார்க்கட்டுகள் சிலதான் இருக்க முடியும். சில பண்டங்களுக்கும் மனித உழைப்புக்கும் பழங்கால விலைகள் இருக்கலாம். இவை நீண்டகாலம் அம்மில் இருக்கலாம். இந்த நிலை காணப்படும் பகுதியைப் புராதனப் பகுதி அல்லது பணப் பரிவர்த்தனைக்கு உட்படாத அல்லது முழுதும் உட்படாத பகுதி என்றழைப்பர்.

பொருளாதார முறையில் நுகர்வோர் விருப்பங்கள் எவ்வாறு பூர்த்தியாகின்றன, அவர்கள் பணம் கொடுத்து வாங்கக்கூடிய பொருள்களும் பணிகளும் எவ்வாறு அளிக்கப்படுகின்றன என்ப வற்றை ஆராய்ச்சி செய்வதே பொருளியலாரின் முதல் நோக்கம். முன்னேற்றமடைந்த பொருளாதார அமைப்பில் இவை பரஸ்பர வேலைப் பகிர்வினால் (mutual division of labour) அதாவது ஒருவர் உற்பத்தி செய்யும் பொருளையோ அல்லது பணியையோ மற்றவர் களுக்கு விற்பனைசெய்து தேவையான பொருள்களையும் பணியையும்

பெற்றுக்கொள்வது நடைபெறுகின்றது. ஒருவர் தம் உற்பத்திப் பொருளைக்கொண்டு, எந்த அளவு வேறு பொருள்களை வாங்கமுடியும் என்பதை அவர் விற்பனை செய்யும் பொருளின் விலையும், வாங்கும் பொருள்களின் விலைகளும் நிர்ணயம் செய்யும். பணம் பரிவர்த்தனைச் சாதனமாகப் (medium of exchange) பயன் படுகின்றது என்ற கற்பனையை ஆதாரமாகக்கொண்டு ஆராய்ச்சி செய்யும் மேலை நாட்டுப் பொருளியலார் 'பணவிசையையே' (price mechanism) ஆராய்ச்சி செய்கின்றனர். அதாவது போட்டி நிலவும் பொருளாதார அமைப்பில் விலை எவ்வாறு நிர்ணய மாகின்றது என்பதை அவர்கள் பயில்கின்றனர். இவ் வாராய்ச்சி செய்யும்பொழுது தேவையையும் (demand), அளிப்பையும் (supply) பாதிக்கும் சக்திகளைக் கவனிக்கவேண்டும். பூரணமான போட்டியைப் பாதிக்கும் தடைகளுக்கும் மற்ற எடுகோள்களுக்குப் புறம்பாக நடக்கும் சக்திகளுக்கும் ஏற்றபடி ஈடு செய்தே ஆராய்ச்சியை நடத்தவேண்டும்.

கணிசமான அளவு புராதனப் பகுதி இருக்கும் பொருளாதார அமைப்பில், போட்டியற்ற சக்திகள் விலைவாசியை நிர்ணயம் செய்கின்றன. முன்னேற்றம் அடைந்த நாடுகளையும், முன்னேற்ற மடையாத நாடுகளின் நவீனப் பகுதிகளையும்போல், மேலே குறிப் பிட்ட பகுதியை ஆராய்ச்சிக்குட்படுத்த முடியாது. இது பற்றிய கொள்கையையும் வகுக்க முடியாது. இதிலிருந்து அடிப்படைப் பொருளியல் கோட்பாடுகளும் ஆராய்ச்சிமுறையும் இப் பகுதிக்கு அறவே பொருந்தா என்றும் நாம் கூறமுடியாது. பகுத்தறிவை அடிப்படையாகக்கொண்டே ஒழுங்கான ஆராய்ச்சி செய்யாமல் புராதனப் பகுதியைப் பொருளாதார அமைப்பின் ஒரு பகுதியாகக் கருதுவதற்கு வழி எதுவும் இல்லை.

கணிசமான அளவில் இருக்கும் புராதனப் பகுதி எவ்வாறு (நாட்டின்) பொருளாதாரம் இயங்குவதைப் பாதிக்கின்றது என்ப தையும் குறிக்கோள்களைச் செயல்படுத்துவதற்காக வகுத்திருக்கும் கொள்கை எந்த அளவு பயனளிக்கும் என்பதையும் மட்டுமே இங்குக் குறிப்பிடலாம்.

ஏதாவது ஒரு தூண்டுதலை நாட்டில் புகுத்திய பிறகு, புரா தனப் பகுதி இத் தூண்டுதலைத் தடை செய்வதையோ அல்லது இது நாடெங்கும் பரவும் வேகத்தைக் குறைப்பதையோ காண லாம். புராதனப் பகுதி பொருளாதாரத்தைப் பாதிக்கும் விதத்தில் இதுவே மிகவும் முக்கியமானது. 'பெருக்கி' (multiplier) நாட்டின் பொருளாதாரம் முழுவதும் பரவும் தூண்டுதலை இப் பெயர் கொண்டு அழைக்கின்றனர். இயங்கும் வேகம் பல்வேறு வழிகளில்

குறைகின்றது ; அல்லது தடைப்படுகின்றது. மக்கள் தொகை பற்றிய விவரங்களை விளக்கும்பொழுது இவ் வழிகளைக் குறிப்பிட்டோம்.

ஆயினும் புராதனப் பகுதிபற்றிய மேலும் சில உண்மைகளை இங்குக் குறிப்பிடலாம். பேராசிரியர் கெயிர்ன் கிராஸ் பெருக்கியைக் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார் : 'மிகுதியடையும் வருமானத்தைக் கொண்டு', (நுகர்வோர் பொருள்களையும் மூலதனப் பொருள்களையும் வாங்குவதில்) 'எவ்வளவுக் கெவ்வளவு மக்கள் பணத்தைச் செலவு செய்கின்றனரோ அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் வருமானமும் செலவும் பெருகும்'.[1] உதாரணமாக அறுவடை அல்லது மகசூல் நன்றாக இருப்பின், விவசாயி மிகுதியான பொருளையும் வருமானத்தையும் அடைவான். அவன் வருமானம்உயர்வதால், மற்றவர்கள் உற்பத்திசெய்யும்பொருள்களை (உதாரணமாகச் சிறந்த விவசாயக் கருவிகள், சிறந்த விதை, எரு, துணி முதலியவை) அதிகமாக வாங்குவான். இப் பொருள்களை உற்பத்தி செய்வோரின் உற்பத்தியும் அதன் விளைவாக வருமானமும் மிகுதியடையும். இந்த விதமாகப் பொதுவாகத் தொழில் பெருகும். அதிகரிக்கும் உற்பத்தியும் செழிப்பும் நாட்டின் பொருளாதாரம் முழுவதும் பரவும். ஆனால், பணப் பரிவர்த்தனைக்குட்படாத (non monetized) வறுமையால் பீடிக்கப்பட்ட பொருளாதாரம் எவ்வாறு பாதிக்கப்படும் ? சிறந்த (விவசாயப்) பருவத்தில் விவசாயிகள் தம் உற்பத்தியில் அதிகமான பகுதியைப் பயன்படுத்துகின்றனர் ; அண்மையில் வாழ்வோரிடமிருந்து சற்று அதிகமான அளவு பொருள்கள் வாங்கலாம். பொன், வெள்ளி ஆபரணங்களை அதிகமாக வாங்கலாம். ஆனால், இது பொது விதிக்கு ஒரு விலக்காகும். அவர்களுடைய உற்பத்தியும் அண்மையிலிருப்போரின் உற்பத்தியும் பெருகுவதில்லை. மேலும், முன்பு குறிப்பிட்டபடி உயரும் விலையை ஒட்டிப் பல துறைகளில் உற்பத்தியைப் பெருக்க முடியாது. இந்த நிலையில் பெருக்கி சரிவர இயங்காமைக்குப் பணம் (பரிவர்த்தனையில்) மிகக் குறைந்த அளவு பயன்படுவதுமட்டும் காரணமாகாது. மந்தமான விலைவு புராதனப் பகுதியில் மட்டும் காணப்படவில்லை. ஆயினும் மக்கள் பணத்தைப் பரிவர்த்தனைச் சாதனமாக (medium of exchange) பயன்படுத்தாததும், தம் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்வதற்கு முயற்சி செய்யாததும் நிலைமை மோசமாக இருப்பதற்குக் காரணங்களாக இருக்கின்றன. இந்த நிலைமை நிலவுவதால் பொருளாதாரத் தூண்டுதல்கள் மூலம் திறன் முறை வளர்ச்சியை ஏற்படுத்த இயலவில்லை. இதனால்தான் எப்பொழுதாவது நிகழும்

1. பொருளாதாரம்–ஓர் அறிமுகம். 3ஆம் பதிப்பு, 1960, பக்கம் 424, 425.

சுபிட்சம் நிரந்தரமான வளர்ச்சிக்குக் காரணமாக இராமல் அதைத் தடை செய்கின்றது. நவீனப் பகுதியில்கூடப் பெருக்கி மந்தமான முறையில் இயங்குவதற்குச் சில காரணங்கள் உள. இவைகளைப் பின்னர்ப் பார்க்கலாம். ஆனால், இது வேறு ஒரு விஷயமாகும். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் புராதனப் பகுதி நீடித்திருப்பது இந்த நாடுகளின் நான்கு, ஐந்து இயல்புகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றது. இதை இங்குச் சுருக்கமாகக் குறிப்பிடவேண்டும்.

இந்தியாவும் பாகிஸ்தானும் விவசாயத்தையே மிகவும் சார்ந்திருக்கின்றன. விவசாயம் இந்த நாடுகளில் மிகப் பழையமுறையில் நடைபெறுகின்றது. தொழில்துறையிலும் வர்த்தகத்துறையிலும் இருப்பவர்கள் தன்னிறைவு பெற்றிருக்க முடியாது. முன்னேற்ற மடைந்த நாடுகளில்கூட விவசாயிகளின் சராசரி வருமானம், மற்றவர்களுடைய வருமானத்தைவிடக் குறைவாகவே இருக்கின்றது. (டென்மார்க்கில்மட்டும் விவசாயத்தில் தொழில்முறை உற்பத்தி இருப்பதால் இந்த நிலை இல்லை.) மிகப் பழைய உற்பத்தி முறையைப் பின்பற்றும் நாடு விவசாயத்தை அதிகமாகச் சார்ந்து வாழ்வதால் நாட்டில் வறுமை இருக்கின்றது. கிராமாந்தரங்களில் முழு வேலையின்மை இருக்கின்றது. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் குடும்பங்கள் தம் மொத்த வருமானத்தைப் பலரிடையே பகிர்ந்துகொள்ள வேண்டும். எனவே, வறுமை—திறமையின்மை வறுமை என்ற (ஒன்றை ஒன்று உந்தும்) தீய சுழற்சி (vicious circle) எங்கும் நிலவுகின்றது.

ஐந்தாவது இயல்பாகிய நாட்டில் இருக்கும் பல்வேறு சமுதாய நிலையங்களும், அமைப்புகளும், பழக்க வழக்கங்களும் சில தீவிர விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன; உற்பத்தியையும் வாழ்க்கைத் தரத்தையும் பாதித்துவிட்டன. இந்த நிலையங்களும் பழக்க வழக்கங்களும் கிராமங்களில் கட்டுப்பாடுகளை நிலைநாட்டியுள்ளன. சிறந்த படிப்புள்ள நவீனப் பகுதியில் வாழ்வோர்கூட இவைகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். உதாரணமாக வசதியுள்ளவர்கள் உடலுழைப்பை வெறுக்கின்றனர். நுட்பமான தொழில் திறனுடன் செய்யவேண்டிய வேலையைக்கூட அவர்கள் வெறுக்கின்றனர். மக்கள் தொழில் கல்வியைவிடக் கலைக் கல்வி (அல்லது பொதுக் கல்வி)யையே விரும்புகின்றனர். இக் கல்விகற்ற பட்டதாரிகளிடையே வேலையின்மை மிகுதியாக இருக்கின்றது. இந்தியாவில் சட்டம் விதித்துள்ள தடைகள் இருந்தபோதிலும் சாதிக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஷெட்யூல் வகுப்பினருடைய சமூக அரசியல் குறைகளைச் சட்டம் நீக்குவதற்கு முயற்சி செய்கின்றது. சமய நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், குடும்ப முறை (family system), சமுதாயத்தில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட இடம்

(தற்காலத்தில் பலர் இக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற்றிருக்கின்றனர்) முதலியவை மேற்கூறிய கட்டுப்பாடுகளுடன் பிணைந்திருக்கின்றன. இக் கட்டுப்பாடுகள் பல்வேறு வகுப்பினர் செய்யவேண்டிய தொழில்களை நிர்ணயம் செய்கின்றன. வேலை செய்வதில் அவர்களுடைய சுதந்திரக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருக்கின்றது. ஒரு வேலையிலிருந்து மற்றொன்றுக்கும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கும் அவர்கள் செல்லும் இடப் பெயர்ச்சி (mobility) குறைந்துவிட்டது. அவர்களுடைய உணவு கூடக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. அவர்கள் வாழும் இடங்களிலிருந்து விஷக் கிருமிகளும், வெறுக்கத்தக்க வீட்டு விலங்குகளும், காட்டு மிருகங்களும் நீங்கவில்லை. எனவே, அவர்கள் நிலங்களைச் சிறந்தமுறையில் பயிர்செய்ய முடியவில்லை. எந்தக் காலத்தில் முன்னேற்றமடையலாம் என்ற நம்பிக்கை கூடப் பல வகுப்பினருக்கு இல்லை. ஏழைகளும் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களும் பல்வேறு கட்டுப்பாடுகளுக்குட்பட்டு இருக்கின்றனர். நிலச் சீர்திருத்தம் பரவலாக விளம்பரம் செய்யப் பெற்றிருக்கின்றது. நில உடைமையில் சமத்துவம் ஏற்படவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். ஆனால், பிரித்துக் கொடுக்கப் படும் நிலம் தமக்குக் கிடைக்கும் அல்லது வேறு வசதிகள் கிட்டும் என்று கூறுவதற்குக்கூட ஷெடியூல் வகுப்பினர் அஞ்சுகின்றனர் என்று அண்மையில் ஒருவர் கூறியுள்ளார். பாகிஸ்தானில் இந்தியாவைப்போல் சாதி வேற்றுமைகள் இல்லாவிடினும், சமுதாயத்தில் பல வகுப்புகள் உள; பொருளாதார வாழ்வில் நம்நாட்டு நிலைமையே அங்கும் நிலவுகின்றது.

சமுதாயத்திலும் மொழிகளிலும் இருக்கும் வேறுபாடுகள் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் ஒற்றுமைக்கு இடையூறாக இருக்கின்றன. ஆங்காங்கே வசிக்கும் மக்கள் தத்தம் பிராந்தியங்களையே விசுவாசத்துடன் விரும்புகின்றனர். அவர்கள் பிரிவு மனப்பான்மையைக் கொண்டிருக்கின்றனர். இது தேசிய ஒருமைப்பாட்டைப் பாதிக்கின்றது ; பிராந்தியங்களுக்கிடையே போட்டியை வளர்த்துவிட்டது; அடுத்துவரும் ஆண்டுகளில் நாடு பல்வேறு பகுதிகளாகப் பிரியலாம் என்ற பீதியையும் ஏற்படுத்திவிட்டது; கிழக்குப் பாகிஸ்தான் மேற்குப் பகுதியிலிருந்து பிரிந்துவிடும் என்ற அச்சத்தையும் ஏற்படுத்திவிட்டது. நாம் பின்னர்க் குறிப்பிட்ட இயல்பு பொருளாதாரத் திட்டமிடுவோரின் அதிகாரத்தைக்குறைக்கின்றது. அவர்கள் பொருளாதாரக் கொள்கையையும் மற்றக் கொள்கையையும் செயலாற்றுவதற்கு இடையூறாகவும் இருக்கின்றது. மிக அவசியமான முன்னேற்றத்திற்காக நாடு முழுவதும் முழு மனதுடன் ஒத்துழைக்கவேண்டும். ஆனால், மேலே குறிப்பிட்டவை இதற்குத் தடையாக இருக்கின்றன.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஆரம்பக் கல்வியின் தரம் மேலே குறிப்பிட்டபடி குறைவாக இருக்கின்றது. உயர்தரக்கல்வி தரத்திலும், அளவிலும் நாட்டின் தேவைக்கு ஏற்றவாறு அமையவில்லை. இது இந் நாடுகளின் ஆரோவது இயல்பு. மேலே குறிப்பிட்டபடி சமுதாய நிலையங்களும் பழக்கவழக்கங்களும் கொண்டுள்ள குறையை இது எடுத்துக்காட்டுகின்றது. ஆரம்பக் கல்வியைப் பரப்புவதற்கு அரசினர் முயற்சி செய்கின்றனர். பெற்றோர் குழந்தைகளுக்குச் சிறந்த கல்வியளிக்க விரும்புகின்றனர். இது எதிர்காலத்தில் ஒரு புதிய விழிப்பை ஏற்படுத்திப் பொருளாதார முன்னேற்றத்திற்கு மற்றவைகளைவிடச் சிறந்த காரணமாக இருக்கும் என்று நம்பலாம்.

உற்பத்திக்கு வேண்டிய தளவாடங்கள், முதலீட்டுக்கு நிதி போன்ற மூலதனப் பொருள்கள் மக்கள் தொகைக்கும் நாட்டின் தேவைக்கும் போதிய அளவு கிடைக்கவில்லை. இதுவே இந் நாடுகளின் (இந்தியா, பாகிஸ்தான்) ஏழாவது இயல்பாகும். முன்னேற்றத்திற்கு வேண்டியவற்றுள் மூலதனப் பொருள்கள் முதலிடத்தைப் பெற்றிருக்கின்றன. அவை அவசியமாக இருந்தபோதிலும், அவைமட்டும் போதா என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். தொழிலக அமைப்புத்திறனும் போதிய அளவில் கிடைக்காதது ஓரளவு மூலதனப் பற்றுக்குறைக்குக் காரணமாக இருக்கின்றது என்று சிலர் கூறுகின்றனர். ஆனல், இதுபற்றிய கருத்துவேற்றுமை இருக்கின்றது. இன்றைய நிலையில் தொழிலக அமைப்புக்கு வாய்ப்புகள் மிகுதியாக இல்லாமையால், நாட்டிலிருக்கும் சிறந்த திறமை வெளிப்படையாகத் தோன்றவில்லை; புதைந்து கிடக்கின்றது.

தானுக இயங்கும் முன்னேற்றமடைந்த நாடுகளில் உள்ள அரசின் பொறுப்புகளுக்கும் முன்னேற்றமடையும் நாடுகளின் அரசாங்கத்தின் பணிகளுக்கும் உள்ள வேறுபாடுகளைக் குறிப்பிட வேண்டும். இறுதியாக நாம் விளக்கும் இதை இந்திய, பாகிஸ்தானிய நாடுகளின் இயல்பு என்று கூறமுடியாது.

முன்னேற்றமடைந்த நாடுகளில் அரசினர் [தலையிடாக் கொள்கையைப் (laissez faire) பின்பற்றினலன்றி] வளர்ச்சி வீதத்தை (rate of growth) அதிகரிக்கவேண்டும். வளர்ச்சி தடையில்லாமல் நீடிக்க வேண்டும். பொருளாதாரத்தில் ஏற்படும் மாறுதல்களைத் தம் கொள்கைமூலம் நீக்கவேண்டும். இதற்குத் தகுந்த கொள்கையை அமைத்துக் கொள்ளவேண்டும். முன்னேற்றமடையும் நாடு, திட்டங்களை வகுத்தாலும் வகுக்காவிட்டாலும் பொருளாதாரம் தானுக இயங்கும் வளர்ச்சியை அடைவதற்கு

வேண்டிய தொடக்கப் பருவத்தை (take off) அரசு நிலைநாட்ட வேண்டும். இதுவரை இருந்ததைவிடச் சேமிப்பும் முதலீடும் பெருகவேண்டும். இவை பெருகவேண்டுமானால் வளர்ச்சி வீதம் (rate of growth) மூலதனப் பொருள்களைப் பாதுகாப்பதற்கும், தேய்மானத்தை ஈடு செய்வதற்கும், எத்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் புதுப்பிப்பதற்கும், தொழிலுக்கு வேண்டிய ரொக்க நிதியை (liquid finance) வைத்துக்கொள்வதற்கும், அன்றாடத் தொழிலுக்கு வேண்டிய பணத்தை வைத்துக்கொள்வதற்கும் [அதாவது புரளும் முதலை (circulating capital) வைத்துக்கொள்ளுதல்] பெருகும் மக்கள் தொகைக்கு வேண்டியபடி புரளும் முதலையும் நிலையான முதலையும் (fixed capital) அதிகப்படுத்திக் கொள்வதற்கு வேண்டிய மூலதனத்தையே நாடு முன்காலத்தில் கொண்டிருக்கலாம். மக்கள் தொகை அதிகரித்தால் வாழ்க்கைத்தரம் குறையாமல் இருப்பதற்கு முன்பைவிட மிகுதியான அளவு முதலீடு வேண்டும். இதைத்தவிர் இந்தியாவையும் பாகிஸ்தானையும்போல் ஒரு நாடு பொருளாதாரச் சமத்துவத்தை நிலைநாட்டவும் மிகச் சாதாரணமான சமுதாயப் பணி (welfare services) புரியவும் விரும்பினால், மேலும் அதிகமான அளவு முதலீட்டையும் சேமிப்பையும் பெருக்க வேண்டும். இதனால்தான் மாறுதல் ஏற்படும் தொடக்கப் பருவத்தில் மிகுதியான முதலை அயல்நாடுகளிலிருந்து பெறவேண்டும் என்று பலர் கருதுகின்றனர்.

இந்தியாவையும் பாகிஸ்தானையும் போன்ற நாடுகளில் மேலே குறிப்பிட்ட இயல்புகள் பொருளாதார அமைப்பைப் பாதிக்கின்றன என்றும், இவ் வியல்புகள் தொடர்பு கொண்டிருக்கின்றன என்றும், இவை இந் நாடுகளின் பொருளாதாரக் குறைகளை எடுத்துக் காட்டுகின்றன என்றும் வேண்டிய அளவு மேலே விளக்கினேம். அரசு கொள்கைகளை உருவாக்கிக்கொள்வதையும் அவைகளைச் செயலாற்றுவதையும் இவை பாதிக்கின்றன. இருந்தபோதிலும் வளர்ச்சிபெறுத நாடுகளின் பொருளாதாரம் இயங்குவதைப் பரிசீலனை செய்யும்பொழுது, பொருளியலார் மேலைநாட்டுப் பொருளியல் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் பயன்படுத்த வேண்டும் என்பதை நாம் உணரவேண்டும். ஆனால், எடுகோள்களையும் ஆராய்ச்சி முறையையும் மாற்றியமைத்துக்கொண்டால் பொருளாதாரம் இயங்குவதைப் புரிந்துகொள்ளலாம்; கொள்கைகளையும் அமைத்துக்கொள்ளலாம். வளர்ச்சியடையாததால் எழும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் பொருளியலார் முடிவு காணலாம் என்று நாம் குறிப்பிடவில்லை. முன்னேற்றமடைந்த நாடுகளின் பிரச்சினைகள் அனைத்தையும்கூட அவன் தீர்க்கமுடியாது. கீழ் நாடுகளிலும் மேல்நாடுகளிலும் பொருளியலார் பல வேறு நிலைமை

களில் செய்யவேண்டிய ஆராய்ச்சி முறைகளையும், கொள்கைகளின் நோக்கங்களையும் உருவாக்கவேண்டும். தம் நாடுகளுக்குப் பொருந்தாத சில கருத்துகளையும் ஆய்வு முறைகளையும் ஏன் மேல் நாடுகளில் முக்கியமெனக் கருதுகின்றனர் என்பதை மாணவர்கள் அறியவேண்டும். இதனுல் மேல்நாட்டுப் பொருளாதார ஆராய்ச்சியில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை குன்றக்கூடாது. அது குறைந்தால் அவர்களுடைய பொருளியலாராய்ச்சி குழந்தைப் பருவத்திலேயே சேதமடையும். ஒருவரை ஒருவர் நன்கு அறிவதும் பொறுமையும் வேண்டும்.

2. பொருளியலாரின் ஆய்வுமுறை

A. பொருளியலின் விளக்கம், எல்லை, முறைகள்
B. வீடு அல்லது மார்க்கெட்டுக் கருவி

A. பொருளியலின் விளக்கம், எல்லை, முறைகள்

பொருளியலுக்கு எல்லாரும் ஏற்றுக்கொண்டுள்ள விளக்கம் இல்லை. ஆனால், அதன் எல்லையைப் பலர் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பெற்றிருக்கின்றன. ஆனால், இவை பெரும்பாலும் பொதுவாகவும் தெளிவற்றவையாகவும் இருக்கின்றன. ஆகையால் இவை எது பொருளாதார விஷயம், எது பொருளியல் விஷயமன்று என்பதை நிர்ணயம் செய்ய உதவவில்லை. சில விளக்கங்கள் மிகவும் குறிப்பாகவும் குறுகியதாகவும் இருப்பதால் பொருளியலார் ஆராய்ச்சி செய்யும் சில பயனுள்ள விஷயங்களை. இவ்விளக்கங்கள் பொருளாதாரத்திற்கு அப்பாற்பட்டவையாகக் கருதுகின்றன. பொருளாதாரம் பல இடங்களில் மற்ற சமூகப் பாடங்களுடன் கலப்பதே இதற்குக் காரணமாகும். எனவே, (பொருளியலின் எல்லையும் மற்ற சமூகப் பாடங்களின் எல்லையும் திட்டவட்டமாக அமையவில்லை. பொருளியலின் எல்லையை அதைப் பயில்வோரின் போக்கே நிர்ணயம் செய்கின்றது. (சிலர் கூறுவதுபோல் பொருளியலின் எல்லையை அவரவர் தத்தம் வசதிக் கேற்றவாறு அமைத்துக் கொள்ளுகின்றனர்).

உதாரணமாகப் பொருளியலார் சமயத்தைப்பற்றிச் சிந்திப்பதில்லை. ஆனால், சமய நம்பிக்கையும் நிலையங்களும், பழக்க வழக்கங்களும் எவ்வாறு மக்களுடைய பொருளாதார வாழ்வைப் பாதிக்கின்றன என்பதைப் பயில்கின்றனர். கீழ்க்கண்ட உதாரணம் இதை விளக்கும். பசு தெய்விகமானது ; அது எவ்வளவு வயதானதாகவும் பயனற்றதாகவும் இருப்பினும் அதைக் கொல்லக் கூடாது. மற்றப் பயனுள்ள பசுக்களுடன் அது நாட்டில் குறைவாக இருக்கும் உணவைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற கருத்து நாட்டில் குறைவாகக் கிடைக்கும் மாட்டுத் தீவனம் வீணுவதற்குக்

காரணமாக இருக்கின்றது. இதேபோல் காலைகள் விதையடிக்கப் படுவதற்கு இந்து சமயம் தடை செய்வதால் கால்நடைகளின் இனப் பெருக்கத்தில் தீய விளைவுகள் ஏற்படுகின்றன. உற்பத்திச் சாதனங்கள் சீராக அமைவதற்கு இது ஒரு தடையாக இருக் கின்றது. முகமதியர்கள் பன்றி இறைச்சியை உண்பதற்குத் தடை இருக்கின்றது. ஹிந்துக்களில் பலர் மரக்கறி உணவையே சாப்பிடு கின்றனர். எளிதில் கிடைக்கும் உற்பத்திச் சாதனங்கள் பயன்படுவ தில்லை.

சமயப் பெரியோர்களும் (மகாத்மா) காந்தியும் உண்ட எளிய உணவு (இயற்கையானவை, மலிவானவை) என்று கருதப்படும் உணவு விலையுயர்ந்த பொருள்களாகவே இருக்கின்றன. எங்கிருந் தாலும் இவ் வுணவையே உட்கொள்ள வேண்டுமென்று அவர்கள் கருதுவதால், இப் பொருள்களை அவர்கள் இருக்குமிடத்திற்குச் செலுத்த ஏராளமான மனித உழைப்பும் பொருள் செலவும் தேவையாகின்றன. ஆங்காங்கே உள்ள தட்ப வெப்ப நிலை இவை களைப் பாதிக்காமல், குளிர் முறைப் பாதுகாப்புக் கொடுத்து இவை களை நெடுந்தூரம் செலுத்தவேண்டும். எனவே, இப் பொருள்களின் உண்மைச் செலவும் பணச்செலவும் மிகுதியடைகின்றன. விவ சாயப் பொருள்களின் சாகுபடியையும் அறுவடையையும் தொழி லகப் பொருள்களின் உற்பத்தியையும்மட்டும் பொருளியலில் உற்பத்தி என்று கொள்வதில்லை. பொருள்களைப் பெட்டிகளில் அடைப்பது, வேறு இடங்களுக்குச் செலுத்துவது, விற்பனைசெய்வது (சில்லறை விற்பனை உட்பட) முதலியவை மிக முக்கியமான பணிகள். பல பண்டங்கள் நுகர்வோரை (consumers) அடைய வேண்டுமானால் இப் பணிகளைத் தவிர்க்கமுடியாது. ஆகையால் தான் இவைகளையும் உற்பத்தியில் சேர்க்கவேண்டும். தொலை வான இடங்களில் உற்பத்தியாகும் பொருள்களை வாங்கும் ஒவ் வொரு மனிதனும் பண்டத்தின் விலையில் ஏற்றுமதிச் செலவும் விற்பனைச் செலவும் அடங்கியிருக்கின்றன என்பதை அறிவான். இதேபோல் ஒருவன் வழக்கறிஞரையும், மருத்துவரையும் சந்தித் துப் பேசும்பொழுதும், கட்டணம் வசூல்செய்யும் பள்ளிகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் தம் குழந்தைகளை அனுப்பும்பொழுதும் கூட (உதாரணம் ஆரம்பக் கல்வி) இவற்றினுடைய செலவை வரி செலுத்துவோர் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆகையால் உற்பத்தி யாகும் பொருள்களுக்கும் பணிகளுக்கும் இடையே எவ்வித வேற்றுமையும் இருப்பதாகப் பொருளியலார் ஏற்றுக்கொள்வ தில்லை. இவ் விருவகைப் பொருள் உற்பத்தியையும் மனிதனுக்கு வேண்டிய பயனுற்பத்தி (provision of utility) என்றழைக்கலாம். அதாவது மனிதனின் தேவையைப் பூர்த்திசெய்யும் உழைப்பு என்று உற்பத்தியைக் கூறலாம்.

வேறு ஓர் உதாரணத்தையும் இங்குக் குறிப்பிடலாம். சமுதாயப் பழக்க வழக்கங்களும், நிலையங்களும், சாதிவிதிகளும் இந்தியாவில் வேலைதேடும் முயற்சியில் மக்களுடைய சுதந்திரத்தைக் குறுக்கி விட்டன. இதனால் வேலைப் பகிர்வும் (division of labour) ஓரிடத்திலிருந்து மற்றொன்றுக்கும், ஒரு வேலையிலிருந்து மற்றொன்றுக்கும் தொழிலாளர்களுடைய இடப் பெயர்ச்சியும் (mobility of labour) அவர்களுடைய சிறப்புப் பயிற்சியும் (specialisation) பாதிக்கப்படுவதால் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. சிறப்புப் பயிற்சி, பொருள் பரிவர்த்தனைக்குச் சாதகமாக இருக்கும். மக்களுடைய பொருளாதார அலுவல்களை நிர்ணயம் செய்யும் பழக்க வழக்கங்களும், விதிகளும் அவர்களுடைய சுதந்திரத்தையும் குறைக்கின்றன. பொருளாதார வளர்ச்சிக்கு இச் சுதந்திரப் பெருக்கம் (மிகவும் முக்கியமானது அல்லது இன்றியமையாதது என்று கூறுவது தவருயினும்) முக்கியமானது என்று பொருளியலார் கருதுகின்றனர்.

பொருள்களும் பணிகளும் மிகுதியான அளவு தேவைப்படுகின்றன. ஆனால், அவை குறைவாகவே உற்பத்தியாகின்றன. இந்த நிலையில் தேர்வு (choice) ஒரு முக்கியத்தைப் பெறுகின்றது. பொருள்களும் பணிகளும் வேண்டிய அளவு இலவசமாகக் கிடைப்பின் பொருளியலே இருக்காது; ஒருவன் தன் குறைந்த வருமானத்தைச் செலவு செய்யும்பொழுது எப் பொருள்களை வாங்கவேண்டும் என்று முடிவுசெய்ய வேண்டியதில்லை. விருப்பத்தைப் பொருளியலில் பொருள்களின் தேவை (demand) என்று கூறுவதில்லை. இதைத் தெளியவாகக் கூறும் நோக்கத்துடன் பொருளியலார் செயல்படுத்தும் தேவை (effective demand) என்ற பதத்தைப் பயன்படுத்துகின்றனர். விருப்பத்துடன் பொருள் அடையும் சக்தி சேர்ந்தால் செயல்படுத்தும் தேவை ஏற்படுகின்றது. பணப் பரிவர்த்தனை இருக்கும் பொருளாதார அமைப்பில் இது 'வாங்கும் சக்தி' (purchasing power) யாகின்றது. வரையற்ற அளவு எவனும் பொருள்களையும் பணிகளையும் வாங்கமுடியாது. சிலர் (உதாரணமாகப் புனிதமானவர்களும் பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்களும்) ஒன்றுமே வாங்குவதில்லை; மற்றவர்கள் கொடுக்கும் பொருள்களைக்கொண்டே அவர்கள் திருப்தியடைகிறார்கள். சில தனவந்தர்கள் தம் செலவுக்குவேண்டிய அளவுக்கு மேல் செல்வம் அடைகின்றனர். இவர்கள் வரவு விருப்பத்திற்கும் முதலீட்டுக்கும் வேண்டியதைவிட மிகுதியாக இருப்பதால், தம் செல்வத்தில் ஒரு பகுதியை இவர்கள் பிறருக்குக் கொடுக்கின்றனர். ஆனால், இவர்களால்கூடப் பட்டினியில் சிக்கிக் கிடக்கும் மில்லியன் கணக்கானவர்களுக்கு உணவளிக்க முடியாது. பலர் தம் பணத்தைக் கொண்டு வாங்கக்கூடிய பொருள்களைவிட, அதிகமான அல்லது உயர்ந்தரகப் பொருள்களையும் பணிகளையும் வாங்கவேண்டுமென்று

கருதுகின்றனர். சிலர் (எளிய விருப்பங்களைக் கொண்டவர்கள்) பிறருக்கு உதவுவதற்காக மிகுதியான பணத்தை அடைய விரும்புகின்றனர். இங்குக் குறிப்பிட்ட விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு தேர்வுச் சுதந்திரம் வேண்டும். மிக அதிகமான செல்வம் படைத்த நாடு, வாழ்க்கை வழிகளையும் வேலைகளையும் தேர்ந்தெடுப்பதில் மக்கள் அதிகமான சுதந்திரம் வழங்கும். பொருளியல் பெரும்பாலும் மக்கள் தேர்வையே ஆராய்கின்றது. எப்பொருள்களை, ஏன், எந்த அளவு அவர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். ஏன் சில பொருள்களுக்குப் பதிலாக வேறு சில பண்டங்களை விரும்புகின்றனர் என்பதையும் பொருளியல் ஆராய்ச்சி செய்கின்றது. கிடைப்பருமையும் (scarcity) தேர்வும் (choice) பொருளியல் ஆராய்ச்சியில் ஒரு முக்கியமான கூறுகும். ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பு எப்படி இருந்தபோதிலும் கிடைப்பருமையும், தேர்வும் முக்கியமானவையாகவே இருக்கும். இந்திய ஐந்தாண்டுத் திட்டம் தேர்வுக்கு முக்கியமான இடமளித்து, அதைப் பல்வேறு சொற்களைக் கொண்டு விளக்கியிருக்கின்றது. 'பொருளாதார வளர்ச்சியைத் தொடங்கி, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திப் பல்வேறு கூறுகளைக்கொண்ட சிறந்த வாழ்வை மக்களுக்கு அளிப்பதே திட்டத்தின் முக்கியமான குறிக்கோளாகும்.

பல்வேறு சமுதாய நிலையங்களும் பழக்க வழக்கங்களும் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை, இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் திட்டம் வகுப்பவர்கள் அறிந்துள்ளனர். 'வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கு அடிப்படைப் பொருளாதார, சமுதாய மாறுதல்கள் வேண்டும். பழைய சமுதாய அமைப்பை நீக்கிப் புதிய முன்னேறும் சமுதாயத்தை நிலைநாட்டவேண்டும், என்று மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் (பக்கம் 2) குறிப்பிடுகின்றது.

பொதுக் கல்வியும் தொழில்நுட்பக் கல்வியும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருக்கின்றது. கல்வி, பொருளியலார் ஆய்வுக்கு அப்பாற்பட்டது. ஆனால், எவ்வளவு செலவானபோதிலும் போதிய அளவு பொருத்தமான கல்வியும் பயிற்சியும் மக்களுக்கு அளித்தால், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் உதவியாக இருக்கும். பொருளாதார நன்மைகளைப் பயக்கும் கொள்கையை உருவாக்கும்பொழுது அரசியல், சமுதாய மனோநிலைச் சக்திகள் மேலே குறிப்பிட்ட கொள்கை செயல்படுவதைத் தடை செய்கின்றன. இவை ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருப்பது முக்கியமானதாகும். உதாரணமாக ஓர் ஏக்கர் நிலத்தில் விளையும் சராசரி உற்பத்தியை உச்சநிலைக்குப் பெருக்குவதே நமது நோக்கம் என்றும் (மனிதனின் சராசரி உற்பத்தியைப் பெருக்குவது நம் குறிக்

கோளன்று என்றும்) ஒப்புக்கொள்ளலாம். ஆனால், இதைச் சிலர் ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். இதுபற்றிய கருத்து வேற்றுமை இருக்கின்றது. ஆனால், நிலம் குறைவாகவும் மனித சக்தி மிகுதியாகவும் இருக்கும்வரையில், ஓர் ஏக்கரின் சராசரி விளைச்சலைப் பெருக்குவதே சிறந்ததாகும். கூட்டுறவுப் பண்ணை (co-operative farming) மூலம் இதைச் செய்யலாம். ஆனால், இந்தியாவில் விவசாயிகளுடைய மரபுகளும் மனோநிலையும் அவர்களுடைய தனி அல்லது குடும்ப நிலை உரிமைகளை விட்டுக்கொடுக்க ஏற்றவையாக அமையவில்லை. எனவே, இப்பொழுது கூட்டுறவுப் பண்ணை முறையைச் சில குறிப்பிட்ட இடங்களிலேயே நிறுவிப் பரிசீலனை செய்யமுடியும்.

பேராசிரியர் பென்ஹாம் (Prof. Benham),[1] கீழ்க்கண்ட இரு விளக்கங்களைக் கொடுத்திருக்கின்றார் : (i) 'பொருளியல் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் வேலையையும் பாதிக்கும் சக்திகளை ஆராயும் ஒரு பாடம்', (ii) 'அது தேசிய வருமானத்தின் (national income) அளவு, பங்கீடு, நிலை முதலியவைகளைப் பரிசீலனை செய்யும் ஒரு பாடம்.' முதலில் பார்க்கும்போது இவ் விரு விளக்கங்களும் வெவ்வேருகத் தோன்றியபோதிலும், சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இரண்டும் ஒரே விஷயத்தையே எடுத்துரைக்கின்றன என்பது புலப்படும். முதல் விளக்கம் வேலையைக் குறிப்பாக எடுத்துக் காட்டுக்கின்றது. இதுவே இதன் சிறந்த அம்சம். இரண்டாவது விளக்கம், தேசிய வருமானத்தின் பங்கீட்டைப் பற்றியது. இப் பங்கீடு மக்களின் வேலையைச் சார்ந்திருக்கின்றது. இரண்டாவது விளக்கம், சமநிலையைக் (stability) குறிப்பிடுகின்றது. இது இதன் சிறந்த அம்சமாகும். பருவ மழையையும் பல புறவிதிகளையும் சார்ந்திருக்கும் நாடுகளில் சமநிலை சில பருவங்களில் செழிப்புக்கும் மந்தத்திற்கும் காரணமாக இருக்கின்றன. இந்த (மேலே குறிப்பிட்ட) விளக்கங்கள் முன்னேற்றமடைந்த நாடுகளிலும் வளர்ச்சியடையாத நாடுகளிலும் பொருளியலாரின் கடமையைத் தெளிவாக்குகின்றன. சற்று விரிவான விளக்கம் வேண்டுமானால் பின்வருவதைக் கவனிக்கலாம். 'பொருளியல் மக்களுடைய அலுவல்களின் பொருள்சார் (meterial) கூறுகளை ஆராய்கின்றது. குறிப்பாக உற்பத்தி (production), நுகர்வு (consumption) முதலியவைகளையும், தனிப்பட்டவர்களும் குடும்பங்களும் கூட்டு நிறுவனங்களும் செய்யும் செயல்களைப் பரிசீலனை செய்கின்றது. பிழைக்கும் வழியாக மேற்கொண்டு செய்யும் செயல்களையும் இலாப நோக்குடன் செய்யும் செயல்களையும் பொருளியலார் ஆராய்கின்றனர்.' அரசியலாரின் அலுவல்களும்

[1] 'பொருளியல்' (Economics) 6ஆவது பதிப்பு, 1960 பக்கம் 17, 57

பொதுத் துறையின் வேலைகளும் கூட்டு நிறுவனங்களில் அடங்கியுள்ளன. இவ் விளக்கத்தை விரிவுபடுத்தும்பொழுது புராதனப் பொருளாதாரப் பகுதியையும் பொருளியலாரின் ஆராய்ச்சிக்குட் படுத்தலாம்.

சிறந்தவையாக இருப்பினும், இல்லாவிடினும் விளக்கங்கள் நல்ல பயனளியா. தான் பயிலும் பாடம் யாது என்பதையும் மாணவன் அறிய விரும்புகிறான்.

பொருளியலின் நோக்கெல்லையை (scope) கவனிக்கும்பொழுது நடைமுறை ஆய்வுப் பொருளியல் (Positive Economics), தரஞ்சூழ் பொருளியல் (Normative Economics). திட்டம் வகுத்தல் முதலிய வைகளுக்கிடையே உள்ள பேதங்களைக் காணவேண்டும்.

நடைமுறை ஆய்வுப் பொருளியல் உண்மைகளைக் (விதிகளை) கண்டுபிடிக்க முயற்சி செய்கின்றது. சில பொருளாதார அமைப்புகள் இயங்குவதற்குக் காரணமாக உள்ள சக்திகளை ஆராய்ந்து இவ் விதிகளைக் காணலாம். அல்லது சில எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு கோவையாக வாதம்செய்து பொது விதிகளைக் காணலாம்.

குறிப்பாக ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பை முறையாக ஆராயும்பொழுது, அது எவ்வாறு இயங்குகின்றது? ஏன் அவ்வாறு இயங்குகின்றது? என்ற வினுக்களுக்கு விளக்கம் காணலாம். பொருளாதாரத்தை எந்தச் சக்தி இயங்கவைக்கின்றது? எவ்வாறு பல பகுதிகள் இணைந்திருக்கின்றன? பொருளாதார மாறுதல்களையும் போக்குகளையும் எக் கருவிகள் தூண்டுகின்றன, நிர்ணயம் செய்கின்றன, கட்டுப்படுத்துகின்றன? பொருளியலார் நாட்டில் தோன்றும் பொருளாதார அளவுகளைக் கணக்கிட்டு விளக்குகின்றனர். உதாரணமாக, தேசிய வருமானத்தின் அளவையும், தலா வருமானத்தின் (percapita) அளவையும், விலைவாசி (price level) யையும், வட்டி வீதம் (rate of interest), சேமிப்பு வீதம் (rate of saving), முதலீட்டு வீதம் (rate of interest) முதலியவைகளையும் கணக்கிடலாம்.

புராதன, நவீன, கிராமாந்திர, நகர்ப்புற, விவசாய, தொழில் பகுதிகளில் எத்தனை பேர்கள் தம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர் என்ற வினுவுடன் பொருளியல் வல்லுநர் தமது ஆராய்ச்சியைத் தொடங்கலாம். எந்த நுகர்வுப் பொருள்களும் பணிகளும் மிகக் குறைவான அளவில் கிடைக்கின்றன, ஏன் வேண்டிய அளவு கிடைக்கவில்லை என்பதையும் அவர் சிந்திக்

கலாம். மிகப் பழைய கால நிலை இருக்குமிடங்களில்கூட, உதாரணமாக இயற்கைப்பொருள்களைக் கொண்டும், ஆங்காங்கு எளிதில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டும் தம் குடில்களை அமைத்துக் கொண்டு வாழ்வோர்கூடச் சிறிது மனித உழைப்பைப் பயன்படுத்த வேண்டும். சற்று உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் அதாவது, வேட்டையாடிப் பிழைப்பவர்களைப் போன்றவர்கள் வில், அம்பு, விலங்குகளைப் பிடிக்கும் பொறிகள் போன்ற கருவிகளைப் பயன்படுத்தித் தம் உணவைப் பெறுகின்றனர். எனவே, அவர்கள் உற்பத்தியில் முதல் (capital) இடம் பெறுகின்றது. புராதனப் பகுதியில் சற்று முன்னேற்றமடைந்த வடிவத்தில், விவசாயி தன் சிறிய நிலத்தில் விளைந்த பொருள்களையே பயன்படுத்தலாம். தான் உற்பத்தி செய்த பருத்தியை நூற்றும் நெய்தும் தனக்கு வேண்டிய துணியை உற்பத்தி செய்துகொள்ளலாம். தன் குடிசையை அமைத்துக் கொண்டு, வேண்டிய மற்றக் கருவிகளைச் செய்துகொள்ளலாம். ஆனால், அவன் நிலவரியையும், வாரத்தையும் (rent) செலுத்த வேண்டும்; வாங்கிய கடனுக்கு வட்டியையும் முதலையும் கொடுக்க வேண்டும் (முதலைத் திருப்பிக் கொடுப்பது பெரும்பாலும் அரிது.) பல பகுதிகளில் உற்பத்தி செய்யமுடியாத இன்றியமையாத சில பொருள்களை (உப்பு, இரும்பு போன்றவை) வாங்கவேண்டும். அவன் செலுத்தவேண்டிய இக் கட்டணங்களைப் பொருள்கள் மூலமோ அல்லது பண மூலமாகவோ செலுத்தலாம்; உபரி உற்பத்திப் பொருளைக் கொடுக்கலாம் அல்லது அவைகளை விற்பனை செய்து பணத்தைச் செலுத்தலாம். எப்படிச் செய்தாலும் பரிவர்த்தனை (exchange) ஏற்படுகிறது. ஏதேனும் ஒருவகை உற்பத்தியும் பரிவர்த்தனையும் இத்தகைய பழைய நிலையிலும் உருவாகும். உற்பத்திக்காரணிகளும் (factors of production) தத்தம் வேலையைச் செய்யும்.

பொருளாதாரம் அல்லது அதன் ஒரு பகுதி இவ்வாறு புராதன அமைப்பைக் கொண்டிருந்தால் (பெரும்பாலும் தன்னிறைவு—self-sufficiency-பெற்றிருந்தால்,) மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை வாங்கலாம். அதற்குமேல் ஒன்றும் செய்யமுடியாது. பொருள்களும், பணிகளும் பரிவர்த்தனை (exchange) செய்யப்படும்பொழுது, குறிப்பாக மறைமுகப் பரிவர்த்தனை நடைபெறும்பொழுது, பொருளாதாரம் சிக்கலானதாக மாறுகின்றது; வாழ்க்கைத்தரம் உயருவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. வேலைப் பகிர்வும் (division of labour), உற்பத்தியில் சிறப்புப் பயிற்சியும் (specialization) ஏற்படுவதால் உற்பத்தி பெருகுகின்றது; தலா உற்பத்தியும் (percapita output) மிகுதியடைகின்றது; உற்பத்தி செய்யும் நேரமும், தளவாடப் பொருள்களின் தேய்வும் குறைகின்றன. இதன் விளைவாகத் தொழில் திறன்

மிகுதியடைகின்றது; பரிவர்த்தனை அல்லது வர்த்தகம் (உள் நாட்டு வாணிகம் அல்லது அயல் நாட்டு வர்த்தகம்) பெருகும். இதன் விளைவாகச் சிறப்புத் தேர்ச்சி (specialization) மேலும் அதிகரிக்கின்றது. இச் சிறப்புத் தேர்ச்சி, ஓரளவு ஆங்காங்குக் கிடைக்கும் உற்பத்திச் சாதனங்களைச் சார்ந்திருக்கும். ஆனால், இயற்கை முழுவதும் இதை ஒட்டி இருக்காது. இது உற்பத்தித் துறையில் திறமை அதிகரிப்பதற்கும் உற்பத்திக் காரணிகளின் மிகுதியான இடப்பெயர்ச்சிக்கும் (mobility) காரணமாக இருக் கின்றது. இவ்வுற்பத்திக் காரணிகள் (மனித உழைப்பு, மூலதனம் முதலியன) தேவைப்படும் இடங்களை நோக்கிச் செல்கின்றன. இவைகளுடைய பயனும் மிகுதியடைகின்றது. மேற்கூறியவை தொழில்துணிவோர் என்றழைக்கப்படும் (enterpreneurs) தொழிலை நடத்துவோரின் தோற்றத்திற்குக் காரணமாக இருக் கின்றது. இவர்கள் இயற்கைச் சாதனங்கள் உள்பட எல்லா உற்பத்திக் காரணிகளையும் சேர்த்துத் தொழிலை அமைக்கின்றனர். தொழில் துறையிலுள்ள ஆபத்தை இவர்கள் மேற்கொள்கின்றனர்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மிகப் புராதனப் பொருளா தாரத் தொழிலமைப்பிலிருந்து மிக ஆடம்பரமான அமைப்புவரை உள்ள பல்வேறு வகைகளைப் பார்க்கலாம். பல பகுதிகளிடையே உள்ள தொடர்பைப் பொருளியலார் அறிய விரும்புகின்றனர்; மனிதன் ஒவ்வொரு பகுதியிலும் நாடு முழுவதும் மக்களுடைய நோக்கங்களையும், பொருளாதாரத்தை இயக்கும் கருவிகளையும் அறிய விரும்புகிறான். சில பகுதிகள் மற்றவைகளை விட, முன்னேறி யிருப்பதற்குக் காரணம் யாது என்பதையும், நாட்டின் பொருளா தாரம் முழுவதையும் நவீனமயமாக்குவதற்குத் தடையாக இருக்கும் சக்திகளையும் அறிய விரும்புகிறான். இப் பகுதிகள் அனைத்தையும் பொருத்தமாக அமைப்பதே பொருளியலாரின் அலுவல்.

பொருளாதார வாழ்க்கைபற்றிய வருணனையைக்கொண்டு பொருளியல் வல்லுநர் ஆராய்ச்சியில் முன்னேறமுடியாது. அவர் பொது விதிகளையும், கோட்பாடுகளையும், பயன்படுத்தவேண்டும். 'உண்மை விவரங்கள் இல்லாத கோட்பாடுகள் பயனற்றவை' கோட்பாடுகள் இல்லாத விவரங்கள் பொருளற்றவை என்று பேராசிரியர் பௌல்டிங் (Prof. K. Boulding) கூறுகிறார்.[1] 'பல நிகழ்ச்சிகளை உற்றுநோக்கி அவைகளுடைய வேற்றுமைகளில் புதைந்திருக்கும் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு பொது விதிகளை அவன் ஏற்படுத்துகிறான். இவை அவனுக்கு

[1] 'Economic Analysis', பக்கம் 5, கே. பௌல்டிங்.

உதவி யளிக்கின்றன'.[1] இதைக் கீழ்க்கண்ட எளிய முறையில் விளக்கலாம். வெவ்வேறு எளிய சந்தர்ப்பங்களிலும் சூழ்நிலைகளிலும் மனிதன் எவ்வாறு நடந்துகொள்கிறான் என்று அவன் ஆராய்கிறான். சில சந்தர்ப்பங்கள் தோன்றும்போதெல்லாம் மனிதன் ஒரே மாதிரி நடந்துகொள்வதை அவன் காண்கிறான்; அதாவது அவனுடைய எடுகோள்களை ஒத்த சூழ்நிலை இருக்கும் போது, மனிதன் ஒரே விதத்தில் நடந்துகொள்கிறான். விலையேற்றம் அல்லது இறக்கம்போன்ற சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் தேவை மிகுதியடைவது அல்லது குறைவது போன்ற விளைவுகள் நிகழ்வதைக் காணலாம். சாதாரணமாக அளிப்பும் தேவையும் (demand and supply) விலையை மார்க்கட்டில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிர்ணயம்செய்வதை எல்லாரும் பயில்வர். பொருத்தமான முறையில் வாதம்செய்து உய்த்துணரும்பொழுது, பொருளியலார் சில மாறுத தத்துவங்களைக் காணலாம். கோவையாகத் தொகுக்கப்பெற்ற சில எடுகோள்களை ஆதாரமாகக்கொண்ட பொது விதிகளே பொருளியலாகின்றன. எடுகோள்கள் தோன்றும் போதெல்லாம் விதிகள் குறிப்பிடும் விளைவுகள் நிகழத் தவறு. சிலர் கூறுவதுபோல், அவை முன்னேற்றமடைந்த நாடுகளுக்குப் பொருந்தா; வளர்ச்சியடையாத நாடுகளுக்கும் பொருத்தமாக இரா.

ஆய்வின் அடிப்படையாக இருக்கும் எடுகோள்கள் உண்மையானவையா அல்லது உண்மையல்லவா என்பது நம் ஆராய்ச்சிக்குப் புறம்பானது. இதை ஒரு சாதாரணமான உண்மை என்றே கொள்ளவேண்டும்; கோட்பாடு என்று கருதலாகாது. எல்லா எடுகோள்களும் அல்லது பெரும்பாலானவை நடைமுறையில் இருந்தாலன்றிக் கோட்பாடுகள் பொருளாதார வளர்ச்சியடையாத நாடுகளுக்குப் பொருந்தா என்று கருதக் கூடாது. நிலைமைக்குத் தகுந்தவாறு எடுகோள்களை ஒவ்வொன்றாக மாற்றியோ அல்லது திருத்தியோ அமைத்துக்கொண்டு கோட்பாடுகளும் பொருத்தமான முறையில் மாறும். இந்த முறை நமது அறிவை மேலும் பெருக்கும். மேலும், இது சில கொள்கைகளைப் பின்பற்றினால் எந்த விளைவுகள் நிகழும் என்று அறியப் பொருளியலாருக்கு உதவும்; புற நிகழ்ச்சிகள் ஏற்படாமல் இருக்கவேண்டும். எனவே, பொருளியலார் விதிகளை விளக்கும்பொழுது, 'மற்றவை அப்படியே இருப்பின்' என்ற வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்கின்றனர். இந்த முறையில் எடுகோள்களை உண்மைக்குப் பொருந்துமாறு மாற்றியமைத்துக்கொள்ளலாம். ஆயினும் ஒரு

[1] பி. டி. பாவர் (P. T. Bauer) Economics Analysis and Policy in underdeveloped Countries. p.7.

நாட்டுக்குப் பொருத்தமான நிலை மற்றொன்றுக்குப் பொருந்தாமல் இருக்கலாம் என்பதை நாம் உணரவேண்டும்.

மேலும், எளிய வழி ஒன்றைப் பின்பற்றலாம்; ஒரு நொடிப் பொழுதில் காணும் நிலைமையை விளக்கி அதை நீண்ட காலத்திற் கேற்றவாறு மாற்றியமைத்துக்கொள்ளலாம். பல்வேறு உண்மையான சந்தர்ப்பங்களும், பற்பல எடுகோள்களுக்கும் பொருத்தமான பொது விதியை இந்த ஆராய்ச்சிமுறையின் வாயிலாக நாம் காணலாம். இவ் வாராய்ச்சிமுறைபற்றிய உதாரணங்களைப் பின்வரும் அதிகாரங்களில் காணலாம்.

சில ஆராய்ச்சி முறைகளைக் கையாண்டு எளிய நிலைமைகளிலிருந்து சிக்கலான நிலைமைகளை அறிய முயல்வதை, 'மாதிரி அமைப்பு' என்று நாகரிகமாக இக் காலத்தில் அழைக்கின்றனர். இது (மாதிரி அமைப்பு) ஒரு பெரிய விஷயமாகத் தோன்றிய போதிலும், தொடக்க நிலையில் எளிதாகவே இருக்கின்றது. சில கற்பனைச் சூழ்நிலையில் மக்கள் நடந்துகொள்வதைக் கோவையாக எடுத்துரைப்பதையே மாதிரி என்று பொருளியலார் விளக்குகின்றனர்.

இத்தகைய மாதிரிகளைச் சொற்கள் அல்லது குறிகள் அல்லது அடையாளங்கள் அல்லது படங்கள் அல்லது கணிதம்மூலம் விளக்கலாம். இவைகளைக்கொண்டு வாதம்செய்து சில முடிவுகளைக் காணலாம். அல்லது கோவையான வாதத்தை முறையாக விளக்குவதே மாதிரி என்றும், அதற்கு ஓர் எளிய விளக்கம் கொடுக்கலாம். பொருளாதார மாதிரியின் தன்மை ஒரு கிராமத்தின் அல்லது கட்டடத்தின் தன்மையை ஒத்திருக்கின்றது. ஒரு பெரிய அமைப்பின் சிறிய பிரதிநிதிபோல் இருப்பதால், எளிமையாக இருத்தல் வேண்டும்; பல நுட்பமான, ஆனால் பொருத்தமற்ற சிறு கூறுகளை இவை களைந்திருக்கும். இத்தகைய மாதிரிகளைப் பொருளியலார் அமைப்பதற்கு ஒரு காரணம் இருக்கின்றது. விஞ்ஞானியைப்போல் (scientist), பொருளியலார் பரிசோதனை (experiment) செய்யமுடியாது. கொள்கைகள்மூலம் சில தத்துவங்கள் உண்மையான எடுகோள்களை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றனவா என்பதைமட்டுமே அறியலாம். பொருத்தமான புள்ளி விவரங்கள் சில சந்தர்ப்பங்களில், சொற்கள் அல்லது குறிகள்மூலம் நிலைமையை விவரித்து விதிகளை வகுக்காமல் எண்களைக்கொண்டு முடிவுகளை விளக்கலாம். ஆனால், இதில் ஓர் ஆபத்து இருக்கின்றது, வளர்ச்சியடையாத நாடுகளில் பயன்படுத்தப்படும் புள்ளி விவரங்களில் பிழைகள் இருக்கும். இதனால் தவறான முடிவுகளுக்கு வரலாம். சரியான விவரங்கள் என்று

எல்லாரும் கருதும் விவரங்களைக்கொண்டு திட்டங்கள் வகுக்கும் போது தவறுகள் ஏற்படலாம்.

மாதிரி, சிக்கலாகும்பொழுது, அதை விளக்கும்போது வார்த்தைகளைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும்; படங்களையும் கணிதத்தையும் பயன்படுத்தும்பொழுது இந்த அவசியம் ஏற்படுகின்றது[1]. இப்படிச் செய்யும்பொழுது ஆராய்ச்சியின் ஆதாரமாக உள்ள எடுகோள்களை மறக்க நேரிடலாம். இந்த நிலையில் வளர்ச்சியடையாத நாடுகளின் நிலைமையை, மாதிரியைக் கொண்டு விளக்கமுடியாது. தற்காலத்தியப் பொருளியலார் பயன்படுத்தும் நாகரிகமான கணித மாதிரிகளைப் பயன்படுத்தி முன்னேற்றமடைந்த நாடுகளின் நிலைமையை அறிவதுகூட எளிதன்று. வளர்ச்சியடையாத நாடுகளுக்கு இத்தகைய மாதிரிகள் அறவே பொருந்தா என்பதை எல்லாரும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். 'கடந்த ஐம்பது ஆண்டுகளில் பொருளியலில் ஏற்பட்ட வளர்ச்சி அடையாத நாடுகளின் நிலையை விளக்குவதற்குப் பயன்படா.'[1] மேல்நாட்டு அடிப்படைப் பொருளாதாரக் கருத்துகளும் கருவிகளும் பரந்தமுறையில் பயன்படுத்தக்கூடியவை. புதிய கோட்பாடுகள் வேண்டியதில்லை. பொருத்தமான கருத்துகளையும் கருவிகளையும் வளர்ச்சியடையாத நாடுகளுக்குத் தகுந்தவாறு எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்; எத்தகைய கொள்கைகளை அரசு பின்பற்றவேண்டும் (பொருளாதாரக் காரணங்களுக்காகமட்டும்) என்பதையும் முடிவு செய்யவேண்டும். கொள்கைகளை வகுக்கும்பொழுது பொருளாதார நிலையைமட்டும் கவனிக்காமல், மற்றச் சக்திகளையும் நன்கு பார்த்தே அரசு தன் கொள்கைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

பின்வரும் அதிகாரங்களில் கோட்பாடுகளின் அடிப்படைக் கருத்துகள் சொற்கள்மூலம் விளக்கப்பெற்றிருக்கின்றன. கருத்துகளை விளக்கும் படங்களையும் காணலாம்.

நடைமுறை ஆய்வுப் பொருளியலை (Positive Economics) விளக்கிய பிறகு—இது பெரும்பாலும் கோட்பாடுகளைப்பற்றியது—தரஞ்சூழ் பொருளியலுக்கும் (Normative Economics) கொள்கை வகுத்தலுக்கும் உள்ள வேற்றுமையைக் காணவேண்டும்.

தரஞ்சூழ் பொருளியல் (Normative Economics) நடைமுறையில் இருப்பதை ஆராயாமல், இருக்கவேண்டியதை ஆராய்கின்றது. இவ்வியல் மாறுத உண்மைகளை எடுத்துரைக்காமல், எது

[1] P. T. Bauer (பி. டி. பாவர்) Ecconomics Analysis and Policy in under-developed Economics, p. 9.

நாட்டின் சிறந்த நோக்கமாக இருத்தல்வேண்டும் என்று தீர்ப்புக் கூறவேண்டும். பொருளியல் கலைக் (The art of Political Economy) கொள்கை வகுத்தல் பற்றியது; குறிப்பிட்ட நோக்கங்களை, எவ்வாறு செயலில் கொண்டுவருவது என்பதை விளக்கவேண்டும். தரஞ்சூழ் பொருளியலைப்போல் இதிலும் தீர்ப்புகள் (எவை சிறந்தவை என்று) கூறவேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு பொருளியலுடன் தொடர்பில்லாத விஷயங்களை மனத்தில்கொண்டு செய்யவேண்டிய இந்த வேலையைப் பொருளியலாரின் தனித் துறை என்று கருதக் கூடாது. சில கொள்கைகளைப் பின்பற்றும்பொழுது, மற்றச் சக்திகள் குறுக்கிடாமல் இருந்தால் எத்தகைய பொருளாதார விளைவுகள் நிகழும் என்பதைமட்டுமே பொருளியலார் கூறலாம். கொள்கையை உருவாக்குவோர் மற்றச் சக்திகள் தலையிடா என்று கருதக் கூடாது. மக்களுடைய அரசில், சமய, சமூகப் பழக்க வழக்கங்களுக்கும், மரபுகளுக்கும் முரணான கொள்கைகளை அரசியலார், செயல்படுத்த முயற்சி செய்தால், இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மாட்டார்கள்; அல்லது அவர்கள் கலகம் செய்யக்கூடத் துணியலாம். எனவே, முன்னேற்றமடைந்த நாடுகளில் பயனளித்த பொருளாதாரக் கொள்கையை நன்கு சிந்திக்காமல் ஆபத்துகள் ஏற்படலாம். ஒரு விஷயத்தின் பொருளாதாரக் கூறுகளை மற்றவைகளிலிருந்து பிரிப்பது கடினம். இது கொள்கை வகுப்போர் கவனிக்கவேண்டிய மிக முக்கியமான உண்மை ஆகும். முன்பு நாம் குறிப்பிட்டுள்ள உதாரணத்தை இங்கு மீண்டும் குறிப்பிடலாம். அதாவது கூட்டுறவுப் பண்ணைமுறையை (Co-operative Farming) நாட்டில் புகுத்தினால் மக்கள் அதை வெறுப்பர்; எதிர்த்துப் போராடுவர். பொருளாதாரத் தொடர்பில்லாத சக்திகள் இதற்குக் காரணமாக இருக்கும்.

நடைமுறை ஆய்வுப் பொருளியலுக்கும் கொள்கை வகுத்தலுக்கும் இடையே வேறுபாடுகள் பல இருக்கின்றன. இவைகளைப் புரிந்துகொள்ளத் தவறினால், நடைமுறை ஆய்வுப் பொருளியலை வளர்ச்சியடையாத நாடுகளில் பயன்படுத்த முடியுமா என்ற ஐயப்பாடு ஏற்படும். இதை ஓர் எளிய உதாரணத்தைக் கொண்டு விளக்கலாம் இந்தியாவில் 1920-லிருந்து 1980 வரை அரசினர் நிலக்கரி உற்பத்தியைப் பெருக்க முடிவு செய்தனர்.

நாட்டில் குடிபுகுந்த சுரங்கத் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தி அவர்களுக்கு ஊக்கமளிக்க முடிவு செய்தனர். அவர்கள் வாரந்தோறும் 3 அல்லது 4 நாட்கள் பணிபுரிந்து வீடு திரும்பித் தம் நிலத்தைச் சாகுபடி செய்தனர். கூலியை உயர்த்தினால் அவர்கள் மிகுதியாக வேலை செய்வார்கள். அவர்கள் வேலை

செய்யும் முறைமாற்றுகள் (shifts) மிகுதியடையும் என்று கருதினர். இக் கொள்கை தேவை அளிப்புப்பற்றிய விதிகளை (laws of supply and demand) ஒட்டியிருந்தது. ஒரு பண்டத்தின் விலை (இங்குக் கூலி அல்லது உழைப்பின் விலை) உயரும்போது அதன் அளிப்பும் அதிகரிக்கும் என்ற உண்மையை இவ் விதிகள் எடுத்துரைக்கின்றன. ஆனால், தொழிலாளர்கள் முன்பைவிடக் குறைந்த முறைமாற்றுகள் வேலைசெய்து பழைய ஊதியத்தைப் பெற்றனர்; மிகுதியான வருமானத்தைப் பெறவில்லை. உற்பத்தி குறைந்தது. ஏனெனில், கூலி உயர்ந்ததால் குறைந்த அளவு உற்பத்திசெய்து பழைய வருமானத்தை ஈட்டமுடிந்தது. இது தேவை அளிப்பு விதிகளின் உண்மையை பாதித்ததா? இல்லை. நாம் ஆதாரமாகக்கொண்ட எடுகோள் இந்த இடத்தில் தவருனது என்பதைமட்டுமே காண்பித்தது. மற்றச் சந்தர்ப்பங்களில் இவ் வெடுகோள் தவருனதென்று காட்டவில்லை. சுரங்கத் தொழிலாளர்கள் அதிகநேரம் வேலைசெய்யாததற்கு ஒரு காரணம் இருந்தது. அவர்கள் தம் நிலங்களைச் சாகுபடி செய்தனர். அதில் கிடைத்த உபரி விளைச்சலை விற்பனைசெய்து நிலவரி, வாரம், வாங்கிய கடனுக்கு வட்டி முதலியவைகளைச் செலுத்த இயலவில்லை. கூலி உயர்ந்தவுடன் மேலே குறிப்பிட்ட செலவுக்கு வேண்டிய தொகையைக் குறைவாக வேலைசெய்தே பெற்றனர். ஓய்வு நேரத்தைப் பொழுதுபோக்காகக் கழித்தனர் அல்லது காய்கறி உற்பத்தியைப் பெருக்கினர்.

மேல் நாட்டுப் பொருளியலார் பின்தங்கிய நாடுகளில் இருக்கும் மாணவர்களுக்குத் திருப்தியளிக்காததற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. பொருளாதார அமைப்பைப் பரிசீலனை செய்யும்பொழுதும் அதன் பல்வேறு பகுதிகள் கொண்டுள்ள தொடர்புகளைப் பரிசீலனை செய்யும்பொழுதும், பண, நிதி நிலையங்களின் தொடர்புகளையும், தேசிய வருமானத்தையும் பங்கீட்டையும் ஆராய்ச்சி செய்யும் பொழுதும், மேலை நாட்டுப் பொருளியலார் முன்னேற்றமடைந்த நாட்டின் நிலை எங்குமிருப்பதாகக் கற்பனை செய்துகொள்கின்றனர். விலையை நிர்ணயம்செய்யும் மார்க்கட்டு முறையும் (price-determining market system) வளர்ச்சியடைந்த பண, நிதி நிலையங்களும், பாங்கு முறையும் (banking system) எங்கும் இருப்பதாகக் கருதுகின்றனர். பல பாட நூல்கள் (text-books) இவ்வாறு எழுதப்பெற்றிருக்கின்றன; இவை முன்னேற்றமடைந்த அல்லது முதலாளித்துவ (capitalistic) நாடுகளுக்குப் பொருந்தும். (இந் நாடுகளைச் சிலர் முதலாளித்துவ நாடுகள் என்றழைப்பர்.) இவை வளர்ச்சியடையாத நாடுகளுக்குப் பொருத்தமான சில முக்கியமான பகுதிகளை விளக்குவதில்லை. பாட நூல்களில் விளக்கப்பெற்றிருக்கும் நிலையங்களையும், பொருளாதாரக் கருவி

களையும் எவ்வாறு தன் நாட்டில் பரப்பலாம் என்று மாணவன் அறிய விரும்புகிறான். இவை நாட்டில் பொருளாதார அமைப்பின் தவீனப் பகுதியில் இருக்கின்றன. இவற்றை மாற்றியமைத்தோ அல்லது மாற்றுமலோ நாடெங்கும் புகுத்துவதற்குத் தான் என்ன செய்யலாம் என்பதையும் அறிய விரும்புகிறான்; பொருளாதார வளர்ச்சியில், தொடக்கப் பருவத்தைத் தாண்டித் தானாக இயங்கும் வளர்ச்சியை (self-sustaining growth) ஏற்படுத்துவதற்கு அரசு என்ன செய்யலாம் என்பதையும் புரிந்துகொள்ள விரும்புகிறான். விலை, மார்க்கட்டு முறைகள் (price and market systems) இருப்பின் அரசியலார் பொருளாதாரத்தைக் கண்காணிக்கலாம்; திட்டங் களையும் செயலாற்றலாம். இந்த நிலையை எவ்வாறு ஏற்படுத்த லாம் என்றும் மாணவன் அறிய விரும்புகிறான்.

பின்வரும் அதிகாரங்களில் மிக எளிய கருத்துகளே விளக் கப்பெற்றிருக்கின்றன. மேற்கண்ட முக்கியமான அடிப்படை வினாக்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பெற்றிருக்கின்றன என்று கருதக்கூடாது. எளிமையான ஆராய்ச்சிக் கருவிகளை மாணவர் களுக்கு விளக்கவே, இந்த நூலில் முயற்சி செய்திருக்கின்றேம். இவ் விளக்கத்தைக்கொண்டு பொருளியலின் வளர்ச்சி அடைந்த பகுதிகளை மாணவன் பயிலவேண்டும்.

இன்று முன்னேற்றமடைந்த நாடுகள் தாமாக இயங்கும் வளர்ச்சியைப் பெற முயற்சிசெய்த காலத்தில் பெரும சில நன்மை களை வளர்ச்சியடையாத நாடுகள் இன்று கொண்டிருக்கின்றன. முன்பே, நாம் குறிப்பிட்ட இவ் வுண்மையை மீண்டும் இங்குக் குறிப் பிடுவது பொருத்தமானதே. மேல்நாடுகள் பல சோதனைகளைச் செய்து விஞ்ஞானத்துறையில் ஆராய்ச்சிசெய்து பல புதிய உற் பத்தி முறைகளைக் கண்டுபிடித்தன. வளர்ச்சியடையாத நாடுகள் சோதனைகள் அனைத்தையும் செய்யாமல், புதிய முறைகளைப் பின் பற்றலாம்; தம் நிலைமைக்கேற்றவாறும் அமைத்துக்கொள்ளலாம். இதுவே, இந்த நாடுகளின் முதல் நல்வாய்ப்பு. இரண்டாவதாக இன்று முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் முன்பு செய்த பிழை களைப் பின்தங்கிய நாடுகள் தவிர்க்கலாம். இவ் வாய்ப்புகளைப் பயன்படுத்தவேண்டுமானால், நாம் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை விதிகளையும் பொருளாதார நிலையங்கள் இயங்குவதை யும் நன்கு அறியவேண்டும்.

இதுவரை நாம் பார்த்ததன் முடிவை இங்குச் சுருக்கமாகக் கூறலாம். வளர்ச்சியடையாத நாடுகளின் பிரச்சினைகளை அறிய, நாம் மேலைநாட்டுப் பொருளியலின் அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டு, நாட்டின் பொருளாதார நிலையை ஒழுங்குபடுத்தும் துறையில் ஏராளமான முன்னேற்றம் ஏற்படவேண்டும்.

B. விலை அல்லது மார்க்கட்டுக் கருவி
(Market Machanism)

முன்னேற்றமடைந்த ஜனநாயக நாடுகளை (அதாவது சர்வாதிகார முறையில் பொருளாதாரத் திட்டத்தை அமலில் கொண்டு வரும் நாடுகள் நீங்கலாக மற்ற நாடுகள்) இனி நாம் 'முன்னேற்ற மடைந்த நாடுகள்' என்றே அழைப்போம். விலை அல்லது மார்க்கட்டுக் கருவி, இந்த நாடுகளின் பொருளாதாரத்தை இயக்குகின்றது. ஆனால், பொருளாதாரத்தை இயக்குவதில் அது முதலிடம் பெறவில்லை. இயக்கும் சக்தி மக்களிடமே உதயமாகின்றது. ஆனால், நுகர்வோர் (consumers) தம் விருப்பத்தை உற்பத்தியாளர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு விலை அல்லது மார்க்கட்டு முறையைப் பயன்படுத்துகின்றனர். பொருள்களையும் பணிகளையும் அளிப்போர் எந்த விலைகளில் பொருள்களை அளிக்கலாம் என்பதை வெளிப்படுத்தவும், இதே மார்க்கட்டு முறையைப் பயன்படுத்துகின்றனர். பொறிவழிப் பொருள்களையும் மூலதனப் பொருள்களையும் உற்பத்தி செய்வோர், தம் தேவையை விலைமுறை (price system) மூலமே மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டுகின்றனர். கச்சாப் பொருள்களும் பாதி உற்பத்தியான பொருள்களும் (semi manufactured goods) தொழிலாளர்களின் உழைப்பும் இவர்கள் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. (தொழிலாளர்களுடைய கூலி அல்லது சம்பளம் அவர்களின் உழைப்பின் விலையாகும்) தாமே பயன்படுத்த விரும்பாமல் பண முதலை (money capital) கொண்டிருப்போர் அதைப் பிறருக்குக் கடனுக்கு கொடுக்கலாம். இப் பணிபுரிய அவர்கள் வேண்டும் தொகையைக் (கடனின் வட்டி வீதம்) விலைமுறையை எடுத்துக் காட்டுகின்றது. தொழில் நடத்தப் பணமுதலை நாடுவோர் (தம்மிடம் அது இல்லாமையால்) பிறரிடமிருந்து பெறும்பொழுது கொடுக்கக்கூடிய வட்டி வீதத்தை விலைமுறைமூலம் தெரிவிக்கின்றனர்.

நிலத்தைச் சாகுபடி செய்யாத நிலச் சுவான்தார்கள், பிறரிடம் தம் நிலத்தைச் சாகுபடிக்கு விடுவதற்கு வாரத்தைக் (rent) கோருகின்றனர். இதுவும் விலைமுறை மூலமே தெரிவிக்கப்படுகின்றது. வெவ்வேறு பொருள்களும் பணிகளும் பரிவர்த்தனையாகும் பொழுது அவைகளுடைய விலை பண வீதத்தில் (money rates) நிர்ணயம் ஆகின்றது. பொருளுற்பத்தியையும் விற்பனையையும் இது மறைமுகமாகப் பாதிக்கின்றது. நாட்டின் உற்பத்திச் சாதனங்கள் எவ்வாறு பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்வதில் பகிர்வு செய்யப்படவேண்டும் என்பதை இதுவே முடிவு செய்கின்றது. (இவ்வுண்மை தனியார் உற்பத்தித் துறைக்காவது பொருந்தும்) அயல் நாட்டு வர்த்தகத்தின் தன்மை, அளவு, முதலீடு செய்யும் துறைகள்,

அதன் தன்மை, உற்பத்திக் காரணிகள் (factors of production) பயனுகும்பொழுது சேர்க்கப்படுவது (உதாரணமாகக் குறிப்பிட்ட அளவு மூலதனப் பொருள் அல்லது நிலத்துடன் எவ்வளவு மனித உழைப்பைச் சேர்த்துப் பயன்படுத்தவேண்டும் என்பது— அதாவது உற்பத்தி முறையைத் தேர்ந்தெடுப்பது); தேசிய வருமானத்தின் அளவு, உற்பத்திக் காரணிகளிடையே அதன் பகிர்வு, தனிப்பட்டவர்களிடையே அதன் பகிர்வு—முதலியவைகளை எல்லாம் விலை அல்லது மார்க்கட்டு முறையே நிர்ணயம் செய்கின்றது. மேலே குறிப்பிட்டவை அனைத்தையும் விலை அல்லது மார்க்கட்டு முறை பாதிக்கின்றது என்று நாம் குறிப்பிடும்பொழுது, அவைகளை விலையே நிர்ணயம் செய்கின்றது என்று கூறவில்லை. நாட்டின் செல்வத்தைக் கீழ்க்கண்டவை பாதிக்கின்றன : இயற்கை உற்பத்திச் சாதனங்கள் (மிக விரிவான பொருளில் இச் சொல்லை நாம் பயன்படுத்துகிறோம்) மக்களுடைய எண்ணிக்கை, பயன்படக்கூடிய ஆற்றல், பயனுகும் ஆற்றல், அரசின் குணம், அது நிலையாக இருத்தல், சமுதாய நிலையங்களும் பழக்க வழக்கங்கள், வறுமை அல்லது செழிப்புக்கு அடிப்படைக் காரணமாக உள்ள மேற்கூறியவைகளை அரசு அறிந்தவுடன், மேல்நாடுகளில் மக்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஏற்பாடு செய்கின்றது. வளர்ச்சியடையாத நாடுகளிலும் அரசினர் இவ் வேறுபாடுகளைச் செய்கின்றனர். மார்க்கட்டு முறையையே பயன்படுத்திக் குறைவாக உள்ள பண்டங்களை மக்களிடையே பகிர்ந்து கொடுக்கின்றனர். மதியையும், தேக உழைப்பையும் பயன்படுத்தும் தொழிலாளர்கள் செய்யும் வேலைகளை நிர்ணயம் செய்கின்றனர். வேலை செய்யாத நிலச்சுவான்தார்களும் சொத்துகளைக் கொண்டவர்களும் தம் சொத்துகளை (நிலம், சுரங்கம் போன்றவை) பிறர் பயன்படுத்த அனுமதிக்கின்றனர். இதுவும் ஒரு பணியாகும். இப் பணிக்கு அவர்கள் பெறும் தொகையை மார்க்கட்டுமுறையே நிர்ணயம் செய்கின்றது. நிலத்தைச் சாகுபடி செய்யாமல் எங்கோ இருந்துகொண்டு, மிகுதியான குத்தகையை வாங்குவது நியாயமா என்பதைப்பற்றி நாம் இங்குப் பேசவேண்டா. முன்னேற்ற மடைந்த நாடுகளில் விலை அல்லது மார்க்கட்டுமுறை இருக்கின்றது. இது மிக முக்கியமானதாகவும் இருக்கின்றது என்பதை ஆதாரமாகக்கொண்டு, பொருளியலார் தேவை, அளிப்பு, விலை முதலியவைகளை ஆராய்ச்சி செய்கின்றனர். இந்த மார்க்கட்டில் பொருளை வாங்குவோரும் விற்பனை செய்வோரும், தத்தம் பகுத்தறிவுக்கேற்றபடி நடந்துகொள்கின்றனர்.

இங்கு நாம் கற்பனை செய்துகொண்டவை அல்லது நமது எடுகோள்கள் நூற்றுக்குநூறு முன்னேற்றமடைந்த நாடுகளில் இருக்கின்றன என்று சொல்லமுடியாது. இவை வளர்ச்சியடையாத

நாடுகளுக்குப் பொருந்தவே பொருந்தா. உதாரணமாகப் போட்டி தடையற்ற முறையில் நடைபெறுவதில்லை. எல்லா நாடுகளிலும் அரசினர் கொள்கையும் செயல்களும், விலை, தேவை, அளிப்பு முதலியவைகளை மறைமுகமாகவோ அல்லது நேர்முகமாகவோ பாதிக்கின்றன. உதாரணமாக அரசாங்கம் ஏற்றுமதி, இறக்குமதி சுங்க வரிகளை விதிக்கும்பொழுதும், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் அளவை நிர்ணயம் செய்யும்பொழுதும் தடை உத்தரவுகள் பிறப்பிக்கும்பொழுதும், சில தொழில்களுக்கு உதவித் தொகை அளிக்கும்பொழுதும் அல்லது வரிச்சலுகை (tax concessions) காட்டும்பொழுதும் நாட்டின் கொள்கை மார்க்கட்டுமுறையைப் பாதிக்கின்றது. இத்தகைய கொள்கை விலைமுறையைப் பாதிக்கும் பல்வேறு வழிகளை இங்கு விளக்க வேண்டியதில்லை. ஆனால், நம் விருப்பம்போல் பொருளாதார அமைப்பை முழுமையாகவோ அல்லது அதன் சில பகுதிகளையோ அரசினர் கொள்கை மூலம் மாற்றலாம். இப் பகுதிகளே, 'மார்க்கட்டின்' பல்வேறு கூறுகளாக இருக்கின்றன. ஆனால், தேவை—அளிப்பு விதிகளுக்கு முரணான கொள்கைகளை நாட்டில் புகுத்தினால் வெறுக்கத்தக்க விளைவுகள் நிகழும். உதாரணமாக, நுகர்வோரின் நலன் என்று நம்பப்படும் காரணத்திற்காக உணவுப் பண்டத்திற்குப் போட்டி நிர்ணயம்செய்யும் விலையைவிடத் தாழ்வான விலையை அரசு நிலை நாட்டினால், அளிப்பு (supply) பாதிக்கப்படும்; கள்ள மார்க்கட்டு (black market) வளரும். (இந்த மோசமான நிலைமை இந்தியாவில் இரண்டாவது போர்க்காலத்தில் இருந்தது.) போட்டி நிர்ணயம் செய்யும் கூலியைவிட, உயர்ந்த கூலியைத் தொழிலதிபர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று அரசு உத்தரவிட்டால் (இந்தியாவில் இவ் வுத்தரவு அமலில் இருக்கின்றது) பொருள்களின் அடக்கச் செலவு (cost of production) மிகுதியடையும்; மேலே குறிப்பிட்ட தொழிலாளர்களை வேலையில் அமர்த்தியுள்ள தொழிலதிபர்கள் பெறும் லாபம் குறையும்; தொழில் அமைப்புக்கு வேண்டிய ஊக்கத்தை இது பாதிக்கும்; உற்பத்தியும், தொழிலதிபர்கள் சில தொழிலாளர்களின் உழைப்புக்கு ஏற்படும் தேவையும் குன்றும்; தொழிலாளர்களுக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தலாம்; அல்லது தொழிலாளர்கள் நியமனத்தை மாற்றியமைக்கலாம். பின்னர்க் குறிப்பிட்டுள்ள வழியைப் பின்பற்றும் பொழுது, தொழிலாளர்கள் திறமை மிகுதியடையும். தேவையாகும் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்தபோதிலும், அவர்கள் திறமை உயர்வதால் இவ் வழியைப் பின்பற்றலாம். கூலியை உயர்த்துவதற்கு உற்பத்தியாளர்கள் வேறுவழிகளையும் பின்பற்றலாம். ஆனால், கூலி உயர்வதால் தேவையாகும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பாதிக்கப்படுகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது.

மார்க்கட்டுமுறை வேறு பல வழிகளிலும் பாதிக்கப்படலாம். இவைகளுள் இரண்டைமட்டுமே இங்குக் காணலாம். முதலாவது சர்வாதீனங்கள் (monopolies) போட்டியைத் தடை செய்யலாம்; அல்லது குறைக்கலாம். இரண்டாவது புற நிகழ்ச்சிகளும் கொள்கையும், அகில உலகிலோ அல்லது சில நாடுகளிலோ நடப்பவை ஒரு குறிப்பிட்ட நாட்டின் விலைவாசியைப் பாதிக்கலாம். உதாரணமாக இந்த நாடு ஏற்றுமதி வரிகளை விதிக்கலாம். இதனால் இதன் ஏற்றுமதியும் உற்பத்தியும் பாதிக்கப்படலாம். இதன் விளைவாக இதன் இறக்குமதிசெய்யும் சக்தியும் பொருளாதாரத்தின் வேறுபல கூறுகளும் பாதிக்கப்படும். இவ் வுதாரணங்களில் குறிக்கப்பெற்றிருக்கும் நிகழ்ச்சிகள் மார்க்கட்டு முறையின்கூறுகள் மூலமே பொருளாதாரத்தைப் பாதிக்கின்றன.

தேவை, அளிப்பு விதிகள் போட்டியை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. இப்போட்டி நிலவுவதாகக் காட்டும் எடுகோளுக்கும் உண்மையான நிலைமைக்கும் உள்ள வேறுபாடுகள் நம் கோட்பாடுகளின் பயனைக் குறைக்கவில்லை. ஏனெனில், உண்மை நிலைக்கு ஏற்றவாறு நம் ஆராய்ச்சியை மாற்றியமைத்துக்கொள்ளலாம் என்பதையும் உண்மைக்குப் பொருத்தமாக ஆராய்ச்சி செய்து சரியான முடிவு காணலாம் என்பதையும் பின்வரும் அதிகாரங்களில் காணலாம்.

தேவை, அளிப்பு, விலை இவைகளில் ஏற்படும் மாறுதல்களை ஒட்டிப் பொருள்களை வாங்குவோரும் விற்போரும் நடந்துகொள்வார்கள்; இவர்கள் செயல்கள் பகுத்தறிவால் உந்தப் பெற்றவையாக இருக்கும் என்ற கருத்தைப்பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் கூறவேண்டும். முதல்முதலாக முன்னேற்றமடைந்த நாடுகளில் கூட, எல்லாரும் இவ்வாறு நடந்துகொள்வார்கள் என்று கற்பனை செய்துகொள்ள வேண்டியதில்லை. பெரும்பாலானவர்கள் இவ்வாறு நடந்துகொள்வர் என்று நாம் கற்பனை செய்துகொண்டால் போதும். இங்கிலாந்தில் ஒரு கடைக்காரன் தனக்குப் பிடிக்காதவர்களுக்குப் பொருள்களை விற்பனைசெய்ய மறுத்தான். இது அனுபவத்தில் கண்ட உண்மை. ஒருவன் ஒரு சட்டை வாங்க விரும்பினான். ஆனால், கடைக்காரன் 'உன் அளவுக்கு என்னிடம் சட்டை இல்லை' என்று கூறினான். கடையில் அந்த அளவு சட்டை இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதை அவன் அறியாமலே இப்படிக் கூறினான். வேறு ஒருமுறை அவன், 'நான் இப்பொழுது உனக்குப் பணிபுரிய முடியாது, ஏனெனில், கடையை மூடப்போகிறேன்' என்று கூறிக் கடையை மூடினான். ஆனால், இது பொது நிலையைப் பாதிக்கவில்லை. விலை இறங்கும்பொழுது

வாங்குவோர் மிகுதியாக வாங்குவர்; விற்பனை செய்வோர் குறைவாக விற்பனை செய்வர். விலை ஏறும்பொழுது இவர்கள் நேர்மாறாக நடப்பர் என்ற அடிப்படை உண்மையைக்கொண்டே ஆராய்ச்சி செய்யலாம்.

வளர்ச்சியடையாத நாட்டின் புராதனப் பகுதியில் விலை மாறும்பொழுது எதிர்பார்த்த மாறுதல் ஏற்படாமல் இருக்கலாம். இந்தியாவில் கிடைக்கும் புள்ளிவிவரங்கள் சரியானவையாகவும், நம்பக்கூடியவையாகவும் இல்லாதபோதிலும், விவசாயிகள் விலை மாறுதலுக்கேற்றபடி, தம் உற்பத்தியைத் திருத்தியமைப்பதில்லை என்ற உண்மைக்குச் சான்று இருக்கிறது. இதனால் திட்டமிடுவோரின் வேலை கடினமாக இருக்கின்றது. மிகவும் ஏழ்மையாக இருக்கும் மாவட்டங்களில் இந்த நிலை இருக்கின்றது. (இதற்குச் சமூகக் காரணங்கள் இருக்கலாம்) செழிப்பான இடங்களில் இந்திய விவசாயி மற்றவர்களைப்போல் தன் நிலையை உயர்த்திக்கொள்ள விரும்புகிறான். மேலும் பொருளாதார அல்லது 'பகுத்தறிவை ஒட்டி நடக்கும்' மனிதன் என்ற கருத்துக்கு ஒரு விரிவான விளக்கம் வேண்டும். சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களை விளக்குவதற்கு இதுவேண்டும். முன்பு நாம் குறிப்பிட்ட உதாரணத்தை மீண்டும் இங்கு விளக்கலாம். கூலிகள் குறைவாக இருந்த பொழுது சுரங்கத் தொழிலாளர்கள் அதிகமாகவும், கூலிகள் உயர்ந்தவுடன் குறைவாகவும் வேலை செய்தனர் என்று குறிப்பிட்டோம். இதற்குக் காரணம் அவர்கள் தாம் உற்பத்தி செய்த பண்டங்களை மிகுதியாக வேண்டியது; அல்லது மிகுதியான ஓய்வை அவர்கள் விரும்பினார்கள். அதிகமான சுரங்க வேலையையும், கூலியையும் அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் செயல் பகுத்தறிவுக்கு முரணாக இல்லை. உயர்ந்த கூலி, ஓய்வு இந்த இரண்டிலும் முன்னேற்றமடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் எதை விரும்புகின்றனர் என்பதைப் பொருளியலார் அண்மைக் காலத்தில் ஆராய்ச்சி செய்கின்றனர். சில சமயங்களில் ஆங்கிலேயத் தொழிலாளர் சங்கங்கள் அதிகமான கூலியைவிட ஓய்வையே விரும்புகின்றன. (ஆனால், இரண்டையும் அளித்தால் அவர்கள் பெருமகிழ்ச்சியை அடைவார்கள்.) இதிலிருந்து பொருளாதார ஆராய்ச்சி தவருனது என்று நாம் கருதலாகாது. ஆராய்ச்சியைக் கொண்டு நடைமுறை நிலையை விளக்கும்பொழுது, சந்தர்ப்பத்தை நன்கு அறிந்த பிறகே எந்த முடிவுக்கும் வரலாம் என்பதையே இது வலியுறுத்துகிறது.

இதுவரை மார்க்கட்டு முறையின் முக்கியத்துவத்தை விளக்கினோம். இதன் பொருள் யாது என்பதையும், முன்னேற்றமடைந்த

நாடுகளுக்கும், வளர்ச்சியடையாத நாடுகளுக்கும் இடையே (இந்த முறையில்) உள்ள வேறுபாடுகளையும் இங்குப் பார்க்கவேண்டும்.

முதலில் பொருளாதார நடையில் குறிப்பிடும் மார்க்கட்டு, அன்றாடப் பொருள்கள் வாங்கும் மார்க்கட்டிலிருந்து வேறுபட்டிருக்கின்றது என்பதை நாம் உணரவேண்டும். பொருளியலாரின் மார்க்கட்டு ஓர் இடத்தில் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. பொருளியலார் குறிப்பிடும் மார்க்கட்டில் சில பொருளாதார சக்திகள் இயங்கும். இவற்றின்விளைவாகத் தேவை, அளிப்பு, விலை முதலியவைகளுக்கிடையே சில தொடர்புகள் ஏற்படுகின்றன. இவைகளுள் ஏதேனும் ஒன்று மாறினாலும், மற்ற இரண்டிலும் மாறுதல் ஏற்படும்; ஆனால், பின்னர்த் தோன்றும் மாறுதல் முன்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து, அதே விகிதத்தில் அல்லது அளவில் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. இந்த முறையில் பொருள் காணும்பொழுது மார்க்கட்டு என்பது விலை நிர்ணயம் செய்யக் கூடியதாகும். தேவையும் அளிப்பும் 'விலை' முறையில் அடங்கியவை. எனவே, பொருளியலார் தேவை என்று கூறும்பொழுது, 'ஒரு குறிப்பிட்ட விலையில் தேவையாகும் பொருளையும்', அளிப்பு என்று கூறும்பொழுது, 'ஒரு குறிப்பிட்ட விலையில் அளிக்கப்படும் பொருளையும்' குறிப்பிடுகின்றனர். விலையைக் குறிப்பிடாமல் தேவை அளிப்பைவிட மிகுதியாக இருக்கின்றது என்றோ அல்லது அளிப்பு தேவையைவிட மிகுதியாக இருக்கின்றது என்றோ கூறுவதில் பொருள் ஒன்றுமில்லை.

உண்மையாகச் சில இடங்களில் உள்ள சந்தைகளில் பணத்தைக்கொண்டு பொருள்களைப் பரிவர்த்தனை செய்யும் பொழுதும்கூட, மார்க்கட்டு விலை நிர்ணயமாவதில்லை. இத்தகைய சந்தையில் பொருள்களும், பணிகளும் பரிவர்த்தனை ஆகும் பொழுது நிர்ணயம் ஆகும் விலைகளுள் முறையான தொடர்புகள் இல்லை. கீழ்நாட்டுச் சந்தையை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இங்கு விற்பனையாகும் பித்தளைப் பாத்திரங்களுக்கும், தந்த நகைகளுக்கும் அயல்நாட்டுப் பிரயாணிகள் கொடுக்கும் விலைக்கும் உள்நாட்டினர் அளிக்கும் விலைக்கும் மிக அதிகமான வேறுபாடுகள் உள. அடுத்தடுத்து உள்ள கடைகள் ஒரேவிதப் பொருளை வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யும். அயல்நாட்டுப் பிரயாணி ஒருவர் கொடுக்கும் விலைக்கும் மற்றொருவர் கொடுக்கும் விலைக்கும் வேறுபாடு இருக்கலாம். உள்நாட்டினர் அளிக்கும் விலைகளும் வேறுபட்டவையாக இருக்கலாம். ஆகையால் அயல்நாட்டினர் ஏமாற்றப்படவில்லை. (முறையாக விலை நிர்ணயமாகும் மார்க்கட்டில் சில சந்தர்ப்பங்களில் சிலர் ஏமாற்றப்படலாம்) மேலே குறிப்பிட்ட சந்தையில் ஏராளமான

பேரம் (higgling) நடைபெறும்; ஆனால், முறையாக விலை நிர்ணயமாவதில்லை. மற்றச் சில சாதாரண உதாரணங்களையும் இங்குக் கொடுக்கலாம். தொன்றுதொட்டு அமலில் இருக்கும் விலைகள் மார்க்கட்டில் நிலவலாம்; அல்லது அரசு குறிப்பிட்ட விலையை ஏற்படுத்தலாம். சில சமயங்களில் விவசாயி அல்லது அவன் மனைவி உபரி பாலை அல்லது மற்றப் பொருள்களை மார்க்கட்டுக்குக் கொண்டுவரலாம். அவை விற்பனையாகா என்ற அச்சத்தினால், அவைகளை மிகக் குறைந்த விலையில் விரைவில் விற்கலாம். இத்தகைய விலைகள் தேவையுடனும் அளிப்புடனும் தொடர்பு கொள்ளவில்லை. இத்தகைய பரிவர்த்தனைகள் நடைபெறும் சந்தை, மார்க்கட்டு விலையை எவ்விதத்திலும் நிர்ணயம் செய்வதில்லை. எனவே, 'விலைமுறை' ஏற்படுவதில்லை. இந்த நிலை இருப்பதற்குரிய காரணங்கள், முதல் அதிகாரத்தில் விளக்கப் பெற்றிருக்கின்றன. எந்த விலையில் பரிவர்த்தனை நடைபெறுகின்றது என்பதை விவசாயி அறிய இயலாமல் இருக்கலாம். அவன் தந்திரசாலிகளாகிய நடுவர்களுடன் (middle men) போட்டியிட முடியாது.

ஆகையால் பொருளியலார் குறிப்பிடும் மார்க்கட் ஓர் இடமில்லை; அது ஒரு கருவியே. நிர்ணயமான விலையில் விற்பனை செய்வோர், மேலும் அதிகமான அளவு விற்பனை செய்ய விரும்புவதில்லை. மார்க்கட்டைத் தீர்ப்பது (clearing the market) என்று இதை அழைப்பது வழக்கம். இந்த விலையில் தேவைக்குச் சமமாக அளிப்பு இருக்கின்றது. விலை உயர்வாக இருந்தால், பொருள்களை விற்கும் சிலர் தம் பொருள்களை விற்க முடியாது. தாழ்ந்தால் வாங்க விரும்புவோரில் சிலர் பொருள்களை வேண்டியபடி வாங்க இயலாது.

மார்க்கட்டில் பெரும்பாலும் பரிவர்த்தனை தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும். பண்டங்கள் தொடர்ந்து மார்க்கட்டுக்கு வந்துகொண்டே இருக்கும். வாங்குவோரும் பொருள்களைத் தொடர்ந்து வாங்கிக்கொண்டே இருப்பார்கள். இத்தகைய மார்க்கட்டில் விலை கீழ்க்கண்ட சக்திகளால் நிர்ணயமாகின்றது. பல்வேறு விலைகளில் அளிக்கப்படும் பொருள்களின் அளவு, தேவையாகும் பொருள்களின் அளவு, எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் தேவை, அளிப்பு, நீண்ட கால விற்பனையும் வாங்குதலும், தற்சமயம் நிலவும் விலையாலும் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் விலையாலும் பாதிக்கப்படும். விலைகள் உயர்ந்தால், எதிர்காலத்தில் உற்பத்தியும் விற்பனையும் பெருகும். மிகுதியான அடக்கச் செலவுடன் உற்பத்தி செய்வோர் உற்பத்தித் துறையில் இறங்குவர். விலைகள் உயர்ந்தால் இறுதிப் படிவு நுகர்வோர் தம் நுகர்வை

மாற்றியமைத்துக்கொள்வர். ஆகையால் விலையுயர்வு குறைவாக இருக்கும் பண்டங்களை மிகுதியாகவும், விலையுயர்வு அதிகமாக இருக்கும் பொருள்களை முன்பைவிடக் குறைவாகவும் பயன் படுத்துவர். விலைகள் தாழ்ந்தால் இதற்கு நேர்மாறான விளைவுகள் நிகழும். தொடர்ந்து இயங்கும் மார்க்கட்டில் நீண்ட காலத்தில் விலை நிர்ணயம் ஆகும்பொழுது, சமநிலை விலையை (equilibrium price) நிர்ணயம்செய்யும் சக்தி ஒன்று இயங்கும். ஆனால், சமநிலை (equilibrium) எப்பொழுதும் ஏற்படுவதில்லை, ஏனெனில், தேவை யும், அளிப்பும் கணிசமான அளவு மாறலாம். உண்மையாக மாறிக்கொண்டே இருக்கின்றன. ஆயினும், இந்த மார்க்கட்டு விலையை நிர்ணயம் செய்யக்கூடியது. நுகர்வோரின் தேவைக்கு ஏற்றபடி தொடர்ந்தும் விரைவிலும் உற்பத்தியை இது மாற்றுவதால், இதை நன்கு இயங்கும் மார்க்கட்டாகக் குறிப்பிடவேண்டும். அடக்கச் செலவை ஒட்டி இது விலையையும் மாற்றும். மேலும், இத்தகைய வேறு மாறுதல்களையும் விளைவிக்கும் எல்லாரும் இயற்கையாகப் படைத்திருக்கும் சக்திகளிலும் வாய்ப்புகளிலும் சமத்துவம் இருந்தால், நம் பொருளாதார வாழ்க்கை செம்மையாக அமைப்பதற்கு விலை முறையே மிகச் சிறந்த ஒரு கருவியாகும். ஆனால், இந்த நிலை இல்லாததால் வெவ்வேறு குறிக்கோள்களைச் செயலில் கொண்டுவருவதற்கு விலை முறை யையே வேண்டியபடி மாற்றியமைத்துக்கொள்கின்றனர்.

விலை முறையைத் திருத்தியோ அல்லது மாற்றியோ அமைக்க வேண்டுமானால், அது எவ்வாறு இயங்குகிறது என்பதை நாம் அறியவேண்டும். மனிதன் நடந்துகொள்ளும் முறையைப்பற்றிய எளிய எடுகோள்களை ஆதாரமாகக் கொண்டு பொருளியலார் தேவையையும் அளிப்பையும் ஆராய்ச்சி செய்கின்றனர். இதற் கப்பால் எடுகோள்களை நீக்கிச் சிக்கலான உண்மை நிலைமைக்குப் பொருந்துமாறு தன் ஆராய்ச்சியை அமைக்கின்றனர். இதுபற்றிய விளக்கத்தை இரண்டாம் பாகத்தில் காணலாம். எந்த விலை நிர்ணயம் ஆகும் என்பதையும், நீண்ட கால மாறுதல்கள் அளிப் பையும், தேவையையும் எவ்வாறு பாதிக்கும் என்பதையும் எடுகோள்கள் மாறும்பொழுது ஏற்படும் விளைவுகள் யாவை என்பதையும் நாம் கூறமுடியாமல் இருந்தாலும், இந்த ஆராய்ச்சி களைக்கொண்டு நாம் பரிசீலனை செய்யவேண்டிய சக்திகளை அறியலாம். இவ் வுண்மை, நடைமுறை நிலைமையை அறிவதிலும் கொள்கை வகுப்பதிலும் பயன்படக்கூடியது. சில போக்குகளின் திசைகளை நாம் இவ் வாராய்ச்சிமூலம் அறியலாம். தொடக்கத்தில் ஏற்பட்ட மாறுதல்களை ஒட்டி எந்த எல்லைகளுக்குள் தேவையும் அளிப்பும் மாறுகின்றன என்பதையும் அறியலாம்.

சில இடங்களில் இருக்கும் இயற்பொருளான சந்தைகளைப் போலல்லாமல் விலையை நிர்ணயம்செய்யும் மார்க்கட்டு எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை நாம் காணவேண்டும். இத்தகைய மார்க்கட்டு அமையவேண்டுமானால் தொலைபேசி, தந்தி, கேபிள் முதலியன அளிக்கும் வசதிகளை வாங்குவோரும், பொருள்களை விற்பனை செய்வோரும் பெறவேண்டும். பேரங்கள் (deals) முடிந்த வுடன் அவைபற்றிய விவரங்கள் உடனுக்குடனே அறிவிக்கப்பட வேண்டும். இத்தகைய தொடர்பு வசதிகள் முன்னேற்றமடைந்த நாடுகளிலும்,வளர்ச்சியடையாத நாடுகளின் நவீனப் பகுதிகளிலும் இருக்கின்றன. பல பண்டங்களுக்கு இத்தகைய தேசிய மார்க் கட்டுகளும் கோதுமை, பருத்தி போன்ற வெவ்வேறு படித்தரங்க ளாகப் பிரிக்கக்கூடிய விவசாயப் பொருள்களுக்கு அகில உலக மார்க்கட்டுகளும் இருக்கின்றன. இப் பண்டங்கள் பல பிராந் தியங்களில் உற்பத்தியாகின்றன. உலகமெங்கும் இவைகளுக்குத் தேவை இருக்கின்றது. பெயர்பெற்ற நிறுவனங்களின் பங்கு களுக்கும் தேவை இருக்கின்றது.

முன்பு குறிப்பிட்டபடி வளர்ச்சியடையாத நாடுகளின் புராதனப் பகுதியில் விலை நிர்ணயம் செய்யும் மார்க்கட்டு இல்லை. ஆகையால், விலை முறையின் இயக்கம் இப் பகுதிக்குப் பொருந் தாது. அரசினர் கொள்கை விரும்பிய பலனை இப் பகுதியில் அளிக்காது. இந்த வேறுபாடுள்ள பல உதாரணங்களையும் அவை எழுப்பும் பிரச்சினைகளையும் பின்வரும் அதிகாரங்களில் காண லாம். 'பெருக்கி' (multiplier) இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஏன் வலிமையற்ற முறையில் இயங்குகின்றது என்பதை இது விளக்குகின்றது. நாம் முன்பு வந்த முடிவை இது வலியுறுத்து கிறது. அதாவது வளர்ச்சியடையாத நாடுகளின் பொருளாதாரம் எவ்வாறு இயங்குகின்றது என்பதை அறிவதற்கு முன், ஏராளமான ஆராய்ச்சி செய்யவேண்டும். இதன் பிறகே குறிப்பிட்ட சந்தர்ப் பங்களில், நாம் விரும்பும் விளைவுகளை ஏற்படுத்தச் சரியான கொள்கைகளைப் பின்பற்றமுடியும்.

பொருளியலின் விளக்கம், நோக்கெல்லை (scope) பல கடின மான படிவங்களில் பொருளியலார் பயன்படுத்தும் முறைகள் முதலியவற்றைப்பற்றிய சுமாரான விளக்கத்தை இதுவரை பார்த் தோம். பின்வரும் அதிகாரங்கள் பொருளாதாரக் கருத்துகளையும் முறைகளையும் விளக்கும். பொருளியலின் ஒரு பகுதியைப்பற்றிய விவரங்களையே இவ் வதிகாரங்களில் காணலாம். அதாவது இயலின் முன்னுரையைமட்டுமே நாம் காணலாம். பொருளியலைப் பயிலுவதில் வளர்ச்சியடையாத நாடுகளின் மாணவர்களுக்கு ஓர் ஊக்கமளிப்பதே இதன் நோக்கமாகும். இவ் வியல் அவர்கள்

நாட்டின் முக்கியமான சில பிரச்சினைகளுடன் எவ்வாறு தொடர்பு கொண்டிருக்கின்றது என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளலாம். பொருளியலைப் பயிலும் இத்தகைய மாணவர்கள் ஊக்கத்துடன் மேலும் இதைப் படிக்க வேண்டுமென்பது நம் நோக்கம். இதுவரை இவ் வியலைப் பயின்றவர்கள் வளர்ச்சியடைந்த பொருளாதாரத் திற்குப் பொருந்துமாறு நூல்களை வெளியிட்டனர். இதன் காரணமாகத் தோன்றும் இடர்ப்பாடுகளை நீக்கி, அவர்கள் பொருளியல் ஆராய்ச்சியைக்கொண்டு தம் நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்; தம் நாடுகளில் பொருளியல் கோட்பாடுகளை முன்பை விட அதிகமாகப் பயன்படுத்தவேண்டும். இதுவே நம் நோக்கமாகும்.

பிரிவு II

தனிப்பட்ட நுகர்வோன், உற்பத்தியாளன் நடத்தைபற்றிய ஆராய்ச்சி தனிப்பொருளியல்

3. தேவை (Demand), அளிப்பு (Supply), பரிவர்த்தனை (Exchange)

1. முன்னுரை
2. குறுகிய காலத்தில் தேவையும் அளிப்பும்
3. குறுகிய காலத்தில் மார்க்கட்டு விலை
4. நீண்ட காலத்தில் தேவையும், அளிப்பும், விலையும்

1. முன்னுரை

விலைக் கருவி தடையற்ற முறையில் இயங்கும்பொழுது நுகர்வோர் தம் முன்னுரிமைகளை (priorities) ஒட்டி வேண்டிய பொருள்களை அடைகின்றனர். [இதைச் செயல்படுத்தும் தேவை (effective demand) வரையறுக்கின்றது.] முதலீட்டுச் சாதனங்கள் (investment resources) சிறந்தமுறையில் பயனுகின்றன. இதை இரண்டாம் அதிகாரத்தில் பார்த்தோம்.

விலைக் கருவி (price mechanism) எவ்வாறு இயங்குகின்றது என்பதைப் பார்ப்பதற்குமுன், தடையற்ற போட்டி நிலவும்பொழுது பொருளாதார நோக்கங்களைச் செயல்படுத்துவதற்கு இக் கருவி மிகச் சிறந்ததன்று என்பதை அறியவேண்டும். சமூக நோக்கங்களைப்பற்றிப் பேசத் தேவையே இல்லை. பூரணமான தலையிடாமை (complete laissez faire) என்றுமே சமூகத்தில் இருந்ததில்லை. இதை யாருமே ஆதரிக்கமாட்டார்கள். கல்வி, சில பொதுப் பணிகள் (public utilities), பாதுகாப்பு, போலீஸ் படையைப் பராமரிப்பது முதலியவற்றை அரசே நன்கு நடத்தமுடியும். இப் பணி

கூலைச் செய்வதற்கு வேண்டிய தொகையை அரசு வரிகள்மூலம் வசூல் செய்யவேண்டும். இதனால், அரசினர் தலையீடு ஏற்படுகின்றது. எனவே, பொருளாதாரக் கருவி தடையற்றமுறையில் இயங்குவதில் சில குறுக்கீடுகள் ஏற்படுகின்றன. இந்த நிலை எல்லா நாடுகளிலும் இருக்கும். பொருளாதார அமைப்புகளுக்கிடையே இருக்கும் வேறுபாடு எவ்வளவுதூரம் ஒரு நாட்டில் அரசு பொருளாதார விவகாரங்களில் தலையிடுகின்றது என்பதைச் சார்ந்திருக்கும். பூரணமான திட்டப்படி, இயங்காத பொருளாதார அமைப்புகளில் விலைக் கருவி ஒரு முக்கியமான பணிபுரிகின்றது. விலைக் கருவியின் இயக்கத்தைப் பாதிக்கும் அல்லது அதன் திறமையை அதிகரிக்கும் கொள்கைகளின் விளைவுகளை அறிவதற்காவது அதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் செயல்படுத்தப்படும் முழுமையற்ற திட்டங்கள், சில விசேஷமான அரசினர் தலையீட்டுக்குக் காரணமாக இருக்கின்றன. இவை, சில சமுதாயப் பொருளாதார நோக்கங்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால், இவையும் விலைக் கருவியுடன் தொடர்பு கொள்ளாமல் இல்லை. பொதுத் துறையில்கூட நோக்கங்களைச் செயலாற்ற, இவை விலைக் கருவியையே பயன்படுத்துகின்றன. இத்தகைய திட்டங்களின் நலன்களையும் குறைகளையும் 11, 12ஆவது அதிகாரங்களில் காணலாம்.

தேவை, அளிப்பு, விலை நிர்ணயம் முதலியவைபற்றிய பூர்வாங்க ஆராய்ச்சியை செய்து போட்டி நிலவும்பொழுது குறுகிய கால, நீண்டகால நிலைகளைக் காண்பதே இந்த அதிகாரத்தின் நோக்கம். ஆராய்ச்சிக்குட்பட்ட காலம் எவ்வளவுக்கெவ்வளவு நீண்டதாக இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு தேவையும் அளிப்பும் மாறலாம். இவை, தன்மையிலும், அளவிலும் மாறும் என்று உறுதியாகக் கூறலாம்.

மார்க்கட்டுக் காலம் என்று மார்ஷல் (Marshall) அழைத்த காலம் மிகக் குறைவாக இருந்தால், அளிப்பு (supply) குறிப்பிட்டத் தக்க முறையில் மாறாது. இத்தகைய காலத்தைக் குறுகிய காலம் (short run) என்றழைப்பது உண்டு. (உதாரணமாக இக் காலம் ஒரு நாளாகவோ அல்லது ஒரு நாளில் குறிப்பிட்ட மணிகளுக்கிடையே உள்ள ஒரு பகுதியாகவோ இருக்கலாம்.) விளக்கமாகக் கூறவேண்டுமானால், குறுகிய காலத்தில் உற்பத்திமுறையில் பெரிய மாறுதல்கள் ஏற்படா. இதிலிருந்து உற்பத்தியான பொருள்கள் எல்லாம் விற்பனையாகிவிடும் என்று கருதமுடியாது. ஏனெனில், மார்க்கட்டு விலை ஓரளவுக்குமேல் குறைந்தால், சில உற்பத்தியாளர்கள் தம் சரக்கு முழுவதையுமோ அல்லது அதில் ஒருபகுதியையோ

விற்பனை செய்ய மறுக்கலாம். இக் காலத்தில் தேவையின் நிலையைப் பார்க்கும்போது நுகர்வோரின் முன்னுரிமைப் பட்டியல் (scale of preference) ஒரே நிலையில் இருக்கின்றது. ஆனால், எதிர்பாராமல் தட்பவெப்ப நிலை மாறலாம்; அல்லது வேறு மாறுதல் ஏற்படலாம். இதை ஒட்டித் தேவை மாறலாம்; [கிச்சடி (Salad), குளிர்ந்த பானங்கள் (cool drinks) போன்றவை மிக வறட்சியான கோடை காலத்தில் அதிகமாக விற்பனையாகலாம்.] இதுபோன்ற சமயங்களில் தேவையில் ஏற்படும் மாறுதல்கள் தேவைப் பட்டியலிலேயே (demand schedule) மறைந்திருப்பதாக நாம் கருதலாம். குறுகிய காலத்தில் மார்க்கட்டில் மாறுத, நிலையான அளிப்பு இருக்கும் என்பதைத்தான் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

சில நிபந்தனைகள் நடைமுறையில் இருந்தால் தேவை, அளிப்பு பற்றிய குறுகியகால ஆராய்ச்சி திட்டவட்டமாக இருக்கும். ஆராய்ச்சியின் விலை நிர்ணயம்பற்றிய முடிவுகளும் அப்படியே இருக்கும். ஆனால், நீண்ட காலம்பற்றிய ஆராய்ச்சி (உதாரணமாக ஒரு மாதம், ஒரு பருவம், ஓர் ஆண்டு அல்லது இதையும்விட நீண்டகாலம் போன்றவை) இவ்வளவு திட்டவட்டமாக இருக்காது. குறுகிய காலத்தில் சில நிபந்தனைகள் இருப்பின், மார்க்கட்டில் நிலையான சமநிலை (stable balance) இருக்கும். ஆனால், நீண்ட காலத்தில் விலையைச் சமநிலைக்குச் செலுத்தும் ஒரு சக்தியே இருக்கும். உண்மையில் இச் சக்தியின் போக்கு சில சமயங்களில் ஒரு திசையிலும் சில சமயங்களில் வேறு திசையிலும் இருக்கும். சமநிலை எப்பொழுதுமே ஏற்படாமல் இருக்கலாம். ஆகையால் நீண்டகால ஆராய்ச்சிக்கும் குறுகிய கால ஆராய்ச்சிக்கும் உள்ள பேதத்தை உணரவேண்டும்.

நிறைவுப் போட்டி (perfect competition) நிலவுவதாகக் கருதவேண்டுமானால், சில எடுகோள்கள் தேவைப்படும். இவைகளுள் சிலவற்றை நீண்ட கால ஆராய்ச்சி செய்யும்பொழுது நீக்கிவிடலாம்.

இவ் வெடுகோள்களைக் கீழே பார்க்கலாம்:

(a) பொருள்களைப் பலர் விற்பனை செய்கின்றனர்; பலர் வாங்குகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் (தம் நலனைக் கருதி, ஒரே முறையில் எப்பொழுதும் நடந்துகொள்வார்கள். இவ் வெடுகோள் எப்பொழுதும் தேவையானவை; நாம் உபயோகப்படுத்துவனவாகும்.

(b) மார்க்கட்டில் உள்ள பொருள்கள் ஒரே வகையைச் சேர்ந்தவை. (மற்றவைகளை நீக்கிச் சில குறிப்பிட்டவைகளைத்

தேர்ந்தெடுக்கத் தேவை இல்லை.) பொறிசெய் பொருள்களில் (manufactured goods) பெரும்பாலானவை ஒரே வகையைச் சேர்ந்தவை அல்ல. சில நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் மற்றவை உற்பத்தி செய்யும் பொருள்களிலிருந்து வேறுபட்டிருக்கின்றன.

முத்திரையிட்ட (branded) அல்லது வர்த்தகக் குறியிட்ட (trade-marked) பொருள்களைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவை நிறைவற்ற போட்டி (imperfect competition) உள்ள மார்க்கட்டில் விற்பனையாகின்றன. (நான்காவது, ஐந்தாவது அதிகாரங்களைப் பார்க்கவும்).

(c) எந்த விலைகளில் பேரங்கள் நடைபெறுகின்றன என்பதை எல்லாரும் அறிவர். (விலையை எல்லாரும் அறியாவிடில் 'மார்க்கட்டு விலை' நிர்ணயம் ஆகாது. 'மார்க்கட்டு' ஒரு 'கடை' (bazaar) யாகப் மாறும்) இந்த நிபந்தனை புராதனப் பகுதியில் இருக்காது.

(d) அரசியலாரோ அல்லது வேறு எவருமோ வரிகள்மூலம் விலை நிர்ணயத்தில் தலையிடுவதில்லை; பங்கீட்டு (rationing) முறை மூலம் தேவையில் தலையிடுவதில்லை; கோட்டா முறை (quota system) மூலமோ அல்லது வேறு அளவைக் கட்டுப்பாடுகள் மூலமோ அளிப்பில் குறுக்கிடுவதில்லை. அரசினர் குறுக்கீடு இருக்கும்பொழுது என்ன நிகழும் என்பதைப் பின் வரும் அதிகாரங்களில் காணலாம்.

(e) பண்டங்களை ஓரிடத்திலிருந்து மற்றொன்றுக்குச் செலுத்துவதற்காகச் செய்யும் செலவைக் கணக்கில் சேர்த்துக்கொள்வதில்லை. பண்டங்களை ஓரிடத்திலிருந்து மற்றொன்றுக்குச் செலுத்துவதற்காக அதிகமான தொகையைச் செலவு செய்வோர் மார்க்கட்டுப் பேரங்களில் கலப்பதில்லை என்று குறுகிய கால ஆராய்ச்சி செய்யும்பொழுது கற்பனை செய்து கொள்வோம். அல்லது உற்பத்தி நிலை மிகவும் சாதகமாக இருப்பதாலோ அல்லது தொழிலாளர்கள் கூலி மிகவும் குறைவாக இருப்பதாலோ அல்லது இதுபோன்ற மற்றக் காரணங்கள் இருப்பதாலோ உயர்ந்த போக்குவரத்துச் செலவைச் சமாளிக்க முடியும் என்று கற்பனை செய்துகொள்ள வேண்டும்.

(f) பொருள்களை வாங்குவோரும் விற்போரும், மிக அதிகமான எண்ணிக்கையில் இருக்கின்றனர்; (i) ஆகையால், ஒரு தனிப்பட்ட விற்பனையாளருடைய அளிப்பு (supply) மொத்த அளிப்பில் ஒரு சிறிய பகுதியாகவே இருக்கின்றது. எனவே, அவன் விலையை மாற்றமுடியாது. அதாவது ஒவ்வொரு விற்பனை

யாளனும் மார்க்கட்டு விலையை நிலையானது என்று ஏற்றுக்கொள் கிறான். (ii) தனிப்பட்ட வாங்குவோனும் விலையை மாற்றமுடியாது.

இந்த நிபந்தனைகள் இருப்பின் போட்டி நிறைவாக அல்லது பூரணமாக இருக்கின்றது என்று கூறலாம். இவ் வதிகாரத்தில் புறக்கணிக்கப்பட்ட தேவையின் சில கூறுகளையும், அளிப்பின் சில கூறுகளையும் நான்காவது அதிகாரத்தில் காணலாம். இதற்கப்பால் இங்குக் குறிக்கப்பெற்றிருக்கும் எடுகோள்களை நீக்கினால் ஆராய்ச் சியை எவ்வாறு மாற்றிக்கொள்ளவேண்டும் என்பதைப் பார்க் கலாம். ஆராய்ச்சியைப் பல்வேறு சந்தர்ப்பங்களுக்குப் பொருத்த மாக அமைக்கலாம் என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.


ஐந்தாவது அதிகாரத்தில் உற்பத்திக் காரணிகளின் (factors of production) விலைகளைப்பற்றிய ஆராய்ச்சியைக் காணலாம். (அதாவது தொழிலாளர்களின் விலை (ஊதியம்)யாகிய கூலி அல்லது சம்பளம் மூலதனத்தின் (capital) விலை அல்லது வட்டி (interest) நிலத்தின் பயன்பாட்டுக்குக் கொடுக்கும் விலை அல்லது வாரம் (rent) முதலியவை விளக்கப்பெற்றிருக்கும். ஆறாவது அதிகாரத்தில் நிறுவனங்களைப் (firms) பற்றிய விளக்கத்தைக் காணலாம். இந்த நிறுவனங்கள் தனிப்பட்ட உற்பத்தியாளர்களி லிருந்தும், குடும்ப உற்பத்தியாளர்களிலிருந்தும் வேறுபட்டிருக் கின்றன.

B. குறுகிய காலத்தில் தேவையும் அளிப்பும்

பண்டத்தின் அல்லது பணியின் 'தேவையை' விருப்பம் என்றோ, அவசியமான ஒன்று என்றோ கூறமுடியாது. விருப்பத் தைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய திறமையும், எண்ணமும் இருந்தால்தான், அது தேவையாக மாறுகின்றது. பொருளியல் நடையில் விலையைக் குறிப்பிடாமல் தேவையைக் குறிப்பிடுவதில் பொருள் இல்லை. ஒரு பொருளின் தேவை, குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட விலையில் வாங்கப்படும் அல்லது தேவையாகும் அளவைக் காட்டுகின்றது.

குறுகிய காலத் தேவையின் சாதாரண இயல்புகளைத் 'தேவைப் பட்டியல்' (demand schedule) மூலம் எடுத்துக் காட்டுவது வழக்கம். இப் பட்டியல் நம் விருப்பப்படி விதிக் கட்டுப் பாடின்றி அமைக்கப்பெற்றிருக்கும். முதல் அட்டவணையின் முதல் பத்தியில் ஓர் அலகின் (unit) பல விலைகளைக் காணலாம்; இரண்டாவது பத்தி பல்வேறு விலைகளில் வாங்கப்படும் அளவு களைக் காட்டுகின்றது. (இதுதான் தேவைப்பட்டியல்) மூன்றாவது

பத்தி ஒவ்வொரு விலையிலும் நுகர்வோரின் மொத்தச் செலவைக் காட்டும். (அதாவது முதல் இரண்டு பத்திகளின் எண்களின் பெருக்குத்தொகை.) நான்காவது பத்தி ஒவ்வொரு விலையிலும் தேவையின் நெகிழ்ச்சியை (elasticity of demand) எடுத்துக் காட்டும். இதைக் கீழே விளக்கியுள்ளோம். ஐந்தாவது பத்தி அளிப்புப் பட்டியலை (supply schedule) காட்டுகின்றது. (ஒவ்வொரு விலையிலும் அளிக்கப்படும் பொருளின் அளவையும் அளிப்புப் பட்டியலில் காணலாம்).



படம் 1

தேவை அளிப்புப் பட்டியல்களின் வளைகோடுகளை (curves) படம் 1-ல் காணலாம்.

படத்தில் (பட்டியலில் கண்டபடி) விலை செங்குத்து அச்சிலும் (OY) அளவு (குறிப்பிட்ட பொருளின் அலகுகள் படுக்கை அச்சிலும் OX குறிக்கப் பெற்றிருக்கின்றன. தேவைப் பட்டியலில் உள்ளபடி (முதல் அட்டவணையின் இரண்டாவது பத்தியில்) ஒவ்வொரு விலையிலும் தேவையாகும் அளவுகளைக் குறிக்கும் புள்ளிகளையும்

பட்டியல் 1

குறுகியகாலத் தேவை, அளிப்புப் பட்டியல்கள்

ஒரு வீட்டின் அளவு (ஒரு வீட்டில் உள்ள அறைகள்) (1)	தேவை (ஒவ்வொரு வீட்டிலும் வாங்கப்படும் அலகுகள்) (2)	தேவையின் மொத்தச் செலவு (ஒவ்வொரு வீட்டிலும்) (1x11) (3)	தேவையின் நெகிழ்ச்சி (4)	அளிப்பு (ஒவ்வொரு வீட்டிலும் விற்கப்படும் அலகுகள்) (5)
	1	20	ஒன்றுக்கு மேலான தேவையின் நெகிழ்ச்சி	
20				25
19	4	76		
			91% தேவையில் மாறுதல் (5 இவைகளில்) ÷ விலையில் மாறுதல் = 4·5	24
18	8	144		
				23
17	10	170		22
				21
16	11	176		
15	12	180	தேவையின் நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமம். தேவையில் மாறுதல் 27% ÷ விலையில் மாறுதல் 27% = [சம நெகிழ்ச்சி (unity)].	20
14	12·8	180*		
13	13·9	180*		19
12 மார்க்கட்டு விலை	15	180		17
				15
11	16·4	180*		13
			ஒன்றுக்குக் கீழான தேவையின் நெகிழ்ச்சி.	
10	17	170		11
9	17·5			9
		157·5	5·5% தேவையில் மாறுதல் ÷ 40% விலையில் மாறுதல் = 13	6
				3
8	18	144		0
7	18	126		
6	18	108		

* ஏறக்குறைய

குறிப்பு : இருசதவீதங்களையும் ஒரே அடிப்படையில் கணிக்க வேண்டும். இத்தச் சதவீதமுறை செப்பமற்றதாக இருக்கின்றது என்பதையும், குறைவான மாறுதல்களுக்கே இது பொருத்தமாக இருக்கின்றது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். மிகுதியான மாறுதல்களைக் கணிப்பதற்கு வகையீட்டுநுண் கணித முறையைப் (differential calculus) பயன்படுத்த வேண்டும்.

இவைகளைச் சேர்த்து வரையப்பெற்றிருக்கும் தேவை வளை கோட்டையும் (demand curve) படத்தில் காணலாம்.

தேவை அல்லது அளிப்புக் கோடுகள் எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம். குழிந்த வடிவத்திலோ அல்லது குவிந்த வடிவத்திலோ, நேர்க்கோடாகவோ அல்லது ஒரு சீரான கோடாகவோ அவை இருக்கலாம். நாம் கற்பனை செய்துகொண்ட தேவைக்கோடு, மிகவும் உண்மைக்குப் புறம்பாக இருந்தபோதிலும், சாதாரணத் தேவைக்கோடுகளின் இயல்புகளை எடுத்துக்காட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் அமைக்கப்பெற்றது. சில கருத்துகளுடன் இதைப் பயன்படுத்தும்பொழுது இது தேவைக் கோடுகளின் இயல்பான வடிவத்தை விளக்குகின்றது. பல விலைகளில் தேவையாகும், அளிக்கப்படும் பண்டங்களின் அளவுகளைக் கற்பனை செய்வது கடினமாகையால், உண்மை உதாரணத்தை நாம் இங்குக் கொடுக்கவில்லை. விலைகள் இரட்டித்தால் தேவையும் (அளிப்பும்) எந்த அளவு பாதிக்கப்படும் என்று எவரும் கூற முடியாது. விவசாயப் பண்டங்கள் போன்ற பொருள்களின் மார்க்கட்டு நிலவரம்பற்றிய அறிவு கொண்டு, ஏராளமான அனுபவத்துடன் உள்ளவர்கள் வாங்குவோரின் எண்ணிக்கை, அவர்கள் போக்கு, இருப்புச் சரக்கு முதலியவற்றை அறிந்திருக்கலாம். ஏதாவது ஒரு காரணத்தை ஒட்டி விலை சிறிதளவு உயர்ந்தாலோ அல்லது தாழ்ந்தாலோ, தேவையும் அளிப்பும் அவ்வாறு மாறும் என்பதை அறிய இவர்கள் கருத்துகள் உதவலாம். வரைபடத்தில் 3 புள்ளிகளைக் கொண்டு நம் தேவைக் கோட்டைக் காட்டினால் அது உண்மையானதாகத் தோன்றலாம். ஆனால், இங்குச் சுலபமாக விளக்கி விவரிக்கக்கூடிய கருத்துகளை அது எடுத்துக்காட்டாது.

விலை தாழ்ந்தால் தேவையாகும் அலகுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதுவே தேவைப் பட்டியலின் முதல் இயல்பாகும். வரைபடத்தில் தேவைக்கோடு வலப் பக்கம் சரிவதைக் காணலாம். ஒரு படிவத்திற்குப் பிறகு இந் நிலை மாறும்; அதாவது குறைந்த விலையில் அதிகமான அலகுகள் தேவையாகா. தேவைப் பட்டியலிலும் வரைபடத்திலும் இதைப் பார்க்கலாம்; விலை 8 அல்லது 7 அல்லது 6 என்ற படிவங்களில் தேவையாகும் அலகுகள் 18 ஆக இருக்கின்றது.

அளிப்புப் பட்டியலும் வளைகோடும் இதற்கு எதிர்மறையான போக்கைக் காட்டுகின்றன. உயர்ந்த விலையில் விற்பனையாளர்கள் அதிகமான அலகுகளை விற்பனைசெய்ய விரும்புகின்றனர். குறைந்த விலையில் அளிப்புக் குறைகின்றது. மிகக் குறைந்த விலையில்

விற்பதைவிடச் சரக்குகளைத் தாமே வைத்துக்கொள்ளலாம் என்று விற்பனையாளர்கள் கருதுகின்றனர் என்று நாம் கற்பனை செய்து கொள்கின்றோம். குறுகிய காலத்தில் பொறுக்கமுடியாத குறிப்பிட்ட அளவு சரக்கை, ஒரு குறிப்பிட்ட அல்லது உயர்ந்த விலையில் அளிப்பதைப் படம் காட்டுகின்றது. சரக்கு முழுவதும் (25 அலகுகள்) விலை 20 அணாவாக இருக்கும்பொழுது அளிக்கப் படுகின்றது. இதைவிட உயர்ந்த விலையிலும் சரக்கு முழுவதும் விற்பனையாகும்.

இது ஏன் இவ்வாறு நிகழ்கின்றது. எப்படி நிகழ்கின்றது என்பதைப் பார்க்கவேண்டுமானால், வாங்குவோரின் செயல்களையும் எண்ணங்களையும் (விற்பனை செய்வோரின் எண்ணங்களையும் செயல்களையும்) நாம் நன்கு பரிசீலனை செய்யவேண்டும். முதன் முதலில் விதிமுறைக்குரிய ஒரு விளக்கம் கொடுக்கலாம். பிறகு பட்டியல் 1-லும் படம் 2-லும் காணும் தேவைப் பட்டியலும், தேவைக் கோடும் தோன்றும் சந்தர்ப்பங்களை விவரமாகக் காணலாம்.

பொருள் பரிவர்த்தனையுள்ள பொருளாதார அமைப்பில் உற்பத்தியில் சிறப்புப் பயிற்சி (அல்லது தொழில் பகிர்வு) இருக்கும். தனிப்பட்ட ஒருவனே (அல்லது குடும்பமோ) தன் பணியை அல்லது உற்பத்திசெய்யும் பொருளை விலையாக்கி, வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை முடிந்தால் போகப் பொருள் (luxuries) களையும் வாங்கிக்கொள்வான். நாட்டில் நிலவும் விலைவாசியைப் பார்த்து எப் பொருள்களை வாங்கவேண்டும். ஒவ்வொன்றையும் எந்த அளவில் வாங்கவேண்டும் என்பதை அவன் முடிவு செய்யவேண்டும். அவன் இதைத் தன் 'விருப்பத் தர வரிசை'ப்படி (scale of preference) செய்கிறான். அதாவது, பல்வேறு பண்டங்களை அவன் விருப்பப் பட்டியல்படி வெவ்வேறு அளவில் வாங்குகிறான். அவனுடைய வாங்கும் சக்தியும் விலை வாசியும் இதைப் பார்க்கின்றது. ஒருவன் தன் பணத்தைச் சிறந்தமுறையில் செலவுசெய்து பயனடையவேண்டும். இல்லாவிடில் அவன் இறுதி அணாவைச் செலவு செய்தபிறகு ஏதேனும் ஒன்றை மிகுதியாகவோ அல்லது குறைவாகவோ வாங்கிவிட்டதாகக் கருதி வருந்துவான்.

அதாவது, அவன் இறுதிநிலையில் பண்டங்களைத் தேர்ந்தெடுக்கின்றான். வாங்குதல் முடியும் படிவத்தில், மேலும் ஓர் அணாவுக்கு அரிசி வாங்கி அதிகமான இறுதிநிலைப் பயனை (marginal utility) அடையலாமா அல்லது பால் வாங்கி அதிகமான இறுதிநிலைப் பயனைப் பெறலாமா என்பதை ஆராய்கின்றான். அவனுடைய

முடிவு சரியாக இருந்தால், அவன் பல்வேறு பொருள்களுக்காக இறுதியில் செலவழித்த ஓர் அணு எல்லாச் செலவுகள் மூலம் ஒரே பயனைக் கொடுக்கும். எனவே, ஓர் அணுப் பெறுமானமுள்ள பால் அளிக்கும் இறுதிநிலைப் பயனும் சமமாகவே இருக்கும். அரிசி அளிக்கும் இறுதிநிலைப் பயனும் ஓர் அணுப் பெறுமானமுள்ள உதாரணமாகச் செலவை முடிக்கும்பொழுது ஒருவன் அரிசி வாங்குவதில், மேலும் ஓர் அணுவைச் செலவு செய்யலாம். விளையாட்டுச் சாமான் வாங்குவதிலும் மேலும் ஓர் அணுவைச் செலவு செய்யலாம். இரு பொருள்களும் அளிக்கும் இறுதிநிலைப் பயன் சமமாக இருக்கும். ஆனால், அரிசி அளிக்கும் மொத்தப் பயன், விளையாட்டுப்பொருள் அளிக்கும் மொத்தப் பயனைவிட மிகுதியாக இருக்கும். பரம ஏழையானவன் விளையாட்டுப் பொருள் வாங்கவே முடியாது.

விலை எதிர்பார்த்ததைவிடத் தாழ்வாக இருந்தாலோ அல்லது ஏதேனும் ஒரு காரணத்தினால் இறங்கினாலோ என்ன விளைவு ஏற்படும்? அரிசி வாங்குவதற்காகச் செய்யும் செலவு அதற்காக ஒதுக்கிய தொகையைவிடக் குறைவாக இருக்கும். (இறுதிநிலைச் செலவு மட்டுமல்லாமல் மொத்தச் செலவும் குறைவாக இருக்கும்.) எனவே, வாங்குவோன் இச் செலவுக்காக ஒதுக்கிய பணத்தில் சிறிதளவைக் கையில் கொண்டிருப்பான். மேலும், சிறிதளவு அரிசி வாங்குவதற்கு அல்லது மற்றப் பொருள் வாங்குவதற்கு இதைச் செலவு செய்யலாம். அல்லது விருப்பத்தர வரிசைப்படி இதைச் சேமிக்கலாம். அவன் இத் தொகையைச் சேமிக்க விரும்பினால், பின் ஒரு நாள் இதைச் செலவு செய்ய விரும்புகிறான் என்று நாம் புரிந்து கொள்ளவேண்டும். மார்க்கெட்டில் வெவ்வேறு தேவைகளையும் விருப்பங்களையும் உடையவர்கள் இருந்தால் (அதாவது அவர்கள் விருப்பத்தர வரிசை வேறுபட்டிருப்பின்) சிலர் மிகுதியான அளவு அரிசியை வாங்குவர். வேறு சிலர் குறைந்துசெல் பயன் விதிப்படி (principle of diminishing marginal utility) வேறு பண்டங்களை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வாங்குவர். சாதாரணமாக ஒருவன் மேலும் மேலும் மிகுதியாக ஒரு பொருளைக் கொண்டிருந்தால், அவன் அதில் கொண்டிருக்கும் விருப்பம் குறையும். இதுவே குறைந்துசெல் பயன் விதி. நம் உதாரணத்தில் அரிசியின் இறுதிநிலைப் பயன் (marginal utility) குறைகின்றது. ஆகையால் மற்றப் பொருள்களின் இறுதிநிலைப் பயன் மிகுதியடைகின்றது. ஆகையால் இறுதிநிலையில் எல்லாப் பொருள்கள் மூலம் சமமான பயன் அடைய ஒருவன் தன் செலவைச் சற்று மாற்றிக்கொள்ளவேண்டும். அவன் மற்றவைகளைவிட அரிசிக்காக அதிகம் செலவு செய்வான். அவன் விருப்பத்தர வரிசைப்படி சிறிது அரிசியும் கூடுதலாக வாங்குவான்.

தேவைக்கோடு ஏன் வலப் பக்கம் சரிகின்றது என்பதைக் குறைந்து செல் பயன் விதி எடுத்துக்காட்டுகின்றது. (அதாவது குறைந்த விலையில் தேவை மிகுதியாக இருக்கின்றது.) தேவைக்கோடு வலப் பக்கம் வளைவதோடல்லாமல் சரிந்தும் வருகின்றது. விலை ஒரு நிலையை அடைந்த பிறகு (நமது படத்தில் அணு 8) எந்த அளவு மேலும் அது குறைந்தபோதிலும், தேவை மிதமையடைய வில்லை என்பதைப் படம் 1 எடுத்துக்காட்டுகின்றது. தேவைக் கோடு பூரணமாக நெகிழ்ச்சியற்றதாகி (inelastic) விடுகின்றது. Y அச்சின் இணைத்தொலைவுக் கோடாக (parallel line) அது கீழே இறங்குகிறது. எந்த அளவு விலை தாழ்ந்தபோதிலும் ஒருவனும் மார்க்கட்டில் மேலும் அதிகமாக அரிசி வாங்க விரும்பவில்லை என் பதை இது காட்டுகிறது. உண்மையில் இதே நிலை ஏற்படாமல் இருக்கலாம். விலை இறங்க இறங்கத் தேவை மிகுதியடையலாம்.

சாதாரணமாகத் தேவைக்கோடு ஏன் வலப் பக்கம் சரிகின்றது என்பதை இதுவரை விளக்கினேம். விலை இறக்கத்தை அடுத்துத் தேவை மிகுதியடையும் வீதத்தை எது நிர்ணயம் செய்கின்றது என்பதை இப்பொழுது பார்க்கவேண்டும்.

விலை (சிறிது) மாறுவதை அடுத்துத் தேவை மாறும் வீதத்தைத் தேவையின் நெகிழ்ச்சி (elasticity) என்று பொருளியல் நடையில் கூறுவர். விலை மாற்றத்தின் சதவீதத்தைக்கொண்டு தேவை மாற்றத்தின் சதவீதத்தை வகுக்கும்பொழுது, நாம் தேவையின் நெகிழ்ச்சியைக் கணக்கிடுகிறோம். இதை அட்டவணை ஒன்றின் நான்காவது பத்தி காட்டுகின்றது. தேவை மாறுவதில் உள்ள விகிதம் விலைமாற்றத்தின் விகிதத்தைவிட அதிகமாக இருப்பின், தேவை 'நெகிழ்ச்சியுடையது' (elastic) என்று கூறுகிறோம். தேவை மாற்ற விகிதமும் விலை விகிதமும் சமமாக இருப்பின், தேவை நெகிழ்ச்சி சமநிலையில் (unity) இருக்கின்றது என்று கூறலாம். தேவை மாற்ற விகிதம், விலை மாற்ற விகிதத்தைவிடக் குறைவாக இருந்தால், தேவை நெகிழ்ச்சியற்றதாய் (inelastic) இருக்கின்றது என்று கூறலாம். நெகிழ்ச்சிபற்றிய கருத்துக் கொள்கை வகுப்பதில் எவ்வளவு முக்கியமாக இருக்கின்றது என்பதைக் காட்ட உண்மை யான உதாரணங்களைக் கொடுப்போம். தேவைக்கோடு, பட்டியல் அளிப்புக்கோடு, பட்டியல் முதலிய எல்லாவற்றுக்கும் இக்கருத்துப் பொருந்தும். படம் ஒன்றில், கோட்டுச் சரிவின் மாறுதல் நெகிழ்ச்சி யின் மாறுதலைக் காட்டுகின்றது.

தேவைப்பட்டியலையும், கோட்டையும் உற்று நோக்கவும். 20-லிருந்து 16 வரை உள்ள விலைகளை ஒட்டி தேவை மிகவும் அதிகரிப்பதால், கணிசமான அளவு நெகிழ்ச்சி இருக்கின்றது.

இது ஒன்றைவிட (சமநிலை) அதிகமாக இருக்கின்றது. தேவை நெகிழ்ச்சி யுடையதாக இருக்கின்றது. மொத்தச் செலவு (பட்டியல் 1 பத்தி 3) அதிகரிக்கின்றது. வரைபடத்தில் தேவைக் கோடு வலப்புறம் செங்குத்தாகச் சரிகின்றது. 15 முதல் 11 வரை உள்ள விலைகளில் ஒவ்வொரு விலைமாற்றத்திலும் தேவை அதிகரிக்கின்றது. ஆனால், இவ்வதிகரிப்பின் வீதம் முன்பைவிடக் குறைவாக இருக்கின்றது 180-ல் நெகிழ்ச்சி சமநிலையில் இருக்கின்றது; எனவே, மொத்தச் செலவு மாறுமல் ஒரே நிலையில் இருக்கின்றது. கோடு முன்பைவிடக் குறைவான அளவு செங்குத்தாக வலப்புறம் சரிகின்றது. இறுதியாக விலை 10 முதல் 6 வரை நெகிழ்ச்சி சமநிலையைவிடக் குறைவாக இருக்கின்றது. கோடு திடீரென்று கீழே சரிகின்றது. இறுதியில் OY அச்சுக்கு இணைத்தொலைவுக் கோடாக மாறுகின்றது. அதாவது விலை 8 முதல் 6 வரை தேவை அறவே நெகிழ்ச்சியற்றதாக இருக்கின்றது; குறைந்த விலையில் அதிகமான அளவு தேவையாகவில்லை. இதேபோல் 20 அணாவுக்கு மேல் தேவைக்கோடு அறவே நெகிழ்ச்சியற்றதாக இருக்கின்றது. விற்பனையாளர்களிடம் சரக்கு இல்லாதது இதற்குக் காரணமாக இருக்கலாம். அளிப்பதற்குச் சரக்கு இல்லை. ஆனால், தேவைக்கோட்டின் மற்றப் பகுதிகளில் விலை இறங்கினால், அளிப்பு குறைகின்றது. விலை 6 அணாவாக இருக்கும்பொழுது, விற்பனையாளர்கள் தம் சரக்கு முழுவதையும் விற்பனை செய்யமாட்டார்கள். இதைவிடச் சாதகமான விலையை வேறு ஒரு சமயம் அல்லது வேறு ஒரு மார்க்கட்டில் பெறலாம் என்று அவர்கள் நம்பலாம்.

விலைமாற்றத்தை ஒட்டி ஏற்படும் தேவை, அளிப்பு மாற்றங்களை—நெகிழ்ச்சியை—இதுவரை பார்த்தோம். வருமானத்தில் ஏற்படும் மாறுதல்களை ஒட்டி ஏற்படும் விளைவுகளும், ஒருவகை நெகிழ்ச்சியாகும். அதாவது தேவையில் விலை நெகிழ்ச்சியும் (price elasticity), வருமான நெகிழ்ச்சியும் (income elasticity) இருக்கின்றன.

தேவையின் விலை நெகிழ்ச்சியும், வருமான நெகிழ்ச்சியும், அளிப்பின் நெகிழ்ச்சியும் ஒரு முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கின்றன. நுகர்வோருக்கும் உற்பத்தியாளர்களுக்கும், வரி விதிக்கும் அரசுக்கும் இது மிக முக்கியமான கருத்தாக இருக்கின்றது. உதாரணமாக, முதல் போர்க்காலத்தில் ஹென்றி ஃபோர்ட் மோட்டார் காரின் விலை குறைந்தால், அதற்கு ஒரு பரந்த மார்க்கெட்டு ஏற்படும் என்று எதிர்பார்த்து அதன் விலையைக் குறைத்தார். காரை ஒருதரப்படுத்தி (standardizing), விலையைக் குறைத்து ஏராளமான இலாபம் பெற்றார். ஆகையால் தேவைக்கோடுகளின் நெகிழ்ச்சி பற்றிய ஆராய்ச்சிகள் பல நடந்திருக்கின்றன.

முன்னேற்றமடைந்த நாடுகளுக்கும் வளர்ச்சியடையாத நாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளுமட்டும் இங்குக் காண்போம்.

சமநிலையைவிடக் குறைவான நெகிழ்ச்சி (தேவை நெகிழ்ச்சி) உள்ள பொருள்களையும் பணிகளையும் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் (necessaries) என்று கூறலாம். வருமானம் அல்லது விலை உயர்ந்தாலோ அல்லது தாழ்ந்தாலோ தேவையில் ஏற்படும் குறைவு அல்லது மிகுதி குறைவாகவே இருக்கும். விலை அல்லது வருமான மாற்றத்தின் விகிதத்தைவிடத் தேவை மாற்றத்தின் விகிதம் குறைவாகவே இருக்கும்.

முன்னேற்றமடைந்த நாடுகளில் பெரும்பாலானோர் தம் அடிப்படைச் சமூக, உளம்பற்றிய தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளமுடியும். அவர்கள் தமக்கு வேண்டிய குறைந்தபட்ச உணவு, வீட்டுவசதி, எரிபொருள், வீட்டுக்கு வேண்டிய பொருள்கள், பொழுதுபோக்கு முதலியவற்றை சாதாரணமாகப் பெறமுடியும்.[1] இதுபோன்ற பொருள்களின் தேவைப்பொருள்களாக (convential mecessaries) இருப்பவை விலை குறைந்தாலோ கூடினாலோ, தேவையாகும் பொருளின் அளவு மாறுது. ஆனால், பொழுதுபோக்கு இதற்கு ஒரு விதிவிலக்காகும். மந்த காலத்தில் விலைகள் உயர்ந்தால் உயர்ந்தரகப் பொருளுக்குப் பதிலாகத் தாழ்ந்தரகப் பொருள்கள் வாங்கப்படலாம். எனவே, மேலே குறிப்பிட்ட பொருள்களின் வருமான நெகிழ்ச்சியும், விலைநெகிழ்ச்சியும் சம நிலையைவிடக் குறைவாக இருக்கின்றது.

ஆனால், முன்னேற்றமடைந்த நாடுகளின் விலைகள் குறைந்தாலோ அல்லது வருமானங்கள் உயர்ந்தாலோ, மோட்டார்கார்கள், டெலிவிஷன் செட்டுகள், உயர்ந்த விலையுள்ள உணவுப் பண்டங்கள், பொழுதுபோக்கு வசதிகள் முதலியவை அதிகமாகத் தேவையாகும். போகப் பொருள்களின் (luxuries) தேவை நெகிழ்ச்சி சமநிலையைவிட உயர்ந்ததாக இருக்கும்.

ஏழ்மை நிலையில் உள்ள நாடுகளில் சில பொருள்கள் சம நிலையைவிட, அதிகமான வருமான நெகிழ்ச்சியையும் விலை (தேவை) நெகிழ்ச்சியையும் கொண்டிருக்கும். இத்தகைய தேவை நெகிழ்ச்சி கொண்டிருக்கும் பொருள்கள் முன்னேற்றமடைந்த நாடுகளில் வேறுபட்டவையாக இருக்கும்.

இருந்தபோதிலும் தேவைப் பொருளுக்கும் (necessaries), போகப் பொருளுக்கும் மேலே நாம் கொடுத்திருக்கும் விளக்கம்

[1] தாழ்த்தப்பட்ட பகுதியில் வாழ்வோர் மிகுதியான வேலையின்மையினால் தவிப்பவர் நீங்கலாக மற்றவர்களுக்கு இது பொருந்தும்.

சரியானதே. ஆனால், முன்னேற்றமடைந்த நாடுகளில் தேவைப் பொருள்கள் என்று கருதப்படுபவை பல ஏழை நாடுகளில் போகப் பொருள்களாக இருக்கின்றன.

இந்த அம்சத்தில் வளர்ச்சியடையும் நாடுகளின் நவீனப் பகுதி முன்னேற்றமடைந்த நாடுகளை ஒத்திருக்கின்றது. ஆனால், மக்கள் தொகையில் 5 அல்லது 6 சதவீதத்தினரே நவீனப் பகுதியில் இருக்கின்றனர்.

பல கிராமாந்திரப் பகுதிகளில் வாழ்வோர் பயன்படுத்தும் பொருள்களைப் பார்க்கும்போது, அவற்றுள் சமநிலைக்கும் குறைவான தேவை நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும் பொருள்கள் (அதாவது மிகவும் அவசியமானவை) மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்றன. முக்கியமான உணவுத் தானியத்தில் குறைந்தபட்ச அளவு, ஒன்று அல்லது இரண்டு கஜம் தாழ்ந்த ரகத்துணி, சில சுவையான பொருள்கள், ஒரு போர்வை இவைகளைத் தவிர வேறு இன்றியமையாத பொருள்களை அவர்கள் பயன்படுத்துவதில்லை. ஆங்காங்குக் கிடைக்கும் பொருள்களைக்கொண்டு அவர்கள் தம் வீடுகளை அமைத்துக்கொள்கின்றனர். சாணத்தை எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர்.[1] (நிலத்திற்கு வேண்டிய எருவை அவர்கள் வேறுவிதத்தில் பயன்படுத்துவதால் நிலத்திற்குப் போதிய எரு கிடைப்பதில்லை.) காய்கறிகளையும் அவர்களே உற்பத்தி செய்துகொள்கின்றனர். மிலியன் கணக்கான விவசாயிகளும் நகரப் புழக்கடையில் வாழ்வோரும் பரம ஏழைகளாக இருக்கின்றனர். விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய பண்டங்களை அவர்கள் வாங்கமுடியாது. தம் உடல் நலத்தையும் திறனையும் காப்பாற்றிக்கொள்வதற்குவேண்டிய பொருள்களைக்கூட அவர்கள் வாங்கமுடியாது.[2] எனவே, விலைகள் குறையும்பொழுது இப் பொருள்கள் விருப்பத்தர வரிசையில் தலைதூக்குகின்றன; முன்பைவிட அவை மிதமியாக வாங்கப்படுகின்றன. ஆனால், வருமானம் அதிகரிக்காவிடில், இப் பொருள்கள் அதிகமாக விற்பனையாகா. ஏனெனில், அவர்களிடம் அவைகளை வாங்குவதற்கு வேண்டிய உபரிப்பணம் இல்லை. ஒரு பொருளின் விலை இறங்குவதால் அவனிடம் இருக்கும் உபரிப்பணத்தை அவன் பல பொருள்கள் வாங்குவதற்குச் செலவு செய்வான். ஆகையால் புதிய மலிவான பொருளின் தேவை நெகிழ்ச்சி சமநிலையைவிடக் குறைவாக இருக்கும்.

[1] ஒரு விவசாயிக்கு உழவுக்கு மாடுகள் வேண்டும். அவன் அடிக்கடி அவைகளை வாங்கவேண்டும்.

[2] உலகமக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு போதிய உணவுச்சத்துகளை உட்கொள்ளவில்லை என்று. எஃப்.ஏ.ஓ F. A. O. 'Third World Survey' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கின்றது.

வருமானம் உயர்ந்தால் என்ன நிகழும் என்பதை நாம் சற்று வேறுபட்ட முறையில் ஆராய்ந்தறிதல் வேண்டும். ஆனால், முடிவு இதே மாதிரி இருக்கும். கிராமாந்திரப் பகுதியில் உள்ள மக்களின் வருமானம் சாதாரணமாக உயர்வதில்லை. விலைகள் குறைந்தால் தான் அவர்கள் வருமானம் மிகுதியடையும். மிகக் குறுகிய காலத்தில் விலைகள் உயர்வதற்குமுன்பு அவர்கள் வருமானம் உயர்ந்தால் கூட, இதன் பயன அவர்கள் பெறமுடியாது. உணவுப் பொருள்களின் தேவை அதிகரிக்கும். அதன் அளிப்பு நெகிழ்ச்சியற்றதாக இருப்பதால் விலை உயரும். இதன் விளைவாகத் தேவையின் வருமான நெகிழ்ச்சி சமநிலையைவிடக் குறைவாக இருக்கும்.

விலைகள் உயர்ந்தால் அல்லது வருமானம் குறைந்தால் ஏழைகள் பலர் குறைவான உணவை உட்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றனர்; கந்தைத் துணிகளையே பயன்படுத்துவர்—ஆனால், அவர்களுடைய துய்ப்புநாட்டம் (propersity to consume) மிகுதியாக இருப்பதால், ஏதேனும் ஒரு பொருளின் குறையும் தேவை நெகிழ்ச்சி சமநிலையைவிடக் குறைவாக இருக்கும்.

மேல்நாடுகளில் இவர்களைவிடச் சற்று உயர்ந்த நிலையில் இருப்பவர்கள், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருப்போர் எவ்வாறு பாதிக்கப்படுவர் என்பதை, இதே முறையில் ஆராய்ந்தறிதல் வேண்டும். ஆனால், விலைகள் குறையும் பொழுது அல்லது வருமானம் உயரும்பொழுது இவர்கள் வாங்கும் பொருள்கள் வேறுபட்டவையாக இருக்கும். உதாரணமாக இவர்கள் சைக்கிள் வண்டிகளை வாங்கலாம் அல்லது பஸ் கட்டணத்திற்காக அதிகமான தொகையைச் செலவு செய்யலாம். இது போன்ற பொருள்களுக்குத் தேவையின் நெகிழ்ச்சி சமநிலையைவிட மிகுதியாக இருக்கும்.

ஏழையான நாடுகளில் பொதுவாக விலைகள் இறங்கும்பொழுது அல்லது வருமானம் உயரும்பொழுது, தானியங்கள் மிகுதியாகத் தேவையாகும்; பொதுவாக அதிகமான அளவு உணவு தேவையாகும். எனவே, இத்தகைய நாடுகளில் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டிய அவசியம் இருக்கின்றது என்ற கருத்து வலிமை பெறுகின்றது.

எளிய முறையில் விரைவில் உற்பத்தியாகக்கூடிய பொருள்கள் அளிப்பு நெகிழ்ச்சி கொண்டிருக்கிறது. தேயிலை, ரப்பர் போன்ற பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கச் சில ஆண்டுகள் செல்லும். இவற்றின் அளிப்பு நெகிழ்ச்சியற்றதாக இருக்கின்றது. சில பருவங்களில் உற்பத்தியாகும் பண்டங்கள் ஓராண்டிலோ அல்லது

அதைவிட நீண்ட காலத்திலேயோ, நெகிழ்ச்சியற்றதாக (அளிப்பில்) இருக்கும்.

விவசாயிகள் விலை மாற்றத்திற்குத் தகுந்தாற்போல் தம் அளிப்பை மாற்றிக்கொள்ள எவ்வளவு வேண்டுமானாலும் தயாராக இருந்தபோதிலும், 'தொழில் நுணுக்கக் காலம்வரை' (technical production period)—அதாவது விதை விதைக்கும் பருவத்திலிருந்து அறுவடையாகும் பருவம்வரை — அவர்கள் உற்பத்தியைப் பெருக்கமுடியாது. விவசாயப் பொருள்களின் அளிப்பு நெகிழ்ச்சியற்றதாக இருத்தலுக்கு, விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கத் தயாராக இருப்பதே காரணம் என்று கருதக் கூடாது. கீழ்க்கண்டவையே இதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன :

(i) மற்றச் செலவுகளுடன் ஒப்பிடும்பொழுது நிலையான செலவு அதிகமாக இருக்கின்றது. உதாரணமாக, நீர்ப்பாசன வசதி, உழவு மாடுகள் முதலியவைகளுக்காக மிகுதியான செலவு செய்தல் வேண்டும்.

(ii) விலை குறையும்பொழுது விவசாயி சில நடைமுறைச் செலவுகளை (current cost)—அதாவது அவனுடைய வருமானத்தையே எளிதில் குறைக்கமுடியும். எனவே, தன் செலவு கட்டுப்படியாக வேண்டும் என்ற காரணத்திற்காக, உற்பத்தியைப் பெருக்கவோ அல்லது குறைக்கவோ வேண்டா.

(iii) விலை குறையும்பொழுது விவசாயிகள் ஒப்பந்தமூலம் செயற்கைமுறையில் உற்பத்தியைக் குறைப்பதில்லை.

(iv) விவசாயத் தொழிலாளர்கள் இடப்பெயர்ச்சியற்று (immobility) இருப்பதால், வருமானம் தாழ்வடையும்பொழுது அவர்கள் வேறு தொழிலை நாடுவதில்லை.

விவசாயப் பொருள்களின் அளிப்பு நெகிழ்ச்சியற்றதாக இருக்கின்றது. இப் பொருள்களின் விலைகள் அதிகமாக மாறுவதற்கு இது ஒரு காரணம். ஆனால், பொறிசெய் பொருள்கள் இந்த நிலையில் இல்லை. இப்பொருள்களின் அளிப்பை விரைவில் அதிகரிக்கலாம்; அல்லது வேண்டுமானால் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கி (கூலி கொடுப்பதை நிறுத்தி) அடக்கச் செலவைக் குறைக்கலாம்.

உலகில் விவசாயப் பொருள்களுக்கு ஏற்படும் தேவை மற்றப் பொருள்களின் தேவையைவிட நெகிழ்ச்சியற்றதாக இருக்கின்றது. இதுவும் விவசாயப் பொருள்களின் விலையின் மாறுதல்களுக்கு ஒரு காரணமாகும்.

பட்டியல் 1-ல் கண்ட விலைகளை ஒட்டி ஏற்பட்ட தேவை மாற்றத்தைக் கீழ்க்கண்ட முறையில் விளக்கலாம். ஆனால், பட்டியலில் கொடுக்கப்பெற்றிருக்கும் விலைகளும், நிலையும் நாம் கற்பனை செய்துகொண்டவை என்பதையும், உண்மை சற்று வேறுபட்டிருக்கலாம் என்பதையும் மறக்கலாகாது.

ஓர் அலகின் விலை 20 அணாவாக இருக்கும்பொழுது ஒரே ஒருவன் வாங்கத் தயாராக இருப்பான். உதாரணமாக, இப் பொருள் அரிசியாக இருப்பின், அதை வாங்கவிரும்பும் மற்றவர்கள் வேறு தினைகளை வாங்கலாம். விலை குறையும்பொழுது அதிகமானவர்கள் பொருளை வாங்குவார்கள். மேலும், ஒவ்வொருவரும் முன்பு வாங்கியதைவிட அதிகமான அளவு அதை வாங்குவர். அரிசியின் இறுதிநிலைப் பயன், இப்பொழுதும் அதிகமாக இருப்பதால் வாங்குவோர் மொத்தச் செலவு 180 அணாவாகும்வரை (பட்டியல் 1-ஐப் பார்க்கவும்) அதை வாங்குவார்கள். விலை அணா 10 ஆக இருக்கும்பொழுது அரிசியின் இறுதிநிலைப் பயன் பலருக்குக் குறைய ஆரம்பித்துவிடும். விலை குறைவதால் ஏற்படும் இலாபத்தைக் கொண்டு வேறு பொருள் வாங்குவார்கள். ஆகையால் அரிசிக்குத் தேவை மிகுதியடையும்போதிலும், அதற்காகச் செய்யும் செலவு குறையும். இறுதியில் விலை அணா எட்டாகவோ அல்லது அதைவிடக் குறைவாகவோ இருக்கும்பொழுது முழுத்திருப்தி ஏற்படுகின்றது. (தேவையாகும் அலகுகளின் எண்ணிக்கை 18) எனவே, விலை குறைந்தபோதிலும் தேவை மிகுதியடையாது.

இங்கு இரண்டு எச்சரிக்கைகளை மீண்டும் குறிப்பிடவேண்டும். முதலில் உண்மையாகப் பட்டியல் 1-ல் கண்டபடி நீண்ட தேவை, அளிப்புப் பட்டியல்களைத் தயார் செய்யமுடியாது. இரண்டாவதாக வாங்குவோருள் சேர்ந்துள்ள ஒவ்வொருவனும் தன் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நடக்கின்றான். (அதாவது தன் வாங்கும் சக்திக்கும், விருப்பத்தர வரிசைக்கும் ஏற்றவாறு) விலைகள் மாறும்பொழுது, கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ வாங்குகிறான். தேவைப்பட்டியல் எல்லோருடைய செயலின் விளைவைக் காண்பிக்கின்றது. இதே விளக்கத்தைச் சிறு மாறுதல்களுடன் அளிப்புப் பட்டியலுக்கும் கோட்டுக்கும் பொருந்தவைக்கலாம். அடுத்துவரும் விளக்கத்தில் தேவை, அளிப்பு, விலை முதலியவற்றைப் பாதிக்கும் அடிப்படைச் சக்திகள்பற்றிய விவரங்களைக் காணலாம். அளிப்புபற்றிய மேலும் விவரமான விளக்கத்தையும் காணலாம். நாலாவது அதிகாரத்தில் மேலும் அதிகமான விவரங்களைக் காணலாம்—இவ் வதிகாரம் 'தொழிலின் பொருளாதாரப் பிரச்சினைகள்' பற்றியது. ஆனால், தேவை, அளிப்பு, விலை முதலியவற்றைப் பாதிக்கும் அடிப்படைச் சக்திகளை ஆராய்வதற்குமுன்

குறுகியகாலத்தில் விலை நிர்ணயமாவதைப்பற்றிச்சில வார்த்தைகள் கூறவேண்டும்.

C. குறுகிய காலத்தில் மார்க்கட்டு விலை

வர்த்தகம் நடைபெறுவதற்கு, அதாவது பொருளை வாங்குவோர் அதை வாங்கவும், விற்போர் விற்பனை செய்யும் ஒரு விலை நிர்ணயமாகவேண்டும். சுயநலம் (அல்லது 'பகுத்தறிவு' என்றழைக்கப்படுவது) தூண்டும் ஒருவனது செயல் ஏற்படுத்தும் பேரங்கள், மற்ற வியாபாரிகளுடைய பேரங்களைவிடப் பாதகமாக இருக்க அனுமதிக்காது. எனவே, நாம் முன் விளக்கிய நிறைவுப் போட்டி நிலவுவதற்கு வேண்டிய சூழ்நிலை இருந்தால், குறுகிய கால மார்க்கட்டிலும் ஒரே ஒரு விலைதான் இருக்கமுடியும். இந்த விலை சமவிலையாக (equilibrium price) இருக்கும். ஒருவன்கூடத் தான் வாங்குவதை மிகுதியாக வாங்கவோ அல்லது விற்பனை செய்பவன் அதிகமாக விற்பனை செய்யவோ விரும்பமாட்டான். இந்த நிலை ஏற்படாவிடில் பேரம் செய்தல் ஒரு நிலைக்கு வராது. பட்டியலில் (1 ஆம் பட்டியல்) கண்டபடி விலை 12 அணுவாக இருக்கும்பொழுது, தேவையும் அளிப்பும் சமமாக இருக்கின்றது. விலை அணு 12-ஐ விடக் குறைவாக இருந்தால், சிலர் 15 அலகுகள் வாங்கத் தயாராக இருப்பார்கள். ஆனால், போதிய விற்பனையாளர்கள் இருக்கமாட்டார்கள். (விலை 13 அணுவாக இருக்கும்பொழுது விற்போர் 17 அலகுகளைக் கொடுக்கத் தயாராக இருப்பர். ஆனால், வாங்குவோர் 13·9 அலகுகளைத்தான் வாங்குவார்கள்.) ஆகையால், 12 அணு வைத்தவிர, வேறு எந்த விலையிலும் திருப்தியடையாத வாங்குவோரோ அல்லது விற்போரோ இருப்பர். விலை அணு 12 ஆக இருக்கும்போது பட்டியல் 1-லும் படம் 1-லும் காட்டியபடி (தேவைக்கோடும், அளிப்புக் கோடும் ஒன்றை ஒன்று வெட்டுகிறது) நிர்ணயமான மார்க்கட்டு விலையில் மேலும் அதிகமான பொருளை வாங்கவோ அல்லது விற்பனை செய்யவோ எவரும் விரும்புவதில்லை.

முன்னேற்றமடைந்த நாடுகளிலும், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நவீனப் பகுதியிலும், பல மார்க்கட்டுகளில் நாம் மேலே கொடுத்துள்ள விளக்கத்தைப்போல் குறுகிய கால விலை நிர்ணயமாகின்றது என்று இரண்டாவது அதிகாரத்தில் பார்த்தோம். ஆனால், இந்த நாடுகளில் சிறந்த அமைப்பற்ற பகுதியில், தினசரி அல்லது வாரச் சந்தைகளில்கூட, விலைகளைத் தடையற்ற போட்டி நிர்ணயம் செய்வதில்லை. ஒரேதரப் பொருளுக்குக்கூட, மார்க்கட்டில் ஒரு விலை நிலவுவதில்லை. சமநிலை விலை நிர்ணயமாவதே இல்லை. வாங்குவோருக்குள்ளும், விற்போருக்

குள்ளும் போட்டி ஏற்பட்டு ஒரே நாளில் ஒரு பொருளின் விலை நிர்ணயமாவதில்லை என்பதைக் கீழ்ப் பாஞ்சாலப் பகுதியின் மார்க்கட்டு ஒன்றுபற்றிய வருணனை எடுத்துக்காட்டுகின்றது. ஒருவர் கிடங்குமுன் விற்பனை நடந்துகொண்டே இருக்கிறது; சிறிது நேரத்திற்குப் பிறகு,வேறு ஒரு கிடங்கின்முன் சிலர்தம் சரக்குகளை விற்பனை செய்வதையும் பார்க்கலாம். இந்தவிதமாகப் பல்வேறு இடங்களில் வியாபாரம் நடக்கின்றது. வியாபாரம் எந்த விலையில் நடைபெறுகின்றது என்பதைப் பொது மக்கள் அறியமுடியாது. சிலர் கடன் பட்டிருக்கும் காரணத்தால் சில விலைகள் நிர்ணயமாகின்றன. பொதுவாகத் தேவையும் அளிப்பும் விலையை நிர்ணயம் செய்வதில்லை. இந்த நிலையில் நாம் மார்க்கட்டு விலையைப்பற்றி எதையும் கூறமுடியாது.

நீண்ட காலத்தில், தேவையும் அளிப்பும் மாறலாம். (அதாவது பழைய தேவை, அளிப்புப் பட்டியல்கள் மறைந்து அவைகளுடைய இடத்தில் புதிய பட்டியல்கள் தோன்றுகின்றன.) முன்னேற்ற மடைந்த நாடுகளிலும் முழு வளர்ச்சிபெருத நாடுகளின் நவீனப் பகுதியிலும் இத்தகைய நீண்டகால விலை நிர்ணய ஆராய்ச்சி சிக்கலாக இருக்கின்றது. ஒரு தேவைப் பட்டியலையும் ஓர் அளிப்புப் பட்டியலையும் ஆராய்ச்சி செய்தால் போதாது. அடிக்கடி மாறும் பட்டியல்களையும், விலை மாற்றத்தையும், நிலைமைகளையும், விலை எதிர்காலத்தில் எவ்வாறு மாறும் என்பதுபற்றிய எதிர்பார்த்தலையும் ஆராயவேண்டும். ஒரு பருவத்தில் அல்லது ஓர் ஆண்டில் தேவை, அளிப்பு, விலை முதலியவற்றைப் பாதிக்கும் சக்திகளைப் பரிசீலனை செய்யவேண்டும். இருந்தபோதிலும் போட்டி நிலவும்பொழுது குறுகியகால விலை நிர்ணயம்பற்றிய ஆராய்ச்சியைக் கொண்டு, நீண்டகாலப் போக்கை நாம் அறிந்துகொள்ள முயற்சி செய்யலாம். ஆனால், இதையே முழுவதும் நம்பமுடியாது.

D. நீண்டகாலத்தில் தேவை, அளிப்பு, விலை

நீண்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட பொருளின் விலை நிர்ணயத்தைத் தனித்த முறையில் இனிப் பரிசீலனை செய்யமுடியாது. பொருளாதார அமைப்பில் ஏற்படும் எல்லா நிகழ்ச்சிகளும் (உலக நிகழ்ச்சிகளும்கூட) விலையைப் பாதிக்கின்றன. உண்மையான கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது நாட்டில் நிகழும் எந்த நிகழ்ச்சியும் அடுத்துவரும் பல்வேறு விளைவுகளுக்குக் காரணமாக இருக்கின்றது. மேற்கூறிய நிகழ்ச்சி தன் சக்தி முழுவதையும் இழக்கும்வரை, பல விளைவுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். புதிய சமநிலையை ஏற்படுத்தும் போக்கையும் இது இறுதியில்

விலை விக்கின்றது. இதற்குள் மேலே சில மாறுதல்கள் ஏற்பட்டு நீண்டகாலப் போக்குகளைப் பாதிக்கின்றன.

தொடக்கத்தில் மார்க்கட்டில் ஏற்படும் மாறுதல்கள், தேவையிலிருந்தோ அல்லது அளிப்பிலிருந்தோ அல்லது இவ் விரண்டிலிருந்துமோ உதயமாகவேண்டும். பென்ஹாம் கூறுவதுபோல் 'ஒரு மாறுதல் தானாகவே ஏற்படுவதில்லை. சில வியாபாரிகள் குறைந்த விலையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாலோ அல்லது சிலர் உயர்ந்த விலையைக் கொடுத்துப் பொருளை வாங்கத் தயாராக இருப்பதாலோ அது ஏற்படுகின்றது.' (இதை மாற்றியும் கூறலாம். அதாவது, சில வியாபாரிகள் உயர்ந்த விலையை வேண்டலாம்; சிலர் முன்பைவிடக் குறைந்த விலையைக் கொடுக்க விரும்பலாம்.) பதிலிப் பொருள்களைப் (substitutes) பயன்படுத்துவது பற்றிய கருத்து இங்கு முக்கியமாக இருக்கின்றது. உதாரணமாக, ஒருவன் விருப்பத்தர வரிசையில் அரிசி உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கலாம். அவன் மார்க்கட்டில் நிலவும் விலையில் மேலும் ஓர் அலகு அரிசியை வாங்கத் தயாராக இருக்கலாம். ஆனால், ஏராளமான கோதுமை உற்பத்தியான காரணத்தால், அதன் விலை குறையலாம். கோதுமையை ஒரு சிறந்த பதிலிப் பொருளாக அவன் இப்பொழுது கருதலாம். ஆகையால், அவன் மேலும் அதிகமான அரிசியை வாங்காமல் கோதுமையை வாங்கலாம். அதாவது ஒரு விலையில் அரிசியின் இறுதிநிலைப் பயன், மற்றப் பொருள்களின் விலையைச் சார்ந்து இருக்கும். அரிசியும் கோதுமையும் ஒரே தேவையைப் பூர்த்தி செய்வதால் ஒன்றுக்கொன்று பதிலிப் பொருளாக இருக்கலாம். வேறு ஒரு விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் ஒரு பொருள்கூடப் பதிலிப் பொருளாகலாம். உதாரணமாக, அதிகமாக அரிசி வாங்க விரும்பும் ஒருவன் ஏதிர்பாராத அளவு குறைந்த விலையில் வாழையல் விற்பனையாவதைப் பார்த்து, அதை அரிசிக்குப் பதிலாக வாங்கலாம்.

ஆகையால், பொருள்களையும் பணிகளையும் போட்டியிடாதவை என்று வகைப்படுத்துவது கடினம். சாப்பிடக்கூடியவை என்று சில பொருள்களை வகைப்படுத்தலாம். ஆனால், நாம் சாப்பிடாத வாழையல்கூட அரிசியுடன் (மார்க்கட்டில் விற்பனையாவதை) போட்டியிடலாம். பணிகள்கூடச் சாப்பிடக்கூடிய பொருள்களுடன் போட்டியிடலாம். கல்வி, அரிசிக்குக் கோதுமை, தினை முதலிய வற்றைப்போல் நேரிடைப் பதிலியன்று; ஆனால், அவ் வரிசியுடன் மறைமுகமாகப் போட்டியிடலாம். ஒரு கிராமாந்திரத்திற்குப் புதிய பஸ் (bus) வசதி கிடைத்தவுடன், ஒருவன் தன் மகனை அடுத்த கிராமத்தில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு அனுப்பலாம். மோட்டாருக்குச் செலுத்தும் கட்டணம் அவன் விரும்பும் பொருள்களில் இப்

பொழுது சேர்ந்துவிட்டது. புதிய பஸ் வசதியைப் பயன்படுத்திக் கொண்டு சிலர் தம் குழந்தைகளுக்குக் கல்வியளிக்கலாம். உணவுக்காகவும், மற்றத் தேவைப் பொருளுக்காகவும் அவர்கள் செய்யும் இறுதிநிலைச் செலவை இதற்காகக் குறைத்துக் கொள்ளலாம். இந்த நிலையில் பலரை நாம் பார்க்கலாம். மார்க்கட்டுக்குவரும் ஒவ்வொரு பொருளும் அல்லது பணியும் மற்றவையுடன் விற்பனையாவதில் போட்டியிடுகின்றது என்று நாம் முடிவாகக் கூறலாம். ஒவ்வொருவனுடைய முன்னுரிமைப் பட்டியலிலும் இப் போட்டியைப் பார்க்க முடியாது. ஆனால், பலரிடையே இப் போட்டி ஏற்படலாம். ஆகையால் பொருள் பரிவர்த்தனை நடக்கும் ஒவ்வொரு நாட்டிலும் தொழில் பகிர்வு இருக்கின்றது. பொருளாதாரத்தின் ஒவ்வொரு பகுதியும் மற்றவையுடன் நெருங்கி இணைந்திருக்கின்றது. இறுதி நிலையிலாவது இவ் விணைப்பை நாம் பார்க்கலாம். விலை, தேவை, அல்லது அளிப்பில் ஏற்படும் மாறுதல் பொருள்களின் இறுதிநிலைப் பயனையும், தேவை அளிப்புகளின் நெகிழ்ச்சியையும் பாதிக்கும். பொதுவாகக் கூறும்பொழுது, தேவையையும் அளிப்பையும் பாதிக்கும் சக்திகள் பொருளாதாரத்தின் அளவுபற்றிய இயல்புகளாகவும் மற்ற இயல்புகளாகவும் இருக்கின்றன. கீழ்க்கண்டவை இவற்றுள் அடங்கியிருக்கின்றன: மக்கள் தொகையின் அளவும், தன்மையும், தொழிலாளர்களின் தரமும் மொத்த எண்ணிக்கையும், வருமானத்தின் அளவும் அதன் பங்கீடும், மக்களுடைய பழக்க வழக்கங்கள், மரபுகள், விருப்பங்கள்; முதலீட்டுத் தளவாடங்கள்; நாட்டில் கிடைக்கும் உற்பத்திச் சாதனங்கள் (இவை உள்நாட்டில் உற்பத்தியாகலாம்); வெளி நாடுகளிருந்து உற்பத்தியாகலாம். பல பொருள்களின் அடக்கச் செலவு, உற்பத்தித் துறையில், உயரும் விலைகள் அளிக்கும் தூண்டுதலை ஒட்டி மாறுதல்கள் ஏற்படுகின்றன. இவைகளைத் தவிர, தொழிலமைப்பில் ஏற்படும் நூதன முறைகளும், புதிய கண்டுபிடிப்புகளும், புதியதாக (ரேடியோ, டெலிவிஷன் போன்ற பண்டங்களுக்கு) ஏற்படும் மார்க்கட்டுகளும் மாறுதல்களைப் புகுத்தலாம். தேவைக்கும், அளிப்புக்கும் ஏற்படும் முதல் தூண்டுதல் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ ஏற்படலாம். வளர்ச்சியடையும் நாடுகளில் அயல்நாட்டுத் தொழில் நுணுக்கமுறைகள் கையாளப்படுவதால், உற்பத்திக்கு மிகப் பெரிய தூண்டுதல்கள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக மேலும் அதிகம் பின் தங்கிய நாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேலை நாட்டு முறைகளைப் பின்பற்றுகின்றனர். வளர்ச்சியடையாத நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்க்க மேல் நாட்டு ஆராய்ச்சிமுறைகளை மாற்றியமைக்கவேண்டிய தேவை இருக்கும்பொழுது (அமைப்பற்ற பகுதிக்காவது இஃது வேண்டும்) இவ் வாராய்ச்சி முறையை அப்படியே கீழ் நாடுகளில் பயன்

படுத்துவது மேலே கூறியதை ஒத்து இருக்கின்றது. மேல் நாட்டுப் பொருளியல், சிறந்த அமைப்பற்ற, தன்னிறைவு பெற்ற ஏழையான பகுதிக்குக்கூடப் பயன்படக்கூடியதாக இருக்கின்றது. கொள்கை வகுக்கும்பொழுதுமட்டும் இரு நாடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளையும், கீழ் நாட்டு மக்களுடைய மன நிலையையும் நாம் சரிவரப் புரிந்துகொள்ளவேண்டும்.

உதாரணமாக இந்திய பாகிஸ்தானிய விவசாயினுடைய (அல்லது அவனுடைய குடும்பத்தினுடைய) தேவையைக் கீழ்க் கண்டவை நிர்ணயம் செய்கின்றன. (a) அவனுடைய சொத்தின் அளவு, மதிப்பு, அவனுடைய உற்பத்தி, அவன் ஆற்றும் பணி, அவன் விற்பனை செய்யக்கூடிய உபரி உற்பத்தி எவ்வளவுக் கெவ்வளவு மிகுதியாக இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் பொருளாதார அமைப்பின் மற்றப் பகுதியுடன் நெருங்கிய தொடர்புகொள்வான். மற்றப் பகுதிகளைச் சார்ந்து வாழவேண்டிய அவசியமும் அவனுக்கு ஏற்படாது. (b) அவனுடைய விருப்பத் தர வரிசை, அவனுடைய பற்பல விருப்பங்களின் வலிமை பற்பல பொருள்கள் எந்தெந்த அளவுகளில் தேவையாகின்றன என்பது (இதில் பணத்தையும் சேமிப்பையும் முதலீட்டையும் அல்லது பொருளை அப்படியே குவித்தலையும் (hoarding)—இது சிலருக்குத் தான் பொருந்தும்—சேர்க்கவேண்டும்) அவனுடைய விருப்பத்தர வரிசை—உதாரணமாக அவன் சடங்குகளுக்காக மிகுதியான தொகையைச் செலவு செய்தல், அவன் பயன்படுத்தும் உணவுப் பண்டத்தின் விலை உயர்ந்தால், அந்த இடத்தில் சிறந்த பதிலிப் பொருள்களைப் பயன்படுத்த மறுப்பது—இவைகளெல்லாம் மேலை நாட்டுப் பொருளியலாருக்குப் பகுத்தறிவுக்குப் புறம்பான செயல் களாகத் தோன்றலாம். ஆனால், இவை முக்கியமானவை ஆகை யால் இவைகளைப் புறக்கணிக்கலாகாது. (c) நடைமுறையில் வாங்கும், விற்பனையாகும் பொருள்களின் தனி விலையும் (absolute price) தொடர்புள்ள விலைகளும்.

பல்வேறு வகுப்பினருடைய நுகர்வின் நாட்டத்தையும் (propensity to consume), வருமானத் தேவை நெகிழ்ச்சியையும் (income elasticity of demand) நாம் அறிந்தால் மேலை நாட்டுப் பழைய முறைப் பொருளியலைக் கொண்டு கீழ்க்கண்டவற்றைக் கணக்கிடலாம். ஒவ்வொருவனுக்கும் கிடைக்கக்கூடிய சராசரி உணவுத் தானியத்தின் அளவு மாறினால், அதன் விலைவாகப் பல பொருள்களின் தொடர்புள்ள விலைகளும் தேவையும் எவ்வாறு மாறும் என்பதைக் கணக்கிடலாம். (ஆனால், புள்ளி விவரங்கள் கிடைக்காததால் இதை அளக்கமுடியாது.)

உண்மை வருமானம் (real income) (விலையுயர்வைச்சரிகட்டிய பிறகு ஏஞ்சியுள்ள வருமானம் உயரும்பொழுது முன்பு சேமிக்காதவன் இப்பொழுது தம் உபரி வருமானம் முழுவதையுமோ அல்லது அதில் ஒரு பகுதியையோ சேமித்தலே நுகர்வு நாட்டம் என்று அழைப்பர். முன்பு வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமித்தவர், இப்பொழுது அதிகமாகச் சேமிப்பதையும் நுகர்வு நாட்டம் என்று கூறலாம். வருமானத் தேவை நெகிழ்ச்சி என்பது, இக் கருத்துடன் தொடர்புகொண்ட ஒரு கருத்தாகும். ஆனால், இது சேமிப்பை விளக்காமல் தேவையை விளக்குகின்றது. விலைத் தேவை நெகிழ்ச்சியை நாம் முன்பு விவரமாகப் பார்த்தோம். உண்மை வருமானம் மிகுதியடைவதால் அதன் விகிதப்படி தேவை அதிகரிப்பதை நாம் வருமானத் தேவை நெகிழ்ச்சி என்று கூறுகிறோம். விலை மாற்றத்தினால் ஏற்படும் மாற்றத்தை வருமானத் தேவை நெகிழ்ச்சி என்று கூறுவதில்லை. எந்தப் பொருளாதார அமைப்பிலும் நுகர்வின் நாட்டமும் வருமானத்தேவை நெகிழ்ச்சியும் பல்வேறு வகுப்பினருடைய வருமானத்தைச் சார்ந்திருக்கும். இவை ஏழை நாடுகளுக்கும் முன்னேற்றமடைந்த நாடுகளுக்கும் வெவ்வேறாக இருக்கும். எதிர்காலத்தில் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தேவையாகும் உணவுத் தானியத்தைக் கணக்கிடும்பொழுது, கீழ்க்கண்டவற்றை கவனிக்கவேண்டும்: மக்கள் தொகை உயர்வின் வீதம், அவர்களுடைய வயது. நம் நாடு எதிர்காலத்தில் எதிர்பார்க்கும் சராசரி வருமான உயர்வு, எவ்வளவு தூரம் சராசரி தேவையையும் நுகர்வையும் மிகைப்படுத்தும் (சேமிப்பு நீங்கலாக) என்பதும், குறிப்பாக உணவுத் தானியத்தின் தேவை மிகுதியடைவது இந்த விளைக்களுக்கு இந்தியாவையும், பாகிஸ்தானையும் பொறுத்தமட்டில் அளிக்கப்படும் விடை இங்கிலாந்தைப்பற்றிய விடைகளிலிருந்து மிகுதியான வேறுபாடு கொண்டிருக்கும்.

கிராமாந்திரப் பகுதியில் வசிக்கும் பரம ஏழைகள் பெரும்பாலும் தன்னிறைவு பெற்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் மிகக் குறைவான அளவே பொருள் பரிவர்த்தனையில் ஈடுபடுகின்றனர். எனவே, விலைகள் அவர்களை மிகக் குறைவான அளவே பாதிக்கும். விவசாய உற்பத்தி முறையில் சிறப்புத்தேர்ச்சி வளராததும் இப்பொழுது இருக்கும் சிறப்புத்தேர்ச்சியின் மாறுதன்மையுமே இதற்குக் காரணமாகும்.

பரிவர்த்தனைப் பொருளாதாரத்தில் (exchange economy) வேலை செய்வோரின் தலா உற்பத்தித்திறன் திரளாகப் பெருகுவதற்குச் சிறப்புப் பயிற்சி காரணமாக இருக்கிறது. சிறப்புப் பயிற்சியும் இதே விதத்தில் பெருகும். சமுதாயத்தின் மொத்த உற்பத்தி

கணிசமான அளவு பெருகும். சிறப்புப் பயிற்சி தொழிலாளியின் திறமையைப் பெருக்கும். உற்பத்திக் கருவிகள், உற்பத்திக்கு வேண்டிய சக்தி (power) இயந்திரங்கள் (அதாவது மூலதனப் பொருள்கள்) முதலியவைகளின் பயன்பாட்டில் ஒரு சிக்கனத்தை ஏற்படுத்துகிறது. (உற்பத்திக்கு வேண்டிய தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவதால், மூலதனக் கருவிகளின் பயன்பாட்டில் சிக்கனம் ஏற்படுகின்றது.) தொழிலாளி ஒரு பணியிலிருந்து மற்றொன்றுக்கு மாறுவதால் ஏற்படும் காலதாமதமும் தவிர்க்கப்படுகின்றது. போக்குவரத்துச் செலவும் குறைகின்றது. உற்பத்தி ஒருமுகப்படுவதும் வலிமை பெறுவதும் இதற்குக் காரணமாக இருக்கின்றன. இதன் விளைவாக மொத்த வியாபாரமும், வர்த்தகச் சிக்கனமும் ஏற்படுகின்றன. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சாதி அல்லது வகுப்பு முறை இருப்பதால் மற்ற வளர்ச்சியடையாத நாடுகளைவிட, அதிகமான அளவு தொழில் பகிர்வும், சிறப்புப் பயிற்சியும் மிகவும் வறுமையான பகுதிகளில்கூட இருக்கின்றன. ஆனால், இது மேலே குறிக்கப்பெற்றுள்ள நலன்களை ஏற்படுத்தவில்லை. ஏனெனில், விவசாயம், கைவேலை, பொருள்களைச் சுமந்து செல்லுதல், நீர் தூக்கிச் செல்லுதல், தெருக்களைப் பெருக்கிச் சுத்தம் செய்தல் முதலிய பணிகளைப் பல்வேறு பகுதியினர் பகிர்ந்து செய்கின்றனர்; ஒரே பொருளின் உற்பத்தியில் தொழில் பகிர்வு இல்லை. ஒரு பொருளுற்பத்தியின் பல கூறுகளை இவர்கள் பகிர்ந்துகொள்ளாமல், ஒவ்வொரு பகுதியினரும் ஒவ்வொரு பொருளுற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றனர். தனக்கு உகந்த அல்லது திறமைக்கு ஏற்ற பணியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் வாய்ப்பு ஒவ்வொருவனுக்கும் கிட்டவில்லை. உற்பத்தியும் ஒருமுகப்படுவதில்லை. ஒவ்வொருவனும் சாதி அல்லது குடும்பம் பரம்பரையாகச் செய்யும் தொழிலையே செய்கிறான். மேலும், அத் தொழிலைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்து, அதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளாமல் முழுப்பணியையும் தானே செய்கிறான். (நூற்றலும், நெய்தலும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர, மற்றெல்லாத் தொழில்களுக்கும் மேற்கூறிய உண்மை பொருந்தும்.) தொழிலிலும் விவசாயத்திலும் புராதன முறைகளே கையாளப்படுகின்றன. இவை இன்னும் மாறவில்லை. எனவே, இத்தகைய தொழில் பகிர்வு, திறமையை அதிகப்படுத்துவது, காலதாமதத்தைத் தவிர்ப்பது போன்ற சிக்கனங்களுக்குக் காரணமாக இராமல் தொழிலாளர்களின் இடப்பெயர்ச்சிக்கு (mobility) இடையூறாக இருக்கின்றது. முழுவேலையின்மையையும் விளைவிக்கின்றது. மிகுதியான மூலதனப் பொருள்களைத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதற்கும் இடையூறு இருக்கின்றது. (இதற்குப் பல்வேறு காரணங்களையோ, விளக்கங்களையோ கொடுக்கலாம்.) இங்கிலாந்தில்

தொழிற்புரட்சி நடந்துகொண்டிருக்கும்பொழுது, மிகக் குறுகிய காலத்தில் கைவேலை நலிவுற்றது. குறுகிய காலத்தில் நிகழ்ந்த இது, மிகக்கொடுமையான விளைவுகளை விளைவித்தது. இதற்கு மாறாக இந்தியாவில் கைவேலையின் நலிவுறல் நீண்ட காலத்தில் ஏற்படுகின்றது. இதைத் தடுப்பதற்கு ஒரு சக்தி இயங்குவதால், மூலதனப் பொருள்களின் பயன்பாடு மிகுதியடையாமல் இருக்கலாம். இதன் காரணமாகத் தலா உற்பத்தி, உண்மைத் தலா வருமானம் (real income per head) மற்றச் செலவுகளுக்குப் பயன்படும் உற்பத்தியின் உபரி முதலியவை மிகுதி யடையவில்லை.

மரம், தந்தம், உலோகம் முதலியவைகளில் திறமையுடன் அற்புதமான வேலைப்பாடுகளைச் செய்யக்கூடிய தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அருமையான துணிகளையும் சேலைகளையும் நெய்யக்கூடிய திறமை உடையவர்களும் இருக்கின்றனர். ஆனால், இத்தகைய உயர்ந்தரகச் சரக்குகளை உற்பத்தி செய்யக்கூடிய வேலையாட்கள் ஒரு சில இடங்களில்தான் இருக்கின்றனர். பழைய காலத்தில் இருந்த நகரங்களில் இவர்கள் தொழில் நடத்தினர். இவர்களுடைய உற்பத்தி முறையும் மாறவில்லை.

வளர்ச்சியடையாத நாடுகளின் நல்ல அமைப்பற்ற பகுதியில் இருக்கும் இத்தகைய சிறப்புப் பயிற்சி, ஒப்பீட்டுக் கிரயத்துவத்திற்கு (principle of comparative cost) முரணாக இருக்கின்றது. பன்னாட்டு வர்த்தகத்தைப்பற்றிப் பேசும்பொழுதுதான் இத் தத்துவத்தை நாம் சாதாரணமாக ஆராய்ச்சி செய்வது வழக்கம்.[1] ஆனால், உள்நாட்டு வர்த்தகத்திலும் இது ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. கீழே விளக்கப்பெற்றிருக்கும் இத் தத்துவத்தின் உண்மை கோட்பாட்டளவில் மட்டுமன்றி நடைமுறையிலும் இருக்கும் உண்மையாகும். ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட பொருளுற்பத்தியில், முழு நிலைக் கிரய நன்மையைப் (absolute advantge) பெற்றிருக்கலாம். ஆனால், அந்தப் பொருளை ஏற்றுமதி செய்யாமல், மற்ற எந்தப் பொருளுற்பத்தியில் ஒப்பீட்டுக் கிரய நன்மை (comparative cost advantage) இருக்கின்றதோ, அதையே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும். பன்னாட்டு வாணிபம் இந்த விதியையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இதை ஓர் உதாரணத்தின் மூலம் விளக்கலாம். மூன்று இந்திய சகோதரர்கள் இருக்கின்றனர் என்று கற்பனை செய்துகொள்வோம். ஒருவர் மற்றிருவரைவிட எல்லாத் துறைகளிலும் திறமை கொண்டிருக்கின்றார். மற்ற இருவரும் சமமான திறமை கொண்டிருக்கின்றனர். நிலச் சீர்திருத்தம் அமலுக்கு வருவதற்குமுன் அவர்களுக்குச்

[1] அதிகாரம் 10-ஐப் பார்க்கவும்.

சாதகமான காலத்தில் அவர்கள் பூர்வீக சொத்தைப் பிரித்துக் கொண்டனர். அவர்களில் மிகத் திறமைசாலி, மற்றவர்களைவிடக் குறைவான அடக்கச் செலவில் பொருளை உற்பத்தி செய்வான். (இவ் வடக்கச் செலவை மனித உழைப்பின்மூலம் அல்லது பணத்தின்மூலம் கணக்கிடலாம்.) ஆனால், அவன், பால் தயிர் முதலிய வைகள் உற்பத்தி செய்வதில் முழுக் கவனத்தைச் செலுத்தினால் உயர்ந்தபட்ச இலாபத்தைப் பெறலாம் என்று அறிந்தான். தன் பொருளை இரு சகோதரர்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுத்து அவர்களிடமிருந்து தானியம், காய்கறி, முட்டை முதலிய பொருள்களைப் பெறலாம் என்றும் அறிந்தான். அவன் சகோதரர்கள் தானியம், முட்டை, காய்கறி முதலிய பொருள்களைக் குறைவான செலவில் உற்பத்தி செய்வதால் அவர்கள் பால், தயிர் முதலிய பொருள்களை உற்பத்தி செய்யாமல் அவைகளைப் பரிவர்த்தனை மூலம் மற்றச் சகோதரர்களிடம் வாங்குகின்றனர். இதேபோல் ஒரு சகோதரன் தானிய உற்பத்தியிலும், மற்றொருவன் பழம், காய்கறி, முட்டை முதலிய பொருள்களின் உற்பத்தியிலும் தன் முழுக்கவனத்தைச் செலுத்துவான்.

எனவே, மிக அதிகமான திறமையுள்ள சகோதரனுக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஏற்படும் பரிவர்த்தனை, ஒப்பீட்டுக் கிரயத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. முழுக் கிரயத்தைச் சார்ந்ததில்லை. தானியம் முதலிய பொருள்களின் உற்பத்தியில் முழு நன்மை (absolute advantage) இருந்தபோதிலும், மிகத் திறமை வாய்ந்த சகோதரன் பால், தயிர்போன்ற பொருள்களைக் கொடுத்து, மற்றப் பொருள்களை மற்றச் சகோதரர்களிடமிருந்து வாங்குகிறான். மற்றச் சகோதரர்கள் அவனுக்குக் கொடுத்த பொருள்களை உற்பத்தி செய்வதில் அவர்களுக்கு முழு நன்மை இல்லை. இவ் விரு சகோதரர்களும் உற்பத்தி செய்து அவர்களுக்கிடையே பரிவர்த்தனை செய்த பொருள்களின் உற்பத்தியில் அவர்களுக்கு முழு நன்மை இல்லை. மூன்று சகோதரர்களும் நல்ல முறையில் உற்பத்தி செய்வதற்குக் காரணம், அவர்களது சிறப்புத் தேர்ச்சியே (specialization). மிகத் திறமையானவன் ஓர் உற்பத்தித் துறையில் கவனத்தைச் சிறப்பாகச் செலுத்தியதால், மற்றவர்கள் மற்றத் துறைகளில் தம் கவனத்தைச் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

குறுகிய காலத்தில் தேவையும் அளிப்பும் விலையை நிர்ணயம் செய்வதுபோல், நீண்ட காலத்தைப்பற்றி நாம் எதையும் திட்டவட்டமாகச் சொல்லமுடியாது. அட்டவணை 1-லும் நாம் கொடுத்துள்ள தேவை, அளிப்புக் கோடுகளையும் பட்டியல்களையும் இனி அமைப்பதில் பயன் ஏற்படாது. தேவையிலோ அல்லது

அளிப்பிலோ மாறுதல் ஏற்பட்டால் அதை அடுத்து விலை மாறும். இம் மாறுதல்களுக்கேற்ற புதிய தேவைப் பட்டியலையோ, அளிப்புப் பட்டியலையோ அல்லது இரண்டையுமோ அளிக்கவேண்டும். மார்க்கட்டு விலை 12 அணாவிலிருந்து 8 அணாவுக்கு இறங்கினால் (பட்டியல் 1-ஐப் பார்க்கவும்) தேவை 18 அலகாகவும் அளிப்பு 6 அலகாகவும் மாறும் என்று கூறமுடியாது. தேவையோ, அளிப்போ அல்லது இரண்டுமோ மாறியதால்தான் விலையும் மாறியது. புதிய சிக்கனமான உற்பத்தி முறையை உற்பத்தியாளர்கள் பின்பற்றுவதால் விலை தாழ்வடையலாம். (உதாரணமாகக் கைநூற்புக்குப் பதிலாக இயந்திரத்தைக்கொண்டு நூல்களை நூற்பதால் அடக்கச் செலவு குறையலாம்.) குறைந்த விலையில் எந்த அளவு உற்பத்தி பெருகும் என்பதை அறிய நாம் பழைய அளிப்புக் கோட்டைப் பயன்படுத்தமுடியாது. புதிய, மலிவான பதிலிப் பொருள் மார்க்கட்டில் புகுத்தப்பட்டிருப்பதால் ஒரு பொருளின் தேவையும், விலையும் குறையலாம்.[1]

எனினும், சில பொது விதிகளை நாம் இங்குக் குறிப்பிடலாம். இவைகளைத் தேவை—அளிப்பு விதிகள் என்று நாம் கூறலாம். இவை யாவருக்கும் எளிதில் புலப்படக்கூடியவையாக இருந்த போதிலும், பலர் இதை அடிக்கடி மறந்துவிடுகின்றனர். நிலைமையில் மாறுதல்கள் ஏற்பட்டால் அவைகளை ஒட்டிக் கீழ்க்கண்ட மாறுதல்களும் ஏற்படலாம் என்பதே இவ் விதிகளின் உட்கருத்து.

(1) விலை குறைவாக இருக்கும்பொழுது தேவை அதிகமாகவும்; அதிகமாக இருக்கும்பொழுது அளிப்பு அதிகமாகவுமிருக்கும்.

(2) தேவை மிகுதியடையும்பொழுது விலை உயரும்; அளிப்பு குறையும்; அளிப்பு மிகுதியடையும்பொழுது, விலை குறையும்; தேவையும் குறையும்.

(3) தேவை குறைந்தால் விலை குறையும்; அளிப்பு பெருகும். அளிப்பு குறைந்தால் விலை உயரும்; தேவை குறையும்.

(4) தேவையும் அளிப்பும் சமமாகும் நிலையில் விலை நிர்ணயம் ஆகின்றது.

மேற்கூறிய பொது விதிகள் என்றும் மாறுத தன்மையுடையன அன்று; சில சந்தர்ப்பங்களில் எதிர்ப்புச் சக்திகள் இயற்கையாக இயங்கும் சக்திகளைப் பாதிக்கலாம். பின்வரும் அதிகாரங்களில் இத்தகைய எதிர்ப்புச் சக்திகள் சில விளக்கப்பெற்றிருக்கின்றன. இப்பொது விதிகள் உண்மை நிலைக்குப் பொருத்தமாக அமையச் சில மாறுதல்கள் வேண்டும். இவை பின்வரும் அதிகாரங்களில் காணலாம்.

[1] அதிகாரம் 4, படம் இரண்டு A,B-ஐப் பார்க்கவும்.

4. தேவை — அளிப்பு ஆராய்ச்சி முறையை நடைமுறை நிலைமைக்குப் பொருந்தும்படி திருத்தி அமைத்தலும் அதைப் பயன்படுத்துதலும்

A. நீண்ட காலத்திற்குத் தகுந்தாற்போல் தேவை—அளிப்பு ஆராய்ச்சியை மாற்றியமைத்தல்

B. நிறைவுப் போட்டி (perfect competition) இருக்கின்றது என்ற கற்பனையைப் புறக்கணிப்பதால் அவசியமாகும் திருத்தங்கள்

C. சர்வாதினமும் நிறைகுணப் போட்டியும்
   i. சர்வாதினமும் விலைநிர்ணயப் போட்டியும்
   ii நிறைகுணப் போட்டி

D. அரசினர் தலையீட்டின் விளைவாக அவசியமாகும் திருத்தங்கள்

பிற்சேர்க்கை: சர்வாதினத்தில் இலாபத்தை உச்சநிலைக்கு உயர்த்துவது

A. நீண்ட காலத்திற்குத் தகுந்தாற்போல் தேவை—அளிப்பு ஆராய்ச்சியை மாற்றியமைத்தல்

நீண்ட காலத் தேவை—அளிப்பு ஆராய்ச்சிக்கும், குறுகிய கால ஆராய்ச்சிக்கும் உள்ள வேறுபாடுகளை 3ஆவது அதிகாரத்தில் பார்த்தோம். குறுகிய காலத்தில் நிறைவுப் போட்டி இருப்பின் விலை ஒரே நிலையில் நிர்ணயமாகும். அதாவது தேவை, அளிப்புப் பட்டியல்கள் தெரிந்தால், மார்க்கட்டு விலை எந்தநிலையில் நிர்ணயமாகும் என்பதை நாம் கூறலாம்.

ஆனால், காலப்போக்கில் பல காரணங்களை ஒட்டித் தேவை, அளிப்புப் பட்டியல்களில் மாறுதல்கள் ஏற்படும். நீண்ட காலம் திரைப் படத்தைப்போல் பல குறுகிய காலங்களைச் சேர்த்து அமைக்கப்பெற்றிருக்கின்றது. ஒரு குறுகிய காலத்திற்கும் அதை அடுத்து உள்ளதற்கும் இடையே மிகச் சிறிய மாறுதல்கள் ஏற்படுகின்றன. எனவே, விலைகள் மாறுகின்றன. இந்த மாறுதல்கள் புதிய சமநிலையை (equilibrium) ஏற்படுத்துவதற்குச் சிறிது கால தாமதமாகும். நடைமுறையில் பெரும்பாலும் புதிய சமநிலை

ஏற்படுவதற்கு மேலும் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. விலையில் மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. புதிய சமநிலை ஏற்படாவிடிலும், மாறுதல்களை அடுத்து ஏற்படும் நிகழ்ச்சிகள் புதிய சமநிலையை உருவாக்கும் முயற்சியாகவே இருக்கின்றன.

விலை நிர்ணய ஆராய்ச்சி செய்யும்பொழுது காலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக்கொள்வது பயனளிக்கும். ஆனால், இப் பிரிவுகளுக்கிடையே திட்டவட்டமான வேறுபாடுகளைக் காண முடியாது.[1]


முதன்முதலாக நாம் தெரிந்துகொள்ள வேண்டிய குறுகிய கால மார்க்கட்டு விலையை மூன்றாவது அதிகாரத்தில் விளக்கியுள்ளோம். இரண்டாவதாக, 'இயல்பான விலை' (normal price) நடுத்தர காலத்தில் நிர்ணயமாகின்றது. இக் காலத்தில் உற்பத்தியும் தேவையும் மாறும். ஆனால், நிலையான முதல் அதாவது உற்பத்தியில் பயனுகும் இயந்திரங்கள் மாறுவதில்லை. மூன்றாவதாக, 'நீண்ட கால இயல்பான விலை' (long period normal price) மிக நீண்ட காலத்தில் நிர்ணயமாகும். இக் காலத்தில் உற்பத்தியின் அளவும், முறையும் பூரணமாக மாறலாம். நிலையான முதலை மாற்றியமைப்பதற்கோ அல்லது பெருக்குவதற்கோ போதிய நேரம் இருக்கின்றது.

பொருள்களை வாங்குவோரும் விற்பனை செய்வோரும் தொடர்ந்து தத்தம் செயல்களைச் செய்துகொண்டிருப்பதால், நடுத்தர காலத்திலும், நீண்ட காலத்திலும் மார்க்கட்டில் விலை நிர்ணயமாகின்றது. தேவைப் பட்டியல்கள் மாறலாம். விலை நிலையாக இருப்பதில்லை. எனினும், மாறும் சூழ்நிலைகளை உற்று நோக்கினால் எந்தச் சக்திகள் முக்கியமானவை என்பது புலப்படும். அனுபவமுள்ள திறமைவாய்ந்த வியாபாரிகள் விலையின் போக்கை (எதிர்பாராத விளைவுகள் ஏற்படாவிடில்) வெற்றிகரமாக ஊகிப்பர்.

ஒரே தேவைக் கோட்டை ஒரு புதிய அளிப்புக்கோடு புதிய இடத்தில் வெட்டினால் தேவை விரிகின்றது; அல்லது சுருங்குகின்றது (expansion of demand or contraction of demand) என்றும், அளிப்புக் கோட்டைப் புதிய தேவைக் கோடு வெட்டினால் அளிப்பு விரிகின்றது; அல்லது சுருங்குகின்றது (expansion or contraction of supply) என்றும் கூறுவது வழக்கம். தேவை

[1] நிறைகுறைப் போட்டி (imperfect competition) இருக்கும்போதுகூட, தேவை அளிப்புப் பட்டியல்கள் தெரிந்தால், விலை நிர்ணயத்தை நாம் திட்டவட்டமாகப் புரிந்துகொள்ளலாம். ஆனால், போட்டியிடுவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருத்தல்கூடாது.

அளிப்பு இவைகளின் பெருக்கம் அல்லது குறைவு இவைகளின் விரிவு அல்லது சுருக்கத்திலிருந்து வேறுபட்டிருக்கின்றது. பெருக்கம் அல்லது குறைவு எவ்வாறு விரிவு அல்லது சுருக்கத்திலிருந்து வேறுபட்டிருக்கின்றது என்பதைப் படங்கள் 2A, 2B எடுத்துக்காட்டுகின்றன.[1]




படம் 2-A

படம் 2A-ல் புதிய அளிப்புக்கோடு தேவைக்கோட்டை வெட்டுவதால் தேவை 15-லிருந்து 18ஆக விரிவடைந்திருக்கின்றது. மிகுதியான விலைச்சல் ஏற்படும்பொழுது, உணவுப் பொருள்களின் நிலைமை இவ்வாறு மாறுவது இயற்கை. இதே போல், இரண்டாவது படத்தில் புதிய தேவைக்கோடு அளிப்புக் கோட்டை இடப் பக்கம் வெட்டுவதால், அளிப்பு சுருங்குவதைக் காணலாம். மக்கள் விருப்பம் மாறுவதால் இத்தகைய மாறுதல் ஏற்படலாம். படம் 2A-ல் அளிப்பு மிகுதியடைந்துவிட்டது என்றும், படம் 2B-ல் தேவை மிகுதியடைந்துவிட்டது என்றும்

[1]. ஆல்ஃபிரட் மார்ஷல், 'பொருளியல் தத்துவங்கள்' (Principels of Economics, 5ஆம் பிரிவு 5ஆம் அதிகாரம்).

நாம் கூறலாம். ஒரு குறிப்பிட்ட விலை மாற்றத்தின் வெவ்வேறு காரணங்களை நாம் பிரித்து அறிதல் வேண்டும்.[1]

தேவை மாறுவதற்கு மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றமோ அல்லது பல்வேறு பகுதியினரின் வயதில் ஏற்படும் மாறுதலோ மிக முக்கியமான காரணமாகும். வருமானத்தின் அளவு, வருமானப் பங்கீட்டில் ஏற்படும் மாறுதல்கள், பதிலிப் பொருள்களின் விலை, பொருள்களை வாங்குவோரின் புதிய விருப்பங்கள், அல்லது வெறுப்பு,



படம் 2-B

மற்றவர்கள் வாங்குவது அல்லது பயன்படுத்த வேண்டும் என்ற அவா. கீழ்க்கண்ட மற்றச் சக்திகளும் தேவையைப் பாதிக்கக் கூடியவை : அரசாங்கச் செலவின் தன்மை, அளவு, விலையின் போக்கை எதிர்பார்த்தல், (உதாரணமாகக் கொரியாப் போர் தொடங்கியபொழுது விலையுயர்வைப் பலர் எதிர்பார்த்தனர். ஆகையால் பலர் விலைகள் உயர்வதற்குமுன் பொருள்களை வாங்கினர்.

[1]. அதிகாரம் 3D-யைப் பார்க்கவும்.

பிறகு இப் பொருள்களை விற்பனைசெய்யலாம் என்று கருதினர்) மேற்கூறிய காரணங்கள் எவ்வாறு தேவையைப் பெருக்கும் என்பதற்கு ஓர் உதாரணம் கொடுக்கலாம். மக்கள் தொகை பெருகினால் முன்பைவிட மிகுதியானவர்களுக்கு உணவளிக்கவேண்டும். அரிசியை இன்றியமையாததாகக் கருதுவோர், அதை முன்பைவிட அதிகமாக வாங்குவர். குறுகிய காலத்தில் அளிப்பு பெருகாததால் அதன் விலை உயரும்.

ஒரே அளவுப் பொருள் முன்பைவிட (அளிப்புப் பெருகினாலன்றி) உயர்ந்த விலையில் விற்பனையாகும். விலையுயர்வதால் நல்ல விளைச்சல் உள்ள மற்றப் பகுதிகளிலிருந்து சரக்கு வரும்; இதனால் உள் நாட்டு வர்த்தகமோ அல்லது அயல்நாட்டு வர்த்தகமோ அல்லது இரண்டுமோ பெருகலாம். இதன் விளைவாக விலைகள் தாழ்வடையலாம். ஆனால், அது முன்பு இருந்த நிலையை அடையாது. இதற்குப் போக்குவரத்துச் செலவே காரணமாகும். அரிசியை வாங்குவோர், அதற்கு அதிகமாகச் செலவு செய்ய வேண்டும். அவர்கள் வருமானம் பெருகினாலன்றி, மற்றப் பொருள்களுக்காகச் செய்யும் செலவைக் குறைக்கவேண்டும். இப் பொருள்களின் தேவை குறையும்; விலையும் தாழ்வடையும். உயர்ந்த விலை கொடுத்து அரிசி வாங்கமுடியாதவர்கள், மலிவான பதிலிப் பொருள்களை வாங்குவர். இவைகளின் விலையும் தாழ்வடையும். பல்வேறு பொருள்களின் விலையுயர்வையும் இலாபத்தையும் ஒட்டி, விவசாயிகள் விதைவிதைக்கும் பருவத்தில் தம் உற்பத்தியை மாற்றிக்கொள்வர். விலைகள் உயரும்பொழுது, தம் உற்பத்தியில் பெரும் பகுதியை விற்பனை செய்யும் விவசாயிகள் அதிகமான இலாபம் ஈட்டுவர். மக்கள் தொகை உயரும்பொழுது எல்லா விலைகளும் உயரும். தம் பயனுக்கு வேண்டிய அளவைமட்டும் உற்பத்தி செய்து, பெரும்பாலும் தன் நிறைவு (self-sufficiency) பெற்ற விவசாயிகள், முன்பைவிட அதிகமான அளவு தம் பொருள்களை விற்பனை செய்தல் வேண்டும். ஏனெனில், அவர்கள் வாங்கும் மற்றப் பொருள்களின் விலைகள் உயர்ந்துவிட்டன. விலை வாசி உயர்வதால், அவர்கள் பயனடையலாம் அல்லது பணத்தை இழக்கலாம். பொருள்களை விற்பனை செய்வோரும், தரகர்களும், போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டிருப்போரும் விவசாயிகளை விட, விலையுயர்வால் மிகுதியான பயனை அடையலாம். வருமானப் வரிகட்டிலும், வேலை வாய்ப்பிலும் ஒரு மாறுதல் ஏற்படலாம். பரம ஏழையான விவசாயிகள் உட்கொள்ளும் உணவைக் குறைத்துக்கொள்ளவேண்டும். அல்லது அவர்கள் தாழ்ந்தரக உணவை உட்கொள்ளவேண்டும். இதன் விளைவாக அரசியலாரின் சுகாதாரத்துறை அதிகமாகச் செலவு செய்யவேண்டும். வரிகளும் உயரும்.

தொடக்க நிலையில் ஒரு சிறிய மாறுதல் ஏற்பட்டாலும் அதன் காரணமாக எவ்வாறு பல சிக்கலான மாறுதல்கள் விளைகின்றன என்பதையும், இவைகளைப்பற்றி முடிவாக எதையும் கூறமுடியாது என்பதையும், உதாரணம் எடுத்துக் காட்டுகின்றது. விலைகளும், பொருளாதாரமும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதையும் இவ் வுதாரணம் காட்டுகின்றது.

மிகுதியடையும்பொழுது மக்கள் தொகை அதன் (மிகுதியடை தலின்) வீதமும் உயரலாம். மக்கள் தொகை உயருவதால், வயதுப் பகுதியில் (age groups) ஒரு மாறுதல் ஏற்படலாம். இத்தகைய மாறுதல்களின் விளைவுகளைப்பற்றி நாம் ஒன்றுமே குறிப்பிடவில்லை.

கீழ்க்கண்டவை அளிப்பையும் அதன்மூலம் விலையையும் பாதிக்கலாம். உற்பத்தி முறையில் முன்னேற்றம், மாற்றம், புதிய கண்டுபிடிப்புகள் இவை அடக்கச் செலவைக் குறைக்க உதவும். பல்வேறு துறைகளில் உற்பத்திச் சாதனங்கள் பயன்படும்பொழுது, அவைகளுடைய ஒப்பீட்டு ஆக்கச் செலவுகள் (relative cost) மாறும். உற்பத்தி முறையில் சிக்கனம் ஏற்படுவதை ஒட்டிச் சில பொருள்களின் உற்பத்தி பெருகும். ஒரு நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு அயல்நாட்டுத் தேவை மாறலாம். இதுவும் விலையைப் பாதிக்கும். இயற்கைப் பருவ நிலை மாறினால் (அதாவது மழைசூல் சீர்கேடான நிலையையோ அல்லது மிகச்சிறந்த நிலையையோ அடைதல்) விலைகள் மாறலாம். 'மாசூல் மிகவும் சிறப்பாக இருந்தாலும் அல்லது மோசமாக இருந்தாலும் நாம் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காது' என்று பென்ஹாம் (Benham) கூறுகிறார். ('பொருளியல்' ஆறுவது பதிப்பு, பக்கம் 197), ஆனால், 'இது போன்ற மாறுதல் ஏற்படும்பொழுது,முன்பு இருந்த அளிப்புப் பட்டியல் புதிய நிலைக்குப் பொருந்தாது. புதிய பட்டியல் ஒன்று பழைய பட்டியலின் இடத்தைப் பெறும்.' புதிய கிணறுகள் வெட்டப்பட்டாலும், மற்ற நீர்ப்பாசன வசதிகள் அமைக்கப்பெற்றாலும், முன்பை விட அதிகமாக எரு பயன்படுத்தப்பெற்றாலும் அளிப்புப் பட்டியல் மாறும். உதாரணமாக ஜப்பானிய முறையில் சாகுபடி செய்யும் பொழுது (இந்தியாவில் பல பகுதிகளில் இந்த முறை கையாளப் படுகிறது) ஓர் ஏக்கரின் சராசரி உற்பத்தி மிகுதியடையும். ஆனால், அடக்கச் செலவு அதிகரிக்காது. இது அரிசியின் விலையைக் குறைக்கலாம்.

கோழிக்குஞ்சுகளும், முட்டைகளும், பதனிட்ட (பதனிடாத) தோல்களும், ஆட்டு ரோமமும், கூடு எண்ணெயும் (crude oil) பல பண்டங்களும் கூட்டுத் தோற்றப் பண்டங்களாகும் (joint products). இவை உற்பத்தியாளர்களுடைய விலையை நீண்ட

காலத்தில் பாதிக்கும். கூட்டுத் தோற்றப் பண்டம் ஒவ்வொன்றின் தனி அடக்கச்செலவு நிர்ணயமாவதுபற்றிய விதி ஏதுவும் இல்லை. ஒவ்வொன்றின் தேவையும் அதன் விலையும்—கூட்டுப் பண்டங்களின் உற்பத்தியைப் பாதிக்கும். அவைகளை உற்பத்தி செய்வதனால், ஒருவன் பெறும் இலாபமும் பாதிக்கப்படும். ஆகாய விமானத்திற்குப் பயன்படுத்தப்படும் பெட்ரோலின் விலை உயர்ந்தால், அதன் உற்பத்தியின் மாறும் செலவும் (variable cost) மாருச் செலவும் (overhead cost)[1] ஈடாகும். அதன் துணைப்பொருளாகிய மண்ணெண்ணெயின் தேவை நெகிழ்ச்சியுடையதாக இருந்தால், அதையும் மற்ற கனமான எண்ணெய்களையும் பெட்ரோலை விடக் குறைந்த விலையில் விற்பனை செய்யலாம். பெட்ரோல் உற்பத்தியாகும்பொழுது, உடன்சேர்ந்து உற்பத்தியாகும் கனமான மற்ற எண்ணெய் முழுவதையும் விற்பனை செய்வதால் இலாபம் மிகுதியடையும். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பொருத்தமான ஓர் உதாரணத்தைக் கொடுக்கலாம். இறைச்சிக்காக வளரும் ஆடுகளின் (சிறந்த மார்க்கட் இருந்தால்) உரோமத்தைக் குறைந்த விலையில் விற்கலாம். இரண்டு பொருள்களையும் உற்பத்தி செய்வதால் மொத்த இலாபம் மிகுதியடையலாம். முன்பு பயனுகாமல் வீணான பக்க விளைவுப் பொருள்களுக்குத் தேவை ஏற்பட்டால், இப்பொழுது அவைகளையும் விற்பனை செய்யலாம். சராசரி மாருச் செலவு குறையும்; பண்டங்களின் விலை குறையும்; விற்பனையும் இலாபமும் பெருகும்.

பேனுவும், மசியும், சாயமும், அதைத் தீட்டும் குச்சியும் கூட்டுத் தேவைப் பொருள்கள் (joint demand). இதே விதி கூட்டுத் தேவைக்கும் பொருந்தும். ஆனுல், இவை கூட்டுத் தோற்றப் பொருள்களைப்போல் அவ்வளவு முக்கியமானவையல்ல.

B. நிறைவுப்போட்டி நிலவுவதற்கு வேண்டிய நிபந்தனைகளை நாம் கைவிடும்பொழுது ஏற்படும் மாறுதல்கள்

பூரணமான போட்டி நிலவுவதற்கு அவசியமான நிபந்தனைகள் அகன்ற பிறகு, தேவை-அளிப்பு ஆராய்ச்சியில் எத்தகைய மாறுதல்கள் ஏற்படவேண்டும் என்பதை நாம் இப்பொழுது பார்க்க வேண்டும்.

[1] வெவ்வேறு அடக்கச் செலவுகளின் விளக்கங்களை 4 ஆவது அதிகாரத்தில் 107 ஆவது பக்கத்தில் காணவும்.

நமது முதல் எடுகோள் பொருளை வாங்குவோர் பகுத்தறிவுடன் நடந்துகொள்வார்கள் என்பது. இதை நாம் விவரமாக ஆராய வேண்டும். பொருளை வாங்குவோரில் பெரும்பாலானவர்கள் பகுத்தறிவுடன் நடந்துகொள்வர். ஆனால், ஒவ்வொருவரும் இப்படி நடந்துகொள்வார் என்று கூறமுடியாது. எனவே, இந்த எடுகோள் உண்மையானது.

விற்பனையாகும் பொருள்கள் ஒரே வகையைச் சேர்ந்தவை என்பது இரண்டாவது எடுகோள். இது வகைப்படுத்தக்கூடிய ஒரு சில விவசாயப் பண்டங்களுக்கே பொருந்தும். பொருள்கள் ஒரே வகையைச் சேர்ந்தவையாக இருப்பின், உற்பத்தியாளர்கள் தாம் வாங்கும் கச்சாப் பொருள்கள் எங்கிருந்து வந்தாலும், அவை கட்கு ஒரே மதிப்புக் கொடுப்பர். இதேபோல் வாங்குவோரும் பொருளை எந்தக் கடையில் வேண்டுமானாலும் வாங்கத் தயாராக இருத்தல் வேண்டும். ஆனால், நடைமுறையில், வாங்குவோர் சில விற்பனையாளர்களிடம் கடன்பட்டிருந்தாலன்றி (அல்லது வேறு விதத்தில் அவர்களுக்குக் கட்டுப்பட்டிருந்தாலன்றி) பொருள்களை அவர்களிடம் வாங்க விரும்புவதில்லை. தனிப்பட்ட இத்தகைய உறவை நமது நிறைகுறைப் போட்டியின் வருணனையில் காணலாம்.

ஒரே வகையைச் சாராத பண்டங்கள் பல வேறுபாடுகளைக் கொண்டிருக்கலாம். இவைகளனைத்தையும் தர வேறுபாடுகளாகக் கருதுவது வழக்கம். உயர்ந்தரகப் பொருள்களுக்கு உயர்ந்த விலை கொடுப்பது இயல்பு. உயர்ந்தரகப் பொருள்கள் மிகக்குறைவாகவே கிடைத்தால், தாழ்ந்தரகப் பொருள்களின் விலைகளும் உயரும். ஆனால், வாங்குவோர் உயர்ந்தரகப் பொருள்களை அதிகமாக வாங்க விரும்பாமல் இருக்கலாம். அவற்றினுடைய விலையும் உயரா.

பல்வேறுவகைப் பொருள்களின் தரத்தைப் பார்த்து நாம் அறிய முடியாது. உயர்ந்தரகப் பொருள்களை உற்பத்தி செய்வோர், தம் நிறுவனங்களுக்கு ஒரு தனிப்பெயரை ஏற்படுத்தியோ அல்லது தனி விற்பனைச் சின்னத்தைப் (trade mark) பயன்படுத்தியோ தம் பொருள்களை விலையாக்குவர். இத்தகைய நிறுவனங்கள் தமக்கு ஒரு பெயரை ஏற்படுத்திவிட்டால், தம் பொருள்களின் விற்பனையில் சர்வாதீனத்தை (monopoly) நிலைநாட்டுகின்றனர். இதுபற்றிய கருத்துகளை C (ii) பகுதியில் காணலாம்.

மார்க்கட்டு விலைகள் இரகசியமாக நிர்ணயமாவதில்லை. என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கும் மூன்றாவது எடுகோள்.

விலை மார்க்கட்டில் நிர்ணயமாகாமல், இருவரிடையே ஏற்படும் ஒப்பந்தத்தின் விளைவாக நிர்ணயமானால், இதை எல்லாரும் அறியமுடியாது. கட்டட வேலையில் 'டெண்டர் முறையை'ப் பின்பற்றுகின்றனர்.

விலை நிர்ணயத்தில் சட்ட பூர்வமான அல்லது ஆட்சியாளர் களின் குறுக்கீடு அல்லது தடை இருக்காது என்பது நான்காவது கற்பனை. இக் காலத்தில் அரசு விலையை நேரிடையாகவும் மறை முகமாகவும் நிர்ணயம் செய்கின்றது. அரசியலார் பல பொருள் களுக்கு (சிலவகைத் தொழிலாளர்களுடைய கூலிகளுக்கும்) விலையைக் குறிக்கின்றனர். வரிகள், உற்பத்தியின் அளவைக் கட்டுப்படுத்துவது, திட்டமிடுதல் முதலிய கொள்கைகள்மூலம் அரசினர் மறைமுகமாக விலைகளைக் கட்டுப்படுத்தலாம். ஆகையால் இந்த எடுகோள் தவருனது. தேவை - அளிப்பு பற்றிய ஆராய்ச்சி இத்தகைய குறுக்கீடுகளின் விளைவுகளைப் பற்றி எதையும் கூறமுடியாது. இவ் வாராய்ச்சியை எப்படிப் பொருத்தமான முறையில் மாற்றிக்கொள்ளலாம் என்பதுபற்றிய விவரங்களைப் பகுதி D-யில் காணலாம்.

போக்குவரத்துக்காகச் செலவுசெய்யும் தொகையைப் புறக் கணித்துவிடலாம் என்பது ஐந்தாவது எடுகோள். ஆனால், போக்குவரத்துச் செலவு மார்க்கட்டுச் செலவில் ஒரு கணிசமான பகுதியாக இருக்கின்றது. போட்டி பூரணமாக இருந்தால், ஒருவ னுடைய போக்குவரத்துச் செலவு அவனுடைய அளிப்புப் பட்டி யலில் இடம் பெறுகின்றது. இதை மூன்றுவது அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். எந்த உற்பத்தியாளர்கள் பொருள்களை மார்க்கட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதையும், யார் யார் எவ்வளவு பொருள்களைக் கொண்டுவர வேண்டும் என்பதையும் அளிப்புப் பட்டியல் நிர்ணயிக்கின்றது. எனவே, மார்க்கட்டு விலை யின் நிர்ணயத்தை அளிப்புப் பட்டியலின் அமைப்பே பாதிக் கின்றது.

நீண்ட காலத்தில் போக்குவரத்துச் செலவு பல்வேறு பொருள் களின் தனி விலைகளையும் (absolute prices) தொடர்பு விலைகளையும் (relative prices) பாதிக்கின்றது. இது மேலும் கோதுமை, அரிசி, மற்றத் தானியவகைகள் போன்றவை எங்கெங்குப் பயன்படுத்தப் படுகின்றன என்பதையும் நிர்ணயம் செய்கின்றது. எத் தொழில்கள் எப் பகுதிகளில் நிறுவப்பட வேண்டும் என்பதையும் (பொருளாதார நோக்கங்களுடன் தொழில் நிலையங்கள் நிறுவப்பெற்றால்) இது நிர்ணயம் செய்யும்.

உற்பத்திச் சாதனங்கள் தடையற்ற இடப் பெயர்ச்சியைக் கொண்டிருக்கின்றன. எதுவும் மார்க்கட்டில் தங்கு தடையின்றி புகமுடியும் என்பது நமது இறுதி எடுகோள். (நிலம் சம்பந்தப்பட்ட வரை இவ் வெடுகோளை வேறுவிதமாகப் பார்க்கவேண்டும். அதாவது அதன் பயனை எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம் என்று நாம் புரிந்துகொள்ளவேண்டும்.) இவ் வெடுகோள் இல்லாவிடில் — உதாரணமாக மனித உழைப்பின் அளவு குன்றினால் — அடக்கச் செலவு மிகுதியடையும்; விலையும் உயரும்.

போட்டி நிறைவுக்குத் தேவையான இவ் வெடுகோள்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கைவிடும் பொழுது, தேவை - அளிப்பு ஆராய்ச்சியை மாற்றியமைத்தல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் ஆராய்ச்சியை மிகவும் அதிகமாக மாற்றியமைக்க வேண்டும். சாதாரணமாகப் போட்டி நிலவுகின்றது என்றும் இப் போட்டி சில வரம்புகளுக்குட்பட்டிருக்கின்றது என்றும் கருதுவது இயற்கை. சந்தர்ப்பங்கள் மாறினாலும் போட்டி நிலவுகின்றது. ஆகையால் இக் கருத்து உண்மையானதே. ஆனால், போட்டி எப்பொழுதுமே பூரணமாக இருப்பதில்லை. மார்க்கட்டு நிலைமையில் உள்ள வேறுபாட்டுக்குத் தகுந்த திருத்தத்தைக் கொடுத்தால், தேவை, அளிப்பு, ஆராய்ச்சி, விலை எவ்வாறு நிர்ணயமாகின்றது என்பதை எடுத்துக்காட்டும் என்ற உண்மை புலனாகின்றது.

சில துறைகளில் சர்வாதீனமோ அல்லது நிறைதுறைப் போட்டியோ ஏற்பட்டால் (அதாவது அளிப்பிலோ அல்லது தேவையிலோ போட்டியிடுவோரின் எண்ணிக்கை குறைந்தால்), சில தனிப்பட்ட வாங்குவோர் அல்லது விற்பனையாளர்கள் விலையை மாற்றக் கூடிய நிலைமை ஏற்படலாம். ஒரு புதிய நிலைமை ஏற்படலாம். அதை நாம் பரிசீலனை செய்யவேண்டும்.

C. சர்வாதீனமும் நிறைதுறைப் போட்டியும்
(Monopoly and Imperfect Competition)

(i) சர்வாதீனமும் விலைநிர்ணயமும்

ஒரு பண்டம் முழுவதையும் ஒருவனே விற்பனை செய்தால், அவனைச் சர்வாதீனன் (monopolist) என்று அழைப்பது வழக்கம். ஒரு பொருள் முழுவதையும் ஒருவனே வாங்கினால் அவனை 'ஒரே வாங்குவோன்' (monopsonist) என்று கூறுவர். பின்வரும் விவரங்கள் சர்வாதீன நிலைமையை விளக்கும். இதே விளக்கம் 'ஒரே வாங்குவோன்' ஏற்படுத்தும் நிலைமையையும் விளக்கும்.

இந்த விளக்கம் 'பொருள்' அல்லது 'பண்டம்' என்ற சொல்லின் உட்கருத்து யாது என்ற வினாவைக் கிளப்புகின்றது. ஒருவகைப் பொருள் மற்றொரு வகைக்குப் பதிலிப் பொருளாக இருக்க முடியாதபடி, பல்வேறு பொருள்களை எவ்வாறு வகைப் படுத்தமுடியும்? இது சாத்தியமானதன்று. எப் பொருளையும் மற்றப் பொருள்களனைத்துக்கும் பதிலியாகக் கருதலாம் என்ற கருத்தை நாம் கவனிக்கும்பொழுது, பொருள்களை மேற்கூறிய முறையில் வகைப்படுத்துவது கடினம். ஒரு சர்வாதீனனுடைய பொருளுக்கு முழுமையான திருப்தியைக் கொடுக்கக்கூடிய பதிலிப் பொருள்கள் இருக்க முடியாது என்று நாம் கூறும்பொழுது, மேலே குறிப்பிட்ட இடர்ப்பாட்டை நீக்கலாம். தனிப்பட்ட ஒருவனே அல்லது ஒரு நிறுவனமோ ஒரு பண்ட உற்பத்தியில் அகில உலக சர்வாதீனத்தை நீண்டகாலம் ஏற்படுத்தமுடியாது. ஆனால், இதற்கு விதிவிலக்கு உண்டு. கிடைப்பதற்கு அரிய உலோகம் அல்லது சில இயற்கைப் பொருள்கள் போன்ற பண்டங்களை உற் பத்தி செய்வதில் இத்தகைய சர்வாதீனம் ஏற்படலாம். இத் தகைய பொருள்கள் சிலகுறிப்பிட்ட இடங்களிலேயே கிடைக்கலாம்.

ஆனால், தேசிய (அல்லது ஒரு நாடு முழுவதும் பரவியுள்ள) சர்வாதீனங்கள் தனிப்பட்டவர்கள் வசமோ அல்லது அரசின் ஆதிக்கத்திலோ இருக்கலாம். அரசின் சர்வாதீனப் பகுதியில் தனிப்பட்டவர்கள் நுழைவதைச் சட்டம் தடை செய்யலாம். அரசிய லாரின் ஆணையும் இதைத் தவிர்க்கலாம். உதாரணமாக, அயல் நாட்டுப் பண்டங்களின் போட்டியை இறக்குமதிக் கட்டுப்பாடுகள், வரி, கூசன்சு முறை முதலியவைமூலம் தடை செய்யலாம். ஆனால், பற்றுக்குறையையும் விலையுயர்வையும் நீக்க, அரசு ஓரளவு இறக்கு மதியை அனுமதிக்கலாம். ஆனால், உள்நாட்டு நிறுவனத்தின் சர்வாதீன அதிகாரத்திற்குக் கேடு ஏற்படாதபடி, அரசாங்கம் இறக்குமதியைக் கண்காணிக்கலாம். நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடிய புதிய தொழிலைத் துவக்கும் சர்வாதீன நிறுவனங்களுக்கு அரசு ஆதரவு கொடுக்கலாம். இத்தகைய தேசியச் சர்வாதீன நிறுவனங்கள் சில சந்தர்ப்பங்களில் அயல்நாடுகளிலும் தம் பொருள்களை விலையாக்கலாம். அயல் நாடுகளில் மற்ற நிறுவனங் கள் போட்டிப் பொருள்களை உற்பத்தி செய்யாமல் இருக்கலாம். ஆனால், மற்றப் போட்டி பொருள்கள் உற்பத்தியாவதைச் சட்டம் மூலம் தடைசெய்ய முடியாது. எனினும், விலையைக் குறைத்துப் போட்டிப் பொருளை மார்க்கட்டிலிருந்து விலக்கலாம்.

பலவகை இராணுவத் தளவாட உற்பத்தியிலும், வருவாய் ஈட் டலிலும் (உதாரணமாக உப்பு உற்பத்தியில் வரி விதிப்பது), சில பண்டங்களை மக்கள் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்

காகவும் (உதாரணமாக அபின் உற்பத்தியை அரசு கண்காணிக்கலாம்). உற்பத்தியில் பொருளாதாரத் திறமை மிகுதியடைகின்றது என்ற கருத்தை ஒட்டிச் சில துறைகளிலும் (உதாரணமாகத் தபால், போக்குவரத்துத் தொழில்களை அரசு நடத்துகின்றது) அரசாங்கம் சர்வாதீனங்களை ஏற்படுத்துகின்றது. அடக்கச்செலவு மிகுதியாக இருப்பதால் சில கனரகத் தொழில்களைத் தனிப்பட்டவர்கள் துவக்கமுடியாது. ஆனால், இவை திட்டத்திற்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதவை தால், அரசு இத் தொழில்களைச் சர்வாதீன முறையில் நடத்தலாம். பல நாடுகளில் பொதுநலப் பணித்துறையில் உள்ள தண்ணீர் வழங்குவது, வாயு அளிப்பது, மின்சக்தி விநியோகம் போன்ற பணிகளை அரசியலார் சர்வாதீன முறையில் நடத்துகின்றனர். இவைகளை இயற்கைச் சர்வாதீனங்கள் (natural monopolies) என்று கூறலாம். இப் பண்டங்களைப் பலர் அளித்தால் செலவும், பண்டங்களின் விலையும் மிகுதியடையும்.

பெருவாரி உற்பத்திமுறை அளிக்கும் சிக்கனங்களும் (விவரங்களுக்கு 4ஆவது அதிகாரத்தைப் பார்க்கவும்), போட்டி மிகுதியாக இருத்தலும் தனியார் துறையில் சர்வாதீனங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கின்றன. ஒரு தொழிலை நடத்தும் ஒரு நிறுவனம் பெருவாரி உற்பத்திமுறைச் சிக்கனங்களைக்கொண்டிருக்கலாம்; அது மற்றப் போட்டி நிறுவனங்களைத் தன்னுடன் இணைத்துப் பூரணமான சர்வாதீனம் ஒன்றை நிறுவலாம். அல்லது அதைக் கண்காணிக்கும் அதிகாரத்தைப் பெறலாம். இவ் வதிகாரத்தைக்கொண்டு விலை இறங்குவதைத் தடை செய்யலாம். அல்லது விலையை உயர்த்தலாம். ஒரு சர்வாதீன நிறுவனம் பல சிறு நிறுவனங்களை மார்க்கட்டிலிருந்து அகற்ற முயற்சி செய்யாமல் இருக்கலாம். அதாவது, விலையைக் குறைத்து அல்லது வேறு வழிகளைக் கையாண்டு அந்த நிறுவனங்களை ஒழிக்க முயற்சி செய்யாமல் இருக்கலாம். ஏனெனில், இத்தகைய முயற்சி அரசின் கவனத்தையும் குறுக்கீட்டையும் ஈர்க்கும். இந்த நிலையில் விலையை உயர்த்துவதில் சர்வாதீன நிறுவனம், மற்றச் சிறு நிறுவனங்களுக்கு வழிகாட்டியாகப் பணிபுரியும். மந்தகாலத்தில் விலைகள் மிகவும் தாழ்வடையும்; போட்டி கடுமையாக இருக்கும். ஏராளமான முதலுடன் பெரிய பாங்குகள் (Banks) அளிக்கும் வசதியைக் கொண்டு இயங்கும் பெரிய நிறுவனங்கள், நீண்டகால ஒப்பந்தங்கள் மூலம் அல்லது பொருளை வாங்குவோரின் ஆதரவுமூலம் அல்லது வர்த்தகக்குறிமூலம் தமக்கெனச் சில மார்க்கட்டுப் பகுதிகளை ஒதுக்கிக்கொள்ளும். மார்க்கட்டின் இப் பகுதிகளிலிருந்து இந்த நிறுவனங்களை விரட்டுவது மிகக் கடினமாகும். நீண்டகால இலாபத்தைக் கருதி ஒவ்வொரு நிறுவனமும் தற்காலிக குறுகிய

கால இழப்பை ஏற்கத் தயாராக இருக்கின்றது. இந்த நிலையில் போட்டி கடுமையாக இல்லாமல், நிறைகுறையாக இருக்கின்றது. (C (ii), பக்கம் 78 ஐப் பார்க்கவும்). இந்த இக்கட்டான நிலைமையைச் சமாளிப்பதற்கு ஒரு பெரிய நிறுவனம் மற்ற நிறுவனங்களைத் தன்னுடன் இணைத்துக்கொள்ளவேண்டும்; அல்லது மற்றப் போட்டி நிறுவனங்களை விலைக்கு வாங்கவேண்டும்; அல்லது விலையைப் பற்றி அவைகளுடன் ஓர் உடன்பாடு செய்துகொள்ளவேண்டும். அதாவது சர்வாதீனம் அமைத்தல் வேண்டும். ஒரு சில பெரிய நிறுவனங்கள் ஒரு துறையைத் தம் ஆதிக்கத்தில் கொண்டிருக்கலாம். இந்த நிலையில் நிறைகுறைப் போட்டி நிலவும்.

பல்வேறுவகைச் சர்வாதீனங்களை நாம் இங்கு விளக்க விரும்பவில்லை. ஆனால், சர்வாதீன நிலையில் விலை நிர்ணயத்திற்கும், போட்டி நிலையில் விலை நிர்ணயத்திற்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுவதே நமது நோக்கமாகும்.

போட்டியிடுவோனையும், தொழில் நடத்துவோனையும் போலவே, சர்வாதீனனும் தன் எச்ச இலாபத்தைப் (net profit) பெருக்க விரும்புகிறான். அவன் உற்பத்தியைப் பெருக்கலாமா அல்லது பெருக்கவேண்டாமா என்று சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கின்றான் என்று நாம் கற்பனை செய்துகொள்வோம். உபரிப் பண்டங்களை உற்பத்தி செய்வதால் கிடைக்கும் வருமானத்தை அதன் ஆக்கச் செலவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பான். அவனுடைய இறுதி நிலைச் செலவையும் இறுதிநிலை வருவாயையும் சமமாக்குவதே அவனுடைய நோக்கமாகும். வாங்குவோருடைய தேவைப் பட்டியல் வெவ்வேறு விலைகளில் எந்தெந்த அளவுகள் விற்பனையாகும் என்பதை நிர்ணயிக்கின்றது. இவ் வுண்மை போட்டி நிலை உற்பத்தியாளர்களுக்கும் சர்வாதீனனுக்கும் பொருந்தும். சர்வாதீனன் தேவைப் பட்டியலை ஓரளவாவது அறிவான் என்று நாம் கற்பனை செய்துகொள்ளவேண்டும். சர்வாதீனன் இறுதிநிலை வருவாயையும், இறுதிநிலைச் செலவையும் எப்படிச் சமமாக்குகிறான் என்பதைப் பிற்சேர்க்கையில் உள்ள 4ஆவது படம் எடுத்துக்காட்டுகின்றது.

சர்வாதீனன் போட்டி விற்பனையாளனிடமிருந்து வேறுபட்டிருக்கிறான். அவனுடைய விலை நிர்ணயம் எவ்வாறு வேறுபட்டிருக்கின்றது என்பதைப் பின்வரும் விளக்கம் எடுத்துக்காட்டும். சர்வாதீனன் தன் பொருளுக்குத் தானே விலையைக் குறிக்கலாம் என்பது நமது விளக்கத்தில் இருக்கின்றது. ஆனால், போட்டி நிறுவனம் இதைச் செய்யமுடியாது. ஆகையால் சர்வாதீனனுடைய இறுதி வருவாய் (marginal revenue) — அதாவது ஒரு குறிப்பிட்ட

காலத்தில் இறுதிநிலை உற்பத்தியின் காரணமாக மொத்த வருவாயுடன் கூடும் இறுதிநிலை வருவாய்—விலைக்குச் சமமாக இராது. இதை விவரமாக விளக்கவேண்டும். சர்வாதீனன் விலையைக் குறித்தால், தேவைப் பட்டியல் எவ்வளவு விற்பனையாகும் என்பதை நிர்ணயம் செய்கின்றது என்பதை, நாம் முதன்முதலில் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் அவனுடைய கொள்கையை நாம் இரு கோணங்களிலிருந்து பார்க்கலாம்.

சர்வாதீனன் தன் இறுதி வருவாயை எவ்வாறு மதிப்பீடு செய்கிறான்? அவன் உற்பத்தியைப் பெருக்க முடிவு செய்கின்றான் என்றும் அதனால் விலை தாழ்வடைகின்றது என்றும் கற்பனை செய்து கொள்வோம். விலை எந்த அளவு தாழ்வடையும் என்பது தேவையின் நெகிழ்ச்சியைப் பொறுத்திருக்கும். சர்வாதீன விற்பனையாளன் தன் விற்பனை (அல்லது உற்பத்தியை) அதிகரித்தால் தேவைப்பட்டியல் கீழ்நோக்கிச் சரியும். ஏனெனில், அளிப்பு மிகுதியடையும்பொழுது அளிப்புப் பட்டியலில் மாறுதல் ஏற்படும். புதிய அளிப்புப் பட்டியல் தேவைக்கோட்டைச் சற்றுத் தாழ்வான இடத்தில் வெட்டும்.[1] எல்லா அலகுகளும் புதிய, குறைவான விலையில் விற்பனையாகவேண்டும். இப்பொழுது அதிகமாக விற்பனையாகும் அலகுகளின் எண்ணிக்கையைக் குறைந்த விலையால் பெருக்க வேண்டும். இத் தொகையிலிருந்து முன்பு குறைவாக விற்பனையான அலகுகளை அதன் (உயர்ந்த) விலையினால் பெருக்கி வரும் தொகையைக் கழித்தல்வேண்டும். கழித்துவரும் தொகையே இறுதி வருவாயாகும். இத் தொகை பூச்சியமானால் அவன் உற்பத்தியைப் பெருக்கமாட்டான். இது பூச்சியமல்லாமல் ஒரு குறிப்பிட்ட தொகையாக இருந்தால், இதை இறுதி வருவாயென்று நாம் அழைத்தல் வேண்டும். இறுதி வருவாய் விலைக்குச் சமமாக இருக்காது. விலை தாழ்வடையும்பொழுது, சராசரி வருவாய் (average revenue) இறுதி வருவாயைவிட உயர்ந்ததாகவே இருக்கும். சராசரி வருவாய்க் கோடு (average revenue curve) விலையையும் உற்பத்தியின் அளவையும் இணைக்கின்றது.[2] இதன் பிறகு இறுதிநிலை உற்பத்தியின் அடக்கச் செலவை அவன் மதிப்பிடுகிறான். உற்பத்தி பெருகும்பொழுது, (ஒரு குறிப்பிட்ட காலத்தில்) கச்சாப்பொருள், எரிபொருள், மனித உழைப்பு முதலியவைகளுக்காகச் செலவுசெய்யும் உபரி மாறும் செலவையே (variable cost) இறுதிச்செலவு (marginal cost) என்று கூறுகிறோம். குறுகிய காலத்தில் மாறும் செலவைமட்டுமே நாம் இறுதிச்செலவில் சேர்க்க வேண்டும். ஏனெனில் உற்பத்திப் பெருக்கத்தால் மாறுச்செலவு

[1] படம் II A, பக்கம் 67-ஐப் பார்க்கவும்.

[2] இந்தக் கருத்தைப் பிற்சேர்க்கையிலுள்ள படம் எடுத்துக்காட்டுகின்றது.

அதிகரிக்காது.[1] மேலும், சில அலகுகள் உற்பத்தி செய்வதற்காகப் புதிய இயந்திரங்களோ நிறுவுவது எவ்வித நன்மையும் பயக்காது. இறுதிச்செலவை (மாறும் செலவை) இறுதி வருவாயிலிருந்து கழித்தால் உற்பத்திப் பெருக்கம் இலாபம் கொடுக்குமா, கொடுக்காதா என்று காட்டும்.

மிகக்குறைவான உபரி உற்பத்திக்கு இறுதிச் செலவையும், இறுதி வருவாயையும் கணக்கிடுவது உண்மைக்கு முரணாக இருக்கும். ஆனால், ஓர் அலகின் அளவு எவ்வளவு இருக்கவேண்டும் என்பதை நாம் முடிவு செய்யலாம் என்று பென்ஹாம் (Benham) கூறுகிறார்.[2] இறுதி அலகின் அளவு மிகப் பெரிதாக இருந்தால், உற்பத்திப் பெருக்கத்திற்குப் புதிய இயந்திரங்கள் தேவையாகும்; மாறுச்செலவும் (fixed cost) மிகுதியடையும். ஆகையால் நீண்ட காலத்தில் இறுதிச்செலவில் மாறுச்செலவையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

உற்பத்தியையோ அல்லது விலையையோ கணிசமான அளவு மாற்றவேண்டும் என்று நாம் கருதலாம். இறுதிச்செலவும் இறுதி வருவாயும் சமமாக இருக்கும் நிலை அல்லது படிவம் போட்டி நிலவும்பொழுது ஒருவிதமாக இருக்கும். சர்வாதீன நிலையில் வேறு விதமாக இருக்கும். உற்பத்தியைப் பெருக்குவதால் ஏற்படும் எச்ச இலாபத்தை (net profit) இறுதிச் செலவும், இறுதி வருவாயும் சமமாகும் படிவம்மட்டும் நிர்ணயம் செய்யவில்லை. தேவை, அடக்கச்செலவுக் கோடுகளின் நெகிழ்ச்சியும் இதை முடிவு செய்கின்றது. அளிப்புக்கோட்டின் செலவுபற்றிய கூறு நீங்கலாக, மற்றெல்லாவற்றையும் அகற்றினால் அதுவே செலவுக் கோடாகும். (சர்வாதீனனுடைய சக்திக்கு அப்பாற்பட்ட சில காரணங்கள், அவனுடைய உற்பத்திப் பெருக்கத்திற்குத் தடையாக இருக்கலாம்.) இறுதி வருவாய் தேவையின் நெகிழ்ச்சியை மறைமுகமாகச் சார்ந்திருக்கும் என்று முன்பே நாம் குறிப்பிட்டோம். நெகிழ்ச்சியற்ற தேவையும், வரம்புக்குட்பட்ட அளிப்பும் எவ்வாறு மிகவும் அதிகமான இலாபத்தை அளிக்கும் என்பதை, நாம் பிறகு ஓர் உதாரணம்மூலம் விளக்குவோம். ஒரு நிறுவனத்தின் உற்பத்தி குறைந்துசெல் விளைவு விதிக்கு (decreasing returns) உற்பட்டிருக்கின்றதா அல்லது வளர்ந்துசெல் விளைவு விதிக்கு (law of increasing returns) உட்பட்டிருக்கின்றதா என்பது எச்ச இலாபத்தைப் பாதிக்கும். அதாவது உற்பத்தி பெருகும்பொழுது அடக்கச் செலவு மிகுதியடைகின்றதா அல்லது குறைகின்றதா என்பது இலாபத்தை நிர்ணயிக்கும். இந்த மாற்றம் ஏற்படும் வீதம் (மாற்றம்

[1] பல்வேறு அடக்கச்செலவுகள் பற்றிய விவரங்களை 5 ஆவது அதிகாரத்தில் காணலாம்.

[2] 'பொருளியல்' 6ஆவது பதிப்பு, பக்கம், 209.

எந்த வழியிலும் ஏற்படலாம்) இறுதிச்செலவைப் பாதித்து அதன் மூலம் இலாபத்தையும் பாதிக்கும்.

உற்பத்தி பெருகி, விலை குறைந்தால், தேவையும் இப் படிவத்தில் மிகவும் நெகிழ்ச்சியுடையதாக இருந்தால், குறைந்த விலையில் மிக அதிகமான அளவு பொருளை விற்பனை செய்யலாம். சர்வாதீனனுடைய உற்பத்தி, குறையும் அடக்கச்செலவு விதிக்குட்பட்டிருந்தால், உற்பத்தி பெருகுவதால் ஏற்படும் வருவாயிலிருந்து கழிக்க வேண்டிய ஆக்கச் செலவுத்தொகை, விகிதாசாரத்திற்குக் குறைவாகவே இருக்கும். இதன் விளைவாகக் குறைந்த விலையில் மிகுதியான அளவு விற்பனையாகும். இலாபமும் பெருகும். போட்டியில் இது ஏற்படாது. ஏனெனில், ஒரு வியாபாரி மார்க்கட்டு விலையைக் குறைக்கமுடியாது.—இந்த நிலை போட்டியின் விளக்கத்தைச் சார்ந்திருக்கின்றது—போட்டி நிலவும்பொழுது விலை குறைந்து, தேவையும் மிகுதியடைந்தால் (புதியதாகத் தோன்றிய தொழில்கள்—ஏராளமான தொழில் நுணுக்க முன்னேற்றத்திற்கு வாய்ப்புகளைக் கொண்டவையாக இருப்பவை இந்த நிலையில் இருக்கின்றன) ஓரளவு விலையுயர்ந்த பிறகு, உற்பத்தியைப் பெருக்கும் சக்தியைக் கொண்ட நிறுவனங்கள் உற்பத்தியைப் பெருக்கும். சமநிலை விலை முன்பைவிடக் (equilibrium price) குறைந்ததாக இருக்கும். உற்பத்தியும் முன்பைவிட அதிகமாக இருக்கும். ஆனால், போட்டியிடும் நிறுவனங்கள் சிறியனவாக இருப்பதால் அவை பெருவாரி உற்பத்திச் சிக்கனங்களைப் (economics of large scale production) பெற இயலாமல் இருக்கலாம். சர்வாதீன நிலையில் பெருகுவதுபோல் உற்பத்தியும் பெருகத் தவறலாம்.

மேலே விளக்கப்பெற்றிருக்கும் நிலையில் ஒரு தொழில் பெருவாரி உற்பத்திச் சிக்கனங்களை அளித்தால், சர்வாதீன நிறுவனம் போட்டி நிறுவனத்தைவிடத் திறமையுடன் இயங்கும் என்ற உண்மை, சர்வாதீனத்திற்குச் சாதகமான வாதம் ஆகின்றது, ஆகையால் ஓரிரண்டு நிறுவனங்கள் நிறைகுறைப்போட்டியையோ அல்லது சர்வாதீனத்தையோ நிறுவுவதற்கு முன்வரலாம். ஒரு சர்வாதீனம் இருக்கின்றது அல்லது நிறுவப்பெறுகின்றது என்று கற்பனை செய்துகொண்டால், குறுகிய காலத்தில் விற்பனை பெருகும்; விலையும் குறையும். இது நுகர்வோருக்கும் நாட்டுக்கும் நன்மை பயக்கும். ஆனால், போட்டி அளிக்கும் தூண்டுதல் இல்லாவிடில், திறமை நீடித்திருக்கும் என்று கூறமுடியாது. மேலும், குறைந்து செல் விளைவு எப்பொழுதும் நீண்டகாலத்தில் சர்வாதீன நிலையிலோ அல்லது போட்டி நிலையிலோ நீடிக்கும் என்று கூறமுடியாது. ஒரு நிலைக்குப் பிறகு, பெருவாரி உற்பத்திச் சிக்கனங்கள் முடிவுபெறும் (அதிகாரம் 4-ஐப் பார்க்கவும்) இந்த நிலைக்குப் பிறகு அதிகமான

இயந்திரங்களைப் பயன்படுத்தவேண்டிய அவசியம் ஏற்படும். புதிய உற்பத்திமுறைகள் மேற்கூறிய சிக்கனங்களின் வரம்பைத் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நீக்கலாம்.

சர்வாதீனனுடைய கொள்கைக்கும் போட்டி நிறுவனத்தின் கொள்கைக்கும் உள்ள மற்றொரு வேறுபாட்டைக் கீழே விவரித்துள்ளோம். சர்வாதீனன் உற்பத்தியைச் சுருக்கி, விலையை உயர்த்தி இலாபத்தைப் பெருக்கலாம். தேவை நெகிழ்ச்சியற்றதாக இருந்தால், அவன் விலையை உயர்த்தும்பொழுது விற்பனை சிறிதுதான் குறையும். ஆனால், ஒவ்வோர் அலகும் உயர்ந்த விலையில் விலையாகும். ஆகையால், அவனுடைய மொத்த வருவாய் (அதாவது விற்பனையை விலையால் பெருக்கிவரும் தொகை) அதிகரிக்கும். உற்பத்தி குறைவதால் அவனுடைய மாறும் செலவு சிறிது குறையும். இதுவும் அவனுடைய மொத்த வருவாயைப் பெருக்குவதற்குக் காரணமாக இருக்கும். இந்த நிலையில் சர்வாதீனனுடைய இலாபத்தை அவனுடைய வரவும், செலவும் பெருக்கும். இதனால் ஏற்படும் இழப்பை நாட்டின் பொருளாதாரமும் பொருள்களை வாங்குவோரும் ஏற்க வேண்டும். இந்த விதத்தில் ஈட்டப்பெறும் இலாபத்தைச் 'சர்வாதீன இலாபம்' (monopoly profit) என்றழைப்பர். மக்களை ஏமாற்றிச் சம்பாதிக்கும் தொகை என்று இதைக் கருதுவர்.

இதே கொள்கையைப் போட்டி நிலவும்பொழுது பின்பற்ற முடியாது. ஏனெனில், விலை உயரும்பொழுது பல நிறுவனங்கள் உற்பத்தியைப் பெருக்கி அதிக இலாபமடையும். காலப்போக்கில் விலை தாழ்வடையும். தேவையும் அளிப்பும் சமமாகும்.

சர்வாதீனத்தின் ஆபத்துகள் இரு காரணங்களால் ஏற்படும். முதல் ஆபத்து சர்வாதீனனுடைய சக்தியிலிருந்து உதயமாகும். சில சந்தர்ப்பங்களில் சர்வாதீனன் இதைப் பயன்படுத்தி, மிகுதியான இலாபத்தை அடையும் எண்ணத்துடன் விலையை (போட்டி நிர்ணயம் செய்வதைவிட) உயர்த்துவான்; இதற்காக உற்பத்தியைக் குறைப்பான். தேவை மிகுதியடையும்பொழுதும், நாட்டின் நலனுக்கு மிகுதியான உற்பத்தி தேவையாகும்பொழுதும் இந்த நிலை ஏற்படலாம். வளர்ச்சியடையும் நாடுகளை இது பாதிக்கும். சர்வாதீனன் உற்பத்தியைப் பின்னர்ப் பெருக்கலாம்; ஆனால், விலையைப் போட்டி நிலையைவிட உயர்ந்ததாகவே வைத்துக்கொள்ளலாம். போட்டி அளிக்கும் தூண்டுதலும், முயற்சியும் சர்வாதீன நிலையில் மறையும் முற்போக்கை விரும்பாத மனப்பான்மை வளரும். இதுவே, இதன் இரண்டாவது ஆபத்தாகும். தொழில் அமைப்பிலும், உற்பத்தி முறையிலும், மேற்பார்வையிலும்,

தொழிலாளர்கள்—முதலாளி உறவிலும் புதிய சீர்திருத்தங்களைப் புகுத்துவதைச் சர்வாதீனன் நிறுத்திவிடக்கூடும். ஆராய்ச்சி, சாதனை முதலியவையும் நின்றுவிடலாம். இத்தகைய நிறுவனம் ஒன்று, தன் முழு சக்தியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் பொழுது, மேலும் இயந்திரங்களை நிறுவுவதைக்கூட சர்வாதீனன் வெறுக்கலாம். உற்பத்திப் பெருக்கத்தையும் அவன் வெறுக்கலாம்.

அரசினர் எந்த விலைக் கொள்கையைப் பின்பற்றவேண்டும் என்பதைப்பற்றிய கருத்து வேற்றுமைகள் இருப்பதைப்போலவே, மேலே நாம் விளக்கியுள்ள முறையில் சர்வாதீன நிறுவனம் விலையை நிர்ணயிக்கின்றதா என்பதைப்பற்றிய கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. இக் கருத்து வேற்றுமைகளை இங்கு நாம் விளக்கத் தேவையில்லை. ஆனால், நாம் மறுக்கமுடியாத ஓர் உண்மையை இங்குக் குறிப்பிடலாம். போட்டி இருக்கும்பொழுது ஒரு நிறுவனம் ஒரு குறிப்பிட்ட உற்பத்திப் பெருக்கத்திலிருந்து எவ்வளவு இலாபம் பெறலாம் என்று எளிதில் கணக்கிடலாம். ஆனால், சர்வாதீனன் தனக்கு எது மிகவும் சிறந்தது என்பதை அவ்வளவு எளிதில் கணக்கிடமுடியாது. அவனுக்குச் சிறந்தது நாட்டுக்குச் சிறந்ததன்று. அரசின் சுவாதீனத்திற்கு விலையை நிர்ணயம் செய்வது மிகவும் கடினமாகும். இப்பொழுது இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கையாளப்படும் முறைகள் வேறுபாடுகளைக் கொண்டனவாகவும், ஒரு தத்துவ அடிப்படையில் அமையாதனவாகவும் இருக்கின்றன. அரசின் சர்வாதீனங்கள் மற்ற நிறுவனங்களைப்போல், விலையை ஏற்படுத்தவேண்டும் என்ற கூற்று நம் பிரச்சினைக்கு முடிவு அளிக்கவில்லை. ஏனெனில், இலாபத்தை அரசு எந்தப் பயனுக்காகச் செலவு செய்யப்போகின்றது என்பதைப் பொறுத்தே விலைக் கொள்கையை அமைக்கவேண்டும்.

பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் சர்வாதீனங்கள் வளரும் நாடுகளில் பெரிய பொறுப்பை ஏற்க நேரிடும். மூலதனம் முதலீட்டுத் துறைகளை நோக்கிச் செல்வதில் கண்காணிப்பு ஏற்படுத்தவும், உற்பத்தியைக் குறைப்பதைத் தடை செய்யவும், அவசியமற்ற முறையில் விலையை உயர்த்துவதைத் தடை செய்யவும், மற்றத் திறமையுள்ள நிறுவனங்கள் ஓர் உற்பத்தித் துறையை நோக்கி வருவதற்கு உள்ள தடையை நீக்குவதற்கும் சர்வாதீனங்களின் கொடுமையைக் கட்டுப்படுத்தல்வேண்டும்.

(ii) நிறைகுறைப் போட்டி

நிறைகுறைப் போட்டியைக் கீழ்க்கண்ட முறையில் விளக்கலாம். இது நிலவும்பொழுது, போட்டி பூரணமாக மறைவதில்லை. போட்டி

யிடும் நிறுவனங்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். ஆகையால் ஒவ்வொரு நிறுவனமும் விலையைப் பாதிக்கும் சக்தி கொண்டிருக்கும். அல்லது ஒரு பெரிய நிறுவனம் உற்பத்தியின் ஒரு பெரும் பகுதியைக் கண்காணிக்கும்; அல்லது மார்க்கட்டின் ஒரு பெரும் பகுதி அதன் ஆதிக்கத்தில் இருக்கும். சில பெரிய நிறுவனங்கள் முன்னணிக்கு வருவதாலும், சில நிறுவனங்கள் மார்க்கட்டின் ஒரு பகுதியைத் தம் ஆதிக்கத்தில் வைத்திருப்பதாலும் எப்படி நிறைகுறைப் போட்டி ஏற்படும் என்பதை முன்பே விளக்கியுள்ளோம். இதைத் தவிர, தொழிலாளர்கள் சங்கங்களும் மற்றத் தொழில் அலுவலர்கள் சங்கங்களும் உடலுழைப்பாளிக்கும் தொழிலாளர்கள் மார்க்கட்டிலும், நுணுக்கமான தொழில் புரியும் வேலையாட்கள் மார்க்கட்டிலும் அரைகுறைச் சர்வாதீனங்களை ஏற்படுத்துகின்றன. இச் சங்கங்களின் ஆதிக்கத்திற்குட்படாத தொழிலாளர்களை வேலையில் என்றும் அமர்த்தலாம் என்பதையே நாம் அரைகுறைச் சர்வாதீனம் என்ற சொல்லின்மூலம் விளக்குகின்றோம். எனினும், தொழிலாளர்கள் சங்கங்கள் (trade unions) ஓரளவு சர்வாதீன அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்ற உண்மையை மறுக்கமுடியாது. சில குறிப்பிட்ட தொழில்களுக்கு அளிக்கப்பெறும் பயிற்சிக்குத் தடை இருந்தால், பயிற்சிபெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். சில அலுவல்களைச் சிலர்தாம் செய்யலாம் என்பதும், ஒவ்வொரு தொழிலாளியும் செய்யக்கூடிய வேலையை நிர்ணயம் செய்தலும் (உதாரணமாக ஒவ்வொருவனும் இய்க்கக்கூடிய தறியின் எண்ணிக்கையை வரையறுத்தல்) தடைமுறைகள். இந்த முறைகள் உற்பத்தியைக் குறைத்து, அடக்கச் செலவை உயர்த்தி, தொழிற் பெருக்கத்திற்கு இடையூறாக இருக்கும். தொழிற்சங்கங்கள் வளருவதாலும், கூட்டுப் பேரம் (collective bargaining) நடைபெறுவதாலும், தொழில் முன்னேற்றம் பாதிக்கப்படும் என்றே அல்லது அடக்கச் செலவு மிகுதியடையும் என்றே நாம் இங்குக் குறிப்பிடவில்லை. இதற்குமாறாகத் தொழிற்சங்கங்கள் பல அரிய பணிகளைச் செய்கின்றன. இவைகளுள் கூட்டுப்பேரம் ஒன்றாகும். இவை திறமை வளர்வதற்கும், உற்பத்தி பெருகுவதற்கும், விலைகள் குறைவதற்கும் உதவியாக இருக்கின்றன. இருந்தபோதிலும் வேலை நிறுத்தம் சாதாரணமாக எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருவியாக இருக்கும்வரை, தொழிலாளர் சங்கங்கள் தம் சக்தியைத் தவறான வழியில் பயன்படுத்தலாம். மேலும், தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளிகளும் ஒரு சர்வாதீனம் ஏற்படுத்தலாம். இவ் விரு சர்வாதீனங்களும் போராட்டம் நடத்தும்பொழுது, என்ன விளைவு ஏற்படும் என்று சொல்லமுடியாது. முதலாளிகள் தொழிற் சாலைகளை மூடிவிடலாம். இது அவர்களுடைய கருவி.

இவ் வதிகாரத்தின் எஞ்சிய பகுதியில் பல்வேறு வகை நிறை குறைப் போட்டிகளை விளக்காமல், இப் போட்டியில் விலை எவ்வாறு நிர்ணயமாகின்றது என்று பார்ப்போம். போட்டியிடும் ஒவ்வொரு நிறுவனமும் தன் விலையை முடிவு செய்யக்கூடிய அளவு கணிசமான அளவு பொருளை (மொத்த உற்பத்தியுடன் ஒப்பிடும்பொழுது) உற்பத்தி செய்கின்றன. ஆனால், மற்ற நிறுவனங்களின் விலையைப் பாதிக்க முடியாது. இந்த நிலையில் விலை எவ்வாறு நிர்ணயம் ஆகும் என்று பார்க்கலாம். இந்த நிலையில் விலை நிர்ணயம் முடிவாக ஒரு விதியை ஒட்டி நடைபெறுது.

நிறைகுறைப் போட்டி நிலவும்பொழுது சில எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நிறுவனமும் எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதைப்பற்றியும் அவைகளுடைய பிரச்சினைகளைப்பற்றியும் ஆராய்ச்சிசெய்வது நமது நோக்கமன்று. குறிப்பிட்ட விலையைவிடக் குறைந்த விலையில் பொருள்களை விற்பனை செய்யாமல் இருப்பதற்காகச் செய்யும் ஒப்பந்தங்கள்போன்ற சில தடைமுறைகளை நிறுவனங்கள் செயலாற்றலாம். இத்தகைய ஒப்பந்தங்கள் எல்லா நாடுகளிலும் செய்யப்படுகின்றன. விலையை ஒரு நிலையில் வைத்துக்கொள்வதால், சமநிலை ஏற்படுகின்றது என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், இது சர்வாதீனம் ஏற்படுவதற்கு உதவியாக இருக்கின்றது என்றும், அடக்கச் செலவைவிட இது உயர்ந்ததாக இருக்கின்றது என்றும், சர்வாதீன இலாபம் இதனால் ஏற்படுகின்றது என்றும் சிலர் இதைக் குறை கூறுகின்றனர். இக் குறையைச் சட்டம்மூலம் நீக்கலாம். ஆனால், இத் துறையில் சட்டம் எப்பொழுதும் வெற்றிகரமாக இருக்கும் என்று கூறமுடியாது. சட்டம் தோல்வியடைந்தால், அரசினரே விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். அதாவது இப் பொறுப்பைத் தனியார் துறையிலிருந்து பொதுத்துறைக்கு மாற்றுகின்றோம்.

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் உள்ள ஒரு தனி வகை நிறை குறைப் போட்டியை இங்குக் குறிப்பிடலாம்.

கடன் கொடுப்போரும், வியாபாரிகளும் (இவர்களும் சில சந்தர்ப்பங்களில் கடன் கொடுக்கின்றனர்) கிராமாந்தரப் பகுதிகளில் மக்களுக்குக் கடனுதவி புரிகின்றனர். சிறந்த அமைப்புக் கொண்ட நிதியளிக்கும் நிலையங்கள் இப் பகுதிகளில் தொழில் நடத்த முடியாது. கடனுக்காகவோ, ரொக்கத்திற்காகவோ கொடுக்கப்படும் தொகையே வட்டியாகும். கிராமாந்தரப் பகுதிகளில் கடன்தொகை கிடைப்பது அரிது. ஆகையால் வட்டி மிகவும் உயர்ந்ததாக இருக்கும். எனவே, தற்காலத்தில் நிதி நிலையங்கள் பணிபுரியும் பிராந்தியங்களில் உள்ள வட்டி வீதத்தைவிட, இப் பகுதிகளில் உயர்ந்ததாகவே இருக்கும்.

கடன் கொடுப்போர் மிகுதியான இலாபத்தை ஈட்டுகின்றனர் என்றும், விவசாயிகளும், மற்ற வாங்குவோரையும் ஏமாற்றுகின்றனர் என்றும் கூறுகின்றனர். ஆனால், இது முற்றிலும் உண்மையன்று. விவசாயிகளுடைய வருமானம் சில பருவங்களில் ஈட்டக் கூடியவை. அவர்கள் சக்திக்கப்பாற்பட்ட இயற்கையே அதைப் பெரும்பாலும் நிர்ணயம் செய்கின்றது. இத்தகைய தொழில் புரிவோருக்குக் கடன் வசதியளித்தல் ஒரு பெரிய பொறுப்பாகும். கடன் கொடுப்போர் இல்லாவிடில் அவர்களை ஏற்படுத்தவேண்டும். கூட்டுறவுக் கடன்கொடுக்கும் சங்கங்களை அவர்கள் இடத்தில் நிறுவுவதற்கு இப்பொழுது முயற்சி செய்கின்றனர். இக் கூட்டுறவுச் சங்கங்கள் குறைந்த வட்டியை வசூல் செய்கின்றன; சிறந்த பணியாற்றுகின்றன. ஆனால், இவை கடன் கொடுப்போரைவிடக் குறைவான தொகையையே கொடுக்கின்றன. இவை கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடியவர்களுக்குக் குறைவான தொகையைக் கொடுக்கின்றன. எல்லாரும் சங்கத்தில் அங்கத்தினராகலாம் என்ற விதி இருந்தால், மந்த காலத்தில் (depression) இவை திவாலாகின்றன. கடன் கொடுக்கும் சங்கங்கள் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் அடிக்கடி திவாலாகி விட்டன.

இரண்டாவதாக, சில பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் ஏழைகளாகவும், கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாத நிலையிலும் இருக்கின்றனர். அவர்களுடைய நீண்டகால வருமானம் அல்லது ஆண்டு வருவாய், வட்டியையும் முதலையும் கொடுப்பதற்கும், வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்கும், விவசாயச் செலவுகளை ஏற்கவும் போதவில்லை. சிலர் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கத் தவறுவதால் ஏற்படும் இழப்பை, ஈடு செய்வதற்காகக் கடன் கொடுப்போர் உயர்ந்த வட்டியை வசூல் செய்யவேண்டும். கொடுத்த கடனைப் பெரும்பாலும் அவர்கள் திருப்பிப் பெறமுடியாத நிலையில் இருக்கின்றனர். எனவே, வட்டியைக்கொண்டே அவர்கள் ஓரளவு முதலையும் ஈடுசெய்தல் வேண்டும். கைவசம் இருக்கும் ரொக்கம் தற்காலிகமாக இழக்கப்படுவதால் ஏற்படும் நஷ்டம் ஈடு செய்யப்படவேண்டும். கடன் கொடுப்போரில் சிலர், ஏழைகளின் அல்லல்களைப் பொருட்படுத்தாமல் பொருள் ஈட்டுகின்றனர் என்பது உண்மையே. ஆனால், கடன் கொடுப்போர் வசூல் செய்யும் வட்டி மிகவும் அதிகமானதா என்பது நம் ஐயப்பாட்டை எழுப்புகின்றது.

கடன்கொடுக்கும் தொழிலில் நிறைகுறைப் போட்டி இருப்பதால் அது மிகவும் இலாபகரமாக இல்லை. அவர்கள் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும்பொழுது, கடன் தொகையைப்


பொருள்கள்மூலம், அறுவடையானபின் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றனர். தம் உபரிப் பொருள்கள் மார்க்கட்டில் விற்பனையாகக்கூடியவை) முழுவதையுமே அவர்கள் வாங்கிக்கொள்கின்றனர். கடன்கொடுக்கும் முறையில் கடன் கொடுத்தவர்கள் வாங்கும் பண்டங்களுக்கு அறுவடைக்கு முன்பே விலையை முடிவு செய்கின்றனர். இந்த விலை மார்க்கட்டு விலையைவிட, மிகக் குறைவாக இருப்பதால் இந்த முறையில் நியாயம் இல்லை. கடன்பட்டவர்கள் தம் கடன் முழுவதையும் திருப்பிக்கொடுக்கவேண்டிய தொகையை விற்பனைமூலம் பெறுவதில்லை. ஆகையால் அவர்கள் வேறு இடங்களில் கடன் வாங்க முடியாது. இந்த முறையில் கடன்கொடுப்பவன் பலரைத் தன் ஆதிக்கத்தில் இணைத்துக் கொள்கிறான். கடன்கொடுப்பவனுடன் போட்டியிடுவோர், அவன் ஆதிக்கத்திலிருப்பவரைத் தம் ஆதிக்கத்திற்கு ஈர்ப்பதில்லை. அவர்கள் எளிதானமுறையில் கடன் வசதியளிக்கத் தயாராக இருந்தபோதிலும் இப்படிச் செய்வதில்லை. கடன்கொடுப்பவன் ஒவ்வொருவனும் கடன்வாங்கும் சிலருடைய தேவையைக்கொண்டு தனக்கென ஒரு சர்வாதீனம் அமைத்துக் கொள்கிறான். ஒருவன் தன்னுடன் போட்டியிடுவோருடன் இணைந்திருக்கும் கடன்வாங்குவோரைத் தன் பக்கம் இழுக்க முயற்சி செய்வதில்லை. மிகத் திறமையுள்ளவன், திறமையற்றவர்களைத் தொழிலிலிருந்து நீக்குவதில்லை. இப் பணிபுரிவதற்கு வேண்டியவர்களைவிட அதிகமானவர்கள் தொழில் செய்கின்றனர். ஒவ்வொருவனும் பெறும் இலாபம் அவனுடைய மார்க்கட்டின் எல்லையைப் பொறுத்திருக்கும்.

D. அரசு தலையிடுவதால் ஏற்படும் மாற்றங்கள்

அரசினர் பலவிதங்களில் தலையிடலாம். இத் தலையீடு நமது நீண்ட, குறுகியகாலத் தேவை, அளிப்பு ஆராய்ச்சியில் மாறுதல்களுக்கு ஓர் அவசியத்தை ஏற்படுத்துகிறது. பண்டங்களில் வரிவிதிப்பதையும், விலைக் கட்டுப்பாட்டையும், பண்டங்களின் பங்கீட்டையும் (rationing), தொழில்களை நாட்டுடைமையாக்குதலையும் இங்கு உதாரணமாகக் கொடுக்கலாம். தொழில்கள் நிறுவப்படும் இடங்களை அரசு கண்காணிப்பதால் ஏற்படும் விளைவுகளை அதிகாரம் 6, B (8)-ல் காணலாம்.

(i) குறுகிய காலத்தில் நிறைவுப் போட்டி இருந்தால், ஒரு பொருளின்மீது விதிக்கப்படும் வரி அதன் விலையை உயர்த்தும். விற்பனையைக் குறைக்கும் தேவையின் நெகிழ்ச்சியும், அளிப்பின் நெகிழ்ச்சியும் விலையுயர்வை நிர்ணயிக்கும். வரியை அரசினர்

உற்பத்தியாளன்மீது விதித்தால் (உதாரணம், சுங்கவரி) அவனுடைய ஆக்கச் செலவு உயரும். படங்கள் 8-A, B-யில் காணும் புதிய அளிப்புக் கோடுகள் தேவையாகும். வாங்குவோர்மீது வரி விதிக்கப்பட்டால் விலை உயரும்; இதன் விளைவாகவும் அடக்கச் செலவு உயரும். அதாவது அதே விளைவு ஏற்படும். வரி குறிப்பிட்ட சில அலகுகளுக்கு ஒரு தொகை என்று விதிக்கப்பட்டாலும்




படம் 8-A

விற்பனையாகும் விலையில் ஒரு சதவீதமென்று விதிக்கப்பட்டாலும் இதே விளைவுதான் நிகழும். ஏனெனில், ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஏதேனும் ஓர் எண்ணிக்கை அலகுகளுக்குச் சமமாக இருக்கும்.

படங்கள் 8-A-யும் B-யும் பழைய அளிப்புக் கோட்டையும், (S_1) புதிய அளிப்புக் கோட்டையும் காட்டுகின்றன. இவை தேவைக் கோட்டை P_1, P_2 என்ற இடங்களில் வெட்டுகின்றன.

வரி விதிப்பதால் எப்பொழுதும் விலை உயரும். விற்பனை யாகும் அளவு குறையும். ஆனால், வரித் தொகை முழுவதும் விலையில் சேராது. ஏனெனில், உற்பத்தி பெருகும்பொழுது அடக்கச் செலவு உயரும் என்று கற்பனைசெய்துகொண்டால்—உற்பத்தி குறையும்பொழுது, இறுதிநிலை அடக்கச் செலவு (marginal cost) குறையும். வரிப் பளுவைப் பொருளை வாங்குவோன் ஏற்பானு



படம்·3-B

அல்லது விற்பனையாளன் ஏற்பானு என்பது தேவையின் நெகிழ்ச்சி யையும், அளிப்பின் நெகிழ்ச்சியையும் பொறுத்திருக்கும். படம் 3-A-ல் காணுவதுபோல் தேவை, அளிப்பைவிட நெகிழ்ச்சியுடைய தாக இருந்தால், வரிச்சுமையைப் பெரும்பாலும் உற்பத்தியாளன் ஏற்பான். ஏனெனில், விலையைவிட விற்பனை மிகவும் குறைந்து விடும். படம் 3-B இதற்கு எதிர்மறையான நிலையைக் காட்டு

கின்றது. அளிப்பு தேவையைவிட, நெகிழ்ச்சியுடையதாக இருக்கின்றது. நுகர்வோனே வரிச் சுமையின் பெரும் பகுதியை ஏற்கின்றான். ஏனெனில், விற்பனையின் குறைவைவிட, விலையுயர்வு அதிகமாக இருக்கின்றது. தேவையும் அளிப்பும் சமமான நெகிழ்ச்சியைக் கொண்டிருந்தால், வரியில் அரைப் பகுதியளவு விலையுடன் கூடும்.

இவ் வாராய்ச்சியில், தேவை நெகிழ்ச்சியற்றது என்று நாம் குறிப்பிடும்பொழுது, இது மிக்க அவசியமாகவும், தவிர்க்க முடியாததாகவும் இருக்கின்றது என்பதையே காட்டுகின்றோம். அளிப்பு, நெகிழ்ச்சியற்றது என்று குறிப்பிடும்பொழுது, விற்பனை செய்வோன் எப்படியாவது பொருள்களை விலையாக்கிப் பணம் பெறவேண்டிய நிலையில் இருக்கிறான் என்பதைக் குறிப்பிடுகிறோம். தேவையாகும் பொருளுக்குச் சிறந்த பதிலிப் பொருள்கள் இல்லாமையால், தேவை தவிர்க்கமுடியாத நிலையில் இருக்கும். உற்பத்திக் காரணிகளைக்கொண்டு வேறு பதிலிப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியாமையால், அளிப்பு நெகிழ்ச்சியற்றதாக இருக்கின்றது. உதவிப்பணம் (subsidies) அல்லது பங்கீட்டுச் செலவைக் குறைக்கும் வழியைப்பற்றிப் பேசும்பொழுது, வரியைப்பற்றி நாம் கூறிய கருத்தின் எதிர்மறை இதற்குப் பொருந்தும் என்று குறிப்பிடலாம்.[1] இத்தகைய நிலையில் வாங்குவோரும் விற்போரும் பயனடைவர். அளிப்பைவிடத் தேவை குறைவான நெகிழ்ச்சியைக் கொண்டிருந்தால் வாங்குவோனும், தேவையைவிட அளிப்பு குறைவான நெகிழ்ச்சியைக் கொண்டிருந்தால் விற்போனும் அதிகமாகப் பயனடைவர்.

மறைமுக வரியின் பளு உற்பத்திக் குறைப்புக்குக் காரணமாக இருப்பதால், இயந்திரங்கள் முழுவதும் பயன்படா. இலாபமும் நறையும். நீண்ட காலத்தில் பயன்படாத உபரிமுதலை உற்பத்தியாளர்கள் நீக்குவதில்லை. எனவே, குறைந்த முதலுக்குத் தகுந்தபடி உற்பத்தி மாறும். ஆனால், வரி இல்லாவிடில் முதலீடும், உற்பத்தியும் அதிகமாக இருக்கும். இவை வரி விதிக்கப்படுவதால் குறைவாக இருக்கும். உற்பத்தியாளர்களே வரியை ஏற்பது மிகவும் அரிது. உற்பத்தியைக் குறைப்பதைவிட, உற்பத்தி முறையில் சிக்கனங்களைப் (economics) புகுத்தி அடக்கச் செலவைக் குறைப்பதை விதிவிலக்கு என்றே கூறலாம். இப்படி ஒரு நிறுவனம் செய்தால் முன்பு அது திறமையற்றிருந்தது, இப்பொழுது வரி அதன் திறமையைத் தூண்டியது ஆகையால் நிறுவனங்களின் திறமையையும், சீரமைப்பையும் வரிகள்மூலம் ஏற்படுத்தலாம் என்பது உண்மையாகும். விவசாயத் தொழில்மீது வரி விதித்தால்

[1] அதிகாரம் 3, B-ஐப் பார்க்கவும்.

பின்தங்கிய நாடுகளில் முன்னேற்றம் ஏற்படும். அரசினர் வருவாயும் பெருகும் என்று சிலர் கருதுகின்றனர்.

சர்வாதீன முறையும், நிறைகுறைப் போட்டியும் நிலவும் பொழுது, வரி விதிப்பு உற்பத்தியைச் சுருக்கி விலையை உயர்த்தும். போட்டி நிலவும்பொழுது ஏற்படும் விளைவுகளைப் போன்றவையே மேலே குறிப்பிட்ட நிலைகளிலும் ஏற்படும்.

ஒரு கொள்கைபற்றிய முடிவுக்கு நாம் வரலாம். அரசினர் வருவாயையும், பொருள் உற்பத்தியையும் சிந்திக்கும்போது, விலை நெகிழ்ச்சியற்றதாக (price inelastic) உள்ள தேவையைக் கொண்ட பண்டங்கள்மீது வரிகளை விதிக்கலாம். ஆனால், இவ்வாறு செய்ய வாழ்க்கைக்கு மிக அவசியமான பண்டங்கள்மீது வரி விதித்தல் வேண்டும்.[1] அதாவது ஏழையான பாமர மக்கள் வரிச் சுமையைத் தாங்கவேண்டும்.

(ii) அவசியமான பொருள்களின் விலைகள் உயருவதால் ஏழைகள் அல்லல்படுவார்கள். இதைத் தவிர்க்கவே அரசு, விலைகளைக் கட்டுப்பாடு செய்கின்றது. பணவீக்கம் ஏற்படுவதையும் தடை செய்யும் நோக்கத்துடன் அரசியலார் விலைகளைக் கட்டுப்படுத்துகின்றனர். இந்தியாவில் போர்க்காலத்திலும், போரை அடுத்த ஆண்டுகளிலும் ஏற்பட்டதைப்போல், அவசியமான பொருள்களின் விலையுயர்வும், பணவீக்கமும் சேர்ந்தே நிகழ்கின்றன. வளரும் நாடுகளில் குறைவாக இருக்கும் அவசியமான பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதால் தீய விளைவுகளே ஏற்படுகின்றன. ஆகையால் விலைக்கட்டுப்பாட்டை இப்பொழுது எவரும் ஆதரிப்பதில்லை. பெருவாரியான மக்கள் உணவுத் தானியங்களைக் குறைந்த விலையில் வாங்க உதவுவதே விலைக் கட்டுப்பாட்டின் நோக்கமாகும். ஆனால், நடைமுறையில் இந்தியாவில் கள்ள மார்க்கட்டு வளர்ந்துவிட்டது. விலை உயரும் என்ற எண்ணத்துடன் சில விவசாயிகளும், பல வியாபாரிகளும் பண்டங்களைத் தேக்கி வைத்தனர். இவர்கள் எண்ணத்திலும் ஓரளவு உண்மை உண்டு. குறித்த விலையில் மிகக் குறைந்த அளவே வாங்கமுடியும். குறிப்பிட்ட விலையில் தேவை பூரணமாகப் பூர்த்தியடையாமையால், மார்க்கட்டு விலை, கட்டுப்பாடு செய்வதற்கு முன்பே உயர்ந்தது. விலையைக் குறைவாக வைத்ததால் தேவை மிகுதியடைந்தது, மேலே குறிப்பிட்ட விளைவுகள் ஏற்பட்டன. (அதாவது கள்ளமார்க்கட்டு வளர்ந்தது; குறைவான அளவு பண்டங்களை விற்பனை செய்தனர்.) பற்றுக்குறை

[1] சுங்க வரிகளை வருமானத் தேவை நெகிழ்ச்சியுடைய பொருள்கள்மீது விதிக்கலாம் என்று 9ஆவது அத்தியாயத்தில் கூறியுள்ளோம்.

இருக்கும் காலத்தில் உயர்ந்தபட்ச விலையை அமைப்பதுமட்டும் பயனளிக்காது. அளிப்பும் கண்காணிக்கப்பட்டால்தான் சிறந்த பயன் ஏற்படும். (அதாவது பண்டங்கள் முழுவதையும் அரசு வாங்கி, தாழ்ந்த விலையில் அவைகளை விற்பனை செய்வதற்காக ஏற்படும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். இது ஒரு மாபெரும் நிர்வாகப் பொறுப்பாகும்).

(iii) மேலே குறிப்பிட்ட விலைக் கட்டுப்பாட்டு முயற்சியில் அரசினர் படுதோல்வியடைந்ததால், ஏழைகள் பல இன்னல்களுக்கு இலக்காயினர்கள். 1942-ல் வங்காளத்தில் பஞ்சம் தாண்டவமாடியது. பல மில்லியன் கணக்கானவர்கள் உயிரிழந்தனர். இதற்குப் பிறகு அரசியலார் பங்கீட்டு முறையைப் (rationing) பின்பற்றினர். இந்த முறைப்படி அளிப்பை அவர்கள் கட்டுப்பாடு செய்தனர். (விலைக் கட்டுப்பாட்டைத் தவிர, பஞ்சத்திற்கு வேறு காரணங்களும் இருந்தன என்பதை நாம் மறக்கலாகாது).

தேவை, அளிப்பைவிட மிகுதியாக இருக்கும்பொழுது, அரசு நியாயமான விலை கொடுத்துப் (இந்த விலை உற்பத்தியாளர்களுக்கு நியாயமான இலாபத்தைக் கொடுக்கவேண்டும்) பொருளை வாங்கி அதைக் குறைந்த விலையில் சமமாக மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பார்கள். குறைந்த விலையில் பொருள்களை விற்பனை செய்வதால் ஏற்படும் செலவை அரசே ஏற்கும். இதுவே, பங்கீட்டின் பொருளாதாரத் தத்துவம். அனுமதிபெற்று வர்த்தகம் செய்வோரே வியாபாரம் முழுவதையும் கண்காணித்தாலும் கள்ளமார்க்கட்டு ஏற்படலாம். கையிருப்புச் சரக்கு குறைவாக இருக்கும். ஒவ்வொருவனுக்கும் எவ்வளவு உணவுப்பொருள் வழங்கவேண்டும் என்பதை அரசினர்வசம் இருக்கும் பொருளின் அளவும் தானியம் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டிய மக்களின் எண்ணிக்கையும் நிர்ணயிக்கும். இந்தியாவில் பகிர்ந்துகொடுக்கப்பட்ட தானியத்தின் அளவு பல்வேறு பகுதிகளில் வேறுபட்டிருந்தது. ஆங்காங்கே விளையும் பொருள்களின் அளவு, பங்கீடு, பொருள்களை ஏற்றிச் செல்வது முதலியவற்றின் செலவு, செழிப்பான இடத்தில் தானியத்தைக் கொள்முதல் செய்வதில் ஏற்படும் இன்னல்கள் (பற்றாக்குறைப் பகுதிகளில் வழங்குவதற்காக) முதலியவை இதற்குக் காரணங்களாகும். இருந்தபோதிலும் பங்கீட்டுமுறை (rationing), (இதைச் செயல்படுத்துவதில் எவ்வளவு குறைகள் இருப்பினும்) செல்வர்கள் ஏழைகளைவிட, மிக அதிகமாகப் பொருள்கள் வாங்குவதைத் தடைசெய்கின்றது. விலைக் கட்டுப்பாட்டின் நலனையும் எல்லாருக்கும் அளிக்கின்றது. பங்கீட்டுமுறை (rationing) தேர்வுக்கு (choice) இடமளிக்கவில்லை. ஆயினும், இது அமலில்

இல்லாவிடில் சமத்துவமின்மையும் ஏழைகளுக்குப் பல தொல்லைகளும் ஏற்படும்.

(iv) உற்பத்திக் கட்டுப்பாடு சில சிறப்பான சந்தர்ப்பங்களில் தான் அனுசரிக்கப்படுகின்றன. சில நிறுவனங்களுக்குச் சலுகை கொடுப்பதற்காக அவைகளுடன் போட்டியிடும் நிறுவனங்களுடைய வேலையைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இந்தியாவில் பருத்தி ஆலைகளின் உற்பத்திக்கும், புதிய வகை இயந்திரங்களைப் பயன்படுத்தலுக்கும், நூதன உற்பத்திமுறைகளைப் பின்பற்றுதலுக்கும் சட்ட பூர்வமான தடை விதிக்கப் பெற்றதை, ஓர் எடுத்துக்காட்டாக நாம் குறிப்பிடலாம். நெசவாளர்களுக்கு உள்நாட்டு மார்க்கட்டை விரிவுபடுத்தவும், அவர்கள் நலனைப் பெருக்குவதற்கும் அவர்களுக்கு மிகுதியான வேலை வாய்ப்புகளை அளிப்பதற்கும் அரசு மேற்கூறிய நடவடிக்கைகளை எடுத்தது. இக் கொள்கை வெற்றிகரமாக இருந்தது என்று மெய்ப்பிக்கப்படவில்லை. பருத்தி ஆலைகளில் உற்பத்தியாகும் துணிகளைப் போன்ற கைத்தறித் துணிகள் உயர்ந்த அடக்கச் செலவில் உற்பத்தி செய்யப்பட்டன. கை நெசவுக்கு (ஒவ்வொருவருக்கும்) மிகுதியான உழைப்பும், குறைந்த மூலதனமும் தேவை. ஆகையால் ஆலைநெசவுக்குப் பதிலாகக் கைநெசவை ஆதரிப்பதே சிறந்தது என்பது சிலரது கருத்து.

ஆலைத்தொழிலுக்கு விதிக்கப்பட்ட தடை அதன் முன்னேற்றத்திற்கும், அது தற்காலத்திய பாணியில் அமைவதற்கும் இடையூறாக இருந்தது. ஏற்றுமதியும், அயல்நாட்டுச் செலுத்தல் நிலையும் (balance of payments) பாதிக்கப்பட்டன. இத் தடைகள் இல்லாவிடில், ஏற்றுமதி மிகுதியடைந்திருக்கும், அயல்நாட்டுச் செலுத்தல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும். நெசவுத் தொழிலைவிடச் சிறந்தமுறையில் முன்னேறி இயங்கும் நிலையை அடையக்கூடிய சிறு தொழில்களிலும், குடிசைத் தொழில்களிலும் அரசு மிகுதியான தொகையை முதலீடு செய்திருக்கலாம். பொருளாதார வளர்ச்சியையும், வேலை வாய்ப்புகளையும் மேற்கூறிய தடைகள் பெருக்கியிருக்கலாம் அல்லது பெருக்காமலிருந்திருக்கலாம். இதை அறிய முயற்சி எதுவும் செய்யப்படவில்லை. இதற்கு வேண்டிய விவரங்களைச் சேகரிப்பது மிகவும் கடினம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். பருத்தி ஆலைத் தொழிலைக் கட்டுப்பாடு செய்யாமலிருந்திருக்கலாம். அது அயல்நாடுகளுடன் போட்டியிடும் திறன் மிகுதியாக இருந்திருக்கக்கூடும். கைத்தறிப் பண்டங்களுக்கு உதவிப்பணத்தை (sübsidy) மத்திய அரசின் வருவாயிலிருந்து (அதாவது வரித்தொகையிலிருந்து) கொடுத்திருக்கலாம். அது உள்நாட்டு மார்க்கட்டில் போட்டியிடும்

திறமையை இந்த விதத்தில் பாதுகாத்திருக்கலாம். அரசின் கொள்கை தீவிர ஆலோகனாவிட விளைவுகளுக்குக் காரணமாக இருந்தன. கைநெசவு, மிகுதியான நேர்முக வேலை வாய்ப்புகளை அளிக்கின்றது என்ற காரணத்தினால், மேற்கூறிய கொள்கையைப் பின்பற்றியது சரியானதன்று.

(v) தொழில்களை நாட்டுடைமை யாக்குதல் (nationalisation) சிக்கலான பல தீவிர விளைவுகளுக்குக் காரணமாக இருக்கின்றது. இதைப்பற்றிப் பல நாடுகளில் கருத்து வேற்றுமை இருக்கின்றது. பொதுத்துறையிலும், தனியார் துறையிலும் சர்வாதீனங்கள் இருப்பதால், பல பொருளாதாரப் பிரச்சினைகள் எழுகின்றன என்று முன்பே குறிப்பிட்டோம். இப் பிரச்சினைகள் சர்வாதீனத் தொழில்களின் தன்மைக்கும் சூழ்நிலைக்கும் தகுந்தவாறு வேறுபட்டிருக்கும். ஆகையால் சில பொது உண்மைகளை மட்டுமே இங்கு நாம் கொடுக்கலாம்.


தொழில்களை நாட்டுடைமை ஆக்குதல் ஒரு நாட்டின் கொள்கையாக இருந்தால், ஆனால் எந்தத் தொழில்களை அரசு நடத்துவது என்பது முடிவு செய்யப்படாமல் இருந்தால், முதலீட்டுக்குப் பாதகமான ஒரு சூழ்நிலை இருக்கும்; குறிப்பாக அயல்நாட்டினர் முதலீடு செய்யத் தயங்குவர். தனியார்துறையில் திறமையுடன் பணியாற்றும் மேற்பார்வையாளர்களைப் போன்றவர்களைத் தேர்ந்தெடுத்துப் பொதுத்துறையில் நியமனம் செய்வது கடினம். முற்போக்கைக் கண்டு அஞ்சும் மனநிலையைக் கைவிடுவதும் கடினமாகும். தவறுகளைத் தவிர்த்து, தொழில் நுணுக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தி, திருப்திகரமான விலைக்கொள்கையை உருவாக்குவது எளிதன்று. ஆனால் திட்டமிட்ட வளர்ச்சிக்கு வேண்டிய சில தொழில்களுக்கு ஏராளமான முதல் தேவை; இதை நீண்ட காலத்தில் முதலீடு செய்தல் வேண்டும். மிகுதியான தொகையைத் தனியார் துறையினர் முதலீடு செய்தல் முடியாது. சில தொழில்களில் இருக்கும் தவறுகளை (இன்சூரன்சுத் தொழில் இத்தகையது) நாட்டுடைமையாக்கி நீக்கலாம். இத் தொழில்களைச் செம்மையாக நடத்துவதற்குத் தனியார் துறையினர் கொண்டிருக்கும் திறமை தேவையன்று. இதுபற்றிய பொது விதி ஒன்றையும் நாம் இங்குக் கொடுக்கமுடியாது. தனியார் முதல்போட்டு நடத்தமுடியாத தொழில்களைப் பாகிஸ்தான் நடத்துவது சரியான கொள்கை என்று குறிப்பிடலாம். இத் தொழில்களுக்கு அரசினர் இயந்திரங்களை வாங்கி நிறுவுகின்றனர். இவை சிறந்தமுறையில் இயக்கத்தொடங்கிய பின், இவைகளைத் தனியாரிடம் கொடுத்து விடுவர். தனியாரும் அரசும் போட்டியிடும் ஒரு பெரிய தொழில் பகுதியை ஏற்படுத்தினால், இரு துறைகளிலும் சர்வாதீனம் நீங்கி விடும். இது ஒரு சிறந்த கொள்கையாகும்.

பிற்சேர்க்கை

சர்வாதீனன் உச்ச இலாபத்தை ஈட்டல்

(Maximum Profit)

இறுதி அடக்கச் செலவையும் இறுதி வருவாயையும் சர்வாதீனன் சமமாக்கும்பொழுது (பக்கம் 75) இருக்கும் நிலையைக் கீழ்க் கண்ட படம் காட்டுகிறது.



படம் 4

சர்வாதீனன் மார்க்கட்டு முழுவதையும் அல்லது அதன் பெரும் பகுதியைத் தன் ஆதிக்கத்தில் கொண்டிருக்கின்றான் என்பதைச் சர்வாதீனம் என்ற சொல்லின் விளக்கம் காட்டுகிறது. ஆகையால் மார்க்கட்டின் தேவைக்கோடு, அவனது நிறுவனத்திற்குப் பொருந்தும் தேவைக் கோடாகும். இதைச் சராசரி வருமானக்கோடு (Average Revenue Curve) (படத்தில் ச. வ. என்று குறிக்கப்பெற்றிருக்கின்றது.) என்றழைப்பர். ஏனெனில், ஒவ்வொரு விலையிலும் விற்பனையாகும் அளவை விலையினால் பெருக்கிவரும் தொகையை (இதிலிருந்து அடக்கச் செலவு கழிக்கப்பெற்றிருக்கும்) இது காட்டுகின்றது. இந்த விதத்தில் இது விலையை விற்பனையுடன் தொடர்பு படுத்துகின்றது. இறுதி வருவாய்க்கோடு (Marginal Revenue Curve) இறுதி நிலையில் மேலும் ஓர் அலகு விற்பனை செய்வதால் கிடைக்கும் வருவாயைக் காட்டுகின்றது. மேலும், ஓர் அலகை விற்பனையாக்குவதால் இறுதி அலகின் விலைமட்டுமன்றி எல்லா அலகுகளின் விலையும் குறையும்.

தேவைக்கோடு அதாவது சராசரி வருவாய்க்கோடு சர்வாதீன நிறுவனத்திற்கு முழுமையாகப் பொருந்துவதால், கீழ்நோக்கிச் சரியும். ஆகையால் குறைந்த விலையில்தான் அதிகமான அளவு விற்பனை செய்யமுடியும். இறுதி வருவாய்க்கோடு சராசரி வருவாய்க் கோட்டிலிருந்து வேறுபட்டிருக்கும். அது சராசரி வருவாய்க் கோட்டைவிட வேகமாகச் சரியும். ஏனெனில், சராசரி அளவு இறுதி அளவைவிட, எப்பொழுதும் தாமதமாகவே மாறும். இது முந்திய இறுதி அளவுகளின் மாற்றத்தை எடுத்துக்காட்டுவதே இதற்குக் காரணமாகும். சராசரி வருவாய்க்கோடு U வடிவத்தில் இருக்கின்றது. முதலில் நிறுவனங்களின் அடக்கச் செலவு (உற்பத்தி பெருகும்பொழுது) குறைவதையும், பிறகு கூடுவதையும் இது காட்டும். உற்பத்தி பெருகும்பொழுது நிலையான செலவை அதிகமான அலகுகள் ஏற்கும். உற்பத்தி ஓரளவு பெருகியபின், மாறும் செலவு கணிசமாக உயரும். குறைந்துசெல் செலவு விதியின் (law of decreasing cost) காரணமாகத் தொடக்கநிலையில் இறுதி வருவாய்க்கோடு, சராசரி வருவாய்க் கோட்டைவிட வேகமாகச் சரியும். ஆனால், ஒரு நிலைக்குப்பின் இது விரைவில் உயரும். (உயரும் அடக்கச் செலவு இதற்குக் காரணமாகும்.) சராசரி வருவாய்க்கோடு மிகத்தாழ்ந்த நிலையை அடையும்பொழுது, இறுதி வருவாய்க்கோடு அதை வெட்டும். ஏனெனில், சராசரி வருவாய்க்கோடு நாம் முன்புகுறிப்பிட்டபடி, இறுதிநிலை மாறுதல்களைக் காட்டுவதால் இப்பொழுது எதிர்த்திசையில் தாமதமாகச் செல்லும். நிறைவுப் போட்டி நிலவும்பொழுது, ஓர் உற்பத்தியாளன் இரு கோடுகளும் (ச. வ. கோடும். இ. வ. கோடும்) வெட்டும் நிலைவரை தன் உற்

பத்தியைப் பெருக்குவான். உற்பத்தி Q– வாக இருக்கும்பொழுது விலை P– யாக இருக்கும். P என்ற புள்ளி Q-வுக்கு மேலே இருக்கும். இது சராசரி வருவாய்க்கோட்டின் (இக் கோடு உற்பத்திக்கும் விலைக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறது,) ஒரு புள்ளியாகும்.

5. உற்பத்தியும் உற்பத்திக் காரணிகளும்

A. உற்பத்தியும், உற்பத்திக் காரணிகளைச் சேர்த்துப் பயன்படுத்துவதும்

B. உற்பத்திக் காரணிகளின் வேலையும் அவைகளுடைய விலையும்

(i) நிலம் (land) (அதாவது இயற்கைச் சாதனங்கள்)
(ii) மனித உழைப்பு (labour)
(iii) மூலதனம்
(iv) தொழிலை நிறுவுதல் [தொழில் துணிவு (enterprise)]

C. தேசிய வருமானத்தை உற்பத்திக் காரணிகளிடையே, அதை அளிப் போரிடையே பகிர்ந்து கொடுத்தல்.

A. 'உற்பத்தியும்', உற்பத்திக் காரணிகளைச் சேர்த்துப் பயன்படுத்துவதும்

முற்காலத்தில் எவை உற்பத்திச் செயல்கள், எவை இச் செயல் களல்ல என்பதைப்பற்றிய கருத்து வேற்றுமைகள் இருந்தன. ஏதேனும் பொருள்களை ஆக்குவதில் ஈடுபட்டிருக்கும் செயல்களை மட்டுமே உற்பத்திச் செயல்களென்று சில நூலாசிரியர்கள் கூறினர். சிலர் விவசாயத் தொழிலைமட்டுமே உற்பத்தித்துறை யெனக் கருதினர். ஏனெனில், எல்லா இயற்கைப் பொருள்களையும் அல்லது விவசாயப் பொருள்களையும் பண்படுத்தி அல்லது மாற்றியமைப்பதற்கு, விவசாயமே மூலகாரணமாக இருக்கின்றது. கச்சாப் பொருள்கள், இடைப்பொருள்கள் (intermediary goods), உற்பத்தி பூர்த்தியடைந்த பொருள்கள் (finished goods) முதலிய எல்லாவகைப் பொருள்களையும் ஆக்கும் செயல்கள் அனைத்தையும் இன்று உற்பத்திச் செயல்களாகக் கருதுகின்றனர். நிருவாக, அரசாங்கக் கலைத்துறைகளில் பணிபுரிவோரும், எழுத்தர்களும் மற்றத் தொழில்களில் ஈடுபட்டிருப்போரும் மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய செயல்களில் ஈடுபட்டிருப்பதால், நாம் அவர்களுடைய பணிக்கு ஊதியம் கொடுக்கின்றோம். ஆகையால், இவர்களுடைய பணியை உற்பத்திச் செயலாகவே கருதவேண்டும்.

உதாரணமாகக் குறைந்த பயனும் தேவையும் உள்ள இடங்களிலிருந்து போக்குவரத்துச் சாதனங்கள் பொருள்களை மிகுதியான தேவையும் பயனும் உள்ள இடங்களுக்குச் செலுத்த உதவியாக இருக்கின்றன. இவ் விடங்களில் விலை (இதில் போக்குவரத்துச் செலவு சேர்ந்திருக்கின்றது) உயர்வாக இருக்கின்றன. பணவசதியுள்ளவர்கள் மருத்துவர்களுடைய ஆலோசனையையும் பணியையும். வழக்கறிஞர்களுடைய ஆலோசனையையும் பணியையும் நாடுகின்றனர். இவர்கள் இவைகளுக்காகச் செலவு செய்யத் தயாராக இருக்கின்றனர். திரைப்படம், நாட்டியம், அரங்குகளில் நடைபெறும் பல பொழுதுபோக்குகள் முதலியவற்றுக்கும் மக்கள் பணச்செலவு செய்யத் தயாராக இருக்கின்றனர். மாயாஜால வித்தைகளையும் சடங்குகள் நடைபெறுவதையும் மக்கள் பார்த்து மகிழ்கின்றனர். சட்டத்தை மீறுவோர், திருடர்கள், கொள்ளைக் காரர்கள், கடத்தல்வேலை செய்வோர் முதலியவர்களுடைய செயல்களே உற்பத்திச் செயல்களாகா. சட்டத்தை மீறுவோரின் உதவியைச் சிலர் நாடுகின்றனர். ஆனால், சட்டத்தை மீறுவோர் சமுதாயத்தின் மொத்தத் திருப்தியை அதிகரிக்கமுடியாது. அவர்கள் எவ்வளவு சேர்க்கின்றனரோ, அவ்வளவு திருப்தியை நீக்கி விடுகின்றனர். உதாரணமாக, ஒரு திருடன் பிறரிடமிருந்து பொருள்களைத் திருடுகிறான். திருட்டுப் பொருள் அவனுக்கு அளிக்கும் மகிழ்ச்சியைவிட, சமுதாயத்திற்கு அவன் அளிக்கும் தீங்கு மிகுதியாக இருக்கும். ஏனெனில், திருட்டையும் மற்றச் சட்ட விரோதமான செயல்களையும் தடைசெய்வதற்கு ஒரு போலீஸ்படையை வைத்துக்கொள்ளும் செலவைச் சமுதாயம் ஏற்கவேண்டும்.

உற்பத்திக்கு வேண்டிய சில சாதனங்களை மனித சமுதாயம் வைத்திருக்கவேண்டும். பொருளுற்பத்திக்குப் பொருத்தமான முறையில் சமுதாயம் நடந்துகொள்ளவேண்டும். இச் சாதனங்களையும், மனித உழைப்பையும் உற்பத்திக் காரணிகள் என்று கூறுவது வழக்கம். இவைகளை நான்கு வகைகளாகப் பிரிப்பது வழக்கம். (i) நிலம்—இச் சொல் எல்லா இயற்கை உற்பத்திச் சாதனங்களையும் குறிக்கும் பரந்த பொருளைக் கொண்டிருக்கின்றது. (ii) உழைப்பு—பொருளுற்பத்தி செய்வோரின் உழைப்பையும், பணி புரிவோரின் சேவையையும் இச் சொல் குறிக்கும். (iii) மூலதனம். (iv) தொழில் நிறுவுதல் (அல்லது தொழில் துணிவு).

உற்பத்தி நடைபெறுவதற்கு இரு காரணிகளாவது அவசியம். ஆனால், பெரும்பாலும் மேலே குறிப்பிட்ட நான்கு காரணிகளும் பொருளுற்பத்தியில் ஏதேனும் பங்கெடுத்துக்கொள்ளும். மிகப்

பழைய நிலையில்கூட நிலமும், மனித உழைப்பும் இல்லாமல் எதையும் உற்பத்தி செய்யமுடியாது. உதாரணமாக, மலையில் வாழும் மக்கள் காடுகளிலும், மலைகளிலும் கிடைக்கும் தாவரப் பொருள்களைச் சேகரித்து உட்கொள்ளவேண்டும். வேட்டையாடும் தொழிலையோ அல்லது விவசாயத்தையோ மேற்கொண்டால் ஈட்டி, அம்பு, பொறி, வில்போன்ற மூலதனப் பொருள்கள் தேவையாகும். இவைகளைக்கொண்டே நிலத்தைப் பண்படுத்தி, விதை விதைத்துப் பயிராக்கி, அறுவடை செய்யவேண்டும். வளர்ச்சியடைந்த பொருளாதார அமைப்பில் ஒவ்வொருவனும் பயன்படுத்தும் மூலதனப் பொருள், புராதனப் பொருளாதார அமைப்பில் பயன்படுத்தும் அளவைவிட மிக அதிகமாக இருக்கும். இதுவே, இரு பொருளாதார அமைப்புக்கும் உள்ள வேறுபாடு. பொருளாதார வளர்ச்சி ஏற்படும்பொழுது, தொழில் அமைப்பு உற்பத்தியில் முக்கியமான ஓர் இடத்தைப் பெறுகின்றது. ஆனால், புராதன முறையில்கூட ஓரளவு தொழிலமைப்பு இருக்கின்றது. குடும்பத் தலைவன் எந்தெந்த வேலைகளைச் செய்யவேண்டுமென்பதையும் எப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும் என்பதையும், எந்தெந்தக் கால்நடைகளை வைத்துக்கொள்ளவேண்டுமென்பதையும் முடிவு செய்கிறான்.

உற்பத்திக் காரணிகளைச் சேர்த்துப் பயன்படுத்தும்பொழுது, மாறும் விளைவு விதி (law of variable returns) உற்பத்தியைப் பாதிக்கும். இதைக் குறைந்துசெல் விளைவு (law of diminishing returns) என்றழைப்பர். பல காரணிகளைப் பயன்படுத்தும்பொழுது, ஒரு குறிப்பிட்ட காரணியின் அளவைமட்டும் அதிகமாகப் பயன்படுத்தினால் (அதாவது மேலும் அதிகமான அலகுகள், மற்ற அதிகரிக்காத காரணிகளுடன் சேர்த்துப் பயன்படுத்தினால்,) ஒரு நிலைக்குப் பிறகு, இறுதிநிலையில் கூடும் உற்பத்தியின் அளவு குறையும். அதிகமாகப் பயனாகும் காரணி விளைவிக்கும் அளவு இறுதிநிலையில் குறைந்தபோதிலும் மொத்த உற்பத்தி கூடும். ஆனால், நீண்ட காலத்தில் இக் கூடுதல் ஏற்படாது. ஏனெனில், ஒரு காரணியின் பயன்பாடு மிகுதியடைந்தால், அதன் முந்தய உற்பத்தி குறையும். உதாரணமாக, ஒரு குடும்பத்தில் ஒரேஒரு தறி இருக்கின்றது என்று கற்பனை செய்துகொள்வோம். மேலும் மேலும் அதிகமான வர்கள் அதைப் பயன்படுத்தினால் ஒவ்வொருவரும், மாறும்பொழுது உற்பத்தியில் அவசியமற்ற கால தாமதமாகின்றது. இதனால் மொத்த உற்பத்தி குறையும். முதலில் சிலர் முழு வேலை செய்யமாட்டார்கள். நாளடைவில் சிலர் வேலையே செய்யாமல் இருக்கலாம்.

'குறைந்துசெல் விளைவு' என்பதைவிட, 'மாறும் விளைவு' என்பதே சிறந்ததாகும். ஏனெனில், ஒரு காரணி (மற்றவை

களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது) குறைவாக இருந்தால், அதை அதிகமாகப் பயன்படுத்தும்பொழுது, அதன் விலைவு மிகுதியடையும். ஆனால், இந்தக் காரணியின் பயன்பாடு பெருகியபின், குறைந்துசெல் விலைவு விதி இயங்கும்.

உதாரணமாக, ஒரு குடும்பத்தில் இரு பணியாட்கள் இருக்கின்றனர் என்று நாம் கற்பனை செய்துகொள்வோம். இவர்களைக் கொண்டு, ஓர் ஏக்கர் நிலத்தை அதன் எல்லைவரை செம்மையாகப் பயன்படுத்த இயலவில்லை. இரு பணியாட்களும் முழு வேலை செய்யவில்லை. பின்னர், இக் குடும்பம் ஆண்டுதோறும் ஓர் ஏக்கர் நிலத்தை வாங்கி, மொத்த நிலப்பரப்பை ஐந்து ஏக்கராகப் பெருக்கிவிட்டது. மேலும், அதிகமான மூலதனப் பொருள்களையும் வாங்கிவிட்டது. இரண்டாவது ஏக்கரை வாங்கியபிறகு, நிலப்பரப்பின் எல்லை மிகவும் விரிந்துவிட்டது. ஆனால், இறுதி உற்பத்தியும், சராசரி உற்பத்தியும், மொத்த உற்பத்தியும் அதிகரித்தன. அதிகமாகப் பயனுகும் காரணியின் இறுதிநிலை அலகு விலைவிக்கும் உற்பத்தி இறுதிநிலை உற்பத்தி எனப்படும். இறுதி நிலை அலகு ஒன்றாகவோ அல்லது அதற்கு மேற்பட்டதாகவோ இருக்கலாம். மாறும் காரணி விலைவிக்கும் உற்பத்தியின் சராசரியைச் சராசரி உற்பத்தி என்று கூறலாம். மொத்த உற்பத்தியை மாறும் காரணியின் அலகுகளால் வகுத்தால், வரும் தொகையே சராசரி உற்பத்தி. இங்கு, ஏக்கர்களால் வகுக்க வேண்டும். இரண்டாவது பட்டியல் இதை எடுத்துக்காட்டும். மூன்றாவது ஏக்கர் நிலத்தைச் சரியாகச் செய்துவிட்டது ; இதன் இறுதி உற்பத்தி 808 lb. சராசரி உற்பத்தி 779 lb ஆக உயர்ந்தது. இறுதி உற்பத்தியும், சராசரி உற்பத்தியும் மிகுதியடைவதிலிருந்து ' வளர்ந்துசெல் விலைவு ' ஏற்படுவதை நாம் பார்க்கின்றோம். நான்காவது ஏக்கர் சேர்வதால், தலா உற்பத்தி கூடவில்லை. இறுதி உற்பத்தி மாறுமல் இருக்கின்றது; சராசரி உற்பத்தி சிறிது கூடுகின்றது. நான்காவது ஏக்கர் சேர்வதால், நிலம் மிகவும் பெரியதாகிவிடுகின்றது. இரு விவசாயிகள் அதிகமான மூலதனப்பொருள்கள் இல்லாமல் அதை நன்கு பயன்படுத்த இயலவில்லை. ஆகையால், இறுதி உற்பத்தி குறையும். ஆனால், மொத்த உற்பத்தி கூடும்.

இரண்டாவது பட்டியல், நிலம் 20 ஏக்கராக இருக்கும்பொழுதும் 40 ஏக்கராகப் பெருகும்பொழுதும் ஏற்படும் நிலைமையைக் காட்டுகின்றது. அதன் பரப்பு 20 ஏக்கராகும்பொழுது மொத்த விலைச்சல் பெருகுகின்றது. ஆனால், சராசரி உற்பத்தி குறைகின்றது. இறுதி உற்பத்தி மேலும் குறைகின்றது என்பதை இது காட்டுகின்றது. 19 ஆவது ஏக்கரின் விலைச்சல் தெரியாததால்

பட்டியல் 2

நிலத்தின் விளைச்சல் (lb – ல்)

பயிராகும் ஏக்கர்களின் எண்ணிக்கை (1)	நிலத்தின் மொத்த உற்பத்தி (2)	விவசாயிகளின் எண்ணிக்கை[1] (3)	ஏக்கரின் சராசரி உற்பத்தி[2] (4)	இறுதி ஏக்கரின் உற்பத்தி[3] (5)
1	790	2	790	790
2	1,590	2	795	800
3	2,398	2	799	808
4	3,206	2	801	808
5	4,006	2	800	800
20	6,000	2	300	—
40	3,000	2	75	—

(1) மூலதனம் அதிகமாகப் பயனுவதில்லை என்று கற்பனை செய்து கொள்கின்றோம்.
(2) 1959-60-ல் இந்தியாவில் ஓர் ஏக்கரின் சராசரி உற்பத்தி 808 lb.
(3) 19, 39 ஏக்கர்களுக்கு விவரங்கள் இல்லாமையால் நிலத்தின் இறுதி உற்பத்தியை நாம் கொடுக்கமுடியாது.

இறுதி உற்பத்தியை நாம் இங்குக் குறிப்பிடவில்லை. நிலப்பரப்பு 40 ஏக்கராக இருக்கும்பொழுது இருவர் வேலையைச் செம்மையாகச் செய்யமுடியாது. நிலம் மிகவும் பெரியதாக இருக்கும். கருவிகளும் குறைவாகவே இருக்கின்றன. சராசரி உற்பத்தி மிகவும் குறைவதோடல்லாமல், மொத்த உற்பத்தியும் முன்பு இருந்ததில் பாதி பாகமே இருக்கின்றது. கற்பனையைக்கொண்டு தயாரித்த இப்புள்ளி விவரங்கள், இருவர் புராதனக் கருவிகளைப் பயன்படுத்தி 40 ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்தால் ஏற்படும் நிலைமையை நாம் எடுத்துக்காட்டினோம். அவர்களுடைய உழைப்பின் பலன் மிகக் குறைந்த அளவு 40 ஏக்கரில் பரவியிருக்கும். திறமையற்ற முறையில் சாகுபடி நடந்திருப்பதால் விளைச்சல் மிகவும் குறைவாக இருக்கும். மிகுதியான ஆட்களை அமர்த்திக் கருவிகளையும் பயன்படுத்தினுலன்றி நிலச்சுவான்தார் ஒரு பகுதியைக் குத்தகைக்கு விடவோ அல்லது விற்பனை செய்யவோ நேரிடும். இந்த விதி, அனுபவத்தையும் கவனித்துப் பார்ப்பதையும் பகுத்தறிவையும் அடிப்படையாகக்கொண்டிருக்கின்றது. பட்டியல்கள் கொடுக்கும்

எண்கள் இதன் உட்கருத்தை வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றன. நிலத்தை மட்டுமன்றி, வேறு எந்த உற்பத்திக் காரணியைக் கூட்டினாலோ, குறைத்தாலோ இதேவிளைவு ஏற்படும். மாறும் காரணியைத் தவிர, வேறு எல்லாம் ஒரே நிலையில் இருக்கின்றன என்பது விதியின் எடுகோள். ஏதேனும் ஒரு காரணியின் திறமையை அதிகரிக்கும் ஒரு புதிய கண்டுபிடிப்பு ஏற்பட்டால், குறைந்துசெல் விளைவு விதியின் வேலை தாமதப்படும். மாறும் காரணி மனித உழைப்பாய் இருக்கும்பொழுது, புதிய கண்டுபிடிப்பின் விளைவால், மனித உழைப்பின் தேவை குறைந்தால் (அதாவது குறிப்பிட்ட அளவு உற்பத்தி செய்ய முன்பைவிடக் குறைந்த அளவு மனித உழைப்பு வேண்டும்) இந்த விதி விரைவில் இயங்கத் தொடங்கும்.

இக் கருத்துகளும், பதிலிப் பொருள்களைப் பயன்படுத்துவதுபற்றிய கருத்தும், அதன் குறைகளும் நமக்கு உதவியாக இருக்கின்றன. தொழில் துணிவோனுடைய (entrepreneur) பிரச்சினைகளின் இயல்புகளையும் திட்டமிடுவோரின் பிரச்சினைகளின் இயல்புகளையும் அறிவதற்கு இவை உதவியாக இருக்கின்றன. 'நாட்டின் உற்பத்திச் சாதனங்களையும் உழைப்பையும் எவ்வாறு சிறந்தமுறையில் பயன்படுத்தலாம் என்பதே, ஒரு நாட்டின் முக்கியமான பொருளாதாரப் பிரச்சினையாகும்' என்று பென்ஹாம் கூறுகிறார்.[1] உற்பத்திபற்றிய 'தேர்வு முறை' (choice of technique) இப் பிரச்சினையில் அடங்கியுள்ளது. ஓர் அளவு பொருள் உற்பத்தி செய்யும்பொழுது, ஒரு காரணிக்குப் பதிலாக வேறு ஒன்றை ஓரளவு பயன்படுத்தலாம். இதனால்தான் தேர்வுப் பிரச்சினை எழுகின்றது. ஒன்றுக்குப்பதிலாக மற்றொன்றை எந்த அளவுவரை பயன்படுத்தலாம் என்பதைத் தொழில் நுணுக்க அறிவு, முன்னேற்றம், புதிய கண்டுபிடிப்பு முதலியவை நிர்ணயம் செய்கின்றன.

உதாரணமாக ஓர் உணவுப் பொருளைச் சாகுபடி செய்ய அதிகமான நிலத்தையும், புதிய உற்பத்திக் கருவிகளையும், குறைவான மனித உழைப்பையும் பயன்படுத்தலாம். அல்லது குறைவான நிலத்தையும், மிகுதியான மனித உழைப்பையும், பழைய உற்பத்திக் கருவிகளையும் பயன்படுத்தலாம். இதில் எந்த முறை சமுதாயத்திலிருக்கும் உழைப்பாளர்களுக்கும், சாதனங்களுக்கும் சிறந்த வேலை கொடுக்கின்றது? இதன் விடை நாட்டிலிருக்கும் உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்தே இருக்கும். கனடா (Canada) நாட்டில் அதிகமான நிலத்தையும், மூலதனக் கருவிகளையும் மனித உழைப்புக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம். இயந்திரங்களை

[1] பொருளியல், ஆறாவது பதிப்பு, பக்கம், 103.

இயக்குவதற்குத் தேவையான குறைந்தபட்சத் தொழிலாளர்கள் நீங்கலாக, மற்றவர்களுக்குப் பதிலாக இயந்திரங்களையே பயன் படுத்தலாம். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் செறிந்த வேளாண்மை (intensive cultivation) நடைபெறுகின்றது. விவசாயி கள் பழைய கருவிகளைக்கொண்டு வேலைசெய்கின்றனர். தொழி லாளியின் தலா உற்பத்தி குறையத் தொடங்கும்வரை அல்லது மொத்த உற்பத்தி குறையத் தொடங்கும்வரை, மேற்கூறியதுபோல் மூலதனக் கருவிக்கும் நிலத்திற்கும் பதிலாக மனித உழைப்பைப் பயன்படுத்துகின்றனர். முன்பு நாம் விளக்கிய உற்பத்திமுறை ஒரு மனிதனின் தலா உற்பத்தியை உச்சநிலைக்கு உயர்த்தும். பின்னர் விளக்கியுள்ளமுறை, ஓர் ஏக்கரின் தலா உற்பத்தியை உச்சநிலைக்கு உயர்த்தும். இருமுறைகளிலும் எந்தக் காரணி குறைவாக இருக்கின்றதோ அதன் உற்பத்தி உயர்ந்தபட்ச மாகின்றது. ஆனால் சில தொழில்களில் ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றைப் பயன்படுத்துவது மிகக் குறைந்த அளவே சாத்திய மாக இருக்கின்றது. உதாரணமாக, ஓர் எண்ணெய்ச் சுத்தி இயந் திரத்திற்கோ அல்லது நீர் மின்சக்தி உற்பத்திப் பொறிக்கோ பதிலாக ஒரு பட்டாளத்தைக்கூட (அதாவது மிக அதிகமான தொழிலாளர்களைக்கூட) நாம் தொழிலில் அமர்த்தமுடியாது. உண்மை மூலதனப் பொருள் (real capital) மின்சக்திப்பொறி அல்லது எண்ணெய் சுத்தி இயந்திரத்தைப்போல் மிகப் பெரியதாக வும் சிறு அலகுகளாகப் பிரிக்க முடியாததாகவும் இருந்தால் தொழில் விரிவடைதல், உற்பத்திப் பெருக்கம், முதலீட்டுப் பெருக் கம் முதலியன தடையாகாமல் நீடித்துச் செல்லா. ஒரு பொறி முழுமையாகப் பயனுகும்பொழுது, பூர்த்தியாகாத தேவை இருக்க லாம். ஆனால், இத் தேவை மிகக் குறைவாக இருப்பதால், புதிய இயந்திரம் ஒன்றை நிறுவுவது சாத்தியமில்லாமல் இருக்கலாம். இதன் விளைவாகப் பொருளின் விலை உயரலாம். நிறுவனம் தன் விற்பனையிலிருந்து அதிகமான இலாபத்தைப் பெறலாம். ஓர் உற்பத்திக் காரணியின் அளிப்பு மாறுத நிலையில் இருப்பதால், அது உற்பத்தி செய்யும் பொருளின் விலை மிகுதியடைகின்றது. ஆகை யால் இது வாரம் (rent) போன்ற வருமானமாக இருக்கின்றது. இதைத் தற்காலிக வாரம் (quasi rent) என்றழைப்பர். சிறந்த இரண சிகிச்சை நிபுணர்களைப் போன்றவர்களும் இத்தகைய தற்காலிக வாரத்தைப் பெறலாம்.

ஒரு காரணிக்குப் பதிலாக மற்றொன்றைப் பயன்படுத்துவ தையும், காரணிகளைச் சேர்த்துச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு பயன் படுத்துவதையும் அவை கொண்டிருக்கும் இடப் பெயர்ச்சி நிர்ணயம் செய்யும். சில வகை இயந்திரங்களும், சிலருடைய உழைப்பும், குறிப்பான சில துறைகளிலேயே பயன்படும். அவற்றை

இழப்பைத் தவிர்க்காமல் வேறு துறைகளுக்குத் திருப்ப முடியாது. நிலத்தை ஒரு பகுதியிலிருந்து வேறு ஒன்றுக்கு மாற்ற முடியாது. தொழிலாளர்கள் தம் திறமை, தகுதி, தரம், விருப்பம் முதலியவற்றுக்குத் தகுந்தாற்போல் ஓரிடத்திலிருந்து மற்றொன்றுக்கும், ஒரு தொழிலிலிருந்து மற்றொன்றுக்கும் செல்ல முன்வருவர். சாதிக் கட்டுப்பாடுகளும், குடும்ப, மரபுக் கட்டுப்பாடுகளும் தொழிலாளர்களின் இடப் பெயர்ச்சியைப் பாதிக்கின்றன.

மக்கள் தொகை அதிகரித்தால், தொழிலாளர்களின் (தொழில்களுக்கிடையே ஏற்படும்) இடப் பெயர்ச்சியும் அதிகரிக்கும் புதியதாகத் தொழிலாளர் மார்க்கட்டில் நுழைவோரைப் புதிய தொழில்களில் அமர்த்தலாம்; அல்லது பெருகும் தொழில்களில் அமர்த்தலாம். மற்றத் தொழில்களில் இருக்கும் வயதானவர்களைப் புதிய தொழில்களுக்குப் பயிற்சி கொடுத்துத் தயார் செய்வது கடினம்.

B. உற்பத்திக் காரணிகளின் வேலையும் அவைகளுடைய விலையும்

(i) நிலம் (இயற்கைச் சாதனங்கள்)

நிலம் என்ற சொல், எல்லா இயற்கைச் சாதனங்களையும் (தட்ப வெப்ப நிலை உள்பட) குறிக்கும். இவைகளில் சில இல்லாவிடில் உற்பத்தியே நடைபெறாது. கருவிகளே தேவையில்லாத (தசைகளை அழுத்திப் பிடிப்பதுபோன்ற) பணிகளைச் செய்வதற்குக்கூட நிலம் வேண்டும். நிலம் அளிக்கும் பண்டங்களின் தேவையும், அது கொடுக்கும் வசதிகளுக்கு எழும் தேவையும் நிலத்தின் தேவையாகின்றன. ஒரே நாட்டில் நிலத்தின் விலை பற்பல பகுதிகளுக்குத் தகுந்தவாறு வேறுபட்டிருக்கின்றது. மிக நெருக்கமான நகர்ப் புறங்களில் அதன்விலை உயர்வாகவும், கிராமாந்தரப் பகுதிகளில் குறைவாகவும் இருக்கின்றது. ஒன்றுமே விளையாத பாலைவனப் பகுதிகளுக்கும், பாறைப் பகுதிகளுக்கும் மதிப்பே கிடையாது. (அண்மையில் வாழ்வோரின் கொடுமைகளைத் தடைசெய்யும் கருவியாகமட்டும் அது பயன்படலாம்.) எந்த நாட்டின் பயிராகும் நிலத்தின் அளிப்பைப் போக்குவரத்து வசதி, நீர்ப்பாசன வசதி முதலியவைகளின் சீரமைப்பின்மூலம் பெருக்கலாம். இவை நிலத்தின் மதிப்பையும் உயர்த்தும். செறிந்த வேளாண்மைமூலம் சாகுபடியாகும் நிலத்தின் மதிப்பை உயர்த்தலாம்; உற்பத்தியும் மிகுதியடையும். போட்டி நிலவினால் நிலத்தின் அளிப்பும் அதன் தேவையும் அதன் மதிப்பை அல்லது விலையை நிர்ணயம்செய்யும் (நிலத்தின் விலையும் மற்றப் பொருள்களின் விலைபோலவே நிர்ணயமாகின்றது).

நிலத்தின் குத்தகையும், விலையும் போட்டியால் நிர்ணயமாகும் நாடுகளில், அதன் உற்பத்திப் பொருள்களின் தேவைப் பட்டியல்கள் அல்லது கோடுகள் சேர்க்கப்பெற்றால், நிலத்தின் தேவைக் கோடும் பட்டியலும் உருவாகும். நகர்ப்புற இடங்களின் தேவை, அவை ஆற்றக்கூடிய பணிகளைப் பொறுத்தே இருக்கின்றது,

நிலத்தைச் சீரமைப்புமூலம் பண்படுத்தலாமே தவிர, அதன் பரப்பைப் பெருக்க முடியாது. அதன் மொத்த அளிப்பு நெகிழ்ச்சியற்றதாக இருக்கின்றது. அது அடக்கச் செலவைப் பொறுத்துக் குறையவோ அல்லது கூடவோ முடியாது. இதனால்தான் 'வாரம் (rent) அடக்கச் செலவில் இடம்பெறாது' என்று கூறுகின்றனர். நாட்டின் பொருளாதார அமைப்பு முழுமைக்கும் இது பொருந்தும். ஏதேனும் ஒரு பெரிய விபத்தின் விளைவாக மக்கள் தொகையில் அரைப் பகுதியினர் மாண்டால், வாரம் (rent) மிகவும் குறையும். ஆனால், நிலத்தின் பரப்பு முன்பு இருந்தபடியேதான் இருக்கும். சில பகுதிகள் சாகுபடி செய்யாமலிருக்கப்படலாம். 18 ஆவது நூற்றாண்டின் இறுதியிலும், 19 ஆவது நூற்றாண்டின் தொடக்கத்திலும் வங்காளத்தில் சில பகுதிகளில் போர், குழப்பம் முதலிய காரணங்களால் மக்கள் தொகை மிகவும் குறைந்துவிட்டது. நிலச்சுவான்தார்களிடையே, தம் நிலத்தைச் சாகுபடிக்கு விடுவதற்குப் போட்டி ஏற்பட்டது. நிலத்தைச் சாகுபடி செய்தவர், நிலச்சுவான்தார்களின் பணியாட்களாகவும் தொண்டாற்றினர். ஆனால், தனிப்பட்ட ஒருவன் நிலையைப் பார்க்கும்போது, அவன் நிலத்திலிருந்து பெறும் வருவாயைக்கொண்டே வாரத்தைச் செலுத்தவேண்டும் என்பதை நாம் கவனிக்கின்றோம். எனவே, அவனுக்கு வாரம் அடக்கச் செலவின் ஒரு பகுதியாகவே இருக்கின்றது.

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் விவசாய நிலங்களின் விலை தொடர்ந்து நிர்ணயமாகும் மார்க்கட்டு இல்லை. நிலம் விற்பனையாகின்றது, வாங்கப்படுகின்றது என்பது உண்மை. சாதாரணமாக ஒரு பகுதியில் அவ்வப்போது இது நடைபெற்றபோதிலும், நிலத்தின் தேவையும் அளிப்பும் சமமாகும் 'சமநிலை விலை' (equilibrium price) நிர்ணயமாவதில்லை. இத்தகைய விலை குறுகிய காலத்திலும் ஏற்படுவதில்லை. நீண்டகாலத்திலும் ஏற்படுவதில்லை. எனவே, நிலத்தின் வாரத்துடன் அதன் விலையைத் தொடர்புபடுத்தியே அதை நிர்ணயம் செய்வது வழக்கம். வாங்கிய பின், குறிப்பிட்ட சில ஆண்டுகள் நிலம் அளிக்கும் வாரத்தைக் கணக்கிட்டு (அதாவது வாரத்தின் மதிப்பை ஆண்டுகளால் பெருக்கி) நிலத்தை மதிப்பீடு செய்வது வழக்கம். ஆனால், இந்த முறையும் சமநிலை விலையை ஏற்படுத்தாது. ஏனெனில், சட்டப்படி சில குறிப்பிட்ட நிலங்களில் விவசாயிகள் செலுத்தும் வாரத்திற்கு

உச்சவரம்பை அரசினர் ஏற்படுத்தியுள்ளனர். எனவே, நிலத்தின் அளிப்பும், வாரமும் மாறுமல் ஒரே நிலையில் இருக்கின்றன என்று கருதலாம். தேவை, அளிப்பைவிடக் கட்டுப்பாடு செய்யப்பட்ட விலையில் (அதாவது வாரத்தில்) மிகுதியாக இருந்தால், அதன் (தேவையின்) ஒரு பகுதி பூர்த்தியடையாமல் இருக்கும். இந்தநிலை இப்பொழுது இருக்கின்றது; சிலர் நிலம் இல்லாமலும், சிலர் வாங்குவதற்கோ அல்லது குத்தகை எடுப்பதற்கோ தயாராக இருக்கும் அளவைவிடக் குறைவாகவே வாங்கவோ அல்லது குத்தகை எடுக்கவோ முடியும். போட்டி நிர்ணயம்செய்யும் சமநிலை அளவுக்கு வாரங்களை உயரவிட்டால் என்ன விளையும் என்பதைச் சிந்திக்கவே ருசிகரமாக இருக்கின்றது. விவசாயத்தை நன்கு செய்வோர் அதிகமான நிலத்தைப் பெறுவர். உற்பத்தி மிகுதியடையும். ஆனால், இந்த நன்மைக்கு எதிர் மாறுகப் பலர் நிலமில்லாமல் இருப்பர்.

ஒரு நிலத்தின் வாரத்தைக்கொண்டு, அதனுடன் தொடர்பு கொண்டிருக்கும் நிலத்தின் விலையைக் கணக்கிடும்பொழுது கீழ்க் கண்டவை அதை நிர்ணயம் செய்கின்றன என்று நாம் முடிவாகக் கூறலாம்: (i) நிலத்தின் வளமும் அதன் தட்பவெப்ப நிலையும், (ii) நாட்டில் அது இருக்கும் இடமும், அதை அடைவதற்கு வசதியும், (iii) அதன் மாற்றுப் பயன்கள் (இது தேவையைப் பாதிக்கும்.) உயர்ந்தபட்ச வாரத்தை நிர்ணயம் செய்யும்பொழுது இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மாநில அரசுகள் மேலே குறிப்பிட்டவைகளை ஆதாரமாகக் கொள்கின்றன.

(ii) மனித உழைப்பு

தொழிலை நிறுவுவோரைத் தவிர, மற்றவர்கள் (பொருளாதாரப் பணிபுரிவோர்) வேலையை, உழைப்பு என்ற சொல் குறிக்கின்றது. தொழில் துணிவோன் பணியை வேறுவகையில் சேர்த்துள்ளோம். தொழிலாளர்களின் உழைப்பு ஒரே வகை அலகுகளாக இல்லை. உழைப்பைத் தொழிலாளி அளிக்கின்றான். ஒவ்வொரு தொழிலாளியும் பிரிக்கமுடியாத ஓர் அலகுபோல் இருக்கின்றான். ஆனால், முழுவேலை செய்யாதவர்கள், அதாவது சில மணி நேரம் உழைப்பவர்களுடைய உழைப்பைச் சிறிய அலகுகளாகப் பிரிக்கலாம். மனித உழைப்பின் தன்மையும் தரமும் வேறுபட்டிருக்கின்றன. எனவே, உழைப்பை அளிக்கும் தொழிலாளர்களைப் பல்வேறு பகுதியினராகப் பிரிக்கலாம். இப் பகுதியினருக்குள் போட்டி இல்லை, இடப் பெயர்ச்சியும் (mobility) மிகக் குறைவாகவே இருக்கின்றது. உயர்ந்த ஊதியம் கிடைக்கும் தொழில்களுக்குச் சிறப்பான இயற்கைத் திறமையோ அல்லது மிகுதியான செலவுசெய்து பெறும் பயிற்சியோ வேண்டும். ஆகையால் குறைந்த வருவாயில்

இருப்போர், இத் தொழில்களை நோக்கி எளிதில் செல்வதில்லை. ஒரே வருமானத்தை அளிக்கும் ஒரு தொழிலிலிருந்து மற்றொன்றுக்குச் செல்வதற்கும் தடைகள் இருக்கின்றன. போட்டியிடாத பல்வேறு பிரிவுகளுள், ஒவ்வொன்றிலும் உழைப்பின் விலை (ஊதியம்) அதன் தேவையாலும், அளிப்பாலும் நிர்ணயிக்கப்பெறுகின்றது. இது மற்றத் தொடர்புள்ள பிரிவுகளில் நிர்ணயமாகும் ஊதியத்தையும் பாதிக்கின்றது. 'கூலியின் இறுதிநிலை உற்பத்திக் கோட்பாடும்' (marginal productivity theory of wages) இதே தத்துவத்தை வேறு விதத்தில் கூறுகின்றது. தொழிலாளி தன் இறுதிநிலை உற்பத்திக்குச் சமமான கூலியைப் பெறுவோன் என்பதே இதன் பொருள். தொழிலாளியின் கூலிக்கும், அவனை வேலையில் அமர்த்துவதால் செய்யவேண்டிய மற்றச் செலவுக்கும் சமமான மதிப்புள்ள உற்பத்தியை அவன் (தொழிலாளி) செய்யும்வரை, மேலும் அதிகமான தொழிலாளர்களை வேலையில் அமர்த்துவது இலாபகரமாக இருக்கும் என்பது இக் கோட்பாட்டின் உட்கருத்து. ஒரு நிறுவனத்தின் பொருள்களுக்கு ஒரு தேவைப்பட்டியல் இருக்கின்றதென்றும், சூழ்நிலையில் மாறுதல்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும், தொழிலாளர்கள் ஒரே அளவு உற்பத்தி செய்வோராகவும், ஒரே தரத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர் என்றும், அவர்களுக்கு ஒரே (சமமான) கூலி கொடுக்கப்படுகிறதென்றும் கற்பனை செய்துகொண்டால், தொழிலாளர்களுடைய இறுதிநிலை உற்பத்தி அவர்களுக்கு ஏற்படும் தேவையைப் பாதித்து அதன்மூலம் கூலியை நிர்ணயம் செய்யும். அரசினர் ஏற்படுத்தியுள்ள கூலியில் முன்பு வேலையில் இருந்த எண்ணிக்கை தொழிலாளர்களை அமர்த்த இயலாவிடில், பலர் வேலையிலிருந்து நீக்கப்படுவர். நிலைமையை மாற்றும் மற்ற எதுவும் நிகழாவிடில், குறைந்த எண்ணிக்கைத் தொழிலாளர்களுடன் முன்பைவிட மிகுதியான மற்றக் காரணிகளைச் சேர்த்து உற்பத்தியாளர்கள் உற்பத்தியைச் செய்வர். இந்த நிலை தற்காலிகமாவது ஏற்படும். இந்த நிலையில் தொழிலாளியின் உழைப்பு குன்றுவதால், அதன் இறுதிநிலை உற்பத்தி உயரும். அது புதிய கூலிக்குச் சமமாக இருக்கும். இந்த நிலையில் இறுதிநிலை உற்பத்தி (marginal productivity) கூலியை நிர்ணயம் செய்கின்றதா அல்லது கூலி இறுதிநிலை உற்பத்தியை நிர்ணயிக்கின்றதா என்று முடிவுசெய்வது கடினம். இக் கோட்பாட்டின் மற்றக் குறைகளையும் பலர் எடுத்துக்காட்டுகின்றனர். ஆனால், அவை நமது ஆராய்ச்சியை இங்குத் தடை செய்யவேண்டா.[1] தொழிலாளியின் (அல்லது தொழிலாளர்களின்) இறுதிநிலை உற்பத்தி கூலிக்குச் சமமாக இருக்கும். இறுதி வருவாயும் (marginal revenue) இறுதி அடக்கச்

[1] எஃப். சி. பென்ஹாமின் 'பொருளியல்', ஆறுவது பதிப்பு, 362ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

செலவும் (marginal cost) ஒன்றுகும்வரை, உற்பத்திப் பெருக்கம் நீடிக்கும் என்ற பொது விதியின் தொழிலாளர்பற்றிய கூறுகவே, மேலே நாம் விளக்கியுள்ள விதி இருக்கின்றது. (புதிதாக வேலையில் அமர்த்தப்படுவான் என்பதே இக் கூறுகும்,) திறமை உள்ள தொழிலாளர்கள் பயிற்சியற்றவர்களைவிட, ஏன் உயர்ந்த கூலியைப் பெறுகின்றனர் என்பதை இக் கோட்பாடு விளக்குகின்றது. பயிற்சி பெற்றவர்களுடைய இறுதிநிலை உற்பத்தி, பயிற்சிபெறுதவர்களுடைய உற்பத்தியைவிட அதிகமாக இருக்கின்றது.

மேல குறிப்பிட்ட உதாரணத்திலிருந்து சட்டம்மூலம் கூலியை நிர்ணயம்செய்தால், வேலை வாய்ப்புகள் குன்றும் என்பது புலனுகின்றது. வளரும் பொருளாதார நாடுகளில் வேலைவாய்ப்புகள் பெருகவேண்டும். இந்த நிலையில் கூலி நிர்ணயக் கொள்கை சிறந்த பலனளிக்குமா என்ற ஐயம் எழுகின்றது. எல்லாத் தொழில்களிலும் கூலி நிர்ணயிக்கப்பெற்றால், இக் கொள்கை வெற்றிகரமாக இருக்கலாம். ஆனல், உற்பத்திக் காரணிகளிடையே ஏற்படும் தேசிய வருமானப் பங்கீடு மாறும். (தொழிலாளர்கள் தவிர, மற்ற உற்பத்திக் காரணிகள் இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும்.) ஆனல், உண்மையில் விலை நிர்ணயக் கொள்கையை அரசு அமைப்புபெற்ற தொழில் துறையில் மட்டும் செயலாற்றலாம். இதனல் இப் பகுதியில் சாதாரணமாக வேலையில் அமரக்கூடிய தொழிலாளர்கள் அமைப்பற்ற பகுதியை நோக்கிச் செல்லக்கூடும். இவ் விரு பகுதிகளுக்கு இடையே இருக்கும் வேறுபாடு மிகுதியடைகின்றது. தொழில் கேந்திரங்களில் தொழிலாளர்கள் முன்னேற்றத்திற்கு எதையும் செய்யவேண்டா என்று நாம் இங்குக் குறிப்பிடவில்லை. அவர்கள் நலனேப்பேணும் மற்ற வசதிகளை (வீடுகட்டிக் கொடுத்தல், சிற்றுண்டிச்சாலை அமைத்தல் போன்றவை) செய்து கொடுக்கலாம். நகராட்சி வருவாயைக்கொண்டோ அல்லது மத்திய அரசின் வருவாயைக்கொண்டோ இவைகளைச் செய்யவேண்டும்.

ஒரு தொழிலில் இருக்கும் நலன்களையும், தொல்லைகளையும் சரிக்கட்டுவதற்குத் தகுந்த கூலி தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் பெறும். இக் கூலியே உழைப்பின் விலை (price of labour) யாகும் தொழிலாளர்களுடைய வருமானம், கூலியைமட்டும் பொறுத்திருக்காது. அவர்கள் செய்யும் வேலையின் அளவு (அதாவது அதிகநேர வேலை), வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் அல்லது ஆண்டுதோறும் வேலை நீடித்துக் கிடைப்பது முதலியவையும் அவன் வருமானத்தைப் பாதிக்கும். மேலும், வேலை செய்யும் இடம் சுத்தமாக இருத்தல், வேலைக்கு வேண்டிய கடினமான உடலுழைப்பு முதலியவற்றையும் நாம் சிந்திக்கும்பொழுது

அசுத்தமான இடத்தில், கடினமான வேலைசெய்ய உயர்ந்த கூலி கொடுக்கப்படவேண்டும். ஆனால், உண்மையில் நிலைமை வேறு பட்டிருக்கின்றது. மிகவும் கவர்ச்சியற்ற வேலையில் குறைந்த கூலி கொடுக்கப்படுகின்றது. பயிற்சிபெறுத தொழிலாளர்களின் அளிப்பு எல்லா நாடுகளிலும் மிகுதியாக இருத்தலே இதற்குக் காரணமாகும். கவர்ச்சியற்ற அலுவல்களுக்குப் பயிற்சி வேண்டிய தில்லை. ஆகையால் இத்தகைய வேலைகளுக்குச்செய்ய உயர்ந்த கூலிகளைக் கொடுத்துத் தொழிலாளர்களை ஈர்க்கவேண்டியதில்லை. வளர்ச்சியடையும் நாடுகளில் பயிற்சிபெறுத தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருத்தலைவிட, இத்தகைய வேலைகளில் அமர் வதற்கு முன்வருகின்றனர்.

தொழிலாளர்களின் பணிக்கு ஏற்படும் தேவை, நிலத்தின் தேவையைப்போல, வழிவந்த தேவையாகும் (derived demand.) அவர்கள் உற்பத்திசெய்யும் பொருள்களின் தேவையே இதைப் பாதிக்கும். போட்டி நிலவும்பொழுது இப் பொருள்களின் விலையைத் தேவையும் அளிப்பும் நிர்ணயம் செய்கின்றன. உழைப் பின் விலையை விளக்குவதற்கு, இறுதிநிலை உற்பத்திக் கோட்பாடு அவசியமில்லை என்று இதிலிருந்து தோன்றுகிறது. இறுதிநிலை உற்பத்தி, தேவையைப் பாதிக்கும் ஒரு முக்கியமான சக்தியென்று நாம் கருதுவதே சிறந்ததாகும்.

பொருள்களின் அளிப்பையும், பணிகளின் அளிப்பையும், அவை களுடைய தன்மையையும் பாதிக்கும் சில அடிப்படைச் சக்திகளை மூன்றுவது அதிகாரத்தில் பார்த்தோம். இவை உழைப்பின் அளிப்பையும், வேலை செய்யும் திறனையும் அதற்கு வேண்டிய விருப்பத்தையும் கொண்டவர்களின் எண்ணிக்கையைப் பாதிக்கும். நிலப்பரப்பைப்போல், உழைப்பு 'உற்பத்தி செய்யப்படவில்லை'. ஆனால், தொழிலாளர்கள் அளிக்கும் உழைப்பு அலுவலகத்தின் சூழ்நிலையையும், கூலியையும்பொறுத்துக் குறையும் அல்லதுகூடும். அதாவது, தொழிலாளர்கள் குறைவான எண்ணிக்கையிலோ, (அல்லது பெண்களோ, வயதானவர்களோ), 'தொழிலாளர்கள் மார்க்கட்டில்' புகுவர், அல்லது மார்க்கட்டில் முன்பே இருப் பவர்கள் நீண்டநேரமோ அல்லது குறைவான நேரமோ பணிபுரி வார்கள். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வேலையின்மையும், முழுவேலையின்மையும் அதிகமாக இருப்பதால், குறைவான தொழிலாளர்கள் முழு வேலையில் அமர்வதைவிட, மார்க்கட்டில் நிலவும் கூலியைப்பெற அதிகமானவர்கள் (குறைவான வேலையைச் செய்ய) முன்வருவர். இதிலிருந்து பலர் தற்காலிகமாக உள்ள வேலைகளையும், நீடித்து நடைபெறுத வேலைகளையும், தகுதிக்கும் திறமைக்கும் பொருத்தமான கூலியைவிடக் குறைவான கூலியைக்

கொடுக்கும் வேலைகளையும் ஏற்றுக்கொள்வர் என்பது தெளிவாகின்றது. பலர் வேலையே கிடைக்காததால் ஒரு பணியிலும் ஈடுபடாமலிருப்பர்.

குறிப்பிட்ட துறைகளில் வேலைசெய்ய முன்வருவோரின் எண்ணிக்கையை, கூலியும் மற்றத்துறைகளில் கிடைக்கும் வாய்ப்புகளும் நிர்ணயம் செய்கின்றன.

மனித உழைப்பின் விலையை நிர்ணயம்செய்யும் வேறு இரு சக்திகளும் இங்குக் குறிப்பிடத்தக்கவை. இவை தொழிலாளர்கள் சங்கங்களின் சக்தியும், உயர்ந்த கூலிகொடுப்பதால் ஏற்படும் சிக்கனமும், சக்தியுள்ள தொழிலாளர் சங்கங்கள் அங்கத்தினர்களைச் செம்மையாகக் கண்காணித்துப் பிறர் தொழிலில் நுழைவதைத் தடுத்து, உழைப்பின் அளிப்பில் ஒரு சர்வாதீனத்தை ஏற்படுத்தலாம். நான்காவது அதிகாரத்தில் கூறியுள்ளபடி இவை கூலியையும் உயர்த்தலாம். சில சந்தர்ப்பங்களில் ஒரு நிறுவனம் மற்ற நிறுவனங்கள் கொடுப்பதைவிட, உயர்ந்த கூலியைக் கொடுப்பதே சிறந்ததாக இருக்கலாம். இப்படிச் செய்வதால் தொழிலாளர்களுடைய உடல்நலம், திறமை, மனப்பான்மை முதலியவை முன்னேறலாம்; தலா உற்பத்தியும் பெருகலாம். ஆனால், தொழிலாளர்களின் உற்பத்தி முன்பே அதிகமாக இருந்தால், இதில் மேலும் முன்னேற்றம் ஏற்படாமல் இருக்கலாம்.

(iii) மூலதனம் அல்லது முதல்

உற்பத்திக்கு உதவியாக இருக்கும் எல்லாச் சொத்துகளும், தளவாடப் பொருள்களும் மூலதனமாகும். தளவாடப் பொருள்களுக்காகச் செலவு செய்யப்படாத ரொக்கமும் முதல் அல்லது மூலதனமாகும். கையிருப்புப் பணம், பாங்கு டெபாசிட்டுகள் முதலியன இத்தகையவை, குறுகிய நேரத்தில் பணமாக மாற்றக் கூடியவை.

ஒரு நாட்டில் இருக்கும் உண்மை மூலதனம் அதன் உற்பத்தியைப் பெருமளவு பாதிக்கின்றது. ஏனெனில், தளவாடப் பொருள்கள் இல்லாமல், சில பண்டங்களை உற்பத்திசெய்ய முடியாது. மேலும், தலா உற்பத்தி தொழிலாளர்கள் பயன்படுத்தும் தளவாடப் பொருள்களைப்பொறுத்தே இருக்கும். முன்னேற்ற மடைந்த நாடுகளில் வளரும் நாடுகளைவிட, அதிகமான தலா உற்பத்தி இருப்பதற்கு அந் நாடுகளில் தொழிலாளர்கள் மிகுதியான தளவாடப் பொருள்களைப் பயன்படுத்துவதே பெருமளவு (ஆனால், முற்றிலும் அல்ல) காரணமாக இருக்கின்றது.

கீழ்க்கண்டவை உண்மையான மூலதனப் பொருள்களின் வகைகள் : (1) நிலையான, மாறுத மூலதனப் பொருள் (மனிதன் நிலத்தில் ஏற்படுத்திய சீரமைப்பு உள்பட), கட்டட வேலையும், போக்குவரத்துச் சாதனத்தில் ஏற்படும் முன்னேற்றமும் இந்த வகையைச் சேர்ந்தவை. (ii) புரளும் முதல் (circulating capital)—அதாவது கச்சாப் பொருள்கள் (raw materials), உற்பத்தியில் பயன்படும் இடைத்தரப் பொருள்கள் (intermediate goods), உற்பத்தியான, விலையாகாத பொருள்கள். (iii) வீடுகள், நகைகள், மோட்டார் வண்டிகள் முதலிய நிலையான துய்ப்போர் பொருள்கள், (iv) துய்ப்போர் வைத்திருக்கும் மற்றப் பொருள்கள்.

சொத்து உரிமைப் பத்திரங்களையும், பங்குகளையும், பரங்கு டெபாசிட்டுத் தொகைகளையும், சேமிப்புத் தொகைகளையும் தனிப் பட்டவர்கள் முதலாகக் (capital) கருதுகின்றனர். ஆனால், இத் தகைய முதல், மற்றவர் அவர்களுக்குக் கடன்பட்டதன் குறிக ளாகவே இருக்கின்றன.[1] ஆகையால் இவைநாட்டின் மூலதனத்தில் அல்லது முதலில் இடம்பெரு. தொழிற்சாலை, இயந்திரம்போன்ற பொருள்களே நாட்டின் முதலாக இருக்கின்றன. இவை செய்யும் உற்பத்தியில் ஒரு பகுதியைப்பெறும் உரிமையைமட்டுமே மேலே குறிப்பிட்ட பங்குகள் கொடுக்கின்றன.

மூலதனப் பொருள்களை, மற்றப் பொருள்களைப்போலவே வாங்க லாம்; விற்பனையும் செய்யலாம். அவைகளுடைய விலையைத் தேவையும் அளிப்பும் நிர்ணயம் செய்கின்றன. பணமுதலை வாங்கவோ அல்லது விற்கவோ முடியாது. ஆனால், அதைக் கடனு கக் கொடுக்கலாம். வட்டியே கடன் தொகைக்காக அளிக்கப்படும் விலையாகும். கடனில் பலவகைகள் இருக்கின்றன. அவைகளுக் குத் தகுந்தவாறு வட்டி கொடுக்கப்படும்

குறைவாக இருக்கும் மூலதனத்தைப் பகிர்ந்து, மிகவும் இலாப கரமாக இருக்கும் தொழில்களில் அதைச் செலுத்துவதே வட்டியின் பணியாகும். பாதுகாப்புள்ள திட்டங்களை நாம் இங்குக் குறிப்பிட வில்லை. ஆபத்துள்ள திட்டங்களில் அவைகளைத் துவக்குவோர் நம்பிக்கை கொண்டிருந்தால், அவர்கள் வாங்கும் கடனுக்கு உயர்ந்த வட்டி கொடுக்கலாம். தொழிலைத் துவக்குவோர் (தம் பணத்தைப் பயன்படுத்தினுலன்றி) அதற்கு வேண்டிய பணத்தை மற்றவரிடமிருந்து பெறவேண்டும். ஏனெனில், புதிய இயந்திரங் களுக்கான செலவை முன்பே செய்யவேண்டும். பெரும்பாலும் உற் பத்தி தொடங்குவதற்குப் பல நாட்களுக்குமுன்பே செய்யவேண்டும்.

[1] எஃப். சீ. பென்ஹாம், 'பொருளியல்' ஆருவது பதிப்பு, பக்கம், 137.

உற்பத்தி தொடங்கிய பிறகுகூட, நிறுவனத்தின் அன்றாட இயக்கச்செலவுக்கு வேண்டிய தொகையை ஈட்டுவதற்குக் கால தாமதமாகும்; இலாபம் ஈட்டுவதற்கும் மேலும் நீண்டகாலமாகும். வளரும் நாடுகளில் சேமிப்பும், பணமுதலும் குறைவாக இருக்கின்றன. வளர்ச்சி ஏற்படவேண்டுமானால், உயர்ந்த வட்டிமூலம் சேமிப்புக்குத் தூண்டுதல் கொடுக்கவேண்டும். அயல்நாடுகளிலிருந்தும் கடன் வாங்கவேண்டும்.

இலாபகரமான முதலீட்டுக்கு இருக்கும் வாய்ப்புகளே கடனுக்குத் தேவையை ஏற்படுத்துகின்றன. மேலும், இவை இருப்பதைப் பார்த்து நிறுவனங்கள் முதலீடுசெய்ய முன்வரவேண்டும். தனிப்பட்டவர்களும், பங்குகளும், நிறுவனங்களும் கடன்கொடுக்கும் நிலையங்களும் பணத்தைச் சேமிக்கின்றன. அளிக்கப்படும் கடன் தொகையைச் சேமிப்புமட்டுமன்றி, சேமிப்போரின் 'ரொக்க விருப்பமும்' (desire for liquidity) நிர்ணயம் செய்கின்றது. அதாவது, அவர்கள் எதிர்பார்க்கும் அல்லது எதிர்பாராத செலவுகளைச் சமாளிப்பதற்காகக் கொள்ளவேண்டிய தொகையே, ரொக்கத்தொகையாகும். ரொக்க விருப்பம் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு மாறும். நிறுவனம் சமாளிக்கவேண்டிய நிலையற்ற சூழ்நிலையிலோ அல்லது நாட்டின் நிலையற்ற சூழ்நிலையிலோ அதிகமான ரொக்கம் தேவையாகும். இது கடனுக்க அளிக்கப்படும் முதலின் அளவையும் வட்டி வீதங்களையும் மாற்றும். மிகுதியான முதலை மற்றக் காரணிகளுடன் சேர்த்துப் பயன்படும்பொழுது, அதன் இறுதிநிலை உற்பத்தி குன்றும். முதலீட்டின் இறுதிநிலை வரியும் இதனால் குறையும். புதிய கண்டுபிடிப்புகள் ஏற்படாவிடில், நாளடைவில் கடனுக்கு எழும் தேவை மிகவும் குறையும். கடன் கொடுப்போர் பணத்தை ஒரு விதத்திலும் பயன்படுத்தாமல் வைத்திருப்பதைவிட, யாருக்காவது கிடைக்கும் வட்டிக்குக் கடனாகக் கொடுக்கலாம் என்று கருதும் அளவுக்கு வட்டி குறையும். ஆனால், உண்மையில் புதிய கண்டுபிடிப்புகள், முதலுக்குப் புதிய பயன்களை ஏற்படுத்தியுள்ளன. ஆகையால் மேலே குறிப்பிட்ட போக்கு தடை செய்யப் பெற்றிருக்கின்றது.

கீன்சு[1] (Keynes) வட்டிபற்றிய தேவை—அளிப்பு ஆராய்ச்சியைப் புறக்கணித்து, 'ரொக்க விருப்பக் கோட்பாட்டுக்கே' (liquidity preference theory) அதிக முக்கியத்துவம் கொடுத்தார். நாணயங்களும், செலாவணித்தாள்களும், பாங்கு டெபாசிட்டுகளும்

[1] 1936-ல் ஜே. எம். கீன்சு (J. M. Keynes) தன் பிரசித்திபெற்ற, 'வேலை வட்டி, பணம்பற்றிய பொதுக் கோட்பாடு' (The General Theory of Employment Interest and Money) என்ற நூலை வெளியிட்டார். இது பொருளியலில் கீனிசியப் புரட்சி என்ற மாறுதலை ஏற்படுத்தியது. ஆனால், அவர் நூலைப் பின்னர். படித்தல் வேண்டும்

அடங்கியுள்ள பணத்தின் அளிப்பைப் பாங்குமுறை நிர்ணயம் செய்கின்றது என்பது, அவரது கருத்தின் அடிப்படையாகும். இப் பணத்தை யாராவது ஒருவர் கொண்டிருப்பர். பொது மக்களின் ரொக்க விருப்பமே (liquidity preference) இப் பணம் (முழுவதும் அல்லது ஒரு பகுதி) கடனுக்குக் கொடுக்கப்படுவதற்கு அளிக்கப்பட வேண்டிய வட்டி வீதத்தை நிர்ணயம் செய்கின்றது. நெருக்கடி யான சமயங்களில் மக்கள் பணத்தை ரொக்கமாகவே வைத்துக் கொள்ள விரும்புவர். அவர்களுடைய ரொக்க விருப்பம் மிகுதி யடையும். ஆகையால், அவர்கள் பத்திரங்களை விற்பனை செய்வர். அவைகளுடைய விலை தாழ்வடையும். இதன் விளைவாக (பத்திரத்தின் முதல் குறைவதால்) அதன் நிலையான வட்டிவீதம் உயரும். பாங்குகள் பணத்தின் அளிப்பைக் குறைத்தால் இதே நிலை ஏற்படும். குறைவாக இருக்கும் தொகை ரொக்க விருப்பத்தைப் பூர்த்திசெய்யப் போதாது. ஆனால், முன்பு செய்ததைப்போலவே கடன் நீடித்துக் கொடுக்கப்படுகின்றது.

பணத்தின் அளிப்பு மிகுதியடைந்தால், ரொக்க விருப்பம் பூர்த்தியடையும்; மிகுதியான தொகையையும் கடனுக்குக் கொடுக் கலாம். ஆகையால், அவர்கள் பத்திரங்களில் முதலீடு செய்கின் றனர். அவைகளுடைய விலை உயரும். அவைகளுடைய வட்டி நிலையாக இருப்பதால் குறையும். (விலை கூடுவதால் பத்திரங் களின் முதல் அதிகரிக்கும். ஆனால், வட்டி உயராததால் வட்டி வீதம் குறையும்.) பத்திரங்கள் முக்கியமான இடத்தைப் பெற் றிருக்கும், சிறந்த வளர்ச்சியடைந்த பாங்குமுறை உள்ள நாடு களில், பாங்குமுறை கடன் அமைப்பையும் வட்டி வீதத்தையும் கண்காணிக்கலாம். இத்தகைய நாடுகளில் வட்டி வீதம் எவ்வாறு நிர்ணயம் ஆகின்றது என்பதை இக் கோட்பாடு விளக்குகின்றது. வளர்ச்சியடையும் நாட்டில் பாங்குமுறையுடன் தொடர்பு கொண் டிருக்கும் பகுதி சிறியதாக இருக்கின்றது. இது பொருளாதார அமைப்பு முழுவதும் பரவி இல்லை. உதாரணமாக, இந்தியா விலும் பாகிஸ்தானிலும் பணக் கொள்கை (monetary policy) முழு வெற்றியளிக்கும் கருவியாக அமையவில்லை. ஆகையால், தேவை-அளிப்பு ஆராய்ச்சி இந்த நிலைக்கு ஏற்றதாகத் தோன்றுகிறது. ஆனால், ரொக்க விருப்பம் மூலதனத்தின் அளிப்பை (பொருளா தாரத்தின் நவீனப் பகுதியிலாவது) பாதிக்கும் ஒரு சக்தியாக இயங்குகின்றது என்பதை நாம் மறக்கலாகாது. தேவை-அளிப்பு ஆராய்ச்சி இந்தியாவுக்குப் பொருத்தமாக இருக்கின்றது என்பதை (மசாசுசெட்ஸ் தொழில் நுணுக்க நிலையத்தைச் சேர்ந்த) ஜியார்ஜ் ரோசன் (George Rosen) என்பவர் அண்மையில் செய்த ஆராய்ச்சி எடுத்துக்காட்டுகின்றது. கடன் கொடுப்பதற்காகச்

சிறப்பான நிலையங்களை அமைப்பதால் தனியார், துறைத் தொழில் திட்டங்களுக்கு வேண்டிய மூலதனத்தின் தேவையும், அளிப்பும் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை அவர் தம் 'இந்தியாவில் தொழில் நிதியின் சில கூறுகள்' (Some Aspects of Industrial Finance in India, 1962) என்ற நூலில் ஆராய்கின்றார். வட்டிவீதங்கள் இதன் விளைவாக எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதையும் அவர் விளக்குகின்றார். தம் ஆராய்ச்சியை அவர் எளிய தேவை-அளிப்பு வளைகோடுகள் மூலம் விளக்குகின்றார்.

(iv) தொழிலை நிறுவுதல் (அல்லது தொழில் துணிவு)

தொழிலை நிறுவுவோரைச் சாதாரணமாகத்தொழில்துணிவோர் என்று பொருளியல் நடையில் கூறுவது வழக்கம். தனிப்பட்டவர்களோ அல்லது நிறுவனங்களோ (பொருளாதாரத் திட்டங்களைக் கொண்ட நாடுகளில் அரசாங்கமும்) தொழிலகங்களை ஆரம்பித்து, ஆபத்துகளை ஏற்று தொழில்பற்றிய முடிவுகளை ஏடுப்பர். ஆனால், பெரிய திட்டங்களைப் பொறுத்தமட்டில் இரு பொறுப்புகளையும் வெவ்வேறு வகையினர் ஏற்பர். தொழில் துணிவோன், ஒரு புதிய தொழிலைத் துவக்கியபிறகு, சம்பளம் வாங்கிக்கொண்டு பணி புரியலாம். இப் பொறுப்பை ஒரு நிறுவனம் ஏற்கும்பொழுது ஆண்டுதோறும் ஊதியம் பெறலாம்; அல்லது தொழிலகத்தின் முன்னேற்றத்தைப் பொறுத்து (இதை இலாபத்தைக்கொண்டு கணக்கிடலாம்) ஊதியம் கொடுக்கலாம். தொழிலை அமைக்கும் அல்லது ஆரம்பிக்கும் பொறுப்பை ஏற்காமல் பங்குகளை மட்டும் வாங்குவோர் தொழிலில் முதலீடு செய்பவராவர். நிறுவனத்தின் பொதுக் கொள்கையை வகுக்கும் இயக்குநர் குழுவில், பங்குதாரர்களுக்குப் பிரதிநிதித்துவம் உண்டு. பங்குதாரர்களுக்கு இலாபத்தில் பங்குண்டு. ஆனால், அவர்கள் முதலீடு செய்த தொகை அனைத்தையுமே அல்லது அதில் ஒரு பங்கை இழக்கவும் நேரிடலாம்.

நிருவாக ஏஜென்சி முறை (Managing Agency System) எனப்படும் ஒரு சிறப்பான தொழிலமைப்பு முறை இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் இருக்கின்றன.[1] இம் முறை மற்ற சில நாடுகளிலும், ஒரு சில இடங்களில் உள. அண்மையில் நிருவாக ஏஜெண்டுகளின் செல்வாக்கை அரசு சட்டம்மூலம் குறைத்து விட்டபோதிலும், இந்த முறை கணிசமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றது.

[1] ஜியாஃபரே டைசன் (Geoffrey Tyson)எழுதிய, நிருவாக ஏஜென்சி முறை (Managing Agency System (1961) என்ற நூலைப் பார்க்கவும்.

தொழிலை அடையப் போர் (தொழிலில் ஏற்படும்) ஆபத்துகளை ஏற்காமல், சம்பளம் வாங்குவோராகமட்டும் இருந்தால் அவர்களைத் தொழில் துணிவோர் என்று கூறமுடியாது. இலாபம், ஆபத்துகளை ஏற்பதற்காகக் கொடுக்கப்படும் ஊதியம் அல்லது விலையாகும். தொழிலகங்கள் பெறும் வருமானத்தில் அடக்கச் செலவையும், இயந்திரங்களின் தேய்மானத்தை ஈடுசெய்ய ஒரு தொகையையும், இழப்பீட்டுத் தொகையையும் கழித்தால், எஞ்சியுள்ளது இலாபமாகும். தேய்மானத்தை (depreciation) ஈடு செய்வதற்காக ஒரு காப்பு நிதியை (reserve) ஏற்படுத்துவது வழக்கம். இயந்திரங்கள் இயங்கும் காலத்தை மதிப்பீடுசெய்து அதை அடிப்படையாகக்கொண்டு, வருமானத்தில் ஒரு தொகையை காப்புநிதிக்காக ஒதுக்குவது வழக்கம். தேய்மானத்தின் மதிப்பைக் கணக்கிடும்பொழுது, இயந்திரத்தின் 'முதல் விலையை' (original cost) கொண்டு கணக்கிடுகின்றனர். அல்லது வரலாற்று முறையைப் (historical method) பின்பற்றுகின்றனர். பழுதான அல்லது தேய்ந்த இயந்திரங்களுக்குப் பதிலாக வேறு வாங்குவதற்கு ஆகும் செலவே சரியானதென்று கருதுகின்றனர். பொருள்களின் விலைகள் மாறுவதே இக் கூற்றிற்குக் காரணமாகும். இக் கருத்துவேற்றுமையின் கூறுகளை நமது நூலில் ஆராய்வது நமது நோக்கத்திற்கு அப்பாற்பட்டதாகும். சொத்துகளின் தேய்மானத்தையும், உயரும் மதிப்பையும் நிறுவனங்கள் தம் வரவு-செலவுக் கணக்கில் சேர்த்துக்கொள்கின்றன. ஒரு நிறுவனம் மேலும் அதிகமாகப் பெற்ற கச்சாப் பொருள்களையும், இடைத்தரப் பொருள்களையும் (intermediate goods), முழுதும் உற்பத்தியாகிய பொருள்களையும் வரவில் சேர்ப்பதும் இவைகளுக்கு மாறுக உள்ளவைகளைச் செலவில் சேர்ப்பதும் வழக்கம்.

இலாபத்தை முதலீடு செய்யப்பட்ட முதலில் ஒரு சதவீதமாகக் குறிப்பிடுவது வழக்கம். எதிர்காலம் நிலையற்றிருப்பதால்தான் நிறுவனங்களுக்கு இலாபம் கிடைக்கின்றது. எதிர்காலத்தைப் பற்றிய செய்தி இல்லாமை, தொழில் நுணுக்க மாற்றங்களைத் தொடர்ந்து அளிப்பில் ஏற்படும் மாறுதல்கள், மக்களுடைய விருப்பங்கள் மாறுவதால் தேவையில் ஏற்படும் மாற்றம், விலைவாசியின் மாற்றங்கள் முதலியன மேற்கூறிய நிலையின்மைக்குக் காரணங்கள். நிலையின்மையை ஒருகாலும் நீக்கவேமுடியாது. ஆனால், இதிலிருந்து ஏற்படும் இழப்பை ஓரளவு ஈடுசெய்யலாம். உதாரணமாகத் தீ விளைவிக்கும் இழப்பையும் இத்தகைய மற்ற ஆபத்துகளையும் ஈடுசெய்ய இன்சூரன்சு முறையைப் பின்பற்றலாம். இங்கும் விலைமுறை இலாபத்தின்மூலம் இயங்குவதைப் பார்க்கலாம். இலாபம் தொழில் துணிவோருக்குச் சில துறைகளில் ஆபத்துகளை ஏற்கத் தூண்டுதல் அளிக்கின்றது.

சில துறைகளைத் தவிர்க்கவும் காரணமாக இருக்கின்றது. தேவைக்கும் அளிப்புக்கும் பொருத்தமாகத் தேசிய வருமானத்தின் கூறுகள் அமைவதற்கு இலாபம் காரணமாக இருக்கின்றது. முன்னேற்றமடைந்த நாடுகளில் பொருளாதார வீக்கமும் (boom) மந்தமும் (depression) ஏற்படுவதால் அவை ஆபத்துகளுக்கு முக்கியமான காரணமாக இருக்கின்றன. வளரும் நாடுகளில் வர்த்தகச் சுழல் (trade cycle) தொழில் துறையில் ஆபத்துகளை விளைவிக்கும் காரணங்களுள் முக்கியமானதாக இல்லை. ஆனால், மலேயா, சிங்களம் போன்ற சில நாடுகள் அயல் நாட்டு வர்த்தகத்தையும் (குறிப்பாக ஒரு சில பொருள்களின் ஏற்றுமதியையே) அந் நாடுகளின் தேவையையும் எதிர்பார்த்திருக்கின்றன. ஆகையால், வர்த்தகச் சுழல் இந்த நாடுகளுக்கு முக்கியமாக இருக்கின்றன. இந்தியாவும், பாகிஸ்தானும் பழைய காலத்தில் அயல்நாட்டு வர்த்தகத்தை மிகக் குறைந்த அளவே சார்ந்திருந்தன. பல பண்டங்களின் ஏற்றுமதிக்கு நிலையான தேவை இருந்தது. ஆகையால், வர்த்தகச் சுழலின் முக்கியத்துவம் குறைவாகவே இருந்தது. இருந்தபோதிலும் உலகம் முழுவதும் பரவிய 1930 ஆம் ஆண்டின் மந்தம் இந்தியாவைக் கடுமையாகத் தாக்கியது.[1] அயல் நாடுகளில் உள்ள நிலைமை, வளரும் நாடுகளுக்கு வேண்டிய இறக்குமதிப் பொருள்கள் அகப்படுவதையும், அவைகளுடைய விலையையும் பாதிக்கின்றன. ஏற்றுமதிப் பொருள்களின் மார்க்கட்டு எந்த அளவு பெரியதாக இருக்கின்றது என்பதும், அப் பொருள்களின் விலைகளும் மேலும் இந்த நிலைமையைப் பாதிக்கின்றது. வளரும் நாடுகளின் செழிப்பை இந்த நிலைமை சாதகமான முறையிலோ அல்லது பாதகமான முறையிலோ பாதிக்கின்றது.

C. உற்பத்திக் காரணிகளும் அவைகளை அளிப்போரும் தேசிய வருமானத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்

உற்பத்திக் காரணிகளிடையேயும், மக்களிடையேயும் தேசிய வருமானம் எப்படிப் பகிர்வாகின்றது என்பதைப் பொருளியலார் ஆராய்கின்றனர். இதைத் தனியாக நாம் பார்க்கவேண்டும். ஏனெனில், பலர் பல துறைகளிலிருந்து வருமானம் பெறுகின்றனர். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் விவசாய நிலத்தைக் குத்தகைக்கு விடும் உரிமை கட்டுப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், பலர் தம் நிலத்தைக் குத்தகைக்கு விட்டு வருமானம் ஈட்டலாம்;

[1] வீரா ஆன்ஸ்டி (Vera Anstey) எழுதிய, 'இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி' (The Economic Development of India) 4வது பதிப்பு-1952, அதிகாரம் XVII-ஐப் பார்க்கவும்.

சம்பளங்கள் வாங்கலாம். கொடுத்த கடன் தொகைக்கு வட்டி வாங்கலாம். பங்குகளைக் கொண்டிருப்போர் நிறுவனங்களின் இலாபத்தில் தம் பகுதியைப் பெறலாம். இவை எல்லாவற்றிலு மிருந்து சிலர் வருமானம் பெறலாம். தனிப்பட்டவர்கள் வருமானம் பற்றிய விவரங்களை ஏழாவது அதிகாரத்தில் காணலாம். இங்கு உற்பத்திக் காரணிகளிடையே வருமானம் எவ்வாறு பங்கீடு செய்யப்படுகின்றது என்பதைக் காணலாம்.

வருமானம்பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படும் முறை, குறிப்பாக வளர்ச்சியடையும் நாடுகளில் பின்பற்றப்படும் முறை தேசிய வருமானத்தைச் செம்மையாக வகைப்படுத்துவதற்கு ஒரு சிறந்த அடிப்படையாக அமையவில்லை. இது ஒரு முக்கியமான இடர்ப்பாடு. உழைப்பின்மூலம் பெறும் வருமானத்தையும் சொத்து களிலிருந்து பெறும் வருமானத்தையும் ஏறத்தாழச் சரியாக மதிப்பீடு செய்வதற்கு இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற முன்னேற்றமடைந்த நாடுகளில் வசதிகள் இருக்கின்றன. ஆனால், இந்த நாடுகளில்கூடச் சொந்தவேலை பார்ப்போரின் வருமானத்தில் எப் பகுதி உழைப்பின் ஊதியம் என்றும், எப் பகுதி சொத்தி லிருந்து பெறும் வருவாயென்றும் பிரிப்பது கடினம் (இந்த வருவாய் வட்டியாகவோ அல்லது இலாபமாகவோ இருக்கலாம்.) வளரும் நாடுகளில் பலர் சொந்த வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்கள் சிறு தொழில்களிலும், குடிசைத் தொழில்களிலும் அமர்ந் திருக்கின்றனர். ஆகையால், இவர்களுடைய வருமானத்தைப் பற்றிய மதிப்பீடு குத்து மதிப்பானதாகவே இருக்கும்.

இதுபற்றிய தம் கருத்துகளை பென்ஹாம் (Benham) சுருக்க மாகக் கூறுகின்றார்.[1] 'புளு புக்' (Blue Book-National Income and Expenditure, 1959, அட்டவணை 2)எனப்படும் அரசாங்கப் பதிப்பி லிருந்து அவர் வரி செலுத்துவதற்குமுன் இருக்கும் சொந்த வருமானத்தை (personal income) எடுத்துள்ளார். சொந்த வேலை செய்வோர் தம் வருமானத்தில் பாதியை உழைப்பின்மூலமும் பாதியைச் சொத்தின்மூலமும் பெறுகின்றனர் என்று அவர் கற்பனை செய்துகொண்டு செய்த கணக்கில் 76 சதவீதம் உழைப் பின் பகுதியாகவும், 16 சதவீதம் சொத்தின் மூலம் ஈட்டியதாகவும் இருந்தன. எஞ்சிய 8 சதவீதம் இன்சூரன்சுமூலம் கிடைத்த தாகவும் அரசினர் வழங்கிய மானியத் தொகையாகவும் இருந்தது. நிறுவனங்களின் பங்கீடு செய்யப்படாத இலாபத்தை (undistributed profits) யும் சேர்த்தால் சொந்த வருமானத்தில் சேர்ந்துள்ள சொத்துகளின் சதவீதம் 23 ஆகும் என்று அவர் குறிப்பிடு

[1] பொருளியல், 6ஆவது பதிப்பு, பக்கம், 355-356.

இவ்வாறு மிகுதியடைந்த சொந்த வருமானத்தில் 71 சதவீதம் உழைப்பின் வாயிலாக வந்ததாகவும், 23 சதவீதம் சொத்தின்வாயிலாக வந்ததாகவும், 6 சதவீதம் மேலே குறிப்பிட்டபடி வந்ததென்றும் கணக்கிடலாம்.

நிறுவனங்களின் பங்கீடு செய்யப்படாத இலாபத்தை நீக்கினால் அண்மைக் காலத்தில் அமெரிக்காவில் உழைப்பின் பங்கு (தேசிய வருமானத்தில்) 75 சதவீதமாக இருக்கின்றது.[1] இந்தச் சதவீத எண் அடிக்கடி மாறும். ஏனெனில், இலாபம் பொருளாதார வீக்க காலத்தில் அதிகமாகவும், மந்த காலத்தில் குறைவாகவும் இருக்கும். மந்த காலத்தில் பல நிறுவனங்கள் பணத்தை இழக்கின்றன. சில சமயங்களில் அவை மிகுதியான தொகையை இழக்கின்றன. பென்ஹாமும் குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளில் உழைப்பின் பங்கு 70 முதல் 80 சதவீதமாக இருக்கின்றது என்று கூறுகின்றார். அவர் எந்த நாட்டையும் குறிப்பிடவில்லை. பங்கீட்டை மாற்றியமைக்கக்கூடிய வளர்வீத வரிகளை விதிப்பதற்கு ஏற்பாடு செய்தால், முன்னேற்றமடைந்த நாடுகளில் தொழிலாளர்களின் நிலைமை மிகவும் நன்கு அமையும்.

முற்றிலும் சரியானவை என்று நம்பமுடியாத இப் புள்ளி விவரங்களை மேலே தொடர்ந்து பார்க்காமல், வருமானத்தில் மிகுதியான ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன என்பதைமட்டும் இவை காட்டுகின்றன என்று கூறலாம். உதாரணமாக இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் வருமான வரி செலுத்துவோரின் சதவீதம் இங்கிலாந்தைவிட மிகக் குறைவாகவே இருக்கின்றது. வருமான வரி செலுத்தாதவர்கள் கணிசமான அளவு சொத்துகளை வைத்திருக்கமாட்டார்கள். (ஆனால், சொந்தத் தொழில் செய்வோர் கடன்பட்டிராவிடில் ஓரளவு சொத்தைக் கொண்டிருக்கின்றனர் என்று நாம் கூறலாம். சொந்த உழைப்பை நம்பி வாழும் மக்களின் சதவீதம் அதிகமாக இருக்கின்றது. வரிகள்மூலம் வருமானப் பங்கீடு மிகக் குறைவான அளவே மாற்றியமைக்கப்படுகின்றது. எனினும், தேசிய வருமானத்தில் உழைப்பின் பகுதி வேறுபட்டிலில்லை. மேலே குறிக்கப்பெற்றிருக்கும் ஒவ்வொரு கருத்தையும் நாம் மேலும் விவரமாகப் பார்க்கவேண்டும். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வரிச்சுமை அதிகமாக இருந்தபோதிலும், அரசின் வருவாயில் பெரும்பகுதி தற்காப்புக்காகவும், வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் செலவாகின்றது. ஏழைகளுக்காகச் செலவாகவில்லை. ஆனால், வளர்ச்சி முன்னேறியபிறகு இந்த நிலை மாறுவதற்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கின்றது.

[1] பால் சாமுவேல்சன் (Pal A. Samuelson) எழுதிய 'பொருளியல்' (Economics) 1961 பக்கம், 571-ஐப் பார்க்கவும்.

உற்பத்தியில் ஒவ்வொரு காரணியின் பங்கையும் அவைக ளுடைய விலை நிர்ணயத்தையும் பார்க்கும்போது நாம் ஒரே முடிவுக்கு வருகிறோம் என்பதைக் கவனிக்கலாம். அதாவது போட்டி நிலவும்பொழுது தனிப்பட்டவர்களுக்கும், நிறுவனங் களுக்கும் விலை நிர்ணயத்திற்கு அளிப்பும், தேவையும் காரணமாக இருக்கின்றன. ஒவ்வொரு காரணியைப்பற்றியும் சில விளக்கக் குறிப்புகளைத் தவிர, அதிகமான விவரங்களை நாம் பார்க்கவில்லை. மூன்றாவது, நான்காவது அதிகாரங்களில் கூறியவற்றைப் பார்க் கும்போது, இந்த நூலைப் படிப்பவர் தமது முடிவு ஆராய்ச்சியின் துவக்கத்தைக் காட்டுகின்றது; முடிவைக் காட்டவில்லை என்பதை அறிவார்.

நிலத்திற்கும், உழைப்புக்கும் எழும் தேவை இவை உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு ஏற்படும் தேவையின் வழி வந்தவை யாக இருக்கின்றது என்று நாம் குறிப்பிட்டிருக்கின்றோம். தேவை யையும் அளிப்பையும் நிர்ணயம்செய்யும் சக்திகளை மூன்றாவது அதிகாரத்தில் விளக்கினோம். போட்டி இல்லாவிடில் நிலைமையில் ஏற்படும் மாறுதல்களைப்பற்றிய விவரங்களை நான்காவது அதிகாரத் தில் பார்த்தோம். தேவை-அளிப்பு ஆராய்ச்சியின் தத்துவம் இயங்கும்பொழுது நிலைமையில் உள்ள சிறப்பான சந்தர்ப்பங்களை மட்டும் இங்குப் பார்த்தோம். இவ் வாராய்ச்சியை மேலும், தொடர்ந்து நடத்துவதற்கு (புள்ளி விவரங்கள் கொடுக்கும்) அளவுகளைப் பயன்படுத்தல் வேண்டும். ஆராய்ச்சியை மேலும் பொதுவாகவோ அல்லது எளிமையாகவோ செய்ய முயற்சி செய்யலாகாது.

வட்டி வீதங்கள் (பலவகைக் கடன்களின் விலைகள்) ஏழாவது அதிகாரத்தில் விவரமாக விளக்கப்பெற்றிருக்கின்றன. அடுத்த அதிகாரத்தில் இலாபத்தின் தன்மையும் தொழில் துணிவோனின் செயல்களும் முறைகளும் விவரமாக விளக்கப்பெற்றிருக்கின்றன.

6. தொழிலை நிறுவுதலும் அதன் பிரச்சினைகளும்

A. இலாபத்தின் இயல்பும் பணிகளும்

B. தொழில் நிறுவனங்களின் பொருளாதாரப் பிரச்சினைகள்

(i) முன்னுரை

(ii) தனியார் துறையில் தொழிலுக்கு நிதிதிரட்டல்

(iii) உற்பத்தியின் அளவும், ஓரிடத்தில் உற்பத்திச் செறிவும் (Localization)

A. இலாபத்தின் இயல்பும் பணிகளும்

உற்பத்திக் காரணிகளை ஒன்றுசேர்த்துப் பொருளுற்பத்தி செய்வோன் அல்லது விற்பனை செய்வோன் தொழில் துணிவோனாவான். அடக்கச் செலவை ஈடுசெய்து, அதற்குமேல் இலாபம் ஈட்டுவது அவனுடைய தொழிலின் குறிக்கோளாகும். தொழில் வெற்றிகரமாக இல்லாவிடில் அவன் பொருளை இழக்க நேரிடும். முன்னேற்றமடைந்த நாடுகளிலும் வளர்ச்சியடையும் நாடுகளின் நவீனப் பகுதியிலும் தொழில் துணிவோனின் பணிகள் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பெற்றிருக்கின்றன. (a) சிலர் நிதிபற்றிய ஆபத்துகளை ஏற்கின்றனர். இவர்கள் சாதாரணப் பங்குகளைக் (equity shares) கொண்டிருக்கின்றனர். டிபெஞ்சர் பத்திரங்களை (debentures)க் கொண்டிருப்போரும் நிறுவனங்களுக்குக் கடனுதவியளித்தவர்களும் இத்தகைய ஆபத்துகளை ஏற்பதில்லை.[1] (b) வேறு சிலர் தொழில் நிர்வாகப் பொறுப்பை ஏற்கின்றனர்.

[1] சாதாரணப் பங்குதாரர்கள் பங்குகளைக் கொண்டிருக்கின்றனர். ஒரு நிறுவனத்தின் மூலதனம் பல பங்குகளாகப் பிரிக்கப்பெற்றிருக்கும். இலாபத்தைப் பிரிக்கும்பொழுது பங்குகளை வாங்கியுள்ளோர், அதில் ஒருபகுதியை, இலாப ஈவைப் (dividend) பெற உரிமை கொண்டிருக்கின்றனர். டிபெஞ்சர் பத்திரங்களைக் கொண்டிருப்போரும் அதில் ஒரு பங்கைப் பெற உரிமைகொண்டிருக்கின்றனர். ஆனால், அவர்களுடைய பகுதி ஒரு நிலையான சதவீதமாக இருக்கின்றது. பின்குறிப்பிட்டோர் நிறுவனத்திற்குக் கடன் கொடுத்திருக்கின்றனர். அவர்கள் பெறும் பங்கு நிறுவனத்தின் அடக்கச் செலவில் சேர்ந்திருக்கின்றது. திவாலாகாமல் இலாபம் ஈட்டும்வரை நிறுவனம் அவர்களுக்கு இதைச் செலுத்தவேண்டும்.

இவர்கள் வகுக்கும் கொள்கை நிறுவனத்தின் வெற்றிக்குக் காரணமாக இருந்தபோதிலும், இவர்கள் சம்பளங்களை வாங்குகின்றனர். இருந்தபோதிலும் இயக்குநர்களும் (directors), நிர்வாக இயக்குநர்களும் (managing directors) சில பங்குகளைக் கொண்டிருக்கின்றனர். இவ் விரு பணிகளையுமே தொழில் துணிவோனின் பணிகளாக நாம் இங்குக் கருதுகின்றோம்.

உற்பத்திக்கு வேண்டிய காரணிகளை வாங்குவதற்கு மார்க்கட்டைக்கொண்டுள்ள ஒருவன் தன் பொருள்களை விலையாக்குவதற்கும் ஒரு மார்க்கட்டை நம்பி இருந்தால் அவனுடைய உற்பத்திபற்றிய செயலைத் தொழில் என்று கூறலாம். விவசாயி (கருவிகள், விதை, எருபோன்ற) உற்பத்திக் காரணிகளை விலைக்கு வாங்கி, உபரிப் பண்டங்களை மார்க்கட்டில் விற்பனைசெய்தால் அவன் வேலை மேலே குறிப்பிட்ட தொழிலாகும். அவன் பெரும் பாலும் தன் நிறைவு பெற்றிருந்தபோதிலும் அவன் ஒரு தொழிலதிபதியாகவே நாம் கருதல் வேண்டும். சிறு தொழில்களும், குடிசைத் தொழிலும் இத்தகையவையே. தம்வசம் இருக்கும் உற்பத்திக் காரணிகளை வாடகைக்குவிட்டோ அல்லது விலையாக்கியோ வாடகை, வட்டி, வாரம் சம்பளம்போன்ற வருமானங்களைப் பெறுவோர் தொழிலதிபதிகளாகமாட்டார்கள்.

விவசாயிகளும் சிறு தொழிலதிபதிகளும் பல காரணிகளைச் சேர்த்து உற்பத்தி செய்கின்றனர். மார்க்கட்டு விலையைச் சார்ந்திருப்பதால் ஏற்படும் ஆபத்துகளை அவர்கள் சமாளிக்கின்றனர். ஆனால், பெரும்பாலும் அவர்கள் செய்யும் தொழில் துணிவு அளிக்கும் ஊதியம், (அதாவது இலாபம்) மொத்த வருமானத்தில் ஒரு சிறிய பகுதியாகவே இருக்கும். தன் நிறைவு பெற்ற பல விவசாயிகள், விவசாய வேலை இல்லாத பருவங்களில் சிறு தொழில்களில் ஈடுபடுகின்றனர். இவர்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்கள். சிலர் வருமானத்தில் கணிசமான பகுதி இலாபமாகும். தம் ஊதியத்தைப் பொருளாகவோ அல்லது பணமாகவோ பெறும் இவர்களும், மற்றக் கிராமாந்தர உற்பத்தியாளர்களும் இலாபத்தை உச்ச நிலைக்கு உயர்த்தும் நோக்கத்துடன் பணிபுரிவதில்லை. தம் இலாபத்தைக் கணக்கிட உதவும் கணக்குகளையும் அவர்கள் சரிவர வைத்துக்கொள்வதில்லை. தொழில் துணிவோனின் பிரச்சினைகளும் கொள்கைகளும் அவன் பெறும் இலாபத்தை நிர்ணயம் செய்கின்றன. பெருவாரியான அளவில் உற்பத்திசெய்யும் தற்காலத்திய இயந்திரங்கள் முழுதும் பயனுகின்றன. இவைகளுடைய வேலையை ஆராயும்பொழுது மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளும் ஆராய்ச்சி செய்யப்படும். ஆகையால், பின்வரும் பக்கங்களில் மிக அதிகமான இலாபத்தையே கருதி, பெருவாரி

அளவு உற்பத்தி செய்யும் முன்னேற்றம் அடைந்த நிறுவனங்களைப் பற்றிய விவரங்களைக் காணலாம். இந்த அதிகாரத்தின் தலைப்பை 'நிறுவனத்தின் சிக்கனங்கள்' (economics of the firm) என்று பொருளியல் நடையில் கூறுவது வழக்கம்.

ஒப்பந்தம் செய்து பெறும் வருமானத்திற்கு மாறாக இலாபம் 'எச்ச ஊதியமாக' (residual income) இருக்கின்றது. வாரம், வட்டி, சம்பளங்கள் முதலியவற்றிலிருந்து இது வேறுபட்டிருக்கின்றது. எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை நாம் திட்ட வட்டமாக அறிய முடியாததால், ஒரு குறிப்பிட்ட இலாபத்தைக் கொடுத்துத் தொழில் துணிவோனை வேலையிலமர்த்த முடியாது. இலாபம் எவ்வளவு கிடைக்கும் அல்லது எச்ச ஊதியம் கிடைக்குமா, கிடைக்காதா என்பதைப்பற்றி ஒன்றுமே சொல்லமுடியாது. அடக்கச் செலவு வருமானத்திற்குச் சமமாக இருந்தால் அவன் உழைப்புக்கு ஊதியம் கிடைக்காது. அடக்கச் செலவைவிட, வருமானம் அதிகமாக இருந்தால் இலாபத்தை முதலில் (capital) ஒரு விதமாகக் கூறுவது வழக்கம். 'இயல்பு இலாபத்தை' (normal profit) தொழில் துணிவோனின் அளிப்பு விலையாகக் (supply price) கருதலாம். நீண்ட காலத்தில்–அவன் ஒரு குறிப்பிட்ட காலத்தில்–தன் தொழிலில் இயல்பான இலாபத்தைப் பெற்றுல்தான், அவன் அத் தொழிலில் நீடித்து முதலீடு செய்வான். இலாபத்தை மொத்த உற்பத்தியுடன் சில சமயங்களில் தொடர்புபடுத்தி மதிப்பீடு செய்வது வழக்கம். தலா உற்பத்தியுடனும் அதைத் தொடர்புபடுத்துவது வழக்கம். ஆனால், இப்படி மதிப்பீடு செய்யப்படும் வீதங்கள் வருமானத்துடன் தொடர்புகொள்வதில்லை. வருமானமே நமக்கு இங்கு முக்கியமானதாக இருக்கின்றது. சாதாரணப் பங்குதார்கள் தம் இலாபத்தை அவ்வப்போது கொடுக்கப்படும் இலாப ஈவாகப் பெற்றுக்கொள்வர். ஆனால், இலாபமும், கொடுக்கப்படும் இலாப ஈவும் சமமாக இருப்பதில்லை. பிரித்துக் கொடுக்கப்படாத இலாபம் எதிர்காலத்தில் ஏற்படும் தொல்லைகளைச் சமாளிப்பதற்குக் காப்புநிதியாகப் (reserve) பயன்படுகின்றது. இதைத் தொழிலில் மீண்டும் முதலீடுசெய்து முதலை அதிகரிப்பர்.

ஒரு தொழிலில் முதலீடான தொகைக்குப் பொருத்தமான இலாபத்தை மதிப்பீடு செய்வது கடினம். இரு இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. ஒன்று அடக்கச் செலவின் தன்மை மாறுபட்டதாக இருக்கின்றது. எந்தக் காலம் இலாபத்தை மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதும் ஒரு தொல்லைக்குக் காரணமாக இருக்கின்றது. (இக் காலம் பல்வகை அடக்கச் செலவுகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றது.)

மூன்றுவித அடக்கச் செலவுகள் உள. (i) எக் காலத்திலும் உள்ள முதல் செலவு (capital cost), (ii) நீண்ட, நடுத்தரக் கால முதல் செலவு, (iii) இயக்கும் செலவு அல்லது குறுகியகாலச் செலவு.

(i) எக் காலத்திலும் உள்ள முதல் செலவைத் தொழிலைத் தொடங்குவதற்கு முன்பே செய்யவேண்டும். உதாரணமாகப் நிறுவனம் ஒரு கம்பெனியாகத் தோன்றினால் அதைத் துவக்கிப் பங்குகளை விலையாக்கவேண்டும். சில தொழில்களுக்கு அடிவார இரயில் பாதைகளை அமைக்க வேண்டும்; குழாய்களையும் அமைக்கவேண்டும் (எண்ணெய்க்கு.) இந்த வேலைகளைச் சாதாரணமாக மீண்டும் செய்யவேண்டியதில்லை. ஆனால், இவைகளைப் பழுதுபார்த்துப் பராமரிக்கும் செலவுகள் இரண்டாவது, மூன்றாவது வகைகளைச் சேர்ந்திருக்கும்.

(ii) இயந்திரங்களை நிறுவுதல், கட்டடங்களைக் கட்டுவது, இயந்திரங்களை உற்பத்தி செய்வது, இறக்குமதி செய்வது, வேலை செய்வோருக்கு வீடுகளை அமைத்தல், தொழிலாளர்களைச் சேர்த்து வேலையில் அமர்த்துவதுபோன்ற செலவுகள் நீண்டகால, நடுத்தரகாலச் செலவுகளாக இருக்கின்றன. தொழில் துவங்குவதற்கு முன்பே, இச் செலவுகள் செய்யப்படவேண்டும். ஆனால், உண்மையான முதலின் உறுதி (durability) வேறுபட்டிருக்கும். ஆகையால் பல காலவரையறைகளில் அவைகளுக்குப் பதிலாகப் புதியவை நிறுவப்படவேண்டும். புதிய இயந்திரங்களின் அவசியம் நீடித்த செலவாக இருப்பதால், பழைய இயந்திரங்களின் தேய்மானம் ஈடு செய்யப்படவேண்டும். ஆனால், இதற்காகச் செய்யப்படும் செலவு நீடித்தில்லாமல் அவ்வப்போது ஏற்படும் பொது விலைவாசி மாறினால் புதியவை நிறுவுவதால் ஏற்படும் செலவும் மாறும். உற்பத்திமுறை மாறி அதில்முன்னேற்றம் ஏற்பட்டால் இயந்திரங்கள் போன்ற 'உண்மையான முதல்' பயனற்றுப் பழையனவாகிவிடும். ஒரு காலவரையறைக்குப் பிறகு அவைகளைப் பயன்படுத்துவதில் பலன் ஏற்படாது. அவைகளை நீக்கிப் புதிய இயந்திரங்களை நிறுவவேண்டும்.

(iii) உற்பத்தி தொடர்ந்து நடக்கும்பொழுது அது நீடிக்கும் வரை நிறுவனத்தை 'இயக்கும் செலவு' (operational cost) நடைபெறும். தொழிலாளர்களின் கூலி, கச்சாப் பொருள்களின் விலை, சக்தி, ஒளி, வெப்பம் முதலியவை அளிப்பதற்காகச் செய்யப்படும் செலவுகள் முதலியவை இச் செலவில் சேர்ந்துள்ளன. 'இயக்கும் செலவு' உற்பத்திக்குத் தகுந்தவாறும் உற்பத்திக்கும் நிறுவனத்தின் சக்திக்கும் உற்ற தொடர்பை ஒட்டியும் மாறும். ஆனால்,

உற்பத்தியும் விற்பனையும் நடைபெறுத காலத்தில்கூட, செலவை ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்சச் செலவைவிடக் குறைக்கமுடியாது. உதாரணமாக ஊதுஉலையைப்போன்ற (blast furnace) இயந்திரங்களை உற்பத்தி நடைபெறுத காலத்தில்கூட இயக்குவதற்காகச் சில தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக்கொள்வது சிறந்ததாகும். வேலை மீண்டும் தொடங்கும்பொழுது புதியதாக எல்லாத் தொழிலாளர்களையும் வேலையில் அமர்த்துவதைவிட, ஒரு சிலரையாவது எப்பொழுதுமே வேலையில் வைத்துக்கொள்வதே சிறந்ததாகும். மேலும், ஊதுஉலைகள்போன்ற இயந்திரங்களை மீண்டும் துவக்குவதற்குச் செலவு செய்வதைவிடத் தொடர்ந்து பயனில் வைத்துக் கொள்வதே நல்லதாகும். எதிர்காலத்தில் சாதகமான நிலை ஏற்படுமானால் கையிருப்புச் சரக்கைப் பெருக்கிக்கொள்வதற்காகத் (தொழிற்சாலையை மூடாமல்) தொடர்ந்து உற்பத்தியை நடத்தலாம்.

தன் திட்டத்தின் சூழ்நிலையைப் பார்த்துத் தொழில் துணிவோன் (தொழில் துணிவோன் தனிப்பட்டவனாக இருக்கலாம்; அல்லது ஒரு நிறுவனமாக இருக்கலாம்) அதை மதிப்பீடு செய்கிறான். ஒவ்வொரு படிவத்திலும் அவன் நிலையின்மையையே காண்கிறான். எதிர்காலத்தில் கச்சாப் பொருள்களின் விலையின் போக்கு எவ்வாறு அமையும்? புதிய இயந்திரங்களை நிறுவ எவ்வளவு செலவாகும்? கூலிகள் கொடுக்க எவ்வளவு செலவு செய்ய வேண்டும். எதிர்காலத்தில் எந்த விலைகளில் எந்த அளவு அவன் பொருள்கள் ஒவ்வொன்றையும் விற்பனை செய்யவேண்டும்? அவன் பொருள்களின் தேவையில் எப் பகுதி புதிய பொருள்களுக்குத் திரும்பும்? அவன் இலாபத்தைக்கொண்டு இயந்திரங்களின் கிரயத்தைச் செலுத்துவதற்குமுன் அவை பழையனவாகிவிடுமா?

இலாபம் ஈட்ட ஆரம்பிப்பதற்குமுன் செய்தசெலவு உள்ளபடி முழுச்செலவையும் ஈடுசெய்யும் தொகையைப் பெறும் எண்ணத்துடன் தொழில் துணிவோன் ஒரு திட்டத்தைத் துவக்குகிறான். எதிர்பார்க்கும் இலாபம் மீண்டும் மீண்டும் கிடைக்கும்வரை காத்திருக்கும் காலத்தில், தன் முதலைக்கொண்டே செலவுகளைச் சமாளிக்கின்றான். பூர்வாங்கத் தயாரிப்பு நடைபெறும் காலம் எவ்வளவுக்கெவ்வளவு நீண்டதாக இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு எக் காலத்திலும் உள்ள முதலீட்டுச்செலவு அதிகமாக இருக்கும். நீண்டகால முதலும், மூலதனச் சாதனங்களும் இலாபம் பெறும்வரை காத்திருக்கும் சக்தியும் மிகுதியாக இருக்கும். மேலும் இலாபம் ஈட்டினால், அதை ஈட்டும்பொழுது தொழில் துணிவோன் உண்மை முதலைச் சரிவர வைத்துக்

கொள்வதற்கும், புதிய இயந்திரங்களை நிறுவுவதற்கும் போதிய வருவாயைப் பெறவேண்டும். அவன் பெறும் இலாபம் அதே தொழிலில் கிடைக்கும் சாதாரண இலாப வீதத்திற்குச் சமமாக இருத்தல்வேண்டும். இல்லாவிடில் அதே தொழிலில் மேலும் முதலீடு செய்வதற்கு ஏற்படும்செலவு மிகவும் அதிகமாக இருக்கும். இது 'வாய்ப்புச் செலவு' (opportunity cost) என்ற கருத்தை நம் கவனத்திற்குக் கொண்டுவருகிறது. ஒரு புதிய தொழிலில் முதலீடு செய்வதின் செலவு அல்லது அதே தொழிலில் மேலும் அதிகமான தொகையை முதலீடு செய்வதன் செலவு மற்றத் துறைகளில் ஏற் படும் வாய்ப்புகளை இழப்பதாகும். ஓர் உற்பத்திக் காரணியை ஒரு துறையில் பயன்படுத்துவதால் ஏற்படும் செலவும் மற்ற ஒரு துறையில் இழக்கப்படும் வாய்ப்புக்குச் சமமாகும் என்ற கருத் தையும் நாம் அறிவதற்கு மேலே குறிப்பிட்டது உதவுகின்றது. சம நிலை (equilibrium) ஏற்படும்வரை காரணிகள் ஒரு தொழிலி லிருந்து மற்றொன்றுக்கோ அல்லது ஒரு துறையிலிருந்து மற்றொன் றுக்கோ செல்லும் என்ற கூற்றும் விளங்குகிறது. அவைகளுடைய விலைகள் 'வாய்ப்புச் செலவுகளை' எடுத்துக்காட்டுகின்றன. உதா ரணமாக, ஒரு விவசாயியின் நெல் சாகுபடியின் செலவு அவன் சணல் சாகுபடிசெய்யும் வாய்ப்பை இழப்பதேயாகும். மேலும், ஓர் அலகு உபரிச்சணலை விற்பதால் கிடைக்கும் இறுதி வருவாய் இறுதி அலகு நெல் அளிக்கும் வருவாய்க்குச் சமமாகும்வரை அவன் நெல் சாகுபடியைப் பெருக்குவான். தொழில் துணி வோனும் இதேமுறையில் நடந்துகொள்கிறான். இப்பொழுது அவன் நடத்தும் தொழிலைச் சீராக அமைத்தலைவிட, வேறு துறை யில் மிகுதியான ஊதியத்தை (இலாபத்தை) அவன் பெறுவதற்கு இடம் இருந்தால் அவன் தன் தொழிலை மாற்றிக்கொள்வான். நடைமுறையில் தொழில் துணிவோன் ஒரு பொருளை [முதன்மைப் பொருள்—(main product)] உற்பத்தி செய்வதைவிட்டு மற் றொன்றை (துணைப்பொருளை) உற்பத்தி செய்வதில் தன் கவனத் தைத் திருப்பலாம். ஓர் உற்பத்தித்துறையை முழுவதும் கைவிடுவ தில்லை. உதாரணமாகப் பேராசிரியர் ஹெரால்ட் லாஸ்கியின் (Professor Herold Laski) தந்தை (லங்காஷயர் நகரில் ஒரு பெரிய பருத்தி ஆலையின் அதிபதி) கடுமையான மந்தகாலத்தில், முரடான பருத்தித் துணி உற்பத்தியைக் கைவிட்டு உயர்ந்த ரகத் துணியை உற்பத்திசெய்து ஏராளமான இலாபத்தை ஈட்டினார். ஜப்பானிய ஆலை முதலாளிகளும் இந்திய ஆலை முதலாளிகளும் உயர்ந்த ரகத் துணிகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்யமுடியாது. நல்ல நிலையிலிருக்கும் பல ஆலை முதலாளிகள் திவாலாகிவிட்டனர். இதைப் பேராசிரியர் லாஸ்கி அடிக்கடி எடுத்துரைப்பதில் மகிழ்ச்சி யடைந்தார்.

எப்பொழுதும் உள்ள செலவு இலாபத்திலிருந்து முழுவதும் ஈடு செய்யப்படாமல் இருக்கலாம். ஆனால், நீண்டகால முதலீப் பராமரித்துப் பழுதானவற்றிற்குப் புதியவைகளை அமைத்து, இயக்கும் செலவுகளை ஈடுசெய்து பெறும் இலாபம், நடைமுறை முதலீட்டை வேறு தொழிலுக்கு மாற்றுவதால் கிடைக்கும் இலாபத்தை விடக் குறைவாகவே இருக்கும். இந்த நிலையில் எப்பொழுதும் உள்ள செலவை ஈடு செய்யமுடியாத இழப்பு என்று தள்ளுபடி செய்துவிடுவதே சிறந்ததாகும். ஆனால், தொழிலை முன்புபோல் நீடித்து நடத்தலாம். 'இயல்பான' இலாபம் வெவ்வேறு தொழில்களில் ஆபத்துகளுக்குத் தகுந்தாற்போல் மாறுபட்டிருக்கின்றது.

பொதுவுடைமைச் சர்வாதிகார ஆட்சி நிலவும் நாடுகள் நீங்கலாக, மற்ற எல்லா நாடுகளிலும் உற்பத்தித் திட்டத்தின் தொடக்க காலத்தின் நிலையற்ற எதிர்காலத்தைச் சமாளித்துப் பண் இழப்பின் ஆபத்துகளை ஏற்கும் தொழில் துணிவோன், இலாபம் கிடைத்தால் அதைத் தன் வருமானமாகப் பெறுகிறான். இவ்வாறு இலாபம் பெறுவோரின் திட்டம் வெற்றிகரமாக இருக்கின்றது. சர்வாதிகார ஆட்சியில் ஆபத்துகள், நிலையின்மை, இலாபம் முதலியவை நீங்கவில்லை. இலாபத்தையும், இழப்பையும் தனிப்பட்டோருக்குப் பதிலாக அரசே ஏற்றுக்கொள்ளும். சரியான முடிவுகளை யார் (அரசா அல்லது தனிப்பட்டோரா) செய்கின்றனர். இழப்புகளை யார் வெற்றிகரமாகத் தவிர்க்கின்றனர் என்பதே இரு முறைகளில் அதாவது தனிப்பட்டவர்கள் தொழிலை நடத்துவது அல்லது அரசு நடத்துவது—எது சிறந்தது என்பதை நிர்ணயம் செய்யும்.

சிலர் இலாபம் என்ற சொல்லை அற்பமாகக் கருதியபோதிலும், இது இயற்கைக்கு விரோதமாகவோ அல்லது நன்னெறிக்கு முரணாகவோ அல்லது மறுக்கக்கூடியதாகவோ இல்லை. இதற்கு மாறாக இலாபம் அளிக்கும் தூண்டுதல் முதலீட்டுக்காகச் சேமிப்பை ஒருமுகப்படுத்துவதிலும் தற்காலத்திய முன்னேற்றமடைந்த உற்பத்தி முறையிலும் ஒரு முக்கியமான பணியை ஆற்றுகின்றது.[1]

இந்தியாவில் திட்டம் தொடங்கியதிலிருந்து தனியார் துறையின் உற்பத்தியில் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் ஒரு பெரும்பங்கை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. தொழில் துறையில் இது குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. 1956-57-ல் 'தொழில்களின் உற்பத்தி செய்யும் சக்தியில் 9/10 பகுதிக்கு மேலானது கூட்டுப் பங்கு

1. இனி இலாபத்தை ஓர் அற்பமான சொல்லாக நாம் கருதலாகாது என்று திரு. குருஷ்சேவ் (Mr. Khrushchev) கூடக் கூறியுள்ளார். இதற்குமாறாக அது திறமைக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கின்றது என்று அவர் கூறினர். 'ஈவினிங் ஸ்டாண்டர்ட் மார்ச்சு 11, 1963 (Evening Standard, March 11, 1963).

நிறுவனங்களிடம் இருந்தது.[1] தற்காலத்திய உற்பத்தித் திட்டங்களுக்கு மூலதனத்தில் ஒரு பெரும்பகுதியைக் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் அளிக்கின்றன. குறிப்பாகப் பெரிய பொறிகளைக் கொண்டு உற்பத்திசெய்யும் தொழில்களுக்கு இவை மிக அதிக மான தொகையை அளிக்கின்றன. பங்குத் தொகைகள், மீண்டும் தொழிலில் திருப்பப்பெற்ற இலாபம், பாங்குகள் கொடுக்கும் கடன் முதலியவைகள்மூலம் இவை தொழில்களுக்கு மூலதனம் கொடுக் கின்றன. இதற்கு இலாபம் அளிக்கும் தூண்டுதல் மிகவும் தேவை. இந்த இலாப நோக்கைத் தவிரப் பயன்படுத்தப்படும் வேறு முறை அரசு தொழில்களைப் பொதுத்துறையில் (public sector) கொண்டு வருவதுதானுகும் (இலாப நோக்கின் தீயவிளைவுகளை நீக்க வேண்டும்.) ஆனால், வளர்ச்சியடையாத பல நாடுகளில் பொதுத் துறை இத்தகைய வர்த்தக நிறுவனங்களை நடத்தும் நிலைமையில் இல்லை. 1958-59-ல் ஏறக்குறைய பெரிய, நடுத்தரத் தொழில் களின் மொத்த இலாபத்தில் 80 சதவீதம் இந்தியாவில் தனியார் துறையில் இருந்தது. இதுபோன்ற பாகிஸ்தானின் புள்ளி விவரங் கள் கிடைக்கவில்லை. புதிய தொழில்களைப் பொதுத்துறையில் துவக்கிக் காலப்போக்கில் தனியார்துறையில் விடுவது பாகிஸ் தானிய அரசின் கொள்கை. இதிலிருந்தே தனியார்துறை அந்த நாட்டில் நீக்கப்படாத நிலையில் இருக்கின்றது என்பது புலனுகின்றது.

ஆபத்துகளை ஏற்கத் தயாராக இருக்கும், துணிவுகொண்ட தொழிலதிபர்கள் வெற்றிகரமாக இருந்தால் மாறுதல்களைப் (உற்பத் தியில்) புகுத்துவர்; தொழில் அமைப்பிலும், உற்பத்திமுறையிலும் புதிய வழிகளைப் பின்பற்றுவர். தொழிலைத் திறமையுடன் நடத்து வர். இவர்கள் மிகுதியான இலாபத்தை ஈட்டுவதோடல்லாமல், நாட்டின் பொருளாதாரமும், திறமையும் சீராக அமைவதற்குக் காரணமாக இருப்பர் என்பதை நாம் மறுக்கமுடியாது. உற்பத்தி யில் திறமை அதிகரிப்பு—அதாவது குறைந்தபட்சச் செலவில் உயர்ந்தபட்ச இலாபம் ஈட்டுவது—இலாபத்தை நாடும் ஒரு நிறு வனம் செய்யக்கூடிய பெரும்பணியாகும். உயர்ந்தபட்ச இலா பத்தைப் பொருள்களின் அளவும் தரமும் நிர்ணயம் செய்யும். அதிகமான திறமையுள்ள நிறுவனங்கள் உற்பத்திசெய்யும் பொருள் கள் சிறந்தவை என்ற ஒரு பெயர் நிலைபெறுகின்றது. மலிவான பொருள்களைவிட, மக்கள் கொடுக்கும் விலைக்குப் பெறுமானமுள்ள

[1] ஆர். கே. நிங்கம் என். டி. ஜோஷி (R. K. Ningam & N. T. Joshi, 1960) எழுதிய, 'கம்பனி நிதியின் போக்குகள் (1960) பக்கம், 37 (Trends in Company Finance) என்ற நூலையும், ஆர். கே. நிங்கம், என் சி. சௌத்ரி (N.C. Chaudhri) எழுதிய 'இந்தியாவில் கூட்டுப் பங்கு நிறுவனங்களின் பகுதி,' 1960, (The Corporate Sector in India, 1960) என்ற நூலையும் பார்க்கவும்.

உயர்ந்த பொருள்களை அவை ஆக்குகின்றன. மேலும், திறமையைப் பெருக்கத் தொடர்ந்து முயற்சிசெய்துகொண்டே இருக்கவேண்டும். போட்டி நிலவும்பொழுது, ஒரு நிறுவனம் வெற்றிகரமாக இருக்கவேண்டுமானால் அது ஒரே ஒரு முறை புதிய மாறுதலைப் புகுத்தினால்மட்டும் போதாது. இப்படிச் செய்யும் ஒரு நிறுவனம் மிக அதிகமான இலாபத்தையோ அல்லது 'இயல்பான' இலாபத்தையோ ஈட்டமுடியாது. தொடக்ககால (ஒரு துறையில்) முயற்சி செய்தவனுக்குச் சில இடையூறுகள் இருக்கலாம். ஏனெனில், உற்பத்திமுறைபற்றிய அறிவும், தொழில் நுணுக்கமும் முன்னேறிய பிறகு அவனுடன் போட்டியிடுவோர் மிகுந்த திறமையுடன் இயங்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தலாம். தொழிலமைப்பும் அவர்களுக்குச் செம்மையாக இருக்கலாம். நாடுகளும், தனிப்பட்டவர்களும் இந்த அனுபவத்தைக்கொண்டிருக்கின்றனர். தொழிற்புரட்சி இங்கிலாந்தில் முதன்முதலில் ஏற்பட்டதால் பின்னர் தொழில் முன்னேற்றமடைந்த நாடுகளுடன் அது போட்டியிடுவது கடினமாக இருந்தது. ஜப்பானின் அளவற்ற தொழில் முன்னேற்றத்திற்கு அந்த நாடு இத்துறைக்குத் தாமதித்து வந்ததே காரணமாகும். தொழில் நிறுவனத்தின் திறமை முழுவதும் பராமரிக்கப்பட்டு, வளர்க்கப்பெற்று வந்தால்தான் இலாப வீதம் குறையாமலிருக்கும். எச்ச இலாபத்தை (net profit) உயர்ந்தபட்ச நிலைக்குக் கொண்டுவரும் நிறுவனங்கள் எளிமையாகத் தம் உற்பத்தியைப் பெருக்கும் சக்தியையும், பல பொருள்களை உற்பத்தி செய்யும் திறமையையும், அடக்கச் செலவைக் குறைக்கும் ஆற்றலையும் கொண்டிருக்கும் என்பது மேற்கூறியவற்றின் முடிவாகின்றது.

அடக்கச் செலவைக் குறைப்பதற்காகக் கூலிகளைக் குறைக்கவேண்டும் என்றோ அல்லது தொழிலாளர்களின் வேலை நிலைமையைச் செம்மையற்றதாகச் செய்யவேண்டும் என்றோ நாம் புரிந்து கொள்ளக்கூடாது. தொழிலாளர்களுக்கு உயர்ந்த கூலியைக் கொடுத்து அவர்கள் உழைப்புக்கும், உடல் நலத்திற்கும் உகந்த நிலையை ஏற்படுத்தினால், தலா உற்பத்திமூலம் அளக்கப்படும் அவர்களுடைய திறமை (ஓரளவு) உயரும் என்பது அனுபவ வாயிலாகக் கண்ட உண்மை. தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டால் திறமையின்மையும், அதிருப்தியும், விசுவாசமின்மையும் நம்பிக்கையின்மையும் வளரும். இதைத் தவிரக் கொடுமையும் இருக்கும். துரதிர்ஷ்டவசமாக வேலையின்மையும், முழுவேலையின்மையும் அதிகமாக இருக்கும் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் தொழிலாளர்கள் ஏமாறுவதால் ஏற்படும்பொருளாதாரச் செலவுகளைத் தனிப்பட்டவர்களிடமிருந்து சமுதாயத்திற்குத் திருப்பிவிடலாம். ஊக்கம், திறமை, உடல்நலம் முதலியவை பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிப் புதிய தொழிலாளர்களை அமர்த்தலாம். இவ்வாறு

அவர்கள் செய்வதால் தொழிற்சாலைச் சட்டங்களையும், பொதுசுகாதாரச் சட்டங்களையும், பொதுநலம்பற்றிய சட்டங்களையும் அரசியலார் இயற்றவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. தொழிலாளர்கள் ஏற்கவேண்டிய ஆபத்துகளையும் இந்த உதாரணம் காட்டுகின்றது. இந்த ஆபத்துகளின் விளைவுகள் தொழில் துணிவோன் ஏற்கவேண்டிய ஆபத்துகளின் விளைவுகளைப்போலவே, கடுமையாக இருந்தபோதிலும் இவைகளை நாம் இங்கு விவரிக்கமுடியாது. சமுதாயத்திற்கு ஏற்படும் தீமைகளைப் பொதுநலம்பற்றிய சட்டங்கள்மூலம் குறைக்கலாம் என்பதையும், ஆனால் குறைந்தபட்சக் கூலிபற்றிய சட்டத்தைக் கவனமாக இயற்றவேண்டும் என்பதையும்மட்டுமே இங்குக் குறிப்பிடலாம். ஓரளவுக்குமேல் உயர்ந்த கூலி திறமையை உயர்த்தாது. இதற்குமேல் கூலி உயர்ந்தால், அடக்கச் செலவுமட்டும் உயரும்; தொழில் பெருக்கம் தடைபடும்; வேலையின்மை அதிகரிக்கும். இதனால் இறக்குமதி பெருகி, ஏற்றுமதி குறையலாம். தேசிய வருமானத்திலும், வாழ்க்கைத்தரத்திலும் முன்னேற்றம் ஏற்படுவது தடைப்படும். மேலும், பல குடும்பங்கள் மிகவும் ஏழ்மையான நிலையில் இருக்கின்றன. ஆகையால் குறுகிய காலத்தில்கூட, குடும்பத்தில் ஒருவர் குறைந்த கூலியை வாங்குவதே மற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாததையும் வேலையில் முன்பே அமர்ந்திருக்கும் ஒரு சிலர் உயர்ந்த கூலியைப் பெறுவதையும் விடச் சிறந்ததாகும்.

மேற்கூறியபடி தொழிலாளர்களுடைய துன்பம், விளைவிக்கும் செலவுகளைத் தனிப்பட்ட முதலாளிகள் சமுதாயத்திற்குத் திருப்பலாம். இந்தச் 'சமுதாயச்செலவை' நாம் இதுவரை குறிப்பிடவில்லை. தனிப்பட்டவர்களின் செயல் தீய விளைவுகளை ஏற்படுத்தலாம். இதனால் ஏற்படும் செலவுகளை அவர்கள் ஏற்பதில்லை. ஆகையால் அவர்களுடைய அடக்கச் செலவுகளில் இவை சேர்க்கப்படுவதில்லை. உதாரணமாக, ஒரு தொழிற்சாலை கரமான அசுத்தமான வாயுவை வெளிவிடுவதால் உடைகளையும் வீட்டுச் சாமான்களையும் அடிக்கடி சுத்தம் செய்யவேண்டிய நிலைமை ஏற்படும். வீடுகட்டும் பொருள்கள் விரைவில் பழுதாகிவிடும். தொழிற்சாலைக்கு அருகில் உள்ள பகுதியில் மக்களுடைய உடல் நலம் குன்றும். ஆனால், இதனால் சில நன்மைகளும் சமுதாயத்திற்கு ஏற்படலாம். இரயில்வண்டிகளைப்போன்ற மலிவான போக்குவரத்து வசதிகள் 'இயல்பான இலாபத்தை' கிராமாந்தரப் பகுதிகளில் கொடுக்கத் தவறலாம். ஆனால், இதுவரை தொடர்பில்லாமல் தொலைவிலிருந்த இடங்களுக்கு தொடர்புவசதி ஏற்படும். அயல்நாட்டு வர்த்தகத்திற்கும் வாய்ப்புக்கள் ஏற்படலாம். ஆகையால் சில சமயங்களில் இத்தகைய திட்டங்கள் அளிக்கும் மறைமுக சமுதாய இலாபம் நேரடி இழப்பைவிட அதிகமாக இருக்கும்.

சமுதாய இலாபங்களும் இழப்புகளும், 'புறச்சிக்கனங்களுடனும், சிக்கனமின்மையுடனும்' (external economies and diseconomies) தொடர்பு கொண்டிருக்கின்றன.[1] கருத்து வேற்றுமையுள்ள இதைப்பற்றி நாம் இங்கு விவரமான விளக்கம் கொடுக்க முடியாது. ஆனால், ஒரு நிறுவனத்தின் மாறுதல் அல்லது கொள்கை ஏற்படுத்தும் விளைவுகளைத் தவிர, சூழ்நிலை, மற்ற நிறுவனங்களின் செயல்கள் அல்லது அரசின் செயல்கள் அதன் அடக்கச் செலவையோ அல்லது பொருள் விற்பனையையோ பாதித்தால், இதைப் புறச்சிக்கனம் அல்லது சிக்கனமின்மை என்று கூறுவது வழக்கம். உதாரணமாக ஓர் எஃகுத் தொழிற்சாலை (கச்சாப்பொருள்கள் அருகில் கிடைப்பதால்) மார்க்கட்டிலிருந்து தொலைவிலுள்ள ஓர் இடத்தில் அமைந்திருக்கலாம். ஆனால், அதே இடத்தில் மற்ற எஃகுத் தொழிற்கூடங்களோ அல்லது அரசியலாரின் ஆலையோ நிறுவப்பெற்றால், பொருளை மார்க்கட்டுக்குச் செலுத்துவதால் ஏற்படும் போக்குவரத்துச் செலவு ஓரளவாவது குறையும். ஆனால், தொழிலாளர்களின் அளிப்பு குறையும்; அவர்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படும். ஆகையால் அடக்கச் செலவு உயரும்.

புறச்சிக்கனம், சிக்கனமின்மைபற்றி இரு கருத்துகளில் ஒற்றுமைகள் இருக்கின்றன என்று சிடோவஸ்கி (Scitovsky) கூறுகிறார்: 'ஒரு நிறுவனம் மற்றொன்றுக்கு இலவசமாக ஆற்றும் பணியோ அல்லது செய்யும் தீமையோ புறச்சிக்கனம், சிக்கனமின்மை என்றழைக்கப்படும்.' இரண்டாவதற்கச் 'சமுதாய நன்மைக்கும் தனிப்பட்டவர்களின் இலாபத்திற்கும் உள்ள வேறுபாட்டிற்குப் புறச்சிக்கனங்களே காரணமாகும்.' இதுவே நிறைவுப் போட்டி உத்தமநிலை (optimum situation) ஏற்படுத்தாமைக்கும் காரணமாகவும் இருக்கின்றது.'[2] இதற்குமேல் எல்லாரும் ஏற்றுக் கொள்ளும் ஆராய்ச்சியோ அல்லது புறச்சிக்கனத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிய கருத்து ஒற்றுமையோ இல்லை. இருந்தபோதிலும் முதலீட்டைத் திட்டத்திற்குட்படுத்தினால், திட்டமில்லாதபோது ஏற்படும் புறச்சிக்கனங்களைவிட அதிகமான சிக்கனங்கள் விளையும் என்று கருதுகின்றனர். புறச்சிக்கனங்கள் சமுதாய நன்மைக்கும் தனிப்பட்டவர்களின் இலாபத்திற்கும் உள்ள வேறுபாட்டுக்குக் காரணமாக இருப்பதால், இதைச் சரிக்கட்ட வரியை விதிக்கவோ

[1]. (A. N. Agarwala, S. P. Singh) ஏ. என். அகர்வாலா, எஸ். பி. சிங் எழுதிய, 'வளர்ச்சியின்மையின் பொருளாதார இயல்புகள்' (The Economics of underdevelopment) என்ற நூலைப்பார்க்கவும். (Tibor Scitovsky) டிபர்ஸ்கிடோவ்ஸ்கி என்பவருடைய கட்டுரையையும் பார்க்கவும்.

[2]. ஏ. என். அகர்வாலா, எஸ். பி. சிங் (A. N. Agarwala and S. P. Singh) எழுதிய முன்பு குறிப்பிட்ட நூலை (பக்கம் 295)ப் பார்க்கவும்.

அல்லது உதவித்தொகையளிக்கவோ இடமிருக்கின்றது. இவ்வாறு செய்வதால் இந்த வேறுபாடு நீங்கும். உதாரணமாக, நகரத்திற்கு வெளியே உள்ள ஓர் இடத்தில் ஒரு புதிய தொழிற்சாலையோ அல்லது புதிய வீடுகள் அமைக்கும் திட்டமோ ஏற்பட்டால், அங்குள்ள நிலச்சுவான்தார்கள் தம் நிலத்தை உயர்ந்த விலையில் விற்கலாம். இதனால் ஏற்படும் 'உழைக்காமல் பெற்ற இலாபத்தில்' (unearned income) ஒரு பகுதியை அரசியலார் பொதுநலக் காப்பாளர் என்றமுறையில் வரிகள்மூலம் வசூலித்துக்கொள்ளலாம். இதற்கு மாறுகப் பொதுத்துறையின் செயலோ அல்லது தனியார்துறையின் செயலோ ஒரு பகுதியிலுள்ள நிறுவனத்தின் வருமானத்தை அல்லது தொழிலாளர்களைப் பாதித்தால், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பு ஈடு அளித்து அவர்களை அருகிலுள்ள வேறு இடங்களுக்கு அனுப்புவதற்கு வழிசெய்வது நியாயமானதே.

மேலே விவரிக்கப்பெற்றுள்ள தொழில் துணிவோனின் அலுவல்கள், இலாபம் ஈட்டுபவன் சிறந்தவன் என்று முடிவு செய்வதற்காக விளக்கப்பெற்றவை அல்ல. பல்வேறு காலங்களில் முதலாளிகள் என்று அழைக்கப்படும் அவர்கள் கொடூரமாகவும் மற்றவர்களுக்குத் தீங்கிழைக்கும் முறையிலும் நடந்துகொண்டிருக்கின்றனர் என்பதையும் நாம் மறுக்கவில்லை. தொழில் துணிவோன் அதிர்ஷ்டசாலியாக இருக்கலாம்; அல்லது தந்திரசாலியாகவும் ஊழல் நிறைந்தவனுகவும் இருக்கலாம். இலாபமோ அல்லது இலாபம் ஈட்டுவதோ தவறன்று. ஆனால், நேர்மையற்ற முறையும் தொழிலாளிகள் துன்பங்களுக்கும் நுகர்வோன் துன்பங்களுக்கும் காரணமாக இருக்கும் பொருளாதார சக்தியின் தவருன பயன்பாடும் கண்டிக்கத் தக்கவை; இதுவே நமது கருத்தாகும். சில சந்தர்ப்பங்களில் தற்காலிகமாகப் போட்டியைப் புறக்கணிப்பதால், இலாபமும் முதலீடும் மற்றச் சூழ்நிலையில் இருப்பதைவிட அதிகரிக்கலாம்; அல்லது ஒரு பகுதியின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கலாம். ஆனால், சர்வாதீனமும், சர்வாதீன இலாபமும் இருப்பதால் ஆபத்தின் அறிகுறி தோன்றுகிறது. இவைமட்டும் அநீதிக்கும் கொடுமைக்கும் காரணமாக இல்லாவிடினும், இவைகளைப் புறக்கணிக்கக் கூடாது. சுயநல நோக்குடன் நேர்மையற்ற தவருன முறைகளைப் பொருளாதார தன்மைகளைக் கருதிப் பின்பற்றுவது தவறு. இவைகளைப் பெரும்பாலும் பொருளாதாரச் சூழ்நிலைகளைக் கருதிப் பின்பற்றுமல் சமுதாயச் சூழ்நிலைகளைக் கருதியே பின்பற்றுகின்றனர். நெறி, சட்டம், சிறந்த நிலையங்கள், நிர்வாகம் முதலியவை இந்த முறைகளைக் கட்டுப்படுத்த இயலாமல் இருப்பின், பொருளாதார நிலைமை பாதிக்கப்படும். தனிப்பட்டவர்களும், பல பகுதியினரும் தம் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமிப்பதாலும், தொழிலதிபர்கள் உச்ச வருமானத்தைப் பெறுவதாலும் உற்பத்திக்கு

வேண்டிய முதலீடு செய்யப்படுகின்றது. இதனால்தான் ஒரு நாட்டின் உற்பத்தி செய்யும் சக்தி மிகுதியடைகின்றது; வாழ்க்கைத் தரமும் உயர்கின்றது.

ஆனால், எல்லாத் திட்டங்களும் வெற்றிகரமாக இருப்பதில்லை. ஒரு நிறுவனம் தன் முயற்சியில் தவறினால், பங்குதார்களும் அதற்குக் கடனுதவியளித்தவர்களும் பணத்தை இழக்க நேரிடும். நிறுவனங்கள்பற்றிய சட்டங்கள் இயற்றப்படுவதற்கும், வரையிட்ட பொறுப்பு (limited liability) பிரபலமாவதற்குமுன், பழைய காலத்தில் பல நாடுகளில் முதலீடு செய்வோரில் கவனக் குறைவாக உள்ளவர்கள் அடிக்கடி பல தொல்லைகளுக்கு இலக்காயினர். (நிறுவனம் திவாலானால் பங்குதார்கள் தம் பங்குத் தொகையை மட்டுமே இழப்பர் என்பதையே, 'வரையிட்ட பொறுப்பு' என்பது குறிக்கின்றது.) இந்தியாவில், 'வரையிட்ட பொறுப்பு' முதன் முதலில் 1855-ல் அமலில் வந்தது. அண்மையில் நிறுவனங்கள் பற்றிய சட்டத் தொகுப்பு ஒன்று தயார் செய்யப்பட்டுள்ளது.[1]

இன்று கடன் கொடுத்தோரின் உரிமைகளையும் பங்குதார்களின் உரிமைகளையும் பெரும்பாலான நாடுகளில் நிறுவனங்கள் பற்றிய சட்டம் பாதுகாக்கின்றது. இச் சட்டப்படி கணக்குகளை ஒழுங்காகக் குறிப்பிட்டமுறையில் வைத்துக்கொள்ளவேண்டும். இவை தணிக்கையாக வேண்டும். இச் சட்டம் நிறுவனங்களில் முன்பு இருந்த ஊழல்களையும் குறைகளையும் நீக்கியது. இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பழைய நிர்வாக ஏஜென்சி (managing agency) முறையின் ஊழல்களும் நீங்கின. எப்பொழுதாவது பங்கு மார்க்கட்டில் (stock exchange) ஊக வாணிகமும் (speculation) நெருக்கடியும் ஏற்படுவதைத் தவிர (இதை அடுத்துப் புகார்களும் கிளம்புகின்றன) தனியார்துறையில் நிறுவனங்கள் திவாலாவது அரிதாகும். நீண்ட நாளாகத் திறமையற்ற நிறுவனங்கள் தொழில் செய்வதும் அரிது. ஆனால், பொதுத்துறையில் பல பெரிய தவறுகள் செய்யப்படலாம். திறமையற்ற நிறுவனங்களின் நீண்ட கால அல்லது நிரந்தர இழப்புகளை வரி செலுத்துவோர் ஏற்க வேண்டும். மேலும், தொழிலை நன்குநடத்தும் திறமை படைத்தவர்களைப் பொதுத்துறை கவனமாகப் பணிபுரிவதையும், அன்றாட அலுவல்களைச் செம்மையாகச் செய்வதையும் வளர்க்கும் துணிவுடன், புதியதான எதையும் செய்யும் ஆற்றலை வளர்க்காது. தொழில் நிறுவனங்களைப் பொதுத் துறையில் நடத்துவதால், பயன் எதுவும் ஏற்படாது என்று நாம் குறிப்பிட விரும்பவில்லை. புறச்

[1] 'இந்தியாவில் தொழில் நிறுவும் முயற்சி' (Industrial Enterprise in India) என். தாஸ் (N. Das) எழுதிய நூலைப் (4வது பதிப்பு 1962) பார்க்கவும்.

சிக்கனங்கள் போன்ற சில பொருளாதார நன்மைகள் ஏற்படலாம். தனியார் துறையைவிடப் பொதுத்துறையில் மிக நீண்ட காலத்தில் இலாபம் கிடைக்கலாம்.

பொருளாதார அமைப்பில் இலாபத்தைப்பற்றிய இறுதியாக ஒரு கருத்தைக் குறிப்பிடவேண்டும். இயல்பான இலாபத்தைவிட, உயர்ந்த இலாபம் ஒரு தொழிலில் கிடைத்தால், அதைச் சம நிலை யின்மையின் (disequilibrium) அறிகுறி என்று என்று நாம் கருத லாம். ஆனால், போட்டி குறைக்காத மிக உயர்ந்த இலாபத்தை மிக வும் திறமையுள்ள தொழில் துணிவோன் பெறலாம். தொழிலில் மிக உயர்ந்த இலாபம் கிடைத்தால், திறமையுள்ள தொழில் துணிவோர் வேண்டிய அளவில் கிடைக்கவில்லை என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும். போட்டி நிலவும்பொழுது புதிய நிறுவனங்கள் ஆரம்ப மாவதாலும், பழைய நிறுவனங்கள் பெருகுவதாலும் இலாபம் குன்றிச் சமநிலை ஏற்படும். இயல்பான இலாபத்தைவிடக் குறைவான இலாபம் இருந்தால், தொழிலில் அளவுக்குமீறிய சக்தி இருக் கின்றது என்று நாம் புரிந்துகொள்ளவேண்டும். குறுகிய காலத் தில் பொருளாதார வீக்கத்தினாலோ அல்லது மந்தத்தினாலோ மிக அதிகமான இலாபம் கிடைப்பதோ அல்லது இழப்பு ஏற்படு வதோ இப்பொது விதிக்கு முரணாகாது.[1]

B. தொழில் நிறுவனங்களின் பொருளாதாரப் பிரச்சினைகள்

(i) முன்னுரை

தொழில் நிறுவனங்கள் அமைப்பிலும், உற்பத்திமுறையிலும், அவைகளுடைய அளவிலும், நோக்கங்களிலும்கூட எவ்வாறு வேறு பட்டிருக்கின்றன என்பதை விளக்கினோம். உதாரணமாக இந்தியா விலும் பாகிஸ்தானிலும் சிறிய நிறுவனங்களை நடத்துவோர் இருக்கின்றனர். இவர்களுடைய மொத்த வருமானத்தில் இலாபம் ஒரு சிறிய பகுதியாகவே இருக்கின்றது. கீழ்க்கண்ட நிறுவனங் களும் இருக்கின்றன : பல்வேறு அளவுகளில் தொழில் நடத்தும் கூட்டுத்தொழில் (partnership), தனி (அல்லது ஒரு சிலருக்குச் சொந்தமான) நிறுவனங்கள், (குறிப்பிட்ட சிலரே பங்குகளைக் கொண்டிருக்கின்றனர்.) வரையிட்ட பொறுப்புடன் துணை நிறுவ னங்களை நடத்தும் கூட்டுப்பங்கு நிறுவனங்கள் (joint stock companies), வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படும் மிகப் பெரிய நிறுவனங்கள் (இவை பரவலான தொழிலையும், நிதித் தொடர்பு

[1] இவ் வதிகாரத்தின் B பிரிவில் (ii) பகுதியைப் பார்க்கவும்

கூடியும், பல நாடுகளில் கிளைகளையும் துணை நிறுவனங்களையும் கொண்டிருக்கின்றன. இவைகளைத் தவிர, நிர்வாக ஏஜென்சி முறை என்ற ஒருமுறை (இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மட்டும் உள்ள முறை) 19ஆவது நூற்றாண்டின் இறுதியில் முன்னேற்ற மடைந்த புதிய தொழிற்பகுதியில் தோன்றியது. சுதந்தரத் துடன் இயங்கும் ஒரு புதிய நிறுவனம், பழைய நிறுவனம் ஒன் றுடன் உடன்பாடு செய்துகொள்ளும். இதன்படி புதிய நிறுவனத் தின் நிர்வாகப் பொறுப்பைப் பழைய நிறுவனம் ஏற்கும். இதுவே, நிர்வாக ஏஜென்சி முறையாகும். இந்தியாவில் இந்த நிர்வாக ஏஜென்சி நிறுவனங்கள் ஆங்கிலேய நிறுவனங்களாகவே இருந் தன. பின்னர் இந்திய நிறுவனங்களும் இத்தகைய பொறுப்பை ஏற்றன. நீண்டகாலமாக இந்த நிறுவனங்கள் தொழிலை ஆரம் பித்துத் தொடக்க வேலைகளைச்செய்து, நிர்வாகத் திறமையையும் அனுபவத்தையும் தொடர்ந்து அளித்துவந்தன. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இவை நிதி, கொள்கை வகுத்தல்பற்றிய சக்திகளைக் கொண்டிருந்ததாலும், சில குடும்பத்தினர் அதிகாரத் தைத் தொடர்ந்து தம் வசமே கொண்டிருந்தமையாலும் (பிணைந்த இயக்குநர் முறையாலும் (interlocking directorate) மற்ற வர்த் தகத் தொடர்பு முறையாலும் இப்படிச் செய்தனர்.) தொழில் நிர்வாகப் பொறுப்பிலும் அதிகாரத்திலும் சர்வாதீனங்களும் ஊழல் களும் ஏற்பட்டன. அண்மையில் நிறுவனங்கள்பற்றிய சட்டங் கள் அமலில் வருவதற்குமுன் ஒரு சில தொழிலதிபர்கள் பல நிறு வனங்களின் பங்குகளைக் கொண்டிருந்தனர். தம் சொந்தச் செல் வாக்கைப் பயன்படுத்தினர்; இவர்கள் பல நிறுவனங்களில் இயக்குநர்களாகவும் இருந்தனர். இப்படிப் பற்பல வழிகளில் அவர்கள் பெருவாரி உற்பத்திசெய்யும் தொழில்களில் தம் ஆதிக் கத்தை நிலைநாட்டிக்கொண்டனர்.[1]

நாட்டுப் பிரிவினைக்குப் பிறகு, இந்தியாவிலும் பாகிஸ்தானி லும் நிறுவனங்களின் நிர்வாகம்பற்றிய சட்டங்கள் இயற்றப்பெற் றன. குறிப்பாக, 1956-ல் இந்தியன் கம்பெனிச் சட்டம் (Indian Companies Act) அமலில் வந்தது. ஆங்கிலேயச் சட்டத்தை ஒட்டி அமைந்துள்ள இது, தொழில் துவக்கத்தில் உள்ள மேலே சுறிப்பிட்டுள்ள ஊழல்களையும் தொழில் நிர்வாகக் கட்டுப்பாட்டு ஊழல்களையும் நீக்குகின்றது. நிர்வாக ஏஜென்சி முறையிலுள்ள குறைகளையும் நீக்குகின்றது.[2] ஆனால், மேற்கூறிய தொடர்புகள் இல்லாமல் இளைஞர்கள் (எவ்வளவு அறிவையும் துணிவையும்

[1] அசோகமேதா (Asoka Mehta) எழுதியுள்ள 'Who Owns India?' 1950 என்ற நூலைப் பார்க்கவும். எஸ். எல். சர்மா எழுதியுள்ள 'Some Trends in Capitalist and Concentration in India, 1961' என்ற நூலையும் பார்க்கவும்.

[2] ஜி. டைசன் (G. Tyson எழுதிய 'Managing Agency System', 1961.

கொண்டிருந்தபோதிலும்) தனியார்துறையில் அதிகாரத்தையும், நிர்வாகப் பொறுப்பையும் அளிக்கும் பதவிகளைக் கைப்பற்றுவது கடினம். ஆனால், பொதுத்துறையில் அறிவுள்ளவர்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், பொதுத் துறையில் இலாபம் பெற முடியாது; அதற்குப் பதிலாக வேலைவாய்ப்பையும் நிரந்தர மான சம்பளத்தையும் பெறலாம். ஒவ்வொரு நிறுவனமும் கம்பெனிச் சட்டத்தில் அதற்குப் பொருத்தமான பிரிவுக்குட்பட்டி ருக்கின்றது என்பதையும்,பல்வேறு நிறுவனங்கள் வரி வசூலிப்பதற் காகப் பல முறைகளில் கருதப்படுகின்றன என்பதையும் நாம் இறுதியில் குறிப்பிடவேண்டும்.

இத்தகைய வெவ்வேறு சூழ்நிலைகளின் காரணமாகத் தனி நிறுவனங்களின் பிரச்சினைகளையும், கொள்கைகளையும்பற்றிய பொது உண்மைகளைக் கூறஇயலவில்லை. அவைகளுடைய இலாபமும் எப்படி நிர்ணயமாகின்றது என்பதையும் நாம் கூற முடியவில்லை. ஒவ்வொன்றையும் ஆராயும்பொழுது அதை அதன் சூழ்நிலையுடனும், சுற்றுப்புறத்துடனும் தொடர்புபடுத்தியே பேச வேண்டும். எனினும், நிறுவனங்கள் சமாளிக்கவேண்டிய பொருளாதாரப் பிரச்சினைகளின் சில கூறுகளையும் தேர்வுகளையும் பொது ஆராய்ச்சிக்குட்படுத்தலாம். ஆனால், சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தவாறு பொது விதியின் பொருத்தம் மாறும் என்பதை நாம் மனத்தில் கொள்ளவேண்டும்.

இப் பிரிவின் எஞ்சியுள்ள பகுதியில் பொது, தனியார் துறை களின் பிரச்சினைகளுடைய ஒப்பீட்டைக் காணலாம். இந்தியா விலும், பாகிஸ்தானிலும் தொழிலைப் பாதிக்கும் சில சக்திகளைக் குறிப்பிடுவோம். பல நிறுவனங்களுக்கு முக்கியமானவையாக விருக்கும் பொருள்கள் தனித்தனியாக விளக்கப்பெற்றிருக்கின்றன. ஒரு முக்கியமான தலைப்பு, இந்த நூலின் நோக்கத்திற்கப்பாற் பட்டது என்ற காரணத்தினால் புறக்கணிக்கப்பெற்றிருக்கின்றது. அது தொழிலாளர்கள் முதலாளிகள்பற்றியது.[1]

தனியார்துறையிலும், பொதுத்துறையிலும் உள்ள பிரச்சினை களும் கொள்கையும் வேறுபட்டிருப்பதற்கு இரு துறைகளின் நோக்கங்கள் ஒரு பெரிய காரணமாகும்.

தனியார்துறையில் பலரிடையே இலாபத்தை ஆக்கத்துடன் ஈட்டுவதில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், செலவுக்கு மேலான உபரி வருவாயை அடையவேண்டும் என்பது முக்கிய

1. சி. பி. குமார் (C. B. Kumar) 'Development of Industrial Relations in India, 1961 என்ற நூலைப் பார்க்கவும்.

மான நோக்கமாகும். ஆனால், அறிவின்மையும், முற்போக்கை விரும்பாத தன்மையும், முயற்சியின்மையும் இதற்குச் சில இடங்களில் தடையாக இருக்கலாம். சில தொழிலதிபர்கள் பழைய உற்பத்திமுறைகளையே பின்பற்றுவதை முதல்வகைத் தடைக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். சுறுசுறுப்பான சிலர், உற்பத்தியின் அளவைப் பெருக்கவும், பல பண்டங்களை உற்பத்திசெய்யவும் முன் வரலாம். ஆனால், உற்பத்திமுறைகளையும், அமைப்பையும் மாற்ற மறுக்கலாம். இதை இரண்டாவதுவகைத் தடைக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இலாபத்தைப் பெருக்கவேண்டுமென்ற பேரவாக் கொண்டவர்கள், மற்றவர்களைவிடப் போட்டியில் முன்னணியில் வரவேண்டும் என்று பல திருப்பங்களையும், மாறுதல்களையும் உற்பத்தியில் புகுத்துவர். இந்த வேறுபாடுகள் இருந்தாலும், நிறைவுப்போட்டி இருக்கும்பொழுது, ஒவ்வொரு நிறுவனமும் இறுதி வருவாயும், இறுதிச் செலவும் சமமாகும்வரை தன் உற்பத்தியைப் பெருக்கும். அதாவது ஒவ்வொரு நிறுவனமும் தன் எச்ச வருவாயை அல்லது இலாபத்தை உயர்ந்தபட்சமாக்கும்.

ஒரு நிறுவனம் பொதுத்துறையில் சர்வாதீனமாக இருப்பதோடல்லாமல், இலாபத்தை உயர்ந்தபட்சமாக்கவேண்டும் என்ற நோக்கம் கொள்ளாமல் இருக்கலாம். உதாரணமாக, இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பொதுத்துறை நிறுவனங்கள் திட்ட நோக்கங்களுக்குட்பட்டிருக்கின்றன. உற்பத்தியின் அளவை உயர்ந்தபட்ச நிலைக்குப் பெருக்குவதும், வருமானத்தின் பகிர்வை மாற்றியமைப்பதும், வேலையின்மையையும், முழு வேலையின்மையையும் நீக்குவதும் (அல்லது குறைப்பதும்) திட்டத்தின் நோக்கங்களில் சேர்ந்திருக்கின்றன. பொருளாதார வளர்ச்சிபற்றிய நோக்கத்துடன் பொதுத்துறைக்கு வருமானம் பெறும் நோக்கமும் தொடர்பு கொண்டிருக்கின்றது. இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தகுந்த கொள்கைகள், ஒன்றோடொன்று முரண்பாடு கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நோக்கமும் தனித்தனியாக நிறைவேற்றப்படவேண்டும்; அல்லது இவைகளுக்கிடையே முரண்பாடற்ற நடுநிலை ஏற்படவேண்டும். இதனால் பற்பல கூறுகள் உள்ள வழிகள் கொள்கை வகுப்போர்முன் தோன்றுகின்றன. மிகவும் பாதிக்கப்படும் கொள்கைகள் விலைபற்றியவையாகவும் உற்பத்தி முறையைத் தேர்ந்தெடுக்க வேண்டியவையாகவும் இருக்கின்றன. பின்னர்க் குறிக்கப்பெற்றுள்ளது, அதிகாரம் 12-ல் Bபிரிவில்விளக்கப் பெற்றிருக்கின்றது. இங்கு விலைக் கொள்கையையே விவரிப்போம். பொதுத்துறைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கும் கொள்கையைத் தனியார்துறையிலும் நேரிடைக் கட்டுப்பாடுகள்மூலமும் (தடையுத்தரவு, அளவைக் கட்டுப்பாடு, கூலிசென்சுமுறை போன்றவை),

விலைக் கருவி மூலமும் (உதாரணமாக வரி, வரிச்சலுகை, விலையை ஏற்படுத்துவது போன்றவை) அமலில் கொண்டுவரலாம்.

பொதுத்துறைத் திட்டங்களை எவ்வாறு அமைக்கவேண்டும், நிர்வாகம் செய்யவேண்டும், அதற்கு எப்படி நிதி திரட்ட வேண்டும் என்பதை முதலில் முடிவு செய்யவேண்டும். இத் திட்டங்களை நிர்வாகத் துறைகளைக் (அல்லது இலாகாக்கள்) கொண்டு நிர்வகிப்பது வளர்ச்சியடையும் நாடுகளிலும் பரவலாக இருக்கும் பழக்கமாகும். பொதுநலப் பணித் திட்டங்களும், மற்றத் திட்டங்களும் வளர்ச்சியடையும் நாடுகளைப் போலவே, முன்னேற்ற மடையாத நாடுகளிலும் அரசாங்க இலாகாக்களால் நிர்வகிக்கப் படுகின்றது.[1] இத் திட்டங்களுக்கு அரசாங்கமே சாதாரணமாக நிதியளிக்கின்றது. இதை உதவித்தொகையாகவோ, கடனாகவோ அல்லது பங்குகளை வாங்குவதுமூலமோ கொடுக்கலாம். தனியார் துறையைப்போல், கடனை உள்நாட்டு அல்லது பன்னாட்டு நிதி நிலை யங்களிலிருந்தோ அல்லது பாங்குகளிலிருந்தோ வாங்கலாம். இலாபம் கிடைக்கும்பொழுது, அதில் ஒரு பகுதியை நிறுவனத்தைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தலாம். அயல்நாட்டு நிறுவனங்களை அல்லது அரசுகளைச் சில திட்டங்களில் ஒப்பந்தங்கள்மூலம் பங்கு கொள்ளச் செய்யலாம்.

பொதுத்துறைத் திட்டங்களின் நோக்கங்களைச் சரிவரப் புரிந்துகொண்டு, பொருத்தமான கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டும்.

'வர்த்தக விதியை' அடிப்படையாகக்கொண்டு பொதுத் துறை நிறுவனங்கள் இயங்கவேண்டும் என்று கூறுகின்றனர். திறமையுடன் இயங்கவேண்டும் என்பதைத் தவிர, இது வேறு பொருளைக் குறிக்கவில்லை. அதாவது, நோக்கத்தைச் சிக்கனமான முறையில் நிறைவேற்றமுடியாது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. அடக்கச் செலவு ஈடாக வேண்டும் என்று அடிக் கடி பலர் குறிப்பிட்டபோதிலும், வளர்ச்சியையோ அல்லது நுகர் வோரின் நலத்தையோ மனத்தில்கொண்டு விலைகளை அடக்கச் செலவைவிடக் குறைக்கவேண்டும் என்றும் சிலர் கூறுகின்றனர். இப்படிச் செய்வதற்கு உதவிப்பணம் கொடுக்கவேண்டும்.

பெரும்பாலும் எல்லாப் பொதுத்துறைத் திட்டங்களும் சர்வா தீனங்களாகவே இருக்கின்றன. 4ஆவது அதிகாரத்தில் குறிப்

[1] இவைகளுடைய முக்கியமான இயல்புகள்பற்றிய விளக்கத்தை என். தாஸ் (N. Das) எழுதியுள்ள 'Public Sector in India', 1961 என்ற நூலில் காணலாம்.

விட்டபடி ஒரு விதியையும் பின்பற்றாமல், விருப்பப்படி விலையை நிர்ணயம் செய்யவேண்டும். விற்பனையாகும் பண்டங்களின் அளவைத் தேவைப் பட்டியல் நிர்ணயம் செய்கின்றது. ஆனால், உற்பத்தியாகும் அளவை முடிவு செய்யலாம். தேவைப் பட்டியலே விலையை நிர்ணயம்செய்யும் அல்லது விலை முடிவாகும் படிவத்தில் உதவித் தொகை கொடுக்கப்பட வேண்டும். பின்னர், நாம் குறிப்பிட்ட நிலையில் குறித்தவிலையில் தேவை அளிப்பைவிட அதிகமாக இருக்கும். இந்த நிலையில் பங்கீட்டைக் (உதாரணமாக கூப்பன்சுகள் மூலம்) கட்டுப்படுத்தவேண்டும். போட்டி இல்லாத நிலையில் திறமையின் குறி (நீடித்து நிறுவனம் இயங்குவதும், இலாபத்தை ஈட்டுவதும்) நீங்கிவிடுகின்றது. பொதுத்துறை நிறுவனம் மற்ற நிறுவனங்களுடன் போட்டியிடும்பொழுதுதான், திறமையை வெளிப்படுத்தும் புறச் சோதனையை ஏற்படுத்தலாம்.

பொதுத்துறைச் சார்வாதீன நிறுவனத்தின் விலைக் கொள்கை பற்றிக் கருத்துவேற்றுமைகள் ஏற்படுகின்றன. இதற்கு ஒரு முடிவைக் குறிப்பிடாமல், கருத்துவேற்றுமைகளை மட்டும் சுருக்கமாகக் கூறலாம். (சிறந்த முடிவு பொதுத்துறைத் திட்டத்தின் நோக்கத்தைப் பொறுத்திருக்கும்) இரு (விலை நிர்ணயத்திற்கு) வழிகள் உள : (a) இயல்பான இலாபம் உள்பட ஓர் அலகின் சராசரி அடக்கச் செலவு ஈடாகும் நிலையை ஏற்படுத்தும் விலை நிர்ணயமாக வேண்டும். உற்பத்தியான பொருள் முழுதும் விலையாகும் என்று கற்பனை செய்துகொண்டால் இயல்பான இலாபமும், முழு அடக்கச் செலவும் ஈடாகும். (b) விலை இறுதிச் செலவுக்குச் சமமாக இருத்தல் வேண்டும். உற்பத்தியின் அளவு பெருகும் பொழுது, அடக்கச் செலவும் உயர்ந்தால்—இறுதிச் செலவு சராசரிச் செலவைவிட, உயர்வாக இருப்பதால்—முழு அடக்கச் செலவும் இலாபமும் ஈடாகும். சராசரி அடக்கச் செலவைவிட அதிகமான இலாபம் கிடைக்கும். உற்பத்தியின் அளவு மாறும் பொழுது, அடக்கச் செலவு குறைந்தால், இறுதிச் செலவும் விலையும் சமமாவதால் முழு அடக்கச் செலவும் ஈடாகாது; இழப்பு ஏற்படும். போட்டி நிலவும்பொழுது இத்தகைய சந்தர்ப்பங்களில் நிறுவனங்கள், இறுதி அடக்கச் செலவையும் விலையையும் சமமாக்க முயற்சி செய்வதால் விலை குறையும்; துய்ப்போர் நன்மையடைவார்கள். பொதுத்துறை நிறுவனம் இந்த நன்மையை நீக்கக்கூடாது என்று சிலர் கூறுகின்றனர். இங்கு இரு உண்மைகளை நாம் பார்க்கவேண்டும். உற்பத்தியின் அளவு பெருகும்பொழுது இறுதி அடக்கச் செலவு குறைவது எப்பொழுதும் நீடிக்காது. ஆகையால், நாளடைவில் இறுதிச் செலவு உயரும்; சராசரிச் செலவுக்குச் சமமாக உயரும். ஆகையால், இலாபம் ஏற்படும். இரண்டாவதாகப் பெருவாரி உற்பத்தியின் நன்மைகளைப் பயக்கும் தொழில்கள்

உபயோகத்துறையில் ஆரம்பிக்கப்படும். இத்தகைய தொழில்களில் முன்னேற்றம் ஏற்படும். ஆகையால், குறையும் அடக்கச் செலவு நீண்டகாலம் இருக்கும். இதுபோன்ற நிலையில் விலையைச் சராசரி அடக்கச் செலவுக்குச் சமமாக்குவதால் விற்பனை குறையும். நுகர்வோர் ஏமாற்றப்படுவார்கள். இறுதிச் செலவு சராசரிச் செலவை விடக் குறைவாக இருப்பின் விற்பனை பெருகுவது விரும்பத்தக்கது. இறுதிச் செலவைவிட உயர்ந்த விலையை ஏற்படுத்தி இலாபத்தைக் கொண்டு முதலீட்டைப் பெருக்கவேண்டும் என்று கூறலாம்.[1]

தற்காலத்திய பொறிசெய் பொருள்களுக்குக் குறுகிய மார்க்கட்டு இருப்பதும், பயிற்சிபெருத தொழிலாளர்கள் உபரியாக இருப்பதும், மூலதனப்பற்றுக் குறையும் வளர்ச்சி பெருத நாடுகளின் சிறப்பியல்புகள். உற்பத்தியின் அளவையும், முறையையும் இது பாதிக்கின்றது. தொழில் துணிவோரும், நிர்வாகிகளும், பயிற்சி பெற்ற தொழிலாளர்களும் வேண்டிய அளவில் கிடைப்பதில்லை. ஆனால், திறமையிலும், தொழில் துணிவிலும் எவ்வளவு பற்றுக் குறை இருக்கின்றது என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. பழைய காலத்தில் தொழில் துணிவோனுக்கு அதிகமான வாய்ப்புகள் கிடைக்காமல் இருந்திருக்கலாம். நிலம் வாங்குவது, கடன் கொடுப்பது, அயல்நாட்டு வர்த்தகம், உள்நாட்டு வாணிகம், பங்கு மார்க்கட்டிலும் பொருள் மார்க்கட்டிலும் ஊக வாணிகம் செய்தல் முதலிய துறைகள் இலாபம் ஈட்டுவதற்கு அளித்த வாய்ப்பைத் தொழில்துறை அளிக்காமல் இருந்திருக்கலாம். அனுபவம் வாய்ந்த நிர்வாகிகள் வேண்டிய அளவு கிடைக்கவில்லை. இப் பற்றுக்குறை தொழில் துணிவின் பற்றுக்குறையைவிட, மிகுதியாக இருக்கின்றது என்று என். தாஸ் (N. Das) கருதுகிறார்.[2] தற்காலத்தில் தொழில் நிறுவனங்கள் ஒரு சிலர் வசமே இருப்பதாலும் அவர்களே அவைகளை நிர்வாகம் செய்வதாலும் புதியவர்கள் இத் துறையில் சேருவதற்குத் தடை இருக்கின்றது. எல்லா வகுப்பிலும் திறமை உள்ளவர்கள் தொழிலை ஆரம்பிப்பது மிகவும் விரும்பத் தக்கது. அறிவியல், தொழில் நுணுக்கப் பயிற்சி பெறுவதற்கு எல்லாருக்கும் இப்பொழுது இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆகையால், பற்றுக்குறை (இத் துறையில்) விரைவில் மறையும். அயல்நாட்டினர் துவக்கியுள்ள நீண்டகாலமாக நிலைபெற்றிருக்கும் சில நிறுவனங்கள் (குறிப்பாகச் சுரங்கம், தோட்டங்கள் முதலிய துறைகளில்) அயல்நாட்டு மார்க்

[1] நூலைப் படிப்பவர்கள் 4-ஆவது அதிகாரத்தில் உள்ள பிற்சேர்க்கையின் 4-வது படத்தைப் பார்த்து இறுதிச் செலவுக் கோட்பாட்டுக்கும், சராசரிச் செலவுக் கோட்டுக்கும் உள்ள தொடர்பை நினைவுக்குக் கொண்டு வரவேண்டும்.

[2] 'Industrial Enterprise in India,' பக்கம், 165-166.

கட்டையும், இயந்திரங்களையும், மற்றப் பொருள்களையும் சார்ந்திருப்பதால், பெருக்கியின் வேலை அயல்நாட்டில் தொடங்குகிறது, உள்நாட்டில் தொடங்கவில்லை என்பதை இறுதியில் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

(ii) தனியார் துறையில் தொழிலுக்கு நிதி திரட்டல்

நிதி திரட்டல் ஒரு பெரிய நுணுக்கமான பொருளாகும். இதைப்பற்றிய விவரமான விளக்கத்தை இங்கு நாம் கொடுக்க முடியாது. தொழில்திபர்கள் முடிவுசெய்யவேண்டிய சில குறிப்பான பிரச்சினைகளைமட்டும் இங்கு விளக்கலாம்.

ஒரு புதிய தொழிலை ஆரம்பிக்கும்போது வகுத்துள்ள திட்டப்படி தொழில் நடத்துவதற்கு எவ்வளவு முதல் தேவை என்பதை முடிவு செய்யவேண்டும். எவ்வளவு முதல் கிடைக்கும் என்பதைப் பூர்வாங்க ஆய்வுமூலம் கண்டறிந்தால், கிடைக்கும் மூலதனத்திற்குத் தகுந்தவாறு எத்தகைய (எந்த அளவில்) தொழிலைத் துவக்க வேண்டும் என்பதை முடிவு செய்யவேண்டும். முதலில் குறிப்பிட்டுள்ள நிலையில் கீழ்க்கண்ட பிரச்சினைகளுக்கு முடிவு காணவேண்டும். எவ்வகை முதல்கள் வேண்டும்? (பற்பல அடக்கச் செலவுகளைப்போல் வெவ்வேறு முதல்கள் வரை) இவைகளை எந்த இடங்கள் அல்லது வழிகளில் பெறலாம்? எவ்வளவு காலம் இலாபம் இல்லாமல் (அல்லது மிகக் குறைவான இலாபத்துடன்) தொழில் செய்யவேண்டும்? பங்கு முதலையும் கடனையும் எவ் வழிகளில் பெறலாம்? இந்த வினாக்களுக்கு அளிக்கக்கூடிய விடைகள் நிறுவனங்களின் சிறப்பான சந்தர்ப்பங்களைப் (உற்பத்தியின் அளவு உள்பட) பொறுத்திருக்கும். இயந்திரம் இருக்கும் இடமும் உற்பத்தி முறையும் இதைப் பாதிக்கும். ஆகையால், பல தொழில்களிலும் நாடுகளிலும் வெவ்வேறு முறைகள் கையாளப்படுகின்றன.

நீண்ட காலத்திற்கும் அன்றாடச் செலவுக்கும் வேண்டிய தொகையைச் சில நிறுவனங்கள் பங்குகள்மூலமும், டிபெஞ்சர் பத்திரங்கள் மூலமும் (குறிப்பிட்ட வட்டியைக் கொடுக்கும் நீண்ட காலக் கடன்), மற்ற உள்நாட்டுப் பன்னாட்டு நிதி நிலையங்களிலிருந்து பெறும் கடன்கள்மூலமும் பெறும். பின்னர்க் குறிப்பிட்டுள்ள இரு கடன்களுக்கும் வட்டி செலுத்தவேண்டும்; இவைகளைக் குறிப்பிட்ட நாளில் திருப்பிக் கொடுக்கவேண்டும். இந்த முறையில் ஓர் ஆபத்து இருக்கின்றது. உற்பத்தியோ அல்லது இலாபமோ எதிர்பார்த்ததைவிடத் தாமதமானால், வட்டி செலுத்துவதற்கு வேண்டிய வருமானம் கிடைக்காமல் போகலாம். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குவேண்டிய வருமானம் கிடைப்பதற்குமுன், அதைச் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்படலாம்.

இதனால், மேலும் கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படும். உபரிக் கடனுக்கு உயர்ந்த வட்டி செலுத்த நேரிடலாம். இந்த நிலையில் அளவுக்குமீறிய மூதலீடு ஏற்படுகின்றது. நிலையான முதல் அளவுக்குமீறி உயர்ந்துவிடுகின்றது. ஆகையால், குறைவான மூலதனம் உள்ள நாடுகளில் பல நிறுவனங்கள் தம் முதல் முழுவதையும் தொடக்கநிலையிலேயே திரட்டுவதில்லை. நிறுவனம் தொடங்கியபிறகு மேலும் அதிகமான தொகையைப் பங்குகள் மூலமும், டிபெஞ்சர்கள் மூலமும் பெற முயற்சி செய்கின்றன. அன்றுடத் தொழில் இயக்கச் செலவைப் பாங்குகளில் அதிகப்பற்றுக் கடன் மூலமாகவும் மற்றக் குறுகிய காலக் கடனுகவும் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் தொழிலதிபர்கள் வாங்கிக் கொள்கின்றனர். இந்த முறையில் குறைவான மூலதனத்தைப் பெறும் ஆபத்து இருக்கின்றது. தொழில் இயக்குவதற்கு வேண்டிய முதலை (அன்றுட முதல் உள்பட) இக்கட்டான காலத்தில் திரட்டவேண்டிய நிலை ஏற்படலாம். இக்காலத்தில் பண மார்க்கட்டின் (money market) ரொக்க நிலை வறண்டிருக்கலாம். வட்டி வீதம் உயர்ந்தும் மூலதனத்தையும், அதிகப் பற்றுக் கடனையும், குறுகிய காலக் கடன்களையும் வாங்குவது கடினமாக இருக்கும். உதாரணமாக ஆமதாபாத் பருத்தி ஆலைகள் நீண்டகாலச் செலவுக்கும், அன்றுடச் செலவுக்கும் வேண்டிய தொகையைப் பொது மக்களிடமிருந்து டெபாசிட்டாகப் பழையகாலத்தில் பெற்றன. இந்த டெபாசிட்டுகளைக் குறுகிய கால முன்னறிவிப்புக்குப் பிறகு திருப்பிப் பெறலாம். மற்ற வழிகளில் ரொக்கம் பெறுவது கடினமாக இருக்கும் நெருக்கடியான காலங்களில்கூட, இவை திருப்பப் பெற்றிருக்கின்றன. நீண்டகாலப் பொறுப்பை ஏற்க ஆலைகள் குறுகிய காலக் கடனைப் பெற்றன என்பது இதிலிருந்து புலனாகின்றது[1].

வாரம், கூலி போன்றவைகளையும், காரணிகளின் விலைகளையும் போல் அல்லாமல் இலாபம் அவ்வப்போது மாறும் தன்மையைக் கொண்டிருக்கின்றது. இதுவும் ஒரு நிதிபற்றிய பிரச்சினையாகும். முன்னேற்றமடைந்த நாடுகள் பொருளாதார வீக்கத்தையும், மந்தத்தையும் ஒன்றன்பின் ஒன்றுக விளைவிக்கும் வர்த்தகச் சுழல், (trade cycle) ஒரு பெரும் பிரச்சினைக்குக் காரணமாக இருக்கின்றது. ஆகையால் இந்த ஏற்றத்தாழ்வுகளைத் தவிர்த்து விலை வாசியை எவ்வாறு நிலைபெறுத்தலாம் என்பதுபற்றிய ஆராய்ச்சியும், கருத்து வேற்றுமைகளும் இருக்கின்றன. இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் வர்த்தகச் சுழல் தீவிரமான விளைவுகளை ஏற்

[1] என். தாஸ் (G. N. Das) எழுதிய, 'Industrial Enterprise in India,' (பக்கம் 41) என்ற நூலைப் பார்க்கவும்.

படுத்தவில்லை (5ஆவது அதிகாரத்தில் குறிப்பிட்டபடி) என்பது மட்டுமல்லாமல், திட்டம் தொடங்கியதிலிருந்து முதலீடு (குறிப்பாக, அதிகமான முதலுடன் இயங்கும் கனரகத் தொழிலில்) தொடர்ந்து நடைபெறுகின்றது. அதிகரிக்கும் வீதத்தில் முதலீடு நடைபெறுவதால், இலாபம் அதிகமாகவே இருக்கின்றது. வர்த்தகச் சுழல் அதிகமான முக்கியத்துவம் கொள்ளவில்லை.

வர்த்தகச் சுழல் முக்கியத்துவம் கொள்ளாவிடினும் தொடர்ந்து செய்யவேண்டிய அடக்கச் செலவின் கூறுகள் (உதாரணமாக வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பது, வட்டி செலுத்துவது, பழுதான இயந்திரங்களுக்குப் பதிலாகப் புதியவை நிறுவுதல், தொழிலை நடத்துவதற்குவேண்டிய அன்றுடச் செலவு போன்றவை) போல் அல்லாமல், இலாபம் அவ்வப்போது மாறும். ஆகையால் இலாபம் எப்படி இருந்தபோதிலும் பழுதான, பழைய இயந்திரங்களைப் புதுப்பிக்கவும், வட்டி செலுத்தவும், கடனைத் திருப்பிக்கொடுக்கவும் வருவாயில் ஒரு தொகையை ஒதுக்கவேண்டும். இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நிறுவனங்கள் ஒரு வழியைப் பின்பற்றுகின்றன. எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட இலாப ஈவைப் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கின்றன. மீதியைச் செழிப்பான காலத்தில் காப்புநிதியில் சேர்க்கின்றன; மந்த காலத்தில் காப்பு நிதியிலிருந்து வேண்டிய தொகையை எடுத்துக்கொள்கின்றன. இயந்திரங்கள் பழுதாகிப் பயனற்றுவிட்டால், தேய்மானக் காப்பு நிதியிலிருந்து (depreciation reserve) ஒரு தொகையை எடுத்து அதை ஈடு செய்யலாம். இக் காப்புநிதியின் அளவையும், இது சேர்க்கப்படவேண்டிய காலத்தைப்பற்றியும் கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. ஆனால், இதைப்பற்றி நாம் இங்கு விவரமான விளக்கம் கொடுக்கமுடியாது. தேய்மானக் காப்புநிதியின் அளவையும், இயந்திரங்கள் பயனளிக்கும் காலத்தையும் ஒவ்வோர் இயந்திரத்திற்கும், கட்டடத்திற்கும் தனித்தனியாகக் கணக்கிடவேண்டும். பழுதான இயந்திரங்களுக்காகப் புதிய இயந்திரங்களை நிறுவுவதற்காகச் செய்யும் அடக்கச் செலவையும் (அதற்காக ஒதுக்கப்படும் தேய்மானக் காப்புநிதியையும்) இயந்திரங்களின் அசல் (original) விலையை ஆதாரமாகக்கொண்டு கணக்கிடவேண்டுமா அல்லது புதியவைகளை நிறுவுவதற்காக எதிர்பார்க்கப்படும் செலவை ஆதாரமாகக் கொண்டு கணக்கிடவேண்டுமா என்பதைப்பற்றிய கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. இவ் விரு முறைகளுக்குமிடையே அதிகமான வேறுபாடு இருக்கலாம். இவ் வேறுபாட்டை விலைவாசியில் ஏற்படும் மாறுதலும், தொழில் நுணுக்கத்தின் தன்மையும் மாறுதலும் நிர்ணயம் செய்யும். அசல் விலையை ஆதாரமாகக்கொண்டு கணக்கிடும்முறை நிறுவனத்தின் கணக்குகளைச் சரிவர வைத்துக் கொள்வதற்கு உகந்ததாக இருக்கின்றது என்பதும், உண்மையாகச்

செலவான தொகை ஈடாவதற்கும் பொருத்தமாக இருக்கின்றது என்பதும், தொழில்நுணுக்க மாறுதலும், பொது விலைவாசி மாறுதலும் ஏற்படுத்தும் உபரித் தொகையை அதிகமான தேய்மானக் காப்பு நிதியைக்கொண்டும், உபரி முதலீக்கொண்டும் ஈடு செய்யலாம் என்பதும் சிலருடைய கருத்தாகும். பழுதான இயந்திரங்களுக்குப் பதிலாகப் புதியன நிறுவப்படுவதால் ஏற்படும் செலவை ஆதாரமாகக்கொண்டு, தேய்மானக் காப்புநிதியைக் கணக்கிட வேண்டும் என்ற வாதத்திற்கும் தக்க காரணங்கள் அளிக்கப்படுகின்றன. புதிப்பிக்கப்பட வேண்டியது உண்மையான மூலதனப் பொருள். முன்னேறும் நிறுவனம், திறமையான தற்காலத்திய இயந்திரங்களை வைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் இதற்குச் செய்யப்படும் செலவையே கணக்கில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பது சிலருடைய கருத்து. முன்னேற்றமடைந்த நாடுகளுக்கு உகந்த கொள்கை வளரும் நாடுகளுக்குப் பொருத்தமற்றவையாக இருக்கலாம் என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். முன்னேற்ற மடைந்த நாடுகளில் சீராக உள்ள தற்காலத்திய இயந்திரங்களின் விலை அவை அளிக்கக்கூடிய இலாபத்தைவிட (உதாரணமாகத் தொழிலாளர்களின் தேவையைக் குறைப்பதன்மூலம்) மிக உயர்ந்ததாக இருக்கலாம். வளரும் நாடுகளில் மூலதனப் பற்றாக்குறை இருப்பதால் அதன் அடக்கச் செலவு அதிகமாக இருக்கும்; இயந்திரங்கள் அளிக்கக்கூடிய சிக்கனத்தைவிட இவ் வடக்கச் செலவு அதிகமாக இருக்கின்றது.

(iii) உற்பத்தியின் அளவும் தொழில்களின் ஓரிடத்துச் செறிவும் (Localization of Industries)

தொழில் துணிவோன் தன் இயந்திரத்தின் அல்லது நிறுவனத்தின் அல்லது பண்ணையின் அளவு எவ்வளவு பெரியதாக இருத்தல் வேண்டும் என்பதை எளிதில் முடிவு செய்யமுடியாது. தொழிலின் (ஒரே பொருளை உற்பத்திசெய்யும் எல்லா நிறுவனங்களும் அடங்கியது தொழில்) அளவு (நிறுவனத்தின்) அடக்கச் செலவையும் இலாபத்தையும் பாதிக்கின்றது. நிறுவனத்தின் அளவை நிர்ணயம் செய்யவேண்டிய பொறுப்பு, புதிய நிறுவனங்களுக்கும், பழையவைகளுக்கும் ஏற்படுகின்றது. பழைய நிறுவனங்கள் தொழில் பெருக்கத்தாலோ அல்லது சுருக்கத்தாலோ நன்மையடையலாம். அல்லது தொழில் சுருக்கத்திற்குப் பதிலாகவோ அல்லது பெருக்க முறையாகவோ வேறு பொருள்களையும் உற்பத்தி செய்து பயனடையலாம். நிறுவனத்தின் அல்லது தொழிலின் இலாபத்தை வேறு சிறப்பான சக்திகள் பாதிக்கின்றன. மேலும், நிறுவனத்தின் உத்தம அளவு (optimum size) உற்பத்திமுறை, நிர்வாகம், நிதி திரட்டல், மார்க்கட்டின் அமைப்பு முதலியவை

கட்குத் தகுந்தவாறு மாறும். ஆகையால் இவைகளுக்கிடையே உள்ள முரண்பாடுகளைத் தீர்க்கவேண்டும்.

நிறுவனத்தின் அளவை முடிவு செய்வதில் ஏற்படும் பிரச்சினைகள் பெரும்பாலும் தொழில் நுணுக்கம்பற்றியவையாகவும், நடைமுறைச் சிக்கல்களுடன் தொடர்பு கொண்டவையாகவும் இருக்கின்றன. பொருளியலாரைவிடத் தொழில் துணிவோன் இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உகந்த நிலையில் இருக்கின்றான். ஆனால், எத்தனைத் தொழிலதிபர்கள் இப் பிரச்சினைகளைச் சிறந்த முறையில் கவனிக்கின்றனர் என்பதுபற்றி ஐயப்பாடு இருக்கின்றது. பலர் மரபுகளையும் பழக்கவழக்கங்களையும் ஒட்டி நடக்கின்றனர். முயற்சியும் தோல்வியும் அளிக்கும் அனுபவத்தைக் கொண்டும் தொழில் நடத்துகின்றனர். சிலர் தொழில் நடத்தும் இயற்கைத் திறனைக்கொண்டு நீண்ட காலத்திலோ அல்லது குறுகிய காலத்திலோ தம் தொழிலை ஓரளவு நன்கு நடத்தலாம். ஆனால், அடிக்கடி அவர்கள் தோல்வியும் அடையலாம். பொருளியலார் ஒரு தொழிலைச் சேர்ந்த நிறுவனங்கள் எந்த நிலைமையில் வெற்றிகரமாக இயங்கும் என்பதையும், பல நாடுகளிலும், கேந்திரங்களிலும் நிலவும் நிலையையும் சரிவரக் கவனித்தால், தொழில் துணிவோனுக்கு மேலே குறிப்பிட்டுள்ள நிலையில் உதவிபுரியலாம். பொருளாதார வல்லுநர் குறிப்பிட்ட நிறுவனத்தின் நிலையையும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். 'விளையாட்டைப் பார்ப்போர் அதை முழுவதையும் கவனிக்கின்றனர்.' நிறுவனத்தில் ஒவ்வொரு மணி நேரமும் பணி புரியவேண்டிய நிலையில் பொருளியலார் இல்லை. மேலும், நிறுவனங்களிடையே உள்ள ஒற்றுமைகளை அவன் பார்க்கலாம். அவைகளைத் தொழில் துணிவோன் பார்க்க முடியாது. இந்த அறிவு பிரச்சினைகளை நன்கு புரிந்துகொள்வதற்கு உதவலாம். பிரச்சினைகளுக்குத் தீர்வுகளையும் கூற உதவலாம். இதனால்தான் பல பெரிய நிறுவனங்கள் ஒரு பொருளியலாரை வேலையில் அமர்த்திக்கொள்கின்றன. பொருளியல், புள்ளி விவர ஆய்வுத்துறையையும் ஏற்படுத்திக்கொள்கின்றன.

ஒரே சூழ்நிலையில் பல நிறுவனங்கள் பல்வேறு அளவுகளில் இயங்கலாம். இதற்கு நடைமுறையில் இருக்கும் சந்தர்ப்பங்களே காரணமாக இருக்கும். சிலருக்குக் குறைவான மூலதனமும், சிலருக்கு மிகுதியான மூலதனமும் கிடைக்கலாம். நிறுவனம் தொடங்கிய பிறகு உற்பத்தி முறையையும் நிர்வாக அமைப்பையும் மாற்றுவது கடினம்.

பெருவாரி உற்பத்தி சிறப்புப் பயிற்சிக்கும், அது அளிக்கும் சிக்கனங்களுக்கும் இடம் அளிக்கின்றது. இதுவே இதன்

முக்கியமான நன்மையாகும். உற்பத்தியின் காலம், செலவாகும் பொருள்கள், திறமை முதலிய எல்லாவற்றிலும் சிக்கனம் ஏற்படுகின்றது. ஆனால், மீண்டும் மீண்டும் ஒன்றையே திருப்பித் திருப்பிச் செய்யும் முறைகளுள்ள (நூற்புபோன்ற) கூறுகள் சில நிறுவனங்களில் உள. இவை சிறியனவாக இருப்பினும் எல்லாச் சிக்கனங்களும் ஏற்படும். முன்னேற்றமடைந்த நாடுகளில்கூட இத்தகைய தொழில்கள் இருக்கின்றன. ஒரே தொழிலில் சேர்ந்துள்ள பல சிறிய அல்லது பெரிய நிறுவனங்கள் இருக்கலாம். இவை நிர்வாகத்திலும், நிதி திரட்டலிலும், பொருள்களை விற்பனை செய்தலிலும் சிக்கனத்தை அளிக்கின்றன. குடிசைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் நிர்வாகம் செய்வோர், பெருவாரி உற்பத்தியை நிர்வாகம் செய்யத் தகுதியற்றவர்களாக இருக்கலாம். இவர்கள் குறைந்த வருவாயைக்கொண்டு திருப்தியடையலாம். இவர்களுடைய வருமானம் பெறும் சக்திக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் நிதி வசதியும் விற்பனை வசதியும் காரணமாக இருக்கலாம்.

பெருவாரி உற்பத்தியின் நலன்கள் தொழில் நுணுக்கத்துறையிலேயே இருக்கின்றன. எண்ணெய் சுத்தி இயந்திரம், நீர் மின் சக்தி இயந்திரம் போன்றவை பெரியனவாகவே இருத்தல் வேண்டும். மற்றத் துறைகளில் பெரிய இயந்திரங்கள் சிறியவைகளைவிட நன்மை பயப்பனவாக இருக்கின்றன. பல நிறுவனங்கள் செய்யும் ஒரு செயலைத் (பல நிறுவனங்களுக்காக) தனியாக ஓர் இயந்திரந்தைக்கொண்டு ஒரு நிறுவனம் செய்வதால் அடக்கச் செலவு குறையும். உதாரணமாக இரும்புக்கனியை உருக்கித் தேனிரும்பை உற்பத்தி செய்வதையும், எஃகு வார்ப்புகளை ஆக்குவதையும், இவைகளை உருளைகளாகவும், கட்டிகளாகவும், முழுதும் உருவாகாத கட்டிகளாகவும் மாற்றுவதையும் தனி நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளலாம். அல்லது எல்லா நிறுவனங்களும் மேற்கூறியவைக்காகத் தனி உற்பத்தி நிலையமொன்றைக் கூட்டுச் சேர்ந்து அமைக்கலாம். பின்னர்க் குறிப்பிட்டுள்ள முறையில் எரிபொருள் பயன்படுத்துவதில் சிக்கனம் ஏற்படுகின்றது. ஒரு முறையில் உற்பத்தியான பொருளைக்கொண்டு உலை வெப்பமாக இருக்கும்பொழுதே, மற்றொன்றை உற்பத்தி செய்யலாம். போக்குவரத்துச் செலவிலும் சிக்கனம் ஏற்படும். மேலும், ஊது உலையும், (blast furnace) கோக் உலையும் உற்பத்தி செய்யும் வாயு பக்கவிளைவாக இருக்கின்றது. இவை விற்பனையாகும் மார்க்கட்டு அண்மையில் இல்லாவிடிலும் இவை வீணாகா. எஃகு உற்பத்தி செய்யும்பொழுது பழைய இரும்பைப் பயன்படுத்துவதால் இரும்புக்கனி உபயோகத்திலும், தேனிரும்பு உபயோகத்திலும் சிக்கனம் ஏற்படும்.

கச்சாப் பொருள்களை மொத்தமாக வாங்குவதாலும், ஏராளமான பொருள்களைச் செலுத்துவதாலும் போக்குவரத்து, மார்க்கட்டிங் சிக்கனங்கள் ஏற்படுகின்றன.

ஆனால், வளர்ச்சியடையும் நாடுகளில் பெருவாரி உற்பத்திக்குத் தடையான சக்திகள் பல உள. இந்த நாடுகளில் மூலதனப் பற்றாக்குறை இருப்பதால், எல்லாத் திட்டங்களுக்கும் உழைப்புச் சிக்கனத்தை ஏற்படுத்தும் இயந்திரங்களைப் பயன்படுத்தமுடியாது. இயந்திரங்களைப் பயன்படுத்துவதையும் பல காரணங்களால் சிறந்ததாகக் கருதமுடியாது. 'உற்பத்திமுறைத் தேர்வு' எனப்படும் இத்தலைப்பைப்பற்றிய விவரங்களைத் திட்டம் வகுத்தல்பற்றிய அதிகாரம் 12-ல் காணலாம். ஒரு நிறுவனத்தின் அளவை மார்க்கட்டும், போக்குவரத்துச் செலவும் நிர்ணயம் செய்யும். உற்பத்தியின் பல பகுதிகளை ஒன்று சேர்க்காமல், ஆங்காங்கே செய்வதற்குக் கீழ்க்கண்டவை காரணங்களாகும்: (a) கச்சாப்பொருள்கள் கனமாகவும், உற்பத்திமுறையில் பலவை இழக்கக்கூடியவையாகவும் இருந்தால், அவை கிடைக்குமிடத்திலேயே அவைகளைப் பண்படுத்தல் சிறந்ததாகும். இதனால் ஏற்படும் நன்மை இணைப்பு முறைச் சிக்கனத்தைவிட மிகுதியாக இருக்கும். (b) முழுதும் உற்பத்தியான பண்டம் மிகப் பெரியதாகவும், வேறு இடத்திற்குச் செலுத்துவது கடினமாகவும் இருந்தால், இத்தகைய பொருளை மார்க்கட்டுக்குப் பக்கத்திலேயே உற்பத்தி செய்யவேண்டும்.

உற்பத்திக்குவேண்டிய இயந்திரம் மிகப் பெரியதாகவும், விலை உயர்ந்ததாகவும் இருந்தால், ஓர் இயந்திரம் முழுவதும் பயனுகும் பொழுது மேலும் ஒன்றை வாங்குவது எளிதன்று. ஏனெனில், புதிய இயந்திரம் குறுகிய காலத்திலாவது மிகக் குறைவான அளவே பயனுகும். இதுவும் நிறுவனத்தின் அளவு பெருகுவதற்கு ஒரு தடையாகும். உண்மை முதல் (real capital) சிறிய அலகுகளில் பிரிக்கக்கூடியதாக இல்லை. இதைப் பெரிய அளவிலேயே பெருக்க வேண்டும்.

பெரிய நிறுவனங்களுக்கு நன்மைபயக்கும் பல சக்திகளை ஆங்காங்கே நாம் குறிப்பிட்டுள்ளோம். மேலும், பெரிய நிறுவனங்கள் எளிதில் நிதி திரட்டமுடியும். அதிகமான இலாபம் பெறுவதால் அதில் பெரிய தொகையை மீண்டும் தொழிலில் பயன்படுத்தலாம். இப்படிச் செய்வதால் நிறுவனத்தின் அளவு பெருகும் அல்லது புத்தம்புதிய, இன்றைய உற்பத்திச் சாதனங்களை நிறுவலாம். மேலும், அவை சில பகுதிகளில் அல்லது தொழில்களில் முழுச் சார்வாதீன அல்லது ஓரளவுச் சார்வாதீன சக்தியைப் பெறலாம். ஆராய்ச்சி செய்வதற்கு வல்லுநர்களை அமர்த்தலாம். கச்சாப்பொருள்களைப்

பண்படுத்துவதற்கும், ஓரளவு உற்பத்தியான பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் அவை நிறுவனங்களை ஏற்படுத்தலாம். சிறிய நிறுவனங்கள் இப் பொருள்களை அவைகளிடமிருந்து வாங்கலாம்.

பெருவாரி உற்பத்தியின் நலன்கள் பெரும்பாலும் புறச் சிக்கனங்களாகவே இருக்கின்றன. தொழிலகங்கள் ஓரிடத்தில் செறிந்திருப்பதால், இந்த நன்மைகள் ஏற்படுகின்றன. போக்குவரத்து, பழுதுபார்த்தல், நிதி திரட்டல் முதலிய துறைகளில் புறச் சிக்கனங்கள் ஏற்படுகின்றன. இயந்திரங்களின் உறுப்புகள் கிடைக்கும். பக்க விளைவுப் பொருள்களுக்கு (by-products) மார்க்கட்டும் இருக்கும்.[1] வேறு தொழில்கள் அமைந்திருக்கும் இடங்களில் ஒரு நிறுவனம் இருந்தாலும், இத்தகைய நன்மைகள் ஏற்படும் என்று தோன்றுகிறது. ஒரு தொழில் கேந்திரத்தில் நிறுவனம் இருப்பதால், நன்மை ஏற்படுகின்றது என்று தோன்றுகின்றது. தொழிலின் அளவை, உள்நாட்டு மார்க்கட்டும் வெளிநாட்டு மார்க்கட்டும் பெரும்பாலும் நிர்ணயம் செய்கின்றன. புறச் சிக்கனங்கள் அடக்கச் செலவைக் குறைப்பதால், மார்க்கட்டு விரிவடைவதற்கு இடம் ஏற்படுகின்றது.

மேலே கண்ட விளக்கத்தில் உற்பத்தியின் அளவு என்ற சொல்லைத் தெளிவற்றமுறையில் பயன்படுத்தினேம். இந்த அளவைக் கணக்கிடும்முறை ஒன்றையும் குறிப்பிடவில்லை. உற்பத்தியின் மதிப்பை அல்லது பயனுகும் முதலின் மதிப்பை அல்லது பணிபுரியும் தொழிலாளர்கள் எண்ணிக்கையைக்கொண்டு அளவைக் கணக்கிடலாம். இவ்வாறு பலர் செய்கின்றனர். பலர் நிறுவனம் ஈட்டும் பொருளின் மதிப்பைக்கொண்டு இதைக் கணக்கிடுகின்றனர். இதற்குமாருக, உற்பத்தியின் மொத்த மதிப்பையும் சிலர் கணக்கிடுவதற்குப் பயன்படுத்துகின்றனர். எண்ணெய் சுத்தித் தொழில்போன்ற தொழில்களில் மொத்த மதிப்பில் ஒரு பெரும்பகுதிக்குக் கச்சாப் பொருள்களே காரணமாக இருக்கும். முன்னேற்றமடையும் நாடுகளில் (முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நாடுகள்) தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கொண்டு, உற்பத்தியின் அளவைக் கணக்கிட்டால், இந்த முறை ஒரு சிறந்த தோற்றமளிக்கும். ஆனல், கணக்கிடும் நோக்கத்திற்குப் பொருத்தமான முறையைப் பின்பற்றுவதே சிறந்ததாகும்.[2]

[1] எஃப். சி. பென்ஹாம். (F. C. Benham) 'பொருளியல்' (Economics) 6ஆவது பதிப்பு, பக்கம் 117.

[2] மிக முக்கியமான இந்தியத் தொழில்களில் உற்பத்தியின் அளவுகளைக் கணக்கிடும் முறைகளைப்பற்றிய விவரங்களை (1950ஆம் ஆண்டுக்கு) Journal of the Royal Statistical Society, Series A, Part I, 1956 என்ற பத்திரிகையில் வெளியாகி இருக்கும், 'Some Aspects of the Structure of Indian Industry' என்ற கட்டுரையில் காணலாம்.

பல பொருள்களை உற்பத்திசெய்வதால் நிறுவனத்தின் அளவு பெருகும் என்பதை நாம் கவனிக்கவேண்டும்.[1] ஏனெனில், புதிய உற்பத்திமுறை கண்டுபிடிக்கப்பட்டால் ஆக்கச் செலவு குறையும்; தேவை பெருகும். மக்கள் தொகை மிகுதியடைவதாலோ அல்லது அவர்கள் விருப்பம் மாறுவதாலோ அல்லது பொருளுக்குப் புதிய பயன் ஏற்படுவதாலோ தேவை பெருகும். இத்தகைய மாறுதல்கள் ஏற்படாவிடில், உற்பத்தியின் அளவு ஓரளவுக்குமேல் பெருகுவதால் நன்மை எதுவும் ஏற்படாது.

உற்பத்தியின் அளவுக்கும் இடத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றி முன்பே குறிப்பிட்டோம். பொதுவாகக் கூறும்பொழுது ஒரு நிறுவனம் அல்லது தொழில் நிறுவப்படவேண்டிய இடத்தைக் கீழ்க்கண்டவை நிர்ணயம் செய்கின்றன: (a) கச்சாப் பொருள்கள், தொழிலாளர்கள், மற்ற உற்பத்திக் காரணிகள் முதலியவைகளைச் சேர்ப்பதற்காகச் செலவுசெய்யப்படும் தொகை. உதாரணமாகக் கிராமாந்தரப் பகுதிகளில் மனித உழைப்பு மலிவாகக் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி செய்துகொடுக்கவேண்டிய அவசியமில்லை. (b) முழுதும் அல்லது அரைகுறையாக உற்பத்தியான பொருள்களை உள்நாட்டு மார்க்கட்டுக்கும், வெளிநாட்டு மார்க்கட்டுக்கும் செலுத்துவதற்காகச் செய்யப்பட வேண்டிய செலவு. (c) தொழில் கேந்திரத்தில் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்துவதால் விளையும் நன்மை, இதிலிருந்து தொழிலகத்திற்காக வாங்க வேண்டிய நிலப்பரப்பின் உயர்வான விலையை நீக்கிவிட வேண்டும். பொருள்களைச் சேர்ப்பதற்காகச் செய்யப்படும் செலவு (அவை உற்பத்தியாகும்பொழுது பளுவை இழந்தாலும் இழக்காவிடிலும்) அவைகளுடைய பருமனையும் பளுவையும் பொறுத்திருக்கும். உதாரணமாக நிலக்கரி பயனாகும்பொழுது, அது கனமாக இருப்பதால், நிறுவனத்தைச் சுரங்கத்தின் அருகிலேயே அமைப்பது சிறந்ததாகும். சர்க்கரை சுத்திக்குப் புதிய கரும்பு தேவைப்படுமாகையால், அது விளையும் இடத்தில் அல்லது அருகில் சர்க்கரை ஆலை அமையவேண்டும். முழுதும் உற்பத்தியான பொருள் மிகப் பெரியதாகவும் கனமாகவும் இருந்தால், உற்பத்திச்சாலை மார்க்கட்டுக்கு அருகிலேயே இருத்தல் வேண்டும். இரும்பு, எஃகுத் தொழிலில் (பல நாடுகளில்) ஏன் பல உற்பத்திப் பகுதிகள் ஒன்று சேரவில்லை என்பதை, மேற்கண்ட உண்மை புலப்படுத்துகின்றது. ஓரிடத்தில் தொழிற்செறிவினால் ஏற்படும் புறச் சிக்கனங்கள் சிலவற்றை முன்பே குறிப்பிட்டோம்.

[1] 'The times'—March 8, 1963 என்ற பத்திரிகையில், அண்மையில் வெளியாகியிருக்கும் இங்கிலாந்தின் உற்பத்திபற்றிய புள்ளி விவர அறிக்கையைப் பார்க்கவும்.

பல பகுதிகளிடையே, மாநிலங்களிடையே தொழில்களைப் பரவலாக அமைப்பது விரும்பத்தக்கது என்றும், இதற்குத் தகுந்த திட்டம் வகுக்கவேண்டும் என்றும் இந்தியாவில் கூறுகின்றனர். பல்வேறு பகுதிகளில் தொழில் கேந்திரங்களை அமைத்தால், இப் பகுதிகளில் பெருக்கி (multiplier) இயங்கும்; ஒரு சில தொழில் கேந்திரங்களில்மட்டும் பெருக்கி இயங்காது; இதனால், நீண்ட காலத்தில் நன்மை ஏற்படும். தொழில்செறிவுக் கேந்திரங்களில் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்துவதால் விளையும் நன்மைகளை ஒட்டியே தொழிலை நிறுவவேண்டும். மற்றக் காரணங்களைவிட, இதுவே ஓரிடத்தில் தொழிலகத்தை அமைப்பதற்குத் துணைபுரிய வேண்டும். இதுதான் சிறந்த பொருளாதாரக் கொள்கையாகும். இப்படிச் செய்யாவிடில் குறைவாக உள்ள மூலதனப் பொருள்கள் வீணாகும்; உற்பத்தித்திறன் மிகுதியடைவது தாமதமாகும். சில சந்தர்ப்பங்களில் தொழிலைச் சில இடங்களில் அமைப்பதற்கு அரசியல் காரணங்கள் இருக்கலாம். மக்களுடைய மனநிலையை அடிப்படையாகக்கொண்ட காரணங்களை இதற்கு ஆதாரமாகக் கொடுக்கலாம். எனினும், அடக்கச் செலவை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

தொழிலமைப்புக்குப் பல்வேறு இடங்கள் அளிக்கும் நன்மையைத் தொழில் நுணுக்க மாறுதல்கள் பாதிக்கும் என்பதை நாம் இறுதியில் குறிப்பிட வேண்டும். உதாரணமாக, ரூர் (Rhur) என்ற ஊரில் எரிபொருள் பயனில் புதிய சிக்கனங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால், இரும்பு, எஃகுத் தொழிற்சாலையை இரும்புக் கனி கிடைக்கும் இடத்திலேயே அமைப்பதைவிடச் சிறந்ததாயிற்று.

தொழில் நுணுக்கம், நிர்வாகம், நிதி திரட்டுவது, பொருள்களை விலையாக்குவது முதலிய பொறுப்புகளைத் தனித் தனியே பார்க்கும்போது, ஒரு தொழில் நிறுவனத்தின் உத்தம அளவு ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறாக இருக்கலாம் என்று நாம் முன்பே குறிப்பிட்டோம். தொழில் நுணுக்க உத்தம அளவுக்குக் கிடைக்கும் முதலைவிட, மிகுதியான முதல் தேவையாகலாம். அல்லது இலாபகரமான விற்பனைக்குத் தகுந்த அளவைவிட, மிகுதியான பொருள்கள் உற்பத்தியாகலாம். ஓர் இயந்திரம் அல்லது தொழிற்சாலைக்கு வேண்டியதைவிட அதிகமான நிர்வாகத்திறன் இருக்கலாம். ஆகையால், நாட்டில் பல இடங்களில் தொழிற்சாலைகளை அமைத்து, ஒரு நிறுவனம் பொருள்களை ஆங்காங்கே உற்பத்தி செய்து விற்பனையாக்கலாம். இதனால் போக்குவரத்துச் செலவு குறையும். பொருள்களை விலையாக்குவதற்கு, குறிப்பாக அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குப் பெருவாரி உற்பத்தியே சிறந்ததாகும்.

மற்றக் காரணங்களைவிட இதுவே முக்கியமானதாக இருக்கும். ஆனால், இதுவே எப்பொழுதும் உற்பத்தியின் அளவுக்குக் காரணமாக இருக்கும் என்று நாம் குறிப்பிடமுடியாது. குறிப்பாகப் புதிய தொழிலகங்களின் அளவை வேறு காரணங்கள் பாதிக்கலாம். இவை மார்க்கட்டுகளை நிறுவிக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றன. மேலே குறிப்பிட்ட எல்லாவற்றிற்கும் ஒரே உத்தம அளவு இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், இத்தகைய உத்தம அளவு தற்செயலாக ஏற்படலாம். மேலே குறிப்பிட்டவைகளின் உத்தம அளவுகளிடையே, ஒரு பொருத்தத்தை ஏற்படுத்துவதற்குத் தகுந்த பல முறைகளில் தொழிலை அமைக்கவேண்டும். அதாவது இத் துறைகளைத் தனித்தனியாக நிறுவி, எல்லாத் துறைகளையும் பொது நிர்வாகத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டும்.[1] ஒரு சில உதாரணங்களை மட்டுமே இங்குக் குறிப்பிடலாம். உதாரணமாகத் தொழில் நுணுக்க உத்தம அளவு, மார்க்கட்டுத் துறையின் உத்தம அளவைவிடப் பெரியதாக இருந்தால், உற்பத்தியைப் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பகுதியிலும் ஓர் இயந்திரம் ஒரு பொருளை உற்பத்தி செய்யும். ஒவ்வொரு பகுதியையும் ஒரு தனி நிர்வாகி கவனிப்பான். சில பகுதிகளை நிறுவனங்களிடமிருந்து பிரித்தல் மற்றொரு வழியாகும். மார்க்கட்டுத்துறையின் உத்தம அளவு தொழில் நுணுக்க, நிர்வாக அளவுகளைவிடப் பெரியதாக இருந்தால், இதே வழி (அதாவது மார்க்கட்டுப் பணியைமட்டும் நிறுவனப் பொறுப்பிலிருந்து பிரித்தல்) சிறந்ததாகும். தேவை மாறுவதால் ஏற்படும் ஆபத்துகளைச் சமாளிக்கக் கூடிய ஆற்றலையும், நிறுவனத்தின் அளவு பாதிக்கும் என்பதையும் நாம் இங்கு இறுதியாகக் குறிப்பிடவேண்டும்.[1] ஒரே விதமான பண்டங்களுக்குத் தேவை நீண்டகாலத்தில் நீடித்தால் பெரிய விலையுயர்ந்த எந்திரங்களை நிறுவலாம். ஆனால், தேவை குறைந்தால் அல்லது வேறு பொருள்களுக்கு மாறினால், இப்படிச் செய்வது இலாபகரமாக இருக்காது. புதிய பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு இயந்திரங்களை மாற்றியமைக்க முடியாது. இதனால் பெரிய மூலதன இழப்பு ஏற்படலாம். தேவை பருவத்திற்கேற்ற முறையில் அல்லது அவ்வப்போது மாறும் தன்மையைக் கொண்டிருந்தால், விலையுயர்ந்த இயந்திரங்கள் நீண்டகாலம் பயனற்றிருக்க வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் தேவைக்கேற்றபடி மாற்றிக்கொள்ளக்கூடிய இயந்திரங்களை (அதாவது தானாகவே இயங்கும் சக்தியை மிகுதியாகக் கொள்ளாத இயந்திரங்களை) நிறுவலாம். குறிப்பிட்ட நோக்கத்திற்குத் தகுந்தவாறு இவைகளை

[1] ஈ. ஏ. ஜி. ராபின்சன் (E. A. G. Robinson) எழுதிய, Structure of Competitive Industry (முதல் பதிப்பு 1931, p 107) என்ற நூலைப் பார்க்கவும்

மாற்றிக்கொள்ள அதிகமான செலவு செய்யவேண்டியதில்லை. பெரிய நிறுவனங்கள் கொண்டிருக்கும் இயந்திரங்கள் சில குறிப்பான பொருள்களைக் குறிப்பிட்ட அளவுகளில் உற்பத்தி செய்யும். சிறிய நிறுவனங்களை எளிதில் மாற்றியமைக்கலாம். 'சிறிய நிறுவனம் மிகச் சிறந்தமுறையில் அமையாமல் இருக்கலாம். ஆனால், மிகவும் தவருனமுறையில் அமைந்திருக்காது; ஆகையால் உற்பத்திப் பொருள்கள் அடிக்கடி மாறவேண்டி இருக்கும் பொழுதும் உற்பத்தியமைப்பு அடிக்கடி மாறவேண்டியபொழுதும் அது பெரிய நிறுவனம் கொண்டிருக்காத சில நன்மைகளைப் பெற்றிருக்கும்.[1]

[1] ஈ. ஏ. ஜி. ராபின்சன் (E. A. G. Robinson) எழுதிய, Structure of Competitive Industry, (முதல் பதிப்பு, 1931, p. 107) என்ற நூலைப் பார்க்கவும்.

பிரிவு III

பொருளாதாரம் முழுவதையும் ஆராய்ச்சி செய்தல் [பொதுப் பொருளியல் ('Macro-Economics')]

7. பொருளியலில் அளவை

A. அளவையின் முக்கியத்துவம்.

B. தேசிய வருமானத்தைக் கணக்கிடுதல்

A. அளவையின் முக்கியத்துவம்

பல்வேறு பொது விதிகளைப்பற்றி நாம் முன்பே குறிப்பிட்டிருக்கின்றோம். உதாரணமாக, விலைகள் உயரும்பொழுது தேவை சுருங்கும். அல்லது முதலீடு பெருகும்பொழுது வேலையும், தேசிய வருமானமும் பெருகும். இத்தகைய பொதுத் தொடர்புகள் (general relationships) ஆராய்ச்சியின் அடிப்படையாக இருக்கின்றது. ஆனால், அரசுக்கோ அல்லது தனிப்பட்ட தொழில் துணிவோருக்கோ இப் பொது விதிகள் பயனுள்ளவையாக இருக்க வேண்டுமாயின், இவை அளக்கக்கூடியவையாக அமைய வேண்டும்.

உதாரணமாகத் தொழில் துணிவோன் பொருளுக்கு எழும் தேவையின் விலை நெகிழ்ச்சியை (price elasticity) அறிவதால் தான் விலையை மாற்றும்பொழுது, பெறும் ஊதியம் எப்படி மாறும் என்பதை அறியலாம். விலையில் சிறிய மாறுதல்கள் ஏற்படும் பொழுது, விலை நெகிழ்ச்சியை நாம் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்:

$$\text{தேவை மாற்றத்தின் சதவீதம்}$$
$$\text{விலை மாற்றத்தின் சதவீதம்}$$

இந்தப் பின்னம் (fraction) ஒன்றுக்கு மேற்பட்டிருந்தால், அதாவது விலை மாற்றத்தை ஒட்டி எழும் நுகர்வோரின் செயல் விகிதத்தைவிடக் குறைவாக இருந்தால், தொழில் துணிவோன் விலையை உயர்த்துவதால் பயனடைவான். இதேபோல் தேவையின் வருமான நெகிழ்ச்சிபற்றிய அறிவைக்கொண்டு (மக்களின்) வருமானம் மாறும்பொழுது அவனுடைய வருமானம் எவ்வாறு மாறும் என்பதை அவன் அறியலாம். தேவையின் வருமான நெகிழ்ச்சி (income elasticity of demand) கீழ்க்கண்டபடி அளக்கப் படுகிறது.

$$\frac{\text{தேவையில் ஏற்படும் மாற்றத்தின் சதவீதம்}}{\text{வருமான மாற்றத்தின் சதவீதம்}}$$

(மக்கள் அன்றுடம் பயன்படுத்தும்) முக்கியமான உணவுப் பண்டங்களை எடுத்துக்கொண்டால், இந்த பின்னம் எதிர்மறை யிலும் (பூச்சியத்திற்கும் குறைவாக) இருக்கலாம். வருமானம் மிகுதியடையும்பொழுது, மக்கள் சில பண்டங்களைக் குறைவாகப் பயன்படுத்தி மாற்றுப் பொருள்களை அதிகமாகப் பயன்படுத்தலாம். உதாரணமாக, அரிசிக்குப் பதிலாகக் கோதுமையையும், மற்றத் தானியங்களுக்குப் பதிலாக அரிசியையும் அவர்கள் பயன்படுத்த லாம். இது (பின்னம்) எதிர்மறையல்லாமல் ஆனால், குறைவாக இருப்பின் வருமானப் பெருக்கத்தால், கணிசமான இலாபத்தை உற்பத்தி செய்வோன் எதிர்பார்க்கமுடியாது. இது உயர்ந்ததாக இருந்தால் நுகர்வோரின் வருமானப் பெருக்கம் அவனுக்கு மிகுதி யான ஊதியத்தை அளிக்கக்கூடும். மார்க்கட்டின் மொத்தப் புள்ளி விவரங்களைக்கொண்டோ அல்லது குடும்ப வரவு செலவுத் திட்டங்களைக்கொண்டோ (மேலே குறிப்பிட்ட) நெகிழ்ச்சியைக் கணக்கிடலாம். விலை மாற்றத்தை அடுத்து ஏற்படும் மொத்தத் தேவைப் பெருக்கத்தை விலை நெகிழ்ச்சி என்று குறிப்பிடலாம். சில குறிப்பிட்ட குடும்பங்களின் வரவு செலவுத் திட்டங்களைத் தீவிரமாக ஆராயும்பொழுது, வருமான மாற்றம் அல்லது மற்றப் பொருள்களின் விலை மாற்றத்துடன் சேர்ந்து ஏற்படுத்தும் விளைவு களை எளிதில் நீக்கலாம். இதேபோல் தேசிய வருமானம் (national income) பெருகும்பொழுது ஏற்படும் தேவைப் பெருக் கத்தை வருமான நெகிழ்ச்சி என்று குறிப்பிடலாம். இதேபோல் சில பொருள்களும் அவைகளுடைய மாற்றுப் பொருள்களும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதைச் சில குடும்பங்களுடைய வரவு செலவுத் திட்டங்களைப் பரிசீலனை செய்து காணலாம்.

சில குறிப்பிட்ட பொருள்களின் விலை நெகிழ்ச்சியையும், தேவை நெகிழ்ச்சியையும் தனிப்பட்ட தொழில் துணிவோரும்

அரசும் அறிந்துகொள்ளவேண்டியது மிக முக்கியமானதாகும். உதாரணமாகச் சில உணவுப் பண்டங்களின் விலை நெகிழ்ச்சி குறைவாக இருந்தால், அளிப்பு மாறும்பொழுது, விலை அதிகமாக மாறும். அறுவடை குன்றினால், பயங்கரமான விலை உயர்வு ஏற்படும்; பண வீக்கமே ஏற்படும். பண வீக்கத்தைத் தவிர்க்க வேண்டுமென்று கருதும் அரசு, இத்தகைய சந்தர்ப்பங்களைச் சமாளிக்க ஏராளமான உணவுப் பண்டங்களைக் கையிருப்பாக வைத்திருக்கவேண்டும். இதேபோல் வருமான நெகிழ்ச்சி குறைவாக இருப்பின், தேசிய வருமானம் பெருகும்பொழுது, உணவுப் பொருளின் தேவை குறைவாகவே பெருகும். நிலத்தை நம்பி வாழ்ந்தவர்களின் எண்ணிக்கை குறையாவிடில், அவர்களுடைய தலா வருமானம் குன்றும். அதாவது நிலத்தைவிட்டு வேறு உற்பத்தித்துறைகளை நாடிச் செல்வதற்கு அவர்களுக்கு ஒரு பொருளாதாரத் தூண்டுதல் ஏற்படும். இத் துறைகளை நாடிவரும் மனித உழைப்புக்கு ஏற்ற மூலதனத்தை அளித்து வேலைவாய்ப்புகளைப் பெருக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்படும்.

தேசிய வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை இவ் வதிகாரத்தின் இரண்டாம் பகுதியில் விளக்கியுள்ளோம். இங்குப் (தேசிய வருமானத்தின்) பல்வேறு பிரிவுகளை விளக்கலாம். இவை மிகுதியான பொருளாதார முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. விவசாயத்துறையின் மொத்த உற்பத்தியிலிருந்து தலா உற்பத்தியையும், ஒரு நாடு தன் உற்பத்தியைக்கொண்டே எந்த அளவு மக்களுக்கு உணவுப் பங்கீடு செய்கின்றது என்பதை அறியலாம். எப்பொழுதும் பல ஆண்டுகளின் புள்ளி விவரங்களைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது. இதனால் வளர்ச்சியின் போக்கை நாம் அறியலாம். தாம் உற்பத்திசெய்த பொருள்களைப் பெரும்பாலும் தாமே பயன்படுத்தும் குடும்பங்கள் நிறைந்த விவசாயப் பொருளாதார அமைப்பில் ஒரு முக்கியமான மதிப்பீடு செய்யும் பிரச்சினை எழுகின்றது. உற்பத்திப் பொருளைச் சில்லறை விலைகளைக்கொண்டு, அதாவது இறுதி நுகர்வோன் செலுத்தும் விலைகளைக்கொண்டு அல்லது மொத்த விலையைக்கொண்டு, அதாவது பண்ணையில் பொருளை வாங்கும் வர்த்தகன் செலுத்தும் விலையை அல்லது அண்மையில் இருக்கும் மார்க்கட்டில் அவன் கொடுக்கும் விலையைக் கொண்டு, உற்பத்திப் பொருள்களை மதிப்பீடு செய்யலாம். விவசாயிகளை நுகர்வோராகக் கருதி அவர்களுடைய நலனை நாம் விரும்பினால் சில்லறை விலை முறையை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இது நமது முக்கியமான நோக்கமில்லாவிடில் மொத்த விலைமுறை சிறந்ததாக இருக்கும். ஏனெனில், இந்த முறை தேசிய உற்பத்தியில். (பங்கீட்டுப் பணியின் அடக்கச் செலவு நீங்கலாக) விவசாயத்துறையின் பங்கை எடுத்துக்

காட்டும். அதாவது, பங்கீட்டுப் பணிகள் ஒன்றுமே நடைபெற வில்லை—பங்கீட்டில் உண்மையாக உற்பத்திச் சாதனங்கள் பயன் படுத்தப்படவில்லை—என்று இங்கு நாம் கற்பனை செய்து கொள் கின்றோம்.

மற்ற உற்பத்தித் துறைகளின்—பணிகள் புரிவது, தொழில் துறை போன்றவை—உற்பத்தியையும் நாம் அறிதல் முக்கிய மாகும். ஒவ்வொருதுறையிலும் வேலையில் அமர்ந்திருப்போரின் எண்ணிக்கையைக்கொண்டு மொத்த உற்பத்தியை வகுத்தால், தலா உற்பத்தி புலனுகும். தொழில்துறையின் தலா உற்பத்தி விவசாயத்துறையின் தலா உற்பத்தியைவிட மிகுதியாக இருப் பின், மனித உழைப்பு விவசாயத்திலிருந்து தொழில்துறைக்குச் செல்லவேண்டுமென்பதைக்காட்டும் குறியாகக் கருதல் வேண்டும். எல்லா உற்பத்திக் காரணிகளும் எல்லாத் துறைகளிலும் இறுதி நிலையில் சமமான உற்பத்தி செய்தால் மொத்த உற்பத்தி உச்ச நிலையில் இருக்கும். குறைந்துசெல் பயன்விதி (the law of diminishing returns) இயங்குகின்றது என்று கற்பனை செய்துகொண்டால், விவசாயத்தைவிட்டு மனித உழைப்பு வெளியேறும் பொழுது அத் துறையில் அதன் இறுதிநிலை உற்பத்தி (marginal productivtiy) உயரும். தொழில்துறைக்கு அது வருவதால், அங்கு அதன் இறுதிநிலை உற்பத்தி உயரும். இவ் விரு துறைகளிலும் உழைப் பின் இறுதிநிலை உற்பத்தி சமமாகும்வரை, இது ஒரு துறையை விட்டு மற்றென்றை நோக்கிச் சென்றுகொண்டே இருக்கும்.

உற்பத்தி செய்தலைக் கணக்கிட, வேலை (employment) உற்பத்திபற்றிய புள்ளி விவரங்கள் வேண்டும். இவைகளைச் சேகரித்தலும், புரிந்துகொள்வதும் சாதாரணமாகத் தோன்றுவதை விடக் கடினமாக இருக்கும். விவசாயத்துறையில் குழந்தைக ளுடைய வேலையையும், பெண்களுடைய வேலையையும், முழு வேலை செய்யும் ஆண்களுடைய வேலைக்குச் சமமாகப் பாவிக்கவேண் டியதால், இந்த இடர்ப்பாடு மிகுதியாக இருக்கின்றது. மேலும், விவசாயத்துறையில் உள்ள குறை வேலையை (under-employment) சரிக்கட்ட வேண்டும். உதாரணமாக, ஒருவன் ஓராண்டில் தொழில்துறையில் வேலைசெய்யும் நேரத்தைவிட விவசாயத்தில் குறைவான மணிநேரம் வேலைசெய்தால், இரு துறைகளிலும் நடைபெறும் உற்பத்தியை ஒப்பிடும்பொழுது, இதைச் சரிக்கட்டு வதற்குத் தகுந்தவாறு புள்ளிவிவரங்களை அமைத்தல்வேண்டும். மேலும், கைவேலை, வர்த்தகம்போன்ற துணைத் தொழிலை விவசாயிகள் செய்யலாம். தொழில்பற்றிய கணக்கிடும்பொழுது இத்தகைய துணைத் தொழிலைக் குறிப்பிட ஏற்பாடு செய்வதில்லை. மக்கள் கணிப்பிலும் (census) இது குறிக்கப்படுவதில்லை.

ஏனெனில், 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வணிகம், கைத் தொழில் போன்ற உற்பத்தித்துறையில் ஈடுபடுவதில்லை என்ற எடுகோளை மக்கள் கணிப்பு அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆகையால், இவை உண்மையை மாற்றிவிடுகின்றன. இங்குக் குறிப்பிட்டுள்ள இடர்ப்பாடுகள் எவ்வாறு சமாளிக்கப்பட்டுள்ளன என்பதை அறியாமல், விவசாயத்துறையின் வேலைபற்றிய புள்ளி விவரங்களை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

தேசிய வருமானத்தில் பல்வேறு துறைகளின் பங்குகளை அறிவதோடு மட்டுமல்லாமல், மக்களுடைய தலா வருமானத்தையும் நாம் அறியவேண்டும். இது காலப்போக்கில் எவ்வாறு மாறுகின்றது என்பதையும் அறியவேண்டும். ஏனெனில், இது மக்களுடைய பொருள்சார்ந்த நலனையும் (material welfare) முன்னேற்றத்தையும் எடுத்துக்காட்டும். தேசிய வருமானத்தைவிட, மக்கள் தொகை விரைவில் கூடினால் இந்த நலன் குறையும். குறைபாடுள்ள இந்தக் கணிதச் சராசரி, தலா வருமானத்தை மட்டும் பயன்படுத்தாமல், பல்வேறு பொருளாதார வகுப்பினரிடையே தேசிய வருமானம் எவ்வாறு பகிர்வாகின்றது என்பதையும் நாம் அறியவேண்டும். கணிதச் சராசரித் தலா வருமானத்தைவிட, அதாவது நாம் கற்பனை செய்துகொள்ளும் சராசரி வருமானத்தைவிட, மக்கள் வருமானத்தை ஈட்டும் முறையே அவர்களுடைய நலனைப் பாதிக்கும். தேசியத் தலா வருமானம் குறைவாக உள்ள ஒரு நாட்டின் மாதிரி வருமானம். இத் தலா வருமானம் அதிகமாக உள்ள நாட்டைவிட, உயர்ந்ததாக இருக்கலாம்.

மக்களுடைய நலனை அறிவதற்காக மட்டுமேயன்றி, தேசிய வருமானத்தில் எந்த அளவு சேமிக்கப்படும், எந்த அளவு பயனுகும் என்பதை அறிவதற்கும் நாம் வருமானப் பகிர்வை அறியவேண்டும். சாதாரணமாகச் செல்வர்கள் தம் வருமானத்தில் ஏழைகளைவிட, அதிகமான பகுதியைச் சேமித்து முதலீடு செய்கின்றனர். நிதிக் கொள்கையை வகுப்பதற்குத் தேசிய வருமானப் பகிர்வுபற்றிய அறிவு வேண்டும். வெவ்வேறு படிவங்களில் வருமான வரி (income tax) அளிக்கும் மொத்தத் தொகையையும், இலாப வரியும் (profit tax), நில வரியும் அளிக்கும் தொகையையும் அறிவதற்கும் இது வேண்டும்.

பல அளவுபற்றிய பிரச்சினைகளுக்கு, உதாரணமாக உற்பத்தி, விலைவாசி, வேலை முதலியவற்றில் ஏற்படும் மாறுதல்களை அறிய நாம் குறியீட்டெண்களைப் (index numbers) பயன்படுத்துகிறோம். ஒரு குறிப்பிட்ட ஆண்டை மூல ஆண்டாகக் (base year) கொண்டு

— உதாரணமாக 1950ஆம் ஆண்டை மூல ஆண்டாகக் கொண்டு-அந்த ஆண்டு உற்பத்தியான பொருள்களின் அளவை 100 என்று கொள்ளலாம். 1955-ல் உற்பத்தி 12 சதவீதம் உயர்ந்தால், அந்த ஆண்டின் குறியீட்டெண்ணை 112 என்று கூறுவோம். பல்வேறு பொருள்களின் உற்பத்தி வெவ்வேறு திசைகளில் செல்லலாம். இவை அனைத்தையும் கூட்டி ஒரே எண்ணுக்குவது, ஒரு கடினமான பிரச்சினை. ஒவ்வோர் இனத்திற்கும் நிறையிட்டு (weighting) இப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். உதாரணமாக, மொத்த உற்பத்தியில் எஃகும், எஃகுப் பொருள்களும் 50 சதவீதமாகவும், துணி 25 சதவீத மாகவும் இருப்பின், நாம் எஃகுக்குத் துணியின் நிறையைப்போல் இரு பங்கு நிறையைக் கொடுப்போம். உதாரணமாக எஃகு உற்பத்தி 10 சதவீதமும், துணி உற்பத்தி 20 சதவீதமும் பெருகினால், இறுதிச் சராசரிக்கு ஏற்ற எண்களை 10, 10, 20 என்று குறிக்கவேண்டும். சராசரி 13-ஐவிட உயர்ந்ததாக இருக்கும். வேலைவாய்ப்பில் ஏற்படும் மாறுதல்களையும் இதே விதத்தில் கணக்கிட வேண்டும். வேலைவாய்ப்புபற்றிய மாறுதல்கள் பல தொழில்களில் வெவ்வேறு திசைகளிலும், அளவுகளிலும் மாறலாம். விலைக் குறியீட்டெண்ணைத் (price index) தயார் செய்யும்பொழுது, ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்ற நிறையைக் கொடுத்து, குறியீட் டெண்ணைத் தயார்செய்து குறிப்பிட்ட காலத்தில் பணத்தின் மதிப்பு எவ்வாறு மாறியது என்பதைக் காட்டவேண்டும். எல்லாப் பண்டங்களுக்கும் வேண்டிய விவரங்கள் சாதாரணமாகக் கிடைக் காது. ஆகையால் இதற்காகச் சில முக்கியமான பொருள்களையே பயன்படுத்துவது வழக்கம். வாழ்க்கைத்தரக் குறியீட்டெண்ணைத் (cost of living index) தயார் செய்வதற்குமுன், சாதாரணக் குடும் பங்களின் வரவு செலவுத் திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும். இத்தகைய பரிசீலனைமூலம் நடுத்தரக் குடும்பங்கள் அல்லது குறிப்பிட்ட வருமானம் பெறும் குடும்பங்களில், நடுத்தரக் குடும்பம் பல பண்டங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக் கின்றது என்பதை நாம் அறியவேண்டும். இப்படிச் செய்வதால் தேர்ந்தெடுக்கவேண்டிய பண்டங்களையும் அவைகளுக்குக் கொடுக்க வேண்டிய நிறையையும் நாம் அறியலாம். நிறையிடு தலை வரையின்றிப் பயன்படுத்துவதுபற்றிய எச்சரிக்கை ஒன்றை இங்குக் கொடுக்கவேண்டும். பத்தாண்டுக் காலத்தில் உற்பத்தி 50 சதவீதம் உயர்ந்தால், இது நம் சிறந்த சாதனையாகத் தோன்றும். ஆனால், உற்பத்தி எந்தப் படிவத்திலிருந்து பெருகத் தொடங்கியது என்பதையே இது சார்ந்திருக்கும். உற்பத்தி 50 சதவீதம் பெருகியபோதிலும், தேவைகளைக் கருதும்போது இது குறைவாக இருக்கலாம். ஆகையால் குறியீட்டெண் ஒரே

எண்ணுகக் கொடுக்கப்படும்போது, நாம் அதைக் கவனமாகப் பார்க்கவேண்டும்.

திட்டம் வகுப்பதற்கு முதலீட்டை தேசிய வருமானத்தின் சதவீதமாகக் கணக்கிட வேண்டும். முதலீட்டுத் தேசியப் பெருக்கியையும் (investment multiplier) நாம் அறியவேண்டும். பின்னர்க் குறிக்கப்பெற்றுள்ள எண் (பெருக்கி), தனியார் அல்லது அரசு செய்யும் பூர்வாங்க முதலீடு, எந்த அளவு வருமானத்தைப் பெருக்கும் என்பதைக் காட்டும். இது இறுதிநிலைச் சேமிப்பு நாட்டத்தின் (marginal propensity to save) எதிர்மறை, அதிகமாகக் கிடைக்கும் வருமானத்தில் 90 சதவீதத்தை நுகர்வுக்கும், 10 சதவீதத்தைச் சேமிப்புக்கும் பயன்படுத்தினால், முதலீட்டுப்பெருக்கி $1 \div \frac{1}{10} = 10$ ஆக இருக்கும். அதாவது முதலீடாகும் ஒவ்வொரு ரூபாய்க்கும், ஒன்பது ரூபாயாக வருமானம் பெருகும். வேலை (employment) வருமானத்தோடு தொடர்புகொண்டிருந்தால், அதாவது உற்பத்தியில் கூடுதலோ, குறைவோ ஏற்படாவிடில், பூர்வாங்க முதலீட்டின் (initial investment) காரணமாக வேலையில் அமரும் ஒவ்வொருவனும், உபரியாக ஒன்பதுபேருக்கு வேலையளிப்பான். வெவ்வேறு வருமானப் படிவங்களில் இறுதிநிலை நுகர்வு நாட்டமும் சேமிப்பு நாட்டமும் (marginal propensities to consume and save) எவ்வாறு இருக்கின்றன என்பதைக் குடும்ப வரவு செலவுத்திட்டங்களை ஆராய்ந்து நாம் காணலாம்.

சிறந்தமுறையில் திட்டமிடுவதற்குப் பணவீக்கச் சந்தையும் (inflationary gap), பணச் சுருக்கச் சந்தையும் (deflationary gap) மதிப்பிட வேண்டும், முதலீட்டுக்கு ஒதுக்கவேண்டுமென்று மக்கள் கருதும் தொகை, சேமிப்புக்கு ஒதுக்கவேண்டுமென்று கருதும் தொகையைவிட, எவ்வளவு மிகுதியாக இருக்கின்றதோ அதைப் பணவீக்கச் சந்து என்று குறிப்பிடுவர். இதேபோல் சேமிப்புக்கு ஒதுக்கவேண்டுமென்று கருதும் தொகை எந்த அளவு முதலீட்டுக்கு ஒதுக்கவேண்டுமென்று கருதும் தொகையைவிட அதிகமாக இருக்கின்றதோ, அதைப் பணச் சுருக்கச் சந்து என்று குறிப்பிடலாம். முதலீட்டுக்கு ஒதுக்கவேண்டும் என்று (மக்கள்) கருதும் தொகை, சேமிப்புக்கு ஒதுக்கவேண்டுமென்று கருதும் தொகையைவிட அதிகமாக இருந்தால், வருமானம் பெருகும். எனவே, முன்பு எதிர்பார்த்ததைவிட, அதிகமான தொகை சேமிக்கப்படும். சேமிப்புக்கு ஒதுக்கவேண்டுமென்று கருதிய தொகை முதலீட்டுக்கு ஒதுக்கவேண்டும் என்று கருதிய தொகையைவிட அதிகமாக இருப்பின், நுகர்வுச் செலவும் (consumption expenditure), அதன் காரணமாக வருமானமும் குறையும். முதலீடு பெறும் இலாபம் குறைவதன் காரணமாக அதுவும் குறையும். நாம்

முன்னர்க் குறிப்பிட்டுள்ள நிலையில் மிகுதியான திட்டமிட்ட முதலீடு வருமானத்தையும் வேலையையும் சேமிப்பையும் பெருக்கும். பின் தங்கிய நாடுகளுக்கு இந்தநிலை மிகவும் விரும்பத்தக்கது. வேலையில் அமராத தொழிலாளர்களும், மூலதனமும் வேலையில் அமர வாய்ப்புகள் ஏற்படும். முழு வேலை (full employment) இருக்கும் பொழுது இவ் வியக்கம் ஏற்பட்டால், பணவருமானம் (cash income) மட்டுமே உயரும். உற்பத்தி பெருகாது. (குறுகிய காலத்தில் தொழிலாளர்களின் உற்பத்திசெய்யும் சக்தி உயராது. ஆகையால் குறுகிய காலத்திற்காவது இவ் வண்மை பொருந்தும்.) இந்த நிலையில் பணச் சுருக்கத் தடைகளை (diflationary)— செலவைக் குறைக்கும் வரிகள், வரவு செலவுத் திட்டத்தில் அரசு உபரி வைத்துக்கொள்வது (அதாவது செலவைவிட, வரவை அதிக மாக்கிக்கொள்வது) போன்ற கருவிகளைக் கையாளவேண்டும். பணச் சுருக்கச் சந்து ஏற்படுவதற்கு இடமிருந்தால், அரசு வரவை விடச் செலவைப் பெருக்கவேண்டும்; வரவு செலவுத் திட்டத்தில் துண்டு (deficit) அமைத்துக்கொள்ளவேண்டும். செலவைத் தூண்டவேண்டும். தொழிலதிபர்கள் மூலதன தளவாடப் பொருள்களை வாங்குவதை மாதிரிக் கணிப்புமூலம் அளக்க முடிந்தால், இதைக்கொண்டு முதலீட்டுக்கு ஒதுக்கும் தொகையை மதிப்பீடு செய்யலாம். வருமானப் பங்கீடு, மக்களுடைய பழக்கவழக்கங்கள் பற்றிய அறிவு, வட்டிவீதங்களின் சிறட்பியல்புகள், பொருளாதாரத் திலும், அரசியலிலும் நிலையற்ற தன்மை இருத்தல் முதலியவை சேமிப்பு நாட்டத்தைக் கணிசமாகப் பாதிக்கும். இவைகளைக் கொண்டு சேமிப்புக்கு ஒதுக்கவேண்டும் என்று மக்கள் கருதும் தொகையைக் கணக்கிடலாம்.

இறக்குமதியின் நாட்டமும் அளக்க வேண்டியவைகளுள் ஒன்றாகும். ஏழை நாடுகள் கொண்டுள்ள அன்னியச் செலாவணி (foreign exchange) அவைகளுடைய தேவையைவிடக் குறைவாக இருக்கும். இவை மூலதனப் பொருள்களையும், சில சமயங்களில் உணவுப் பொருள்களையும் இறக்குமதி செய்கின்றன. இவ் விறக்கு மதிக்கு வேண்டிய அன்னியச் செலாவணியை ஏற்றுமதிமூலம் இவை பெற இயலவில்லை. பற்றுக்குறையைக் கடன், மானியங்கள் மூலம் ஓரளவு சமாளிக்கலாம். பற்றுக்குறை முழுவதையும் இப்படியே சமாளிக்க முடியாது. எனவே, வருமானம் மிகுதியடையும்பொழுது அதில் எந்தச் சதவீதத்தை இறக்குமதிக்காகச் செலவு செய்யவேண்டும் என்பதைத் திட்டமிடுவோர் முடிவு செய்ய வேண்டும். இச் சதவீதம் ஏற்றுமதிமூலம் செலுத்தக்கூடியதை விட அதிகமாக இருந்தால், இறக்குமதியை, வரிகள்மூலமும், இறக்குமதி அளவை நிர்ணயம் செய்வதாலும் கட்டுப்பாடு செய்ய வேண்டும். இக்கட்டுப்பாட்டின்மூலம் மிக முக்கியமான இறக்குமதிப்

பண்டங்களுக்குச் செலுத்தவேண்டிய தொகையைத் தவருமல் செலுத்தலாம். பழைய புள்ளி விவரங்களோக்கொண்டு தேசிய வருமானப் பெருக்கத்தை அடுத்து மொத்த இறக்குமதியும், சில குறிப்பிட்ட நாடுகளிலிருந்துவரும் இறக்குமதியும் எவ்வாறு மாறுகின்றது என்பதைக் காணலாம். இவ்வாறு இறக்குமதி நாட்டத்தை (propensity to import) நாம் அறியலாம்.

B. தேசிய வருமானத்தை அளக்கும் முறைகள்

தேசிய வருமானத்தை எவ்வாறு அளப்பது என்பதைப் பரிசீலனை செய்யும்போது, அளக்க வேண்டியது எது என்பதை நாம் முதலில் அறியவேண்டும். உற்பத்திக் காரணிகள் அனைத்தும் ஆக்கும் எச்சப் பொருள்களை (net output)—அதாவது குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தியாகும் வெவ்வேறு வகைப் பொருள்களையும், பணிகளையும் அளக்கவேண்டும். இக் காலத்தை ஓராண்டாக வைத்துக்கொள்வது வழக்கம். இப் பொருள்களில் ஒரு பகுதி நுகர்வுப் பண்டங்களாகவும், மற்றொன்று முதலீட்டுப் பண்டங்களாகவும் இருக்கின்றன. ஓராண்டில் உற்பத்தியான உபரி முதலைக் கணக்கிட (எச்ச முதலீடு), நாட்டின் மூலதனப் பொருள் பழுதாவதையும், அவைகளுடைய தேய்மானத்தையும் (depreciation) கணக்கில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இதற்காகத்தான் 'எச்ச' என்ற வார்த்தையை இங்குப் பயன்படுத்தியுள்ளோம்.

பன்னாட்டுப் பொருளாதாரத் தொடர்பு இருப்பதால், (மேலே விளக்கியுள்ள நமது குறிக்கோளாகிய) உள்நாட்டு உற்பத்தியை அளப்பது சிக்கலாகின்றது. இங்கு முதலில் தனித்த (பன்னாட்டுத் தொடர்பற்ற) பொருளாதாரத்தின் நிலையை விளக்கிப் பிறகு இத் தொடர்புள்ள பொருளாதாரத்திற்கு வேண்டிய மாறுதல்களைப் புகுத்தலாம்.

'சமுதாயத்தின் எச்ச உற்பத்தியை' (net social product) ஆண்டுதோறும் கணக்கிட்டால், உற்பத்திப் பெருக்கத்தின்வீதம் புலனுகும். பல்வேறு துறைகளின் பங்குகளைப் பிரித்துக் காட்டுவதால், உற்பத்தி மாற்றத்தின் போக்குகள் கொண்டுள்ள மூலங்களை அறியலாம். மொத்தத்தில் நுகர்வு விகிதத்தையும், முதலீடு செய்யப்படும் விகிதத்தையும் அறிவதற்கும் இது உதவியாக இருக்கும். உற்பத்தியை அடிப்படையாகக்கொண்டு தேசிய வருமானத்தைக் கணக்கிடும்பொழுது, சமுதாயத்தின் எச்ச உற்பத்தி நிர்ணயமாகின்றது.

வருமானத்தையும் அடிப்படையாகக்கொண்டு இதை நிர்ணயம் செய்வது இரண்டாவது முறையாகும். உற்பத்தியாகும்

ஒவ்வொரு பொருளும் தனிப்பட்டவர்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அல்லது அரசியலாருக்கோ வருமானத்தைக் கொடுக்கின்றது. (சில, அரசியலார் பெறும் வருமானங்கள்மட்டுமே இரண்டுமுறை கணக்கிலடங்காமல் இருக்கின்றன.) ஏனெனில், எல்லாவித உற்பத்தியும், காரணிகளுக்கு (factors of production) அவைகளுடைய வேலைகளுக்கு ஏற்ற ஊதியத்தைக் கொடுக்கின்றது. தொழிலாளர்களுடைய வருமானம், வட்டி (interest), வாரம் (rent), இலாப ஈவு (dividend), நிறுவனங்களில் பகிர்வாகாத இலாபம் (undistributed profit) முதலியவைகளுடைய கூட்டுத் தொகையே தேசிய வருமானமாகும். பகிர்வாகாத இலாபத்தைத் தேசிய வருமானத்தில் சேர்க்கவேண்டும். ஏனெனில், இது பங்கு தாரர்களின் (share holders) கட்டாயச் சேமிப்பாகின்றது. இச் சேமிப்பு நிறுவனத்தின் கட்டாயச் சேமிப்பாவதால், அதன் மூல தனப் பொருளைப் பெருக்கும். பொதுத்துறையில் உள்ள நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களைப்போலவே பாதிக்கப்படுகின்றன. அவைகளுடைய இலாபமும், எச்ச ஊதியமும் தேசிய வருமானத்தில் சேருகின்றன. உற்பத்திக் காரணிகளுடைய ஊதியங்கள் (பகிர்வாகாத இலாபம் உள்பட) யாருக்காவது சொந்தமாக இருக்கவேண்டும். ஆகையால், அவை சமுதாயத்தின் எச்ச உற்பத்தியில் சேருகின்றன.

உற்பத்தியான பொருள்கள் எல்லாம் நுகர்வுக்காகவோ அல்லது முதலீட்டுக்காகவோ வாங்கப்படுகின்றன. (உற்பத்தி செய்பவன் தன் பொருளைத் தானே வாங்கலாம்.) ஆகையால், தனியாரும், நிறுவனங்களும் (பொதுத்துறை நிறுவனங்கள் உள்பட) செய்யும் நுகர்வுச் செலவு, சமுதாய எச்ச உற்பத்திக்கும் மொத்தத் தனி வருமானங்களும் பகிர்வாகாத இலாபங்களும் சேர்ந்த கூட்டுத் தொகைக்கும் சமமாக இருக்கும். பெரிய புராதனப் பகுதியைக் கொண்டுள்ள நாட்டில் உற்பத்தியாளர்கள், எந்த அளவு உற்பத்தியாளர்கள் தம் பொருள்களைத் தாமே வாங்குகின்றனர் என்பதை நிர்ணயம் செய்வது கடினம். இது செலவு வழி முறையாகும். எல்லாவிவரங்களும் கிடைத்தால், தனித்துள்ள பொருளாதாரத்தில் இந்த மூன்று வழிகளும் ஒரே மொத்தத் தொகையைக் கொடுக்கும்.

இங்கு ஓர் உண்மையைக் குறிப்பிடவேண்டும். பணத்தைச் சேமிப்பவனே அதை இலாபகரமாக முதலீடு செய்யவேண்டுமென்பதில்லை. உதாரணமாக ஒரு விவசாயி நகை வாங்கலாம்; அதை விற்றவன் விற்பனைத் தொகையை முதலீடு செய்யலாம். சேமிப்பை ஒருவன் பாங்கில் (bank) டெபாசிட்டாக (deposit) வைத்துக் கொள்ளலாம். பாங்கு அத் தொகையை முதலீடு செய்யலாம் அல்லது முதலீடு செய்வோருக்குக் கடனைக் கொடுக்க

லாம். ஒரு விவசாயி பணத்தைப் பதுக்கிவைத்தால் (hoarding) இதை இலாபம் அல்லது வட்டிபெறும் முதலீடாகக் கருதக்கூடாது.

மேலே குறிப்பிட்ட மூன்றும் (தேசிய வருமானத்தைக்) கணக்கிடும் மூன்று முறைகளாகும்: (i) உற்பத்தி முறை (production or inventory method): உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தையும் கணக்கில் சேர்த்துக் கூட்டுவது, (ii) வருமானமுறை: தனியார் நிறுவனங்கள், அரசியலார் வருமானங்களைக் கூட்டுவது, (ஒரே வருமானத்தை இருமுறை கூட்டுவது தவிர்க்கப்படவேண்டும்.) (iii) செலவு முறை: நுகர்விலும், எச்ச முதலீட்டிலும் செலவாகும் எல்லாச் செலவினங்களையும் கூட்டுவது.

முதல் இருமுறைகள்மூலம் கிடைக்கும் விவரங்கள் சரியான வையா என்று சோதிக்கவோ அல்லது அவையிட்ட இடைவெளி களை நிரப்பவோ இந்த முறையைப் பின்பற்றுவது வழக்கம்.

தேசிய வருமானத்தைக் கணக்கிட எந்த முறையைக் கையாண்டாலும், கீழ்க்கண்ட இடர்ப்பாடுகள் ஏற்படலாம்: போதிய விவரங்கள் கிடையாமை, பண அளவை ஏழுப்பும் குறை பாடுகள், இருமுறை கணக்கில் சிலவற்றைச் சேர்த்துக்கொள்வது, அரசியலாரின் செயல்கள், பன்னாட்டு வர்த்தகமும் மற்ற அயல் நாட்டுத் தொடர்புகளும் எழுப்பும் பிரச்சினைகள்.

பூரணமான குறைவற்ற விவரங்களை ஒரு நாடும் கொண்டிருக் காது. ஆனால், முன்னேற்றமடைந்த நாடுகள், வளர்ச்சியடையாத நாடுகளைவிடச் சிறந்த விவரங்களைக் கொண்டிருக்கின்றன. இங்கி லாந்தில் பெரும்பாலான மக்களுடைய வருமானங்கள்பற்றிய அதிகாரபூர்வமான விவரங்களையும், அதிகாரபூர்வமற்ற விவரங்களை யும் அந்த நாடு கொண்டிருக்கின்றது. தொழிலாளர்பற்றிய இலாக்கா, கூலி (wage) பற்றிய விவரங்களைச் சேகரிக்கின்றது. மக்கள் தொகையின் மற்றப் பகுதியிலுள்ளவர்களுடைய (நிறுவனங் கள் உள்பட) விவரங்கள், வருமான வரிபற்றிய நமூனாக்கள்மூலம் கிடைக்கின்றன. சில்லறை விற்பனைபற்றிய குறிப்புகளையும், சில குறிப்பிட்ட சேமிப்பு வழிகள்பற்றிய குறிப்புகளையும்கொண்டு மேலே குறிப்பிட்ட கணக்குகளில், விட்டுப்போன இடங்களைப் பூர்த்தி செய்யலாம். பின்தங்கிய நாடுகளில் கிடைக்கும் வரு மானம்பற்றிய விவரங்களைவிடச் சிறந்ததாக இந்த முறை இருக் கின்றது. ஆனால், எந்த முறையைக் கையாண்டாலும் மேலே குறிப்பிட்ட இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. இவைகளைப் பிற கு விவரமாக விளக்கலாம்.[1]

[1] இங்கிலாந்தில் பின்பற்றும் முறைகளைப்பற்றிய விவரங்களை, எஃப். சி. பென்ஹாம் (F. C. Benham) எழுதிய 'பொருளியல்' (Economics) (6வது பதிப்பு)

வளர்ச்சியடையாத நாடுகளில் வருமான முறைக்கு வேண்டிய பல விவரங்கள் கிடைக்கவில்லை; அல்லது கிடைக்கும் விவரங்கள் மக்கள் தொகையின் ஒரு பகுதிக்கே பொருத்தமாக இருக்கின்றன. உற்பத்திக் கணிப்பு (census of production)போன்ற புள்ளி விவரங்களும் மேல்நாடுகளில் கிடைக்கின்றன. உற்பத்திமுறைக்கு இவை பயனுகின்றன. எனவே, நடைமுறையில் ஒரு கலப்புமுறை கையாளப்படுகின்றது. உற்பத்திமுறையைக் (குறிப்பாக, விவசாயத்துறையில்) கையாளுகின்றனர். ஆனால், வருமானம்பற்றிய விவரங்கள் கிடைக்குமிடத்திலெல்லாம் அவைகளைப் பயன்படுத்துகின்றனர். பல இடங்களில் உற்பத்திமுறைக்கு வேண்டிய விவரங்கள் முழுவதும் கிடைக்கவில்லை. மாதிரிக் கணிப்பு (sample inquiries) மூலமும், மறைமுக வழிகள் மூலமும் இவைகளைச் சேகரித்துக்கொள்கின்றனர்.

உதாரணமாக இந்தியாவில் வருமான வரி (income tax) செலுத்துவோரின் எண்ணிக்கை ½ மில்லியனுக்கும் குறைவாகவும், சிறந்த அமைப்புப்பெற்ற தொழிற்சாலைகளில் பணிபுரிவோரின் எண்ணிக்கை, ஒரு சில மில்லியன்களாகவும் இருக்கின்றன. ஆகையால் விவசாயத்துறையில் உற்பத்திமுறை கையாளப்படுகின்றது. குறிக்கப்பெற்ற வருமானம்பற்றிய விவரங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், விவசாயத்துறை நீங்கலாக மற்றத் துறைகளில் மக்கள் வருமானம்பற்றி (சாதாரணமாக மாதிரிக் கணிப்புமூலம்) விசேஷமான கணக்கெடுப்பு வேண்டும். பாகிஸ்தானும் இதே முறைகளைப் பின்பற்றுகின்றது. புள்ளி விவரச் சேகரிப்பில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருந்தபோதிலும், மிகவும் முக்கியமான விவரங்களில்கூடத் துல்லியமின்மையும் குறைபாடுகளும் இருக்கின்றன.

பொருளாதாரத்தின் புராதனப் பகுதிகளைப்பற்றி முன்பே விளக்கினேம். இவைகளுடைய சிறப்பியல்பும் (விவரங்களின்) துல்லியமின்மைக்குக் காரணமாகும். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் மனைவிகள், உறவினர் முதலியோருடைய பணிகளை (அளக்க முடியாதவை என்ற காரணத்தினுல்) கணக்கில் சேர்ப்பதில்லை. ஆனால், வளர்ச்சியடையாத நாடுகளில் இவை ஆற்றும் பணி மேல்நாடுகளில் இவைகளுடைய பங்கைவிட மிகுதியாக இருக்கின்றது. மக்கள் தொகைக் கணிப்பு ஆண்டு அல்லது அதை அடுத்த ஆண்டுகள் நீங்கலாக மற்ற ஆண்டுகளைப் பொறுத்தவரையில், தலா வருமானம் (per capita income) பற்றிய விவரங்கள் குறை

என்ற நூலிலும், ஜே. ஆர். ஹிக்ஸ் (J. R. Hicks) எழுதிய 'The Social Frame work' (3 ஆவது பதிப்பு) 1960 என்ற நூலிலும் காணலாம்.

பாடுள்ளவையாக இருக்கின்றன. ஏனெனில், மக்கள் தொகை உயர்வுபற்றிய விவரங்கள் நம்ப முடியாதவையாக இருக்கின்றன. வீடுபோன்ற பல்வகைச் சொத்துகளிலிருந்து கிடைக்கும் வருமானங்களை மதிப்பிடுவதற்குக் கிடைக்கும் ஆதாரங்கள் திட்டவட்டமாக இருப்பதில்லை. இத்தகைய 'வருமானங்களைப் பெறுவோரை ஒரு குறிப்பிட்ட தொழிலில் அமர்ந்திருப்போராக' நாம் கருதமுடியாது.[1]

தேசிய வருமானத்தை மதிப்பிடுவதில் பணத்தை அளவுகோலாகப் பயன்படுத்துவதால், அடுத்த இடர்ப்பாடு தோன்றுகிறது. வருமானச் செலவுமுறைகள் பணத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு பொருள்களுடைய மதிப்பையும் பணிகளுடைய மதிப்பையும் பணத்தைக்கொண்டே கணக்கிட வேண்டும். பணிபுரிவோர் பெறக்கூடிய ஊதியத்தை அல்லது விலையைக்கொண்டு, அவர்கள் பணியை அளப்பதைச் சிலர் குறை கூறுகின்றனர். பொருள்களைக் கணக்கிடும்பொழுதுங்கூட இதே குறையைக் காணலாம். பொருள்களையும் பணிகளையும் சமுதாயம் மதிப்பிடும்பொழுது, அவைகளுடைய தேவையும் (demand), அளிப்புமே (supply) மதிப்பை நிர்ணயிக்கும் என்பதை உணர வேண்டும். (அதாவது, அவைகளுடைய கிடைப்பதற்கு அருமையாக இருக்கும் தன்மையும் (scarcity) செயல்படுத்தும் தேவையுமே (effective demand) மதிப்பை நிர்ணயம் செய்கின்றன.) பண்டத்தின் 'உண்மையான பயன்' (intrinsic utility) அதன் மதிப்பைப் பாதிக்கவில்லை. நடைமுறையில் நாம் காணும் இவ் வுண்மைகள் விரும்பத் தகாதவை என்று தோன்றினால், குறிப்பிட்ட நடவடிக்கைகள்மூலம் இவைகளை மாற்றவேண்டும்.

பணத்தைக்கொண்டு பண்டங்களை மதிப்பீடு செய்வதில் ஏற்படும் இடர்ப்பாட்டுக்கு ஒரு காரணம் இருக்கின்றது. பணத்தின் மதிப்பே—அதாவது விலைவாசி (price level)—மாறுகின்றது. குறிப்பிட்ட பண்டங்களின், பணிகளின் தொடர்பு விலைகளும் மாறுகின்றன. எனவே, ஓராண்டில் சமுதாயத்தின் உற்பத்தியை அவ்வாண்டின் விலைவாசியைக்கொண்டு மதிப்பீடு செய்து. விலைகள் மாறிய பிறகு மற்றோர் ஆண்டின் உற்பத்தியையும் இப்படியே நிர்ணயித்து, இவ் விரண்டு ஆண்டு உற்பத்திகளையும் ஒப்பிடும் பொழுது உண்மையான நிலை புலப்படுவதில்லை. விலை மாற்றத்திற்கு

[1] வி. கே. ஆர். வி. (V. K. R. V. Rao) எழுதிய, 'பிரிட்டிஷ் இந்தியாவின் தேசிய வருமானம்' (The National Income of British India)—1931-2; 1440, பக்கம் 32. ராவ் அவர்களின் மதிப்பீட்டை, தற்காலத்திய முறையில் செய்யப்பட்ட முதல் மதிப்பீடு என்று கருதலாம். இதை அடுத்துத் தயாராகும் எல்லா மதிப்பீடுகளும் இதே முறையைப் பின்பற்றுகின்றன.

தகுந்த மாறுதலைச் செய்யாவிடில், உண்மையான போக்கை நாம் அறிய முடியாது. விலைக் குறியீட்டெண்ணைக் (price index) கொண்டுதான் இதை நாம் சரிக்கட்டலாம். ஆனால், இதுவும் ஓரளவே பயன்படும். (ஏனெனில், குறியீட்டெண் ஒன்றும் குறை வற்றதாக இருக்காது.) இதை எப்படி நாம் செய்யலாம் என்பது இவ் வதிகாரத்தின் பகுதி 1-ல் விளக்கப்பெற்றிருக்கிறது.

உற்பத்திமுறையைக் கையாளும்பொழுது, நிலத்தின் விற்பனை யாகும் விவசாயப் பொருள்களின் விலைகளை எடுத்துக்கொள்வதா அல்லது சில்லறை விலைகளை எடுத்துக் கொள்வதா என்பது மேலும் ஒரு பிரச்சினையாகும், சில்லறை விலைகளை எடுத்துக்கொண்டால் அவைகளுள் மறைமுக வரிகளும் (indirect taxes) அடங்குகின்றன. தேசிய வருமானம் மார்க்கட்டு விலையில் கணக்கிடப்பட்டது என்று கூறுவர். மறைமுக வரி தவருமல் விலைகளை உயர்த்துவதால், உற் பத்தியின் மதிப்பு மிகுதியாகத் தோன்றும்.[1] ஆகையால், தேசிய உற்பத்தியின் உண்மை மதிப்பைக் கண்டுபிடிக்கும்பொழுது மறைமுக வரிகளை நீக்கிவிட்டவேண்டும். இப்படிக் கணக்கிடப்படும் தேசிய வருமானம் காரணி விலைகளில் கணக்கிடப்படுகிறது.

எதையும் இருமுறை கணக்கில் சேர்த்துக்கொள்வது தவிர்க் கப்படவேண்டும். மறைமுக வரிகள் கணக்கில் சேரும்பொழுது இப் பிரச்சினை எழும். அரசியலார் செயல்கள் எழுப்பும் பிரச்சினை களை ஆராயும்பொழுது இதை நாம் பார்க்கலாம். ஆனால், இதற்கு முன் ஒன்றைக் குறிப்பிடவேண்டும். உற்பத்தி முறையைக் கையாளும்பொழுது, பொருளுற்பத்தியால் கூடும் எச்ச மதிப்பை மட்டுமே கணக்கில் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், கச்சாப்பொருள்கள் (raw materials), இடைநிலைப் பொருள்கள் (intermediate products) முதலியவை ஓர் உற்பத்தியாளனிடமிருந்து மற்றொருவனுக்கு மாறும்பொழுது, ஒரு முறைக்குமேல் கணக்கில் சேரக்கூடாது. ஒரு நிறுவனம் அல்லது தனி உற்பத்தியாளன் உற்பத்தியைக் கணக்கிடும்பொழுது அவர்கள் வாங்கிய பொருள் களின் அடக்கச் செலவைக் கழித்து, அவர்களுடைய உற்பத்தியின் மொத்த மதிப்பைக் கணக்கிடவேண்டும். உதாரணமாகத் தன் குடிலிலேயே தோல் பதனிடுவோன், வேலைக்கு வேண்டிய தோல், சுண்ணாம்பு, விதைகள், எண்ணெய், எரிபொருள் முதலிய பொருள் களை வாங்கிய பின்பே, தோல் பதனிடும் வேலையைத் துவக்குவான். இப் பொருள்களின் மதிப்பை இவைகளை உற்பத்தி செய்வோருடைய வருமானமாகக் கணக்கிடவேண்டும். பதனிட்ட தோல்களின் மதிப்பில், கச்சாப்பொருள்கள், எரிபொருள் முதலியவற்றின்

[1] நான்காவது அதிகாரத்தில் II A, II B படங்களைப் பார்க்கவும்.

மதிப்பு 57·2 சதவீதத்திற்குக் குறையாமல் இருக்கின்றது என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.[1]

அரசியலார் செயல்கள் பல பிரச்சினைகளைக் கிளப்புகின்றன. குறிப்பாக இருமுறை கணக்கில் சேருவது தவிர்க்கப்படவேண்டும். இவைகளுள் சிலவற்றையே நாம் இங்கு விளக்கலாம்.

கணக்கின் இருபுறங்களிலும் தோன்றும் மாற்றுக் கட்டணம் (transfer payment) மிக முக்கியமானவைகளுள் ஒன்றாகும். அரசுக்கு மக்கள் செலுத்தவேண்டிய வரிகள், கட்டணங்கள் ஒரு புறமிருக்க, மற்றொருபுறம் அரசு மக்களுக்குச் செலுத்தவேண்டிய பொது மாற்றுக் கட்டணங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் செலுத்தவேண்டிய உதவித்தொகை (subsidy), மானியங்கள் (grants) முதலியவைகளும், இலவச ஆரம்பக்கல்வி, தண்ணீர் வசதியளித்தல்போன்ற பணிகளும் இருக்கின்றன. நண்பர்களுக்கும், உறவினருக்கும் சிலர் இத்தகைய மாற்றுக் கட்டணங்களையும் பணிகளையும் அளிக்கலாம்.

இத்தகைய பணிகளுக்கும், தொகைகளுக்கும் மக்கள் ஈடாகப் பொருள்களையோ அல்லது பணத்தையோ கொடுக்காவிடில் இவைகளைத் தேசியக் கணக்கில் சேர்த்துக்கொள்ளக்கூடாது.

வரிகளை நாம் முதலில் கவனிப்போம். வருமான வரிகளுக்குட்பட்ட வருமானங்களை, இவ் வரிகள் செலுத்தப்படுவதற்கு முன் இருந்த நிலையில் கணக்கில் சேர்த்துக்கொள்கிறோம். நேர்முக வரியை (direct tax) அரசின் வருமானமாகச் சேர்த்தால், நாம் இதை இரு முறை கணக்கில் சேர்க்கின்றோம். வரி செலுத்துவதற்கு முன் வருமானங்களைத் தொழில் வருமானமாகவோ அல்லது மக்களுடைய தனி வருமானமாகவோ சேர்த்துக்கொள்ளலாம்; ஏனெனில், அவை உற்பத்திக் காரணிகளின் ஊதியமாகவே தோன்றின.

மறைமுக வரிகளை எவ்வாறு பாவிக்கவேண்டும் என்பதுபற்றிய வாதங்கள் அதிக சிக்கலாக இருக்கின்றன. வரிகளுக்குட்பட்ட பொருள்களை உயர்ந்த விலைகள் கொடுத்து, நுகர்வோர் வாங்குகின்றனர். உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் செய்யும் உற்பத்தியின் மதிப்பை இது மிகைப்படுத்திக் காட்டும். உற்பத்தியின் மதிப்பை மேலே கூறியபடி காரணி விலையில் (factor price) மதிப்பிடவேண்டுமென்றால், வரிகளை மொத்த உற்பத்தியின் மதிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும். தேசிய வருமானத்தைக் கணக்கிடும்

[1] கேதர்நாத் பிரசாத் (Kedarnath Prasad) எழுதிய, 'Technologica Choice Under Development Planning' (Bombay–1963) என்ற நூலைப் பார்க்கவும்.

பொழுது மறைமுக வரிகளே அரசியலாரின் வருவாயிலிருந்து கழித்துவிடவேண்டும் என்று சாதாரணமாகக் கூறுவர். வரித் தொகையை அரசு, அரசாங்கப் பணியில் அமர்ந்திருப்போருக்குக் கூலியாகக் கொடுக்கும். அவர்களுடைய கூலியையும், சம்பளத்தையும் 'அடக்கச் செலவாக'க் (cost) கருதுவதால், வரித்தொகையை அரசியலாரின் வருவாயிலிருந்து கழித்துவிடலாம் என்று கூறுவர். ஆனால், இவை தேசிய வருமானத்தில் சேர்ந்திருக்கும்.[1] பொதுவாக அரசாங்கம் நிர்வாகத்திற்கும் பொதுப்பணிக்கும் செய்யும் செலவு ஏற்படுத்தும் உற்பத்தியை, இத் துறைகளில் பணிபுரிவோரின் வருமானத்தைக்கொண்டும், இருப்புப்பாதை, நாட்டுடைமையான (nationalised) தொழில்கள், தனியாருக்கு அரசு கொடுத்த கடனுதவி முதலியன செய்யும் உற்பத்திப் பெருக்கத்தை இலாபம், கிடைக்கும் வட்டி போன்றவைகளைக் கொண்டும் மதிப்பிடலாம்.

உற்பத்திக்காக மக்கள் உள்நாட்டில் கொடுத்த கடனே மேலும் ஒரு மாற்றுக் கட்டண உதாரணமாகக் காட்டலாம். (உற்பத்தி என்பதை இங்கு விரிவான பொருளைக் குறித்துப் பயன்படுத்துகிறோம்.) இது ஒரு நூதனமான முதலீட்டு வகையாகும். இது தனித்த சேமிப்போரிடமிருந்து முதலீடுசெய்யும் திறனை அரசாங்கத்திற்குத் திருப்புகிறது. இந்த முதலீட்டை, முதலீட்டுப் படிவத்தில் இருமுறை சேர்க்கக்கூடாது. 'உற்பத்திக் கடனுக்கு'க் (productive loan) கொடுக்கப்படும் வட்டி, கடன் கொடுத்தோரின் வருமானமாகத் தோன்றும். ஆகையால், இதை வர்த்தகம் அல்லது உற்பத்திசெய்யும் பொது நிறுவனத்தின் வருமானத்திலிருந்து கழித்துவிடவேண்டும். எனவே, இலாபத்தைமட்டுமே தேசிய வருமானத்தைக் கணக்கிடும்பொழுது சேர்க்கவேண்டும். பொது நிறுவனங்களின் வருமானம், வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்தக் கூடப் போதவில்லை என்றால், அரசின் இலாபம் எதிர்மறையிலிருக்கும்.

போர்க் கடனுக்குச் (war loans) செலுத்தும் வட்டியும், கடன் கொடுத்தோரின் வருமானமாகத் தோன்றுகிறது. ஆனால், இதைக் (முன்னர்க் குறிப்பிட்டதைப்போல) கழிப்பதற்கு வருமானம் இல்லை. இலாப ஈவைப் (dividend) பகிர்ந்து கொடுத்தபிறகு இருக்கும் எச்ச லாபத்தை நிறுவனங்கள் கொண்டிருக்கின்றன. ஆனால், அரசுக்கு இவ் வெச்சம் எதிர்மறையில் இருக்கின்றது. இதை ஈடு செய்வதற்கு அரசியலார் வரி வசூல் செய்கின்றது' இந்தியாவில் நிலைமை சிக்கலாக இருக்கின்றது. உள்நாட்டுப் பொதுக்கடன்

[1] எல்லாப் பொருளியலாரும் இதை ஏற்றுக்கொள்வதில்லை.

உற்பத்திக் கடனுகவும் (productive debt), உற்பத்தியற்ற கடனுகவும் (unproductive debt) இருக்கின்றது.[1]

மக்களிடம் எதையும் பெற்றுக்கொள்ளாமல் அரசு அவர்களுக்குச் செலுத்தும் மாற்றுக் கட்டணத்தை வரித்தொகையைக் கொண்டே செலுத்துகிறது. தனியாரும் இத்தகைய கட்டணத்தைச் செலுத்துகின்றனர். பொதுப்பணியாளர்கள் தொண்டினை மதிப்பிடும்பொழுது அதன் அடக்கச் செலவையே நாம் கணக்கில் சேர்த்துக்கொள்ளவேண்டும். அவர்களுடைய வருமானத்தைத் தேசிய வருமானத்தில் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்வோம். இங்குக் குறிப்பிட்டவைகளைப்போன்ற பல திருப்பங்களையும், மாற்றங்களையும் செய்துகொள்ளவேண்டும். ஆனால், அவை அனைத்தையும் இங்கு நாம் குறிப்பிடமுடியாது.

பன்னாட்டு வர்த்தகம், பிற நாடுகளுடன் கொள்ளும் பொருளாதாரத் தொடர்புகள் போன்றவைகளுக்காகச் செய்துகொள்ள வேண்டிய சில மாற்றங்களை இறுதியில் குறிப்பிடவேண்டும். பிற நாடுகளுடன் தொடர்புகொண்டுள்ள பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் புலனாகும் (visible) பொருள்களும் பணிகளும், புலனாகாப் பொருள்களும் பணிகளும் ஓரளவு ஏற்றுமதியாகும். ஆனால், உள்நாட்டு நுகர்வுக்கும் முதலீட்டுக்கும் பயன்படாதபோதிலும் இவைகளும் தேசிய வருமானத்தில் சேருகின்றன. ஆனால், இதற்கு ஈடாக இறக்குமதிப் பொருள்கள் கிடைக்கின்றன. சமுதாயத்தின் எச்ச உற்பத்தியுடன் (net solid products) கூட்டவேண்டிய அல்லது அதிலிருந்து கழிக்கவேண்டிய தொகை எது என்பதை, இறக்குமதியின் மதிப்பு அதிகமாக இருக்கின்றதா அல்லது ஏற்றுமதியின் மதிப்பு அதிகமாக இருக்கின்றதா என்பதே பாதிக்கின்றது. எனவே, ஏற்றுமதியாகாத உற்பத்தியும், (இறக்குமதி ஏற்றுமதியைவிட மிகுதியாக இருப்பின்) அதன் மதிப்பும் (அது குறைவாக இருந்தால் அது நீங்கிய) எச்சத் தொகையுமே சமுதாயத்தின் எச்ச உற்பத்தியாகும். இந்தியாவைப் பொறுத்தவரை, திட்டமிட்ட மூன்றேற்றத்தில், இறக்குமதியின் மதிப்பு ஏற்றுமதியின் மதிப்பைவிட மிகுதியாக இருக்கின்றது. இதை நாம் கழித்துவிடவேண்டும். 'நுகர்வுக்கும் முதலீட்டுக்கும் கிடைக்கும் மொத்தப் பொருள்களுக்கும் பணிகளுக்கும்', 'சமுதாய எச்ச இலாபத்திற்கும்' இடையே பன்னாட்டுவர்த்தகமும், பொருளாதாரத் தொடர்புகளும் ஏற்படுத்தும்

[1] ஜே. ஆர். ஹிக்ஸ்(J. R. Hicks) The Social framework, 3 ஆவது பதிப்பு 1960, p. 157 இங்குப் பேராசிரியர் ஹிக்ஸ் இங்கிலாந்தின் தேசியக்கடனைக் குறிக்கின்றனர். இதைப்போர்க்கடனுடன் சேர்க்கின்றார். பிரிட்டிஷ் இந்தியாவின் தேசிய வருமானம் 1931-2 என்ற நூலில் திரு. வி. கே. ஆர். வி. ராவ், 182 ஆவது பக்கத்தில் 1931-32 வது ஆண்டுகளுக்குப் பொருத்தமாக இக் கருத்தை ஆராய்கின்றார்.

வேற்றுமையை இங்குக் குறிப்பிடவேண்டும். இந்தியாவைப் போல் எங்கு இறக்குமதியின் மதிப்பு, ஏற்றுமதியின் மதிப்பைவிட மிகுதியாக இருந்தாலும் அங்கு உற்பத்தியாகும் பொருள்களையும், பணிகளையும்விட மிகுதியான அளவு நுகர்வுக்கும் முதலீட்டுக்கும் கிடைக்கும்.

உபரியாக வருபவை இலவசமாகவோ, அல்லது மானியத் தொகையாகவோ இருந்தால் ஒரு தொல்லையும் விளையாது. ஆனால், இவை கடனாக இருந்தால், இவைகளை வட்டியுடன் திருப்பிக் கொடுக்கவேண்டும். அயல்நாட்டு செலுத்துதல் நிலை (balance of payments) மேலும் மேலும் பாதகமாகும். உள்நாட்டு உற்பத்தி மிகுதியடைந்தாலன்றி, வட்டியையோ, முதலையோ அல்லது இரண்டையுமோ, மேலும் கடன் வாங்காமல் திருப்பிக் கொடுப்பது கடினமாகும். சுருங்கக் கூறின், அயல்நாட்டுச் செலுத்தல் நிலையில் ஒரு பெரும் நெருக்கடி ஏற்படும்.

பன்னாட்டுப் பொருளாதாரத் தொடர்பு வர்த்தகமாகமட்டும் இருப்பதில்லை. இலவசத் தொகையும், கடனும் கொடுக்கப்படலாமென்பதையும், இந்தியா ஏற்றுமதியைவிட அதிகமாக இறக்குமதியே செய்தது என்பதையும் முன்பே குறிப்பிட்டோம். இதைத் தவிரச் சில இந்தியர்கள் வெளிநாடுகளிலும், சில அன்னியர் இந்தியாவிலும் முதலீடு செய்திருப்பதால், வட்டியும். இலாப ஈவும் வெளிநாடுகளுக்குச் செலுத்தப்படவேண்டும்; வெளிநாடுகள் இந்தியாவுக்கும் செலுத்தவேண்டும். நாம் பெறும் தொகையைவிட, மிகுதியான தொகையை வட்டியாகவும் இலாப ஈவாகவும் அயல்நாடுகளுக்குச் செலுத்தினால், இரு தொகைகளுக்கும் உள்ள வேறுபாட்டைச் சமுதாயத்தின் உற்பத்தியுடன் கூட்டவேண்டும். இது மாறி இருந்தால் தொகையைக் கழித்துவிடவேண்டும். சிலர் வெளிநாடுகளுக்குக் கடன் கொடுக்கின்றனர். சிலர் வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்குகின்றனர். முன் குறிப்பிட்டது பின் குறிப்பிட்டதைவிட மிகுதியாக இருந்தால், இரு தொகைகளுக்கும் உள்ள வேறுபாட்டைச் சமுதாயத்தின் உற்பத்தியில் சேர்க்கவேண்டும். இது மாறி இருந்தால் தொகையைக் கழித்துவிடவேண்டும்.

மக்களிடமிருந்து டெபாசிட்டுத்தொகையைப் பெறும் உள்நாட்டுப் பாங்குகள் (banks) அயல்நாட்டுப் பாங்குகளிடமிருந்து (வேண்டுமென்றால்) 'பன்னாட்டுப் பணத்தை' வாங்கிக்கொள்ளலாம். இதனால் நாடு பணத்தை இழக்கின்றது. ஆனால், பொருள்களும் பணிகளும் நாடு கடக்கவில்லை. ஆகையால், நாம் இதைப் புறக்

கணிக்கலாம்.[1] ஆனால், உற்பத்திக்காகவோ அல்லது செலாவணியாகப் பயன்படுத்துவதற்காகவோ ஒரு நாடு பொன்னை இறக்குமதி செய்தால், இதை இறக்குமதியாகப் பாவித்துச் சமுதாய உற்பத்தியிலிருந்து கழித்தல்வேண்டும். (இங்குப் பொன் இறக்குமதி சட்ட பூர்வமானது என்று நாம் கற்பனைசெய்து கொள்கின்றோம்.) உள் நாட்டில் பதுக்கல் (hoarding) எவ்வாறு இலாபத்தையோ அல்லது வட்டியையோ அளிக்காதோ அதேபோல், பொன் இறக்குமதியை வட்டி அல்லது இலாபம் அளிக்காத முதலீடாகவும் கருதலாம். இது எச்ச முதலீட்டைப் பெருக்காது.

பொதுவாகக் கூறும்பொழுது பன்னாட்டுப் பொருளாதார உறவு இருப்பதால், தேசிய வருமானத்தை மதிப்பிடும்பொழுது சில மாறுதல்கள் செய்யவேண்டும். அதாவது எல்லாவகை ஏற்றுமதியையும் தேசிய வருமானத்தில் கழித்துவிடவேண்டும்; இறக்குமதியைக் கூட்டவேண்டும்.

[1] ஜே. ஆர். ஹிக்ஸ் (J. R. Hicks), 'The Social Framework'. பக்கம், 135.

8. வேலையின்மையும் அமித மக்கள் தொகையும்

A. பின்தங்கிய நாடுகளில் வேலையின்மை

B. அமித மக்கள் தொகையின் பிரச்சினைகள்

C. முடிவுகள்

A. பின்தங்கிய நாடுகளில் வேலையின்மை

இந்தியாவிலும், இந்தியாவைப்போன்ற பொருளாதார இயல்பு களைக்கொண்ட வளர்ச்சியடையும் மற்ற நாடுகளிலும் (பலவிதங் களில் தோன்றும்) வேலையின்மை ஒரு பெரிய பிரச்சினையாகும். இதை முன் அதிகாரங்களில் குறிப்பிட்டுள்ளோம். மீண்டும் பிறகு இதைப் பார்ப்போம். கீழே விளக்கப்பெற்றிருப்பதைப்போல், இது அமித மக்கள் தொகையுடன் தொடர்பு கொண்டிருக்கின்றது. அமித மக்கள் தொகையைப்பற்றி மற்ற அதிகாரங்களில் குறிப்பிட் டுள்ளோம். மற்றச் சந்தர்ப்பங்களில் பார்ப்பதைவிட இதை இவ் வதிகாரத்தில் விவரமாகக் காணலாம்.

வேலையின்மை மூன்று விதங்களில் தோன்றலாம்: வேலை யின்மை (அல்லது முழு வேலையின்மை), வேலைக் குறைவு (under employment), மறைந்துள்ள வேலையின்மை (disguised unemployment), இந்த மூன்று விதங்களும் வேலைசெய்ய விரும்பும், அதற்கு வேண்டிய ஆற்றல் கொண்டவர்களையே குறிக்கும். இதைக் கட்டாய வேலையின்மை (involuntarily unemployed) என்று குறிப்பிடுவர். வேலை செய்யமுடியாமல் பிறரைச் சார்ந்திருக்கும் மிகவும் இளையவர்கள், மிகவும் வயதானவர்கள், பயிற்சி பெறு வோர், மாணவர்கள், உறவினரிடமிருந்தோ, சொத்திலிருந்தோ வருமானத்தைப் பெறுவோர், இத்தகைய வருமானத்தைப் பெருக்க முடியாதவர்—முதலியோர் இதில் (கட்டாய வேலையின்மையில்) சேர்க்கப்படவில்லை.

நீண்ட காலத்திலோ அல்லது குறுகிய காலத்திலோ வருமானம் அளிக்கக்கூடிய தொழிலில் இல்லாத ஒருவனை வேலையில்லாதவன்

என்று குறிப்பிடலாம். குறை வேலையிலிருப்பவன் ஒரு தொழிலிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலிலோ ஈடுபட்டிருக்கலாம். ஆனால், அவன் தொடர்ந்து வேலையில் அமர்ந்திருப்பதில்லை. அவன் ஒரு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்களோ அல்லது ஓராண்டில் சில வாரங்களோ வேலையில் அமர்ந்திருக்கலாம். அவன் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருந்தால், ஒரு நாளில் சில மணி நேரங்கள் வேலை செய்யலாம் அல்லது தேவை ஏற்படும்போது, சில பருவங்களிலேயே வேலை செய்யலாம். அவன் பயிற்சிபெறுத தொழிலாளியாகவோ அல்லது தற்காலிக விவசாயத் தொழிலாளியாகவோ பணியாற்றலாம். ஒருவன் முழு வேலையிலிருந்தபோதிலும் அவனுடைய திறமை, பயிற்சி, அனுபவம் முதலியவற்றிற்குத் தகுந்த வேலையில் அமராமலிருந்தால் இதை மறைந்துள்ள (disguised) வேலையின்மை என்று கூறலாம்.[1] அவனுக்கு இயல்பாகக் கிடைக்கக்கூடிய ஊதியத்தைவிட, அவனுடைய வேலை குறைவான ஊதியத்தைக் கொடுக்கும்.

அமித மக்கள் தொகை உள்ள நாடுகளில் மறைந்துள்ள வேலையின்மை காணப்படுகின்றது. இந்த நாடுகளில் பட்டதாரிகளும், மற்றப் பயிற்சி பெற்றவர்களும் (மெட்ரிகுலேஷன் தேர்வைப் போன்ற) தாழ்ந்த தகுதியுடையவர்கள் செய்யக்கூடிய வேலையைச் செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றனர். இதனால் காலம், பொருள், அறிவு முதலியன வீணாகின்றன. இதன் விளைவாக அதிருப்தியும் ஏமாற்றமும் ஏற்படுகின்றன. இப்படிப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைப் பொருத்தமில்லாத கல்வி மிகுதியாக்கும். தொழில் நுணுக்க வல்லுநர்கள் வேண்டியபடி கிடைக்காமல் இருக்கும்பொழுது, பி. ஏ, பட்டம் வாங்கியவரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம்.

மேலே குறிப்பிட்ட மூன்று வகை வேலையின்மையும் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் இருக்கின்றன. ஆனால், ஒவ்வொரு வகையிலும் எத்தனை பேர் இருக்கின்றனர் என்பதையும், குறிப்பாக எந்த அளவு வேலைக்குறை இருக்கின்றது என்பதையும் மறைந்துள்ள வேலையின்மை எந்த அளவு இருக்கின்றது என்பதையும் கூற முடியாது.

ஏழாவது அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளபடி, ஒரு பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதன் முதலில் அது எந்த

[1] சிலர் இதை வேலைக் குறைவுக்கு நிகராகக் கருதுகின்றனர். ஆனால், இவ் விரண்டுக்கும் ஒரு வேற்றுமை காட்டுவது நலம்.

அளவில் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். எனினும், புள்ளி விவரத்தில் உள்ள குறைபாட்டை நீக்குவதற்கு இங்கு நாம் ஒன்றும் செய்யமுடியாது.

வேலைத் தகவல் நிலையத்தில் (labour or employment exchange) பதிவானவர்களின் எண்ணிக்கையைக்கொண்டே வேலையின்மை கணக்கிடப்படுகின்றது. வளர்ச்சியடையாத நாடுகளில் இந்த நிலையங்கள் அண்மையில் தோன்றியுள்ளன. இவை தேவையுள்ள இடங்களில் காணப்படவில்லை. வேலையில் அமராதவர்களில் சிலர் இந்த நிலையங்கள் இருப்பதையும், இவை செய்யும் வேலைகளையும் அறியாமல் இருக்கலாம். அல்லது அறிந்தும் இவை பயனளியா என்று கருதலாம். இக் கருத்துகள் சரியானவையாகவோ அல்லது தவருனவையாகவோ இருக்கலாம். மறைந்துள்ள வேலையின்மையின் தன்மையும், வேலைக் குறைவின் தன்மையும் இவைபற்றிய கணக்கெடுப்புக்கு இடையூருக இருக்கின்றன. மாதிரிக் கணிப்புக்கூட சாத்தியமாக இல்லை. வேலைக் குறைவுபற்றிய கணக்கு, வாரத்திற்கு ஒரு விடுமுறை நாள் வேண்டுமென்ற உண்மையையும் பொது விடுமுறை நாட்களையும் புறக்கணித்தால் இப் பிரச்சினையை மிகைப்படுத்திக் காட்டும்.

காரணிகளைச் சேர்த்து (factors) உற்பத்தி செய்வதை விளக்கிப் பலவித வேலையின்மை எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை விளக்கலாம். உற்பத்திக் காரணிகளின் விளைச்சல் விகிதக் குறைவாகக் கூடுவதை—அதாவது குறைந்துசெல் விளைவு விதியைப் (diminishing returns) பார்க்கவேண்டும்.

உற்பத்திக்கு நிலம் (land), மனித உழைப்பு (labour), மூலதனம் (capital) போன்ற சாதனங்கள் (resources) மிகப் பழைமையான நிலையிலுங்கூட, வேண்டும் என்பதை 5 ஆவது அதிகாரத்தில் பார்த்தோம். இவைகளுள் எச் சாதனங்களை எந்த அளவில் மற்றவைகளுடன் சேர்த்துப் பயன்படுத்தவேண்டும் என்பதை உற்பத்தி முறையும், அவை எளிதில் கிடைக்கின்றனவா அல்லது கிடைப்பதற்கு அருமையாக இருக்கின்றனவா என்பதும் நிர்ணயிக்கின்றன. அதாவது ஒவ்வொரு காரணியின் விலையும் இதை நிர்ணயம் செய்கின்றது. ஏதேனும் ஒரு காரணியின் ஓர் அலகை மட்டும் உற்பத்தியிலிருந்து நீக்கினாலோ அல்லது அதில் புகுத்தினாலோ மொத்த உற்பத்தி குறைந்தால், காரணிகள் உத்தமச் சேர்க்கை நிலையில் (optimum combination) இருக்கின்றன.

ஒரு குறிப்பிட்ட அளவு சாதனங்களையும், மூலதனத்தையும் பயன்படுத்துகின்றோம் என்றும், உற்பத்தியின்

அமைப்பும், முறைகளும் அதுபற்றிய அறிவும் ஒரே நிலையில் இருக்கின்றன என்றும் கற்பனை செய்துகொள்வோம். உற்பத்தி ஒரு நிலையை அடைந்தபிறகு (அதாவது தொழிலாளர்களின் உழைப்பு உத்தம நிலையில் பயனுகும் நிலை), மற்றக் காரணிகளின் அளவைப் பெருக்காமல், மனித உழைப்பைமட்டும் மேலும் மிகுதியாகப் பயன்படுத்தினுல், இறுதி அலகு உழைப்பின் உற்பத்தி (marginal productivity of labour) குன்றும். குறைந்துசெல் விளைவு (diminishing returns) துவங்கும். மிக அரிய சந்தர்ப்பத்தில் மேலும் ஓர் உபரித் தொழிலாளியை (அவனுடைய உழைப்புபிரிக்கமுடியாத ஓர் உற்பத்திக்காரணி) உற்பத்தியில் அமர்த்தினுல், மொத்த உற்பத்தி அதிகரிக்காது.[1] சில சந்தர்ப்பங்களில் (வேலை செய்யும் இடம் குறுகியதாக இருந்தால்) மொத்த உற்பத்தி குறையலாம். ஏனெனில் தொழிலாளி மற்றவர்கள் பயன்படுத்தும் இடத்தில் வருகின்ருன். எனவே மூலதனத்தையும், மற்றக் காரணிகளையும், உற்பத்திச் சாதனங்களையும்விட மிகுதியான தொழிலாளர்கள் இருந்தால் அவர்களுடைய பயனும், இறுதிநிலை உற்பத்தியும், விலையும் (அதாவது உற்பத்தியாளர்கள் அவர்களுக்குக் கொடுக்கும் கூலியும்) குறையும். குறுகியகாலத்தில் கூலியைக் குறைத்து நிலைமையைச் சமாளிக்கலாம். ஆனுல், காலப்போக்கில் தொழிலாளர்களுடைய அளிப்பு (supply) மிகுதியடைந்துகொண்டே சென்ருல், உற்பத்தியாளர்கள் அவர்களை எந்தக் கூலியைக் கொடுத்தும் வேலையில் அமர்த்தமாட்டார்கள். ஒரு நாட்டில் தொழிலாளர் சங்கங்களும் (trade unions) குறைந்தபட்சக் கூலிபற்றிய சட்டங்களும் (minimum wage legislation) இல்லாவிடில், இந்த நிலையில் நிர்ணயமாகும் கூலியைக்கொண்டு (உதாரணமாகக் கிராமாந்தரப் பகுதிகளில்) பிழைப்பு மட்டத்தில்கூட (margin of subsistence) வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாது.

இந்தியாவிலும் இதைப்போன்ற மற்ற நாடுகளிலும் குறைந்தபட்சக் கூலி, சில நகர்ப் புறத் தொழில்களிலேயே அமலில் இருக்கின்றன. தொழிலாளர்கள் சங்கங்களும் இத்தகைய தொழில்களிலேயே இருக்கின்றன. சட்டபூர்வமான குறைந்தபட்சக் கூலி அமலில் இருந்தால், மேலும் ஒரு தொழிலாளி வேலையில் அமர்வதால், அடக்கச்செலவு தவிர்க்கமுடியாதபடி கூடும். இறுதிநிலை உற்பத்தி (marginal product) அடக்கச் செலவுக்கு நிகராக இருந்தாலன்றி உபரித் தொழிலாளர்கள் வேலையில் அமர்த்தப்படமாட்டார்கள். ஒரு தொழிலாளி, உழைப்பு என்ற காரணியின் பிரிக்கமுடியாத அலகானதால் அவனுக்குத் தொடர்ந்து முழு வேலை

[1] இந்திய விவசாயத்தில் இந்த நிலை இருப்பதாகக் கூறுகின்றனர். இதிலிருந்து உபரித் தொழிலாளர்களை நீக்கினுல் உற்பத்தி குறையாது.

கிடைக்காமலிருக்கலாம் என்றும் நாம் கூறலாம். தொழிலாளிக்கு ஒரு வாரத்தில் சில நாட்களிலோ அல்லது ஓராண்டில் சில வாரங்களிலோ வேலை கிடைக்கலாம். உபரித்தொழிலாளர்கள் இருந்தால் ஒவ்வொருவருக்கும் குறைந்த வேலை கிடைக்கலாம். இத்தகைய தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலைகிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்காது. குடிசைத் தொழிலிலிருப்பதுபோல் (cottage industries) வேலை கொடுப்பவரும், செய்வோரும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாக இருந்தால், மொத்த வேலை குடும்பத்தினரிடையே பகிர்வாகின்றது. ஒவ்வொருவரும் செய்யும் வேலை முழு வேலைகளுக்குக் குறைவாகவே இருக்கின்றது. விவசாய வேலைசெய்யும் பல குடும்பத்தினருடைய தலா வருமானம், விவசாயத்துறையில் தொழிலாளர்களுடைய வருமானத்தைவிடக் குறைவாக இருக்கின்றது. ஆனால், இத் தொழிலாளர்களைவிடக குடும்பத்தினருக்குப் பாதுகாப்பு (security) இருக்கின்றது. குடிசைத் தொழிலில் அமர்ந்திருப்போரும் இதே நிலையில் இருக்கின்றனர். இந்த நிலையின் விளைவாக நாட்டில் வேலைக்குறைவு ஏற்படுகின்றது.

விவசாயத்தில் வேலைக் குறைவு சில பருவங்களிலேயே இருக்கும். அறுவடைபோன்ற சில பருவங்களில் முழு வேலை இருக்கும். இப் பருவங்களில் சில இடங்களில் வேண்டியபடி தொழிலாளர்கள் கிடைப்பதில்லை என்றும் கூறுகின்றனர். இது இந்தியாவில் விவசாயத்துறையில் உபரித் தொழிலாளர்கள் இருக்கின்றனர் என்ற கருத்துக்கு மாறுக இருக்கின்றது. உபரித்தொழிலாளர்கள் இல்லாவிடில், மற்றப்(உற்பத்திப்) பகுதிகளுக்குத் தொழிலாளர்கள் செல்வதால் மொத்த உற்பத்தி பாதிக்கும். இந்த நிலை இருந்தால், நீண்ட காலத்தில்கூடப் பின்வரும் நிலை மோசமானதாக இருக்கும். விவசாயத்தில் உற்பத்தி முறையும், அமைப்பும் உபரித்தொழிலாளர்கள் இருப்பதற்குத் தகுந்தவாறு இருக்கின்றது. இந்த நிலை மாறி, மனித உழைப்பைச் சிக்கனமாகப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்பட்டால், விவசாயப் பண்ணைகளின் நிர்வாகமும் அமைப்பும் பொதுவாகக் கிராமங்களில் மாறலாம்.

மாறுதல் படிப்படியாக இருக்கும்பொழுது அது தொல்லைகள் ஏற்படாமல் நிகழலாம். அது புதிய நிலைக்குத் தகுந்தபடி இருக்கும். முழுவேலை தொடர்ந்து இருக்கவேண்டுமென்றால், வேலியமைத்தல், வரப்புகள் அமைத்தல், நீர்ப்பாசனக் கால்வாய்களைப் பழுது பார்த்தல் போன்ற பயனுள்ள, உற்பத்தியைப் பெருக்கும் அலுவல்களை மந்த காலங்களில் செய்யவேண்டும். இவை நீண்டகாலத்தில் உற்பத்தியைப் பெருக்கும். வேலை மிகுதியாக இருக்கும் காலங்களில் மற்ற இடங்களிலிருந்து வரும் தொழிலாளர்களையும், அறுவடை இயந்திரங்களையும் பயன்படுத்தி நிலைமையைச் சமாளிக்கலாம்.

சில சந்தர்ப்பங்களில் (வேண்டிய தொழிலாளர்கள் கிடைக்காததால்) அறுவடையைத் தாமதித்துச் செய்யலாம். ஊருராய்த் திரியும் தொழிலாளர்கள் சில இடங்களில் இருக்கின்றனர். இந்தியாவைப்போன்ற பெரிய நாட்டில், விவசாயத்தில் விறுவிறுப்பான காலம் ஆங்காங்கே வேறுபட்டிருக்கும், சாலைகள் அமைப்பது போன்ற கிராமாந்தர வேலைகளுக்கும், துணைப் பொறி வழித் தொழில்களுக்கும் (sulsidiary manufacturing industries) ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும். இதைக்கொண்டு வேலை மிகுதியாக இருக்கும் காலத்தில் தேவையாகும் உபரித் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். மந்த காலத்தில் அதிகமான வேலை ஏற்படுத்தலாம். மொத்த உற்பத்தி குறையாமல் இருக்கவும், உபரித் தொழிலாளர்களை வேறு துறைகளுக்கு மாற்றுவதற்கும் ஏற்பாடு செய்யலாம். உற்பத்திமுறையிலும், நிலத்தைப் பயன்படுத்துவதிலும் சீரமைப்பு ஏற்படுவதால் வேலையை அதிகரிக்கவும், தொடர்ந்து நீடிக்கவும் ஏற்பாடு செய்யலாம். இத்தகைய சீரமைப்புக்கு நிர்வாகத்திலும், உற்பத்திக்கு வேண்டிய தளவாடப் பொருள்களிலும் முதலீடு வேண்டும்.

இந்தியாவில் உள்ள பல்வகை வேலையின்மையின் முக்கியத்துவத்தையும், வேலை வாய்ப்புகளைப் பெருக்கவேண்டிய அவசியத்தையும் எல்லாரும் அறிகின்றனர். தொழிலாளர்களுக்கு (மனித உழைப்புக்கு) தேவை ஏற்படுத்துவது திட்டங்களின் ஒரு முக்கியமான குறிக்கோளாகும். திட்டத்தின் பல இலக்குகளை (targets) நாம் அடைந்துவிட்டோம். ஒரு சில இலக்குகளைக் கடந்து விட்டோம். ஆனால், வேலை வாய்ப்புகள் சரிவரப் பெருகவில்லை. வேலையின்மையும் வேலைக் குறைவும் அதிகரித்துவிட்டன.

திட்டகாலத்தில் தலா வருமானம் பெருகி இருப்பது இந்த நிலைக்கு ஒவ்வாததாக இருக்கின்றது. தேசிய வருமானம் பெருகும் பொழுது, தொழிலாளர்களின் உழைப்புக்குத் தேவை பெருகாததே இதற்குக் காரணமாகும். பல்வேறு முதலீடுகளும், பலவித உற்பத்திமுறைகளும் உற்பத்திக் காரணிகளின் சேர்க்கையும் (combinations of the factors) வெவ்வேறு அளவில் மனித உழைப்புக்குத் தேவையை ஏற்படுத்தும். இதை நாம் பின்னர் 12ஆவது அதிகாரத்தில் 4ஆவது பகுதியில் விவரமாகப் பார்க்கலாம். ஆகையால் வேலையில் இருப்போருடைய வருமானம் கணிசமாகப் பெருகலாம். சில வகுப்பினரிடையே வருமானம் அதிகமாக உயரலாம். உயர்ந்த கூலிவாங்குவோருடைய எண்ணிக்கையும் பெருகலாம். வேலையிலமராதவரின் எண்ணிக்கையும் [தனித்த (absolute) எண்ணிக்கை, ஒப்பிட்டு அல்லது தொடர்புள்ள (relative) எண்

ணிக்கை அல்ல] பெருகலாம்; குறைவேலையுள்ளவரின் எண்ணிக்கையும் பெருகலாம்.

வேலையின்மை (எல்லா வகைகளையும்) யைப் பல முறைகளில் நீக்கலாம். சில முறைகளை எளிதில் விளக்கலாம். முதலில் ஒரு துறையிலிருந்து மற்றொன்றுக்குத் தொழிலாளர்களை அனுப்ப முடியாது. ஏனெனில் வேலையின்மை எங்கும் இருக்கின்றது. சில பகுதிகளில் தொழில் நுணுக்க அறிவுகொண்டவர்கள் போதுமான எண்ணிக்கையில் அகப்படாமல் இருக்கலாம். ஆனால், இப் பற்றுக் குறையை மொத்த உபரியுடன் ஒப்பிடும்பொழுது நாம் இதைப் புறக்கணிக்கவேண்டும். இரண்டாவதாகப் புதியதாக முதலீடு செய்யும்பொழுதும் (பழைய துறைகளிலும்) அதிகமான எண்ணிக்கையில் தொழிலாளர்களை அமர்த்துவதற்கு வழி செய்தால், சேமிப்பு பெருகாது: எதிர்காலத்தில் வளர்ச்சியும் விரைவில் ஏற்படாது.[1] தொழிலாளர்களுடன் ஒத்துழைக்கும் மற்ற உற்பத்திக்காரணிகளின் அளவைக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யலாம். விவசாயத்துறையில் இருக்கும் உற்பத்திக்காரணிகளுள் மிகவும் குறைவாக உள்ளது நிலமாகும். பெரும்பான்மையான விவசாயிகள் கொண்டிருக்கும் சிறிய நிலங்களும்(holdings), அவர்கள் தம் நிலங்களைப் பெருக்கவேண்டுமென்று விரும்புவதும், நிலமில்லாமல் பல குடும்பங்கள் இருப்பதும், இவர்களுடைய எண்ணிக்கை பெருகுவதும் இதை எடுத்துக்காட்டுகின்றன. இருக்கும் நிலத்தை விவசாயத் தொழில் செய்யவிரும்பும் எல்லாருக்கும் சமமாகப் பிரித்துக்கொடுத்தாலும், ஒவ்வொரு குடும்பமும், எளியமுறையில் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய ஊதியத்தைக்கூடப் பெறமுடியாது. சேமிப்பையும், முதலீட்டையும்பற்றி அவர்கள் சிந்திக்கவே முடியாது. நிலைமையில் வேறுவித மாறுதல்கள் எதுவும் ஏற்படாமல் இருப்பின், மேற்கூறிய கருத்து சரியாகும்.

நிலைமையில் மாறுதல்களைப் புகுத்தவேண்டுமானால், ஏராளமான தொகையை முதலீடுசெய்து பயனுகாத நிலங்களைப் பயன்படுத்த வேண்டும்; தொலைவில் உள்ள நிலங்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து அவைகளைக் குடியிருப்புக்குத் தகுந்தவையாகச் செய்யவேண்டும். நீர்ப்பாசன வசதிகள், கிணறுகள் முதலியன அமைத்தல், உரம் அளித்தல், சிறந்த விதைகளையும், கருவிகளையும் வழங்குதல் போன்றவைகளில் பணத்தை முதலீடு செய்ய வேண்டும். ஒவ்வோர் ஏக்கரும் அளிக்கும் மாகூலியும் பெருக்க ஏற்ற முறையில் நிலப் பயன்பாட்டை அமைக்கவேண்டும். நீண்ட

[1] 12ஆவது அதிகாரத்தில் 4ஆவது பகுதியில் விவரங்களைக் காணலாம்.

காலமாகச் சரியான கொள்கையை அரசு பின்பற்றுகிறது. ஆனால் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை பெருகுவதற்கு ஏற்றபடி பயன் ஏற்படவில்லை. நிலப்பற்றுக்குறை இன்னும் இருக்கின்றது. அதைச் சீரமைக்க மிகுதியான மூலதனம் தேவையாகின்றது. கிராமாந்தரப் பகுதிகளில் உள்ள உபரித் தொழிலாளர்களின் உழைப்புக்கு, நகர்ப்புறங்களிலும் தொழிற்பகுதிகளிலும் போதிய தேவை ஏற்படுத்த மிக அதிகமான அளவு முதல் தேவையாகும். ஏனெனில், உழைப்புச்சிக்கன வசதிகளை (labour saving devices) ஏற்படுத்துவதே தற்காலத்திய முறைகளின் சாரமாகும். எங்கும் மூலதனப் பற்றுக்குறையும், (அத்துடன் ஒத்துழைக்கும் பொருள்களின் பற்றுக்குறையும்) இடர்ப்பாடுகளுக்குக் காரணமாக இருக்கின்றன. உள்நாட்டுச்சேமிப்பைச் சேர்த்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கடன்வாங்க அயரா முயற்சிகள் நடந்துகொண்டே இருந்தபோதிலும், மேற்கூறிய இடர்ப்பாடு இருக்கின்றது.

மனித உழைப்பைத் தவிர, மற்றக் காரணிகளை உபரியாகக் கொண்டிருக்கும் நாடுகளின் முன்னேற்றத்திற்குத் தடை ஏற்படாதது ஏன் என்று நாம் கேட்கலாம். விடை எளிதாக இருக்கின்றது. மற்றக் காரணிகளைவிட மிகுதியான அளவில் நிலம் இருந்தால் உபரிநிலத்தைப் பயிர்செய்யாமல் இருக்கலாம். கச்சாப் பொருள்கள், கருவிகள், உடை, வீடுகள் முதலியவற்றுக்குத் தேவை குறைந்தால், உற்பத்தி குறைகின்றது; அல்லது மறைகின்றது. எவ்வித உண்மை முதல் (real capital) மிகுதியாக இருந்தபோதிலும். அதை மேலும் அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டா. உற்பத்தியானதையும் அழித்துவிடலாம். பழுதான, மிகவும் பழைய இயந்திரங்கள் நாள்தோறும் அழிக்கப்படுகின்றன, மந்தகாலத்தில் நிதிக்கு ஏற்படும் தேவைகூடக் குறையும். அப்பொழுது அதை நாம் பயன்படுத்துவதில்லை. அதாவது அது 'பதுக்கப்படுகின்றது'. (hoard) தேவை ஏற்படும்வரை அதற்கு ஊக்கம் அளிக்கப்படாது. கடனுக்குக் கொடுக்கும் தொகை அதன் நிலச்சுவாதாருக்கு இலாபம் ஈட்டத் தவறினால் அது வற்றும். ஆனால், மனித உழைப்புத் தேவைக்கு மீறிய அளவில் இருந்தாலும், மக்கள் குழந்தைகளைப் பெறுகின்றனர். தொழிலாளர்களை அழிக்கமுடியாது; பாங்குகளிலும் (banks) (பணத்தைப்போல்) வைத்துக்கொள்ள முடியாது. இதன் விளைவாக வேலையின்மையே ஏற்படும். வேலையின்மை தற்காலிக மந்தத்தின் (depression) விளைவாக இல்லாவிடில், மற்றக் காரணிகளுடன் மனித உழைப்பைச் சரியானபடி சேர்ப்பது மிகவும் கடினமாகும். வேலையின்மைக்கு முக்கியமான காரணம், அமித மக்கள் தொகையே என்பதும், மக்கட் பெருக்கத்தின் வீதம் மிகவும் உயர்ந்ததாகவும் இருக்கின்றது என்பதுமே முடிவாகும்.

B. அமித மக்கள்தொகைப் பிரச்சினை

முதல் அதிகாரத்தில் பார்த்ததைப்போல் சில சந்தர்ப்பங்களில் தான் அமிதமக்கள் தொகைக்கும் வேலையின்மைக்கும் நேரடித் தொடர்பு இருக்கின்றது. மற்றச் சந்தர்ப்பங்களில் வேலையின்மை இல்லாமல் அமித மக்கள்தொகை இருக்கலாம். வேறு சில சந்தர்ப்பங்களில் அமித மக்கள்தொகை இல்லாமல் வேலையின்மை இருக்கலாம். இவை எவ்வாறு ஏற்படும் என்பதை நாம் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளோம். மீண்டும் இவைகளை நாம் நினைவுக்குக் கொண்டுவரலாம். வேலையின்மை மிகவும், கடுமையாக இராவிடில், வாழ்க்கைத் தரமும் மிகவும் தாழ்ந்திராவிடில், உபரித் தொழிலாளர்களை வேலையில் அமர்த்தலாம். இதற்கு வேண்டியபடி கூலியைக் (wages) குறைக்கலாம். தொழிலாளர்களுடைய வருமானத்தைச் சற்றுக் குறைக்கலாம்; உற்பத்திமுறைகளையும் மாற்றியமைக்கலாம். இந்த மாறுதல்களின் காரணமாக, வேலையிலமர்ந்திருப்போரின் தலா வருமானம் குறையும், அவர்களுடைய உற்பத்தித்திறன் உடனடியாகவும், எதிர்காலத்திலும் குறையலாம், தொழிலாளியின் இறுதிநிலை உற்பத்தி குறைவதால், சேமிப்பும் குறையலாம். அமித மக்கள்தொகை இல்லாவிடினும் வேலையின்மை ஏற்படலாம். பொருளாதார அமைப்பும், கண்காணிப்பும் சரியாக இல்லாவிடில், செழிப்பில் (prosperity) தீவிர ஏற்றத்தாழ்வு ஏற்படலாம். கடுமையான மந்தங்கள் ஏற்படும். மக்கள் தொகையைக் குறைப்பதால் இத் தொல்லை நீங்காது. முன்னேற்ற மடைந்த நாடுகளில் இந்த நிலை ஏற்படுவது அவைகளுடைய இயல்பாக இருக்கின்றது. இதனால் பொருளாதாரத்தை நிலைப்படுத்த, வெற்றிகரமான அல்லது பெரும்பாலும் வெற்றியற்ற கொள்கைகள் வகுக்கப்படுகின்றன.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் அமித மக்கள்தொகை இருக்கின்றது என்பதையும் அதனால் எல்லாவித வேலையின்மையும் ஏற்பட்டுள்ளன என்பதையும் இங்குக் குறிப்பிடத் தேவையில்லை. வேலை செய்யக்கூடிய வயதில் இருக்கின்ற பலருடைய உழைப்புக்குக் கிராமங்களிலும், நகரங்களிலும், விவசாயத் துறையிலும், மற்றத் துறைகளிலும் தேவையில்லை என்பதற்குச் சான்று இருக்கின்றது. இறுதிப் படிவத்தில் வேலையிலமர்ந்திருப்போருடைய (marginally - employed) வருமானம் வாழ்க்கை மட்டத்திலேயே (subsistence level) இருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் விறுவிறுப்பாக இருக்கும்பொழுதுகூட, தொழிலாளர்கள் உபரியாகவே இருக்கின்றனர். மேலே குறிப்பிட்டபடி சிலவகைப் பயிற்சிபெற்ற தொழிலாளர்கள், போதிய எண்ணிக்கையில் கிடைக்காமலிருக்கலாம். இவ் வெண்ணிக்கை புறக்கணிக்கக் கூடியதாக இருக்

கின்றது. இதைத் தவிரத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரை பற்றாக்குறையே இல்லை. பல்வேறு தொழில்களில் அமர்ந்திருப்போரின் எண்ணிக்கையும் அமிதத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் நிலமும், முதலும் குறைவாக இருப்பதையும் காட்டுகின்றன. விவசாயத்துறையில் வேலைக் குறைவு இருந்தபோதிலும், எல்லா நாடுகளிலும் மற்றத் துறைகளைவிட, விவசாயத்துறையில் வருமானம் குறைவாக இருக்கின்றபோதிலும், பல ஆண்டுகளாக இந்தியாவில் மக்கள் தொகையில் 70 சதவீதத்தினர் விவசாயத்தையே சார்ந்திருக்கின்றனர்.

தொழிலாளர் படையில் (labour - force) எங்கும் உள்ள இந்த உபரி, மக்கள் தொகையின் பெருக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. தொழிலாளர்களுக்கு ஏற்படும் தேவை, மக்கள் தொகைப் பெருக்கத்தை நிர்ணயிக்கவில்லை. மக்கள் தொகையில் வேலையை நாடுவோரைமட்டும் நாம் கவனிக்காமல், எல்லா வயதிலும் உள்ள மொத்தத் தொகையைக் கவனிக்கவேண்டும். வேலை செய்யும் வயதில் உள்ளவரின் எண்ணிக்கை மிகச் சிறந்த உற்பத்திக் காரணிகளின் சேர்க்கைக்கு உகந்ததாக இருந்தபோதிலும், இவர்களைச் சார்ந்திருப்போரின் எண்ணிக்கை எதிர்காலத்தில் உத்தம உற்பத்திக் காரணிகளின் சேர்க்கைக்கு உகந்ததாக இல்லாவிடில், மிகுதியானவர்களுக்கு நாடு உணவளிக்கவேண்டும். எனவே, தலா வருமானம் குறைவாக இருக்கும். எதிர்காலத்தில் வேலையாட்களின் எண்ணிக்கை அமிதமாக இருக்கும். மேலே குறிப்பிட்ட இரு நிலைகளும் அமித மக்கள் தொகை இருப்பதைக் காட்டுகின்றது. மக்கள்தொகை குறைவாக இருந்தாலோ அல்லது மிதமாக உயர்ந்தாலோ நாட்டின் நிலைமை சற்று நன்றாக இருக்கும்.

இதற்கு மாறான நிலையும் இருக்கலாம். அதாவது, தற்சமயம் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை உத்தம நிலையில் இருந்தபோதிலும், எதிர்காலத்தில் குன்றும் நிலையில் இருந்தால், குறைவான மக்கள்தொகை இருக்கின்றது என்று கூறலாம். அமித மக்கள்தொகை இருந்தால், வேலையிலிருப்போரைச் சார்ந்திருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை குறைவது நல்லது. குறைவான மக்கள்தொகை (underpopulation) இருப்பின் இவ் வெண்ணிக்கை கூடுவது நல்லது. குறைவான மக்கள்தொகை இருப்பதால் சில பொருளாதாரக் கேடுகள் விளையலாம். ஆனால், அமித மக்கள்தொகை இருப்பதால் ஏற்படும் தீமைகளைவிட இவைகளை எளிதில் நிவர்த்தி செய்யலாம். இதை வரலாறு காட்டுகின்றது.

இதிலிருந்து உத்தம மக்கள்தொகைபற்றிய கோட்பாட்டை (optimum theory of population) நாம் அறியலாம். எந்தச் சமயத்

திலும் உற்பத்திமுறைகள், அமைப்பு, அதுபற்றிய அறிவு முதலிய வற்றுக்கு ஏற்றபடி அமையும் ஒரு குறிப்பிட்ட மக்கள்தொகை இருக்கின்றது. இது மிகச் சிறந்த பொருளாதாரப் பயனைக் கொடுக்கும். அதாவது, தலா வருமானம் உச்சநிலையில் இருக்கும். இக் கோட்பாடு மேலே கொடுக்கப்பட்டிருக்கும் பலவித வேலை யின்மைபற்றிய விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக் கின்றது. ஆனால், இக் கோட்பாடு (பொருளியலில்) தாழ்ந்த நிலையில் இருக்கின்றது. ஏனெனில், நிலைமையில் மாறுதல் ஏற்படாமலிருக்காது. மேலும், உத்தம மக்கள் தொகையை அளக்கமுடியாது. எதிர்காலத்தில் தொழிலாளர்களுக்கு ஏற்படும் தேவை குன்றலாம்; அல்லது கூடலாம். உற்பத்திமுறையும் அமைப்பும் மாறலாம்; சில சந்தர்ப்பங்களில் விரைவில் மாறலாம்.

மால்தஸின் (Malthus) கோட்பாட்டைப்பற்றி ஒன்றுமே கூறாமல், அமித மக்கள்தொகைபற்றிய தலைப்பை விடலாகாது. நம் வாழ்க்கை மட்டநிலையை அடையும்வரை, மக்கள்தொகை உயர்ந்துகொண்டே செல்லும் என்பது மால்தஸின் கருத்து. ஏனெனில், பொருளாதாரச் செழிப்பு இருக்கும் காலங்களில்கூட, மக்கள்தொகை உணவு உற்பத்தியைவிட, விரைவில் உயரு கின்றது. இது உண்மையானால், மக்கள் தொகை அமிதநிலையை அடையும் போக்கிலேயே இருக்கவேண்டும். மிகவும் ஏழையாக உள்ளவர்கள், வாழ்க்கை மட்ட நிலையிலிருந்து (subsistence) உயரவே முடியாது. அவருடைய (மால்தஸ்) காலத்திலிருந்து, வரலாறு அவருடைய கற்பனையைப் பொய்யாக்கிக்கொண்டே வந்திருக்கின்றது. பல நாடுகளில் மக்கள்தொகை அதிகரிக்கும் வீதம் கருத்தடை, கருச் சிதைவு (abortions), கருத்தரித்தலை நீக்குவதுபோன்ற முயற்சிகளால் தடைப்பட்டிருக்கின்றது. விபத்துகளும் உணவுப் பற்றுக்குறையும் இதைத் தடை செய்யவில்லை. இதற்கு மாறாக விஞ்ஞான, விவசாயத்துறை களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், உணவு உற்பத்தியைப் பெருக்கியுள்ளன. புதிய நாடுகளில் உணவுப் பண்டங்களைக் குறைந்தசெலவில் உற்பத்தி செய்கின்றனர். இப் பொருள்களைக் கொடுத்து இவை உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்யும் நாடு களிலிருந்து பொறிவழியாக்கப் பண்டங்களைப் (manufactured goods) பெறுகின்றன. நில, கடல்வழி, அண்மைக் காலத்தில் ஆகாயவழிப் போக்குவரத்துச் சாதனங்கள் முன்னேற்றமடைந் திருப்பதால், உலகின் பல பகுதிகளிலும் பொருள்கள் சிறப்பான முறையில் உற்பத்தியாகின்றன. இவையும் விஞ்ஞானத் தொழில் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் உற்பத்தியை ஏராள மாகப் பெருக்கிவிட்டன. மேலும், புதிய கண்டுபிடிப்புகளும் முதலீடும் அதிகரித்துவிட்டன. அமித மக்கள்தொகை, குறை

வான உணவு உற்பத்திக்கு ஏற்படுத்தும் கிராக்கிபற்றிய கவலை, முன்னேற்றமடைந்த நாடுகளில் இப்பொழுது இல்லை. வேறு நாடுகளில் சில பகுதிகளில் மக்கள்தொகை பெருகுவதால் ஏற்படும் பிரச்சினைகள் எழுந்துள்ளன. இந்தியாவிலும், மற்ற அமித மக்கள் தொகையுடன் முன்னேற்றம் அடையும் நாடுகளிலும் தொழிலாளர்கள், எண்ணிக்கையில் பெருகும்வீதம் அவர்களுடைய உழைப்புக்கு உள்ள தேவையைவிட அதிகமாக இருக்கின்றது. உபரித் தொழிலாளர்களும் உயர்ந்த எண்ணிக்கையில் இருக்கின்றனர்.

1921ஆம் ஆண்டிலிருந்து அளவுக்குமீறிய மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்பட்டதால், இப் பிரச்சினை மேலும் மோசமாகி விட்டது. அந்த ஆண்டிலிருந்து மக்கள்தொகை ஆண்டுதோறும் இரட்டித்து வந்திருக்கின்றது. இத் தொகை இன்றும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

பிறப்பு, இறப்பு வீதங்களின் (birth and death rates) போக்கே இதற்குக் காரணமாக இருக்கின்றது. இரு நூற்றாண்டுகளுக்கு முன், பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் உயர்ந்திருந்தன. அப் பொழுது இந்தியா அமித மக்கள்தொகையைக் கொண்டிருக்க வில்லை. பயிர் செய்யக்கூடிய நிலங்கள் அண்மையில் இருந்தன. இவைகளைப் பயிர்செய்ய எவரும் முன்வரவில்லை. போர், பஞ்சம், அமைதியின்மை, தொற்றுநோய் முதலியன மக்கள் தொகை அதிகரிக்காமலிருக்கக் காரணமாக இருந்தன. இவைகளால் இறப்புவீதம் மிகவும் உயர்ந்திருந்தது. அக் காலத்தில் செழிப்பான இடங்களில், வளமான காலங்களில் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை, வாழ்க்கை மட்ட நிலையை அடையும்வரை பெருகியது. இன்றும் இந்த நிலை இருக்கின்றது. செழிப்பான காலங்களில் அதிகமான குழந்தைகள் நோய்களுக்கிலக்காகாமல் பிழைத்தன. ஆனால், நீண்டகாலத்தில் வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை.[1]

19ஆம் நூற்றாண்டின் இடையிலிருந்து இறப்புவீதம் குறைந்தது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. அதே காலத்தில் மொத்த உற்பத்தியும் வர்த்தகமும் பெருகியது. பிறப்புவீதத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. மிகுதியான அளவில் நிலங்கள் பயிர் செய்யப்பட்டன. அதிகமான அளவில் முதலீடு செய்யாமல், மேலும் நிலங்களைப் பயிர் செய்யமுடியாது என்ற நிலை ஏற்படும்வரை இப் போக்கு நீடித்தது. இப் புதிய நிலங்களிலிருந்து போதிய இலாபம் கிடைக்கவில்லை. அதாவது, முதலீடான

[1]. வீரா ஆன்ஸ்டி (Vera Anstey) எழுதிய, The Economic Development of India, 1952 Edition என்ற நூலைப் பார்க்கவும்.

தொகையை ஈடுசெய்யும் அளவில் இலாபம் பெருகவில்லை. முதல் உலகப் போருக்குப்பின், இறப்புவீதம் குறையக் காரணமாக இருந்தவை மேலும் அதிக சக்தியைப் பெற்றன. பொதுச் சுகாதார நிலையிலும் மருத்துவ வசதிகளும் பெருகியமையால், முன்பு இருந்த தொற்றுநோய்களும் அதன் விளைவாக ஏற்பட்ட உயர்ந்த இறப்பு வீதமும் நீங்கின. இதனால், மக்கள் தொகை பெருகியது. ஆனால், தொழிலாளர்களின் உழைப்புக்குத் தேவை பெருகவில்லை. மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுடைய வாழ்க்கைத் தரமும் முன்னேறவில்லை. பிறப்புவீதம் குறைந்ததா என்பதும் சந்தேகமாக இருக்கின்றது.

மேற்கூறியவைகளின் விளைவாக மக்கள்தொகைப் பெருக்கத்தின்வீதம் உயர்ந்தது. ஆனால், மனித உழைப்பின் தேவை பின் தங்கிவிட்டது.

C. முடிவுகள்

இந்தியாவிலும், இதுபோன்ற நிலையிலுள்ள மற்ற நாடுகளிலும் இருக்கும் அமித மக்கள்தொகைக்கும், பலவித வேலையின்மைக்கும் ஒரு தொடர்பிருக்கின்றது என்பது புலனாகின்றது.

அமித மக்கள்தொகை இழைக்கும் தீமைகளை நீக்குவதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன.

முதல்வழி, பிற நாடுகளில் குடியேறுதல். சில ஐரோப்பிய நாடுகள் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பிற நாடுகளில் குடியேறும் வழியைக் கையாண்டன. பல இந்தியர்கள் கடல்கடந்து அயல் நாடுகளுக்குச் சென்று தோட்டங்களில் வேலைசெய்தனர். ஆனால், இவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானது; மக்கள் தொகைப் பெருக்கத்தின் வீதம் உயர்வாக இருக்கின்றது. உள் நாட்டில் அவர்களுடைய இடத்தில் வேறு ஆட்கள் விரைவில் தோன்றினர். பிறநாடுகள் குடிபுகுதலை எதிர்த்தன. ஆகையால், இவ் வழிக்கு ஒரு தடை ஏற்பட்டுவிட்டது.[1]

உற்பத்திச் சாதனங்களையும் முதலையும், உழைப்பின் அமித நிலை நீங்கும்வரை பெருக்கி, அது மற்றச் சாதனங்களுடன் சரியான முறையில் சேரும்படி செய்வது இரண்டாவது வழியாகும். இதனால், உழைப்பின் இறுதிநிலை உற்பத்தி பெருகும்.

இவ் வழி, திட்டம்மூலம் கையாளப்படுகின்றது என்பதை இங்குக் கூறத் தேவையில்லை. இதற்கு இடையூறுக உள்ள பெரிய

[1] பாகிஸ்தான்-இந்தியா இரு நாடுகளிலும் ஏற்பட்ட மாறுதல்களை இங்குக் குறிப்பிடவில்லை. இவை அதிகமான பொருளாதார விளைவுகளுக்குக் காரணமாக இருந்தபோதிலும், இங்கு இவை பொருத்தமற்றவையாக இருக்கின்றன.

தடையை முன்பே குறிப்பிட்டோம். அமிதமாக மட்டுமல்லாமல் மேலும் பெருகிக்கொண்டே இருக்கும் மனித உழைப்புக்குத் தகுந்த அளவில், மற்ற உற்பத்திச் சாதனங்களையும் முதலையும் மிக நீண்ட காலத்திலேயே, அதிகமான அளவில் அயல்நாட்டு உதவியுடன் பெருக்க முடியும் என்பதைமட்டும் இங்குக் குறிப்பிடலாம்.

இதிலிருந்து நாம் மூன்றுவது வழியை அடையவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதாவது, மக்கள் தொகை அதிகரிக்கும் வீதத்தைக் கட்டுப்படுத்தவேண்டும். 'நீண்டகாலத்தில் வாழ்க்கைத் தரத்தைக் காப்பாற்றவும் உயர்த்தவும், அவைகளுக்கு இருக்கும் மிகச் சிறந்த வழி அல்லது ஒரே வழி, குறைவான குழந்தைகளைப் பெறுவதேயாகும்' என்று அமித மக்கள்தொகை இருக்கும் நாடுகளைப்பற்றிக் கூறுகின்றார்.[1] இதை இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள மக்கள் அறிகின்றனர். இரு நாடுகளும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கையாளுகின்றன. இதற்குப் பல ஆயிரக் கணக்கான நிலையங்களை நிறுவியுள்ளன. இலண்டனில் உள்ள இந்தியத் தூதர் ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது, இந்தியாவுக்கு மலிவான கருத்தடைப் பொருள்களைக் கொடுத்து, அதன் மாபெரும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்று மேல்நாடுகளைக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.[2] 'நமது சமுதாய நலத்துறையில் இருக்கும் பிரச்சினைகளுள் மிகவும் முக்கியமானது, அமித மக்கள் தொகையேயாகும்' என்று பாகிஸ்தானிய சுகாதார அமைச்சகச் செயலர் கூறியுள்ளார்.[3] இக் கொள்கை காலதாமதமாகவே பயனளிக்கும். ஆனால், (முன்னேற்றமடைந்த சில நாடுகளில் இருப்பதைப்போல்) சமய அடிப்படையில் இக் கொள்கைக்குப் பரவலாக நாடெங்கும் எதிர்ப்பு இல்லை.

1. எஃப். சி. பென்ஹாம், (F. C. Benham) Economics, 6 ஆவது பதிப்பு-பக்கம் 130.
2. India News, June 15, 1963
3. Pakistan News, June, 15, 1963

9. பணமும் நிதியும்
(Money and Finance)

A. பணமும் பாங்குமுறையும் (Banking) ' பணம் அதன் பணியேயாகும்'

B. பொது நிதி இயலின் (Public Finance) இடம்

C. தனியார் துறைக்கு நிதியும் கடனுதவியும்

A. பணமும் பாங்கு முறையும்
' பணம் அதன் பணியேயாகும் '

பரிவர்த்தனை சாதனமாகவும் மதிப்பின் அளவுகோலாகவும் (medium of exchange and a measure of value) இருப்பதே பணத்தின் முக்கியமான அலுவல்களாகும். பணம் கண்டுபிடிக்கப் படுவதற்குமுன், பொருள் பரிவர்த்தனை பண்டமாற்று முறையிலேயே (barter) நடந்தது; அதாவது, ஒரு பண்டத்தின் சில அலகுகளைக் கொடுத்து மற்றொரு பண்டத்தின் சில அலகுகளை வாங்குவது. இந்த முறை சிறந்ததன்று; இதற்கு, ' இரட்டை விருப்ப நிகழ்ச்சி ' (double coincidence of wants) இருத்தல் வேண்டும். ' ஒருவன் வைத்திருக்கும் பொருளை மற்றொருவன் வாங்கிக் கொள்ளத் தயாராக இருப்பதோடுமட்டும் அல்லாமல், அவனுக்குத் தேவையான பொருளைக் கொடுக்கவும் வேண்டும்.' ஒரு யானைக்கு ஈடாக எவ்வளவு தேங்காய்களை அல்லது பென்சில்களை அல்லது தேயிலை ராத்தல்களைக் கொடுத்தல் வேண்டும் என்பதை நிர்ணயிப்பது மிகவும் கடினம்.[1]

பணம் தற்காலத்தில் இருக்கும் வடிவத்தில் தோன்றுவதற்கு முன் சில பகுதிகளில் சில வகுப்பினர் அல்லது குழுவினர், புகையிலை, கிளிஞ்சல், தோல்போன்ற பொதுப்பண்டங்களைப் பணமாகப் பயன் படுத்தினர். இவைகட்கு ஏராளமான கிராக்கியும் இருந்தன; இவைகளை எல்லாரும் ஏற்றுக்கொண்டனர். இவை உறுதியாக

[1] எஃப். சி பென்ஹாம் (F. C. Benham), Economics, 6ஆவது பதிப்பு, பக்கம் 421.

இருந்தன. இவைகளைக்கொண்டு பொருள்களின் மதிப்பை நிர்ணயித்து அவைகளைப் பரிவர்த்தனை செய்தனர். சிறிய அலகுகளாகப் பிரிக்கத்தக்கவையாக இருத்தல், அலகுகள் எல்லாம் ஒரு மாதிரியாக இருத்தல். இவை மிகவும் பளுவாக இல்லாமல் இருப்பது, இவைகளுடைய மொத்த இருப்புடன் (stock) ஒப்பிடும்பொழுது, அளிப்பு அதிகம் பெருகாமலிருப்பது முதலியன பரிவர்த்தனைச் சாதனமாகப் பயனாகும் பொதுப் பண்டத்தின் மற்ற விரும்பத்தக்க குணாதிசயங்கள். (அளிப்பு அதிகமாகப் பெருகிப் பணத்தின் அளவைக் கணிசமாக மாற்றக்கூடாது.)

நாளடைவில் உயர்ந்த உலோகங்கள் (இறுதியில் பொன்) சிறந்த பணமாகக் கருதப்பட்டன. பாங்குமுறை வளர்ச்சியடைந்த தாலும் [செக்குகள் (cheques) மூலம், மீட்கக்கூடிய பாங்கு டெபாசிட்டுகள் (deposits) பாங்குமுறையுடன் தோன்றின.] கடனைத் தீர்ப்பதற்கும், பொருள் வாங்குவதற்கும் சட்டபூர்வமாகப் பயன்படுத்தக்கூடிய பாங்குச் செலாவணித் தாள்கள் (bank notes) ஏற்பட்டன. இதனால், வளர்ச்சியடைந்த நாடுகளிலும், வளர்ச்சியடையும் பல நாடுகளில் பணம்மூலம் பரிவர்த்தனை நடைபெறும் பகுதிகளிலும் கீழ்க்கண்டவை பணமாகப் பயனாகின்றன :

(i) அரசும், மைய பாங்கும் (Central Bank) அல்லது அரசு மட்டும் அல்லது மைய பாங்குமட்டும் செலாவணி அதிகாரியாக (monetary authority) வெளியிடும் 'நடைமுறை'ப் பணம்—அதாவது, பரிவர்த்தனை மதிப்பை (exchange value) விடக் கணிசமான அளவு குறைந்த உண்மை மதிப்பைக்கொண்ட நாணயங்கள் (coins) அடையாள நாணயங்கள் (token coins) உள்பட), மாற்ற முடியாத செலாவணித்தாள் (inconvertible paper currency) (அதாவது பாங்குச் செலாவணித் தாள்கள்) முதலியன. இப் பொழுது பல நாடுகளில் (இந்தியா, பாகிஸ்தான் உள்பட) செலாவணித் தாள்களை வெளியிடும் உரிமையை, மைய பாங்கே கொண்டிருக்கின்றது. இந்தியாவில் ரிசர்வ் பாங்கும் (Reserve Bank), பாகிஸ்தானில் ஸ்டேட் பாங்கும் (State Bank) இவ் வுரிமையைக் கொண்டிருக்கின்றன. ஆனால், மக்களிடையே இச் செலாவணித் தாள்களைப் புழக்கத்தில்விடும் பொறுப்பை வாணிக பாங்குகள் (commercial banks) ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

பொன் திட்டத்தில் (gold standard) செலாவணித் தாள்களை பாங்குகளில் கொடுத்துப் பொன்னாக மாற்றுவதற்கு வழி இருந்தது. இத் திட்டம் கைவிடப்பட்டதிலிருந்து, இத் தாள்களைப் பொன்னாக மாற்றமுடியாது. பொன், செலாவணிமுறையின் (monetary system) ஆதாரமாகவும் காப்புநிதியாகவும் (reserve) இருக்கின்றது. பொன்

னுடன் சேர்ந்து பயனுகும் காப்புநிதியும், செலாவணியும் சில அங்கீகரிக்கப்பெற்ற அன்னிய செலாவணியாக ((foreign exchange) இருக்கின்றன. இவை பொன்னுடன் துணையாகப் பயனுவதோடு மட்டுமல்லாமல் செலாவணி முறையைச் சிக்கலாக்குகின்றன. இச் செலாவணிமுறை ஓரளவு பன்னுட்டுமுறையில் (international) அமைந்திருக்கின்றது.

(ii) பாங்குச் செலாவணி, அதாவது செக்குகள்மூலம் மீட்கப் பெறும் பாங்கு டெபாசிட்டுகள் நடைமுறைக் கணக்கில் (current account) உள்ள டெபாசிட்டுகளை முன்னறிவிப்பில்லாமல் மீட்கலாம். அதாவது, செக்குகள் கொடுக்கப்பட்டவுடன் ரொக்கம் (cash) கொடுக்கப்படும். சில நாட்களுக்கு முன் அறிவிப்புக் கொடுத்த பிறகே, தவணை டெபாசிட்டுகளை (time deposits) ரொக்கமாக்க முடியும். ஆயினும் இவை ஏராளமான ரொக்கத் தன்மை கொண்டிருக்கின்றன. இவைகளைப் பணமாகக் கருதலாம்.

பாங்குச் செலாவணிபற்றி (bank credit) மேலும் விளக்கம் கொடுப்பதற்குமுன், பணம் செய்யும் வேறு இரு பணிகளைக் குறிப்பிடவேண்டும். அது மதிப்பின் உறைவிடமாகவும் (store of value), கட்டணங்களைத் தாமதித்துச் செலுத்தும் சாதனமாகவும் (standard of deferred payment) பணியாற்றுகின்றது. விலைவாசி நிலையாக இருந்தால்தான் பணம் இப் பணிகளைச் சரிவரச் செய்ய முடியும். இல்லாவிடில் ஒரு காலத்தின் தொடக்கத்தில் ஒரு தொகை வாங்கக்கூடிய பொருளின் அளவுக்கும், அக் கால இறுதியில் அதே தொகை வாங்கக்கூடியதின் அளவுக்கும் வேறுபாடு இருக்கும். இதுபற்றிய விளக்கத்தைப் பின்னர்க் கொடுக்கலாம். விலைவாசி தாழ்வடைந்தால் இந்த அளவு அதிகமாகவும், உயர்ந்தால் குறைவாகவும் இருக்கும். வளர்ச்சியடையும் நாடுகளில் 1939-லிருந்தே விலைவாசி உயர்ந்து கொண்டிருக்கின்றது. இப் போக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால் பணம் வைத்திருப்பவன் நுகர்வோர் பொருளை வாங்க விரும்பாவிடில், சொந்தத் தொழிலில் முதலீடு செய்யவும் விரும்பாவிடில் அதைக்கொண்டு வீடு அல்லது உயர்ந்த (வைரம் போன்ற) கற்கள் முதலியவைகளை வாங்கலாம். விலைவாசியை ஒட்டி இவைகளுடைய மதிப்பு அல்லது விலை உயரும். அல்லது பங்குகளை (shares) (அவைகளுடைய ஆபத்துக்குவேண்டியபடி தள்ளுபடிசெய்து) வாங்கலாம். பணம் தாமதித்துச் செலுத்தும் கட்டணச் சாதகமாகப் பயனுகும் பொழுதும் இதே குறைகள் தோன்றுகின்றன.[1]

[1] எஃப். சி. பென்ஹாம் (F. C. Benham). 6 ஆவது பதிப்பு, பக்கம், 424-ஐப் பார்க்கவும்.

பாங்குச் செலாவணி எவ்வாறு ஆக்கப்படுகின்றது? அதற்கு உள்ள வரம்புகள் யாவை? பாங்குச் செலாவணியைக் கண்காணிக்கும் கொள்கை முதலியவைகளை இங்குப் பார்ப்போம். இங்கிலாந்தில் பாங்குமுறை 17 ஆவது நூற்றாண்டில் பொற்கொல்லர்களுடைய செயலால் தொடங்கியது. செல்வர்கள், பொன், வெள்ளி, உயர்ந்த கற்கள் போன்ற பொருள்களையும், தம் பொக்கிஷங்களையும் பொற்கொல்லர்களிடம் பாதுகாப்புக்காக ஒப்படைத்தனர். பொற்கொல்லர்கள் டெபாசிட் செய்தவர்களுடைய தேவையைப் பூர்த்திசெய்வதற்கு, 100 சதவீதம் காப்புநிதியைக் கொண்டிருக்கவேண்டா என்பதை அறிந்தனர். ஏனெனில், எல்லா டெபாசிட்டர்களும் ஒரேசமயத்தில் தம் டெபாசிட்டுகளைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள முன்வருவதில்லை. எனவே, அவர்கள் டெபாசிட்டுத் தொகையிலிருந்து கடன்கொடுக்க ஆரம்பித்தனர். ஆகையால் பாங்குகள் தாம் பெறும் நடைமுறை டெபாசிட்டுத் தொகைகளையும் (current deposits), தவணை டெபாசிட்டுத் தொகைகளையும் (time deposits) கடன் கொடுக்கப் பயன்படுத்தலாம். அவை கொடுக்கும் கடன் தொகைக்கு வட்டி வசூலிக்கலாம். ஆனால், தாம் தவணை டெபாசிட்டர்களுக்குக் கொடுக்கும் வட்டியைக் குறைவாக வைத்துக்கொண்டு, இலாபம் ஈட்டலாம். சாதாரணமாக பாங்குகள் கொடுக்கும் கடன்தொகை செக்குகள்மூலம் மீட்கக்கூடிய டெபாசிட்டுகளாக மாறுகின்றன. இதன் காரணமாகவும் செக்குகள்மூலம் மீட்கக்கூடிய தொகை கூடுகின்றது; அதாவது, பாங்குச் செலாவணி மேலும் அதிகமாக ஆக்கப்படுகின்றது. அதிகமான இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் பாங்குகள் இத்தகைய பாங்குச் செலாவணியாக்கத்தை முடிந்தவரை பெருக்குகின்றன.

பாங்குச் செலாவணியாக்கும் இவ் வதிகாரம் பல வரம்புகளுக்குட்பட்டிருக்கின்றது. தற்காப்புக்காகவே அவை சாதாரண சமயங்களில் டெபாசிட்டர்கள் தேவையைப் பூர்த்தி செய்யவும், அரிய சமயங்களில் எழும் தேவையைப் பூர்த்தி செய்யவும், போதுமான அளவு காப்புநிதிவைத்துக் கொள்ளவேண்டும். டெபாசிட்டுத் தொகைக்கு ஏற்ற காப்புநிதியின் விகிதம் வழக்கத்தையோ அல்லது சட்டத்தையோ ஒட்டி இருக்கலாம்; ஆனால், செலாவணி அதிகாரி அதை (விகிதத்தை) மாற்றலாம். மேலும், இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஷெட்யூல் பாங்குகள் (scheduled banks) தம் காப்புநிதியில் ஒரு பகுதியை மைய பாங்கில் டெபாசிட்டாக வைத்துக்கொள்ளவேண்டும்.[1] இதற்கு வட்டி கிடையாது.

1. இவை மையப்பாங்குடன் சிறப்பான தொடர்பு கொண்டிருக்கின்றன இதனால் இவைகட்குக் கடமைகளும், உரிமைகளும் இருக்கின்றன.

ஒரு நிதி நெருக்கடி ஏற்பட்டால், மக்களுடைய ரொக்க விருப்பம் (desire for liquidity) திடீரென்று மிகுதியடைந்தால் (அதாவது மிகுதியான பணத்தை அவர்கள் வைத்திருக்க விரும்பினால் — பாங்கு திவாலாகும் என்ற அச்சம் இந்த நிலையை ஏற்படுத்தும்), ஒரு பாங்கு அல்லது எல்லா பாங்குகளும் மைய பாங்கின் உதவியை நாடலாம். இந்த நிலையில் மைய பாங்கு கொடுக்கும் நிதியுதவிக்கு வட்டி யுண்டு. மைய பாங்கு வட்டிவீதத்தை உயர்த்தலாம். சில சமயங்களில் பாங்குச் செலாவணியின் அளவை மைய பாங்கு கட்டுப்படுத்தலாம். இந்த வழிகளையும், மற்ற வழிகளையும் கையாண்டு, மைய பாங்கு, வாணிக பாங்குகள் அளவுக்குமீறி பாங்குச் செலாவணி ஆக்குவதைக் கட்டுப்படுத்தலாம்.

அரசுக்கும், மற்ற வாணிக பாங்குகளுக்கும் ஒரு பாங்காகப் பணிபுரிபவன (இந்தியாவிலும் பாகிஸ்தானிலும்) மைய பாங்கின் மற்றப் பணிகள். பாங்குகளின் பாங்காகப் பணியாற்றும் மைய பாங்கு, அவைகளுக்கு இறுதிநிலையில் கடன்கொடுக்கும் நிலைய மாகவும் (lender of the last resort) இருக்கின்றது. பாங்குச் செலாவணியாக்கும் அதிகாரத்தை ஷெட்யூல் பாங்குகள்மட்டுமே பெற்றிருப்பதால், இது தீவிரக் கட்டுப்பாடுகளுக்குட்டிருக்கின்றது. இவை பொருளாதாரத்தின் தற்காலப் பகுதியில் உள்ளவை. இவைகள் மைய பாங்கின் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றன. இவைமட்டுமே மைய பாங்கில் டெபாசிட்டுத் தொகையை வைத்துக்கொள்ளவேண்டும். இதற்குப் பதிலாக இவை முதல்தர உண்டியல்களையும் (first-class bills), கருவூல உண்டியல்களையும் (treasury bills) மைய பாங்கில் தள்ளுபடி (discount) செய்து கொள்ளலாம் — உண்டியல்களைக் கொடுத்து, வட்டியை நீக்கி ரொக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஷெட்யூலில் இல்லாத மற்ற பாங்குகளும், சுதேசபாங்குகளும் (indigenous banks) இதுபோன்ற பொறுப்புகளையும் உரிமைகளையும் கொள்ளவில்லை. ஷெட்யூலில் முன்பு இல்லாத சில பாங்குகள் மைய பாங்குடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. ஷெட்யூலில் இடம் பெற்றிருக்கின்றன.

அரசின் பாங்காகப் பணிபுரியும் மைய பாங்கு செலாவணியையும் (currency), பாங்குச் செலாவணி யாக்கத்தையும் (credit-creation) கட்டுப்படுத்துவதோடுமட்டும் அல்லாமல் அதன் செலாவணிக் கொள்கையையும் (monetary policy) செயல் படுத்துகிறது. இதற்காக அது பொதுக்கடன் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. நாணயமாற்றுக் கட்டுப்பாடு (exchange control) அதன் பொறுப்பு. இப் பொறுப்புடன், நிதி நடவடிக்கைகள், ஏற்றுமதி, இறக்குமதி வரிகள் முதலியவை மூலம்

ரூபாயின் புற மதிப்பை (external value) அது நிலைப்படுத்துகின்றது. ஷெட்யூல் பாங்குகள்மீது அது கொண்டிருக்கும் அதிகாரத்தைமட்டும் பயன்படுத்தாமல், பாங்கு வீதம் (Bank Rate) வெளிச்சந்தை நடவடிக்கை (Open Market Operation) மூலமும் அது பாங்குச் செலாவணியின் அளவைக் கட்டுப்படுத்துகின்றது. (ஆராய்ச்சி மைய பாங்கும் மற்றுமோர் அலுவலாகும். இவைகளைத்தவிரச் சிறப்பான சில அலுவல்களுக்காகத் தனித் துறைகளும் நிறுவப்பெற்றிருக்கின்றன.)

பாங்குகள் கொண்டிருக்கும் குறுகியகால முதல்தர உண்டியல்களை மையபாங்கு மீள்தள்ளுபடி (rediscount) செய்யும் வீதத்தை (அதாவது சற்றுக் குறைந்த விலையில் வாங்குவது) பாங்கு வீதம் என்று கூறுவர். குறுகியகால உண்டியல்களாக இருப்பதால் இவை ரொக்கத்தன்மை பெற்றிருக்கின்றன.

பாங்கு வீதத்தை ஒட்டிச் சற்று உயர்ந்தவீதத்தில் வர்த்தக பாங்குகள் தம் கடன் தொகைக்கு வட்டியைப் பெறுவது வழக்கம். இவை பாங்கு வீதத்தை ஒட்டியே தம் வீதத்தை மாற்றிக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன. இவை இவ்வாறு செய்யத் தவறினால் இவைகளைக் கட்டாயப்படுத்த வேறு வழிகளைப் பயன்படுத்தலாம். சில ஷெட்யூலில் இல்லாத பாங்குகளும் சில பெரிய கேந்திரங்களில் இப்படியே செய்யலாம். ஏனெனில், பண நெருக்கடி ஏற்படும்போது ஷெட்யூல் பாங்குகளில் கடனுதவி பெறலாம். ஆனால், இவை இப்படிச் செய்யவேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

பாங்குவீதம் உயர்வதால், கடனின் அடக்கச் செலவு அதிகரிக்கும். எல்லாவித முதலீடும் தொழிலும் நலிவுறும். இதனால் எல்லாவித பொருளுக்கும் தேவை குறைகின்றது; விலைகள் உயர்வது தடையாகின்றது. (அல்லது அவை தாழ்வடைகின்றன.) துரதிர்ஷ்டவசமாக இது வேலையைக் குறைக்கின்றது. பாங்கு வீதம் தாழ்வடையும்பொழுது எதிர்மறை விளைவுகள் நிகழ்கின்றன.

இதனால் செலவு மிகுதியடையும்; வேலை பெருகும். ஆகையால் பாங்குவீதக் கொள்கையைக் கவனமாகக் கையாளவேண்டும். பணத்தின் அளிப்பை மாற்ற 'வெளி மார்க்கட்டு'க் கொள்கையையும் கையாளலாம். இதன்படி (மைய) பாங்கு பத்திரங்களை அல்லது கருவூல உண்டியல்களை வாங்கி அல்லது விற்பனைசெய்து மக்களிடம் இருக்கும் பணத்தைக் குறைக்கும் அல்லது பெருக்கும். அது பத்திரங்களை வாங்கினால் பொது மக்களுக்குப் பணத்தைக் கொடுக்கும். அது பத்திரங்களை விற்பனை

செய்தால் பொதுமக்கள் பணத்தைச் செலுத்துகின்றனர். பாங்கு வீதத்தினுல் ஏற்படும் மாறுதல்களைப் போலவே, வெளி மார்க்கட்டு நடவடிக்கையினுல் ஏற்படும் விளைவுகளும் இருக்கின்றன. பாங்குச் செலாவணியைக் கட்டுப்படுத்தக் கையாளப் படும் மற்றக் கொள்கைகளைப்போலவே. வெளிச் சந்தை நடவடிக்கை, பாங்கு வீதம் முதலியவைகளுடைய செல்வாக்கு இந்தியாவிலும், பாகிஸ்தானிலும், மற்ற வளர்ச்சியடையாத நாடு களிலும் பொருளாதாரத்தின் நவீனப் பகுதியில்மட்டும் இருக்கின்றது. மேலும், நெருக்கடி அதிகம் இருந்தால் நவீனப் பகுதியி லுள்ள பாங்குகளும், தொழிலதிபர்களும் (தவருன முறையில்) அமைப்பற்ற பகுதியில் (unorganised sector) கடனுதவி பெறலாம்.[1] இந்த நாடுகள் செலாவணிக் கொள்கையைச் செயலாற்றுவதில் முன்னேற்றமடைந்த நாடுகளைவிடக் குறைவாகவே வெற்றி காண முடியும். எனவே, (நிதிக் கொள்கை) போன்ற மற்ற வழிகள் முன்னேற்றமடைந்த நாடுகளைவிட, இந்த நாடுகளில் முக்கியமான இடம் பெற்றிருக்கின்றன.

ஆகையால் ஒரு குறிப்பிட்ட நொடியில் இருக்கும் பணத்தின் அளவைச் செலாவணி அதிகாரிமட்டுமே (அதாவது அரசும் மைய பாங்கும்) பெருக்கலாம். ஷெட்யூலில் அடங்காத பாங்குகளும் (non-scheduled banks), சுதேசப் பாங்குகளும் (indigenous banks), கடன் கொடுப்போரும் (money lenders) இதை ஓரளவு பெருக்க லாம். ஆனுல், ஒரு காலத்தில் பணத்தின் அளவை அதன் புழக்க வேகமும் (velocity of circulation) பாதிக்கின்றது. (பணத் தின் ஒவ்வோர் அலகும் கைமாறும் வேகமே புழக்க வேகமாகும்.)

செலவு செய்வதற்கும், முதலீடு செய்வதற்கும், ரொக்கமாகக் கொள்வதற்கும் தேவையாகும் அளவை, பணத்தின் மொத்தத் தேவையாகும். ரொக்க விருப்பம் (liquidity preference) மிகுதி யடைந்தால் புழக்கத்தில் இருக்கும் பணத்தின் அளவு குறைகின் றது முதலீடு செய்யும், செலவு செய்யும் சக்திகளும் குன்றும். மக்கள் முன்பைவிடக் குறைவாகச் செலவு செய்கின்றனர். முன்புவாங்கிய அளவு பொருள்களை வாங்கும் நிலை ஏற்படும்வரை விலைகள் குறைந் தாலன்றித் தொழிலும் வேலையும் குன்றும். உற்பத்தியாளர்களுக்கு விற்பனையும், இலாபமும் (அடக்கச் செலவு, அதாவது விலை குறைந்தாலன்றி) குறையும். இது தொழிலைத் தடைசெய்து மந்தத்தை விளைவிக்கும். மந்தகாலத்தில் சில நிறுவனங்கள் தொழிலைவிட்டு விலகும். குறிப்பாகக் கூலிகளையும் (wages)

[1] இப் பகுதியில் சுதேச பாங்குகளும் (indigenous banks) கடன் கொடுப் போரும் இருக்கின்றனர்.

சம்பளங்களையும் (salaries) அரசியல் காரணத்தினால் குறைக்க முடியாவிடில் இவை தொழிலிலிருந்து விலகவேண்டும்.

ஆனால், மக்கள் ரொக்கமாகக் கொள்ள விரும்பும் தொகை குறைந்தால், செலவுக்கும் தொழிலுக்கும் ஊக்கம் ஏற்படும். ஆகையால், உற்பத்தி பெருகும்வரை அல்லது புதிய முதலீடு ஏற்படும்வரை விலைகள் உயரும். (ஆகையால் குறைவாக உள்ள பொருள்களும் முதலீட்டுப் பொருள்களும் சமப் பகிர்வு (rationing) பெறவேண்டும்.)

பணத்தின் அளிப்பைப் பார்க்கும்போது, அதன் செயலைப் புழக்க வேகமும் அதன் அளிப்பும் பாதிக்கும். ரொக்க விருப்பம் குறையும்பொழுது, தொழில் விறுவிறுப்பாக இருக்கும். இந்நிலை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டால், பெருகும் தேவைக்கேற்ற படி, மிகுதியான செலாவணியும் பாங்குச் செலாவணியும் ஆக்கப் படும். புழக்கவேகம் பெருகும். ஆனால், தொழில் மந்தமாக இருக்கும்போது, செலாவணி வெளியீடு பெருகினால், வர்த்தகம் ஊக்கம் பெறாது. இதற்கு மாறாக செலாவணி பாங்குகளில் இருக்கும். அவை மிகுதியாகக் கடன் வசதி எளிய வட்டியில் அளிக்கத் தயாராக இருந்தபோதிலும், தொழில் மந்தம் நீடிக்கும். இலாபமும், விலையும் குறையும் என்று தொழிலதிபர்கள் கருதினால் வெகுசிலரே பாங்குகள் அளிக்கும் வசதிகளைப் பயன்படுத்த முன் வருவர்.

சில பொருளியலார் (economists) பணத்தின் அளிப்புக்கும் விலை வாசிக்கும் ஒரு குறிப்பிட்ட தொடர்புண்டு என்றும், செலாவணியும் பாங்குச் செலாவணியும் பெருக்கினால், பணத்தின் புழக்கவேகம் பெருகும் என்றும், அதன் விளைவாக விலைகள் உயரும் என்றும் கருதினர். இதேபோல் தொடர்ந்திருக்கும் பணவீக்கத்திற்குச் செலாவணி, பாங்குச் செலாவணிப் பெருக்கமே காரணம் என்று கருதினர். இக் கருத்துச் சரியன்று. வருமானங்கள் மாறாமல் இருந்தால் பணத்தின் தேவை பெருகாது. அது பயனுகாமல் இருந்து விடும். இத் தவறான கருத்தை எல்லாரும் அதிகமான பணத்தை விரும்புகின்றனர் என்ற தவறான கருத்துடன் ஒப்பிடலாம். ஒருவன் தன் வருமான அளவுவரை அல்லது அவன் பெற்றிருக்கும் கடன் அல்லது பத்திரம் அல்லது சொத்தின் அளவுவரை பணத்தைப் பெற்று, அந்தச் செலவு செய்வது கடினம் இல்லை. ஒவ்வொரு வனும் அதிகமான பணத்தை விரும்புவதில்லை, அதிகமான வருமானத்தையே விரும்புகிறான்.

பணத்தின் அலகு ஒன்றின் மதிப்பை—அது பொருள்களையும் பணிகளையும் வாங்கும் சக்தியை—அதன் தேவையையும், அளிப்

பையும் கொண்டு விளக்கலாம். மற்றப் பரிவர்த்தனைக்குட்படும் பொருள்களைப்போலவே இதன் மதிப்பையும் விளக்கலாம். இது ரொக்க விருப்ப (liquidity preference) அடிப்படையில்—(ரொக்கத்தைக்கொள்வதற்கு ஏற்படும் தேவை) விளக்கப்பெற்றிருக்கின்றது. பணப் புழக்கம்பற்றிய கருத்தை (மொத்தத் தொகை செயலற்று ஒரே நிலையிருக்கின்றது என்ற கருத்து) வலியுறுத்துகின்றது. புழக்கவேகம் மொத்தத் தொகையைப் பாதிக்கும் என்பதை இது வலியுறுத்தவில்லை: உற்பத்தி, வர்த்தகம், விலைகள் முதலியவை மாறும்பொழுது, ரொக்க விருப்பம் மாறும்; எனவே, விலைவாசிகள் மாறுவதற்குக் காரணத்தை வேறு எங்கும் தேட வேண்டியதில்லை என்பது இக் கருத்தாகும்.

மேற்கூறிய விளக்கத்தில் ரொக்க விருப்பம் பணத்தின் தேவைக்கும், தொழிலின் நிலைக்கும் காரணமாக இருக்கும் ஒன்றாகத் தோன்றுகின்றது. ஒரே முக்கியமான நிகழ்ச்சி மற்ற விளைவுகளுக்குக் காரணமாக இருப்பதால், அதன் தன்மை அல்லது அளவு யாது, அந்த நிகழ்ச்சி யாது என்று ஆராய்ச்சிசெய்வதைவிட, மேலே விளக்கப்பெற்றிருக்கும் ஆராய்ச்சியை ஏற்றுக் கொள்ளலாம்; ஏனெனில், அது உண்மையை ஒத்திருக்கின்றது; சிறந்த விளக்கத்தையும் அளிக்கின்றது. இக் கோட்பாடு ஐந்தாவது அதிகாரத்தில் வட்டிக் கோட்பாடுபற்றிக் கொடுக்கப்பெற்றிருக்கும் கருத்தை ஒத்திருக்கின்றது.

விலைவாசியில் ஏற்படும் சிறு மாறுதல்களை ஒட்டி ஏற்படும் விளைவுகளைக் கீழே கொடுத்துள்ளோம் :

இலாபத்தைச் சார்ந்திருக்கும் வருமானத்தைக் கொண்டிருப்போருக்கு (தொழிலதிபர்களும் பங்குதாரர்களும்) உயரும் விலைகள் சாதகமாக இருக்கின்றன. ஏனெனில், இறுதிநிலையில் விற்பனையாகும் பொருள்களின் விலைகள், அவைகளுடைய அடக்கச் செலவைவிட உயர்ந்தனவாக இருக்கின்றன. அடக்கச் செலவுகளில் சில, விலையுயர்வுக்குமுன் செய்யப்பட்டதாக இருக்கின்றன. ஆகையால், அவை (உயரும் விலைகள்) முதலீட்டையும் தொழிலையும் ஊக்குவிக்கின்றன. வேலையையும் பெருக்குகின்றது. கடன் வாங்கியவர்கள் எளிதில் திருப்பிக்கொடுத்துப் பயனடைகின்றனர். இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் விவசாயக் கடன் (agricultural debt) கணிசமான அளவு தீர்க்கப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, வசதியாக இருக்கும் விவசாயிகளே இதனால் பலனடைந்தனர். சம்பளம், கூலி, ஓய்வூதியத் தொகை (pension) முதலியவைகளைப் பெறுவோர், நிலையான வருமானத்தைப் பெறுகின்றனர். இவர்களை உயரும் விலைகள் பாதிக்கும். (விலைகள்

உயருவதற்கும், சம்பளம், கூலி முதலியன உயருவதற்கும் இடையில் சிறிது காலதாமதம் ஏற்படுகின்றது.) அரசின் வரி வசூல் முதலில் பெருகுவதாலும், அதன் செலவு உடனடியாகப் பெருகாமையாலும் அரசு இலாபத்தைப் பெறுகின்றது. ஆனால், நீண்ட காலத்தில், விலைகள் தொடர்ந்து உயருவதால் பணவீக்கம் ஏற்படும் என்ற அச்சமும், அன்னியர்கள் நம் நாட்டுச் செலாவணியில் கொண்டிருக்கும் நம்பிக்கையை இழுத்தலும் ஏற்படும். பணவீக்கத்தைத் தடுக்க எடுக்கும் நடவடிக்கைகளை மக்கள் விரும்பாமல் இருக்கலாம். (பாங்குச் செலாவணியாக்கத்தைக் கட்டுப்படுத்த நாம் முன்பு குறிப்பிட்ட நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.) விலையுயர்வு தடைசெய்யப்பட்டால், விலைகள், இலாபம், விற்பனை முதலியன மிகுதியடையும் என்று கருதி, முதலீடு செய்தவர்கள் தொல்லைகளுக்குட்படுவார்கள். ஏனெனில், அடக்கச் செலவு கட்டுபடியாகும்படி அவர்கள் தம் பொருளை விற்பனை செய்யமுடியாது.

விலைகள் குறைந்தால், மேலே கூறியவைகளுக்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படும். குறிப்பாகத் தொழிலும் வேலையும் குன்றும். பணவீக்கம் ஏற்படுத்தும் நிலையில் உள்ள விலையுயர்வைத் தடுப்பது நன்மை பயக்கும். ஆனால், தொடர்ந்து சரியும் விலை வாசி அபாயகரமானது. விலைகளை நிலைபெறுத்துவது மிகவும் கடினம். வளர்ச்சியடையும் நாடுகளில் தொழிலும், முதலீடும் ஊக்குவிக்கப்படும்வரை, இது (விலைவாசி நிலைபெறுதல்) விரும்பத் தக்கதன்று. இதற்குமாறாக முதலில் ஏற்படும் விலையுயர்வை அடுத்து வேலையும், பண வருமானங்களும் (money income) உயரும். இது உற்பத்திப் பெருக்கத்தைத் தூண்டும். இது அதிகம் தாமதிக்கப்படாவிடில் உண்மை வருமானத்தை (real income) சமமான அளவில் (அல்லது ஏறக்குறைய சமமான அளவில்) பெருக்கும்.

விலைவாசி உயர்வைத் தடைசெய்யாவிடில், மிகவும் பாதகமான விளைவுகள் ஏற்படும். பணவீக்கம் என்றழைக்கப்படும் போக்கு ஏற்படும். வருமானங்களும், (அவைகளை அடுத்துப் பொருள்களின் தேவையும்) பொருள் உற்பத்தியைவிட மிகுதியடைவதைப் பணவீக்கம் என்று நாம் விளக்கலாம். 'மிகுதியான பணம் குறைவான பொருளைத் துரத்துவது.' இது பல வழிகளில் ஏற்படலாம். குறிப்பாக வேலைவாய்ப்பு பெருகினால் வேலை செய்வோரின் கூலிகளும் மற்ற வருமானங்களும் உயரும். முதலீட்டைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படும் என்று எதிர் பார்ப்பதாலோ, அல்லது வேறு காரணங்களால் தாமதம் ஏற்பட்டாலோ, உற்பத்தி உடனடியாகப் பெருகுவதில்லை. பொருளுற்

பத்தியைவிடத் தேவை அதிகமாக இருக்கின்றது. உயர்ந்த பண வருமானத்தைக் கொண்டிருப்போர், குறைவான நுகர்வோர் பொருளை வாங்குவதில் போட்டியிடுகின்றனர். நுகர்வோர் பொருளின் விலை உயர்கின்றது. உற்பத்தி குறுகிய காலத்தில் பெருகாவிடில் விலை உயர்ந்துகொண்டே செல்லும். (விவசாயப் பண்டங்களின் உற்பத்தி குறுகிய காலத்தில் பெருகாது.) மேலும், பருவமழை தவறுதல், வெள்ளம் வருவதுபோன்ற இயற்கை விபத்துகளாலும் உணவுப் பொருள்களும், கச்சாப் பொருள்களும் நீண்டகாலத்தில் கிடைப்பதற்கு அருமையாகிவிடும்; தேவையும் பூர்த்தியாகாது.

இந்த நிலை மாற்றப்படாவிடில், ஒரு விபரீதமான 'கட்டுக் கடங்காத பணவீக்கம் (run-away-inflation)' ஏற்படும். பணத்தை ரொக்கமாகக்கொள்ள ஏற்படும் தேவை குன்றும். ஏனெனில், அதன் விலை குன்றும் என்று மக்கள் அஞ்சுவர். ஒவ்வொருவனும் பணத்தைப் பண்டமாக மாற்ற விரைகின்றான். மக்கள் அதிகமான பண்டங்களை வாங்குவதற்கு, அவர்களுக்கு உதவுவதற்காக மிகுதியான செலாவணித் தாள்களையும் மற்ற ரொக்கப் பணங்களையும் அரசு உற்பத்திசெய்யும். விலைகளும், வாழ்க்கைச் செலவும் (cost of living) உயருகின்றன. கூலிகளையும், சம்பளங்களையும், மற்ற வருமானங்களையும் உயர்த்தவேண்டும். மக்கள் பணத்தை ஏற்றுக்கொள்ளாமல் பண்ட மாற்று முறையை அடையும்வரை அதன் மதிப்புக் குறையும். பொருளாதாரம் பூரணமாகப் பாதிக்கப்படுகின்றது.

எனவே, 'கட்டுக்கடங்காத' பணவீக்கத்தைத் தவிர்க்க வேண்டும். பணவீக்கப் போக்கைத் தொடக்கத்திலேயே கண்டு பிடித்துவிட்டால் அதை எளிதில் தடுக்கலாம். ஆகையால் விலை வாசியையும், அதில் ஏற்படும் மாறுதல்களையும் அளப்பது நல்லது. ஆனால், எவ்விதப் பயனுக்கும் பொருந்தும் ஒரு விலைவாசிக் குறியீட்டெண்ணை (price index) ஏற்படுத்தமுடியாது. எல்லா விதப் பொருள்களையும் பணிகளையும் கணக்கிலெடுத்து (அவைகளுடைய முக்கியத்துவம் வெவ்வேறாக இருக்கும்.) அவைகளுடைய விலைகளைக்கொண்டு ஒரு பொருள் செறிந்த குறியீட்டெண்ணைத் தயார் செய்ய முடியாது. ஆகையால், தேர்ந்தெடுக்கப்படும் குறியீட்டெண்களை வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் (cost of living index), மொத்த விலைக் குறியீட்டெண் (index of wholesale prices) என்றழைக்கிறோம். வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணை, குறிப்பிட்ட நகரங்களுக்கும் பகுதிகளுக்கும் தகுந்தவாறு தயார் செய்கின்றனர். இக் குறியீட்டெண்கள் பொது விலை வாசிகளை எடுத்துக்காட்டுவதில் குறைபாடுள்ளவையாக இருந்த

போதிலும் இவை பணவீக்க அபாயம் ஏற்படும் என்ற எச்சரிக்கை கொடுக்கக்கூடிய சின்னங்களாக இருக்கின்றன.

B. பொது நிதி இயலின் இடம்

வருவாய் (revenue), செலவுபற்றிய கொள்கைகளைத் தேர்ந்தெடுப்பது, அவைகளைச் சமன்படுத்துவதுபற்றியது பொது நிதியியல். இவைகளைக்கொண்டு அரசு தன் பொருளாதார, நிதிக் கடமைகளைச் செய்கின்றது; நோக்கங்களையும் நிறைவேற்றுகின்றது. ஆகையால் குறிப்பிட்ட பொருளாதாரத்தையும், அதன் நிதி அமைப்பையும் (financial structure), நோக்கங்களையும் புரிந்து கொண்டே நிதியியல் ஆராய்ச்சி செய்யமுடியும். எந்த நாடுகளுக்கும் பொருந்தும் ஆராய்ச்சியை நாம் இங்குச் செய்யமுடியாது. சில முக்கியமான பிரச்சினைகளைமட்டும் இங்குப் பார்த்து அவைகளைத் தீர்க்கவல்ல விதிகளையும், அவ் விதிகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்பதையும்மட்டுமே நாம் இங்குக் கூறலாம்.

அரசியலாருக்கு ஒதுக்கப்பெற்றிருக்கும் அலுவல்களைச் செய்வதற்கு, நிதி நிர்வாகம் செய்யப்படும் விதம் பொது நிதியியலாகும். இந்த நிர்வாகம் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் (national budget) [இது முதல் கணக்கு (capital account), நடைமுறைக் கணக்கு (current accounts) என்ற இரு பகுதிகள் கொண்டது] மூலம் நடைபெறுகின்றது.[1] ஜனநாயகத்தில் (democracy) பொது நிதி நிர்வாகமும் அதன் நோக்கங்களும் பாராளுமன்றத்தின் (parliament) விருப்பத்திற்குட்பட்டிருக்கின்றன. தனித்தவர் ஆட்சியில் அரசின் நிதி நிர்வாகத்தை மக்கள் விருப்பம் குறைவாகவே கட்டுப்படுத்தும். ஆனால், ஆட்சிபுரிவோர் அல்லது ஆட்சிபுரியும் கட்சிக்கு மக்கள் ஆதரவு வேண்டும் என்றால், மக்களுடைய விருப்பம் புறக்கணிக்கப்படாது. குறிப்பிட்ட நிதிக் கொள்கைகள் ஒரு சிலருக்குச் சாதகமாகவும் மற்றவர்களுக்குப் பாதகமாகவும் இருப்பின், அவை எல்லா வகுப்பினருடைய ஆதரவையும் பெறமுடியாது.

பொது நிதி நிர்வாகத்தின் அலுவலும் நோக்கமும்பற்றிய கருத்துகள் அண்மைக்காலத்தில் முன்னேற்றமடைந்த நாடுகளிலும், வளர்ச்சியடையும் நாடுகளிலும் மாறிவிட்டன. எந்த நோக்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்தல் வேண்டும் என்பதுபற்றிய கருத்துகளும் மாறிவிட்டன. இந்தியாவில் இரு உலகப்போர்களுக்கிடையிலுள்ள காலத்தில் புராதனக் கருத்துப் பரவலாக இருந்தது. இது இங்கிலாந்தின் வழக்கத்தை ஒட்டி இருந்தது. பாது

[1] நடைமுறைக் கணக்கு, ஆண்டுதோறும் நடைபெறும் வரவு-செலவுபற்றியது. முதல் கணக்கு நீண்டகால இனங்கள் பற்றியது.

காப்பு, நிர்வாகம், ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டல், அயல் நாட்டுத் (பொருளாதார, அரசியல்) தொடர்புகளைப் பேணுதல் முதலியவைகளுக்குமட்டுமே பணத்தைச் செலவுசெய்யவேண்டு மென்பது இக் கருத்தாகும். கல்வி, பொதுச் சுகாதாரம், விவசாய ஆராய்ச்சி முதலிய முக்கியமான துறைகளில் செய்யும் செலவுகள் கூட மிகக் குறைவான அளவில் இருந்தன. ஏனெனில், அன்னியர் ஆட்சியில் வரிப்பளுவை மிகக் குறைவாக வைத்துக்கொள்ள விரும்பினர்.

வேண்டிய செலவுகளைச் சமாளிப்பதற்காகப் போதுமான வரு வாய் ஈட்டப்பெற்றது. பல பகுதியினருடைய வரிசெலுத்தும் ஆற்றலுக்குத் தகுந்தவாறு (taxable capacity) பொது வருவாயை ஈட்டவேண்டியிருந்தது. செல்வம், வருமானம், பொதுநலம் முதலி யன மீள்பகிர்வாகும்படி (redistribution) (இதுபற்றிய அளவுகள் கிடைக்கவில்லை) வரிவசூல் அமைந்திருந்தது. மேலும், வரவு செலவு ஆண்டுதோறும் சமனுகாவிடினும் குறுகிய காலத்தில் சமன் பாட்டை ஏற்படுத்த முயற்சி செய்தனர். இதனால் மந்தகாலத்தில் (1930 ஆம் ஆண்டை அடுத்துவந்ததைப்போன்ற காலம்), வரு மானமும், வரி செலுத்தும் ஆற்றலும் சரிந்தன. இக் காலங்களில் செலவைச் சுருக்கவேண்டியதாயிற்று; அல்லது வரி வீதத்தை உயர்த்தவேண்டியதாயிற்று. அல்லது நடைமுறையில் நடந்ததைப் போல் இரு முறைகளையும் பின்பற்றவேண்டியதாயிற்று.

அப்பொழுது 'கினீஷியப்புரட்சி' (Keynesian revolution) ஏற்படவில்லை. காலப்போக்கில் செழிப்பு அடுத்தடுத்து மாறுவதை (வர்த்தகச்சுழலை—trade cycle) சரியான வரவு-செலவுத் திட்ட நட வடிக்கைகள்மூலம் கட்டுப்படுத்தலாம் என்ற உண்மையை ஒட்டிய பொருளியல் கருத்தே கீனீஷியப் புரட்சியாகும். செலவு செய்யும் சக்தி தற்காலிகமாகக் குன்றுவதால், மந்தங்கள் ஏற்படு கின்றன என்றும், இத் தீமையைப் பொதுத்துறையில் செலவைப் பெருக்குவதால் நீக்கலாம்; அல்லது குறைக்கவாவது செய்யலாம் என்று கீன்சு (Keynes) கருதினர். உதாரணமாக எங்கும் பொது வேலைத் திட்டங்களை நிறுவி, வேலையிலமராதவரை வேலையில் அமர்த்தலாம். இதன் விளைவாகப் பொருளாதாரத்தை நிலைப்படுத்து வது, நிதி நிர்வாகத்தின் நோக்கங்களுள் ஒன்றுயிற்று. ஆனால், வரவு செலவைச் சமப்படுத்துவது என்ற பழைய நோக்கம் மறைந் தது. தற்சமயம் வசூலாகும் வரிகளும் மற்ற வருமானங்களும் கொடுக்கும் வருவாய்க்குத் தகுந்தபடி செலவைக் குறைத்தல் அல்லது வரிப்பளு மிகவும் அதிகமாக இருக்கும்போது, வரிவீதத்தை உயர்த்துவதுபோன்ற கொள்கையை விட்டு, பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைத் (dieficit budget) தயார்செய்து உபரியாகச்

செலவு செய்யும் திறனைக்கொண்டு வேலைவாய்ப்பைப் பெருக்குவதும் செழிப்பை மீட்பதும் தற்காலத்திய நோக்கங்களாகும்.

முன்னேற்றமடைந்த நாடுகளுக்குப் பொருந்தும் கொள்கையை, வளர்ச்சியடையாத நாடுகளில் பயன்படுத்தி நல்ல பலனை அடையவில்லை. ஆனால், இங்குப் பொருளாதார மந்தத்தை எதிர்த்து எடுக்கும் பழைய நடவடிக்கைகள் கைவிடப்பட்டன; அல்லது மாற்றப்பட்டன. நிலைப்படுத்துவதை விட்டு வளர்ச்சியைத் தூண்டும் நோக்கத்தையே இந்த நாடுகள் கொண்டிருக்கின்றன. பல நாடுகள் அயல்நாட்டு மூலதனத்தைப் பெற்றன. செலவுகளைக் குறைத்து, வரிகளை உயர்த்தி வரவுசெலவுச் சமன்பாட்டை ஏற்படுத்துவது முக்கியமானதாகக் கருதப்படவில்லை. மந்தகாலத்தில் உள்நாட்டிலேயே கடன் வாங்கமுடியும். போகப் பொருள்கள் (luxury goods) மீது அதிகமான வரியை விதித்து, அவசியமாக இருக்கும் பொருள்கள்மீது உள்ள பளுவைக் குறைக்கலாம். அடிப்படைத் தொழில்களையும், வளரும் தொழில்களையும் விடுவிக்கலாம்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் வர்த்தகச் சுழல் (trade cycle) (இயற்கை விபத்துகளிலிருந்து மாறுபட்டிருக்கும்) முன்னேற்றமடைந்த நாடுகளைப்போல் அவ்வளவு முக்கியமான இடத்தைப் பெறவில்லை. உள்நாட்டில் நம்பிக்கை இழப்பின் காரணமாக முதலீடு குன்றி நாடெங்கும் மந்தமும் வேலையின்மையும் ஏற்படவில்லை. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உற்பத்தியாகும் பொருள்களுக்கு அயல்நாட்டுத் தேவை குறைவதால், உலகம் முழுவதும் பரவியுள்ள வர்த்தகச் சுழல் இந்த நாடுகளைப் பாதிக்கின்றன. இந்த நிலையில் முன்னேற்றமடைந்த நாடுகளுக்குப் பொருத்தமான, (வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்காக), பொதுச்செலவைப் பெருக்கும் கொள்கை பலனளிக்காது. மேலும் பணவீக்கத்தை ஏற்படுத்தாமல் இக் கொள்கையைப் பின்பற்ற முடியாது. அயல் நாடுகளின் தேவை குறைவதை உள்நாட்டு நடவடிக்கைமூலம் மாற்றமுடியாது. அரசின் செலவைப் பெருக்குவதால் வேலையின்மையும், குறைவேலையும் நிவர்த்தியாகா; பொருளாதாரத்தின் முக்கியமான பகுதிகள் நெகிழ்ச்சியற்றனவாக இருப்பதால், உற்பத்தியை உடனடியாகப் (குறுகிய காலத்திலாவது) பெருக்கமுடியாது. அதாவது கிராமாந்தர, விவசாயப் பகுதியில் உற்பத்தி உடனடியாகப் பெருகாது.

தேவை, தற்காலிகமாகக் குன்றுவதால் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மந்தம் ஏற்படுவதில்லை. தொழிலாளர்களுடன் ஒத்துழைக்கவேண்டிய மற்ற உற்பத்திக் காரணிகள் போதிய அளவில் கிடைக்காமையால் மந்தம் ஏற்படுகிறது. இந்தியாவின் பிரச்சினை

வர்த்தக சுழல் அன்று. வேலையின்மையும், குறைவேலையும், மிகவும் வறுமையான நிலையுமே அதன் பிரச்சினைகள். எனவே, இந்தியாவின் தேவை பொருளாதாரத்தை நிலைப்படுத்தல் அன்று; வளர்ச்சியேயாகும். இதுவே நாட்டின் பொருளாதாரக் கொள்கையும், நிதி நிர்வாகத்தின் குறிக்கோளும் ஆகும்.

செல்வம், வருமானம், பொதுநலம் முதலியவைகளை மீள்பகிர்வு செய்ய, இரு நாடுகள் (இந்தியா, பாகிஸ்தான்) விடுதலை யடைந்ததிலிருந்து முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. இதை இரு நாடுகளும் தம் அரசியலமைப்பிலும், திட்டங்களிலும் தம் நோக்கமாகக் காட்டியுள்ளன. மீள்பகிர்வு தனியாட்களுக்கிடையேமட்டும் நடைபெறுமல், பல பகுதிகளுக்கிடையேயும் நடைபெற வேண்டுமென்பதை இங்குக் குறிப்பிடலாம். பல பகுதிகள் செல்வ வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன. பிச்சையிடுதல் கீழ்நாட்டுச் சமயங்களின் ஒரு முக்கியமான கூறாகும். மீள்பகிர்வை 'அதிகாரபூர்வமான தருமம்' என்றழைக்கலாம்.

வளர்ச்சியும், (சிறிது குறைந்த அளவு) மீள்பகிர்வும் வலியுறுத்தப்படுவதால், வரவு செலவுத் திட்டத்தில் செலவு பாதிக்கப்படுகின்றது. மக்கள் தொகை உயரும் வீதத்தில் அதிகரிப்பதால் செலவு மேலும் பாதிக்கப்படுகிறது. நிர்வாகத்துறைகளிலுள்ள எல்லாப் பணிகளின் அடக்கச் செலவும், கல்வி, பொதுச்சுகாதாரம் முதலியவைகட்காகச் செய்யும் செலவும் பெருகுகின்றன.

ஆகையால் நாடு விடுதலை அடைந்ததிலிருந்து உண்மைச் செலவும் (real expenditure), வரவு செலவுத் திட்டத்தின் பணச் செலவும் பெருகியதில் வியப்பொன்றும் இல்லை. நடைமுறைக் கணக்கிலும், முதல் கணக்கிலும் எல்லாச் செலவினங்களும் பெருகிவிட்டன. பல்வேறு செலவினங்களுக்கு ஒதுக்கிய தொகைகளையும் அவைகளை மாற்றியதையும் பார்ப்பதற்கு இங்கு இடமில்லை. இவற்றுள் சிலவற்றை அரசியல், நிர்வாகக் காரணங்கள் நிர்ணயம் செய்தன; பொருளாதாரக் காரணங்கள் நிர்ணயிக்கவில்லை. திட்டமிட்ட செலவுபற்றிய பிரச்சினைகள் சிலவற்றை 12ஆவது அதிகாரத்தில் விளக்கியுள்ளோம். முக்கியமான செலவினங்களைப் பார்க்கும் பொழுது இப்பொழுதும் தற்காப்பே இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் முதல் இடத்தைப் பெற்றிருக்கின்றது. செலவினங்களைச் சரிவர வகைப்படுத்தினால் முன்னேற்றம் அடுத்த இடத்தைப் பெறும். பல்வேறு பயன்களுக்கு நிதி ஒதுக்குதலையும், செல்வம், வருமானம், பொதுநலம் முதலியவைகளை நியாயமாக மீள்பகிர்வு செய்தலையும், சமுதாயத் தேவைகளையும் பணிகளையும் பூர்த்தி செய்வதையும் இத் தொண்டுகளைச் செய்ய

நிதி திரட்டலையும் பொது நிதியியல் என்றழைக்கலாம். சில பணிகளுக்காகச் செலவு செய்வதைப் பார்க்கும்போது இவை சில அம்சங்களில் தீவிரமாகவும், சிக்கலாகவும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவையாகவும்கூட இருக்கின்றன. வளர்ச்சியின் தேவை தனியாருக்குக் கிடைக்கும் நியாயத்திற்கும், சமுதாயத்தின் நியாயத்திற்கும் எதிர்மறையாக இருக்கின்றது.

பல்வேறு செலவினங்கள்பற்றிய விளக்கங்களைவிட, விவரமான விளக்கத்தை முக்கியமான வருவாயின் மூலங்களுக்குக் கொடுத்து வருவாய் ஈட்டுவதுபற்றிய கொள்கையின் நன்மைகளையும் தீமைகளையும் இங்குக் கூறலாம். இந்த மூலங்கள் மத்திய அரசின் வரியைச் சேர்ந்தவையா அல்லது மாநிலங்களின் வரியைச் சேர்ந்தவையா என்பதைக் கவனிக்காமலே முதன்முதலில் நாம் விளக்கத்தைக் கொடுப்போம். பின்னர்க் கூட்டாட்சி (federal government) யின் பிரச்சினைகளைப் பார்ப்போம். (இந்தியா, பாகிஸ்தான் உள்பட) வளர்ச்சியடையாத நாடுகளின் வருவாயின் முக்கியமான மூலங்களைக் கீழே கொடுத்துள்ளோம் :

(1) வரி விதித்தல், (i) நேர்முக வரி (direct taxes), (ii) மறைமுக வரி (indirect taxes).

(2) வரியில்லாத வருவாய், (i) உள்நாட்டு, அயல்நாட்டுக் கடன்களும் சிறு சேமிப்பும், (ii) குறுகிய காலக் கடன்கள், (iii) அரசியலார் நடத்தும் தொழிலில் கிடைக்கும் இலாபம்; நிர்வாகத் துறைகளின் (கிடைத்தால்) உபரி வருவாயும், பொதுப்பணிகளின் வருவாயும், (iv) மாநிலங்களுக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் தனியாருக்கும் கொடுக்கப்பெற்றுள்ள கடன் தொகை அளிக்கும் வட்டி, (v) அரசு கொண்டிருக்கும் (உள்நாட்டு வெளிநாட்டு) செலாவணிக் காப்பு நிதி (reserve), (vi) பற்றுக்குறை நிதியாக்கம் (deficit financing).

தனியாரும், குடும்பங்களும், நிறுவனங்களும் கொண்டிருக்கும் செல்வம், வருமானங்கள், சொத்துகள் முதலியவைகளை ஆதாரமாகக்கொண்டு அவர்களுடைய தனி, ஒப்பீட்டு வரி செலுத்தும் திறனை மதிப்பிட்டு அவர்கள்மீது விதிக்கப்படும் வரியே நேர்முக வரியாகும். பொதுமக்கள் பயன்படுத்தும் பொருள்கள்மீதும் பணிகள்மீதும் விதிக்கப்படும் வரிகள் மறைமுக வரிகளாகும். யார்மீது விதிக்கப்பட்டதோ அவர்களே செலுத்தவேண்டியது நேர்முக வரி என்பதும் அதை மற்றவர்மீது திருப்ப முடியாதென்பதும், ஆனால், மறைமுக வரி நுகர்வோர்மீது திருப்பப்படுமென்பதும் பழைய கருத்தாகும். சில சந்தர்ப்பங்களில் நேர்முக வரி விலையுயர்வுக்குக் காரணமாக இருக்கும். உதாரணமாக, ஒரு நிறுவனத்

தின் பண்டங்களுடைய விலை அல்லது சிலர் ஆற்றும் பணியின் விலை உயர்வதற்குக் காரணமாக இருக்கலாம் என்பது தற்காலத்திய கருத்தாகும். எனினும், வரிகள் நேர்முக வரிகள் என்றும் மறைமுக வரிகள் என்றும் பிரிக்கப்பட்டிருப்பது வசதியாக இருக்கின்றது. இப் பாகுபாடு இன்றும் பயனில் இருக்கின்றது.

என்னென்ன வரிகளை எந்தெந்த வீதங்களில் விதிப்பது என்பதை முடிவு செய்யும்பொழுது, கீழ்க்கண்ட விதிகளை மனத்தில் கொள்ளவேண்டும். (i) வரி செலுத்துவோரின் செலுத்தும் திறனை மதிப்பிட்டு இதை ஆதாரமாகக்கொண்ட நியாயம் இருக்க வேண்டும். (ii) வரி செலுத்துவோர் செய்யும் தியாகம் (sacrifice) குறைந்தபட்சமாக இருத்தல்வேண்டும். இது வசூலாக வேண்டிய தொகையுடன் தொடர்புகொண்டதாக இருக்கவேண்டும். (iii) வசூல் செய்வதில் சிக்கனமும், நிர்வாக வசதியும் இருக்கவேண்டும். (இவ் விரண்டும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. உதாரணமாக வருமான வரியை மத்திய அரசு வசூல்செய்து மாநிலங்களுடன் பகிர்ந்துகொண்டால், இது சிக்கனமாகவும் வசதியாகவும் இருக்கும்). (iv) வசூலாகும் தொகை, குறிப்பாக வருமான நெகிழ்ச்சியைத் தொடர்ந்து கிடைக்கும் தொகை கணிசமாக இருத்தல் வேண்டும். தேசிய வருமானம் பெருகும்பொழுது வரி வசூலும் பெருகவேண்டும். (v) பல வரிகள் வசூலாகும்பொழுது ஒன்றை ஒன்று சரிக்கட்டுவதாக இருத்தல்வேண்டும்.

பொது வேலைகள் எல்லாவற்றுக்கும் வேண்டிய தொகையை ஒரே வரி மூலம் வசூல் செய்யலாம் என்று சிலர் கருதுகின்றனர். இந்த முறை மிகவும் எளிதாக இருக்கும். ஆனால், இதில் பல குறைபாடுகள் இருக்கும்.

அரசு அளிக்கும் நன்மைகளுக்காக எல்லாரும் வரியை ஒரே வீதத்தில் செலுத்தவேண்டும் என்ற உண்மையைச் சிலர் கூறலாம். ஆனால், இந்த முறை குறைந்த வருமானத்தைப் பெறுவோரை மிகவும் பாதிக்கும். விகித அல்லது வளர்வீத (proportional or progressive) வருமான வரியைவிதித்து, மிகவும் ஏழையானவர்களுக்குக் குறைவான பற்பல வீதங்களை அமைத்தால் இந்த வரியை வசூலிப்பது கடினம். வசூல் செய்வதற்கு அதிகமான தொகையைச் செலவு செய்யவேண்டும். ஏழைகளிடமிருந்து வசூலாகும் தொகை அதற்காகச் செலவு செய்யப்படும் அடக்கச் செலவைவிட அதிகமாக இருக்கும். அரசுக்குத் தேவையான தொகையைச் செல்வர்களிடமிருந்தும் நடுத்தர வகுப்பினரிடமிருந்தும் வசூல் செய்வதால், அவர்கள்மீது மிகுதியான வரிப்பளு சுமத்தப்படுகின்றது. (உற்பத்தியில்) அவர்களுக்கு இதனால் ஊக்கம் குறை

கின்றது. ஆகையால் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மிகவும் ஏழையானவர்களுக்கு வருமான வரி கிடையாது. விடுப்பு நிலையை விட, உயர்ந்த நிலையில் இருப்போர் வளர்வீதத்தில் வரி செலுத்துகின்றனர். அதாவது உயர்ந்த வருமானப் பகுதியில் இருப்போரின் வருமானத்தில் அதிகமான விகிதத்தில் வரி செலுத்துகின்றனர். வருமானங்கள் பல்வேறு வருமானப் பகுதிகளாக அல்லது படிவங்களாகப் (slabs)ப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

வருமானம் பெருகப்பெருக உபரியாகக் கிடைக்கும் வருமானத்தின் இறுதிநிலைப் பயன் (marginal utility) குறையும் என்ற தத்துவத்தை வளர்வீத வரிமுறை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. இத் தத்துவத்தைப் பொதுவாக எல்லாரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இதை மெய்ப்பிக்க வழி ஏதுவும் இல்லை. இறுதிநிலைப் பயன் குறைகின்றது என்று கற்பனை செய்து கொண்டால், இது ஒவ்வொரு படிவத்திலும் எந்த அளவு குறைகின்றது என்பதை நிர்ணயிக்கவும் வழி இல்லை. ஆண்டு வருமானம் ரூ. 200 ஆக இருக்கும்பொழுது அதிலிருந்து ரூ. 1-ஐ வரியாக வசூலித்தால், ஆண்டு வருமானம் ரூ. 20,000 ஆக இருக்கும்பொழுது அதிலிருந்து எவ்வளவு தொகையை வரியாக வசூல் செய்யவேண்டும் என்பதை யார் கூறமுடியும்? வரி வசூல் ஏறக்குறையத்தான் நியாயமாக இருக்கமுடியும். இந்த நியாயத்தைப் பற்றிய கருத்து காலப்போக்கில் மாறும்.

ஏழையான நாடுகளில் உயர்ந்த படிவத்தில் உள்ளவர்கள்மீது சுமத்தப்படும் வரியை (பல பெயர்கள் கொடுத்து) உயர்த்திய போதிலும் எல்லாவித நிறுவனங்களையும் இவ் வரிகளுக்குட்படுத்திய போதிலும் அரசின் தேவைக்குவேண்டிய தொகை முழுவதையும் பெற முடியாது. குறிப்பாக வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கை மக்கள் தொகையில் மிகச்சிறிய பகுதியாக இருக்கும் பொழுது இது மிகவும் கடினமாகும். உயர்ந்த வருமானங்கள்மீது அதிக வரியைச் சுமத்தினால், தொழிலுற்பத்தியில் காட்டப்படும் ஊக்கம் குன்றுவதோடல்லாமல், மக்கள் வரி செலுத்துவதைத் தவிர்க்கவும், இதிலிருந்து தப்பவும் முயற்சிசெய்வர். தனியார் துறையில் முதலீடு பாதிக்கப்படும். 'பொன்முட்டையிடும் வாத்து கொலையாகும்.'

ஆகையால் மற்ற வரிகளையும் விதிக்கின்றனர். இவற்றுள் செல்வம், கொடை (gift), முதல் பெருகி இலாபம் கொடுத்தல் (capital gains), செலவு முதலியவைகள்மீது விதிக்கப்படும் வரியும், நிலவரியும், மரண வரியும் (estate duty—இறக்கும்பொழுது ஒருவருடைய சொத்தின்மீது விதிக்கப்படும் வரி) நேர்முகமானவை

இவைகளை இங்கு விவரமாகப் பார்க்கமுடியாது. செல்வத்தை மதிப்பிடுவது கடினமாக இருந்தபோதிலும், ஆண்டுதோறும் அதன்மீது விதிக்கப்படும் வரி குறைவாக இருந்தால், அதிகமாக வருமான வரி செலுத்துவோரின் ஊக்கமும் தொழிலுற்பத்தித் திறனும் பாதிக்கப்படா. அவர்களுடைய இலாபமும் பாதிக்கப்படாது. மரண வரியை விதித்தலும், வசூல் செய்வதும் எளியதாக இருக்கின்றன. இதிலிருந்து வரி செலுத்துவோர் தப்புவது கடினம். முதல் பெருக்க இலாபத்தின்மீது விதிக்கப்படும் வரி (இழப்புக்கு ஈடு செய்தபிறகு) காலப்போக்கில் மிகக் குறைவான தொகையை அளிக்கின்றது. செலவுமீது விதிக்கப்படும் வரித் தொகையை வசூல்செய்வதும் இந்த வரியை நிர்வாகம் செய்வதும் கடினமாக இருந்ததால் இந்தியாவில் இந்த வரியை வசூல் செய்யமுடியாது என்று குறுகியகால அனுபவத்திற்குப் பிறகு இதைக் கைவிட்டனர். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் நிலவரி மொத்த வரித்தொகையில் கணிசமான பகுதியை அளித்தது. ஆனால், அண்மைக்காலத்தில் இது மிகக் குறைவான வரித்தொகையைக் கொடுக்கக்கூடியதாக மாறிவிட்டது.

குறிப்பிட்ட பொருளாதாரச் சமூக நோக்கங்களை நிறைவேற்றப் பல்வேறு வரிச்சலுகைகளைத் தனியாருக்கும், குடும்பங்களுக்கும், நிறுவனங்களுக்கும் கொடுக்கின்றனர். உதாரணமாக, ஒருவர் ஈட்டிய வருமானத்திற்கும் ஈட்டாமல் பெற்ற வருமானத்திற்கும் வேறுபாட்டைக் காட்டுகின்றனர். வரிக்குட்படாத தேய்மானத் (depreciation) தள்ளுபடி, வளர்ச்சிக்காகச் சலுகை, ஆதரவு அளிக்கப்படும் சில தொழில்களில் உள்ள புதிய நிறுவனங்களுக்கு வரியிலிருந்து விடுப்பு முதலிய சலுகைகளைக் கொடுக்கின்றனர். இந்த வழிகள்மூலம் வரியைத் திட்டமிட்ட முறையில் ஆக்கமுறையில் விதிக்கலாம். அயல்நாட்டு நிறுவனங்களுக்கும், முதலீடு செய்வோருக்கும் ஊக்கமின்மை ஏற்படுவதைத் தடைசெய்யச் சட்டத்தை வேண்டியபடி திருத்தியமைக்கலாம்.

நேர்முக வரிகள் ஓரளவுக்குமேல் வரித்தொகை அளிக்கமுடியாததால், மறைமுக வரிகளை எவ்வாறு விதிக்கலாம் என்றும், வரிகளின் அமைப்புக்குள் அவைகளை எப்படிப் புகுத்தலாம் என்பதையும் பார்க்கவேண்டும். எல்லாரும் நாட்டின் செலவுக்கு வேண்டிய தொகையைச் செலுத்துவதில் பங்குகொள்ளவேண்டும் என்ற விதியை ஒட்டி மறைமுக வரிகளை விதிக்கலாம். இவை ஏழைகள் மீது மிகுதியாகச் சுமத்தப்படாமல் இருக்கவேண்டும். மறைமுக வரிகளில் வரி செலுத்துவோரின் இடம் இருக்கின்றது. உயர்ந்த வரிக்குட்பட்ட பொருள்களை வாங்காமல், குறைந்த வரிகளுக்குட்பட்ட பொருள்களை வாங்கலாம். ஆனால், எல்லாரும் பயன்படுத்தக்

கூடிய பொருள்கள்மீது குறைவான வரி விதித்தால், மிகவும் ஏழைகளாக இருப்போரிடமிருந்துகூட ஒரு தொகையை வசூலிக்க லாம். மறைமுக வரிகள் ஏழைகளைப் பாதிக்கின்றன என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், இக் கூற்று உண்மையாக இருக்கவேண்டிய தில்லை. ஏனெனில், எப் பொருள்கள்மீது எந்த வீதத்தில் வரிகள் விதிக்கப்படுகின்றன என்பதே வரிப்பளுவை நிர்ணயம் செய் கின்றது. ஏழைகள் பயன்படுத்தும் பொருள்கள் குறைந்த சுங்க வரி (excise) களுக்குட்பட்டிருக்கின்றனவா என்பது இதை நிர்ண யிக்கும். ஏழைகள் பயன்படுத்தும் பொருள்மீது சுங்கவரிகள் விதிக்கப்படும் வழக்கம் இல்லை. அல்லது கிராமங்களில் பயனுகும் இப் பொருள்கள்மீது குறைந்த வரிகளை விதிப்பர். பண்டங்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து, அவைகளுடைய தரங்களை நன்கு பிரித்து வரி விதித்தால், மக்களுடைய வரி செலுத்தும் திறனை ஒட்டி வரிகளை விதிக்கலாம். ஒரு வகை விலைவுகளை மற்றவை ஈடு செய் யும்படி அவைகளை அமைக்கலாம்.

சில குறிப்பிட்ட பொருள்கள்மீது விதிக்கப்படும் சுங்க வரி களும், பொது விற்பனை வரியும் மறைமுக வரிகளின் முக்கியமான உதாரணங்களாகும். வரியைச் சில்லறை விற்பனைப் படிவத்தில் விதித்து வசூலிக்காமல், மொத்த விற்பனைப் படிவத்தில் வசூலித் தால், வசூல் செய்வதற்காகும் அடக்கச் செலவைக் குறைக்கலாம். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சுங்கவரியைப் பல பண்டங்கள் மீது விதித்திருக்கின்றனர். இந்தியாவில் இது முதல் இடத்தைப் பெற்றிருக்கின்றது.

டல மறைமுக வரிகள் விதிக்கப்படுகின்றன. ஆனால், இவை அளிக்கும் தொகை குறைவாகவே இருக்கின்றது. மொத்த வரி வசூலில் இவைகளின் பகுதி குறைவாக இருக்கின்றது. வருமான நெகிழ்ச்சித் தேவை (income-elastic demand) யைக் கொண்டிருக் கும் பண்டங்கள்மீது மறைமுக வரிகளை விதிப்பதே சிறந்ததாகும். மந்தகாலத்தில் வரித்தொகை குறைந்தபோதிலும் இதுவே சிறந்த தாகும்.

இறக்குமதி, ஏற்றுமதி வரிகளும் மறைமுக வரிகளே. ஆனால், இவை சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கின்றன. இறக்குமதி வரி கள் வருமானத்திற்காகவோ அல்லது உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கவோ அல்லது இரு நோக்கங்களையும் சிறிதளவு கொண்டோ விதிக்கப்படலாம். அயல்நாட்டுச் செலுத்தல்நிலையைச் (balance of payments) சமாளிப்பதற்காக வளரும் நாடுகள் செய் வதைப்போல் இந்த வரிகளைக்கொண்டு இறக்குமதியைத் தடை செய்யலாம். குறிப்பாகப் போகப் பொருள்களின் இறக்குமதி இவை

களால் தடையாகின்றன. இந்த நிலையில் இறக்குமதி மிகவும் குறைவதால் அது அளிக்கும் தொகை மிகவும் குறையும். மேலும், இறக்குமதி மிகவும் குறைவதால் பணவீக்கமும் (inflation) கள்ளக் கடத்தலும் (smuggling) மிகுதியாகும்.

சர்வாதீன நிலையில் அல்லது ஏறக்குறையச் சர்வாதீன நிலையில் உற்பத்தியாகும் பொருள்கள்மீது ஏற்றுமதி வரி விதித்தால் அதாவது பொருள் ஏற்றுமதி செய்யும் நாட்டில்மட்டும் அல்லது பெரும்பாலும் அந்த நாட்டிலேயே உற்பத்தியானால், வரியின் காரணமாக உயரும் விலையை அயல்நாட்டினர் செலுத்துவர். இதுவே, ஏற்றுமதி வரிகளுக்குக் காரணமாக இருந்தது. இது குறுகிய கால நன்மையேயாகும். ஏனெனில், மற்ற நாடுகள் பதிலிப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கு முயற்சிசெய்யும். இப் பொருள்களைக் கண்டுபிடித்துவிடும். பொதுவாக ஏற்றுமதி வரிகள் அதிகமான வருவாயைக் கொடுப்பதில்லை. தேவை நெகிழ்ச்சியுடையதாக இருந்தால் வரிவசூல் குறையும். ஏற்றுமதி குறைந்தால் (நீண்டகாலத்திலாவது) வரித்தொகை குறையும். இறக்குமதி வரியும், ஏற்றுமதி வரியும் சுங்கச் சாலைகளில் எளிதில் வசூல் செய்யப்படலாம்.

மேலே கூறப்பெற்ற வரியல்லாத மற்ற வருவாய்கள் தகுந்த விளக்கத்துடன் இருக்கின்றன. அவைகளுடைய நுணுக்கமான பிரச்சினைகளை நாம் இங்குப் பார்க்கவேண்டியதில்லை. அயல்நாட்டுக் கடன்கள், அரசு நடத்தும் தொழில்கள் கொடுக்கும் இலாபம் முதலியவை 12ஆவது அதிகாரத்திலும் 6ஆவது அதிகாரத்திலும் விளக்கப்பெற்றிருக்கின்றன. ஆனால், அரசின் உள் நாட்டுக் கடன், குறுகிய காலக் கடன், செலாவணியின் நாணயமாற்றுக் காப்புநிதிகள், பற்றுக்குறை நிதியாக்கம் முதலியவைகளை இங்குப் பார்த்தல் வேண்டும். (இவைகளைப்பற்றிய சில கருத்துகளை இதே அதிகாரத்தில் கொடுத்திருக்கின்றோம்.)

அரசு ஒன்று சேர்த்துப் பெறக்கூடிய தொகை உள்நாட்டில் இருப்பதும், இதைத் திரட்டக்கூடிய திறனை மையபாங்கும் வாணிக பாங்கும் பெற்றிருப்பதும், சிறந்த தொழில் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும் அதிகாரபூர்வ, அதிகாரபூர்வமற்ற நிலையங்கள் இருத்தலும் அரசியலார் உள்நாட்டில் கடன் வாங்கும் திறனை நிர்ணயம் செய்கின்றன. வளர்ச்சியடையாத நாடுகளில் இந்த வசதிகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன என்று ஏ. ஆர். பிரெஸ்ட் கூறியுள்ளார்.[1] ஆனால், இந்தியாவும், பாகிஸ்தானும் முன்

[1] Public Finance in Underdeveloped Countries, முதல் பதிப்பு, 1962, பக்கம் 104.

னேற்றமடைந்த நாடுகளுக்கும், வளர்ச்சியடையாத நாடுகளுக்கும் இடைநிலையில் இருக்கின்றன. பொருளாதாரத்தின் தற்காலத்திய பகுதியில் உபரிப்பணம் இருக்கின்றது. இதைக் கொண்டிருப்போர் குறைவான வட்டியைக் கொடுக்கும் சிறப்புப் பத்திரங்களை (gilt-edged securities) வாங்குவதற்குப் பயன்படுத்துகின்றனர்.[1] அதிக ஆபத்துகளுக்குட்பட்ட முதலீடுகள் உயர்ந்த வட்டியைக் கொடுத்தபோதிலும் இவர்கள் மேற்கூறிய பத்திரங்களை நாடுகின்றனர். மந்தகாலத்தில் முதலீட்டுத் தொகை குறைவாக இருந்த போதிலும் இந்த நாட்டம் மிகுதியாக இருக்கின்றது. மந்தகாலத்தில் ரொக்க விருப்பம் அதிகமாக இருக்கின்றது. இப் பத்திரங்கள் மிகுதியான ரொக்கத்தன்மையைக் கொண்டிருக்கின்றன. மைய பாங்குகள் வலிமை கொண்டிருக்கின்றன. அரசு அவைகளிடம் கடன் வாங்கலாம்; வாங்குகின்றது. கருவூல உண்டியல்கள் (treasury bills) மூலம் அரசியலார் வாணிக பாங்குகளிடம் கடன் வாங்குகின்றனர். (இவ் வுண்டியல்கள் அண்மைக் காலத்தில் அரசாங்கம் வாங்கும் குறுகிய காலக்கடனுக்கு ஒரு சிறந்த வழியாக இருக்கின்றது).

சிறு சேமிப்புத்தொகை முன்னர்ப் பதுக்கப்பட்டது. தேசிய சேமிப்புப் பத்திரங்கள் (National Savings Certificates) அஞ்சல் அலுவலகங்கள் (post offices) இதைத் திரட்டலாம். (இப்படிச் செய்யாவிடில் இன்றும் இது பதுக்கப்படும்) குறைவாகவும் மிகுதியாகவும் உள்ள சேமிப்புகள் தனியார்துறையில் முதலீடாகாமல் அல்லது பதுக்கப்படாமல் பொதுத் துறைக்குத் திருப்பலாம். இவ் வாறு இத் தொகைகளை ஈர்ப்பதற்குக் கொடுக்கப்படும் வட்டிவீதம் மார்க்கட்டு வீதத்தையும் பொருளாதாரத்தின் நிலையையும் சார்ந்திருக்கும். அரசியலார் நீண்டகாலக் கடனை வாங்குவதால், எதிர்காலக் குடிமக்கள்மீது முதலையும் வட்டியையும் கடன் கொடுத்தோருக்கு மீட்கவேண்டிய பொறுப்பைச் சுமத்துகின்றனர் என்று சிலர் கூறுகின்றனர். ஒரு பொதுக்கடன் திரட்டப்படும்பொழுது வாங்கும் திறன் (purchasing power) தனியாரிடமிருந்து அரசுக்கு மாற்றப்படும். எதிர்காலத்தில் வட்டிகொடுப்போரின் வாங்கும் திறனைக் கொண்டு கடன் கொடுத்தவர்களுக்கு வட்டி யளிக்கப்படும். இதனால் நாடு பயனடைகின்றதா என்பது வேறு பொருளாகும். கடன் தொகை எவ்வாறு பயனுகின்றது என்பதே நாட்டின் பலனை நிர்ணயிக்கின்றது. ஆனால், இத் தொகையை எதிர்கால மக்கள் இறந்தகாலமக்களுக்கு ஒரு பொழுதும் செலுத்துவதில்லை!

[1] மிகத்தீவிரமான விபத்து ஏற்படாதவரை சிறப்புப்பத்திரம் சிறந்த பாதுகாப்புடன் இருக்கின்றது. அரசியலாரின் பத்திரங்களைப் பொதுவாகச் சிறப்புப் பத்திரங்கள் என்று அழைப்பர். ஆனால், அதே தன்மைபடைத்த மற்றப் பத்திரங்களையும் சிறப்புப்பத்திரங்கள் என்றழைக்கலாம்.

கடன் கொடுத்தவர்கள் தம் தொகையைப் பயன்படுத்தியிருக்கக்கூடிய முறையைவிடச் சிறந்தமுறையில் அரசு அதை மூதலீடு செய்திருந்தால் நாடு பயனடையும். கடன் தொகையை அரசு இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பயன்படுத்தினால் (துப்பாக்கிப் புகையிலும், அணுப்படிவிலும் பணம் செலவானால்) நாட்டின் வருமானம் குன்றும் (மற்றத் தீய விளைவுகளும் நிகழும்). ஆனால், (வரி வசூலின் விளைவைப்போலவே) பொதுத்துறையியில் மிகுதியான தொகை திரட்டப்பட்டால் தனியார் துறையில் இருக்கும் தொகை குன்றும். அயல் நாட்டுக் கடன் வேறுநிலையில் இருக்கின்றது. வாங்கும் திறன் (purchasing power) அயல் நாட்டினரிடமிருந்துஅரசியலாருக்குத் திரும்புகிறது. தனியார்துறையோ அல்லது பாங்குகளோ இதை இழக்கவில்லை. வட்டியை அல்லது மூதலைக் கொடுக்கவேண்டிய காலத்தில், நாட்டின் வாங்கும் திறன் குன்றுகிறது. ஏனெனில், நாடு பணத்தை இழக்கின்றது. எதிர்காலக் குடிமக்களின் வருமானம் (அல்லது வாங்கும் திறன்) குறையும். அவர்கள் இறந்தகால மக்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டும். அன்னிய நாட்டுக் கடன் தொகை உற்பத்திக்காகச் செலவானால் முதலும் வட்டியும் கொடுக்கப்பட்ட பிறகுகூட, எதிர்காலத்தில் தேசிய வருமானம் மிகுதியடையும். அயல்நாட்டுக் கடனைச் சாதாரணமாக (உற்பத்திக்காகச் செலவு செய்யாமல்) நுகர்வுக்காகப் பயன்படுத்துவதில்லை. இதைத் திறமையற்ற முறையிலும் பயனுக்குவதில்லை. வீண்செலவும் செய்வதில்லை. ஆகையால், இத்தகைய கடன் தொகை எதிர்கால மக்களுக்கு ஒரு பளுவாக இருப்பதில்லை.

அரசின் பண, நாணயமாற்றுக் காப்பு நிதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகளை இங்குக் கூறவேண்டும். அயல் நாட்டுச் செலுத்தல் நிலையில் நெருக்கடி வருவதைத் தடுக்க அரசு (அல்லது மைய பாங்கு) பொன்னை அல்லது அன்னியச் செலாவணியைக் காப்பு நிதியில் கொள்ளவேண்டும். பாங்குகளுக்கு நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்கவோ அல்லது வளர்ச்சித் திட்டத்திற்குத் தேவையான இறக்குமதி தடையாகாமல் இருக்கவோ மேற்கூறிய காப்புநிதி வேண்டும். ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்சக் காப்புநிதி வேண்டும். ஆனால், 1957-ல் இந்தியாவில் ஏற்பட்டபடி ஒரு நெருக்கடி ஏற்பட்டால், சட்டசபையின் அனுமதியுடன் இதைக் குறைக்கலாம். இதற்கு மாறுக இரண்டாவது உலகப் போர்க் காலத்தில் இந்தியா ஏராளமான பண்டங்களை நேச நாடுகளுக்கு அனுப்பியது. இவைகளுக்கான தொகை அவ்வப்போது செலுத்தப்படாமையால் ஸ்டெர்லிங் நிதி (sterling assets) வளர்ந்தது. அதாவது, இந்தியா அனுப்பிய பொருள்களுக்கு ஸ்டெர்லிங் நிதி கிடைத்தது. ஆனால், அதை அப்பொழுது இந்தியா செலவு

செய்ய முடியாது. போருக்குப் பிறகு இக் கட்டுப்பாட்டைப் படிப் படியாகத் தளர்த்தினர். இதைக் கொண்டு இந்தியா தன் செலுத் தல் நிலையைச் சமாளிக்கலாம்.

அயல் நாட்டுச் செலுத்தல் நிலையைச் சமாளிப்பதற்காகப் பற்றுக்குறை நிதியாக்கம் செய்வதைப்பற்றி இங்குச் சில கருத்து களைக் கூறவேண்டும்.

தற்காலிக உள்நாட்டு மந்தகாலத்தில், வரவு செலவுத் திட்டத் தில் குறித்துள்ளதைவிடக் குறைவான தொகையை அரசு பெறும் பொழுது, அதிகமான தொகையைக் கடனுகப் பெறும். வரவு செலவுத் திட்டத்தில் குறிக்கப்பெற்றிருக்கும் செலவைக் குறைப் பதைவிட இந்த முறையையே அரசு கையாளும். இதனுல் பண வீக்கத்தின் விளைவுகள் ஏற்படும். ஆனுல், பண வீக்கம் தீவிரமாக இல்லாவிடில், நீண்ட காலத்தில் உற்பத்தி பெருகினுல், மக்கள் தொகையும் பெருகினுல், கிராமாந்திரப் பகுதிகளில் பணப் பரிவர்த் தனை வளர்ந்தால், மக்களுக்குத் தேவையாகும் பணத்தின் அளவு பெருகும். அரசு கடன் வாங்குதல் இத் தேவையை மேலும் பெருக்கும். இந்த நிலையில் பணவீக்கம் தடையாகும். ஆனுல், அயல் நாட்டுச் செலுத்தல் நிலையைப் பற்றுக்குறை நிதியாக்கத்தின் (deficit financing) மூலம் சமாளித்தல், எளிதில் கட்டுப்பாட்டுக் குட்படுத்த முடியாத ஒரு பணவீக்கம் ஏற்படும். ஆனுல், திட்டத் திற்கு எதிர்பார்த்ததைவிட மிகுதியான இறக்குமதி தேவை யானுல் அல்லது எதிர்பார்த்ததைவிடக் குறைவான தொகையை அயல்நாட்டு உதவியாகப் பெற்றுல், இதனுல் ஏற்படும் பிரச்சினை மிகவும் கடுமையானதாக இருக்கும். அயல் நாடுகளிலிருந்து பெறும் கடனை அதிகப்படுத்தமுடியாது என்று கற்பனை செய்து கொண்டுள்ளோம். செலாவணிக் காப்புநிதியை அல்லது நாணய மாற்றுக் காப்புநிதியை ஆபத்தான நிலை ஏற்படும்வரைப் பயன் படுத்தவேண்டும். அல்லது இறக்குமதியைக் குறைக்கவேண்டும். இதனுல் நுகர்வோர் பொருள்களிலும், மற்றவைகளிலும் பற்றுக் குறை ஏற்படும் அளவு திட்டமிட்ட முதலீடு பாதிக்கப்படும். எனவே, விலையுயர்வையும், வரவு செலவுத் திட்டத்தில் விழும் துண்டையும் மிகுதியான செலவாணி யீட்டினுல்தான் சமாளிக்க முடியும். இந்த நிலை நீடித்தால் செலாவணியின் மதிப்பு குன்றும்; உள்நாட்டுச் செலாவணியின் வாங்கும்திறன் குறையும். ஒரு குறிப்பிட்ட பொருளை இறக்குமதி செய்வதற்கு முன்பைவிட அதிக மான தொகையைக் கொடுக்கவேண்டும். அயல் நாட்டுக் கடனைத் தீர்ப்பதற்கும் மிகுதியான தொகையைச் செலவு செய்ய வேண்டும். செலாவணியின் மதிப்பைக் குறைப்பதைவிட (debasing the courrency) புதிய நாடுகள் கற்றுக்கொள்ளக்கூடிய

பழைய தந்திரம் எதுவும் இல்லை' என்று கூறப்பட்டிருக்கின்றது.[1] இறக்குமதி தடையாவதால் வளர்ச்சி தடையாகின்றது; உள் நாட்டுப் பண்டங்களுக்கு இருக்கும் போட்டி வலுக்கின்றது, அவைகளுடைய விலைகளும் உயருகின்றன. கட்டுக்கடங்காத பணவீக்கம் உடனடியாக ஏற்படும் நிலைமை தோன்றுகிறது. மக்கள் மேலும், விலைகள் உயரும் என்று கருதுவதால் அவர்கள் செலாவணியில் கொண்டிருக்கும் நம்பிக்கையைப் படிப்படியாக இழக்கின்றனர்.

அயல் நாட்டுச் செலுத்தல் நிலையைத் திட்டப்படி சமாளிப்பதில், வளர்ச்சியடையும் நாடுகள் பற்றுக்குறை நிதியாக்கம் செய்யவே கூடாது என்று நாம் குறிப்பிடவில்லை. மேலே குறிப்பிட்டபடி [தற்காலிக மந்தத்தைப் (depression) பற்றிப் பேசும் பொழுது] பெருகும் மக்கள் தொகையும், பணப் பரிவர்த்தனை பெருகுவதும், குறுகிய காலதாமதத்திற்குப் பிறகுமட்டும் பெருகும் உற்பத்தியும், புதிய செலாவணி வெளியீட்டைச் சரிக்கட்டும். ஆனால், புதிய வெளியீடு எந்த அளவு சரிக்கட்டப்படும் என்று நாம் கூறமுடியாது. எனவே, பற்றுக்குறை நிதியாக்கத்தை எந்த அளவு கவனமாகப் பெருக்கலாம் என்று கூறமுடியாது. ஆண்டுதோறும் சிறிதளவு விலைவாசி உயர்வது சிறந்தது. இதனால், தொழில் ஊக்கமடையும் என்றும், விலைவாசியைத் தொடர்ந்து அதிகமான இலாபத்தைக் கொடுக்கத் தவறும் பண்டங்களின் நுகர்வு குறையும் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால், ஏழைகளுக்கு இது நல்லதன்று.

கூட்டாட்சியில் (Federation) மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையே அதிகாரமும் வரிகளும் பிரிப்பதுபற்றிய பிரச்சினைகளைப் பார்க்கும்போது சுதந்தரமாக இருந்த மாநிலங்கள் கூட்டாட்சியை நிறுவி மத்திய அரசுக்குத் தம் அதிகாரத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தனவா அல்லது மத்திய அரசு கூட்டாட்சிக் கூறுகளை நிறுவி, அவைகளுக்கு அதிகாரத்தை வழங்கினவா என்பதைக் கவனிக்கவேண்டும். இவ் விரு முறைகளும் கூட்டாட்சியில் மிகுதியான வேறுபாடுகளுக்குக் காரணமாக இருக்கும்.

நாம் முன்னர்க் குறிப்பிட்டுள்ளமுறையில் இன்றியமையாத அல்லது தன் அலுவல்களைச் செம்மையாகச் செய்வதற்கு அவசியமான அதிகாரங்களையும், வருவாயையுமே மத்திய அரசு மாநிலங்களிடமிருந்து பெறுகின்றது. இவ் வதிகாரங்கள் இல்லாவிடில் நாடு முழுவதையும் ஒன்றுபடுத்தல் முடியாது. மத்திய அரசு

1. ஏ. ஆர். பிரெஸ்ட் (A. R. Prest) Pubtic Finance in Underdeveloped countries பக்கம், 110

சிக்கனமாகவும் செம்மையாகவும் செய்யக்கூடிய அலுவல்களைக் கூட்டாட்சிக் கூறுகள் செய்துவந்திருக்கலாம். தற்காப்பு, அயல் நாட்டு உறவு, வர்த்தக உடன்படிக்கைகள், இறக்குமதி, ஏற்றுமதி முதலியன மத்திய அரசின்வசம் இருக்கவேண்டும். வருமான வரி வசூல்போன்ற மற்ற அலுவல்களையும் மாநிலங்களைவிடச் சிக்கனமாகவும், எளியமுறையிலும் மத்திய அரசு செய்யலாம். வரி வசூலை மாநிலங்களுடன் பிரித்துக்கொண்டாலும் மத்திய அரசே இதை மேற்கொள்ளலாம். மாநிலங்களை ஏற்படுத்தி அவைகளுக்கு மத்திய அரசின் அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்தால், மத்திய அரசின்வசம் எஞ்சியிருக்கும் அதிகாரம் மிகுதியாக இருக்கும். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் இந்த முறையே நடைபெற்றது. கல்வி, பொதுச் சுகாதாரம், பொதுநலப் பணிகள் முதலியவைகளுக்குப் பிராந்தியப் பிரச்சினைகள்பற்றிய நுட்பமான அறிவு தேவை என்ற காரணத்தால், இத் துறைகளில் மாநிலங்கள் சுதந்தரம் பெற்றன. இவ்வாறு மாநிலங்களுக்கு மாற்றப்பட்ட பொறுப்புகளைச் செம்மையாகச் செய்வதற்கு வேண்டிய நிதியை அவை பெறவேண்டும் என்பது பழைய கருத்து. மாநிலங்களின் பொறுப்புகள், விரிவடையும் பொறுப்புகளாக இருந்தமையால் மிகுதியான நிதி தேவையாயிற்று. திட்டமிட்ட வளர்ச்சி இத் தொல்லையைப் பெருக்கியது. மத்திய அரசும், மாநில அரசுகளும் திட்டத்திற்கு மிகுதியான தொகையைச் செலவு செய்ய வேண்டியதாயிற்று. திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், செலவுகளைச் சமாளிப்பதற்கும் இந்தியாவில் மத்திய அரசு உள் நாட்டில் கடன் வாங்கியது; அயல் நாடுகளிடம் உதவியையும், கடனையும் வாங்கியது; பற்றுக்குறை நிதியாக்கம் செய்தது; பண, நாணய மாற்றுக் காப்புநிதிகளைப் பயன்படுத்தியது. மாநிலங்கள் இந்த வழிகளைப் பின்பற்றமுடியாது. உள் நாட்டில் கடன் வாங்குதல் போன்ற சில அதிகாரங்களும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருக்கின்றன. இதற்குப் பதிலாக மாநிலங்கள் தம்க்கு ஒதுக்கப்பெற்றிருக்கும் துறைகளில் திட்டங்களைச் செயலாற்றுவதற்காக மத்திய அரசின் மானியத்தையும் (grants), வருமான நெகிழ்ச்சியுடைய வரிகளில் (வருமான வரி, சில சுங்கவரிகள் போன்றவை) ஒரு பகுதியையும் பெறுகின்றன. பாகிஸ்தானும் இத்தகைய கொள்கை பல்வற்றைப் பின்பற்றுகின்றது. இங்குக் குறிக்கப் பெற்றிருக்கும் வழிகள்மட்டுமே இருக்கின்றன என்று நாம் கூறவில்லை. ஆனால், கூட்டாட்சியில் எழும் பிரச்சினைகளைக் கையாளத் தக்க வழிகளையே இவ் வுதாரணம் எடுத்துக்காட்டுகின்றது. கீழ்க் கண்டவை கூட்டாட்சிபற்றிய சூத்திரத்தின் பிரச்சினைகள். கூட்டாட்சிக் கூறுகளுக்கு எவ்வாறு கணிசமான அளவு நிதி திரட்டுவதில் சுதந்தரம் ஏற்படுத்துவது? வரிகளையும் மற்ற

வருவாய்களையும் எவ்வாறு சிறந்தமுறையில் பிரிக்கலாம்? மத்திய அரசின் மானியத்தொகையை எந்த ஆதாரத்தைக்கொண்டு (மக்கள் தொகை, தேவை போன்றவை) பிரிக்கலாம்? கூட்டாட்சி நிதி நிர்வாகம் (federal finance) பற்றிய உண்மை பாதிக்கப் படாமல், எந்த அளவு மாநிலங்கள் மத்திய அரசைச் சார்ந்திருக்க லாம் எனும் வினாக்கள் இருக்கின்றன. இவைகளுக்கு இன்னும் விடை காணப்படவில்லை. அல்லது பெரிய அளவில் வகுக்கப்பெற்ற திட்டங்களைக் கூட்டாட்சி தகர்த்துவிடுமா? இப் பிரச்சி னையை அடிக்கடி கவனத்திற்குக் கொண்டுவந்து, அவ்வப்போது மாறும் சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு மத்திய அரசும், மாநிலங் களும் வருவாயைப் பகிர்ந்துகொள்ளவேண்டும்; கடன் வாங்குவது பற்றிய கொள்கைகளைப் பின்பற்றுவதிலும் ஒத்துழைப்பு வேண்டும் என்று மட்டுமே இங்குக் குறிப்பிடலாம். நிதி நிர்வாகத்திற்கு உகந்த நடவடிக்கைகளின் நன்மைகளையும், தீமைகளையும் இங்குப் பொதுவாக விவரிக்க முடியாது. இருந்தபோதிலும், மேலே கூறியதிலிருந்து வரக்கூடிய முடிவுகளைக் கீழே காணலாம்.

முதன்முதலாக வளரும் நாடுகளில், நீண்ட காலத்தில் வருமானம் உயருவதால், மறைமுக வருமான நெகிழ்ச்சி வரி களையே (income-elastic indirect taxes) கூடியமட்டில் விதித்தல் சிறந்தது. முன்னேற்றத்தினுல் ஏற்படும் விளைவு பாதிக்கப்படாமல் அரசின் வருவாய்ப் பெருகுவதற்கு வழி ஏற்படும். வரியிலும், அதன் வீதத்திலும் மாறுதல் ஏற்படாது. வளர்ச்சிக்கு வேண்டிய அதிகப்படியான செலவுத்தொகையை அரசியலார் பெறலாம்.

இரண்டாவதாகத் தனியாரின் வருமானம் மிகவும் உயர்ந்த படிவத்தில் வரிவிதிப்புக்குட்படும்போது, ஊக்கம் பாதிக்கப்படக் கூடாது. சோதனை செய்வதற்கும், ஆபத்துகளை ஏற்கவும், பொது வளர்ச்சிக்கும் தனியார் துறை தேவையாகும். மூன்றுவ தாகப் பல்வேறு வரிகளை விதித்து அவைகளிடையே தொடர்புகளை ஏற்படுத்தினுல் வரிச்சுமை நியாயமாகப் பகிர்வாகும். பல்வேறு வரிகளைமட்டும் நாம் இங்குக் குறிப்பிடாமல், செல்வர்கள்மீது விதிக்கப்படும் நேர்முகவரியை விதிக்கும் முறைகளையும் இங்கு நாம் குறிப்பிடுகிறோம். வளர்வீத முறையில் விதிக்கப்படும் செல்வ வரி (wealth tax) இலாபம் ஈட்டுவதற்கும், ஆபத்துகளை ஏற்கவும் தடையாக இல்லை. வருமான வரியைக் கொடுக்கும் தொகை யைக் கூட்டுவதற்கும், உயர்ந்த வருமானப் படிவத்தில் அது ஊக்கத்தைப் பாதிப்பதைத் தடைசெய்வதற்கும் இந்த வரியைப் பயன்படுத்தலாம். நான்காவதாக, மந்த காலத்தில் செலவைக் குறைத்து வரவுசெலவைச் சரிக்கட்டக்கூடாது. வரிகளையும் உயர்த்தக்கூடாது. இப்படிச் செய்தால் தொழிலின் ஊக்கம்

குன்றும். வரிகளை அதிகப்படுத்தவேண்டிய அவசியம் இருந்தால், 'போகப் பொருள்கள்மீது விதிக்கப்படும் வரிகளை' விதிக்கலாம். வளர்ச்சியடையும் அடிப்படைத் தொழில்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். உள்நாட்டில் மக்களிடம் கடன் வாங்குதல் எளிதாக இருக்கும். ஏனெனில், பணத்தைக் கொண்டிருப்போர் முதலீடுசெய்வதற்குத் தயங்குகின்றனர். அயல் நாட்டுச் செலுத்தல்நிலையைச் சமாளிப்பதற்குப் பற்றுக்குறை நிதியாக்கம் செய்வதில் மிகுதியான கவனம்வேண்டும். ஏனெனில், இது பணவீக்கத்திற்குக் காரணமாக இருக்கும். ஐந்தாவதாக, கூட்டாட்சியில் மாநிலங்களின் சுதந்தரம் பூரணமாகப் பாதிக்கப் படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். மாநிலங்களின் திட்டங்களுக்கு மானியங்கள்மூலம் உதவியளிக்கலாம்.[1] வருமான நெகிழ்ச்சியுடைய பண்டங்கள்மீது விதிக்கப்படும் வரித்தொகையைப் பகிர்ந்துகொள்ளலாம்.

இறுதியாக, பாராளுமன்ற, நிர்வாக முறைகளைக் குறிப்பிட வேண்டும். இவைகளை இங்கு நாம் பார்க்க முடியாது.

C. தனியார்துறைக்கு வேண்டிய நிதியுதவியும் கடனுதவியும்

தொழில் நிறுவனங்களின் முதல்பற்றிய பிரச்சினைகள் சில வற்றை 6ஆவது அதிகாரத்தில் பார்த்தோம். பொதுத்துறையின் நிதிப் பிரச்சினைகளையும், அதன் வருவாய்மூலங்களையும் இவ் வதிகாரத்தின் இரண்டாம் பகுதியில் பார்த்தோம். இந்தியா, பாகிஸ்தான் போன்ற வளர்ச்சியடையும் நாடுகளின் தனியார் துறையில் நிறுவனங்களின் விசேஷமான தொல்லைகளை (இவை வளர்ச்சியடையும் நாடுகளின் நிலைமையிலிருந்து மாறுபட்டிருக்கும்) இங்குக் காண்போம்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் அண்மைக் காலத்தில்தான், முன்னேற்றமடைந்த நாடுகளைப்போன்ற 'மூலதன மார்க்கட்டு' (capital market) உருவாயிற்று. இதற்கு முன்னர்த் தற்காலத்திய தொழிலுக்கு வேண்டிய மூலதனத்தை (பெரிய தோட்டங்கள் (plantation), சணல், கனிப்பொருள் போன்ற தொழில்களுக்கு) அயல் நாடுகளிடமிருந்தும், நிர்வாக ஏஜென்டுகளிடமிருந்தும் (managing agents) இந்தியா பெற்றது. நிர்வாக ஏஜென்சி நிறுவனங்களை அயல் நாட்டினரும், இந்தியர்களும் கொண்

[1] மத்திய அரசு இத் தொகையில் 50 சதவீதத்தையும் மாநில அரசு 50 சதவீதத்தையும் அளிக்கவேண்டும்.

டிருந்தனர். இந்தியா, மூலதனத்திற்கு அயல்நாடுகளைச் சார்ந்திருந்தமையால், சுதேசி நிதிநிலையங்கள் வளரவில்லை. அயல் நாட்டினர் தாம் விரும்பிய தொழில்களிலேயே முதலீடு செய்தனர். தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துவதிலும், அவைகளுக்கு நிதி யுதவியளிப்பதிலும் சிறப்புப் பயிற்சி பெற்ற நிறுவனங்கள் அளிக்கும் இலாபத்தையும், நன்மைகளையும் (அப்பொழுது சிறியதாக இருந்த) பொருளாதாரத்தின் நவீனப்பகுதி குறைத்தது. அண்மைக்காலத்தில் வாணிக, மையபாங்குகளுடைய பொறுப்புகள் நிலைமை, நிலையான தன்மை முதலியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. கூட்டுப்பங்கு நிறுவனங்களுடைய எண்ணிக்கையும், மூலதனமும் மிகுதியடைந்திருக்கின்றன. பங்கு மாற்று நிலையங்களும் (stock exchanges) வலிமை பெற்றிருக்கின்றன. தேசியமயமான தொழில்துறைகளிலும். தனியார்துறையிலும், அரசும், தனியாரும் நடத்தும்துறைகளிலும் பெரிய கூட்டுப்பங்கு நிறுவனங்கள் (உதாரணமாக, ஆயுள் இன்சூரன்சுக் கார்ப்பரேஷன் (Life Insurance Corporation)' வளர்ந்துள்ளன. இவை தம் சேமிப்பில் ஒரு பகுதியை மற்றத் தொழில்களில் முதலீடு செய்வது இலாபகரமாக இருக்கின்றது என்பதை உணர்கின்றன. எனவே, கடன்வசதி பெறக்கூடிய சிறந்த தொழிலதிபர்கள் இருக்கக்கூடும். இவர்களுக்குக் கிடைக்கும் கடன்வசதிகளும் மிகுதியாக இருக்கக் கூடும். பெரிய தொழில்களுக்குத் தொடக்கநிலையில் நிதி திரட்டுவதில் உள்ள இடர்ப்பாடுகள் இந்தியாவில் இப்பொழுது இல்லை என்று கூறப்படுகிறது.[1]

கூட்டுநிறுவனங்களும் (partnerships) தனியாரும் நிலையான முதலை (fixed capital) ஒரு நிறுவனத்திற்கு அளிக்கலாம். இது பங்கு (share) விற்பனைமூலம் தனியாரிடமிருந்து வசூலாகின்றது. மீட்கக்கூடிய டெபாசிட்டுகள்மூலமும் இது வசூலாகின்றது. இலாபம் தோன்றுவதற்குமுன் தொழிலகம் நிறுவப்படும் காலத்தில் குறைந்தவட்டியில் மூலதனத்தைப் பெறுவது எளிதன்று. பழைய நிறுவனங்கள் புனரமைப்புக்கும், இயந்திரங்களைப் புதுப்பிப்பதற்கும் நிதிதிரட்டுவது கடினம். இதனால் சில நிறுவனங்களுக்கு வேண்டிய மூலதனம் கிடைக்காமல் போகலாம். எதிர்பாராத தடை அல்லது சீர்கேடான நிலை ஏற்பட்டால், நிறுவனம் பல தொல்லைகளுக்கு இலக்காகும். அன்றுடச் செலவுக்குவேண்டிய முதலை நன்குநிறுவப்பெற்ற தொழிலகங்கள் எளிதில் பெறலாம். மேற்கூறிய முன்னேற்றம் ஏற்பட்டபோதிலும் வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது பண,

[1] என். தாஸ் (N. Das): Industrial Enterprise in India, 4ஆவது பதிப்பு, 1962, பக்கம், 39.

மூலதன மார்க்கட்டுகள் (money and capital markets) சரிவர வளராவிடில், இப் பணியை இதற்காக நிறுவப்பெற்ற நிலையங்கள் செய்யலாம். பழைய நிறுவனங்களும் தம் இயந்திரங்களைப் புதுப்பிக்க, புதிய நிறுவனங்களும் சிறு தொழில்களும் (small industries) இந்த நிலையங்களிடமிருந்து கடனுதவி பெறலாம். இந்தியாவில் தொழில்நிதிக் கார்ப்பரேஷன் (Industrial Finance Corporation) முதன்முதலில் தோன்றியது. பிறகு மாநில நிதிக் கார்ப்பரேஷனும் (State Financial Corporation) தொழில் கடன், முதலீட்டுக் கார்ப்பரேஷனும் (Industrial Credit and Investment Corporation) தோன்றின. தேசியத் தொழில்வளர்ச்சிக் கார்ப்பரேஷனும் (National Industrial Development Corporation), இந்தியாவின் மீள்நிதிக் கார்ப்பரேஷனும் (Refinance Corporation of India) [இடைக்கால நிதியுதவி செய்வதற்காக இது நிறுவப்பட்டது] ஏற்பட்டன. ஸ்டேட் பாங்கும் (State Bank of India) தொழிலுக்கும், குறிப்பாக விவசாயத்திற்கும் உதவியளிக்கின்றது. பாகிஸ்தானிலும் இதுபோன்ற நிலையங்கள் இருக்கின்றன. இத்தகைய நடவடிக்கைகள்மூலம் ஏராளமான முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம். ஆனால், புதிய நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கும். பொதுமக்கள் வாங்குவதற்குப் பங்குகள் விற்பனையாகும்பொழுது உறுதி கூறுவதற்கும் (underwriting) சிறப்பான நிலையங்கள் இல்லை. இது ஒரு பெரும் குறைபாடாகும். ஆனால், சிறு தொழில்களும், நடுத்தரத் தொழில்களும் போதிய மூலதனத்தைப் பெறுமல் இருக்கலாம். ஏனெனில், இவைகளுடைய நிலையையும் நிர்வாகத் திறனையும் எடுத்துக்காட்ட வழி எதுவும் இல்லை.

முன்னேற்றமடைந்த ஐரோப்பிய நாடுகளில்கூட, வலிமையுடைய பண மார்க்கட்டுகள் தேவைப்படுகின்றன. குறிப்பாகப் புதிய பத்திரங்களை விலையாக்கவும், நியூயார்க் மார்க்கட்டின் வேலைப்பளுவைக் குறைப்பதற்கும் இவை வேண்டும். முன்னேற்றமடைந்த நாடுகளும், வளரும் நாடுகளும் ஒரேவகைத் தேவையைக் கொண்டிருக்கின்றன. இந்தியப் பாகிஸ்தானிய நாடுகளின் நவீனப் பொருளாதாரப் பகுதிகள் முன்னேற்றமடைந்த நாடுகளின் வழிகளைக் கையாண்டு, மூலதன மார்க்கட்டை நிலைவிக்கொண்டிருக்கின்றன. வளரும் நாடுகளில் பின்தங்கிய பகுதிகளுக்கும், தொழில்களுக்கும் உதவிபுரிய மூலதன மார்க்கட்டை நிறுவ வேண்டிய அவசியம், முன்னேற்றமடைந்த நாடுகளின் அவசியத்தைவிட அதிகமாக இருக்கின்றது.

'The Times' (London) July 4, 1963 என்ற பத்திரிகையைப் பார்க்கவும்.

10. பன்னுட்டு வர்த்தகம்
(International Trade)

ஒருவன் தன் இயல்பான திறமையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் பொருளை, மற்றவர் உற்பத்திசெய்யும் பொருள்களோடு பரிவர்த்தனை செய்து இலாபமடைவதுபோலவே, ஒரு நாடும் பன்னுட்டு வர்த்தகத்தால் பயனடையும்.[1] உதாரணமாக மருத்துவத்தில் வல்லமை படைத்த ஒருவர் மருத்துவராகப் பணிபுரியலாம். மளிகைச் சரக்குகளை உற்பத்திசெய்து, வியாபாரம்செய்யும் திறமை கொண்டவர்களிடம் தமக்கு வேண்டிய மளிகைப் பொருள்களை வாங்கிக் கொள்ளலாம். இதேபோல் சணல் உற்பத்திக்கு வேண்டிய தகுதியைப் பெற்றிருப்பதால் பாகிஸ்தான் சணலை உற்பத்தி செய்து, ஏற்றுமதிசெய்து மலாயாவிலிருந்து வெள்ளீயத்தை அதற்குப் பதிலாகப் பெறலாம். இவை முழு நன்மையைக் காட்டும் (absolute advantage) உதாரணங்கள்.

பன்னுட்டு வர்த்தகக் கோட்பாடு, ஒப்பீட்டு நன்மையையும் (comparative advantage) எடுத்துக்காட்டுகின்றது. இது சிறிது சிக்கலாக இருக்கின்றது. ஒரு நாடு ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் முழுப் பிரதிகூல நிலையில் (absolute disadvantage) இருந்தபோதிலும், இத்தகைய பிரதிகூல நிலை மிகக் குறைவாக இருக்கும் பொருளை உற்பத்திசெய்து, ஏற்றுமதி செய்யலாம். இதற்குப் பதிலாக மற்ற நாடு எப் பொருளை உற்பத்திசெய்வதில் உயர்ந்த பட்ச முழு நன்மை பெறுகின்றதோ அதைக் கொடுக்கும். இப்படி வர்த்தகம் செய்வதால், ஒரு நாடு பலனடையும் என்பதையே மேற் கூறியது எடுத்துக்காட்டுகின்றது. உதாரணமாக, மேற்குஜெர்மனி சைக்கிள்களையும் மோட்டார் வண்டிகளையும் இங்கிலாந்தைவிட மலிவாக உற்பத்திசெய்யும் என்று கற்பனை செய்துகொள்வோம்; அதாவது, இரு பொருள்களையும் அது குறைவான உற்பத்திச் சாதனங்களைக்கொண்டு உற்பத்திசெய்யலாம். ஜெர்மனி பயன்

[1] இரண்டாவது அதிகாரத்தைப் பார்க்கவும்

படுத்துவதைப்போல், இங்கிலாந்து இருமடங்கு உற்பத்திச் சாதனங்களைக்கொண்டு ஒரு மோட்டார் வண்டியையும், ஒன்றரை மடங்கு சாதனங்களைக்கொண்டு ஒரு சைக்கிளையும் உற்பத்திசெய்தால், இங்கிலாந்து சைக்கிளையும், ஜெர்மனி மோட்டாரையும் உற்பத்தி செய்து, இருநாடுகளும் தம் பொருள்களைப் பரிவர்த்தனைசெய்து கொள்ளலாம். இத் தத்துவத்தை ஒரு மருத்துவரையும் அவருடைய செயலரையும்கொண்டு விளக்கலாம்: மருத்துவர் இரு அலுவல்களையும் செயலரைவிட நன்கு செய்யலாம். ஆனால், அவர் மருத்துவ வேலையைமட்டும் செய்யலாம். மற்ற அலுவலைச் செயலரிடம் விடலாம்; அவருக்குச் சம்பளம் கொடுக்கலாம். இரு வேலைகளையும் தாமே செய்வதைவிட இதுவே சிறந்ததாகும். செயலாளரும் தம் முழுத் திறமையைப் பயன்படுத்தித் தம் வேலையைச் செய்து உயர்ந்தபட்ச வருமானத்தைப் பெறலாம்.

ஒரு கற்பனை எடுத்துக்காட்டுமூலம் இத் தத்துவத்தை நாம் விளக்கலாம். இந்தியாவும் பாகிஸ்தானும் சணலையும், பருத்தியையும் உற்பத்தி செய்கின்றன என்றும், ஆனால், பாகிஸ்தான் இரு பொருள்களையும் உற்பத்தி செய்வதில் முழு நன்மையைப் பெற்றிருக்கின்றது என்றும் நாம் கற்பனை செய்துகொள்வோம். கீழ்க்கண்ட பட்டியல் இந்த நிலையை எடுத்துக்காட்டும்.

	பாகிஸ்தான்		இந்தியா	
	ஒருநாளில் உற்பத்தியாகும் அலகுகள்	40 அலகுகள் உற்பத்திசெய்ய ஆகும நாட்கள்	ஒருநாளில் உற்பத்தியாகும் அலகுகள்	40 அலகுகள் உற்பத்திசெய்ய ஆகும் நாட்கள
பருத்தி	8	5	4	10
சணல்	4	10	1	40
ஒவ்வொன்றிலும் 40 அலகுகள்		15		50

இரு நாடுகளிடையே பரிவர்த்தனை ஏற்பட்டால் பாகிஸ்தான், சணலை உற்பத்திசெய்யும். இதில் அதன் உற்பத்தித்திறமை இந்தியாவைப்போல் 4 மடங்காக இருக்கின்றது. பருத்தி உற்பத்தியில் அதன் திறமை இரு மடங்காகவே இருக்கின்றது. ஓர் அலகுச் சணல் 2½ அலகுகள் பருத்திக்குச் சமமாக விலை நிர்ணயமானால்:

பாகிஸ்தான்

தன் பயனுக்கு 40 அலகுகள் சணலை உற்பத்திசெய்ய } 10 நாட்களாகும்.

40 அலகுகள் வாங்குவதற்கு வேண்டிய சணலை உற்பத்திசெய்ய (16 அலகு சணல்) } 4 நாட்களாகும்.

இந்தியா

தன் பயனுக்கு 40 அலகு பருத்தியை உற்பத்திசெய்ய	10 நாட்களாகும்.
40 அலகுகள் பருத்தி வாங்குவதற்கு வேண்டிய பருத்தியை உற்பத்திசெய்ய (100 அலகு பருத்தி)	25 நாட்களாகும்.

இப் பரிவர்த்தனையில் பாகிஸ்தான் பெறும் இலாபம் ஒருநாள் மனித உழைப்புக்கும், இந்தியாவின் இலாபம் 15 நாள் மனித உழைப்புக்கும் சமமாக இருக்கும். இரு நாடுகளும் இப் பரிவர்த்தனையால் பலனடைகின்றன. இரு பொருள்களிடையே நிர்ணயமாகும் விலையே, இரு நாடுகளும் பெறும் இலாபத்தை நிர்ணயம் செய்யும். தேவை, பொருள்களின் விலையைப் பாதிக்கும். இத்தகைய சிறப்பு உற்பத்தி (specialization) நீடிப்பதால் நன்மை பெருகும். குறைந்துசெல் விளைவு விதி (law of diminishing retuns) இந்த நிலைமையை மாற்றும்வரை, இந்தியா பருத்தியைச் சிறப்பாக உற்பத்தி செய்வதாலும், பாகிஸ்தான் சணலை இவ்வாறு உற்பத்தி செய்வதாலும் பலனடையும். மேலே குறிப்பிட்ட பொருளை ஓர் அலகு (one unit) செய்வதற்குக் குறைவான மனித உழைப்பு நாட்களாகும் (man-days).

மனித உழைப்பு நாட்களைக்கொண்டு உற்பத்திச் சாதனங்களை அளத்தல் அளவுக்கு மீறியபடி எளிமையாகின்றது. எல்லா உற்பத்திச் சாதனங்களையும் அளக்கும் ஓர் அளவுகோல் வேண்டும். பல நாடுகளிலுள்ள விலை விகிதங்களைப் பயன்படுத்துவதே சிறந்ததாகும். இவை உண்மைச் செலவை அல்லது வாய்ப்புச் செலவை (opportunity costs) ஒட்டி இருக்கும் என்று கற்பனைசெய்துகொள்ளலாம். விலை விகிதங்களில் உள்ள வேறுபாட்டுக்கு, அடக்கச் செலவைவிடத் தேவைகளில் உள்ளவேற்றுமை காரணமாக இருக்கலாம். ஆனால், தேவையில் உள்ள வேறுபாடு அடக்கச் செலவில் உள்ள வேறுபாட்டை ரத்து செய்யாது; அதாவது பல நாடுகளில் உள்ள உற்பத்திக் காரணிகளின் நிலையைப் பாதிக்காது. உதாரணமாகக் கனடா நாட்டினருடைய விருப்பம் (ரொட்டிக்கு) கனடாவிலும், மற்றக் கடல்கடந்த நாடுகளிலும் உள்ள பண்டங்களின் விலையைவிட, ரொட்டியின் விலையைக் கனடாவில் உயர்த்திவிடாது. குறைந்த கூலிகள் நிலவும் நாடுகள், மற்ற நாடுகளைவிடப் பன்னாட்டு வர்த்தகத்தில் நன்மையடையும் என்ற கருத்தை, ஒப்பீட்டு நன்மைக் கருத்து (the principle of comparative advantage) தவருனது என்று காட்டுகின்றது. கூலிகள் எவ்வளவு குறைந்திருந்த போதிலும், ஒரு நாடு எல்லாப் பொருள்களையும் உற்பத்திசெய்வதில் ஒப்பீட்டு நன்மையைப் பெற (comparative advantage) முடியாது.

சில பொருள்களை உற்பத்தி செய்வதில் பிரதிகூல நிலை (disadvantage) இருக்கும்.

வாணிப மாற்றுவீதம் (terms of trade) பன்னாட்டு வாணிகத்தில் ஒரு முக்கியமான கருத்தாகும். சாதாரணமாக இக் கருத்துப் பண்டமாற்றுப் பரிவர்த்தனையையே குறிக்கும். அதாவது, குறிப்பிட்ட ஏற்றுமதிக்கு ஈடாக எவ்வளவு இறக்குமதியாகும் என்பதையே இது காட்டும். இதை இரு பொருள்களின் விலைவிகிதமே நிர்ணயிக்கும். இரண்டாவது உலகப் போருக்குப்பின் விவசாயப் பொருள்களை ஏற்றுமதிசெய்யும் நாடுகள், சாதகமான வாணிப மாற்று வீதத்தைக் கொண்டிருந்தன என்பது எல்லாரும் அறிந்தது. 1954ஆம் ஆண்டில் கொரியப்போரை அடுத்துவந்த பொருளாதாரவீக்கம் (boom) நலிவுறும்வரை இந்த நிலைநீடித்தது. சென்ற பத்தாண்டுகளில் விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகள், தொழில்துறை முன்னேறிய நாடுகளைவிடக் கேவலமான நிலையில் இருந்திருக்கவேண்டும் என்று நாம் குறிப்பிடவில்லை. நாட்டின் நலனைக் கருதும்போது, உற்பத்திக் காரணியின் வாணிப மாற்றுவீதம் (factoral terms of trade) மிகுதியான முக்கியத்துவம் பெறுகின்றது. ஓரளவு காரணியின் உற்பத்தி, உதாரணமாக ஓராண்டு மனிதன்செய்யும் உழைப்பு அளிக்கும் உற்பத்தியைக் கொண்டு பெறக்கூடிய இறக்குமதியையும், அதே காரணிகளின் உற்பத்தியைக்கொண்டு பெருக்கக்கூடிய ஏற்றுமதியின் அளவையும் உற்பத்திக் காரணியின் வாணிப மாற்றுவீதம் என்று கூறலாம். உற்பத்தி வேண்டிய அளவு பெருகினால், உற்பத்திக் காரணிகளின் வாணிப மாற்றுவீதம் முன்னேறும்; பண்டமாற்று முறை வாணிப மாற்றுவீதம் பாதக நிலையை அடையும். இதே கருத்து பொருளாதாரத்தின் பல பகுதிகளுக்கும் பொருந்தும். விவசாயப் பொருள்களின் விலைகள், தொழில் பொருள்களுடைய விலைகளைவிட விரைவில் சரிவதால், பண்டமாற்று வாணிப மாற்றுவீதம் பாதகமடைகின்றது. ஆனால், காரணிகளின் வாணிப மாற்றுவீதம் முன்னேறுகின்றது. ஏனெனில், அண்மைக் காலத்தில் அமெரிக்க விவசாயத்தில் தொழிலைவிடத் தலா உற்பத்தி உயர்ந்துவிட்டது. ஒரு நாடு தன் விருப்பம்போல் வாணிப மாற்று வீதத்தை உயர்த்தமுடியாது. உலக மார்க்கட்டில் ஒருநாடு ஒரு குறிப்பிட்ட பொருளை அளிப்பதில் சர்வாதீன நிலையில் (monopoly) இருந்தால், ஏற்றுமதியைக் குறைத்துப் பொருளின் விலையை உயர்த்தலாம். ஆனால், இத்தகைய சர்வாதீனங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. கிராம்பு ஏற்றுமதியில் சான்சிபார் சர்வாதீன நிலையில் இருக்கின்றது. ஏற்றுமதித் தொழிலில் உற்பத்தியைப் பெருக்கி, உற்பத்திக் காரணியின் வாணிப மாற்றுவீதத்தை முன்னேறச் செய்யலாம்.

அயல்நாட்டுச் செலுத்தல் நிலை என்பது (balance of payments) இரு புறங்களைக்கொண்ட இருப்புநிலைக் குறிப்பாகும் (balance sheet). ஒருபுறத்தில் ஒருநாடு பிற நாடுகளுக்குச் செலுத்த வேண்டியவைகளும், மற்றொன்றில் அந்த நாட்டுக்குச் சேரவேண்டிய தொகைகளும் குறிக்கப்பெற்றிருக்கும். எல்லா இருப்பு நிலைக் குறிப்புகளைப்போல, இதிலும் இருபுறங்களும் சமமாகும். எனவே, இறுதியில் எச்சநிலையில் வரவோ அல்லது செலவோ இருக்காது. இது பாங்கில் ஒருவன் வாங்கும் கடனைப்போல இருக்கின்றது. ஒருவன் பாங்கில் அதிகப் பற்றுக்கடன் (over draft) வாங்கும்போது, கடன் தொகையை அவன் கணக்கிலேயே வைத்துக்கொள்வான். அவனுடைய டெபாசிட்டுத் தொகையைவிட, செலவு எவ்வளவு மிகுதியாக இருக்கின்றதோ அது அவனுடைய கடனாகும். அயல் நாட்டு வாணிபச் செலுத்தல்நிலை (balance of trade) அயல்நாட்டுச் செலுத்தல் நிலையின் ஒரு கூறாகும். ஏற்றுமதியின் மதிப்பையும் [புலனாகும் ஏற்றுமதி (visible export), புலனாகாத ஏற்றுமதி (invisible exports)—கப்பல் கட்டணம், அயல்நாட்டினருடைய சுற்றுலாவுக்காகச் செலுத்தப்படும் கட்டணம் முதலியன] இதில் சேர்க்கின்றோம். வெளிநாடுகளில் செய்த முதலீடு அளிக்கும் வருமானமும், அயல்நாட்டினர் செலுத்தும் கட்டணங்களும், அவர்களுடைய வெகுமதியும், பொன்னும் பன்னாட்டுச் செலாவாணியாகப் புழங்குபவையும் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் சேர்க்கப்படுகின்றன. அயல்நாட்டுச் செலுத்தல் நிலையில் விழும் துண்டைச் சரிக்கட்டுவதற்காகப் பொன்னை ஏற்றுமதிசெய்வது வழக்கம். ஒரு நாட்டின் இறக்குமதி, ஏற்றுமதியைவிட மிகுதியாக இருந்தால், அயல்நாட்டு முதலீடுகளிலிருந்து பெறும் வருமானத்தைக்கொண்டு வேறு பாட்டைச் சரிக்கட்டவேண்டும், அல்லது எல்லா நாடுகளும் ஏற்றுக் கொள்ளும் செலாவணிகளை ஸ்டெர்லிங், டாலர் முதலியவை இதற்காகச் செலுத்தவேண்டும். அந்த நாட்டுக்கு நற்பேறு கிடைத்தால் வெகுமதியையும், கடன் தொகையையும் கொண்டு நிலைமையைச் சமாளிக்கலாம்.

19ஆவது நூற்றாண்டிலும், 20ஆவது நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் அமலில் இருந்த 'பொன் திட்டத்தில்' (gold standard) எளிய விதிகள் இருந்தன. மாற்றுவீதங்கள் பொன் விலையைப் பொறுத்திருந்தன. இவை மாறவே இல்லை. இந்தியாவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே அயல்நாட்டுச் செலுத்தல்நிலை எப்படி இருந்தபோதிலும், ஒரு பவுன் ஸ்டெர்லிங் ஒரு குறிப்பிட்ட தொகை ரூபாய்க்குச் சமமாக இருந்தது. ஒருநாடு பொன்னை இழந்தால், அது பாங்குச் செலாவணியையும் குறைக்கும். அந்த நாடு பொன் திட்டத்தைப் பின்பற்றினால், தானாகவே இந்த மாறுதல் நிகழும். ஏனெனில், புழக்கத்தில் இருக்கும் செலாவணி

பொன் அளவைப் பொறுத்திருக்கும். அது குறையும்பொழுது செலாவணிச் சுருக்கம் ஏற்படும். சில நாடுகள் பன்னெட்டுமுறையில் பொன்திட்டத்தைப் பின்பற்றின. ஆனால், உள்நாட்டில் அதன் விதிகளைப் பின்பற்றவில்லை. [அதாவது ஒரு பிராங்கு (frank) குறிப்பிட்ட அளவு பொன்னுக்கும், மற்றச் செலாவணிகளுக்கும் சமமாக இருந்தது. உள்நாட்டில் செலாவணித்தாள் (corrency notes) வெளியீடு நேரிடையாகக் கண்காணிக்கப்பட்டது. எனவே, ஒரு ஃபிரெஞ்சுக்காரன் செலாவணியைக் கொடுத்துப் பொன்னைப் பெறமுடியாது.] வட்டிவீதத்தை உயர்த்துவதே இதைவிடத் தவருமல் பலனளிக்கும் முறையாகும். இதுவே, உலகெங்கும் கையாளப்படும் முறையுமாகும். இது இரு பலன்களைக் கொடுக்கும். முதன்முதலாக உயர்ந்த வட்டிவீதம் குறுகியகால (முதலீட்டுத்) தொகைகளை அயல்நாடுகளிலிருந்து ஈர்க்கும். அயல்நாடுகளில் குறுகியகால முதலீடு குன்றும். இரண்டாவதாக, நீண்டகால முதலீடு குன்றும். ஏனெனில், வாங்கும் கடன்தொகைக்கு மிகுதியான வட்டித்தொகையைச் செலுத்த வேண்டும். இதை அடுத்து, வேலையும் வருமானமும் குறையும். மொத்தத் தேவை குறைவதால், விலைகள் இறுதியில் தாழ்வடையும். இதனால் ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் அயல்நாடுகளில் தாழ்வடையும். ஏற்றுமதி மிகுதியடையும். இறக்குமதிப் பொருள்களைவிட, உள்நாட்டுப் பொருள்கள் மலிவாக இருப்பதால், மக்கள் உள்நாட்டுச் சரக்குகளையே வாங்குவர். இறக்குமதி குறையும். தவிரவும், மொத்தத் தேவை குறைவதால், இறக்குமதிப் பொருள்களின் தேவையும் குறையும். மீண்டும் சமநிலை ஏற்படும்வரை ஏற்றுமதி மிகுதியடையும்; இறக்குமதியும் குன்றும். ஒரு நாடு பொன்னைப்பெற்றால் இதற்கு எதிர்மறையான விளைவு ஏற்படும். உள்நாட்டில் செலாவணியின் அளவு பெருகும்; விலைகள் உயரும். முதலீடு, வேலை, வருமானம், விலை முதலியன உயருவதற்காக வட்டிவீதங்கள் குறைக்கப்படும். ஏற்றுமதிப் பொருள்களின் விலை உயரும்; ஏற்றுமதி குன்றும்; இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் குறைவதால், சமநிலை ஏற்படும்வரை இறக்குமதி பெருகும்.

இந்த முறை நாணய மாற்றுவீதங்களை நிலையாக வைத்தது. இதனால் பன்னெட்டு வர்த்தகம் நன்கு நடைபெற்றது. உதாரணமாகப் பவுனின் மாற்றுவீதம் மாருமல் இருப்பது இறக்குமதியாளருக்கு நன்மை பயக்கும். பொருள் இறக்குமதி செய்வதற்குப் பவுனில் தொகை செலுத்துவதாக ஒப்பந்தம் செய்துகொண்டவனுக்கு இது நன்மை பயக்கும். தொகை செலுத்தும்பொழுது அது மிகுதியடையாது. ஆனால், நாடுகள் பன்னெட்டு வர்த்தகத்திற்குத் தகுந்தவாறு, உலக நாடுகள் தம் உள்நாட்டு விலை, வேலை

நிலைகளை அமைத்துக்கொள்ள வேண்டும். தம் வேலைக் கொள்கைகளை அவை செயல்படுத்த முடியவில்லை. இதுவே, பொன் திட்டத்தின் முக்கியமான குறைபாடாகும். இதனால் முதல் உலகப் போருக்குப்பின் இது மறைந்தது. 'செலாவணிகளின் மாற்று வீதங்களை நிலையாக வைத்துக்கொள்வதற்குமட்டும் வழிசெய்யும் முறையாக இல்லாமல், பொன் திட்டம் எல்லா நாடுகளும் ஒன்றுகக் குடிபோதையில் இருக்க ஏற்பாடுசெய்யும் திட்டம்' என்று பொன் திட்டத்தைக் கூறுவது வழக்கம். மற்ற நாடுகளில் பணச் சுருக்கம் இருப்பதால் ஒரு நாடு பணச்சுருக்கம் (deflation) செய்து வேலை வாய்ப்பையும், குறைக்கவேண்டும் தொழிலாளர் சங்கங்கள் வலிமை பெற்றபிறகு சமுதாயத்தின் நோக்கங்கள் மாறின; மேற் கூறிய நிலை ஏற்கத்தகுந்தவையாக இல்லை. நாட்டுடமையாக்குதல் (nationalisation) முக்கியத்துவம் பெற்றது.

பொன் இழப்பைத் தடைசெய்வதற்கு இரு தேசியமுறைகள் உள. ஒன்று மறைமுக நாணய மதிப்புக்குறைப்பு (devaluation) மற்றொன்று கட்டுப்பாடுகள். மறைமுக நாணய மதிப்புக்குறைப் பால் அயல் நாட்டினர் குறைவான தொகையைக் கொடுத்து மிகுதியான பொருளை வாங்கலாம்; அதாவது, ஏற்றுமதிப் பொருள் களின் விலை குறையும்; அதிகமான தொகையைக் கொடுத்து ஒரு நாட்டினர் குறைவான அளவு இறக்குமதிப் பொருளை வாங்க வேண்டும். சமநிலை ஏற்படும்வரை ஏற்றுமதி பெருகும்; இறக்குமதி குறையும். ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் நெகிழ்ச்சியுள்ள தேவை இருந்தால் இந்த விளைவு ஏற்படும். இறக்குமதிப் பொருள் களின் தேவை நெகிழ்ச்சியற்றதாக (inelastic) இருந்தால் (உதாரணம்: இங்கிலாந்தில் உணவுப் பொருள்களும், கச்சாப் பொருள்களும்; இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் முதலீட்டுப் பொருள்கள்) இறக்குமதி குறையாது, விலைகள்மட்டுமே உயரும். இதுவே, இந்த முறையின் பெரிய குறையாகும். இதுபோன்ற நிலையில் இறக்குமதியைக் கட்டுப்படுத்தலாம். வரிகள்மூலமோ அல்லது இறக்குமதியின் அளவைக் கட்டுப்படுத்துவதுமூலமோ முக்கியமல்லாத பொருள்களின் இறக்குமதியைக் கண்காணிக்க லாம். மற்ற நாடுகள் எதிர் நடவடிக்கைகள் எடுப்பதே, மறைமுக மதிப்புக்குறைப்பின் பிரதிகூலமாகும். ஏழைநாடுகள் தம் செலாவணிகளின் மாற்றுவீதங்களைக் காப்பாற்ற மற்ற நாடுகளை விடத் தீவிர முயற்சி செய்யவேண்டுமென்ற காரணத்தாலோ அல்லது பொருளாதாரச் சுயநலத்தாலோ அவை எதிர் நடவடிக் கைகளை எடுக்காமலிருக்கலாம். பின்னர்க் குறிக்கப்பெற்றுள்ளவை ஏற்றுமதியில் நெகிழ்ச்சியற்ற தன்மையும், இறக்குமதியில் நெகிழ்ச் சியுடைய தன்மையும் உடைய நாடுகள் சிறப்பான வகையைச் சேர்ந்தவை. ஆனால், இத்தகைய வகை அரிதாகவும், இயற்கைக்கு

மூலங்களும் இருக்கின்றன. சாதாரணமாக ஒவ்வொரு நாடும் தன் சரக்கை உலக மார்க்கட்டில் விலைக்கு விற்பதிலும், மற்ற நாடுகளின் சரக்கைப் பதிலிப் பண்டங்களாக மாற்றுவதிலும் அக்கறை காட்டுவதால், உலகின் ஏற்றுமதிப் பொருளுக்கு அதன் தேவை, நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கின்றது. ஆனால், இறக்கு மதிப் பண்டங்களுக்குப் பதிலாக வேறு எதையும் பயன்படுத்த முடியாது. ஆகையால், அவை நெகிழ்ச்சியற்ற தேவையைக் கொண்டிருக்கின்றன. பொருளாதார நன்மையை அடிப்படை யாகக்கொண்டு ஒரு வர்த்தகக் கொள்கையை வகுத்துப் பின் பற்றக்கூடிய நிலையில் அமெரிக்கா இருக்கின்றது. அதன் பொரு ளாதாரம் ஏறக்குறையத் தன்னிறைவு (self-sufficiency) பெற்ற தாகவும், அதன் இறக்குமதி (இங்கிலாந்தின் மிக விலையுயர்ந்த ஸ்காட்லாந்திய விஸ்கி) போகப் பொருள்களாகவும், நெகிழ்ச்சி யுடைய தேவையைக் கொண்டிருப்பதாயும் இருக்கின்றன. வளர்ச்சியடையும் நாடுகளுக்கு வேண்டிய மூலதனப் பொருள்கள் போன்றவையே அதன் ஏற்றுமதியாகும். இவைகளின் தேவை நெகிழ்ச்சியற்றதாக இருக்கின்றது.

தொடக்க நிலையிலுள்ள தொழில்களைப் பேணுவதற்காக, இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும், ஏற்றுமதியை ஆதரிக்க உதவித் தொகைகளையும் (bounties) வலியுறுத்துவது வழக்கம். வளரும் நாடுகளில் தொடக்கநிலையில் ஒரு தொழில் பன்னாட்டுப் போட்டி யைச் சமாளிக்க இயலாதநிலையில் இருக்கலாம். ஆனால், காலப் போக்கில் அதன் திறமை வளர்வதாலும், மற்றத் தொழில்கள் வளர்வதால் ஏற்படும் புறச் சிக்கனங்கள் பெருகுவதாலும் அது அடக்கச்செலவைக் குறைக்கலாம். எனவே, மேற்கு ஜெர்மனியும், அமெரிக்காவும் செய்ததைப்போல் ஒரு நாடு தொடக்க நிலையில் தொழில்களுக்குப் பாதுகாப்பளித்துப் பின்னர் ஒப்பீட்டு நன்மை யைப் (comparative advantage) பெறலாம். ஆனால், நடைமுறை நிலை யைப் பார்க்கும்போது, மூன்றுவிஷயங்களைக் குறிப்பிடவேண்டும். முதன் முதலில் மற்ற நாடுகள் எதிர் நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்கவேண்டும். இரண்டாவ தாக, வரியைவிட உதவித் தொகையைக்கொண்டு தொழில்களைப் பாதுகாத்தல் சிறந்ததாகும். ஏனெனில், இது யாவரும் அறிந்த தொகையாக இருப்பதால், தேவை இல்லாதபொழுது இதை நீக்கி விடலாம்; மூன்றுவதாகச் செல்வாக்குடையவர்கள் ஒரு தொழில் நன்கு வளர்ந்த பிறகுகூட, அதற்குப் பாதுகாப்பு வேண்டுமென்று வாதாடுவதைத் தடைசெய்ய வேண்டும். இப்பொழுது நாடு பெறக்கூடிய ஒப்பீட்டு நன்மையை அது இழக்கின்றது. பாது காப்பு வரிகள் பின்னர் ஏற்படுத்தக்கூடிய புதிய, இலாபகரமான

அமைப்பு அளிக்கக்கூடிய நன்மையை, மேற்கூறிய இழப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

தடையற்ற வாணிகம் (free trade) வேண்டுமா அல்லது தேசிய வர்த்தகக் கொள்கை வேண்டுமா என்பதுபற்றிய வாதத்தில் எந்த முடிவு எடுத்தாலும், அது தேசிய வருமானத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதை நாம் கவனிக்கவேண்டும். அயல் நாட்டுச் செலுத்தல் நிலையைச் சரிக்கட்டுவதற்கு இறக்குமதியைக் கட்டுப்பாடு செய்தால், பன்னாட்டு அடிப்படையில் நடைபெறும் சிறப்பு உற்பத்தி, வேலைப் பகிர்வு முதலியவைகளால் கிடைக்கும் நன்மையை நாடு இழக்கவேண்டும். இதனால் அதன் உண்மை வருமானம் குறையும். பணச்சுருக்க நிலையில் தடையற்ற வர்த்தகத்தை அனுமதித்தால் வேலையின்மை ஏற்படும்; உண்மை வருமானம் குறையும். இவ் விரு விளைவுகளையும் கவனித்து ஒரு சம நிலையை ஏற்படுத்தவேண்டும். பாதுகாப்பு வரிகள்மூலம் முழுவேலை (full employment) ஏற்படுத்தினால்; உண்மை வருமானம் உச்சநிலையை அடையாது. ஆனால், வேலையின்மை இருந்தால், வேலையிலமர்ந்திருப்போருடைய மாற்றுக் கட்டணங்கள் வேலையின்மையை ஈடுசெய்யும்.

11. பொருளாதார வாழ்வில் அரசின் இடம்

A. முகவுரை

B. தலையீட்டிற்கு அல்லது தலையீடின்மைக்கு

C. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஏன் தலையீடு வேண்டும் ?

D. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தலையீட்டின் நோக்கங்கள்

A. முகவுரை

தற்காலத்தில் முன்னேற்றமடைந்த நாடுகளிலும், குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளிலும் அரசு எல்லாப் பொருளாதாரத் துறைகளிலும் ஈடுபடுவது நாகரிகமாகவே மாறிவிட்டது. முன் காலத்தில் பொருளாதாரத்துறையில் அரசின் தலையீடு குறைவாக இருந்ததென்றும், அதுபற்றிய விளக்கம் குறுகியதாக இருந்த தென்றும் நாம் குறிப்பிடவில்லை.

இதற்கு மாறுக முன்காலத்தில் பல பகுதிகளில் சமுதாய அமைப்பில் பொருளாதாரக்கூறு ஒரு முக்கியமான பகுதியாக இருந்தது. அரசு வலிமையுள்ளதாகவும், எல்ல அதிகாரங்களையும் கொண்டதாகவும் இருந்த இடங்களில், அதன் சட்டங்களும், விதிகளும் சிறந்த நிர்வாகத்துறையால் செம்மையான முறையில் அமல் செய்யப்பட்டதால், அரசாட்சியில் பொருளாதார நிலையங்களைக் கண்காணித்தலும் அடங்கியிருந்தது. உற்பத்தியின் அமைப்பு, பரிவர்த்தனை, வர்த்தகம், தொழில்களைத் தேர்ந்தெடுத்தல், வாழ்க்கைக்குச் சிறந்த பொருள்களைப் பங்கீடு செய்தல் முதலிய அரசியலாரின் கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருந்தன. பற்றாக்குறை காலத்தில் உதவிபுரிவதற்கும், பாதுகாப்பு அளிப்பதற்கும் அதிகார பீடத்திலிருப்போர், விவசாயிகளிடமிருந்து உற்பத்தியில் ஒரு பகுதியைப் பெறுவது வழக்கம். வர்த்தகத் துறையிலும் மற்றத் துறைகளிலும் ஈடுபட்டிருப்போரிடம் வரிவசூல் செய்வது வழக்கம்.

அரசின் வகை, (சமுதாயத்தின் பொருளாதாரம் உள்பட) அமைப்பு, அதிகார பீடத்தில் உள்ளவர்களின் தன்மை, நன்மை செய்யவேண்டுமென்ற எண்ணம் முதலியன அரசியலாரின் தலை யீட்டையும் அதன் இயல்பையும் நிர்ணயிக்கும். குறிப்பாக, மக்கள் தொகை மிகுதியாகும் இடங்களிலும், நிலம் கிடைப்பதற்கு அரிதாகும் பகுதிகளிலும், வர்த்தகமும் தொழிலும் பெருகும் இடங் களிலும், பொருளீட்டுவதற்கும் அதைத் தம்மிடம் குவித்து வைத்துக்கொள்வதற்கும் எங்கெங்கு வாய்ப்புகள் இருக்கின் றனவோ, அங்கெல்லாம் அதிகாரத்தில் உள்ளவர்களுடைய கட்டுப் பாடுகள் பெருகின. மேற்கு ஐரோப்பாவில், தொழிற் புரட்சிக்கு முன், பணப் பரிவர்த்தனை பெருகியபின் சட்டங்கள் இயற்றப் பட்டன. இச் சட்டங்கள் நிலவுடைமையையும், விவசாயத்தை யும் கட்டுப்படுத்தியதோடல்லாமல், கைத்தொழில் செய்வோரை யும் அவர்களுடைய சங்கங்களையும் கண்காணித்தன. உள்நாட்டு வர்த்தகமும், அயல்நாட்டு வர்த்தகமும் வரி விதிப்புக்கும், கட்டுப் பாடுகளுக்கும், தடைகளுக்கும் உட்பட்டிருந்தன. தொழிற் புரட்சியின் (Industrial Revolution) முன்னோடியான இங்கிலாந்து, உலகத்தின் வர்த்தகத்தில் கணிசமான பகுதியைத் தன்வசம் வைத்து ஏராளமான இலாபம் ஈட்டியபோது (19ஆவது நூற்றாண் டின் இடையில்) தடையற்ற வாணிகம் உற்பத்திப் பெருக்கத் திற்கும், வர்த்தகத்திற்கும் உகந்தது என்பதை அறிந்தது. இது வரை அரசியல், இராணுவம், காவலர் படை வைத்துக்கொள்ளுதல் சட்டங்களை அமுலாக்குவது, நிர்வாகம் முதலியவைகளுக்குமட்டும் வேண்டிய தொகையை அரசு ஈட்டிக்கொள்ளவேண்டும் என்ப தையும், பொருளாதாரத்துறையில் அதன் குறுக்கீடு, குறைந்த பட்சமாக இருத்தல்வேண்டும் என்பதையும், வேறெந்த நாடும் அறியவில்லை. ஆனால், இங்கிலாந்தில்கூட முந்திய கட்டுப் பாடுகள், மாறும் பொருளாதார அமைப்புக்கும் உற்பத்திமுறை களுக்கும் ஒவ்வாதிருந்ததால் நீக்கப்பட்டபோதிலும், 19ஆவது நூற்றாண்டின் இரண்டாவது காற்பகுதியில் தீவிரச் சமூதாயக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் இயற்றப்பெற்றன. இதற்குள் (1850) தடையற்ற வர்த்தகம் அமுலாகவில்லை. மேற்கு ஐரோப்பாவில் கூட பழைய விவசாய, தொழிற் சட்டங்கள் ரத்தானபோதிலும் தடையற்ற வர்த்தகம் காலதாமதமாகவே முன்னேறியது. இதற்கு இங்கிலாந்தின் போட்டி காரணமாக இருந்தது. இப் போட்டி, பாதுகாப்புக் கொள்கை (protection) யைக்கூடச் சில நாடுகளில் வளர்த்தது.

தலையிடாக் கொள்கையை (laissez faire) ஆதரித்த நாடுகளுள் இங்கிலாந்து முதலிடம் பெற்றிருந்தது. இந்த நாடுகூட 20ஆவது நூற்றாண்டில் இக் கொள்கையை விட்டுக் குறிப்பிடத்

தக்க அளவு விலகியது. விளக்கமாகக் கூறவேண்டுமானால் முன்னேற்றமடைந்த நாடுகள், தலையிடாக் கொள்கையைப் பின்பற்றி, அயல்நாட்டு வர்த்தகத் தடைகளை நீக்கியகாலம் அரிதாக இருந்தது. எனினும், இன்று பழைய காலத்தைவிட, அரசு பொருளாதாரக் கட்டுப்பாடுகளை நிர்வாகம்செய்ய மிகுதியான அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றது.

வளர்ச்சிபெறுத நாடுகளில் அரசு மிகுதியான அதிகாரத்தைக் கொள்ளவில்லை. (உயர்ந்த போக்குவரத்துத் தொடர்பு வசதிகள் இல்லாமையே இதற்குக் காரணம்.) இதனால் கட்டுப்பாடுபற்றிய சட்டங்களை, முன்னேற்றமடைந்த நாடுகளைப்போல் அமலாக்குவது கடினம். ஆனால், மரபுகளையொட்டிய கட்டுப்பாடுகள் வலிமையுள்ளனவாக இருந்தமையால், அவை அமலில் இருந்தன. (அவை கட்டுப்பாடுகளை அமலில் வைத்திருந்தன.) எனவே, தலைநகருக்கப்பால், தொலைவிலுள்ள கிராமங்களில் வாழும் மக்கள், தன்னிறைவு பெற்றவர்களாகவும், ஏழைகளாகவும், அரசின் கட்டுப்பாடுகளுக்கப்பாற்பட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

மக்களின் முன்னேற்றத்திற்கு அரசு மிகுதியான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்ற கருத்து, வளர்ச்சியடையாத நாடுகளில் அண்மைக் காலத்தில்தான் பரவியுள்ளது. இது திட்டமிடுவதில் நிறைவுபெற்றது. திட்டமிடாத முன்னேற்றமடைந்த சில நாடுகளின் தேசிய வருமானத்தில், பொதுத் துறையின் (puplic sector) பகுதியும் அதன் செலவும் வளர்ச்சியடையாமல், திட்டமிடும் நாடுகளைவிட மிகுதியாக இருக்கின்றன. இதை இங்குக் குறிப்பிடலாம். பொருளாதாரத்துறையில் அரசினர் அதிகமான பங்கை ஏற்கவேண்டும் என்ற கூற்று இன்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது என்று கூறும்பொழுது, எல்லாச் சூழ்நிலைகளிலும் இக் கொள்கையையே பின்பற்ற வேண்டும் என்று நாம் குறிப்பிடவில்லை. முன்னேற்றமடைந்த நாடுகள் பின்பற்றும் கொள்கைகளை நாம் இங்குப் பார்க்கவேண்டியதில்லை. பொருளாதாரத்துறையில் அரசினரின் தீவிரத் தலையீடு புதிதன்று. நீண்ட காலத்தில் மாறுதல் இல்லாத (அதாவது தலா வருமானமும், வாழ்க்கைத்தரமும் ஒரேநிலையில் இருக்கும்) பொருளாதாரத் துறையில் பின்தங்கிய, வறுமையான நாடுகளைத் திட்டங்கள்மூலம் திரள் முறையில் (cumulative)[1] உயர்த்தலாம் என்ற கருத்தே முன்பைவிட இப்பொழுது புதிதாக இருக்கின்றது. இறுதியில்

[1]. ஒரு விளைவு மேலும்மேலும் திரள் திராளாக வருவதைத் திரள் முறை என்று குறிப்பிடுகிறோம்.

வெளிநாட்டு உதவியை எதிர்பார்க்கவேண்டியதில்லை என்பது இக் கருத்தில் அடங்கியது. இக் கருத்தை நாம் இப்பொழுது ஆராயவேண்டும்.

திட்டமிடுதல் இரு அமைப்புகளைக் கொள்ளலாம். சர்வாதிகார நாடுகளில் அரசு தன் முடிவுகளைக் கட்டாயமாகச் செயலாற்றுவதற்குத் திட்டம் வகுக்கலாம். இந்த முடிவுகள் பெரும்பான்மையான மக்களுடைய விருப்பங்களுக்கும், நலன்களுக்கும் முரணுக இருந்தபோதிலும்—சாதாரணமாக இவை முரணுகவே இருக்கின்றன—அரசு இவைகளைச் செயலாற்றும். சர்வாதிகாரக் கொடுங்கோன்மையின் விளைவுகளை விளக்குவது இங்கு நமது நோக்கமன்று. இத்தகைய ஆட்சி மிகப்பெரிய சாதனைகளைச் சாதித்துவிடலாம். ஆனால், இதற்காகச் சிறிதும் மக்களுக்குச் சுதந்தரம் கொடுக்காமல் அவர்களைக் கட்டாயப்படுத்தல், அவர்களுடைய உரிமைகளைப் பறித்தல், எதிர்க்கட்சிகளையும் எதிர்ப்பையும் களைதல், வாழ்க்கைக்கு வேண்டிய முக்கியமான பொருள்களின் உற்பத்தியைக் கைவிடல், பலரைப் பலிகொடுத்தல் போன்ற வழிகளை அரசியலார் கையாளவேண்டும் என்பதைமட்டும் இங்குக் குறிப்பிடலாம்.

'ஜனநாயகத்தில் திட்டமிடுதல்' இரண்டாவது முறையாகும். மக்களுடைய ஒத்துழைப்பையும் ஊக்கத்தையும் நாடெங்கும் தூண்டிவிடமுடியும். மக்களாட்சியையும் (அல்லது அவர்கள் விரும்பும் ஆட்சியையும்), அவர்களுடைய உரிமைகளையும் நிலைநாட்டுவதோடு, திட்டத்தையும் செயலாற்றலாம் என்பதே கருத்தாகும். குறிப்பிட்ட சில நாடுகளின் பொருளாதார அமைப்புக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்ற தெளிவான பெரும்பான்மையானவர்களின் ஆதரவைக்கொண்ட திட்டங்களை வகுக்கவேண்டுமா அல்லது வேண்டாவா என்பதை இங்குக் காணவேண்டும்.

B. திட்டத்திற்கு அல்லது திட்டமின்மைக்கு

திட்டம் வகுக்கவேண்டுமா அல்லது வேண்டாவா என்ற வினாவின் விடை, கொள்கையை அடிப்படையாகக்கொண்ட முடிவைச் சார்ந்திருக்கும். திட்டமிடுதல் தீவிர மாறுதல்களைப் பொருளாதாரச் சமுதாய நிலையங்களில் புகுத்தும். எனவே, இந்த முடிவு ஒரு நாட்டின் சூழ்நிலையையும், அரசினரின் நோக்கங்களையும் சார்ந்திருக்கும். மக்களாட்சியில் அவர்களுடைய நோக்கமே இதைப் பாதிக்கும்.

போட்டி முக்கியமான இடம்பெற்றிருக்கும் நாடுகளில் நுகர்வோரின் விருப்பங்களை உற்பத்தியாளர் அறியவும், அவர்கள்

இவ் விருப்பங்களையொட்டி உற்பத்திசெய்யவும் விலைவாசியின் போக்கு உதவிபுரிகின்றது. இத் தடையற்ற பொருளாதாரமுறையைத் திட்டம் பாதிக்கும் என்பதே, திட்டத்தை எதிர்க்கும் முக்கியமான கருத்தாகும். திட்டமிடுதலைவிடத் தானாக இயங்கும் பொருளாதாரமுறையே ஜனநாயகத்திற்கு உகந்தது என்று கருதப்படுகின்றது. திட்டமுறை, மக்கள் விருப்பத்திற்குத் தகுந்தபடி உற்பத்தியை அமைக்காமல், அவர்கள் பயன்படுத்தவேண்டிய பொருள்களை ஆட்சியாளர்கள் முடிவுசெய்ய வழிவகுக்கின்றது. மேலும், மார்க்கட்டின் தேவையைப் பூர்த்திசெய்து பிழைக்கும் தனித் தொழிலதிபர்களைவிட (அவர்களுடைய தொழிலின் அளவு எவ்வாறு இருந்தபோதிலும்), திட்டமிடுவோர் திறமைசாலிகளாக இருப்பர் என்று எண்ணுவதற்குக் காரணம் ஏதும் இல்லை. தனியாரின் வெற்றி அவர்கள் மார்க்கட்டின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதைச் சார்ந்திருக்கின்றது. தனியாரின் தவறுகளைவிடத் திட்டமிடுவோர் செய்யும் தவறுகள் பெரிய தீமைகளை விளைவிக்கும். இதுவரை தயாரான திட்டங்கள் திறமையற்றவையாகவும், பொருளாதாரக் கோட்பாடுகளைப் புறக்கணித்தவையாகவும் இருக்கின்றன என்றும், குறைவாக உள்ள மூலதனத்தையும், அயல் நாட்டு உதவித் தொகையையும் இவை தவருகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற வழிகளில் வீணுக்கிவிட்டன என்றும் திட்டத்தை எதிர்ப்பவர் கூறுகின்றனர்.

வளர்ச்சியடையும் செழிப்பான நாடுகளில், ஏழைகளின் வாழ்க்கைத்தரம்கூட உயர்வாக இருக்கும். இந்த நிலையில் திட்டமிடுதல் வேண்டா; திட்டம் பொருளாதார நடவடிக்கைகளைச் சின்னபின்னப்படுத்தும்; பொருளாதாரத்தின் பல கூறுகளின் தொடர்புகொண்ட அலுவல்களைப் பாதிக்கும். இந்த நிலையில் அரசினர் ஏழைகளைப் பாதுகாத்தால்மட்டும் போதும். இதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும், பொதுப்பணியைச் சீராக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்தால் போதும்.

திட்டம் திருப்திகரமான வளர்ச்சி வீதத்திற்குக் காரணமாக இல்லை என்பதும், எல்லா வகுப்பினருடைய நலனும் திட்டத்தினுல் பெருகவில்லை என்பதும் வரலாறு கண்ட உண்மை. முன்னேற்ற மடைந்த நாடுகளில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுவிட்டது (பெரும்பாலும் இது காலப்போக்கில் ஏற்பட்டது) என்பதை முன்னேற்றம் என்பதின் விளக்கமே காட்டுகின்றது. மேலும், வளர்ச்சி தேவையில்லாத காரணத்தால் மேலும் நிலையான தன்மையை ஏற்படுத்துவதே இந்த நாடுகளின் நோக்கமாகும். இதைச் செய்வதற்கு வர்த்தகச் சுழல்களை நீக்க அல்லது அவைகளுடைய கடுமையைக் குறைக்க இந்த நாடுகள் முயற்சி செய்கின்றன.

வேலை, விலைவாசிகள் முதலியவற்றில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் அவை முயற்சி செய்கின்றன.

ஆனால், போர்க்காலத்தில் குறைந்தபட்ச வாழ்க்கைத்தரத்திற்கு வேண்டிய நுகர்வோர் பொருள்களையும், உணவுப் பொருள்களையும் மக்களுக்கு அளித்துவிட்டு, மற்ற உற்பத்தித்திறன் முழுவதையும் போரை வெல்வதற்காகப் பயன்படுத்தவேண்டும். இந்த நிலையில் முன்னேற்றமடைந்த நாடுகள் (போர்த் திட்டப்படி) அமல்செய்யும் கட்டுப்பாடுகள், வளர்ச்சியடையாத நாடுகளின் கட்டுப்பாடுகளை விட மிகுதியாக இருக்கும். அண்மைக்காலத்தில் போரின் விளைவுகளிலிருந்து மீளவேண்டிய அவசியமும், வளர்ச்சியின் தேவையும், திட்டங்கள் அல்லது திட்டங்களை ஒத்த நடவடிக்கைகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அமலில் வருவதற்குக் காரணமாக இருந்தன.

வளர்ச்சியடையாத நாடுகளில் தடையற்ற பொருளாதாரத் திட்டம் (free economic system) திரள்முறையில் வளர்ச்சியை அல்லது செழிப்பைத் தூண்டத் தவறுகின்றது. இதற்கு அதன் குறைகள் அல்லது அது திறமையாக இயங்குவதைத் தடைசெய்யும் இடையூறுகள் காரணமாக இருக்கும் என்று ஊகிக்கலாம். இவ் விரு காரணங்களுமே உண்மையாக இருக்கலாம். முழு மூச்சுடன் புரியும் போரும், அரைகுறைப் போரும் முன்னேற்றமடைந்த நாடுகளில் ஏற்படுத்தும் நெருக்கடி மேற்கூறிய நெருக்கடியைப்போலவே இல்லையா? இக் குறைகளை முறையாக நீக்குவதற்கு, ஏன் முறையான முயற்சி செய்யக்கூடாது? பொருளாதார முறைகளையும் தத்துவங்களையும் புறக்கணிக்காமல், அவைகளைப் பயன்படுத்தி வேண்டிய பொருளாதாரப் போக்குகளையும் மாறுதல்களையும் ஏன் புகுத்தக்கூடாது?

வளர்ச்சியடையாத சில வகை நாடுகள் ஏன் திட்டம் வகுக்க வேண்டும் என்பதற்குக் கீழ்க்கண்ட விளக்கத்தைக் கொடுக்கலாம்.

திரள்முறை வளர்ச்சி இல்லாமையும், பெருவாரியான மக்களிடையே உள்ள வறுமை தொடர்ந்து நீடித்திருப்பதும், அடிப்படைச் சீரமைப்பின் உடனடித் தேவையை எடுத்துக் காட்டுகின்றது. மக்களுடைய வருமானம் குறைவாக இருக்கும்வரை, குறைவாக உள்ள உணவுப் பொருள்களையும் நுகர்வோர் பொருள்களையும் வாங்குவதில் அவர்கள் சரிவரப் போட்டியிடமுடியாது. உற்பத்தியாளர்கள் விரிவடையும் மார்க்கட்டின் தேவையைப் பூர்த்திசெய்யும் வாய்ப்பையும் பெறுவதில்லை. இந்த நிலையில் விலை முறையைமட்டும் நம்புவது தவறு. இத்தகைய பொருளாதாரத்தில்

மக்கள்தொகை பெருகும்வீதம் உயருவது, எதிர்காலத்தில் நிலைமை மேலும் மோசமாகும்; முன்னேருது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. மூலதனப்பொருள் போதிய அளவு கிடைக்க வில்லை. பயனுகும் பொருள்களைவிட அதிகமாக உற்பத்திசெய்து, இதைக்கொண்டு முதலீட்டுப் பொருள்களை வாங்க முடியவில்லை. இத்தகைய நாடுகள் குறைவான உற்பத்தித் திறனைக் கொண்டிருப் பதற்கு இது முக்கியமான காரணமாகும். ஆகையால் வேண்டிய பொருள்களையும், முதலீட்டுப் பொருள்களையும் திரட்டுவதற்கு விசேஷ முயற்சி செய்யவேண்டும். நீண்டகால முயற்சியால் நிறு வப்படவேண்டிய நிறுவனத்தைத் தனியார் துறையில் தொடங்கு வது கடினம்; இது தனியாருக்கு இலாபகரமாக இருக்காது. (உதாரணமாக, இத்தகைய நிறுவனத்தின் நன்மை தொடங்குவோ ருக்கு இலாபமாகத் தோன்றுமல், மக்களுக்குப் பொது நன்மையாகத் தோன்றினுல், அவர்கள் இதை விரும்பமாட்டார்கள்.) இத்தகைய நிறுவனங்களை அரசினர் அல்லது திட்டமிடுவோர் ஆரம்பிக்கலாம். பன்னேக்குத் திட்டங்களையும் (multi-purpose projects), இருப்புப் பாதைகள், எல்லாத் தட்பவெப்ப நிலையிலும் உறுதியாக இருக் கும் சாலைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள், நீர்த் தேக்கங்கள் முதலிய பொதுநலத் திட்டங்களையும் தொடங்குவதற்குத் திட்ட மிட்ட முதலீடே (planned investment) சிறந்தது. கல்வி, பயிற்சி போன்ற பணிகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களையும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களையும், கிராம உதவித் திட்டங்களையும் நிறுவு வதற்கும், திட்டமிட்ட முதலீடு சிறந்தது. தனியார் துறை தொடங்கமுடியாத பல பெரிய அடிப்படைத் தொழில்களை அரசு ஆரம்பிக்கலாம். இதனுல் ஏற்றுமதி பெருகும்; இறக்குமதி குறை யும். இத்தகைய தொழில்கள் பலவற்றை நாம் உதாரணமாகக் கொடுக்கலாம்.

இப் பணிகள் சரிவரச் செய்யப்பட்டால்தான் வளர்ச்சி நிலையாக இருக்கும். இதற்கு வேண்டிய நிதியை வரிவசூல், சேமிப்பை ஒரு முகப்படுத்தித் திரட்டுவது, பொதுத்துறையின் இலாபங்களைத் திரட்டுவது முதலிய வழிகளில் பெறலாம். போகப் பொருள்களுக் காகச் செய்யப்படும் செலவைக் கட்டுப்பாடு செய்யலாம். இவை களுக்கெல்லாம் திட்டம் வேண்டும். இரண்டாவதாகக் குறிப்பிட்ட சில திட்டங்களுக்கோ அல்லது பொதுவாகவோ அயல்நாட்டு உதவியைப் பெறுவதற்குத் திட்டம் வழி வகுக்கின்றது. இது வெற்றிகரமாக இருந்தால், கடனையும் வட்டியையும் திருப்பிக் கொடுக்க வழி ஏற்படும்—திட்டங்கள் நிறைவேறுவதால், மக்க ளுடைய வரி செலுத்தும் ஆற்றல் பெருகினுல்தான் இந்த விளைவு ஏற்படும்.

நிலம் ஒரு குறிப்பிட்ட அளவுதான் இருக்கின்றது; அதை உற்பத்தி செய்யமுடியாது. கடனுக வாங்கமுடியாது. ஆனால், சீரமைப்புச் செய்யலாம். பயனில் இல்லாத சில நிலங்களைப் பயன் படுத்தலாம். இதைத்தவிர, வளர்ச்சியடையாத நாடுகளில் மூலதனம் குறைவாக இருக்கும் முக்கியமான காரணி என்ற கருத் தைப்பற்றிய ஓர் எச்சரிக்கையை இங்கு நாம் கொடுக்கவேண்டும். இதிலிருந்து நிதிமட்டும் கிடைத்தால் வளர்ச்சி ஏற்பட்டுவிடும் என்று கருதக்கூடும். மூலதனத்துடன் ஒத்துழைக்கும் மற்றக் காரணிகளும் வேண்டும். மூலதனத்தைப்பற்றிமட்டும் பேசாமல். மனித உழைப்புடன் ஒத்துழைக்கும் மற்றக் காரணிகளையும்பற்றிப் பேசுவது சிறந்தது. முதல் சிறந்தமுறையில் பயனுக வேண்டு மானால், பயிற்சிபெற்ற தொழிலாளர்களும், நிர்வாகத் திறமையும், எளியமுறையில் கிடைக்கும் சக்தியும், போக்குவரத்து வசதியும், கச்சாப் பொருள்களும், இயந்திரங்களின் பாகங்களும் முதலுடன் கிடைக்கவேண்டும்.[1] முன்னேற்றமடைந்த நாடுகள் கொண்டுள்ள மூலதனத்தின் நிலை, அதன் (முதலின்) அளவன்று. அந்த நாடுகள் கொண்டுள்ள அறிவும், இந்த அறிவை அவை பயன்படுத்தும் அளவும் மூலதனத்தின் நிலையைப் பாதிக்கின்றன என்று பாவர், யாமே (Bauer and Yamey) என்ற ஆசிரியர்கள் கூறுகின்றனர். இக் கருத்தைப் பேராசிரியர் சைமன் குஸ்நட் (Prof. Simon Kuznet) என்பவர் ஆமோதிக்கின்றார்.[2] முதல் பயனுவதைப்பற்றிக் கூறும் பொழுது, அது சரிவரப் பயனுகாமல் போகலாம். அல்லது அது சரியானபடி பயன்படுத்தப்பட்டாலும் முழுமையாகப் பயனுகாமல் போகலாம் என்பதைக் குறிப்பிடவேண்டும். முதல் வீணுவதைக் காட்டப் பல உதாரணங்களை இங்குக் கொடுக்கலாம். உதாரண மாக, இந்த நூற்றாண்டின் முதல் பாகத்தில், இந்தியத் துணைக்கண் டத்தில் தொழிற்சாலைகளின் தளவாடங்களை ஒரு சிறப்பு ஆய்வுக்குட் படுத்தினர். பல இயந்திரங்கள் பயனுகவில்லை. ஏனெனில், இவை களைப் பழுதுபார்க்கத் தகுதியுடையவர்கள் நாட்டில் இல்லை. இயந்திரங்களின் பழுதான பகுதிகளுக்குப் புதிய பாகங்களும் கிடைக்கவில்லை. சில இடங்களில் செயற்கைக் காற்றோட்ட வசதி கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், இவை வேறு சில இடங் களில் அமைக்கப்படவில்லை. இதற்குக் காரணமாக வசதிகள் செய்வதற்கு இடையூறு ஏதும் இல்லை. தொழிற்சாலைகளைச் சீராக வும் துப்புரவாகவும் வைத்துக்கொள்ளவேண்டுமென்ற அக்கறை இல்லாமையே இதற்குக் காரணமாகும். சில ஆண்டுகளுக்குமுன் அமைக்கப்பெற்ற பன்னேக்குத் திட்டங்கள் அளிக்கும் நீர்மின்சக்தி

[1], Economic Journal, Mareh, 1963; The Economics of Underdeveloped Countries by W. B. Reddaway.

[2]. Economics of Underdeveloped Countries, 1957, p 129.

யும் (hydro-electricity), பாசன நீரும் முழுமையாகப் பயனுகவில்லை என்பதை அரசே ஏற்றுக்கொள்கின்றது. கிராமப்புறங்களில் கால் வாய்கள் வெட்டப்படவில்லை; நீர்த் தேக்கங்களுக்கும், கிராமாந்தர நிலங்களுக்குமிடையே தொடர்புகள் ஏற்படுத்தப்படவில்லை; மின்சக்தி கிடைக்குமிடங்களில் தொழிலகங்கள் இல்லை. அவை இன்றும் நிறுவப்படவில்லை. 'வளர்ச்சியில் சமநிலை' ஏற்படாததை இவ் வுதாரணங்கள் காட்டுகின்றன. இதைப்பற்றி முன்பே கூறியுள்ளோம். இதன் விளைவாக முதல் வீணுகின்றது.

தக்க சூழ்நிலையில் திட்டமிடுதல் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கும் என்பதைக் கோட்பாட்டளவிலாவது, நாம் இங்கு முடிவாகக் கூறலாம். திட்டம் வகுத்தல் சரியான கொள்கையா அல்லது தவருனதா என்பதைச் சூழ்நிலையே நிர்ணயிக்கும். குறிப்பிட்ட நாடுகளைப்பற்றிப் பேசும்போதுதான் இதை விளக்கலாம். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும்—முதல் அதிகாரத்தில் கூறியுள்ள படி—உள்ள பொருளாதாரநிலை திட்டமிடுதலின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

C. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஏன் திட்டம் வேண்டும்?[1]

19ஆவது நூற்றுண்டின் இடைப் பகுதிக்குப்பின், இந்தியா இரு நாடுகளாகப் பிரிவதற்குமுன், சில நவீனப் பெருவாரித் தொழில்கள் நாட்டில் நிறுவப்பெற்றபோதிலும், பெரும்பான்மையோரின் வாழ்க்கைத்தரம் கணிசமாக முன்னேறவில்லை. மக்கள் தொகையில் நல்ல நிலையில் உள்ளவர்களுடைய விகிதம் மாருமல் ஒரே நிலையில் இருந்தது. மிகத் தாழ்வான படிவத்தில் பொருளாதாரம் ஒரு சமநிலையை அடைந்துவிட்டது. சிறிய நவீனப் பகுதியைத் தவிர, மற்றப் பகுதிகளில் உள்ள தேக்கநிலைபற்றிய விளக்கத்தை முதல் அதிகாரத்தில் விளக்கியுள்ளோம். இத் தேக்க நிலைக்குக் காரணமாக உள்ளவை நீடிப்பதே, திட்டம் வகுத்தலுக்கு ஓர் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன் காலத்திலிருந்த, இப்பொழுதும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் இருக்கும் இத் தேக்க நிலையின் காரணங்களை மீண்டும்

[1] இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே உள்ள பொருளாதார வேற்றுமைகளையும், பிரச்சினைகளின் வேற்றுமைகளையும், திட்டங்களின் வேறுபாடுகளையும் ஆசிரியர்கள் அறிவர். ஆனல், இரு நாடுகளின் பொருளாதாரமும் ஒரேமாதிரி இருப்பதால், இரு நாடுகளுக்கும் ஒரே மாதிரிக் கருத்துகள் பொருந்தும். ஆனல், இவை இரு நாடுகளுக்கும் எந்தெந்த அளவு பொருந்தும் என்பதில் வேறுபாடு இருக்கலாம்.

இங்குக் கூறத் தேவையில்லை. அவையாவன : பருவமழை தவறு வதுபோன்ற இயற்கை விபத்துகள்; மக்கள் தொகைப் பெருக்க மும் அதனுல் ஏற்படும் நிலத்தின் கிராக்கியும்; பெருகிவரும் வேலை யின்மையும் குறை வேலையும்; நிலம் வைத்துக்கொள்ளாத கிராமாந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை உயருதல்; அயல் நாட்டு முதல் முதலீடாவதாலும், அன்னியத் தொழில் துணிவோர் செயலாலும், பெருக்கி (multiplier) நாடெங்கும் பரவத் தவறுதல்; தற்காலத்திய முறைகளைப் புகுத்துவதற்கு இடையூருக இருக்கும் சமுதாய நிலையங்களும், பழக்க வழக்கங்களும்; கிராமாந்தரப் பகுதி களில் பணப் பரிவர்த்தனை இல்லாமை; மக்கள் தொகையில் 70 சதவீதத்தினர் விவசாயத்தை நம்பி இருப்பது; முதல் போதாமை (முதல் என்ற சொல்லை விரிவான பொருளில் பயன் படுத்துகிறேம்).

நாடு ஆங்கிலேய ஆட்சியில் இருந்தபொழுது, நவீனப் போக்கு வரத்து வசதிகளும் நீர்ப்பாசனத் திட்டங்களும் அமைக்கப்பட்டன. உற்பத்தியும் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகங்களும் பெருகின. ஆனல், விவசாயிகளும், சிறிய தொழிலதிபர்களும், கிராமப் பணி யாட்களும் இதனுல் மிகக் குறைவாகவே பலனடைந்தனர். அவர் களில் பெரும்பகுதியினர், வாழ்க்கை மட்ட நிலையிலேயே இருந் தனர். நீர்ப்பாசன வசதி பெருகியதால், சாகுபடியாகும் நிலத்தின் பரப்புப் பெருகியது. பருத்தி ஆலைகள் நிறுவப்பெற்றமையா லும், வேறு நுகர்வோர் பொருள்கள் உற்பத்தியினுலும், மற்ற நுகர்வோர் பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. ஆனல், மக்கள் தொகை பெருகியது—குறிப்பாக 1921-லிருந்து மக்கள் தொகை விரைவில் பெருகியது—விவசாயத் தொழிலில் உள்ளவர் களுடைய திறமையும் கிராமத் தொழிலில் ஈடுபட்டவர்களுடைய திறமையும் கணிசமாக உயராததால், முன்பைவிட மிகுதியான (பெருகும்) மக்கள்தொகை மாருத, பழைய வாழ்க்கைத்தரத்தில் இருந்தனர். இரு உலகப் போர்களுக்கும் இடையே உள்ள காலம் வரை இந்தியா (கிராமாந்தர மக்கள் குறைவாக உணவு உட் கொண்டபோதிலும்) உணவுத் தானியத்தை ஏற்றுமதிசெய்தது. கிராமாந்தர மக்கள் மிகுதியான உணவுப் பொருள்களைத் தம்வசம் வைத்துக்கொண்டு, மற்றப் பொருள்களை மிகுதியாக வாங்க முடிய வில்லை. தம் பயனுக்காகவும் அதிகமாக வைத்துக்கொள்ள முடிய வில்லை.

இரு உலகப் போர்களின் இடைக்காலத்தில் மக்கள் தொகை பெருகியதால், மக்கள் உட்கொள்ளும் உணவு, மேலும் குன்ருமல் இருப்பதற்காக, உணவுப் பொருள்கள் முழுவதையும் உள்நாட்டி லேயே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதை அடுத்த

காலத்தில் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு (self sufficiency) பெற்றிருந்தது. ஆனால், மற்ற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை விரைவில் ஏற்பட்டது. மக்கள் தொகை பெருகியதால் நிலத்தின் கிராக்கி பெருகியது. இது வறுமையின் சின்னமே தவிர, காரணம் அன்று. இது குறை வேலைக்கும், நிலமில்லாத கிராமாந்தரத் தொழிலாளர்கள் பெருகுவதற்கும் காரணமாக இருந்தது.

1850-லிருந்து இந்தியக் கண்டத்தில் மக்கள் தொகை, உற்பத்தி, வர்த்தகம் முதலியவை பெருகின. ஆனால், தன் பெருக்கத்திற்குத் தானே காரணமாக உள்ள திறன்முறை வளர்ச்சி ஏற்படவில்லை. சிறந்த விதைகளை மக்களுக்குப் பங்கீடு செய்தல், ஆராய்ச்சி, நீர்ப்பாசன வசதிகள் அமைத்தல், பாகுபாட்டுப் பாதுகாப்புமுறை (discriminating protection) முதலியவைமூலம் விவசாயத்தைச் சீராக அமைப்பதற்கு ஆங்கிலேய ஆட்சியில் முயற்சி நடைபெற்றது. இதனால் ஒரு சில நவீன தொழில்கள் (இரும்பு, எஃகுத் தொழில் உள்பட) வளர்ந்தன. ஆனால், இப் பழைய முறைகளைக் கையாண்டு பொருளாதாரத்தை உயர்ந்த படிவத்திற்குச் செலுத்துவது கடினம். சிறிய முன்னேற்றங்கள் ஏற்படுத்தலாம். சில தனிப்பட்ட வகுப்பினர் இதனால் பலனடையலாம். ஆனால், பெருவாரியான கிராம மக்களின் எதிர்காலம் நம்பிக்கையற்றதாக இருந்தது.

இந்த நிலை சாதாரணமாக, 'தீய சுழல்' (vicious circle) என்ற சக்தியைத் தோற்றுவித்தது. அதாவது மற்றவை ஒரே நிலையில் இருந்தால், வறுமை திறமையின்மைக்குக் காரணமாகவும், திறமையின்மை வறுமைக்குக் காரணமாகவும் இருக்கும். பொதுச் சுகாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டதாலும், பஞ்சத்தை விரட்டுவதற்குப் பல நடவடிக்கைகள் எடுத்ததாலும் இற்ப்புவீதம் குறைந்தது. மொத்த உற்பத்தி பெருகியது (மொத்த உற்பத்தி தலா உற்பத்தியிலிருந்து வேறுபட்டிருக்கின்றது.) எனவே, முன்பு இருந்த தாழ்வான வாழ்க்கைத்தரமே நீடிக்கின்றது. முன்பைவிட அதிகமான மக்கள் இருக்கின்றனர். நுகர்வும், பொருளாதார வாய்ப்புகளும் பெருகவில்லை.

புதைந்துகிடக்கும் பொருளாதாரச் சக்திகளையும், ஏராளமான பலதரப்பட்ட உற்பத்திச் சாதனங்களையும், திறமையுள்ள வேலையாட்களையும், வரையற்ற பயிற்சிபெறுத தொழிலாளர்களையும் இந்தியா கொண்டிருக்கின்றது என்றும் கூறப்படுகின்றது. நாட்டின் விடுதலையை அடுத்து, 'தீய சுழலை'த் தகர்ப்பதற்குப் புதிய முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. இந்த நிலையில் திட்டங்கள் வகுக்கவேண்டியதாயிற்று. இரு போர்களின் இடைக்

கால நிலையையும், நாடு பிரிக்கப்பட்டபின் இருந்த நிலையையும் முன்பே விளக்கினேம்.

தீய சுழலைத் தகர்ப்பதற்காகவும், பெருகும் அமித மக்கள் தொகையைக் குறைப்பதற்காகவும், பொருளாதாரத்தின் சீர்கேடான நிலையின் காரணங்களை நாம் அறிந்ததாலும், குறைகளை நீக்கவேண்டியதாலும், போதிய முதலைக்கொண்டு (முதல் என்பது விரிந்த பொருள்கொண்டது) இக் குறைகளை எவ்வாறு நீக்கலாம் என்பதை நாம் அறிவதாலும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. பொருளாதார நிலையங்களையும் பழக்க வழக்கங்களையும் மாற்றுவதற்கு வேண்டிய சக்தியை அரசு பெற்றிருக்கின்றது என்று நாம் கற்பனை செய்துகொள்கின்றோம். தேசிய உற்பத்தியிலும், வருமானத்திலும் உள்ள உபரியைப் பயன்படுத்தி, ருஷிய நாடு திட்டங்கள்மூலம் சரிவர முதலீடுசெய்து விரைவில் முன்னேறியது. சர்வாதிகார நாடுகளைப் பின்பற்றுவது எந்த அளவு விரும்பத்தகாததாக இருப்பினும், திட்டங்கள் எவ்வாறு முன்னேற்றத்திற்குக் காரணமாக இருக்கின்றன என்பது புலனாகின்றது. மிகவும் தாழ்வான நிலையிலிருந்து உயருவதற்குத் திட்டத்தைக் கையாளுவது சரியென்ற முடிவுக்கு நாம் வருகின்றோம். தொடக்க நிலையிலாவது அயல்நாட்டு உதவிகிடைத்தால் இந்த முடிவு மேலும் வலிமை பெறுகின்றது.

திட்டமிடுவதுபற்றி முடிவு எடுத்த உடனே வளர்ச்சி ஏற்பட்டு விடாது. ஜனநாயகத் தத்துவங்களை அடிப்படையாகக்கொண்டு, பெரும்பான்மையானவரின் நிலையை உயர்த்தும் நோக்கத்தைக் கொண்டிருந்தபோதிலும், திட்டம் திறமையானதாகவும், சிறந்த முறையில் தீட்டப் பெற்றதாகவும் சிறந்த பொருளாதாரத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவும் இருக்கவேண்டும். இப்படி அமையாவிடில், திட்டம் தன் வளர்ச்சியைத் தானே தூண்டுவதாக அமையாமல், பிரச்சினைகளைத் தீர்க்காமல், மேலும் அதிகமான பிரச்சினைகளை ஏற்படுத்தும்; அழிவுக்குக் காரணமாக இருக்கும். ஏனெனில், பொருளாதாரக் கருவிகளையும், அமைப்பையும், விலை முறையையும் திட்டம் பாதிக்கும். திட்டங்கள் தொடங்குவதற்குமுன் இருந்த குறைகளைப் பார்க்கும்போது, இக் குறைகளை நீக்குவதற்குத் திட்டங்களைவிடச் சிறந்த ஒரு வழியை வகுக்க முடியாது.

திட்டம் வகுப்பதில் திறமை காட்டுவதுமட்டும் போதாது. திட்டத்தின் வெற்றி அல்லது தோல்வி திட்டமிடுவோரின் திறமையைச் சார்ந்ததில்லை. திட்டம் செயலாற்றப்படுவதே அதன் வெற்றியை நிர்ணயிக்கின்றது. சிறந்த பயிற்சிபெற்றவர்கள்

இருப்பதும், இலஞ்ச ஊழல் நீக்கப்படுவதுமே அதன் வெற்றிக்குக் காரணமாக இருக்கின்றன. பொது மக்களுடைய ஆதரவும் ஒத்துழைப்பும், அவர்கள் திட்டத்தில் காட்டும் உற்சாகமும் அதன் வெற்றிக்குக் காரணமாக இருக்கும்.

இதிலிருந்து திட்டம் முதன்முதலிலிருந்தே குறைவற்றதாக இருக்க வேண்டும் என்று கூறமுடியாது. சோதனை செய்வதும் தவறு இழைப்பதும் தவிர்க்கமுடியாதவை. ஆனால், திட்டமிடுவோர் தம் தவறுகளை அறிந்துகொண்டு, திட்டத்தை நன்கு செயல்படுத்துவதிலும், நிர்வாகத்தில் அக்கறையும் காட்டினால் திட்டம் வெற்றிகரமாக இருப்பதற்கு வழி இருக்கின்றது.

D. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் திட்டத்தின் நோக்கங்கள்

இந்தியப் பாகிஸ்தானிய ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றிக் கூறுவதற்கு இங்கு இடமோ அல்லது தேவையோ இல்லை. ஆனால், திட்டங்களின் நோக்கங்களை இங்குக் கூறவேண்டும். ஏனெனில், திட்டப் பிரச்சினைகளை அவை பாதிக்கின்றன.[1] பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதால், பிரச்சினைகள் எழுகின்றன.

தீய சுழலைத் தகர்ப்பதே முக்கியமான நோக்கமாகும். அதாவது, 'தொடக்கநிலை அசைவை' (take-off) ஏற்படுத்துவதே முதலில் செய்ய வேண்டியதாகும். அதாவது, தாழ்ந்த படிவத்தில் இருக்கும் சமநிலையிலிருந்து (equilibrium) விலகித் திறன்முறையில் தன் பெருக்கத்திற்குத் தானே காரணமாக உள்ள வளர்ச்சியைத் தூண்டவேண்டும். பொருளாதார வளர்ச்சி, மக்கள் பெருக்கத்தை விட மிகுதியாக இருத்தல்வேண்டும். இதன் விளைவாகச் சேமிப்பும் முதலீடும் பெருகவேண்டும். பெருக்கத்திற்குத் தானே காரணமாக இருக்கும் வளர்ச்சி, முன்னேற்றம் தடைபடாமல் அயல்நாட்டுக் கடனைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தும். இதிலிருந்து அயல்நாட்டு முதலும், உற்பத்தி முறைகளும், வல்லுநர்களும் வேண்டா என்று நாம் பொருள் காணக் கூடாது. இந்தியாவும் பாகிஸ்தானும் அயல்நாடுகளிலிருந்து பெறும் நிதியுதவிக்கு, உலக மார்க்கட்டில் உள்ள வீதப்படி செலுத்த வேண்டியதைக் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கும் என்பதே

[1] இந்தியப் பாகிஸ்தானியத் திட்டங்களின் நோக்கங்கள் ஒரே மாதிரியாக இல்லாவிடினும் அவை ஏறக்குறைய ஒத்திருக்கின்றன. ஆகையால் அவைகளை இங்குப் பொதுவாகப் பார்க்கின்றோம்.

பொருளாகும். அயல்நாட்டுச் செலுத்தல்நிலையில் இந்தியாவும் பாகிஸ்தானும் முன்னேற்றம் காணுகின்றன என்பது பொருளாகும். இந்த நிலையில், அயல்நாட்டுத் தனியார்துறையின் முதலீட்டையும் அன்னிய அரசுகளின் பொதுக்கடனையும் ஈர்க்கலாம்.

எனவே, குறுகிய காலத்திலும், நீண்ட காலத்திலும் உற்பத்தியைப் பெருக்குவதும், உச்சநிலைக்கு உயர்த்துவதுமே திட்டத்தின் முதல் நோக்கமாகும். இதனால் நுகர்வுக்குமேல் மிகுதியான உற்பத்தி ஏற்படும். இதை நன்கு திரட்டினால் சேமிப்பையும், முதலீட்டையும் தூண்டித் தன்னேத்தானே காக்கும் அல்லது பெருக்கும் வளர்ச்சியை ஏற்படுத்தலாம். இதற்கு வேண்டிய முதலீட்டின் அளவைப் பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். 12 சதவீதம்முதல் 15 சதவீதம்வரை உள்ள முதலீடு இதற்குப் போதியதாக இருக்கும்.[1]

கிராமத்தில் உபரியாக இருக்கும் தொழிலாளர்கள் சிலரைத் தற்காலத்திய தொழில்பகுதிக்கு அனுப்பினால்தான், வேண்டிய அளவு உற்பத்தி பெருகும். இப்படிச் செய்தால்தான் எதிர்காலத்தில் தொழிலாளர்களின் உற்பத்திசெய்யும் திறமையும், மொத்த உற்பத்தியும் பெருகும். இதற்குக் கணிசமான அளவு முதலீடு தேவையாகும். இந்த முதலீடு நீண்டகாலம் பலன் எதையும் அளிக்காமல் இருக்கலாம். தொழில்களை வளர்ப்பது மற்றொரு நோக்கமென்பது இதிலிருந்து புலனுகின்றது. நீண்ட காலத்தில் தொழில்துறையில் தலா உற்பத்தி பெருகவேண்டும்; இறக்குமதியின் தேவையும் குறையவேண்டும். உற்பத்தித்திறமையை உயர்த்தும்பொழுது (தலா உற்பத்தியைக்கொண்டு இதை நிர்ணயம் செய்யவேண்டும்) தம் நோக்கம் உபரித் தொழிலாளர்களை விவசாயத்திலிருந்து திருப்புவதோடுமட்டுமல்லாமல், விவசாயத்தைச் சார்ந்திருப்போரின் எண்ணிக்கையையும் குறைப்பதாகவும் இருக்கவேண்டும். ஏனெனில், விவசாயத்தில் வருமானம், மற்றத் துறைகளில் கிடைக்கும் வருமானத்தைவிடக் குறைவாகவே இருக்கின்றது.

ஆனால், இயந்திர உற்பத்தித்தொழில், இயந்திரக் கருவித் தொழில், இரசாயனத்தொழில், எண்ணெய் சுத்தித்தொழில் இரும்பு எஃகுத் தொழில்கள் போன்ற அடிப்படைத் தொழில்கள் மக்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகளை அளிக்கவில்லை. இவை குறிப்பாகப் பயிற்சி பெறுத தொழிலாளர்களுக்கு மிகுதியான வாய்ப்புகளை அளிக்கவில்லை. வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதே திட்டத்தின்

[1] W. A. Lewis (டபிள்யூ ஏ. லீவிஸ்) 'The Theory of Economic Growth, 1955 பக்கம் 208. இந்தியாவில் வளர்ச்சிக்குத் தேசிய வருமானத்தில் 12 சதவீதம் முதலீடாகவேண்டும் என்று அவர் குறிப்பிடுகிறார்.

மற்றொரு தோக்கமானதால், அடிப்படைத் தொழில்களை நிறுவுவது திட்டத்தின் ஒரு நோக்கத்திற்கு முரணாக இருக்கின்றது. வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்கு மற்ற நடவடிக்கைகளைக் கையாள வேண்டும்.

மேலே நாம் கொடுத்துள்ள விளக்கம், ஒரு முரண்பாட்டை நம் கவனத்திற்குக் கொண்டுவருகின்றது. குறுகிய காலத்தில் உற்பத்தியை உச்சநிலைக்கு உயர்த்துவது, நீண்ட காலத்தில் உற்பத்தி உயருவதற்கு முரணாக இருக்கின்றது. இப் பிரச்சினையைக் கீழ்க் கண்டவாறு விளக்கலாம்: நிலத்தை இறக்குமதி செய்யமுடியாது. உற்பத்தியும் செய்யமுடியாது. இதைத் தவிரக் குறைவாக இருக்கும் முதலை எல்லாத்துறைகளிலும் பகிர்ந்து பயன்படுத்துவதால், உற்பத்தி உச்சநிலைக்கு உயர்வதாகத் தோற்றம் அளிக்கலாம். (சில வகை உண்மையான முதல், பிரிக்க முடியாதவையாக இருந்த போதிலும், மேற்கூறியதைக் கூடியமட்டில் செய்கின்றோம் என்று கருதவேண்டும்.) இப்படிச் செய்தால் குறுகிய காலத்தில் உற்பத்தி உச்சநிலையை அடையும். உணவுப் பொருள் உள்பட நுகர்வோர் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கும். ஆனால், நீண்டகால உற்பத்தியும், முதலீட்டுச் சேமிப்பு வீதங்களும், உற்பத்தித் திறமையும் அயல்நாட்டு மூலதனத்தை ஈர்க்கும் சக்தியும் எவ்வாறு பாதிக்கப்படும்? தற்காலத்திய தொழிலகங்களும், பொதுப்பணித் தொழில்களும் உற்பத்தியைத் தொடங்குவதற்கு நீண்டகாலம் ஆகும். ஆனால், அவை இறுதியில் உற்பத்தியைப் பெருவாரியாகப் பெருக்குகின்றன. தனியாரும், நிறுவனங்களும், கூட்டுப் பங்குத் தொழிலகங்களும், மேற்கூறிய தொழில்கள்மூலம் ஏராளமான பொருளைச் சேமித்து முதலீடு செய்கின்றனர். குறைவாக உள்ள முதலைப் பகிர்ந்தால், பெரிய திட்டங்களுக்குப் போதிய மூலதனம் கிடைக்காது. பெருவாரியானவர்களுடைய நுகர்வு நாட்டம் மிகவும் அதிகமாக இருக்கின்றது. ஆகையால், உற்பத்தியும் தலா வருமானமும் சிறிது பெருகினால், அவர்கள் மிகுதியான வருமானத்தை, உடனே துய்க்கும் பொருள்களை வாங்குவதற்கே பயன்படுத்துகின்றனர். நீண்ட காலத்தில் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் போதிய சேமிப்பு ஏற்படுவதில்லை. சேமிப்பு முதலீட்டு வீதங்கள் இப்பொழுது இருப்பதைவிடக் குறையலாம். மேற்கூறிய இரு வழிகளையும் சேர்த்துப் பின்பற்றுவதற்குத் திட்டம் தேவை. கிடைக்கும் முதலில் ஒரு விகிதத்தை, உற்பத்திசெய்யும் ஆற்றலைப் பெருக்குவதற்காகப் பயன்படுத்தத் திட்டம் வழிவகுக்கின்றது. இதை 12ஆவது அதிகாரத்தில், 'முறைகளின் தேர்வு' என்ற தலைப்பில் விளக்கியுள்ளோம்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், சமுதாயப் பொருளாதார அநீதிகளை நீக்குவதும் நாம் குறிப்பிடவேண்டிய

நோக்கங்களுள் இறுதி நோக்கமாகும். இதை நிறைவேற்றுவதற்கு வருமானப் பகிர்வையும், பொருளாதார வாய்ப்புகளையும் மாற்றியமைக்கவேண்டும். இது உற்பத்தியையும், உற்பத்தி செய்யும் திறமையையும் உச்ச நிலைக்கு உயர்த்தும் நோக்கத்துடன் முரணுக இருக்கின்றது. ஏனெனில், அரசு பொதுநலத் திட்டங்களில் பணத்தைச் செலவுசெய்வதால், உற்பத்தியை உச்சநிலைக்கு உயர்த்துவதற்காகச் செய்யக்கூடிய செலவு குறையும். மேலும், இதற்கு வேண்டிய பணத்தை வரிவசூல்மூலம் திரட்டுவதால், செல்வர்களுடைய வருமானம் குறையும். அவர்களுடைய சேமிப்பு, முதலீட்டுச் சக்திகள் குன்றும். சேமிப்பும், முதலீடும் செய்வோரின் வருமானத்தை,ஏழைகளின் நன்மைக்காக வேறு பகுதிகளுக்குத் திருப்புகிறோம். ஆனால், இதன் விளைவாக ஏழைகளின் சேமிப்புச் சக்தியும், முதலீட்டுச் சக்தியும் பெருகுவதில்லை. ஏழைகள் செல்வர்களைவிட உயர்ந்த நுகர்வு நாட்டத்தைக் கொண்டிருப்பதால், அவர்களுடைய வருமானம் பெருகும் போது, அவர்கள் அதில் குறைவான பகுதியைச் சேமிக்கின்றனர். எனவே, நீண்ட காலத்திலோ அல்லது குறுகிய காலத்திலோ உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கம், வருமானப் பகிர்வை மாற்றியமைத்து ஏழைகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் முரணுக இருக்கின்றது.

இங்கும் இரண்டு நோக்கங்களுக்கும் இடையே ஒரு வழியைப் பின்பற்றவேண்டும். சில துறைகளில் உற்பத்திப் பெருக்கத்தை அல்லது உற்பத்திசெய்யும் ஆற்றலை விட்டுக்கொடுத்து, ஏழைகளுடைய நிலையை உயர்த்தவேண்டும். அல்லது (பாகிஸ்தானின் முதல் திட்டப்படி) உற்பத்தி ஓரளவு பெருகிய பிறகு, வருமானப் பகிர்வை மாற்றியமைப்பதை எடுத்துக்கொள்ளவேண்டும். அந்த நிலையில் இப்பொழுது உள்ளதைவிட, தியாகம் செய்வது எளிதாக இருக்கும்.

திட்டம் வகுத்தல் சாத்தியமானது என்றும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் திட்டம் உகந்தது என்றும், மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களைத் திட்டங்கள்மூலம் நிறைவேற்றலாம் என்றும் கற்பனை செய்துகொண்டு, 12ஆவது அதிகாரத்தில் திட்டமிடுவோர் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் தீர்க்கவேண்டிய பிரச்சினைகளை விளக்கியுள்ளோம்.

12. திட்டப் பிரச்சினைகள்

A. திட்டம் வகுப்பதில் வல்லமை

B. முறைகளின் தேர்வு

C. சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் திட்டம் வகுத்தல்

D. திட்டத்தில் விவசாயத்தின் இடம்

E. முடிவுகள்

A. திட்டம் வகுப்பதில் வல்லமை

ஒரு திட்டம் முறையாக வகுத்த கொள்கைகளைக்கொண்டிருக்கின்றது. அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்டிருக்கின்றன. அவை அளக்கக்கூடிய விளைவுகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் ஏற்படுத்தவேண்டும்.

அளவைக் குறிக்கும் சொற்களைக்கொண்டு திட்டத்தை விளக்கலாம். பொருளாதாரத்தின் பல கூறுகளின் தொடர்புகளையும், திட்டத்தின் இறுதி விளைவுகளையும் கணிதமுறையில் அல்லது வேறு எளியமுறையில் விளக்கலாம். அதாவது, மதிப்பீடுகள் அளவுகளிலும், விகிதங்களிலும் காட்டலாம். பின்னர் குறிக்கப்பெற்றுள்ள முறையில் திட்டத்தின் உறுப்பினங்கள் அளக்கப்படுகின்றன. பல துறைகளில் உற்பத்திக்கு இலக்குகளையும் (targets), நிறுவப்பட இருக்கும் பொதுநலப்பணித் தொழில்கள், சில குறிப்பிட்ட திட்டங்கள், தொழில்கள் முதலியவற்றுக்கு பொதுவாகச் சேர்ந்த இலக்குகளையும் இம் முறையில் அமைக்கின்றனர்.

எதிர்பார்க்கப்படும் சேமிப்பு வீதங்கள், முதல் உருவாதல், குறிப்பிட்ட முதலீடுகளின் உற்பத்தி முதலியவைகளை மதிப்பீடு செய்து, குறிப்பிட்ட காலத்தில் (இது சாதாரணமாக ஐந்தாண்டுகளாக இருக்கும்) தேசிய வருமானமும் தலா வருமானமும் எவ்வாறு உயரும் என்று கணக்கிடுகின்றனர். திட்டத்தின் விளைவுகள் இறக்குமதியையும் ஏற்றுமதியையும் எவ்வாறு பாதிக்கும்

என்பதை அறியவும், அயல் நாட்டுச் செலுத்தல்நிலை எவ்வாறு மாறும் என்பதை அறியவும், அயல் நாட்டு மூலதனத்தை அறியவும், திட்டம்பற்றிய அளவுகளைக் கணக்கிடுவது முக்கியமாகின்றது. சில நாடுகளில் அயல்நாட்டுச் செலுத்தல்நிலை, திட்டத்தின் மிக முக்கியமான பிரச்சினையாகிவிடுகின்றது. ஏனெனில், திட்டத்தை நிறைவேற்றுவதற்குவேண்டிய பல பொருள்களை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டும். இப் பொருள்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யமுடியாது. பொருளுற்பத்திக்கு வேண்டிய இயந்திரங்கள் இறக்குமதியாகவேண்டும். இறக்குமதிக்கு ஈடாக ஏற்றுமதி செய்யவேண்டும். அல்லது அயல் நாட்டினரிடமிருந்து கடனை அல்லது தனியார் துறையின் முதலீட்டைப் பெறவேண்டும்.

இந்தியாவும், பாகிஸ்தானும் உள்பட சில நாடுகளுக்குத் தற்காலிக மாதிரிகள் (models) அமைக்கப்பெற்றிருக்கின்றன.[1] இவை எந்த முறைகளைக் கையாண்டு, சிறந்த விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதைக் காட்டியபோதிலும், பல இடையூறுகள் இருப்பதால் இந்த முறைகள் எந்த அளவு கையாளப்படக்கூடியவையாக இருக்கும் அல்லது பலனளிக்கும் என்பதுபற்றி ஐயப்பாடு எழுகின்றது. நம்பகமான புள்ளி விவரங்கள் இல்லாமையே முதல் இடர்ப்பாடாகும். குறிப்பிட்ட சில துறைகளிலும், தொழில்களிலும், திட்டங்களிலும் முதலீடு செய்வதால் ஏற்படும் உற்பத்திப் பெருக்கத்தின் வீதத்தை மதிப்பிடுவது கடினம். முதலீடுசெய்யும் முறையும், முதலீடு செய்யவேண்டும் என்ற முடிவுக்கும் உற்பத்தி தொடங்குவதற்கும் இடையே உள்ள கால தாமதமும் இந்த வீதத்தை மேலும் கடினமாக்குகின்றது. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் இன்றும் முக்கியமான விவசாயத்துறையில், மேற்கூறிய வீதம் மனிதசக்திக்கு அப்பாற்பட்ட பருவமழைபோன்ற இயற்கை நிலை நிர்ணயிக்கிறது. எனவே, மேற்கூறியவீதம் இத் துறையில் தாறுமாறுக மாறுகின்றது. இரண்டாவதாக 11ஆவது அதிகாரத்தில் குறிப்பிட்டபடி சில நோக்கங்கள் பொருளாதார நோக்கங்களாக இராமல் சமுதாய நோக்கங்களாக இருக்கின்றன. இந்த நோக்கங்கள் பொருளாதாரத் திட்டத்தின் விளைவுகளுக்கு முரணாக இருக்கின்றன. சிக்கலான பிரச்சினைகளை மனதில் கொண்டு, எவ்வளவு கவனமாகத் திட்டம் வகுத்தபோதிலும், எதிர்பாராத அரசியல், பொருளாதார மாறுதல்கள் நிகழலாம். இவை எதிர்பார்த்தவைகளையெல்லாம் பாதிக்கலாம். இத்தகைய

[1] அலக்கோஷ் எழுதியுள்ள 'New Horizons in Planning', முதல் பதிப்பைப் பார்க்கவும் 1956. இரண்டாம்பதிப்பு 1960. திருத்தி எழுதப்பெற்றது. ஜான். சி. எச். ஃபெய் (John. C. H. Fei) An Analysis of the Long-run Prospect of Economic Development in Pakistan, 1962.

மாறுதல்களைக் கீழே கொடுத்துள்ளோம். எதிர்பார்த்ததைவிட உயர்ந்த வீதத்தில் மக்கள்தொகை பெருகுதல்; இயற்கை விபத்துக்கள்; போர் [கொரியப் போர் (Korean War), உலகின் விலை வாசிகளையும், தேவையையும் பாதித்தது]; கச்சாப் பொருள்களுக்குப் பதிலாகச் செயற்கைப் பொருள்களைக் கண்டு பிடிப்பதைப்போன்ற எதிர்பாராத தொழில்நுணுக்க மாறுதல்கள்; இறக்குமதியின் அடக்கச் செலவையும், ஏற்றுமதிப் பொருள்களின் விலையையும், அயல்நாட்டு உதவியையும், தனியார்துறையின் முதலீட்டையும் பாதிக்கும் அயல்நாட்டு விலை, கொள்கை மாறுதல்கள், வரிவிதிப்பில் ஏற்படும் மாறுதல்கள்போன்ற உள்நாட்டுத் திட்டக் கொள்கைகள் பின்னர்க் குறிக்கப்பெற்றுள்ளவைகளைப் பாதிக்கும். மேற்கூறியவைகளில் சில வளர்ச்சியடையாத நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்தல், வர்த்தக நிலைகளைப் பாதிக்கும். இதனால் முதலீட்டுவீதம் ஓர் எல்லைக்குட்படும். நான்காவதாகத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நிர்வாகத்துறையில் பலரை அமர்த்தவேண்டும். இவர்களைச் சரிவரத் தேர்ந்தெடுத்து, இவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். சிறந்த திட்டம் சரிவர நிறைவேற்றப்படாவிடில் சீர்குலையும்.

பகுத்தறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பெற்ற திட்டங்கள் எளியனவாகவும், நெகிழ்ச்சியுடையனவாகவும், தகுந்த மாறுதல்களுக்கு வேண்டும் போதெல்லாம் இடங்கொடுக்கக்கூடியனவாகவும் இருக்கும். இவைகளை விடக் கணித மாதிரிகளை அடிப்படையாகக்கொண்ட திட்டங்கள் பயனுள்ளவையாகவும் சரியாகவும் இருக்கும் என்று நம்புவதற்கு இடமில்லை என்ற முடிவுக்கு நாம் வரவேண்டும்.

ஒரே மாதிரியான வளர்ச்சியடையாத நாடுகளைத் தவிர்த்து இந்தியப் பாகிஸ்தானிய பிரச்சினைகளையும், திட்டமிடும்முறைகளையும்மட்டும் ஆராய்வதற்கு ஒரு தனி நூலே எழுதவேண்டும். பிரச்சினைகளின் மாதிரிகளையும், அவைகளுடைய தீர்வைப் பாதிக்கும் பொருளாதார விதிகளையும்மட்டுமே இங்கு நாம் பார்க்கலாம். இந்தியப் பாகிஸ்தானியத் திட்டங்களையும், அவைகளில் புகுத்தவேண்டிய மாறுதல்களையும் நாம் இங்கு வரையமுடியாது. இங்குக்குறிக்கப்பெற்றிருக்கும்பொருளாதாரத் தத்துவங்களிலிருந்து நூலை வாசிப்பவர் கொள்கைபற்றிய முடிவுகளைக் காணலாம்.

திட்டத்தின் வழிகளும், முறைகளும் அதை வகுக்கும் நாடுகளைப் பொறுத்திருக்கும். திட்டமிடுவோர் கவனிக்கவேண்டிய அடிப்படை விஷயங்களையும், பிரச்சினைகளையும்மட்டுமே இங்கு

நாம் பார்க்கலாம். ஆனால், பிரச்சினைகள் இங்கு விளக்கப்பெற்றிருக்கும் வரிசை, திட்டமிடுவோர் அவைகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளும் வரிசையில் அமையவில்லை.

முதன்முதலில் நாட்டின் பொருளாதார நிலையையும், அண்மையில் ஏற்பட்டுள்ள போக்குகளையும் நன்கு நாம் ஊன்றிக் கவனிக்கவேண்டும். தேசிய வருமானம், தலா வருமானம், அவைகளுடைய உயரும் வீதங்கள், தேசிய வருமானத்தில் சேமிப்பாகும். முதலீடாகும் பகுதிகளின் வீதங்கள் போன்ற விவரங்களையும், குறிப்பாக வளர்ச்சிக்கு முக்கியமான விவரங்களையும், ஆராய்ச்சிமூலமும், கணக்கெடுப்புமூலமும் நாம் அறிதல் வேண்டும்.

ஒரு திட்டம் முழுவதும் செயலாற்றப்படவில்லை, வெற்றிகரமாக இல்லை—குறிப்பாக முதல்திட்டம் ஒரு சோதனைத் திட்டமாகவே இருக்கும் என்பதை, நாம் அறிந்தவுடன் திட்டக் கொள்கை சரியான பாதையில் நாட்டைச் செலுத்துகிறதா என்பதை அறிய, ஓர் அடையாளத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். முன்னேற்றம் எதிர்பார்த்ததைப்போல் இராவிடிலும், இத்தகைய அடையாளத்தைக் கொள்ளவேண்டும். பல நோக்கங்கள் இருக்கும்பொழுது ஒரே அடையாளத்தைக் கொள்ளமுடியாது. மக்கள் தொகையில் வேலைசெய்வோரின் பகுதியினரின் வேலையின்மை, குறைவேலை, நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படாவிடிலும், செல்வ வருமானப் பங்கீட்டிலும் முன்னேற்றம் ஏற்படாவிடிலும், இது போன்ற இலட்சியங்களில் நாடு வெற்றி காணுவிடிலும், தேசிய வருமானம், தலா வருமானம், சேமிப்பு, முதலீடு முதலியவைகளின் வீதங்கள் உயர்ந்தால், முன்னர்க் குறிக்கப்பெற்றவைகளில் தானாகவே முன்னேற்றம் ஏற்படும். வேலைவாய்ப்பையும், மக்களின் பொது நலத்தையும் பெருக்குவதற்குவேண்டிய நடவடிக்கைகளைப் பின்னர் எளிதாக எடுக்கலாம். மற்ற அடையாளங்கள் பின்வருமாறு : விவசாயத்தைச் சார்ந்திருப்பது குறைதல் ; பணப் பரிவர்த்தனை பெருகுவதைக் காட்டும்முறையில் பணத்தின் விகிதம் (தேசிய உற்பத்தியில்) பெருகுதல்—இக் கருத்து பணத்தின் மதிப்பு மாறுவதால் ஏற்படும் விளைவுகளை நீக்குவதைக் காட்டுகின்றது—ஏற்றுமதிமூலம் நாம்ஈட்டும் தொகையுடன் ஒப்பிடும் பொழுது, அயல்நாட்டுக் கடன்தொகை (வட்டியையும் முதலையும் திருப்பிக்கொடுப்பது உள்பட) குறைவது முதலியன.[1]

[1] பின்னர்க் குறிக்கப்பெற்றுள்ள இரண்டைப்பற்றிய விவரங்களை A. R. Prest 'Public Finance in uderdeveloped Countries' 1962; பக்கங்கள் 106, 114-ல் பார்க்கலாம்.

பின்னர்க் குறிக்கப்பெற்றுள்ள மாறுதல், அயல்நாட்டுச் செலுத்தல் நிலை மாறுபட்ட சூழ்நிலையிலும் தொடர்ந்து நீடிக்கக் கூடிய தன்மையைக் கொண்டிருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அயல்நாட்டுச் செலுத்தல் நிலை மிகவும் முக்கியமாக இருக்கின்றது. தொடர்ந்து மிகுதியடையும் இறக்குமதி, வளர்ச்சிக்கு அவசியமாக இருக்கின்றது. இறக்குமதிப் பண்டங்களுக்குப் பதிலிப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்துவருகின்றனர். ஆனால், ஏற்றுமதியை உயர்த்துவது—குறிப்பாக இந்தியாவில்—கடினமாக இருக்கின்றது. அயல்நாட்டுக் கடன்களும், உதவியும்—சிறப்பான நிபந்தனைகளுக்குட்பட்ட கடன்களும்-(சில கடன்களைக் குறிப்பிட்ட காலத்திற்கு வட்டி நீங்கலாகக் கொடுக்கின்றனர்)—வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்படவேண்டியவை யாதலால் எதிர்கால மக்கள் இப் பளுவைச் சுமக்கவேண்டும். தன்னீத்தானே பாதுகாக்கும் வளர்ச்சியைத் தடைசெய்யும் இடையூறுகளுள் அயல் நாட்டுச் செலுத்தல் நிலை மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. தொழிலமைப்புத் திறமை போதிய அளவு இல்லாமையும், (போதிய அனுபவம் இல்லாததால்) நிர்வாகத் திறமை குறைவாக இருப்பதும் வளர்ச்சியடையாத நாடுகளின் மற்ற இடர்ப்பாடுகள்.

மேலே குறிப்பிட்ட வளர்ச்சியின் அடையாளங்கள் அனைத்தும், பொருளாதார அடையாளங்கள். வேலையையும் ஓரளவு கல்வியையும் தவிர, மற்றச் சமுதாய முன்னேற்றங்களை அளப்பது கடினம். ஆனால், எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டால், வேலை வாய்ப்புகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டால், ஓரளவு வளர்ச்சி ஏற்பட்டுவிட்டது; மற்றச் சமுதாய நோக்கங்கள் நிறைவேறின என்று நாம் கருதலாம். ஓர் ஏழைக் குடும்பத்தில் குறைவேலையைக் கொண்டோ அல்லது வேலையில்லாமலோ இருந்தவர்கள், புதியதாக வேலையில் அமர்ந்தால் குடும்பத்தின் பொருளாதார நிலையில், முன்பு வேலையிலமர்ந்திருப்போரின் உற்பத்தி சிறிதளவு பெருகுவதால் ஏற்படும் முன்னேற்றத்தைவிட அதிகமான முன்னேற்றம் ஏற்படும். மேற்கூறியவைகளுக்கு மேலாக, மிகுதியடையும் மக்கள் தொகைக்கு ஏற்றபடி அதிக தொகையைக் கல்விக்கு ஒதுக்கி, தொடக்கநிலைக் கல்வி வசதியளித்தபோதிலும், உயர்ந்ததரக் கல்வி வசதி அளித்தால் சிறிது காலம் சென்ற பிறகு, உற்பத்திசெய்யும் சக்தி கணிசமாகப் பெருகும். இங்குக் குறிக்கப்பெற்றிருக்கும் காலதாமதத்தை, அளிக்கப்படும் கல்வியின் கால அளவு, அதாவது மாணவர்கள் இக் கல்வியைப் பெற்று முடிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் காலம்

நிர்ணயிக்கும். மக்கள் கவனத்தை ஈர்த்த மற்றொரு சமுதாயப் பொருளாதாரப் பிரச்சினை மக்கள்தொகை பெருகும் வீதமாகும்.

மேலே நாம் குறித்துள்ள அடையாளங்களைச் சற்றுப் பார்த்தால், திட்டக் கொள்கைகள் சரியான திசையில் நாட்டைச் செலுத்துகின்றனவா என்பதைமட்டும் நாம் அறியலாம். அவை எங்கெங்குத் தவறிவிட்டன, குறைகளை எதிர்காலத் திட்டங்களில் எவ்வாறு நீக்கலாம் என்பதையும் அறியலாம். (அதிகாரபூர்வமான புள்ளி விவரங்களிலிருந்து, ஆராய்ச்சிக்குப் பொருத்தமான வீதங்களை மாணவன் அமைத்துக்கொள்ளவேண்டும்.) இவ் வடையாளங்களைக்கொண்டு பார்க்கும்போது, 1963 வரை இந்தியாவும் பாகிஸ்தானும் வெற்றிகரமான விளைவுகளையும், முன்னேற்றத்தையும் கொண்டன என்று கூறலாம். ஆனால், இவை மிகவும் திருப்திகரமாக இல்லை.

திட்டகால முடிவில், நிறைவேறவேண்டிய இலக்குகளை அமைப்பதை இப்பொழுது பார்ப்போம். இலக்குகள் இருவகைப்படும். அவை யாவன: தேசியத் தலா வருமானங்களின் வீதங்கள் போன்ற, சில துறைகளில் ஏற்படும் வளர்ச்சியின் வீதங்களைப் பெருக்குவதற்கு இலக்குகள்; இரண்டாவதாகத் தேசிய வருமானத்தின் (உண்மை) மதிப்பு பெருகுவதற்கும் (இது 7 ஆவது அதிகாரத்தில் விளக்கியுள்ளபடி தேசிய எச்ச வருமானத்திற்குச் சமமாக இருக்கும்) பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறைக்கும், ஒவ்வொரு திட்டத்திற்கும், தொழிலுக்கும், விவசாயத்திற்கும், முக்கியமான பயிர்களுக்கும் அமைக்கவேண்டிய இலக்குகள். ஒவ்வொரு துறையிலும் செய்யவேண்டிய முதலீட்டை முடிவுசெய்து, பிறகு, திட்டத்தின் மொத்த முதலீட்டை நிர்ணயிக்கவேண்டும். வருமானத்திற்கு ஏற்றபடி செலவைக் குறைக்கவேண்டும். ஆகையால் சில குறிப்பிட்ட திட்டங்களை நீக்கவேண்டும்; அல்லது பின்னர் எடுத்துக்கொள்ளலாம் என்று தள்ளிப்போடவேண்டும்.

குறிப்பிட்ட சில துறைகளில் இலக்குகளை நிறைவேற்றத் தொடங்குவதற்குமுன், எந்த வழியைக் கையாளவேண்டும் (உதாரணமாக மிகுதியான முதலீயும், குறைவான மனித உழைப்பையும் பயன்படுத்தும் வழியைப் பின்பற்றுவதா அல்லது குறைவான முதலீயும், மிகுதியான உழைப்பையும் கொண்டு உற்பத்திசெய்யும் முறையைப் பின்பற்றுவதா) என்பதை முடிவுசெய்யவேண்டும். இந்த முடிவு, திட்டத்திற்கு வேண்டிய இறக்குமதியின் அளவையும் நிர்ணயம்செய்யும். உற்பத்திமுறைகளின் தேர்வு முக்கியமான சமுதாயப் பொருளாதாரக் கருத்துகளை எழுப்புகின்றபடியால், அதைத் தனியாகப் பார்க்கலாம். ஒவ்வொரு துறையிலும்

முதலீட்டுக்கு வேண்டிய இறக்குமதிப் பொருள்களும், திட்டத்திற்கு மொத்தமாக வேண்டும் இறக்குமதியின் அளவும், அயல் நாட்டுச் செலுத்தல் நிலையைப் பாதிக்கும். ஆகையால் திட்டத்தின் இறக்குமதித் தேவை மிகவும் முக்கியமானதாகும்.

தொழிலுக்கு வேண்டிய சரக்குகளைச் சேர்த்தல் உள்படப் பல வேறு பொருள்களைத் தொழிலுக்குத் திரட்டுவதுமட்டும் முதலீடாகாது. நிர்வாக, தொழில் நுணுக்க, விஞ்ஞானத் துறைகளில் பயிற்சியளிப்பதும் முதலீடாகும். முதலீட்டுப் பொருள்களைச் சேகரித்த பிறகும், அலுவலர்களை வேலையிலமர்த்திய பிறகும் பொருள்களைச் சரிவர வைத்துக்கொள்வதற்கும், பணியாட்களுக்குச் சம்பளங்களையும் கூலிகளையும் கொடுப்பதற்கும் பணம் செலவு செய்யவேண்டும். எனவே, திட்டம் நிறைவேறும்பொழுது, கணிசமான தொகை இயந்திரங்களைச் சரியாக வைத்துக்கொள்வதற்குச் செலவாகுமே தவிர, புதிய முதலீட்டில் செலவாகாது. இயந்திரங்களைச் சரியாக வைத்துக்கொள்வதற்காகச் செய்யும் செலவைக் குறைவாக மதிப்பீடு செய்தால், புதிய முதலீடுகளைக் குறைக்க வேண்டும்; அல்லது மிகுதியான நிதியைத் திரட்டல்வேண்டும்.

முந்திய அதிகாரங்களில் குறிப்பிட்டதைப்போல், மூலதனம் குறைவாக இருத்தலைப்பற்றிப் பேசாமல் மற்ற உற்பத்திக் காரணிகளுடன் ஒத்துழைப்பதற்குவேண்டிய அளவு மூலதனத்தைப் பற்றிப் பேசுவது உண்மைக்குப் பொருத்தமாக இருக்கும். ஏனெனில், பயிற்சிபெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையும், நிர்வாகத் திறனும் இயந்திரங்களின் பகுதிப் பொருள்களும், இயந்திரங்களை இயக்கும் சக்தியும், போக்குவரத்து வசதிகளும், கச்சாப் பொருள்களும் குறைவாக இருக்கலாம். இப்பொழுது உள்ள இயந்திரங்களை மேலும் திறமையுடன் ஓட்டினால் உற்பத்தி பெருகலாம்.[1]

முதலீட்டுத் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதை நிர்ணயம் செய்யும் பலவற்றுள் முன்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதும் ஒன்றாகும். இல்லாவிடில் மூலதனம் வீணாகும். சில துறைகளில் முதலீட்டுக்குச் செய்யவேண்டிய பூர்வாங்க வேலைகளைச்செய்து முடிக்க நீண்டகாலம் செல்லலாம். இதனால் உற்பத்தி தொடங்குவதற்குமுன், மிகுதியான கால தாமதமாகும். இதேபோல் தேவைப்படும்போது இறக்குமதி செய்வதற்குத் தடைகள் ஏற்படுவதாலும் காலதாமதம் ஆகலாம்.

எத் திட்டங்களையும், தொழில்களையும், தனியார் துறையும் பொதுத் துறையும் எடுத்துக்கொள்ளலாம் என்பதையும் நிர்ணயம்

[1] W. B. Reddaway எழுதிய The Development of Indian Economics, 1962 என்ற நூலைப் பார்க்கவும்.

செய்யவேண்டும். மத்திய அரசு எத் திட்டங்களையும், மாநில அரசுகள் எவைகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதையும் முடிவு செய்யவேண்டும்.

பற்பல முடிவுகள் எடுக்கவேண்டும். இப் பிரச்சினைகள் தொடக்க நிலையில்தான் இருக்கின்றன. மாநில அல்லது மத்திய அரசின் திட்டங்களைப் பரிசீலனை செய்யும்போது, முதலீட்டுக்கு மத்திய அரசின் மானியத் தொகையை எவ்வாறு பல்வேறு பகுதிகளும் அவைகளுடைய தேவைக்குத் தகுந்தவாறு பகிர்ந்து கொடுப்பது என்பதை முடிவு செய்யவேண்டும். வரிகள், உள் நாட்டுக் கடன், சிறுசேமிப்பு, இரயில்வேத் தொழில்போன்ற தேசிய மயமான தொழில்கள் அளிக்கும் இலாபம் முதலியவைகளிலிருந்து பெறும் வருமானத்தையும் மதிப்பீடு செய்யவேண்டும். அயல் நாடுகளிலிருந்துபெறும் பொதுத்துறை, தனியார்துறைக் கடன் தொகைகளையும், அயல்நாட்டினர் உதவி, முதலீட்டுத் தொகை முதலியவைகளையும், பற்றுக்குறை நிதியாக்கத் தொகையையும் வருமானத்துடன் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

சிக்கலாக உள்ள பிரச்சினைகள் எல்லாவற்றையும்(அவைகளுள் சிலவற்றைமட்டுமே இங்குக் குறிப்பிட்டுள்ளோம்) தீர்த்தபிறகு தான் திட்டத்தின் அளவை ஓரளவாவது நிர்ணயம்செய்யலாம். மேலும், ஒருதுறையில் பின்பற்றும் கொள்கை மற்றொரு துறையின் வளர்ச்சியைப் பாதிக்கும். உதாரணமாகத் தனியார்துறையின் நிறுவனங்களை மிகுதியான வரிகளுக்குட்படுத்தினால், அவைகளுடைய சேமிப்பும் முதலீடும் பாதிக்கப்படும். திட்டத்தை நிறைவேற்றுவதில் அவைகளுடைய பங்கும் குன்றும்.

அனுமதிகள் (licences), தடைகள், அளவைக் கட்டுப்பாடுகள் முதலியவை மூலமும் விலைவாசிமுறை மூலமும் தனியார்துறையில் மூலதனப் பகிர்வை, நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ கண்காணிக்கலாம். ஆனால், இக் கண்காணிப்பு பொதுத்துறையில் அதிக வெற்றியைக் கொடுக்கும். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் இன்றைய கொள்கை பெரிய பொதுத்துறையின் அவசியத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

இப்பொழுது இருக்கும் நிலையில், தனியார்துறை முழுவதையும் அரசின் கண்காணிப்பில் கொண்டுவருவது சாத்தியமன்று. விரும்பத் தக்கதும் அன்று. இது ஜனநாயகத்துக்கு விரோதமாகவும் இருக்கும். மேலும், மற்றக் காரணங்களைவிட, பெரிய பொதுத்துறையை நிர்வாகம் செய்வதும் சாத்தியமன்று. திட்டத்தின்கீழ் அமலாகும் கட்டுப்பாடுகளுடன் விலைமுறை தொழிலதிபர்களுக்குப்

பொதுத்துறையைவிடச் சிறந்த ஊக்கமளிக்கும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. நுகர்வோருக்கும் விரைவிலும், சரியான முறையிலும் திருப்தியளிக்கின்றது.

முதல் திட்டத்தில் சிக்கலாக உள்ள மதிப்பீடுகளும் மற்ற விவரங்களும் ஏறக்குறைய இருக்கும் என்பதை மிகவும் வலியுறுத்த முடியாது. முதல் திட்டத்தின் நிச்சயமின்மைக்குக் காரணம் மேலே குறிக்கப்பெற்றுள்ள இடர்ப்பாடுகளும், புள்ளி விவரங்களின் குறைபாடுகளும் மட்டுமன்று. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கலப்புப் பொருளாதாரம் (mixed economy) இருக்கின்றது. பொதுத் துறையின் அளவைப் பொருளாதாரத்துடன் ஒப்பிடும்பொழுது அது சிறியதாகவே இருக்கின்றது. இந்த நிலையில் தனியார் துறையை, திட்டத்தை நிறைவேற்றும்படி செய்வதற்குத் தகுந்த வழிகள் வகுக்கப்படாமையும் முக்கியமான காரணமாகும். எனவே, முதல் திட்டங்கள் இலக்குகளை நிர்ணயம் செய்வதற்குமேல் எதையும் சாதிக்கமுடியாது என்பது புலனாகின்றது.

அடுத்துவரும் திட்டங்களை வகுக்கும்பொழுது முதல் திட்டத்தின் சாதனைகள், குறைபாடுகள், அதற்காகச் செய்த ஆராய்ச்சி, திரட்டிய புள்ளிவிவரங்கள் முதலியவைகளிலிருந்து பலவற்றை நாம் அறியலாம். ஆகையால், முதல் திட்டத்தை அடுத்த திட்டங்கள், அவைகளுடைய பல பகுதிகளையும் கூறுகளையும் நன்கு தொடர்புபடுத்தலாம். இவைகளைச் சரிவரத் தொடர்புபடுத்துவது மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஒரு துறை புதியதாகத் தோன்றுவதாலோ அல்லது பெருகுவதாலோ ஏற்படும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய உற்பத்தியை மற்றொருதுறை செய்ய வேண்டும். இதுவே, மேற்கூறிய தொடர்புபடுத்துதலாகும்.

பல்வேறு திட்டங்களின் வளர்ச்சிக்காலம் வேறுபட்டிருப்பதால்—வளர்ச்சியடையச் சில மாதங்களாகும், வேறு சில திட்டங்கள் சில ஆண்டுகளாகும்—அவைகளைப் பல கட்டங்களில் நிறைவேற்ற வேண்டும். அதாவது, திட்டங்களின் முன்னுரிமைகளை (priorities) நிர்ணயம் செய்வதில், குறுகியகால, நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வழிவகுக்கவேண்டும். உதாரணமாக எஃகுத் திட்டத்தை அமைத்து உற்பத்தியைத் தொடங்குவதற்கு நீண்டகாலமாகும். மூன்றாவது திட்டத்தின் தொடக்கநிலையில் மூன்று புதிய எஃகு ஆலைகள் நிறுவப்படுவதற்குள் அவைகளுடைய அடக்கச் செலவுக்குச் சமமான தொகையை, எஃகுப் பொருள் இறக்குமதிக்காக அரசு செலவு செய்துவிட்டது. அனுபவமும் திறமையும்கொண்டவர்களை வேண்டிய அளவில் ஏற்படுத்தவும் பல கட்டங்களைக்கொண்ட திட்டமிடவேண்டும். உதாரணமாக

விவசாய உரத்தைச் சிறந்தமுறையில் பல்வேறு இடங்களுக்குச் செலுத்துவதற்கும், பங்கீடுசெய்வதற்கும் ஏற்பாடு செய்யாமல், அதை உற்பத்திசெய்வதற்கு ஆலைகளை அமைத்தல் வீண் செலவாகும். (அதைப் பங்கீடுசெய்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் போன்ற, புதிய மார்க்கட்டு வசதிகளை அமைக்கலாம்.) இதே போல் பம்ஞேக்குப் பாசன மின்சக்தித் திட்டங்களை அமைப்பதற்கும், நீரை வயல்களுக்குச் செலுத்துவதற்குக் கால்வாய்களையும், கிராமங்களில் மின்சக்தியைப் பயன்படுத்துவதற்குத் தொழில்களையும் அமைக்காவிடில் இது வீண் செலவாகும். தொழில் நுணுக்கப் பயிற்சியளிப்பதற்குக் கால தாமதமாகும். ஆனால், அவர்களில்லாவிடில் அயல்நாட்டினரை வேலையிலமர்த்தவேண்டும்; அயல் நாட்டுச் செலாவணி செலவாகும். இல்லாவிடில், இயந்திரங்கள் தவருனமுறையில் பயன்படுத்தப்படும். மூலதனச் செலவுகளைப் பல கட்டங்களில் எளியமுறையில் செய்யவேண்டும்; தவிர்க்க முடியாத இறக்குமதிப் பொருள்கள் வேண்டியபோது கிடைக்க வேண்டும். இதற்கும் திட்டத்தைப் பல கட்டங்களில் நிறைவேற்ற வேண்டும்.

தேவைகள், அளிப்புகள் முழுவதையும் நன்கு தொடர்புபடுத்தித் திட்டமிட வேண்டுமா—இது 'சமன் செய்த வளர்ச்சி' (balanced growth) என்றழைக்கப்படும்—அல்லது சிறிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பைத் தனியார்துறையினரிடம் ஒப்படைத்து விலைமுறைமூலம் கண்காணிக்கலாமா என்பதுபற்றிக் கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. தேவைகளையும் அவைகளைப் பூர்த்தி செய்யும் வழிகளையும் அரசியலார்தான் அமைக்கக்கூடும் என்ற நிலையில், 'சமன் செய்தல்' இன்றியமையாததாகும். ஆனால், தனியார்துறை பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தால், அதை அவர்கள் பொறுப்பில்விடுவதே சிறந்ததாகும். இதுவே, பெருக்கி (multiplier) இயங்குவதற்கு உகந்ததாகும். இத்தகைய வாய்ப்புகளைத் தனியார்துறையில் தொழிலதிபர்கள் எதிர்பார்த்திருப்பர். அவர்களுடைய செயல் பொருளாதாரத் திற்கே ஒரு தூண்டுதலைக் கொடுக்கும்.

திட்டப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஆராய்ச்சிசெய்வது நமது நோக்கமன்று. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பொருத்தமான சில முக்கியமான பிரச்சினைகளைமட்டுமே இங்குப் பார்க்கலாம்.

(i) மூலதனப் பொருள்களும், அவைகளை வாங்குவதற்கு நிதியும் மிகவும் குறைவாகவே கிடைக்கின்றன. அவைமட்டும் வளர்ச்சிக்குக் காரணமாக இல்லாவிடிலும், அவை குறைவாகவே

இருக்கின்றன. ஆகையால், அவைகளைச் சிக்கனமாகப் பயன் படுத்தவேண்டும். அவை முழுமையாகவும் திறமையாகவும் பயனுகவேண்டும். கவுரவத்திற்காக ஏராளமான மூலதனத்தைக் கொண்டு நிறுவப்படும் திட்டங்களைத் தவிர்க்கவேண்டும். மிகுதி யான இயந்திரங்களைக்கொண்ட உற்பத்தித் திட்டங்களை அமைக் க்கூடாது என்று நாம் குறிப்பிடவில்லை. எதிர்காலத்தில் உற் பத்தியைப் பெருக்க இத்தகைய சில பெரிய திட்டங்கள் வேண்டும்.

(ii) அயல்நாட்டு வர்த்தகச் செலுத்தல்நிலைகள் முக்கியத் துவம் கொண்டிருக்கின்றன. வளர்ச்சிக்குவேண்டிய இறக்குமதிப் பொருள்களும், முதலீட்டின் விளைவாகப் பெருகும் ஏற்றுமதியின் சக்தியும் முக்கியமானவை. மூலதனச் செலவு தன் சேமிப்புக்குத் தானே காரணமாக இருக்கின்றது என்று கூறுகின்றனர். ஆனால், மூலதனச் செலவு அயல்நாடுகளில் வருமானத்தை ஏற்படுத்தினுல் சேமிப்பு ஏற்படாது. எனவே, மேலே குறிப்பிட்ட விளைவைக் கருதிச் சாலைகள் அமைப்பது, கிணறுகளையும், நீர்வழிகளையும் ஏற்படுத்துவதுபோன்ற உள்நாட்டுச் சாதனங்களைப் பயன்படுத்து வதற்கு வழிசெய்யும் திட்டங்களுக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும். இத்தகைய முதலீடுகள் இறக்குமதி பெருகக் காரண மாக இல்லை என்று நாம் கருதக்கூடாது. இவைகள் வேலை வாய்ப்புகளைப் பெருக்கும். நுகர்வோர் பொருள்களின் தேவையும், உணவுப் பொருள்களின் தேவையும் மிகுதியடையும். இப் பொருள்கள் உள்நாட்டில் உற்பத்தியாகாமையால் இறக்குமதி பெருகும்.[1]

(iii) 11 ஆவது அதிகாரத்தில் உள்ள ஆராய்ச்சியிலிருந்து இந்தியாவும் பாகிஸ்தானும் தம் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு 'தொடக்கநிலை அசைவை' ஏற்படுத்த முடியாது என் பது புலனுகின்றது. திட்டத்தின் தொடக்கநிலையில் அயல்நாட்டு மூலதனமும், உதவியும் (தொழில் நுணுக்க உதவி உள்பட) வேண் டும். உதவியளிக்கும் நாடுகள் சில குறிப்பிட்ட பொருள்களை நாம் வாங்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தாமல் இருந்தால், (இவ் வுதவியை நாம் சீராகப் பயன்படுத்துகிறேம் என்று கற்பனை செய்து கொள்வோம்) இவ் வுதவி நன்மையளிக்கும். ஏனெனில், அயல் நாட்டுச் செலுத்தல் நிலையைச் சீராக வைத்துக்கொள்வதற்கு, ஒரு நாடு இறக்குமதிப் பண்டங்கள் எங்கு மலிவாகக் கிடைக்கின்றன வோ அங்கு அவைகளை வாங்கவேண்டும்; மேலும், உயர்ந்தரகப் பொருள்களையும் வாங்குவதற்கு முயற்சி செய்யவேண்டும். இறக்கு மதிக்குப் பதிலிப் பொருள்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய

[1] W. R. Reddaway, 'The Economics of Underdeveloped Countries,' Economic Journal, March 1963.

வேண்டும். பொருள்களை அதிகமான விலையில் வாங்கும் கட்டாயத்தை ஏற்படுத்தாவிடினும், உள்நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களை வெளிநாடுகளில் வாங்க வழிசெய்யாவிடினும், அயல்நாட்டு உதவியில் பெரும்பகுதியைக் குறிப்பிட்ட திட்டங்களுக்கு ஒதுக்காவிடினும், சில குறிப்பான திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவியைப்பெறுவதில் தவறு இல்லை. கனரக இயந்திர உற்பத்தித் தொழில்கள் பெருகுவதால், காலப்போக்கில் அன்னியச் செலாவணி பற்றிய பிரச்சினை தீர்ந்துவிடும்.

(iv) அயல்நாட்டுச் செலுத்தல்நிலையின் முன்னேற்றத்தைக் காலவரையின்றித் தடைசெய்யும் அளவு திருப்பிக் கொடுக்க வேண்டிய வட்டியும், முதலும் பெருகக்கூடாது என்பதையும் ஆகையால், இந்த நிலை ஏற்படும்வரை அயல்நாட்டு உதவியைப் பெறக்கூடாது என்பதையும் நாம் மறக்கக்கூடாது. குறிப்பிட்ட காலத்தில் முதலையும் வட்டியையும் திருப்பிக்கொடுக்கத் திட்டம் வழிவகுக்கவேண்டும் என்பதே மேற்கூறியதன் பொருளாகும். நீண்ட காலத்தில் தேவையானது வர்த்தகமே தவிர உதவியன்று.[1] இறக்குமதிக்குப் பதிலிப் பண்டங்களை உற்பத்திசெய்யும் தொழில்களை இந்தியாவும் பாகிஸ்தானும் தன் வளர்ச்சிக்குத் தானே காரணமாக உள்ள வளர்ச்சி ஏற்படும்வரை பேணவேண்டும். இந்த நிலை ஏற்பட்ட பிறகு, ஒப்பீட்டுச் செலவின் அடிப்படையில் அமைந்த பரஸ்பர நன்மைகளைக் கொடுக்கும் பன்னாட்டு வர்த்தகத்தில் ஒரு நாடு ஈடுபடலாம். இந்த நிலை ஏற்படும்வரை, வர்த்தகத் தொடர்பு கொண்டுள்ள அயல்நாடுகள் தம் பொருள்களைப் பின்தங்கிய நாடுகளில் விற்பனைசெய்தோ அல்லது நிதியுதவி செய்தோ அவைகளுடைய வளர்ச்சியை ஏற்படுத்தலாம். 'குறைவான வளர்ச்சியடைந்த நாடுகள், தம் உற்பத்தியைப் பரவலாக அமைத்துக் கொள்வதால் நம் மார்க்கட்டுகள் மறையும்நிலை ஏற்பட்டால், அவை தம் உற்பத்தியைப் பரவலாக அமைத்துக்கொள்ளலாம் என்று நாம் அந்த நாடுகளுக்கு அறிவுரை கூறமுடியாது.'[2]

(v) விலை முறையையும் மற்ற அடிப்படைப் பொருளாதார இயல்புகளையும் பயன்படுத்தியே, திட்டத்தைச் செயலாற்ற வேண்டும் என்ற கருத்தையும் முந்திய அதிகாரங்களில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளோம். இது நுகர்வோருக்கும், உற்பத்தியாளருக்கும், நிர்வாகிகளுக்கும் நன்மைபயக்கும். தேவை, அளிப்பு நிலையைப் புறக்கணித்து, விலைகளை நிர்ணயம்செய்தால் கள்ள மார்க்கட்டும் பற்றாக்குறையும் ஏற்படும். உற்பத்திக் காரணி

[1] உதவியை அடுத்து வர்த்தகம் பெருகும் என்று சிலர் கூறுகின்றனர்.

[2] George Hall, under-secretary, U. S. A. 'The Times', என்ற பத்திரிகையில் இக் கருத்து குறிப்பிடப்பட்டிருந்தது The Times (London) Dec. 1962.

களின் விலையை (உதாரணமாகத் தொழிலாளர்கள் கூலியை) விருப்பப்படி நிர்ணயித்தால் அளிப்பு குன்றும்; அல்லது அடக்கச் செலவு உயரும்; வளர்ச்சி தடையாகும். வட்டிவீதம், வாரம் (rent) முதலியவை சட்ட வரம்புக்குட்பட்டிருந்தால் இச் சட்டத்தை அமல் செய்யமுடியாது. முதலுக்கும் நிலத்துக்கும் தேவை அமிதமாக இருக்கின்றது. கடன் வாங்குவோரும் நிலத்தைப் பயன் படுத்துவோரும் அதிகமான தொகையை மறைமுகமாகக் கொடுத்து விடுவர். வரி விதிப்பு உற்பத்திக்குத் தூண்டுதல் அளிக்கத் தவறினால், முதலீடும் வளர்ச்சியும் தடையாகும். அல்லது வரி செலுத்து வதை மக்கள் தவிர்க்க முயல்வர் அல்லது இவ் விரண்டும் நடை பெறும்; அரசின் கொள்கைகளே மேலே கூறியவை அளவுக்கு மீறியபடி எளிதாக்குகின்றன. சாதாரணமாக விலைக் கட்டுப்பாட் டுடன் அளவுக் கட்டுப்பாடு சேர்த்துச் செய்வர். இது விலைக் கட் டுப்பாட்டை அமலாக்குவதற்கு உதவும். நிர்வாகத் தலையீடு செல வை உயர்த்தும், இலஞ்ச ஊழல்களையும் அதிகரிக்கும். விலைமுறை யையும் பொருளாதாரத்தின் இயல்புகளையும் எதிர்த்துள்ள கொள் கையை நிறைவேற்றுவதற்கு இடையூறுகளைத் தோன்றும் தடைகளைக் களைந்து இக் கொள்கையைச் செயலாற்றலாம். ஆனால், இதற்காக எடுக்கும் நடவடிக்கைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் கவனிக்காவிடில், இக் கொள்கை வெற்றிகரமாக இருக்காது. மேலும், இதைச் சற்று ஆக்கமுறைக் கோணத்திலிருந்து பார்த்தால் ஓர் உண்மை புலனாகும். அதாவது திட்டத்தின் நோக்கங்களைப் பூர்த்திசெய்வதற்காக முயற்சிகள் செய்யும்போது தூண்டுதலை அளிப்பது, ஊக்கத்தை அழிப்பதுபோன்ற முறைகளைக் கையாண் டால், இந்த முறைகள் திறமையுடனும் எளிதாகவும் இயங்கும். தீமைகளை ஏற்படுத்தும் தடைகளும் தவிர்க்கப்படும்.

இப் பொதுவான முடிவுகளைத் தவிர, இந்தியாவுக்கும் பாகிஸ் தானுக்கும் பொருத்தமான, அவைகளுடைய கொள்கைகளைப் பாதிக்கும் சில விஷயங்களை, இதுவரை பார்த்ததைவிட விவரமாக இப்பொழுது பார்க்கலாம். இவை விவசாயம்பற்றிய திட்டக் கொள்கையைப் பாதிக்கும் விவசாயத்தின் நிலைமை, சிறு தொழில் கள், குடிசைத் தொழில்கள் (cottage industries) முதலியவை களுடைய இடம், உற்பத்திமுறைகளின் தேர்வு முதலியவைகள் பற்றியவை. இவைகளை நாம் இப்பொழுது பார்க்கலாம்.

B. முறைகளின் தேர்வு

ஐந்தாம் அதிகாரத்தில் கூறியபடி காரணிகளை உற்பத்திப் பணியில்சேர்த்து, நிலையின்மையினால் ஏற்படும் நிதிபற்றிய ஆபத்து களை ஏற்று இலாபம் ஈட்ட முயல்வதே தொழிலதிபர்களின்

பணியாகும். ஒரு குறிப்பிட்ட திட்டத்தை நிறைவேற்றும்பொழுது காரணிகளை எவ்வாறு மிகச் செம்மையானமுறையில் சேர்க்கலாம் என்பதை முடிவு செய்யும்பொழுது, சிறந்தமுறை தேர்ந்தெடுக்கப் படுகின்றது. ஒரு குறிப்பிட்ட அளவு பொருள் உற்பத்தி செய்ய, உற்பத்திக் காரணிகளைப் பல்வேறு அளவுகளில் சேர்க்கலாம். உதாரணமாக, மிகுதியான அளவு (அல்லது குறைவான அளவு) நிலத்தைக் குறைவான (அல்லது மிகுதியான) மனித உழைப்புடன் அல்லது முதலுடன்சேர்க்கலாம். மிகுதியான (அல்லது குறைவான அளவு) இயந்திரங்களைக் குறைவான (அல்லது மிகுதியான அளவு) மனித உழைப்புடன் சேர்க்கலாம். ஒரு காரணிக்குப் பதிலாக வேறு ஒன்றை வரையற்றபடி பயன்படுத்தலாம் என்பது பொருளன்று. மூலதனப் பொருள்கள்போன்ற சிலவற்றைச் சிறு அலகுகளாகப் பிரிக்கமுடியாது. பெரிய அலகுகளாகவே பிரிக்கலாம். பொருளுற்பத்தி செய்வதற்குச் சில காரணிகள் குறைந்தபட்ச அளவில் வேண்டும். ஓரளவு நிலம், மனித உழைப்பு, கருவிகள் முதலியவை இல்லாமல்விவசாய உற்பத்தி ஒன்றும் நடைபெறாது. பொறிசெய் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஓரளவு தொழிற்சாலைக்கு வேண்டிய நிலம், கச்சாப் பொருள்கள், மனிதஉழைப்பு, கருவிகள், இயந்திரங்கள் முதலியன வேண்டும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உற்பத்திக் காரணிகளை எவ்வாறு சேர்த்து உற்பத்தி செய்வது என்பது பிரச்சினையாகும்.

திறமை என்ற சொல்லை எப் பொருளில் பயன்படுத்துகிறோம் என்பதை நாம் முதலில் முடிவுசெய்யவேண்டும். முதலில் திறமை அளவையே குறிக்கின்றது. குறிப்பிட்ட அறிவையும் அடக்கச் செலவையும்கொண்டு, அதிகபட்ச அளவு உற்பத்திசெய்ய உதவும் முறையே திறமையான உற்பத்தி முறையாகும். உற்பத்தியில் பயனுள்ள பணிகளின் அடக்கச்செலவுக்கும், உற்பத்தியான பொருள்களின் மதிப்புக்கும் உள்ள வேறுபாடு மிகவும் அதிகமாக இருத்தல் பொருளாதாரத் திறமையைக் காட்டுகின்றது.

அடக்கச் செலவுக்கும் உற்பத்திக்கும் உள்ள அளவுபற்றிய தொடர்பு உற்பத்தியான பொருள்களின் விலைகளையோ அல்லது காரணிகளின் விலைகளையோ காட்டவில்லை. பொருள்களின் மார்க்கட்டு எவ்வளவு பெரியதாக இருக்கின்றது, அதன் தன்மை யாது, காரணிகள் எளிதில் கிடைக்கின்றனவா அல்லது அரியனவாக இருக்கின்றனவா என்ற பிரச்சினைகளும் புறக்கணிக்கப்படுகின்றன. இதில் ஒரு குறைபாடு இருக்கின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை உற்பத்தி செய்யும்போது அல்லது பலதரப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்யும்போது அவைகளைக் கூட்டுவதற்கு வழி எதுவும் இல்லை; அடக்கச் செலவையும் கூட்டமுடியாது. ஆகையால்

அவைகளுடைய விலைகளையே கூட்டவேண்டும். எனினும் வளர்ச்சி யடைந்த நாடுகளில் தொழில் வல்லுநர்கள் ஒரு பாலம் அல்லது குறிப்பிட்ட இயந்திரம் போன்றவைகளைத் திறமையாக எவ்வாறு அமைக்கலாம் என்பதைப்பற்றிய கருத்து ஒற்றுமை கொள்ளலாம். இவர்கள் வளர்ச்சியடைந்த நாடுகளில் (அந்த நாடுகளுக்காகவும்) பணிபுரிவதால் அவைகளுடைய மார்க்கட்டுகளையும், அவைகளுக்குக் கிடைக்கும் கச்சாப் பொருள்களையும் கவனித்தபிறகே மதிப்பீடு செய்கின்றனர்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் தேர்ந்தெடுக்கப்பெற்ற முறைகளை வளர்ச்சியடையும் நாடுகளில் புகுத்தும்பொழுது, நாம் பொருளாதாரக் கோணத்திலிருந்து பார்க்காமல், தொழில் நுணுக்கத் திறனைக் கவனித்தால், இவை வளர்ச்சியடையும் நாடுகளுக்குப் பொருத்தமாக இருக்கத் தவறலாம். அடக்கச் செலவுகளை உற்பத்தியின் மதிப்பிலிருந்து நீக்கினால் வரும் எச்சம், இத்தகைய நாடுகளில் உயர்ந்தபட்சமாக இருக்கவேண்டும். முதல் கிடைப்பதற்கு அருமையாக இருக்கின்றது. அதன் மதிப்பு உயர்வாக இருக்கின்றது. ஏராளமான தொழிலாளர்கள் இருக்கின்றனர். மனித உழைப்பின் விலை தாழ்வாக இருக்கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளின் நிலைமைக்கு மாறுக இருக்கின்றது. ஆகையால் இரு வகை நாடுகளின் மதிப்பீடுகள் மிகவும் வேறுபட்டிருக்கும். வளர்ச்சியடைந்த நாட்டினர் பின்பற்றும் முறைகளைப் பின்பற்றினால், கீழ் நாடுகளில் மிகக் குறைவாக உள்ள பயனுகாத உற்பத்திச் சாதனங்கள் வீணுகும். பாவர் (Bauer), யாமே (Yamey) என்ற ஆசிரியர்கள் கூறுவதுபோல், 'தொழில் நுணுக்கத் தரத்தைப் பாதுகாக்கும், ஆனால், உற்பத்திச் சாதனங்களை வீணுக்கும்' முறைகளை இத்தகைய நாடுகளுக்குச் சிபாரிசு செய்தல் எவ்விதப் பலனையும் அளிக்காது.[1]

மேலும், சில முறைகளைப் பின்பற்றும்பொழுது ஏராளமான தொகையைச் சேமித்து, பொருளாதாரத்தின் நவீனப் பகுதியில், அதே தொழிலில் மீண்டும் முதலீடு செய்யவேண்டும். இது உற்பத்தித் திறனை வளர்க்கின்றது. திறன்முறையில் சேமிப்பும் பெருகுகின்றது. தொழில் திறமையை உயர்த்தும் முறையைப் பின்பற்றுவதற்கு ஏராளமான மூலதனத்தைப் பயன்படுத்தவேண்டும். இந்த முறை நீண்டகாலத்தில் உற்பத்தியை உச்சநிலைக்கு உயர்த்துவதற்குப் பயன்படுகின்றது. தொழில் பெருக்கத்திற்கும் காரணமாக இருக்கின்றது. மூலதனம் குறைவாகச் செலவாகும் முறைகள் இதற்கு மாறுக, வேலை வாய்ப்பையும், பயிற்சிபெறுத தொழிலாளர்களுக்குத் தேவையையும் பெருகும். உபரி வருமானத்தைக்

[1] The Economics of Underdeveloped Countries, 1957, பக்கம் 218.

குறைந்த வருமானத்தைப் பெறும் வகுப்பினரிடையே பகிர்வுசெய்யவும் இது துணையாக இருக்கின்றது. குறைந்த வருமானத்தைப் பெறுவோர் தமக்குக் கிடைக்கும் உபரி வருவாயைக்கொண்டு உணவு, நகைகள் போன்ற பொருள்களை வாங்குகின்றனர்; அல்லது பணத்தைச் சேமிக்காமல் பதுக்குகின்றனர்; அல்லது சமுதாயம் ஏற்கும் சடங்குகளுக்காகச் செலவு செய்கின்றனர். அவர்களுடைய தலா சேமிப்புக் குறைவாக இருக்கின்றது. நாட்டின் உற்பத்தியைப் பெருக்கும்முறையில் அவை சேமிக்கப்படுவதில்லை.

C. சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் திட்டம் வகுத்தல்

சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் மீட்பையும், அவைகளைப் பெருக்குவதையும் வளர்ச்சியடையாத பல நாடுகள் தம் திட்டங்களில் சேர்த்துக்கொள்கின்றன. முக்கியமான நோக்கங்கள் கீழ்வருவன : (i) வேலைவாய்ப்புகளைப் பெருக்குவது, (ii) வேலையில் அமர்ந்திருப்போரின் திறமையை, நவீன உற்பத்திமுறைகள் மூலம் உயர்த்துவது, (iii) தொழில்களைப் பல இடங்களில் பரவலாக அமைத்துப் பல வளர்ச்சிக் கேந்திரங்களை ஏற்படுத்துவது, (iv) புதைந்திருக்கும் சாதனங்களின் (குறிப்பாகத் தொழில் நிர்வாகத் திறனை) வளர்ச்சிக்கு வாய்ப்புகள் அளித்தல். மேலே இவ் வதிகாரத்தின் இரண்டாவது பகுதியில் நாம் பார்த்த கருத்துகள் இத்தகைய தொழில்களில் முதலீடு செய்வதற்கு ஆதாரமாக இருக்கின்றன. மூலதனம் குறைவாகக் கிடைப்பதால் அதைக் குறைவாகப் பயன்படுத்தும் திட்டங்களை ஆதரிக்கவேண்டும் என்பதே மேலே குறிப்பிட்ட கருத்துகளின் சாரமாகும். குறைவான முதலைக்கொண்டு உற்பத்திசெய்யும் தொழில்களில் அடக்கச் செலவுக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள விகிதம் உயர்ந்ததாக இருக்கும் என்பதைமட்டும் இங்கு மீண்டும் குறிப்பிடல் வேண்டும்.

சிறு தொழில்களின் பொருளாதாரப் பிரச்சினைகளையும், நாட்டு வளர்ச்சியில் அவைகளுடைய இடத்தையும் அவைகளை இலாபகரமாக நிர்வகிக்கமுடியுமா அல்லது வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதால்மிகுதியான செலவுசெய்து அவைகளை நிர்வாகம் செய்யலாமா என்பதையும் குறிப்பிட்ட தொழில்களின் சூழ்நிலைகளே நிர்ணயம் செய்கின்றன.

மூன்றுவிதப் புராதனச் சிறு தொழில்கள் இருக்கின்றன : (i) குடிசைத்தொழில்கள் – ஆங்காங்குள்ள மார்க்கட்டுகளின் தேவைகளையும், வேலைசெய்வோரின் தேவைகளையும் இவை பூர்த்தி செய்

கின்றன. (ii) சிறு கிராமாந்தர-நகர்புறத் தொழிலகங்கள். ஸ்தல மார்க்கட்டுத் தேவைகளை இவை பூர்த்திசெய்கின்றன. (iii) நுண்கலைத் திறனுடன் செய்யப்படும் பொருள்கள். இவை நகரங்களிலும் (பெரிய நகரங்களிலும்) இருக்கின்றன. இத் தொழில்கள் உயர்ந்தரகப் பொருள்களைச் செல்வர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர்ந்த விலைகளில் அளிக்கின்றன.

குடிசைத் தொழிலாளர்கள் மட்டரகப் பொருள்களைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்கின்றனர். ஆனால், ஒரு மணிநேர உழைப்புக்குக் கிடைக்கும் கூலியும், தொழிலாளர்களின் சராசரிக் கூலியும் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஒருவனுக்கு முழுநேர வேலை கிடைத்தாலும், பிழைப்புக்குவேண்டிய தொகையை அவனால் ஈட்டமுடியாது. விவசாய மந்தகாலத்தில்கூட வேலையாட்கள் முழு நேரவேலை செய்வதில்லை. ஏனெனில், மார்க்கட்டு (பொருள்களின் தேவை)குறுகிய வரம்புக்குட்பட்டிருக்கின்றது. ஆனால், கிராமாந்தர மக்கள்மிகவும் ஏழைகளாக இருப்பதால், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் எவ்வளவு குறைவாக இருப்பினும், அவர்கள் அதை விரும்புகின்றனர். எங்கும் குறைவேலை இருப்பதால் அமித ஓய்வு கிடைக்கின்றது.

சிறிய கிராமாந்தர-நகர்ப்புறத் தொழிலகங்கள் புராதனக் கருவிகளையும், முறைகளையும் பயன்படுத்துகின்றன. ஆனால், அவை பரவலான மார்க்கட்டுகளின் தேவைகளைப் பூர்த்திசெய்கின்றன. சற்று உயர்ந்ததரப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. இத் தொழிலகங்கள்கூடத் தம் உற்பத்தித்திறன் முழுவதையும் பயன் படுத்துவதில்லை. குடிசைத் தொழில்களுக்கும், கைத்திறன் பொருள்களை உற்பத்திசெய்யும் தொழில்களுக்கும் திட்டவட்டமான வேறுபாடு இல்லை. ஒரேவகைப் பொருள்களை இவை இரண்டுமே உற்பத்தி செய்யலாம்.

நுண்கலைத் திறமைபடைத்த தொழிலகங்களின் செழிப்பு நலிவுற்றபோதிலும், அவை வேறு நிலையில் இருக்கின்றன. அவை நவீனத் தொழில்களுடன் போட்டி யிடுவதில்லை, பொருள்களை வாங்குவோர் உயர்ந்த தரத்தை மதிக்கவேண்டும் என்று அவை வேண்டுகின்றன. அவர்களும் தரத்திற்கு ஏற்ற விலையைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். இத்தகைய பொருள்களுக்கு அயல்நாடுகளில் மார்க்கட்டுகளை நிறுவலாம். ஆனால், இந்த மார்க் கட்டுகளைப் பெருக்குவது நிலையற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும். ஏனெனில், அயல்நாட்டு 'நாகரிகம்' அடிக்கடி மாறுகின்றது.

குறிப்பிட்ட சில சிறு தொழில்கள்பற்றிய ஆராய்ச்சிகள் பல செய்யப்பட்டிருக்கின்றன. நுண்கலைத் திறன் படைத்த தொழில்

களைத் தவிர, ஒரு சில தொழில்களே தம் திறமையைப் பெருக்கிப் பெருகும் மார்க்கட்டுகளுக்கேற்றமுறையில் வளரும் சக்தியைக் கொண்டிருக்கின்றன என்பது புலனாகிறது. வேறு உதவியில்லாமல் தம் சக்தியைக்கொண்டே தொழில் நடத்தக்கூடிய நிலையில் இருக்கும் இத் தொழில்களை மட்டுமே 'குழவிப் பருவத் தொழில்களாக'ப் பாவிக்கலாம். வளர்ச்சியடைந்த நாடுகளில்கூட, இத் தகைய தொழில்கள் பழையகாலத்தில் இருந்தன. ஆனால், தொழில் வளர்ச்சிக்குப் பிறகு அவை நலிவுற்றன. பெரும்பாலும் மறைந்து விட்டன என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். சில பொதுவான குறைபாடுகளைக் களைந்தால், சில ஆண்டுகளுக்கு (இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் நீண்டகாலத்தில்) இத்தகைய தொழில்கள் சிலருக்குப் பிழைப்பளிக்கலாம்.

பெரிய தொழில்களுடன் சிறு தொழில்கள் போட்டியிடுவதற்கு மூன்று இடர்ப்பாடுகள் உள. இவை : கடன் வசதி கிடைக்கத் தவறுதல் (அல்லது உயர்ந்த வட்டி வீதங்களைக் கொடுக்கவேண்டிய நிலைமை); பொருள்களை விற்பனை செய்வதற்குப் போதிய வசதியின்மை, மொத்தமாக வாங்கமுடியாமையால் கச்சாப் பொருள்களைக் குறைந்தவிலையில் வாங்க இயலாமை. இந்த மூன்று இடர்ப்பாடுகளையும் கூட்டுறவு இயக்கத்தின்மூலம் தீர்க்கலாம். கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வசதியையும், பொருள்களை விற்பனை செய்வதற்கு வசதிகளையும், கச்சாப் பொருள்களை மிகுதியான அளவில், குறைந்த விலையில் வாங்குவதற்கு வசதிகளையும் அளிக்கும். விற்பனை நிலையங்களையும் கண்காட்சிகளையும் நிறுவி அரசியலார் உதவிபுரியலாம். மேலே குறிப்பிட்ட குறைகளை நீக்குவதோடல்லாமல், சீரமைக்கப்பெற்ற, கையால் இயக்கப்படும் இயந்திரங்களையும் புகுத்தினால்தான், சில சிறு தொழில்கள் பிற உதவியை எதிர்பார்க்காமல் தொழில் நடத்த முடியும். பல இயந்திரங்களை ஆராய்ச்சியின் பலனாகக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

உற்பத்திமுறையிலும் அமைப்பிலும் முன்னேற்றம் ஏற்பட்டாலன்றி, அரசு உதவித் தொகைகளையோ அல்லது வேறு உதவியையோ அளிக்கக்கூடாதென்ற விதி புலனாகின்றது. சீரமைப்பு பெற்ற முறைகளையும், இயந்திரங்களையும் பயன்படுத்தும்பொழுது, தொடர்ந்து செல்லும் ஆராய்ச்சியும், மேற்பார்வையும் வேண்டும். இந்த முறைகள் திறமையையும் வருமானங்களையும் பெருக்கும். வளர்ச்சி ஏற்படும்போது (சாதாரணமாக நுகர்வோனின் வருமானம் உயரும்) தேவை, மட்டரகப் பொருள்களை விட்டு விலகி, உயர்ந்தரகப் பொருளை நோக்கித் திசைமாறும். பலதரப்பட்ட பொருள்களுக்குத் தேவை ஏற்படும். சில குறிப்

பிட்ட சிறு தொழில்களுக்கு ஏதேனும் ஒரு வகை உதவியை அளிக்கலாம் என்பதே நம் முடிவாகும். ஆனால், உதவி பெறும் தொழில்கள், சில துறைகளில் முன்னேற்றம் கண்டிருக்க வேண்டும். எல்லாத் தொழில்களுக்கும் பாகுபாடின்றி உதவிபுரிவதால் தேசிய பொருளாதாரம் முன்னேற்றமடையாது; இதற்கு மாறாக முன்னேற்றம் தடையாகும். உதவி பெறும் தொழில்கள் நீண்டகாலத்தில் மறைந்தபோதிலும்கூட, வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்காக ஓரளவு செலவுசெய்து சில தொழில்களுக்கு உதவியளிக்கலாம்.

பொருளாதாரத்தின் நவீனப் பகுதியில் பயனுகும் கருவிகளை உற்பத்திசெய்யும்தொழில் நான்காவதுவகைச் சிறு தொழிலாகும்.[1] பெருவாரி உற்பத்திசெய்யும் தொழிலகங்கள் தமக்கு வேண்டிய சில பொருள்களின் பகுதிகளை இத்தகைய தொழிலகங்களிலிருந்து வாங்குகின்றன. இப் பொருள்களின் உத்தம உற்பத்திநிலை (optimum scale of production) குறைவாக இருப்பதால், பெரிய தொழிற்சாலைகள் இவைகளை உற்பத்திசெய்ய முடியவில்லை. சிறிய தொழிலகங்கள் இவைகளைச் சிறப்பான முறையில் உற்பத்தி செய்கின்றன. சிறு தொழில்கள் நவீனமுறைகளைக் கையாளலாம். சக்தியைப் (குறிப்பாக மின் சக்தியை) பயன்படுத்தலாம். ஆனால், கட்டடச் செலவிலும், பொதுநலப் பணி செலவிலும், தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் ஊதியச் செலவிலும் சிக்கனமாக இருக்கலாம். பழுதுபார்க்கும் வேலைபோன்ற பணிகளையும் சிறு நிறுவனங்கள் மேற்கொள்ளலாம். ஜப்பான் நாடு பெரிய தொழில்களை வெற்றிகரமாகச் சுருக்கிவிட்டன. இந்த முறை பொதுவாகப் பொறியியல் தொழில்களுக்குப் பொருத்தமாக இருக்கின்றன.[2] இவை புதிய பெரிய தொழில்களுடன் நிறுவப்படவேண்டும். பெரிய தொழில்கள் துணைப்பொருள்களையும் உற்பத்திசெய்வதற்கு ஏற்பாடு செய்தால் தொழிலகச் சுருக்கம் சாதாரணமாக ஏற்படாது.

புதியதாக நிறுவப்பெற்ற சிறிய நவீனத் தொழிலகங்கள் செய்யும் உற்பத்தியின் அளவுடன் ஒப்பிடும்பொழுது, பெரிய நிறுவனங்களைவிட அவை மிகுதியான அளவு மனித உழைப்பைப் பயன்படுத்துகின்றன என்று தார் (Dhar) லிடல் (Lydall) என்பவர்கள் கூறுகின்றனர்.[3] தொழில் நிர்வாகச் சிக்கனங்கள் சிலவற்றை

[1] P. N. Dhar, H. F Lydall எழுதிய The Role of Small Enterprises in Indian Economic Development, 1962 என்ற நூலைப் பார்க்கவும்.

[2] Current Problems of Planned Economy (Five years of research by National Council of Applied Economic Research) 1962 pp. 56, 57.

[3] The Role of Small Enterprises in Indian Economic Development, Chapter V.

முன்பே குறிப்பிட்டோம். உள்ளூரில் வசிக்கும் தொழிலாளர்களை வேலையில் அமர்த்துவதால், அவர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்கவேண்டாம். நலிவுறும் புராதனத் தொழில், வீட்டுத் தேவையுள்ள பொருள்களை உற்பத்திசெய்யும் நவீனத் தொழில் ஒரு பகுதியில் வசிக்கும் மக்கள் வளர்ப்பதால், ஒரு நன்மை ஏற்படும். அப் பகுதியின் மக்கள் ஊரைவிட்டுச் செல்ல வேண்டாம். தம் வாழ்க்கைமுறையை மாற்றிக்கொள்ள வேண்டாம். நவீன தொழிலுக்குத் துணையான தொழில்கள் வளர்ச்சியடைவதால், புதைந்துகிடக்கும் திறன்கள் வளர்ச்சியடைவதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன. தாரும், லடாலும் கூறுவதுபோல், சிறு தொழில்களைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் அவைகளை வளர்க்கக்கூடாது. இப்பொழுது இருக்கும் தொழில்களைச் சீராக அமைக்கும் முயற்சியின் விளைவாகச் சிறிய தொழில்கள் வளர்வதற்கு வாய்ப்புகள் ஏற்படவேண்டும். சிறு தொழில்களில், மாற்றங்கள் ஏற்படும் இடைக்காலத்தில் அவைகளுக்குச் சிறப்பான குறைபாடுகளை நீக்குவதற்கும், அடக்கச் செலவைச் குறைப்பதற்கும், திறமையை உயர்த்துவதற்கும் உதவியளிக்க வேண்டும் என்பது, நாம் இதுவரை பார்த்ததிலிருந்து வெளியாகும் உண்மை. பாகிஸ்தானிய, இந்தியத் திட்டங்கள் பல்வேறு உதவிகளைச்செய்ய வழிவகுத்துள்ளன. கூட்டுறவு, ஆராய்ச்சி முதலியவைகளை அடிப்படையாகக்கொண்ட தொழில் நுணுக்க அறிவுரைகள் அவைகளுக்கு வழங்கப்படுகின்றன. இதுவே, மிகவும் நம்பிக்கை அளிக்கக்கூடியதாக இருக்கின்றது. தவணைமுறையில் பொருள்களை வாங்குவதற்கு அவைகளுக்கு உதவிபுரியலாம். செழிப்பான நிலையிலிருக்கும் பெரிய தொழில்களின் சில உற்பத்திப் பகுதிகளைச் சிறிய தொழில்களுக்கு ஒதுக்குவதும், அவைகளுடைய இயந்திரங்களைப் புதுப்பித்துச் சீரமைக்கும் திட்டங்களைத் தடைசெய்வதும் சிறந்தமுறைகளல்ல. குறிப்பாக அயல் நாட்டு மார்க்கட்டுகளைக் கொண்டுள்ள தொழில்கள் இத் தடைகளுக்கு உட்படக்கூடாது.

இந்தியாவில் பருத்தி ஆலைத்தொழில், மேற்கூறிய சிறு தொழில்களுக்கு அளிக்கும் உதவியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது.[1] மத்திய அரசு, நேர்முக உதவிப்பணம் கொடுத்து சிறு தொழில்களை ஆதரிப்பது சிறந்ததாகும். பெரிய ஆலைகள் நவீன உற்பத்திமுறைகளைப் பின்பற்றுவதற்கும் அயல்நாடுகளில், தம் மார்க்கட்டு வசதிகளைப் பெருக்கிக்கொள்ளவும் இது வசதியாக இருக்கும்.

[1] 4ஆம் அதிகாரம், பகுதி 4-ல் உள்ளதுடன் ஒப்பிடவும்.

D. திட்டத்தில் விவசாயத்தின் இடம்

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் பிரச்சினைகளை ஆராய்வது இந் நூலின் நோக்கமல்லாவிடினும், இந்த நாடுகளின் மிகப் பெரிய தொழிலாகிய, விவசாயத்தின் சிறப்பான இடர்ப்பாடுகளையும் தொல்லைகளையும் இங்குப் பார்க்கவேண்டும். இரு நாடுகளிலும் விவசாயமே மக்களுடைய முக்கியமான அலுவலாகும். இதே நிலை நீண்டகாலம் நீடிக்கும். தேசிய வருமானத்தில் பெரும்பகுதிக்கு விவசாயமே காரணமாக இருக்கின்றது. விவசாயத்தை நம்பி வாழ்வோரின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்பொழுது, அது தேசிய வருமானத்தில் சேர்க்கும் பகுதி குறைவாக இருந்தபோதிலும், இப் பகுதியே தேசிய வருமானத்தின் பெரும்பகுதியாக இருக்கின்றது. திட்டகாலத்தில் (உணவு உற்பத்தி உள்பட) விவசாய உற்பத்தி பெருகியது. ஆனால், புதிய நீர்ப்பாசனத் திட்டங்களும், இது காறும் விவசாயத்திற்குக் கிடைக்காத பூண்டுகள் நிறைந்த, உப்பு நிறைந்த, சதுப்புப் பகுதிகளாகிய, தரிசு நிலங்கள் சாகுபடி செய்யப்படுவது, பருவ மழைகள் சரிவரப் பொழிவது முதலியன உற்பத்திப் பெருக்கத்திற்குக் காரணமாக இருக்கின்றன. ஒவ்வோர் ஏக்கர் நிலமும் மிகுதியான உற்பத்தியைக் கொடுப்பது காரணமன்று. எனினும், ஆண்டுதோறும் ஏராளமான உணவுப் பொருளை இறக்குமதி செய்யவேண்டும். இவ் விறக்குமதி அயல் நாட்டுச் செலுத்தல்நிலையின் ஒரு முக்கியமான பகுதியாக இருக்கின்றது.

விவசாயத்தில் திட்டமிட்ட முதலீடு, நீர்ப்பாசன வதிகள், எரு சிறந்த விதைகள் முதலியன வழங்கப்பட்டன; கிராமங்களில் அமைக்கப்பெற்ற சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள், சமுதாயத் திட்டங்கள் (community projects) [பாகிஸ்தானில் ஏ.ஐ.டி.[1]] கிராம மக்கள் தாமே தமக்கு உதவியாக இருத்தல் முதலியவை ஒவ்வோர் ஏக்கரின் விளைச்சலையும் உயர்த்திவிட்டது என்று கூறுகின்றனர்.

எனினும், விவசாயத்தின் தரத்தை நாடெங்கும் உயர்த்துவது மிகவும் கட்டுங்கடங்காத பிரச்சினைகளுள் ஒன்றாகும். மேலும், ஏக்கரின் சராசரி விளைச்சல் குறைவாக இருப்பதற்கு, மூலதனம் குறைவாக இருப்பதைக் காரணமாகக் கூறமுடியாது. ஏனெனில், எல்லாரும் நன்கறிந்த, குறைவான மூலதனத்தைக்கொண்டு கையாளப்படும் முறைகளைப் பின்பற்றி, விளைச்சலை 50 சதவீதம் உயர்த்தலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது.

[1] A.I.D. Agricultural and Industrial Development.

இதுவரை அரசு அளிக்கும் வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்தி விவசாயத்தை மக்கள் சீரமைக்கவில்லை. சிறந்த விவசாயமுறைகளைச் சில இடங்களிலேயே அவர்கள் பின்பற்றுகின்றனர். உதாரணமாக, நீர்ப்பாசன வசதிகள் உள்ள இடங்களில் சிறந்தமுறைகளில் பயிர்செய்கின்றனர். முன்பே செழிப்பான நிலையில் இருந்த, சில 'சிறப்பான விவசாயிகள்' மேற்கூறிய முறைகளைப் பின்பற்றுகின்றனர். இத்தகைய மக்களிடையே விலைகளும் மற்றப் பொருளாதார ஊக்குவிக்கும் சக்திகளும், விவசாயம் நீங்கலான மற்ற நவீனத்துறைகளில் இயங்குவதைப்போல் இயங்கும். ஆனால், கிராமாந்தரப்பகுதி முழுவதும் இந்த நிலையில் இல்லை. ஒரே மாதிரி இயற்கை அமைப்புகள் உள்ள பல கிராமங்களில், சிலர் செழிப்பான நிலையில் இருக்கின்றனர். சிறந்த வீடுகளில் வசிக்கின்றனர்; நல்ல உணவையும் உட்கொள்கின்றனர். ஆனால், அதே கிராமங்களில் சிலர் நாளொன்றுக்கு ஒரேவேளை சாப்பிட்டுக் கேவலமான குடில்களில் வசிக்கின்றனர். இவர்கள் உடல்நலம் குன்றி வறுமையினால் பீடிக்கப்பெற்றிருக்கின்றனர். விவசாயம், நாட்டின் சேமிப்பு-முதலீடுபற்றிய விகிதத்தில் திட்டப்படி தன் பங்கை ஏற்று, மொத்த உற்பத்தி மக்கள் தொகையைவிட, அதிகமாகப் பெருக உதவவேண்டுமானால் (மொத்த உற்பத்தி மக்கள் தொகையைவிட அதிகவிரைவில் கூடாது), மக்களிடையே ஊக்கத்தையும் ஒரு புதிய நம்பிக்கையையும் ஏற்படுத்தவேண்டும். ஒரு சில பயிர்களின் விலைச்சலில், திட்ட இலக்குகள் நிறைவேறிய போதிலும், இத்தகைய நம்பிக்கையையும், ஊக்கத்தையும் ஊட்டுவதில் பெரிய இடர்ப்பாடுகள் உள. எனவே, மற்ற மாறுதல் எதுவும் ஏற்படாவிடில், நாடு உணவுப்பொருள்களில் தன் நிறைவு அடைவது நீண்ட காலத்திற்குப் பின் நிகழக்கூடியதாகும் என்று, நாம் பின்னர் நடக்கப்போவதை இப்பொழுது கூறலாம்.[1]

தொழிற்புரட்சியின் விளைவாக விவசாயத்தில் இயந்திரங்கள் பயனுகும் நாடுகள் நீங்கலாக, மற்ற எல்லா நாடுகளிலும் விவசாய உற்பத்தியின் மதிப்பு (அத் துறையில் வருமானமும்) மற்றத் தொழில்களின் உற்பத்தியையும் வர்த்தகத்துறையின் உற்பத்தியையும் விடக் குறைவாகவே இருக்கும். தேவையும், அளிப்பும் குறுகிய காலத்தில் நெகிழ்ச்சியற்றதாக இருப்பதால், விவசாயப் பொருள்களின் விலைகளில் அடிக்கடி ஏற்றத்தாழ்வு ஏற்படுகின்றன. அறுவடை மிகவும் நன்றாக இருந்தால், வேண்டியபடி வாங்குவோரை ஈர்க்க விலையைக் குறைக்கவேண்டும். விலை எவ்வாறு மாறிய போதிலும் விதைவிதைக்கப்பெற்ற பிறகு அறுவடையாகும் தானியத்தின் அளவை மாற்றமுடியாது. மேலும், இந்தியாவிலும், பாகிஸ்

[1] R. P. Sinha, 'Food in India,' 1961 என்ற நூலைப் பார்க்கவும்.

தானிலும் விவசாயிகள் மிக மிக உயர்ந்த விலையிலும், மிக மிகச் சிறந்த விளைச்சலாலும் பலனடைவதில்லை. விளைச்சல் குறைவாக உள்ள காலங்களில் விலைகள் உயரும். குடும்பத்திற்கு வேண்டிய குறைந்தபட்ச அளவை ஒதுக்கிய பிறகு, எஞ்சியுள்ள குறைந்த உபரிப்பொருளை உயர்ந்த விலையில் விற்பனைசெய்தால், கிடைக்கும் தொகை சாதாரணஆண்டில் கிடைக்கும் தொகையைவிடக் குறைவாகவே இருக்கும். சிறந்த விளைச்சல் இருக்கும் காலத்தில் விலைகள் குறையும். குடும்பம் மிகுதியான அல்லது சிறந்த உணவை உட்கொண்டாலும், சாதாரண ஆண்டைவிட மிகுதியான தொகையைப் பெற முடியாது. விற்பனை செய்யக்கூடிய உபரிப் பொருளைத் தாழ்ந்தவிலையில் விற்பனைசெய்வதால் சாதாரண ஆண்டில் கிடைக்கும் வருமானத்தைவிடக் குறைவான வருமானத்தையே குடும்பம் பெறும். ஆகையால், ஓர் ஏக்கரின் சராசரி விளைச்சலைப் பெருக்குவதற்கும், மார்க்கட்டுமுறையைச் சீரமைப்பதற்கும், விலையாக்கப்படவேண்டிய உபரிப்பொருள் மிகுதியான அளவு, நகரங்களுக்கும் தொழில் கேந்திரங்களுக்கும் செலுத்தப்படுவதற்கும், விவசாயத்துறையில் அரசியலார் தலையீடு வேண்டும். (இந்தியாவில் நகர்ப்புறங்களின் தேவை, இறக்குமதியின் அளவுக்குச் சமமானது என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.) மேலும், விற்பனையாகவேண்டிய உபரிப்பொருளின் அளவு, மிகுதியடைவதால் பணப்பரிவர்த்தனை பெருகும். இதனால் கிராமாந்தரங்களில் பணப் பரிவர்த்தனை பெருகும்.

விலையை நிலைப்படுத்தவேண்டும் அல்லது உயர்த்திவைக்க வேண்டும். இதனால் வருமானங்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிலையாக இல்லாவிடிலும், விளைச்சல் மிகுதியாக இருக்கும் பருவங்களிலாவது (தீமை விளைவிக்கும்முறையில் விலைகள் சரிவது தடையாவதால்) வருமானங்கள் நிலையாக இருக்கும். மேலே குறிப்பிட்ட நிலையில் இதையே நாம் இங்கு சிபாரிசு செய்யலாம் பாதகமான அறுவடை காலங்களில் (விலை சரியும்பொழுது) உணவுப் பொருள்களை வாங்குவோர் இலாபமடைவர். மிக அதிகமான அளவு உணவுப் பொருள்களைக் கொண்டிருப்போருக்கு உதவியளிக்க வேறு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். கூட்டுறவு முறையில் விளைச்சல் இன்சூர் (Co-operative crop insurance) செய்வதே சிறந்தமுறையாகும். ஆண்டின் முக்கியமான அறுவடை அளிக்கும் பண்டங்களை இத் திட்டத்தின்கீழ் அரசு குறைந்தபட்ச விலையில் எந்த அளவு வேண்டுமானாலும் வாங்கத் தயாராக இருத்தல் வேண்டும். குறைவான அளவு விளைச்சலைக் கொடுக்கும் துணை அறுவடைக் காலத்தில், அரசியலார் இப் பண்டங்களை விலையாக்கலாம். குறிக்கப்பெற்றக் குறைந்தபட்ச விலையில் அரசியலார் பண்டங்களை விற்பனை செய்யலாம். இக் கொள்கை வெற்றிகரமாக

இருந்தால், விலை இரு எல்லைகளுக்குள் குறைந்தபட்ச, உயர்ந்தபட்ச எல்லைகள் நிலைபெறுத்தப்படும். பொது விலைவாசி மாறும்பொழுது, இந்த விலைகளையும் மாற்றியமைக்க ஏற்பாடு செய்யலாம்.

ஒரு நாட்டில் அல்லது பன்னாட்டுமுறையில் விலைவாசிகளை நிலைப்படுத்தச்செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. இம் முயற்சிகள் ஏராளமான அளவு அரசினர் வசம் தேங்கிக் கிடப்பதற்கோ அல்லது சமாளிக்கமுடியாத அளவு இச் சரக்குகளுக்குத் தேவை பெருகுவதற்கோ காரணமாக இருந்தன என்ற காரணத்தைக் காட்டிச் சிலர் இக் கொள்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்கின்றனர். விலைச் சல் தவறும் காலங்களில் தேவையைச் சமாளிக்கமுடியாது என்று கூறுகின்றனர். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் அரசினர்வசம் இருக்கும் சரக்கு தொடர்ந்து பெருகுவதற்கு இடமில்லை. ஆனால், இச் சரக்குகள் பாதகமான ஆண்டுகளில் காலியாகிவிடலாம். இதனால் இறக்குமதி அவசியமாகின்றது. அயல்நாட்டுச் செலுத்தல் நிலை பாதிக்கப்படுகின்றது விவசாயத்துறையின் வருமானத்தைப் (குறையாமல்) பாதுகாப்பதற்கும் உயர்த்துவதற்கும், பல கொள்கைகளை வளர்ச்சியடைந்த நாடுகள் வெற்றிகரமாகக் கையாளுகின்றன. ஆனால், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்றவையல்ல. வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாயிகளின் தலா வருமானம் பெருகவேண்டும். ஆனால், இதற்குமாறாக இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஏக்கரின் சராசரி உற்பத்தியும் மொத்த உற்பத்தியும் பெருகவேண்டும். இரு நோக்கங்களையும் நிறைவேற்றுவது விரும்பத்தக்கதாக இருந்த போதிலும், இந்தியாவின் உடனடித்தேவை ஓர் ஏக்கரின் சராசரி உற்பத்தியும், மொத்த உற்பத்தியும் பெருகுவதேயாகும். விவசாயிகளின் தலா வருமானத்தைப் பெருக்குவதற்கு (இயற்கையமைப்பு வசதியாக உள்ள இடங்களிலாவது) விவசாய இயந்திரங்களைப் பயன்படுத்துவதே சிறந்த வழியாகும். ஆனால், இதற்காக விவசாயிகளுடைய நிலத்தின் சராசரிப் பரப்பைப் பெருக்கவேண்டும். அல்லது கூட்டுப்பண்ணை முறையை (collective farming) நாட்டில் புகுத்தவேண்டும். அல்லது கூட்டுப்பண்ணை முறையின் நன்மைகளை அளிக்கும்முறையில் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும்; அவைகளுடைய பணிகளையும் பெருக்கவேண்டும்.

இத்தகைய கொள்கையைப் பின்பற்றுவதால், ஏராளமான மூலதனம் செலவாகும் என்றும், ஓர் ஏக்கரின் சராசரி விளைச்சலும் மொத்த உற்பத்தியும் குறையும் என்றும், மனித உழைப்புக்குப் பதிலாக இயந்திரங்கள் பயன்படுவதால், வேலையின்மை பெருகும் என்றும் இதைப் பலர் ஆட்சேபிக்கின்றனர். தட்ப வெப்ப நிலையும் நிலமும் தீவிர உற்பத்திக்குத் தகுந்தவாறு அமைந்திருந்தால்

நாட்டில் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருந்தால் சிறிய நிறுவனங்கள் உற்பத்திச் சாதனங்களை நன்கு பயன்படுத்திப் பொருளுற்பத்தி செய்யலாம். இவ்வுண்மை குறிப்பாகக் கால்நடைப் பண்ணைகளுக்குப் பொருந்தும். தொழிலாளர்கள் குறைவாகவும், மூலதனமும், நிலமும் மிகுதியாகவும் இருக்கும் நாட்டில், பெரிய பண்ணைகள்வைத்து நடத்துவது இலாபகரமாக இருக்கும்.' இது ஒரு பொதுஉண்மை. சிறப்பான காரணங்கள் இருக்கும்போது, உதாரணமாக, இதுவரை சாகுபடியாகாத நிலங்களைச் சாகுபடி செய்வதற்கும், ஆங்காங்கே தற்காலிகமாக எழும் மனித உழைப்பின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கும் அல்லது காலப்போக்கில் தொழிற் பெருக்கத்தை ஒட்டிக் கிராமங்களில் இருக்கும் உபரித் தொழிலாளர்கள், நகரங்களுக்கு செல்லும்போதும் இயந்திரங்களைப் பயன்படுத்தக்கூடாது என்று நாம் குறிப்பிடவில்லை. நிலைமை எவ்வாறு இருந்தபோதிலும், பண்ணைகளின் சராசரி அளவை அரசு பெருக்குவது நியாயமானதன்று. ஜனநாயகமுறைகளில் கூட்டுப் பண்ணை முறையைஅல்லது கூட்டுறவு விவசாயமுறையைப் புகுத்துவது மிகமிகக் கடினம். அப்படியே செய்தாலும், இதை நீண்ட காலத்தில்தான் செய்யமுடியும். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பண்ணைகளின் உத்தம அளவை நிர்ணயிக்கும் சக்திகளைக் கீழே நிலமானியத் திட்டங்களை விளக்கும்போது குறிப்பிட்டுள்ளோம்.

நாடு முழுவதும் விவசாயத்தில் இயந்திரங்களைப் பயன்படுத்துவதன்மூலம், பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாமல் ஆனால், ஓர் ஏக்கரின் சராசரி விளைச்சலைப் பெருக்கும் கொள்கையை அரசு கையாண்டால், முன்னர்க் கூறியபடி இத் துறையில் காணும் வெற்றி உற்பத்தித் திறன் உயர்வதற்கும், விவசாயிகளுடைய தலா உற்பத்தி பெருகுவதற்கும் காரணமாக இருக்கும். பின்னர்க் குறிக்கப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவேற்ற, ஆங்கிலேய ஆட்சியில்கூட முயற்சி செய்தனர். இக் கொள்கை நாட்டின் விடுதலைக்குப் பிறகு, மேலும் தீவிரமாகத் தொடர்ந்து பின்பற்றப்பட்டது. ஆனால், முயற்சிக்குத் தகுந்த பயன் கிட்டவில்லை என்ற உண்மை மனத்தில் கலக்கம் ஏற்படுத்துகிறது.

ஏமாற்றமளிக்கும் இவ்வுண்மைக்குப் பொருளாதாரக் காரணங்களும், மற்றக் காரணங்களும் உள. உண்மையாகவே ஏழைகள் மூன்னேற்றமடைந்திருந்தால்—நாட்டின் மிகக் குறைவான முன்னேற்றத்திற்குக் கீழ்க் கண்டவை காரணங்கள், விவசாயத் துறையைச் சேர்ந்த கணிசமான எண்ணிக்கையிலுள்ளவர்கள். விலை முறை, பொருளாதாரத் தூண்டுதல் முதலியவைகளுடன் தொடர்பு கொள்ளவில்லை. மக்கள் தொகைப் பெருக்கமும் நாட்டில் இருக்கும் நிலத்தின் நிலையும் பிற காரணங்களாம்.

பழைய காலத்தில் நிலத்தின் பங்கீடு, நிலச்சுவான்தார்களின் நிலத்தை விவசாயிகள்பெற்றுப் பயிர்செய்வது, உற்பத்தி செய்யும் பயிர்கள், முறைகள், விவசாயிகள் பெறும் கூலிகள் முதலியவைகளை வழக்கமும், பல்வேறு விவசாயப் பகுதியினருடைய தொடர்பு பற்றிய மரபுகளும் நிர்ணயம்செய்தன. இவைகளைப் பொருளாதாரச் சக்திகள் நிர்ணயிக்கவில்லை. மக்கள் தொகைப் பெருக்கம், பண்ணைகள் பிரிவதற்கும் பல இடங்களில் சிதறுவதற்கும் காரணமாக (தந்தையின் நிலம் பிள்ளைகளிடையே நியாயமாகப் பிரிக்கப்படவேண்டுமென்ற காரணத்தால்) இருந்ததால், அவைகளுடைய அளவும் ஓரிடத்திலேயே அவை சேர்ந்திருப்பதும் பாதிக்கப்பட்டன. மேலும், தொன்றுதொட்டு நிலவுடைமைக்கு மக்கள் அளித்து வந்த மதிப்பும் உயர்ந்திருக்கின்றது. விவசாயத்தைவிட்டால் வேறு பிழைக்குவழி ஏதுமில்லாத நிலை ஏற்பட்டுவிட்டது. ஆகையால் நிலத்துக்குத் தடையற்ற மார்க்கட்டு இல்லை.[1] அதாவது விற்பனையிலோ அல்லது நிலத்தைக் குத்தகைக்கு விடுவதிலோ போட்டி ஏற்பட்டு, அதன் விளைவாக நிலத்தை யார் மிகவும் நன்கு பயன்படுத்துவானோ அவன் அதைப் பயிர்செய்யும் வாய்ப்பைப் பெறுவதில்லை. மேலும், விவசாயத்தில் அரசியலார் தலையிட்டுக் குறைந்தபட்சவாரத்தை (rent) நிர்ணயம் செய்தனர். (அல்லது அது உயரும்பொழுது, அதற்கு ஓர் உச்சவரம்பு ஏற்படுத்தினர்.) வாரத்துடன் ஒப்பிடும்பொழுது புறக்கணிக்கத்தக்க நிலையை அடையும்வரை அரசு நிலவரியைத் தொடர்ந்து குறைத்தது. இதன் விளைவாகத் திறமையற்றவர்கள்வசமே நிலம் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது. விடுதலைக்கு முன்பும், பின்பும் அரசு, மற்றவர்கள் விவசாயிகளை ஏமாற்றுவதைத் தடை செய்யவே மேற்கூறிய நடவடிக்கைகளை எடுத்தனர். நிலமானியச் சட்டங்கள்போன்ற நடவடிக்கைகள் விவசாயிகளுடைய நிலத்தைப் பயிர்செய்யும் உரிமையைப் பாதுகாத்தன; நிலச்சீரமைப்புக்கு ஊக்கம் அளித்தன. இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக, ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. வேறு சில நடவடிக்கைகள் மேலும் பண்ணைகள் துண்டாவதைத்தடைசெய்கின்றன. சிதறிக்கிடக்கும் நிலங்களை ஒன்று சேர்ப்பதற்குக் காரணமாகவும் இருக்கின்றன.

நிலச் சீரமைப்பை ஆதரிப்போர், விளைச்சலைப் பயிர் செய்வோன், நிலச்சுவான்தாருடன் பகிர்ந்துகொள்வதைக் கண்டனம் செய்கின்றனர். இதற்குப் பதிலாக அவர்கள் குத்தகை முறை

[1] Walter C. Neale எழுதிய 'The Market in Theory and History'—அதிகாரம் 18. Trade and Market in the Early Empires—Karl Polanyi (and others) பிரசுரம் செய்தது 1957 (The Free Press Illinois, U. S. A.) என்ற நூலைப் பார்க்கவும்.

யைச் சிபார்சு செய்கின்றனர். ஏனெனில், விளைச்சலைப் பகிர்ந்து கொள்வோன் 'தன் இலாபத்தை உயர்ந்த பட்சமாக்க, இறுதிநிலை உற்பத்தியை இறுதிநிலை ஆக்கச் செலவைப்போல், இரண்டு மடங்காகப் பெருக்கிக் கொள்ளவேண்டும். இந்த நிலையை அடையும் வரை அவன் உற்பத்தியை நீடிக்கவேண்டும்.[1] இருந்தபோதிலும் இந்தமுறை தொழிலின் ஆபத்துகளை ஓரளவு நிலச்சுவான்தாருக்கு மாற்றுகிறது. பொதுவாகப் பார்க்கும்போது, இந்த முறை அளிக்கும் நலன்களைவிட அதன் குறைகளே மிகுதியாக இருக்கின்றது.

கட்டுப்பாடில்லாத நிலையில் நிலவும் வாரத்தைவிடக் குறைவான வாரத்தைச் சட்டம் அமல் செய்கின்றது. ஆனால், வேறு வேலைகிடைக்காததால், நில உடைமைக்கு எழும் ஆசை விவசாயிகள், நிலச்சுவான்தாருக்குச் சட்ட விரோதமான கட்டணங்களைச் செலுத்துவதற்குக் காரணமாக இருக்கின்றது. பயிர்செய்யும் குடும்பங்களின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. ஆகையால், அவர்கள் செய்யும் செலவுகள்போக (உழைப்பின் விலை உள்பட) உபரியாக எதையும் ஈட்டமுடியாத நிலையில்கூட, நிலத்தைப் பயிர் செய்ய முன்வந்தனர். சில இடங்களில் கூலிக்காக உழைப்போருடைய ஊதியத்தைவிடக் குறைவான வருமானத்தை இக் குடும்பங்கள் பெறுகின்றன. ஆனால், நிலம் கிடைப்போருடைய குடும்ப வாழ்க்கை பாதுகாக்கப்பெற்றது. இந்த நிலையில் நிலம் இல்லாத தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகியது. இவர்களுடைய வருமானம் நிலத்தைப் பயிர்செய்யும் குடும்பத்தினருடைய வருமானத்தைவிடக் குறைவாக இருந்தது. ஆனால், அவர்களுடைய ஆண்டு வருமானம் குறைவாகவே இருந்தது. ஏனெனில், மொத்தக் கூலி பல தொழிலாளர்களிடையே பிரித்துக் கொடுக்கப் பெற்றது.

இந்த நிலையில் நிலத்தின் பயன்பாடு முன்னேறவில்லை. சிறிய விவசாயிகள் வழக்கம்போல் உணவுப் பொருள்களையே பயிர் செய்தனர். தம் பயனுக்கே இவர்கள் உற்பத்தி செய்தனர். விற்பனை செய்வதற்காக இவர்கள் உற்பத்தி செய்யவில்லை. அரசினர் அளிக்கும் உதவித் தொகையுடன் குறைந்த விலையில் விற்பனையாகும் எருவை வாங்குவதுகூட, அவர்களுக்கு ஆபத்தானதாக இருக்கின்றது. பரிசோதனைகள் செய்யவோ அல்லது ஆபத்துகளை ஏற்கவோ அவர்களால் இயலாது. விவசாய எருவை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அவர்கள் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. நல்ல பருவமழை இருக்கும் காலத்தில் அவர்கள் ஓர்

[1] Anne Martin, Economics and Agriculture, 958 p. 158.

அளவு எரு பயன்படுத்தினால், அது பயனளிக்கத் தவறுவதாலோ அல்லது போதிய அளவு இல்லாமையாலோ ஆபத்து ஏற்படலாம்.

வழக்கமாக உற்பத்தியாகும் பயிர்கள் குறைவான சத்துப் பொருள்களைக் (குறிப்பாகப் புரதத்தை) கொண்டிருக்கின்றன என்பதைப் புறக்கணிக்கக்கூடாது. உணவுப் பொருள்களின் சத்தை உயர்த்துவதற்கு ஏற்றமுறையில், நிலச்சாகுபடித் திட்டம் வகுக்க வேண்டும். இது செய்யப்படும்வரை தன் நிறைவுபெற்ற குடும்பங்கள் வைட்டமின்களும் அவைகளைவிடப் புரதமும் குறைவாக உள்ள உணவுகளை உட்கொள்ளுவர். இதன் காரணமாகப் புரதக்குறை விளைவிக்கும் நோய் அவர்களைத் தாக்குகின்றது. இதனால் அவர்கள் மடியாவிடிலும், குறைவாக இருக்கும் நிலத்தைகூடச் சரிவரப் பயன்படுத்த இடம் கொடுக்கவில்லை. கிடைக்கும் சாதனங்களைச் (மீன், இறைச்சி போன்றவை) சரிவரப் பயன்படுத்துவதற்கு சமயமும், பழையகால மரபுகளும் தடையாக இருக்கின்றன. சிறந்த உணவு வாங்குவதற்கு உயந்த விலை கொடுக்கவேண்டும்.

1921ஆம் ஆண்டுக்குப் பிறகு மக்கள்தொகை உயர்வின் வீதம் மிகுதியடையத் தொடங்கியது. கிராமங்களில் வாய்ப்புகளும் நிலைமையும் மோசமாயின. இந்த நிலையில் நிலச்சாகுபடி முறை ஏன் உற்பத்திக்கு ஊக்கமளிக்கத் தவறியது என்பதை அரசு கவனித்தது. இதனால் மக்கள் நிலமுறைச் சீரமைப்புக்குக் கிளர்ச்சிகள் செய்தனர். நாட்டின் விடுதலைக்குப் பிறகு மாநில அடிப்படையில் இது ஒரு புதிய சக்தியைப் பெற்றது. இதை ஒட்டிப் பெரு நிலக்கிழார்கள் தம் சொந்தச் சாகுபடிக்காக வைத்திருந்த நிலம் நீங்கலாக (சொந்தச் சாகுபடி என்ற சொல்லைத் தீமை விளைவிக்கத் தகுந்தமுறையில், விரிவான பொருளைக் குறிப்பிடும்படி பயன்படுத்தினர்) மற்றதை எல்லாம் எடுத்துக்கொண்டு, ஆங்கிலேயே ஆட்சியில் நிலவிய நிலமுறையை இப் பகுதிகளில் புகுத்தினர். பெரு நிலக் கிழார்களுக்கு ஈட்டுத்தொகை கொடுக்கப்பெற்றது. நில உடைமைக்குப் படிப்படியாக உச்சவரம்பு ஏற்படுத்தப்பெற்று வருகின்றது. இதுபற்றிய சட்டங்களில் மாநிலங்களிடையே வேற்றுமைகள் உள. இச் சட்டங்களைச் செயலில் கொண்டு வருவதற்கு ஏற்பட்ட காலதாமதம் இவைகளுடைய நோக்கங்கள் நிறைவேறுவதற்குத் தடையாக இருந்தன.[1]

நிலச் சீர்திருத்தங்கள் நல்ல நிலைமையில் உள்ள விவசாயிகளுக்கே சாதகமாக இருக்கின்றன என்று அவைகளைக் குறை கூறுகின்றனர். ஏழைகளுக்கும் நிலம் இல்லாதவர்களுக்கும்

[1] இந்தியச் சீர்திருத்தங்கள்பற்றிய விவரங்களை, 'Journal of Local Admnistration Overseas, Vol. I, No. 2 (April 1962) என்ற சஞ்சிகையில் பார்க்கலாம். இது வீரா ஆன்ஸ்டி எழுதியது.

இவை பயனளிக்கவில்லை. இருந்தபோதிலும் விவசாயத்தை ஆதரிக்கும் மற்றத் திட்டக்கொள்கைகளுடன் சேர்ந்து இச் சீர்திருத்தங்களும் உற்பத்திப் பெருக்கத்திற்குக் காரணமாக இருந்தன. இதுவே, திட்டத்தின் முதல் நோக்கமாகும். இந்த நோக்கம் நிறைவேறினால், விவசாயிகளின் விற்பனை செய்யவேண்டிய உபரி உற்பத்தி பெருகும்; இறக்குமதியைக் குறைக்கலாம்; நேர்முக, மறைமுக வரிகள்மூலம் விவசாயத்துறையிலிருந்து மிகுதியான வருவாயை அரசு பெறலாம்.

ஆனால், திட்டத்தின்கீழ் அரசு பின்பற்றிய நிலச் சீர்த்திருத்தம் போன்ற கொள்கைகள் நாட்டுப் பிரச்சினையின் முக்கியமான பகுதியைத் தீர்க்கவில்லை. குறைவேலையும், வேலையின்மையும் அதிகரிக்கின்றன. நிலமில்லாத தொழிலாளர்களின் எண்ணிக்கை உயருகின்றது. மிகச் சிறிய நிலங்களைக் கொண்டிருப்போரின் நிலைமையும் முன்னேறவில்லை. கூட்டுறவு இயக்கமும், கிராமங்களுக்கு உதவிபுரியும் பணியும் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை.

விவசாயிகள் தம் சொந்த முயற்சியின் சிறப்பைத் திடீரென்று உணர்ந்துவிடவில்லை; திட்டத்திலும் அவர்கள் ஊக்கம் காட்டவில்லை. சாதிமுறை(cast system), பொருளாதாரத் தொடர்பில்லாத ஒரு பெரிய பிரச்சினையாகும். பரம ஏழைகளும், சமுதாயத் தலைவர்களும் சாதிவேற்றுமைகளையும் வெறுப்புகளையும் காட்டுகின்றனர். இது கடைநிலையில் உள்ளவர்களின் நம்பிக்கையும், ஆற்றலையும் பாதிக்கின்றது. முன்னர்க் குத்தகைக்குவிட்ட நிலங்களைப் பெரு நிலக்கிழார் இழந்தனர். பண்ணைகளுக்கு இன்று உச்சவரம்பு இருக்கின்றது. ஜனநாயக ஆட்சிக்கும், திட்டம்வகுப்பதற்கும் கிராமங்களில் இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆயினும், இன்றும் கிராமக் குழுக்களில் நல்ல நிலைமையில் உள்ளவர்களே அங்கம் வகிக்கின்றனர். அவர்களே அதிகாரம் அனைத்தையும் செலுத்துகின்றனர்.

நிலச் சீர்திருத்தங்கள் விவசாயத்துறையின் அமைப்பில் உள்ள குறைகளைமட்டும் நீக்கி, விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும். இதைவிட எதையும் அவைகளிடம் எதிர்பார்க்கக்கூடாது. சமுதாயத் தொடர்புகளைச் சீர்திருத்த, வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மேலும், இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள நிலைமையில், சிறந்த விவசாயத்திற்கு உகந்த பண்ணையின் அளவு யாது என்பதுபற்றிய முடிவு எடுக்கப்படவில்லை. இந்த முடிவை

பாகிஸ்தானின் சீர்திருத்தங்கள்பற்றிய விவரங்களை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் (Economic Adviser to the Government of Pakistan) எழுதிய பொருளாதார ஆண்டு அறிக்கைகளிலும் காணலாம். கிழக்குப் பாகிஸ்தானின் சீர்திருத்தங்கள் மேற்கு வங்காளச் சீர்திருத்தங்களை ஒத்திருக்கின்றன. மேற்குப் பாகிஸ்தானில் ஒருவர் 500 ஏக்கர்களுக்குமேல் வைத்துக் கொள்ளக்கூடாது.

ஏடுக்கும்பொழுது, கீழ்க்கண்டவைகளை கவனிக்கவேண்டும்: மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்கள் நிலத்தை நம்பி வாழ்கின்றனர். நிலமில்லாதவர்கள் பலர் கிராமங்களில் இருக்கின்றனர். நிலச் சீர்திருத்தம் வந்தபிறகுகூட, நிலப்பங்கீட்டில் இருக்கும் ஏற்றத் தாழ்வு, விளைச்சலை உடனடியாகப் பெருக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. புராதனமுறையில் மக்கள் வாழ்வதையும். குடும்பத்தினர் எல்லாரும் பண்ணைகளைச் சாகுபடி செய்வதையும் கவனிக்கவேண்டும். இப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்குக் குடும்பப் பண்ணைகளின் அளவை உயர்த்த வேண்டும். இதற்குச் சில இடங்களில் உச்சவரம்பைக் குறைக்கவேண்டும். சில இடங்களில் சிறிய நிலங்களை ஒன்று சேர்க்கவேண்டும். நான்கு அல்லது ஐந்து அங்கத்தினர்கள்கொண்ட குடும்பம் சாதாரணமுறை வாழ்க்கை நடத்துவதற்குவேண்டிய நிலத்தைப் பெறவேண்டும். இந்த நிலத்தின் அளவை இயற்கை அமைப்பும், ஆங்காங்கே உள்ள நிலைமையும் நிர்ணயிக்கவேண்டும். அவர்கள் நில உரிமையையும். நிலச் சீரமைப்புக்குத் தகுந்த ஈட்டுத்தொகையையும் பெறல்வேண்டும். இந்த ஏற்பாடு நிலப்பங்கீட்டில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்கும்; ஓர் ஏக்கரின் சராசரி விளைச்சலை உச்சநிலைக்கு உயர்த்தும்; புராதன வாழ்க்கை முறையையும் பாதுகாக்கும். ஏக்கரின் சராசரி விளைச்சல் பெருகுவதால், குடும்பத்தினருடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்கும் இது காரணமாக இருக்கும். நிலம் வேண்டுமென்ற ஆசை கொண்டவர்கள் எல்லாருக்கும் அதைப் பகிர்ந்துகொடுப்பது, வறுமையைச் சமமாகப் பகிர்ந்து கொடுப்பதாகும். நிலம் இல்லாதவர்களுக்கு வேறுவித உதவியளிக்கப்படவேண்டும்.

பொருளாதாரத்தின் ஒரு பெரியபகுதி, பொருளாதாரத் தொடர்பில்லாத மற்றச் சக்திகள்மூலம் தூண்டுதல் பெறும்பொழுது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை எடுத்துக் காட்டுவதற்காகவே, இங்கு நீண்ட விளக்கத்தையும் அண்மைக் கால வரலாற்றையும் கொடுத்தோம். இந்த நிலையில் பொருளாதார நடவடிக்கைகள் காலதாமதமாகவும், நிச்சயமற்றமுறையிலுமே இயங்கும். கல்வி, பயிற்சி, உணவு உட்கொள்வதில் சீர்திருத்தம், மிக வறுமையான நிலையில் உள்ளவர்கள் ஏமாறுவதை நீக்கச் சட்டங்கள் முதலியன தேவை. அவர்கள் தம் உரிமைகளை இப்பொழுது அனுபவிக்கத் தயங்குகின்றனர். மேலும், அதிகமான உரிமைகளைக் கேட்கவே முடியாது. இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் திட்டமிடுவோர் இவைகளை எல்லாம் உணர்ந்திருக்கின்றனர். பொருளாதாரத் தொடர்பில்லாத பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் திட்டம் பல வழிகளைக் கொண்டிருக்கின்றது. ஆனால், இத் துறையில் ஓரளவே வெற்றி கண்டிருக்கின்றோம்.

உணவுத் தேவைகளுக்குத் தகுந்தமுறையில் நிலப் பயன் பாட்டுக்குத் திட்டம் வகுக்கவேண்டும். குடும்பத்தினருடைய தேவைக்குமேல் உள்ள உபரியை விற்பனைசெய்ய உதவும் வழியில், வரி விதித்தலைத் திருத்தவேண்டும். இப்படிச் செய்தால், மேற் கூறிய பிரச்சினைகளை ஓரளவு பொருளாதார நடவடிக்கைகள்மூலம் தீர்க்கலாம். இத்தகைய கொள்கைகளைச் செயல்படுத்தும்பொழுது, சமுதாய நிலையை நன்கு கவனிக்கவேண்டும். மேல்நாடுகளில் எடுத்த நடவடிக்கைகளை எடுப்பதற்குமுன் அதற்கேற்ற நிலை மையை நீண்டகாலச் சமுதாயச் சீர்திருத்தங்கள் ஏற்படுத்த வேண்டும். ஆனால், இந்த நிலை ஏற்படும்வரை மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம். மீன்பிடிக்கும் தொழிலை வளர்த்தல், செயற்கை எருவைப் பரவலாக எங்கும் பயன்படுத்துதல், பால், அதன் பொருள்கள் (பால்பொடி உள்பட) முதலியவைகளின் பயனைப் பரப்புதல், கால்நடைகளைச் சிறந்தமுறையில் பெருக்கு தல் முதலியவைகளைக் குழுவிப் பருவத் தொழில்கள் என்று கூற லாம். இவைகளுக்கு உதவிப் பணம் தேவை என்பதை நாம் மெய்ப்பிக்கலாம். நில உச்சவரம்புச் சட்டத்தைத் தீவிரமாக எதிர்காலத்தில் அமல்செய்தால், அதிலிருந்து கிடைக்கும் உபரி நிலத்தைப் பங்கீடுசெய்து கொடுக்கும்பொழுது, விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களில் சேரவேண்டுமென்று அவர்களைக் கட்டாயப்படுத்தலாம். ஏனெனில், போதிய மூலதனம் இல்லாமல் பயிர்த்தொழில் செய்யமுடியாது.[1] இக் கொள்கைகளைத் திட்டமிடு வோர் புறக்கணித்துவிட்டனர் என்று நாம் குறிப்பிடவில்லை. விலை முறையும், மற்றப் பொருளாதாரச் சக்திகளும் சரிவர இயங்கினால் தான், அரசியலார் செய்யும் ஏராளமான செலவு பலனளிக்கும் என்பதை வலியுறுத்தவே, நாம் இங்கு நீண்ட விளக்கத்தைக் கொடுத்துள்ளோம். சமுதாயச் சீர்திருத்தங்கள் செய்யப்படா விடில் இச் செலவுகள் வீணாகும்.

E. முடிவுகள்

இந்தியப் பாகிஸ்தானிய மாணவர்களுக்கு, பொருளியலையும் அதன்முறைகளையும் அறிமுகப்படுத்த, மேலே உள்ள விளக்கத்தின் மூலம் முயற்சிசெய்தோம். நாட்டில் நிலவும் பொருளாதாரச் சூழ் நிலையைப் பின்னணியாகக்கொண்டு பொருளியலை விளக்கினோம்.

ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்டுள்ள பல்வேறு தலைப்பு களின் கீழ் இவ் வறிமுகத்தைக் கொடுத்தோம். பொருளியல் முழு வதையும் ஒரே பார்வையில் பார்க்கும்முறையில் நாம் அதை

[1] Anne Martin எழுதிய, Economics and Agriculture, 1958, p. 241 என்ற நூலைப் பார்க்கவும்.

விளக்கவில்லை. அதன் கூறுகளில் ஏதேனும் ஒன்றை விவரமாகப் பார்க்கவும் முயற்சி செய்யவில்லை. ஆரம்ப நிலையில் பார்க்க வேண்டிய பலவற்றை நாம் பார்க்கவில்லை. வேறு சில விஷயங்கள் பற்றிய விளக்கங்கள் மிகவும் குறைவாகவே இருக்கும். பின்னர்க் குறிக்கப்பெற்றிருக்கும் குறைபாடுகளை நீக்குவதற்கு உரிய நூல்களைப் படிக்கவேண்டும்.

பொருளியல் பயில்வதில் மாணவர்களுடைய ஆர்வத்தைத் தூண்டுவதும், தொடக்கநிலைத் தத்துவங்கள்கூட இந்தியா போன்ற நாடுகள் தீர்க்கவேண்டிய பிரச்சினைகள்பற்றிய உண்மையை எவ்வாறு புலப்படுத்துகின்றன என்பதைக் காட்டுவதே நம் நோக்கங்கள். பொருளியல் ஆராய்ச்சி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவ்வாறு உதவுகின்றது என்பதும் புலனாகும். இந்தியப் பாகிஸ்தான் நாடுகளில் நிலவும் சிறப்பியல்புகளைச் சித்திரித்துள்ளோம். ஆங்காங்கே உள்ள நிலைமைக்கேற்றவாறு எவ்வாறு கொள்கைபற்றிய முடிவுகளை அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதையும், வளர்ச்சியடைந்த நாடுகளின் கொள்கைகளிலிருந்து இக் கொள்கைகள் எப்படி அதிகமாக வேறுபட்டிருக்கின்றன என்பதையும் நாம் எடுத்துக்காட்டினோம்.

கோட்பாடுகள்பற்றிய ஆராய்ச்சியும், பொருளாதாரக் கருவிகளைப் பயில்வதும், பொருளாதாரத் தத்துவங்களை நடைமுறை நிலைமையில் அமல்செய்வதும், பல தத்துவங்களையும் எடுகோள்களையும் சார்ந்திருக்கின்றன. இவை அடிப்படை நிலையில் எளிதாக இருக்கின்றன. ஆனால், இவைகளை விரிவுபடுத்தும்பொழுது சிக்கல்கள் எழும். வளர்ச்சியடையாத நாடுகளுக்கும், வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் இவை பொருந்தும். ஆங்காங்கே உள்ள சூழ்நிலைக்கு ஏற்ற திருத்தங்களைச் செய்தால், இவை எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். இத் தத்துவங்கள் தேவை, அளிப்பு, விலைத்தொடர்புகள், சார்வாதீனம், போட்டி, இவை அளிக்கும் வேறுபட்ட விளைவுகள், சிறப்புமுறை உற்பத்தி, ஒப்பீட்டுச் செலவுகள், இலாபம், சேமிப்பு, முதலீடு முதலியவைகளின் இடம் முதலியவை பற்றியவை. பணம், பாங்குகள், கூட்டுப்பங்கு நிறுவனங்கள், நாட்டுடைமையான தொழில்கள் முதலிய நிலையங்கள் இருப்பதால் ஏற்படும் விளைவுகளையும் இவை காட்டுகின்றன. பொருளாதாரத்தின் விளைவுகளை அளத்தல், பிரச்சினைகளின் முக்கியத்துவத்தைக் காணுவதற்கு எவ்வளவு உதவியாக இருக்கின்றது என்பதையும் நாம் எடுத்துக் காட்டினோம். இறுதியில் உள்ள இரு அதிகாரங்கள், பல்வேறு பொருளாதாரத்துறைகளின் தொடர்புகளையும், பொருளாதார வாழ்க்கையின் கூறுகளையும் எடுத்துக்காட்டுகின்றன. திட்டக் கொள்கைகளின் சிறப்பைப் பாதிக்கும் தத்துவங்களையும் இறுதி இரு அதிகாரங்களில் காணலாம்.

பொருட்குறிப்பு அகராதி

அகர்வாலா, ஏ. என்., 144 (அடிக் குறிப்பு)

அயல்நாட்டுச் செலுத்தல் நிலை, 183, 222, 233, 255, 264, 265, 274, 277

அயல்நாட்டு வர்த்தகச் செலுத் தல் நிலை, 233, 234, அயல் நாட்டுச் செலுத்தல்நிலை என் பதைப் பார்க்கவும்.

அடக்கச் செலவு, 85, 92, 93, 95, 109, 136, 138, 140, சமுதா யச் செலவு, 143, 144, ஒப்பீட் டுச் செலவு, புறச் சிக்கனங்கள், புறப் பிரதிகூலங்கள் முதலி யவைகளையும் பார்க்கவும்.

அளவுபற்றிய சிக்கனங்களும் சிக்கனமின்மையும், 94, 157-165

அரசின் தூண்டுதல்கள் விளைவிக் கும் விவசாயிகளின் செயல் கள், 276

அயல்நாட்டுக்குச் செலுத்த வேண்டிய கடன், அயல் நாட்டு உதவி கடன் என்பவை களைப் பார்க்கவும்.

அயல்நாட்டு மூலதனம், 25, 277, அயல்நாட்டு முதலீடு, உதவி என்பவைகளையும் பார்க்கவும்.

அன்னியச் செலாவணி, 203, பொன் திட்டம் என்பதைப் பார்க்கவும்.

அயல்நாட்டு முதலீடு, 162

அயல்நாட்டு உதவியும் கடனும், அரசின் அயல்நாட்டு உதவி யும் கடனும் என்பதைப் பார்க் கவும்

அயல்நாட்டு வர்த்தகம், 16, 35, 76, 130, 218. அதிகாரம், 10, 264, 265, 273, வரிகள் என்ற சொல்லையும் பார்க்கவும்.

அரசின் கடன்கள், 219, 220, அயல்நாட்டு உதவியும் கட னும், 220, 221, 233, 255, 257, 264, 265

அரசின் கொள்கையும் விலை முறையும், 100-107

அமித முதலீடு, 155

அமித மக்கள் தொகை, தீர்க்கும் வழிகள். 197, 198. மக்கள் தொகை என்பதைப் பார்க்கவும்.

அளவுக் கட்டுப்பாடுகள், 89, 235, 236, 266. விலை நிர்ணயம், பங் கீட்டுமுறை, உற்பத்திக் கட்டுப் பாடு முதலியவைகளையும் பார்க் கவும்.

அரசின் பங்கு அல்லது பணி, 25, 38, 238-241

அளிப்பு, 21, 36, 40, 45, 47, 48, 70, 78, 79, 85

அளிப்பும் தேவையும், தேவையும் அளிப்பும் என்பதைப் பார்க்க வும்

அடையாளப் பணம், 200

ஆஃரிக்கா, முன்னுரை

ஆன்ஸ்டி, வீரா அடிக்குறிப்பு, 130, 196, (அடிக்குறிப்பு), 284.

ஆலை முதலாளிகள், பஞ்சாலைகள் என்ற சொல்லைப் பார்க்கவும்.

ஆபத்து, ஆபத்து ஏற்பு, 35, 100, 128, 129, 134, 140, 141, 188, 225

ஆராய்ச்சி, விஞ்ஞானத்துறைப் பயிற்சியும் ஆய்வும் என்பதைப் பார்க்கவும்.

இலங்கை, முன்னுரை, 1

இலாப ஈவு, 136,

இரட்டைக் கணிப்பு, 176, 179,

இறக்குமதித் தடை, 90, 235, 236

இறக்குமதிப் பண்டங்களுக்குப் பதிலியான பண்டங்களைப் பயன்படுத்தல், 258, 264

இறக்குமதி, வர்த்தகம், வரிவிதித் தல் முதலியவைகளைப் பார்க் கவும்.

இந்தியா, முன்னுரை, சிறப்பியல்புகள், 9, 27
இந்தியக் கம்பெனிச் சட்டம் 1956, 148
இரும்பு, எஃகு தொழில், தொழிலை ஓரிடத்தில் நிறுவுதல் என்பதைப் பார்க்கவும்.
இறுதிநிலைச் செலவும் வரவும், 91 92, 93, 108, 109
இறுதிநிலை உற்பத்தி, 169
இறுதிநிலைப் பயன், 61, 71, 187
இயந்திரங்களைப் பயன்படுத்துதல், தற்கால முறையைப் பின்பற்றுதல், 17, 18, 191, உற்பத்தித் தேர்வு என்பதையும் பார்க்கவும்.
இடப்பெயர்ச்சி: தொழிலாளர்கள் என்ற சொல்லைப் பார்க்கவும்.
இயற்கை உற்பத்திச் சாதனங்கள் : நிலம் என்ற சொல்லைப் பார்க்கவும்.
இயற்கைச் சக்திகளும், விபத்துகளும் : பருவ மழை என்ற சொல்லைப் பார்க்கவும்.
இலாபம், 93, 96, 99, 103. 128. 134-147, மாறுதல்கள், 154, உயர்ந்த பட்சமாக்குவது, 135, இயல்பு அல்லது சாதாரண இலாபம், 136, சர்வாதீனத்தில் இலாபம், 108, 109, 110
இறக்குமதி நாட்டம், 174
இலக்குகள், 254, 259

உற்பத்திச் சாதனங்களைப் பகிர்வு செய்தல், 213, திட்டமிடுதலில் விவசாயத்தின் பங்கு என்பதைப் பார்க்கவும்.
உண்டியல்கள், வர்த்தக, 203, கருவூல உண்டியல்கள், 203, 204, 205
உற்பத்திக் கணிப்பு, 177, புள்ளி விவரம், 255
உற்பத்தி முறைத் தேர்வு, 43, 116, 266-269
உணவு இறக்குமதியும், தன்னிறைவும், 274, 284
உயர்ந்த கூலி அளிக்கும் சிக்கனம், 124
உற்பத்திக் காரணிகள் : அதிகாரம் 5, விளக்கம், 112, இடப்பெயர்ச்சி, 88, 117, 118, விலைகள், 118, 130, காரணிகளைச் சேர்த்தல் என்பதையும் பார்க்கவும்.
உணவு, விவசாயக்குழு (F.A.O.), 65
உயர்ந்துசெல் விளைவு விதி, குறைந்துசெல் விளைவு விதி என்பதைப் பார்க்கவும்.
உழைப்பு, உற்பத்திக் காரணியாக 35, 112, 120-124, விவசாயத் துறையில் 189, உழைப்புக்குத் தேவை, 189, 190, 197, திரியும் இயல்பு, 190, இடப் பெயர்ச்சி 30, 197, பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் கிடைப்பருமை, 191, உபரி உழைப்பு, 191
உற்பத்தியின் நெகிழ்ச்சி, 212, விவசாயத் துறையில் விவசாயம் என்பதைப் பார்க்கவும். குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும், உயர்ந்த பட்சமாக்குவது 252, 253
உற்பத்திக் காரணிகளின் விலைகளை நிர்ணயித்தல், 118, 180
உற்பத்தி, 111, 135, 136, விளக்கம், 29,
உள்நாட்டில் எச்ச உற்பத்தி, 182, இறுதிநிலை உற்பத்தி, 169
உற்பத்திக் கட்டுப்பாடு, 100, 106
உற்பத்தியின் அளவு, 157, உற்பத்திச் சிக்கனங்கள் என்பதையும் பார்க்கவும்.
உதவித் தொகைகள், 103, 105, 180. 236
உறுதி கூறுவது, 228
உற்பத்தியில் பயனுகும் காரணிகளின் அளவு மாறுதல், 113, குறைந்துசெல் விளைவு விதி என்பதைப் பார்க்கவும்.
உலக மார்க்கட்டு, 51

ஊக்க மின்மை தூண்டுதல்களும், ஊக்கத்தைப் பாதிக்கும் சக்திகளும் என்பவைகளைப் பார்க்கவும்.

ஊகவாணிகம், 146
எச்சச் சமுதாய உற்பத்தி : சமுதாய என்பதைப் பார்க்கவும்.
எச்சச் சமுதாய மதிப்பு, சேர்க்கப்பெற்றது, சேர்க்கப்பெற்ற மதிப்பு என்பதைப் பார்க்கவும்.
ஏமாற்றுதல், முதலாளித்துவ முறையில் ஏமாற்றுதல் என்பதைப் பார்க்கவும்.
ஏற்றுமதியைப் பெருக்குதல், 265, வர்த்தகம் என்பதைப் பார்க்கவும்.
ஏற்றுமதிமூலம் கிடைத்த வருமானத்திற்கும் கடன்பற்றிய பணிகளுக்கும் இடையே உள்ள விகிதம், 257
ஒப்பீட்டுச் செலவு, நலன்கள், 76, 229, 230, 231
ஒரேவிதமான பண்டங்கள், 54
கள்ளமார்க்கட்டு, 44, 47, 265
கடன்-தனியாரின், 226-228, உள்நாட்டுப் பொதுக் கடன், 181, 204
கடன்-வெளிநாட்டுக் கடன், அரசின் அயல்நாட்டுக் கடனும் உதவியும் என்பதைப் பார்க்கவும்.
கடனுளிகள், 99, 100
கடனுளியாக இருத்தல், 11, 125, 207
கடன் கொடுப்போர், 15, 99, 100
கட்டுப்பட்ட அளவு, 89, 235, அளவுக் கட்டுப்பாடுகள் என்பதையும் பார்க்கவும்.
கட்டுப்பாட்டு முறைகள், 98
கள்ளக் கடத்தல், 219
கருவூல உண்டியல்கள், 220
கானடா, 116
காரணிகளை உற்பத்தி முறையில் ஒன்றுசேர்ப்பது, 43, 113, 116, 187, 267
காந்தி, 29
காப்பு நிதிகள், 219, 221, 224
கீழ்நாட்டு அங்காடி, 47
கீன்ஸ் பிரபு, 6, 126(அடிக்குறிப்பு), 211
குறியீட்டெண்கள், 170, விலைக் குறியீட்டெண், 171, 179, 209, நிறையிடுதல், 171
குறைந்துசெல் விளைவு விதி, 113, 114, 115, 169, 187, 188
குறைந்துசெல் பயன்விதி, 61, 62
குழுவிப் பருவத் தொழில்கள், 236, 284
குடும்பக் கட்டுப்பாடு, 198
குருச்சேவ், 140 (அடிக்குறிப்பு)
குமார், சி.பி., 149 (அடிக்குறிப்பு)
குஜ்னட், சைமன், 245 (அடிக்குறிப்பு)
குறைந்தபட்சக் கூலி, 122, 188
குறை வாரம் அல்லது தற்காலிக வாரம், 117
குறுகியகால விளக்கம், 53
குறுப்பிட்டகால இடைவெளியில் தோன்றும் மந்தங்கள், வர்த்தகச் சுழல் என்பதைப் பார்க்கவும்.
கூட்டுறவு, கூட்டுறவுச் சங்கங்கள், 11, திட்டம் வகுத்தலில் விவசாயத்தின் பங்கு, சிறு தொழில்கள் என்பதையும் பார்க்கவும்.
கூட்டுறவுப்பண்ணை, 32, 282
கூட்டாட்சி நிதிமுறை, 223, 224
கூட்டுத் தேவை, 84, கூட்டுப் பண்டங்கள், 85
கூலியின் இறுதிநிலை உற்பத்திக் கோட்பாடு, 121
கூலிகள், 120-124, 135, 142, 188, விலை நிர்ணயம் என்பதையும் பார்க்கவும்.
கெயிர்ன் கிராஸ், ஏ., 22,
கேவலச்சொல், 140
கைத்திறன் வேலை, 75, கைநெசவு 106, சிறு தொழில்கள் என்பதையும் பார்க்கவும்.
கையிருப்புச் சரக்குகள், 105, 125
கொள்கை வகுக்கும் கலை, 38
கொடுப்பல் வரி, 216
கொரியப் போர், 84, 232, 256
கொள்கை வகுத்தல், 36, 38, 39, திட்டமிடுதல், பொது நிதி இயல் முதலியவைகளையும் பார்க்கவும்.

கொள்முதல், 3
கோஷ், அலக், 255 (அடிக் குறிப்பு)
சமன் செய்த வளர்ச்சி, 263
சமுதாயத் திட்டங்கள், 274
சர்வாதீனம், சர்வாதீனர், 45 85-100, 150, 219
சராசரி, இறுதிநிலை உற்பத்தி, 114, 115
சமுதாயத்தின் அடக்கச் செலவு, அடக்கச் செலவு என்பதைப் பார்க்கவும்.
சமுதாய நிலையங்களும் வளர்ச்சியும், 23, 28, 30
சமுதாயத்தின் உற்பத்தி, 175, 182, 183
சமுதாயச் சீர்திருத்தங்கள், 281, 282
சர்வாதிகார முறை, 42, 140, 210
சமுதாயப் பணிகள் 25
சவுத்திரி, 141 (அடிக்குறிப்பு)
சாதிகள், 23, 24, 30, 118 சமூகச், சீர்திருத்தம் என்பதையும் பார்க்கவும்.
சாமுவேல்சன், பால், 132 (அடிக் குறிப்பு)
சில மூலதனப் பொருள்களின் தொடர்ச்சியின்மை, 117
சில்லறை விலைகள், 168
சிங், எஸ்.பி., 144 (அடிக்குறிப்பு)
சின் ஹா, ஆர். பி, 275 (அடிக் குறிப்பு)
சிறுசேமிப்பு, 220
சிறுதொழில்கள், 135, 159, 228, 270, 272, புராதனப் பகுதி என்பதையும் பார்க்கவும்.
சிறப்பான பொருளாதார இயல்புகள், இந்தியா, பாகிஸ்தான் என்ற சொற்களைப் பார்க்கவும்.
சிறப்பான நிதி இயல்புகள் : நிதி நிலையங்கள் என்பதைப் பார்க் கவும்.
சிறப்புப் பயிற்சி, வேலைப் பகிர்வு என்பதைப் பார்க்கவும்.
செல்வப்பங்கீடு, மீள்பங்கீடு, 211, 213, 253, 257
செலவு வரி, 216, 217
செழிப்பில் மாறுதல்கள், 193, வர்த் தகச் சுழல் என்பதையும் பார்க் கவும்.
செலாவணிக் கொள்கை, 205
செலாவணிப் புழக்கத்தைப் புகுத் துதல், 257, புராதனப் பகுதி என்பதையும் பார்க்கவும்
செல்வவரி, 216, 217
சேமிப்பு நாட்டம், 172
சேமிப்பும் முதலீடும், 25, 126, 172, 253, 254, 257, 259
சொத்துகள், 216, 221. ரொக்கத் தன்மையுடைய சொத்துகள் 201, 205, ரொக்கத் தன்மை யுடைய சாதனங்கள், ரொக்கத் தன்மை, ரொக்க விருப்பம் முதலியவைகளையும் பார்க்கவும்.
டிபஞ்சர் பத்திரங்கள், 134, 228
டென்மார்க், 23
டெபாசிட்டுகள், பாங்குகள் என் பதைப் பார்க்கவும்.
டைசன், ஜி., 128 (அடிக்குறிப்பு), 148 (அடிக்குறிப்பு)
தம் நிலத்தைச் சாகுபடி செய்யாத நிலச் சுவான்தார்கள், 42
தவிர்த்தல், கட்டணங்கள், வரி கள் மூதலியவைகளைச் செலுத்துதல், 216
தனியார் துறைக்கு நிதியும், கடனுதவியும் அளித்தல், 226-228
தடையற்ற வர்த்தகம், 237, 240
தங்கயிடாக் கொள்கை 53, 239, 240
தற்காலப் பகுதி, 18, 226, 227
தரஞ் சூழ் பொருளியல், பொரு ளில் என்ற சொல்லைப் பார்க் கவும்.
தடை, 29
தனிப் பொருளியலாராய்ச்சி, 9
தனியார் தொழிலும் துறையும், 140, 146, 147, 149, 152, 154, 226-228
தாஸ், என்., 146 (அடிக்குறிப்பு) 153 (அடிக்குறிப்பு), 227 (அடிக் குறிப்பு)
தார், பி.என்., 272 (அடிக்குறிப்பு)

தாய் நாட்டை விட்டுப் பிற நாடுகளில் குடிபுகுதல். 197
தானாக இயங்கும் வளர்ச்சி, 25, 41, 248, 249, 257

திட்டமிடுதலில் விவசாயத்தின் பங்கும், விவசாயம் பற்றிய பிரச்சினைகளும் 274-284, அளிப்பின் குறைவான நெகிழ்ச்சி, 67 இயந்திரங்களைப் புகுத்துதல் 178, விலைகளை நிலைபெறுத்துதல் 177, பண்ணைகளின் அளவு 177, 178, கூட்டுப் பண்ணை, குறைந்துசெல் விளைவு விதி முதலியவைகளையும் பார்க்கவும்.
திறமை, 141, 151, 167, 168
திட்டத்தின் நோக்கங்கள், திட்டம் என்ற சொல்லைப் பார்க்கவும்.
திட்டம். விளக்கம், 238
திட்டமிடுதல் 11, 53, 222, நிருவாகமும் செயல்படுத்துவதும் 250, 254, 255, திட்டம் வேண்டும் என்பதற்குக் காரணங்கள் 241, 250, தனியார், பொதுத் துறைகளைக் கண்காணித்தல் 261, ஜனநாயக சர்வாதிகார முறைகள், 241, 249, நோக்கங்கள் 250-252, பிரச்சினைகள் 263, பல காலப் படிவங்களில் நிறைவேற்றுவது, 262, பிராந்திய முறையில் பங்கீடு செய்வது 261, புள்ளி விவரங்கள் 176, 177

தீய சுழல், 23, 248

துணைத் தொழில்கள், 279
துய்ப்பு நாட்டம், 15, 73, 172, 252, 253

தூண்டுதல்களும் ஊக்கத்தைப் பாதிக்கும் சக்திகளும், 15 21, 217, 225, வரிவிதித்தல் என்பதையும் பார்க்கவும்.

தேவை, 16, 20, 35, 47, 48, விளக்கம், 56, வழிவந்த தேவை, 123
தேவை – அளிப்பு - பரிவர்த்தனை அதிகாரம், 3
தேவை-அளிப்பு, பரிவர்த்தனை திருத்தங்களும், நடைமுறையில் பயன்படுத்துவதும், அதிகாரம், 4
தேவை-அளிப்பு விதிகள், 78, தேவை - அளிப்பு விதிகளும் உற்பத்திக் காரணிகளும், 75, தேவை-அளிப்பு இவைகளின் நெகிழ்ச்சி, விலை என்பவைகளையும் பார்க்கவும்.
தேய்மானமும், புதியவை பயன்படுத்தலும், 129, 137, 156, 157
தேவை, அளிப்பு இவைகளின் நெகிழ்ச்சி, 62, 63, 74, 95, 100, 102 104, 235, வருமான நெகிழ்ச்சி, 63, 167
தேவை-அளிப்புச் சமநிலை, 49,54, 69, 79
தேசியக் கடன் அரசின் கடன் என்பதைப் பார்க்கவும்.
தேசிய வருமானமும், 168, 170, 174, 175, மார்கட்டு விலையினும் உற்பத்திக் காரணி விலையினும் 179, வளர்ச்சி 256, 258
அளத்தல் அதிகாரம் 7 தலா வருமானம், 168, 178
தேசிய வருமானப் பங்கீடு உற்பத்திக் காரணிகளிடையே, 130-133
தேசிய நோக்கங்கள் 25, திட்டத்தின் நோக்கங்கள் என்பதைப் பார்க்கவும்.
தேசிய உற்பத்தி, தேசிய வருமானம் என்பதைப் பார்க்கவும்.
தேசியமயமாக்குதல், 100, 107
தேசியமயமான தொழில்கள், 227
தேர்வின் முக்கியத்துவம், 30, 31, 60

தொழிலின் அளவு : பெருவாரி உற்பத்தியினுல் ஏற்படும் சிக்கனங்கள் என்பதையும் சிறு தொழில்கள் என்பதையும், பார்க்கவும்.
தொழிலதிபர், தொழில் துணிவோர் என்பதைப் பார்க்கவும்.
தொழில், விளக்கம். 134, 135, நிறுவனங்கள் 147, 148, தொழிலமைப்புபற்றிய பிரச்சினைகள் அதிகாரம், 6, தொழிலை நிறுவுதல், 112, 113, 128-130, 137

தொழிலமைப்பு அல்லது தொழில் துணிவு 25, தொழிலமைப்பைப் பாதிக்கும் சக்திகள், 205, 166 174, தொழில் துணிவோன், 128-130, 135, 136, 138, 143
தொழில் வளர்ச்சியும், வேலையின்மையும், 13
தொழிலாளர்-முதலாளி உறவு, 149
தொழில்களைச் சில இடங்களில் நிறுவுதல், 144, 157-161
தொடக்க நிலை வேலை, பிரதி கூலங்கள், 144, 145
தொடக்கப் பருவம், 26, 41, 265
தொழில் நுட்ப உதவி: அரசு பெறும் அயல் நாட்டு உதவியும் கடன்களும் என்பதைப் பார்க்கவும்.
தொழில் நுட்ப வளர்ச்சி, 72
தொழிலாளர் சங்கங்கள், 97, 188

நடுத்தர மக்களும் மறைந்திருக்கும் வேலையின்மையும், 186, இடையிலுள்ள வியாபாரிகள், 15
தடைமுறை ஆய்வுப் பொருளியல், 33, 38
நகர்ப்புற இடங்கள், 118

நாணய மாற்று வீதம், 283, 284
நாடுகளின் செல்வம், காரணங்கள், 43

நிறுவனங்கள் பற்றிய சட்டம், 146, 147
நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வரிகள், 216
நிருவாகமும் உடைமையும் ஒரிடத்தில் குவிதல், 148, 149, சர்வாதீனம் என்ற சொல்லைப் பார்க்கவும்.
நிறுவனத்தின் பொருளாதார நிலைமை, 135, 136
நிதி நிலையங்கள் 219, 226, 228
நிறைகுறைப் போட்டி, 88-100.
நிலம், 112, 118, 120, கிடைப் பருமை 187, 246, 252, நிலப் பயன்பாடு, 280
நிலம் இல்லாத தொழிலாளர்கள், 247, 280
நிலச் சீர்திருத்தம், 24, 279, 281, 282, 283
நிலத் தீர்வை, 216
நிகம். ஆர். கே, 141 (அடிக் குறிப்பு)
நிறைவுப் போட்டி, 54, 85, 88
நிலைப்படுத்தல், 123, 277, 278,
நிலையின்மை, ஆபத்து என்ற சொல்லைப் பார்க்கவும்.
நிருவாக ஏஜென்சிமுறை, 128, 148, 226
நீல், வால்டர், 279,(அடிக்குறிப்பு)
நீண்டகாலம், விளக்கம், 53

பண்டமாற்றுமுறை, 199
பவுல்டிங். கே. 35,
பருத்தி ஆலைகள் 106, 139, 135, 273
பணச் சுருக்கம், 172, 173, 235, 237
பற்றுக்குறை நிதியாக்கம், 222, 223
படம் 1, 57
படம் 2A, 2B, 81, 82
படம் 3A, 3B, 101, 102
படம் 4, பிற்சேர்க்கை, 108
பரிவர்த்தனை, 34, அதிகாரம், 3
பங்குகள், 134 (அடிக்குறிப்பு), 135, 136
பஞ்சமும் மக்கள் தொகையும், 196
பதுக்குதல், 73, 176, 184, 192, ரொக்க விருப்பம் என்பதையும் பார்க்கவும்
பணவீக்கம், 104, 209, 222, 226 விளக்கம், 208
பணவீக்கப் பணச் சுருக்க சந்துகள், 172
பன்னாட்டு முறையில் சிறப்பான உற்பத்தி, 231, ஒப்பீட்டு நலன் செலவு முதலியவைகளைப் பார்க்கவும்
பன்னாட்டு வர்த்தகம், வெளி நாட்டு வர்த்தகம், வரிகள் முதலியவைகளைப் பார்க்கவும்.
பன்னாட்டு நடவடிக்கைகளும் தேசிய வருமானமும், 174
பணம், 34, 125, 126, அதிகாரம் 9, பணத்தின் மதிப்பு, 257, ஓர் அலகின் மதிப்பு, 206

பணமார்க்கட்டு, 227, 228
பருவமழையும், இயற்கை விபத்துக்களும், 10, 247, 256
பணப் புழக்கமற்ற பகுதி, புராதனப் பகுதி என்பதைப் பார்க்கவும்.
பழையதாகிப் போதல், 137
பன்னாட்டு வர்த்தகத்தில் விலை விகிதங்கள், 230, 23 232
பண் அளவுக்கும் விலைகளுக்கும் இடையே உள்ள தொடர்பு, 206, 207
பகுத்தறிவை ஒட்டி நடக்கும் மனிதன், 45, புராதனப் பகுதி என்பதைப் பார்க்கவும்.
பங்கீட்டு முறை 3, 100, 105, 206
பற்பல பகுதிகளுள் வேறுபாடுகள், 16, 24
பணிகள், மாதிரிகள், 111, 112, 168, 181, 213
பற்பல பகுதிகளின் உற்பத்தி, 169
பங்கு மாற்று நிலையங்கள், 227
பங்குகள், 125, 201, 227
பதிலிப் பொருள்களைப் பயன்படுத்துதல், 71, 82, 116
பயன்பாட்டுக் குறைவு, 246
பங்கீடு செய்யப்படாத இலாபம், 175
பயன், இறுதி நிலை, மொத்தம், 60, 61,
பாகிஸ்தான் முன்னுரை, சிறப்பியல்புகள், 9-27
பாங்குவீதம், 204, பாங்குகளும், பாங்குமுறையும், 175, 183, 199, 210. மையபாங்கு வாணிகப் பாங்கு என்ற சொற்களையும் பார்க்கவும்.
பாவர், பி.டி. 36 (அடிக்குறிப்பு)
பாங்குச் செலாவணி, 192, 205, 207, 228
பாதுகாப்பு, 236, 248, குழலிப் பருவத் தொழில்கள் என்பதைப் பார்க்கவும்.
பாகிஸ்தானின் ஸ்டேட் பாங்கு : மையபாங்கு என்பதைப் பார்க்கவும்
பிறப்பு, இறப்பு வீதங்கள், 196
பிறர் பயன்படுத்தும் பொருளை நாடுதல், 82
பிரசாத், கேதர்நாத், 180 (அடிக்குறிப்பு)
பிரஸ்ட், ஏ.ஆர்., 219. 257 (அடிக்குறிப்பு)
புள்ளி விவரங்கள், 177, 178, 255, விவரங்கள் என்பதைப் பார்க்கவும்.
புறச் சிக்கனங்களும் சிக்கனமின்மையும், 144, 147, 160, 161
புதிய தொழில்கள், 94
புதிய மார்க்கட்டு வெளியீடு, 228
புராதனப் பகுதி, 19-22. 33, 46. 50, 69, 246
புழக்கவேகம், 206, 207
பென்ஹாம், 32, 71, 93, 116 (அடிக்குறிப்பு), 131 (அடிக்குறிப்பு), 176 (அடிக்குறிப்பு), 201 (அடிக்குறிப்பு)
ஃபெய், ஜான், சி, எம், 255, (அடிக்குறிப்பு)
பெருவரரி உற்பத்தி உற்பத்திச் சிக்கனங்கள் என்பதைப் பார்க்கவும்.
பெருக்கி, 14, 15, 22, 50, 163, 172, 247
பொருளியல் ஆராய்ச்சியின் எடுகோள், 2
பொருளியல் ஆராய்ச்சி, 8, 9, அடிப்படை, விசேஷ இடர்ப்பாடுகள் 1-9
பொருளாதார மனிதன், 7
பொருளியல் கருவிகள், 35, 38
பொருளியல், விளக்கம், 28, தரஞ் சூழ், 33, 38, நடைமுறை ஆய்வு, 33, 38, கொள்கை வகுத்தல், 36, அரசின் பங்கு என்பதையும் பார்க்கவும்.
பொன் திட்டம், 200, 233, 234
பொன், 184, 200, 221
பொருளியல் விதிகள், 35, 38, 44, தேவை அளிப்பு விதிகள், 78, குறைந்துசெல் விகிதவு விதி, குறைந்துசெல் பயன் விதி முதலியவைகளையும் பார்க்கவும்

பொதுப் பொருளியலாராய்ச்சி, 9, 166
பொருளியல் அளவை, அதிகாரம் 7
பொதுக் கடன், அரசின் கடன் என்பதைப் பார்க்கவும்.
பொதுநிதி, 210, 226
பொதுச் சுகாதாரம், 83, 197,
பொதுத்துறை, 146, 147, விலைக் கொள்கை, 150, 151, 152, தேசிய வருமானத்திலும், உற் பத்தியிலும் பொதுத் துறையின் பங்கு, 240. பொதுநலப் பணி என்பதையும் பார்க்கவும்.
பொருளாதார வகைகள், 1
பொருளியலில் ஒற்றுமைகள், 35
பொருளாதாரத்தின் பற்பல பகுதி கள், 33, 34, 35, 169, பொதுத் துறை, புராதனப் பகுதி என் பவைகளையும் பார்க்கவும்.
பொதுநலப்பணி, 241, பொதுத் துறைஎன்பதையும் பார்க்கவும்.

போட்டி, 69, நிறைவுப் போட்டி, நிறைகுறைப் போட்டி என் பவைகளையும் பார்க்கவும்.
போர்ட், ஹென்றி, 63
போட்டியிடாத குழுக்கள், 71
போக்குவரத்து, 29, 55, 87, 112, 144, 160
போர்க்காலப் பொருளாதாரக் கொள்கை, 211

மறுதள்ளுபடி செய்தல் அல்லது மீள் தள்ளுபடி செய்தல், 204
மந்தங்கள், 206, 211 225, வர்த் தகச் சுழல் என்பதைப் பார்க் கவும்.
மறைமுக நாணய மதிப்புக் குறைப்பு, 235
மரணவரி, 216
மலேயா, 130, 229
மக்கள் தொகை வெடிப்பு, 196
மதிப்புத் திட்டங்கள், 264
மதிப்பு கூட்டப் பெற்றது, 179
மதிப்பீட்டுப் பிரச்சினைகள், 168
மக்கள் தொகையும், அமித மக்கள் தொகையும், 11, 118, 170, 193, 198, 223, 245, 247 248. வளர்ச்சி வீதம், 196, 197 213, பல தொழில்களிடையே பகிர்வு, 193. உத்தம மக்கள் தொகைக் கோட்பாடு, 194
மாற்றமுடியாத செலாவணித்தாள் பாங்கு என்ற சொல்லைப் பார்க் கவும்.
மால்தஸ், 195, 196
மார்க்கட்டு, 20, 50, 69, மார்க் கட்டுக் கருவி அல்லது முறை 42, 51.
மார்க்கட்டுக் காலம், 53, இடம், 47
மார்க்கட்டு விலை 41, நீண்டகாலம் 70, 78 குறுகிய காலம், 69, 70
மார்ஷல், ஆல்ஃபிரட், 53
மார்ட்டின், ஆன், முன்னுரை, 280, (அடிக் குறிப்பு)
மாதிரிகள், பொருளாதார, 4, 5, 255
மாதிரிக் கணக் கெடுப்பு, 177
மாற்றுக் கட்டணங்களும் வரு மானமும், 180, 182, 237
மான், எச். எச். 10
முத்திரையிட்ட பண்டங்கள், 55
முதல் அல்லது மூலதனம், ஓர் உற்பத்திக் காரணியாக 34, 112, 113, 114, 116, 117, 124 128, இலாபம், 207, முதலீடு, 190, 196, 197, மூலதனம் அளித்தல், 153, உண்மை முதல் 117, 124, 137, 138 குறைவான இருத்தல், 25, 26
முழு வேலை அல்லது வேலை நிறைவு, 237
முதல் உற்பத்தி, முதல் தொழில் விகிதம் 268, 269
முதலாளித்துவப் பொருளாதாரம், 40. ஏமாற்றுதல் 95, 145
முதலீடு, சேமிப்பும் முதலீடும் என்பவைகளைப் பார்க்கவும்.
முறைகள், அல்லது வழிகள், (உற்பத்தி) முறைத் தேர்வு என்பதைப் பார்க்கவும்.
முதலின் பிரிக்க முடியாத அலகு கள், 117, 118, 188
மூலதனக் குறைவு இருக்கும் நிலை, 115, 227

மேதா, அசோக, 118 (அடிக் குறிப்பு)
மேலை நாட்டுப் பொருளியல், முன் னேற்றமடைந்த பொருளாதா ரங்கள் என்பதைப் பார்க்கவும்.
மைய பாங்கு, 200, 202, 219, 227
மொத்த விலைகள், 168
மொத்த உற்பத்தி அல்லது விலைச் சல் அல்லது மாசூல், 114, 168, 277, 278, 283
ராவ், வி.கே.ஆர்.வி., 178 (அடிக் குறிப்பு), 182 (அடிக்குறிப்பு)
ராபின்ஸன், இ. ஏ. ஜி., 164 (அடிக்குறிப்பு)
ரிசர்வ் பாங்கு, மைய பாங்கு என்ற சொல்லைப் பார்க்கவும்.
ரூபாயின் புறமதிப்பு, 204
ரெட்டவே, டபிள்யூ. பி, 245 (அடிக் குறிப்பு), 260 (அடிக் குறிப்பு, 264 (அடிக் குறிப்பு)
ரொக்கத் தன்மை, 126, 203, 207, பதுக்கல் என்பதைப் பார்க்க வும்.
ரொக்கத் தன்மையுடைய சாத னங்கள், 124. சொத்துகள் என்பதைப் பார்க்கவும்.
ரொக்கப் பணம்-விளக்கம், 205
ரோசன், ஜியார்ஜ், 127
லத்தீன் அமெரிக்கா, முகவுரை
லட்ஸ், எஃப்.ஏ, 6 (அடிக்குறிப்பு)
லாஸ்கி, ஹெரால்ட், 139
வளர்ச்சியடைந்த பொருளாதார அமைப்புகளும் பொருளியலும், முன்னுரை, 3, 25 41, 72, 73, அரசின் பங்கு, 238-246
வங்கப் பஞ்சம், 105
வரவு செலவுத் திட்டம், நாட்டின், 173, 210-226
வரவு செலவுத் திட்டம் (குடும்ப), 167, 168, 171
வர்த்தக பாங்குகள், 202, 204, 205, 227, பாங்குகள் என்பதை யும் பார்க்கவும்.
வர்த்தக வரிகள், 216, வரி விதித் தல் என்பதையும் பார்க்கவும்.
வருமானம் 134, இறுதி நிலைப் பயன், 216, வருமானப் பங்கீடு, மீள் பங்கீடு, தேசிய வருமானம் முதலியவைகளையும் பார்க்க வும்.
வருமான வரி, 132, 216. வரி விதித்தல் என்பதையும் பார்க் கவும்.
வருமானம்: தேவையின் வரு மான நெகிழ்ச்சி, தேவை, அளிப்பு, இவைகளின் நெகிழ்ச்சி முதலியவைகளையும் பார்க்க வும்.
வருமானத்திலும் செல்வப் பங்கீட் டிலும் சமத்துவமின்மை, 132, 133
வட்டி, 99, 125, 126, 135
வட்டி வீதம், 220, 221, 234
வல்லுநர்கள், 83
வருமானத்தைத் திருத்திப் பங் கீடு செய்தல், வருமானப் பகிர்வு என்பதையும் பார்க்க வும்.
வருமானத்துறை வரிகள், வரி கள் என்பதையும் பார்க்க வும்.
வரிப்பளுவை ஏற்கும் சக்தி, 211
வரிச்சலுகை, 217
வரிக்கொள்கை, முடிவுகள், 225
வரி விதித்தல், 100, 101, 102, 103, 104, 265, வருமான வரி என்ப தைப் பார்க்கவும்.
வரிகள், 180, 181, 211, 214, 216, 217, 224, 225, பெறுமான விகித வரியும், குறிப்பிட்ட வரியும், 100, 101, நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வரி, 216
வர்த்தகம், 15, 50, 76, அயல் நாட்டு வர்த்தகம் என்பதையும் பார்க்கவும்.
வர்த்தகச்சுழல், 6, 130, 155, 211, 213, மந்தங்கள் என்பதையும் பார்க்கவும்.
வளர்ச்சியின் அடையாளம், 256, 257
வளர்ச்சி யடையாத நாடுகள், முன்னுரை, 8, 40, விளக்கம், 1
வரையிட்ட பொறுப்பு, 146

வாழ்க்கை : மட்டநிலை, 196
வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண், 171, 209
வாய்ப்புச் செலவு, 139, 231
வாங்கும் சக்தியைத் திரட்டல், 220
வாரம். 119, 120. 135, 280
வாழ்க்கைத் தரம், 197, 246, 247, 252
வாணிப மாற்று வீதம், 232
வாங்குவோர் சர்வாதீனம், 88
வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள்-விளக்கம் 64

விலைச்சல் 11, விலைச்சலைப் பகிர்வு செய்தல், 280
விற்பனை செய்யக்கூடிய உபரி உற்பத்தி, 278
விகிதமற்ற விலைவு, குறைந்து செல் விலைவு விதி என்பதைப் பார்க்கவும்
விவசாயிகள், 135, 136, விவசாயம், புராதானப்பகுதி முதலிய வைகளையும் பார்க்கவும்.
விலை மாறுதல்களும் அவைகளுடைய விலைவுகளும், 208, 209
விலை, 79, 80, 87, 98, 100, 101, 102, தேவையின் நெகிழ்ச்சி 57, 63, விலைநிர்ணயமாவது 44, 265, 277, விலையை மாருமல் ஒரே நிலையில் வைத்துக் கொள்ளுதல், 98
விலைக்கருவி அல்லது விலைமுறை, 2, 21, 42-51, 52, 53, 168, 265, 266, நிறைகுறைந்த போட்டியில், 96-100, சர்வாதீனத்தில், 88-100, திட்டமிடும்போது243, 261, 263
விலைவாசி, 137. 179, 201, 222, அளப்பது, 209.
விருப்பத் தரவரிசை, 60, 61, 71, 73
விஞ்ஞானமுறைப் பயிற்சியும் ஆய்வும், 153
விருப்பங்கள், 30
விவசாயத் துறையில் பெண்டிர், 169, புராதனப் பகுதி என்பதைப் பார்க்கவும்.
விவசாயம். 22, 87, 193, 247, 248, 256
வெளி மார்க்கட்டு, நடவடிக்கை, 204,
வெளி மார்க்கட்டு, 43

வேலைப் பகிர்வு 20, 34, 60, 74, 77, 158, 159, 237, ஒப்பீட்டு நன்மைகள் என்பதையும் பார்க்கவும்
வேலை வாய்ப்பு ஏற்படுதல், 211 235, 257, புள்ளி விவரங்கள் 169, வேலையின்மை என்பதைப் பார்க்கவும்.
வேலைத் தகவல் நிலையம், 187
வேலையின்மையும் குறை வேலையும், 6. 9, 17, 123, 124, 142, 143, 169—171, 185—190, 197, 212, 237, 247, 257, விவசாயத்தில் 189, 193, பிரச்சினையைக் கணித்தல், 169— 171. தீர்வு காணும் வழிகள், 191

ஸ்டெர்லிங் நிதி, சொத்துகள் என்பதைப் பார்க்கவும்.
ஸ்கிவோட்ஸ்கி, டி., 144

ஹால் ஜியார்ஜ், 265 (அடிக் குறிப்பு)
ஹிக்ஸ், ஜே. ஆர். 177 (அடிக் குறிப்பு), 182 (அடிக்குறிப்பு),
ஹேக், டி.சி., 6 (அடிக்குறிப்பு)

ஜப்பானின் விரைவான தொழில் முன்னேற்றம், 142
ஜோஷி, என். டி., 141 (அடிக் குறிப்பு)

ஷர்மா, எஸ். எல்., 148 (அடிக் குறிப்பு)

ஷார்க்குகள், 99

ஷெடியூலில் இல்லாத பாங்குகள், 205, பாங்குகள் என்பதையும் பார்க்கவும்.
ஷெடியூல் பாங்குகள், 202, 205, பாங்குகள் என்ற சொல்லையும் பார்க்கவும்.
ஷெடியூல் வகுப்பினர், 23, 24